Digitization by eGangotri-South Center

IMAGE™
COPIER

bilt

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

Size : 210x297mm.
G.S.M. : 70
Sheets : 500 Nos.
Product: Paper

N.
M
L
M
(I

bilt
IMAG
COPI

Ballarpur Industr
Unit : Sewa Gaganapur, P.O.: Jeypore-764
Registered Office : Ballarpur Paper Mills, Dist.
BILT Image Copier is the Trademark

2004-06

CC-0. In Public Domain. Cuddalore Collection, TN.

Digitization by eGangotri-South Center

சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மைய வெளியீடு

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் – சுபக்கம்

(தெளிவுரை)

உரையாசிரியர்
"சித்தாந்த ஞானசாகரம்"
"செந்நெறிச் செல்வர்" "மெய்ஞ்ஞான வள்ளல்"
திரு. கு. வைத்தியநாதன்
இயக்குநர்

திருவாவடுதுறை ஆதீன
சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்
திருவிடைமருதூர் – 612 104.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

Sri Namasivayamurthy Offset Press,
Thiruvavaduthurai.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

முன்னுரை

''சிவஞான சித்தியார்'' சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள், அரிய பல செய்திகளைத் தன்னுட் கொண்டு விளங்குவது. முதல் நூல் ஆகிய சிவஞான போதத்தில் குறிப்பால் உணர்த்தப்பட்ட செய்திகள் பல, இந்நூலில் தெளிவாக விளக்கப் பட்டுள்ளன. அமிழ்தினும் இனிய மதுரம் பழுத்து ஒழுகும் செய்யுள் வடிவில் அமைந்து உள்ளது இந்நூல். செய்யுள்களெல்லாம் அழகிய செவ்விய சுருங்கிய சொற்களால் தொகுக்கப்பட்டன வாய், விழுமிய இனிய ஓசை உடையனவாய், ஆயும் தோறும் ஆயும் தோறும் மேன்மேல் கிளைக்கும் நுண்பொருள் விளக் கத்தை உடையனவாய் உள்ளன.

இத்துணைச் சிறப்புமிக்க சிவஞான சித்தியார் சுபக்கத் திற்கு, 1. ஸ்ரீ மறைஞான தேசிகர், 2. ஸ்ரீ சிவாக்கிர யோகிகள், 3. ஸ்ரீ ஞானப்பிரகாசர், 4. ஸ்ரீ சிவஞான சுவாமிகள் 5. ஸ்ரீ நிரம்ப வழகிய தேசிகர், 6. ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் என்னும் அறுவர்களாலும் எழுதப் பெற்ற உரைகள் உள்ளன, இவற்றுள் ஸ்ரீ சிவஞான சுவாமிகள் எழுதியருளிய பொழிப்புரையையும் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் எழுதியருளிய பதவுரையையும் தழுவி, முன்னோர் கருத்துக்கு மாறுபாடு இன்றித் திருவாவடுதுறை ஆதீன சைவப் பிரசாரகராயிருந்த தூத்துக்குடி, பொ. முத்தையாபிள்ளை அவர்கள், ''சிவஞான சித்தியார் சுபக்கம்–மூலமும் பொழிப் புரையும்'' என்னும் அரியதோர் நூலைச் செய்துள்ளார்கள். அவர்கள் உரை நூலைத் தழுவி இந்தத் தெளிவுரை எளிய நடையில் எழுதப் பெற்றுள்ளது.

''துண்ணிய ஐம்புல வேடர் சுழலில் பட்டுத்
துணைவனையும் அறியாது, துயர் உறும் தொல் உயிரை
மன்னும் அருட் குருவாகி வந்து அவரின் நீக்கி
மலம் அகற்றித் தான் ஆக்கி, மலர் அடிக்கீழ் வைப்பன்''

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்று அருணந்தி சிவம் அருளிச் செய்தவாறு, செல்கதி அறியாமல் திகைத்து நின்ற அடியேனை ஆட்படுத்தி, இச் சீரிய சிவப்பணியில் முயக்குவித்தருளிய அடியேனின் ''ஞானத் தந்தை'' ஆகிய திருவாவடுதுறை ஆதீனத்தின் இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதானமாக எழுந்தருளிச் சிவஞானச் செங்கோல் ஓச்சி வரும் சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி அவர்கள் திருவடி மலர்களை, அடியேன் சிரமேற் கொண்டு, மனம் மொழி மெய்களால், செய்ந்நன்றி உணர்வோடு போற்றி வழிபடுகிறேன்.

சீர்வளர்சீர் குரு மகாசந்நிதானம் அவர்களது அருளாசியுடன், மாணவர்கள் இந்நூலினை ஆழ்ந்து கற்றுப் பயனுறுமாறு அன்புடன் அவாவுறுகிறேன்.

திருவிடைமருதூர், அடியேன்,
27.1.99 கு. வைத்தியநாதன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ
சிவமயம்

பொருளடக்கம்

	பக்கம்
முகவுரை	
பாயிரம்	2
அளவை இலக்கணம்	8
பிரமாண இயல்	23
இலக்கண இயல்	198
சாதன இயல்	268
பயன் இயல்	350
பாட்டு முதற்குறிப்பு அகராதி	387

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முப்பொருளின் ஈரியல்பும் ஓர்இயல்பா நுவலாது
முறைவெவ் வேறாய்
செப்புசிவா கமங்களின்தன் பொருள்ஒருமை
பெறஉணர்த்து
திறம்முன் நூலை
ஒப்பவிரி யாப்பு அதனால் சித்தி எனும் வழிநூலாய்
ஒளிர்பிற் காலத்து
இப்புவியோர் தெளிந்து உய்ய மொழிந்த அருள்
நந்தி சிவன்
இணைத்தாள் போற்றி.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான

போதநெறி காட்டும் வெண்ணெய்

பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்

மெய்ஞ்ஞான பானுவாகிக்

குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்

குருநமச்சி வாய தேவன்

சயிலாதி மரபுடையோன் திருமரபு

நீடூழி தழைக மாதோ.

— ஸ்ரீமாதவச் சிவஞான யோகிகள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

குருமுதல்வர்

அருள்திரு நமசிவாயமூர்த்திகள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் – சுபக்கம்

காப்பு

ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாய், ஐங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான்
தரும்ஒரு வாரணத்தின் தாள்கள்
உருகோட்டு அன்பொடும் வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகு ஓட்டும்; அயன் திருமால் செல்வமும்ஒன்றோ
என்னச் செய்யும் தேவே. 1

தெளிவுரை:

ஒற்றைக் கொம்பையும், இரண்டு செவியையும், மூன்று மதத்தையும், நான்ற வாயையும், ஐந்து கரத்தையும் உடையவன் விநாயகப் பெருமான். இந்த விநாயகப் பெருமானைக், கங்கை ஆறும், கோணல் பிறையும், கொன்றை மாலையும், தாழ்ந்த சடையினையும் உடைய சிவபெருமான் நமக்குத் தந்தருளினான். இத்தகு யானைமுகக் கடவுளது திருவடிகளை உள்ளம் உருகி, அன்போடு வணங்கி இரவும் பகலும் ஓயாமல் நினைப்பவரது நெஞ்சில் மயக்கம் வராமல், அவன் காத்தருள்வான். எனவே, பிரம விட்டுணுக்களின் பதவிகளை ஒரு பொருட்டாக மதியாமையால், பேரின்பப் பெருநிலையை அவனே தந்தருள்வான்.

நால்வாய்	–	நான்றவாய் – தூங்குகின்ற வாய்
வாரணம்	–	யானை முகம்; பிரணவ சொரூபம்
மூன்று மதம்	–	இச்சா ஞானக் கிரியைகளை உடையவர்.
இருசெவி	–	சர்வஞ்ஞத்துவமும் சர்வ கருத்திருத்துவமும் உடையவர்.
தாள்கள்	–	ஞானசத்தி கிரியா சத்திகளைக் குறிப்புன.
திருகு ஓட்டும்	–	மாறுபாடு ஆகிய ஆணவமலக் குற்றத்தைப் போக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாயிரம்

மங்கல வாழ்த்து

சிவபெருமான் வழிபாடு

அறுவகைச் சமயத் தோர்க்கும்
அவ்வவர் பொருளாய் வேறாம்
குறியது உடைத்தாய் வேதா
கமங்களின் குறி இறந்து அங்கு
அறிவினில் அருளால் மன்னி
அம்மையோடு அப்பன் ஆகிச்
செறிவு ஒழியாது நின்ற
சிவனடி சென்னி வைப்பாம். 2

தெளிவுரை:

புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்னும் நான்கனுள் அகச் சமயம் நீங்கலாக உள்ள முக்கூற்றுப் புறச் சமயங்களிலே, தனித்தனியே அறுவகைச் சமயங்கள் உள்ளன. அவற்றுள்ளும் பல்வேறு வகைப்பட்டு ஆய்ந்து அறிகின்ற, அவரவர் கொண்ட முதற்பொருளாய் இறைவன் நிற்கின்றான்.

அவரின் வேறாகிய அகச் சமயத்தார்க்கு இலயம், போகம் அதிகாரம் என்னும் மூன்று நிலைகளில் முறையே சிவன், சதாசிவன், மகேசன் என்னும் பெயருடைய அருவம், அருவுருவம், உருவம் என்னும் தடத்தக் குறியே குறியாய் உடையவனாகச் சிவபெருமான் நிற்கின்றான்.

சித்தாந்த சைவர்க்கு அந்தத் தடத்தக் குறியோடு மட்டும் அன்றி, வேதாகமங்களின் கருத்துக்கு அப்பாற்பட்டு, உயிர்க்கு உயிராய், உயிர்கட்கு எல்லாம் அறிவைப் பிறப்பிக்கும் அம்மை அப்பனும் ஆகி, எல்லா இடத்திலும் எக்காலத்திலும் கலந்து வியாபகமாய் நிற்கிறான். அந்தச் சிவபெருமான் திருவடியைச் சிரமேல் கொள்வோமாக.

முக்கூற்று — மூன்று வகையாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேறாம் குறியது உடைத்தாய் – சைவசித்தாந்தம் கூறும் சொரூப இலக்கணத்தை உடையதாய், இலயம், போகம், அதிகாரம் என்னும் மூன்றும் தடத்த இலக்கணம். சொரூபம் – சிறப்பு – உண்மை, தடத்தம் – பொது இயல்பு.

அறிவினில் அருளால் மன்னி – ஆன்ம அறிவில் திருவருளோடு பொருந்தி – உயிர்க்குயிராய்

இந்த மங்கல வாழ்த்துச் செய்யுளின் வாயிலாகப் பன்னிரண்டு சூத்திரங்களிலும் என்னென்ன கூறப்படுகின்றன என்பதைக் குறிப்பால் உணர்த்தியுள்ளார். அதன் விளக்கம் வருமாறு:

1. அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்

சிவஞானசித்தியார் – பரபக்கத்தில் சொன்ன பொருளைக் குறிக்கிறது.

2. வேறாம் குறியது உடைத்தாய்

முதல் சூத்திரம் முதல் ஐந்தாம் சூத்திரம் வரை பெறப்படும் பொருளைக் குறிக்கிறது.

3. வேதாகமங்களின் குறி இறந்தது

பரபக்கப் பொருளும் அன்றி, முதல் ஐந்து சூத்திரப் பொருளும் அன்றி இவற்றின் வேறு ஆகிய சொரூப இலக்கணம் கூறும் ஆறாம் சூத்திரப் பொருளைக் குறிக்கிறது.

4. அறிவினில்

உயிரின் உண்மை இயல்பு கூறும் ஏழாம் சூத்திரப் பொருளைக் குறிக்கிறது.

5. அருளால் மன்னி

ஞான தரிசனம் கூறும் எட்டாம் சூத்திரப் பொருளைக் குறிக்கிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

6. அம்மையோடு அப்பன் ஆகி

ஞானம், ஞேயம், ஞாதிருவும் ஆகக் காணும் ஒன்பதாம் சூத்திரப் பொருளைக் குறிக்கிறது.

7. செறிவு ஒழியாது நின்றது

ஏகன் ஆகி நிற்றல் கூறும் பத்தாம் சூத்திரப் பொருளைக் குறிக்கிறது.

8. சிவனடி சென்னி வைப்பாம்

சிவபெருமானின் திருமலரடிக் கீழ் இருத்தல் கூறும் பதினொராம் சூத்திரப் பொருளைக் குறிக்கிறது.

9. "சிவனடி சென்னி வைப்பாம்" என்னும் சொல் இயல்பு

சீவன் முத்தர் இயல்பு இஃது எனக் காட்டும் பன்னிரண்டாம் சூத்திரப் பொருளைக் குறிக்கிறது.

இவ்வாறு தொகுத்துக் காட்டுவது, மங்கல வாழ்த்துக்கு இயல்பு என்பது உணர்த்தப்பட்டது.

முன்னூல் சிறப்பு

என்னை, இப் பவத்தில் சேரா
வகைஎடுத்து, என்சித் தத்தே
தன்னை வைத்து, அருளி னாலே
தாள்இணை தலைமேல் சூட்டும்
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய்
மேவிவாழ் மெய்கண்டான் நூல்
சென்னியில் கொண்டு சைவத்
திறத்தினைத் தெரிக்கல் உற்றாம். 3

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

பிறப்பு இறப்பு ஆகிய கடலில் அழுந்துகின்ற என்னை, அக்கடலில் அழுந்தாதவண்ணம், கருணைக் கையால் எடுத்து, என் அறிவில் தன்னுடைய சொரூபத்தை விளக்கும் பொருட்டு, எழுந்தருளி வந்து, தன் திருவடிகளை என் தலைமேல் சூட்டி மெய்கண்ட தேவர் எனக்குத் தீக்கை செய்தருளினார்.

மின்னலை உடைய மேகம் தங்குவதற்கு இடம் ஆகிய சோலைகள் சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூர் என்னும் திருப்பதியில் விருப்பம் உற்று இன்றும் வாழ்கின்ற மெய்கண்ட தேவ நாயனார், சிவஞானபோதம் என்னும் பெறற்கரிய பெருநூலை, ஏனை ஆசிரியன் மார் செய்த பிரமாண நூல்களுக்கு எல்லாம் தலைமை இடம் பெற்று விளங்கும் சிவாகமப் பொருளின் கூற்றை, விளக்கி அருள்கின்றார்.

திறம் – தன்மை – இயல்பு, சைவத்திறம் – சைவத்தின் இயல்பு. 'சைவத்திறம்' என்னும் தொடருக்குச் சைவாகமத்தில் சொல்லப் படுகின்ற பதி பசு பாசம் என்னும் முப்பொருளின் இயல்பு என்றும் பொருள் கூறலாம்.

பவம் – பிறப்பு. ''என் சித்தத்தே தன்னை வைத்து'' எனும் தொடருக்கு ''எனது அறிவை அருள் உருவாக்கி உன் வியாபகத்தை விளக்கி'' என்பது பொருள் ஆகும்.

இந்நூலில் சொல்லப்படும் பொருளும், இதனைக் கேட்பவரும் கேட்பதால் உண்டாகும் பயனும்.

பண்டைநல் தவத்தால் தோன்றிப்
பரமனைப் பத்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய
கதியினில் தொகுப்பன்; மார்க்கர்
கண்டநூல் ஓதி வீடு
காதலிப் பவர்க்கு ஈசன்
புண்டரிகத் தாள் சேரும்
பரிசினைப் புகலல் உற்றாம். 4

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

முற்பிறப்பில் நன்றாய்ச் சாதனம் முற்றுப் பெற்றவர் ஆகிய சாமுசித்தரும், நித்த அநித்த வேறுபாடு உணர்ந்து, அநித்தத்தை வெறுத்து நித்தத்தை நாடும் வினையர் ஆகிய வைநைகரும், இந்த உலகத்தைத் தவிர வேறு பொருள் உண்டு என்பதை அறியாத மூடர் ஆகிய பிராகிருதரும் என மனித இனத்தில் பிறந்தவர்கள் மூவகைப்படுவர்.

அவர்களுள், முற்செய் தவச் சிறப்பால் சாமுசித்தராய்ப் பிறந்து, வீடுபேற்றை விரும்பி சிவபெருமானிடத்து அன்பு மீதூர்ந்து நிற்கும் அவர்க்கு, நூல்வழியால் அன்றிச் சிவபெருமான் தானே சிவபத்தியில் அவரைச் சேர்ப்பன். எனவே, அவர்க்கு நூல் தேவை இல்லை. வைநைகராய்ப் பிறந்தவர்க்கு, ஞானிகள் எல்லாம் பிரமாணம் என்று கைக்கொண்ட நூலை ஓதி, அதன் வழியால் வீடு அடைய வேண்டுவது முறைமை ஆகும். ஆகவே, அந்த வைநைகராயினார்க்குச் சிவபெருமானுடைய செந்தாமரை மலர்போன்ற திருவடியைக் கூடும் முறைமையினை இந்நூல் வகுத்துக் கூறுகின்றது.

இதனால் பிராகிருதராய் இருப்பவர்க்கு இந்நூல் பயன்படாது என்பது கருத்தாகும். மார்க்கர் – சன்மார்க்கர் – ஞானிகள்.

சாமு சித்தர் – சம் சித்தர் நன்றாகக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தவர்கள்; இவர்கள் முற்பிறப்பிலேயே சரியை கிரியை யோகங்களைச் செய்து, சித்த சுத்தி உடையவராய் வாழ்ந்து, மீண்டும் பிறக்கையில் ஞானத்துடன் பிறந்து, சிவனையே நினைந்து வாழ்பவர் ஆவர். எனவே, நூலறிவால் இவர்களுக்கு ஆகப் போவது எதுவும் இல்லை.

''வைநைகர்'' என்னும் சொல் ''வைநயிகர்'' என்றும் வழங்கப் படுகிறது. வைநை – வைநயி – விநயம் – ஒழுக்கம் – சீலம் – வழிபாடு. ஞான சாத்திரத்தைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து முத்தி அடைவதற்கு உரியவர், வைநைகர் ஆவர். பிரகிருதியில் உள்ள போகங்களையே முத்தி என்பவர் பிராகிருதர் ஆவர். பெண் இன்பமே முத்தி என்னும் பிராகிருதருக்கு இந்நூல் பயிற்சி பயன்படாது. இந்நூலில் சொல்லப் படும் பொருள், சிவபெருமான் திருவடியைப் பெறும் முறைமை ஆகும். இதனைக் கேட்பதற்கு உரியவர் 'வைநைகர்' என்னும் ஒழுக்கம் உடையவர் ஆவர்; இந்நூலைக் கேட்பதால் உண்டாகும் பயன், திருவடிப் பேறு ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவை அடக்கம்

மறையினால் அயனால் மாலால்
மனத்தினால் வாக்கால் மற்றும்
குறைவிலா அளவி னாலும்
கூறொணாது ஆகி நின்ற
இறைவனார் கமல பாதம்
இன்றுயான் இயம்பும் ஆசை
நிறையினார் குணத்தோர்க்கு எல்லாம்
நகையினை நிறுத்தும் அன்றே. 5

தெளிவுரை:

வேதங்களினாலும், பிரமாவினாலும், விட்டுணுவினாலும், மனத்தினாலும், வாக்கினாலும், அனுமானப் பிரமாணத்தினாலும் (கருதல் அளவை) அறிய முடியாத நிலையில் இறைவன்நிற்கிறான். செந்தாமரை மலர் போன்ற அவன் திருவடியின் இயல்பை, இன்று நான் சொல்வது என்று எழுந்த எனது சிறிய ஆசை, நிறைந்த குணத்தினை உடைய எல்லோருக்கும் ''இவன் அறிவு இவ்வளவுதானா?'' என்று எள்ளி நகை ஆடுவதற்கு ஏது ஆகும்.

வேதம் – பாசஞானம்; அயன் மால் – பசு ஞானம். மனம் – பசு ஞானம்; வாக்கு – பாச ஞானம். கமலபாதம் – திருவருள்; சிவஞானம் – இறை இயல்பு.

சிவபெருமானை ஒன்றினாலும் அறியமுடியாதோ என்னும் ஐயத்தைப் போக்குதல்

அருளினால் ஆக மத்தே
அறியலாம்; அளவி னாலும்
தெருளலாம்; சிவனை ஞானச்
செய்தியால், சிந்தை உள்ளே
மருள்எலாம் நீங்கக் கண்டு
வாழலாம்; பிறவி மாயா
இருள் எலாம் இரிக்கல் ஆகும்
அடியரோடு இருக்க லாமே. 6

2

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மேற்கூறியவாறு இறைவன் இயல்பு ஒன்றினாலும் அறியப் படாதது ஆயினும் அவன் அருளிய சிவாகமத்தின் வழி நின்ற அனுபவம் உடைய தேசிகர் அருளிச் செய்கின்ற உபதேசத்தால் கேட்டு இறைவனை அறியலாம். அந்த உபதேசப் பொருளைப் பிரமாணத்தால் சிந்தித்தும் அறியலாம்; சிந்தித்ததனைச் சிவஞானத்தால் தன் அறிவில் மாசு அறத் தெளிந்தும் அறியலாம்.

அவ்வாறு தெளிந்து அறியும் நிலையில், பிறவி மாயாமைக்குக் காரணம் ஆகிய பாசத்தைக் கெடுக்கலாம். அந்தப் பாசக் கேடு காரணமாக சிவனடியாரோடு கலந்து நிட்டை கூடிச் சிவானந்த அனுபூதியும் பெற்று இருக்கலாம்.

''அனுபவம் உடைய தேசிகர்'' என்பது, சிவஞானம் கைவரப் பெற்ற பன்னிரு திருமுறை ஆசிரியர்களையும் பதினான்கு சாத்திர ஆசிரியர்களையும் குறிக்கும்.

மங்கல வாழ்த்து முடிந்தது.

அளவை இலக்கணம்

தோற்றுவாய்:

அளவை என்றாலும் பிரமாணம் என்றாலும் ஒக்கும். (பொருந்தும்). அளவை என்பதற்குப் பொருள், பொருள்களை அளக்கும் கருவி என்பது ஆகும். பொருள் இருவகைப்படும். அவற்றுள் ஒருவகை, காணப்படும் உலகப் பொருள்கள்; மற்றொரு வகை, காணப்படாத பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் ஆகும்.

காணப்படும் பொருளை, எண்ணல், நிறுத்தல், நீட்டல் (கோலால் அளத்தல்), முகத்தல் (படியால் அளத்தல்) என்னும் நான்கு கருவிகளால் அளக்கலாம். காணப்படாத பதி, பசு, பாசப் பொருளை அந்தக் கருவிகளால் அளக்க முடியாது. அவற்றை ஆகமம், அனுமானம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்னும் கருவியைக் கொண்டு, ஆன்ம சிற்சத்தியால் (உயிரின் அறிவாற்றலால்) அளக்க முடியும். ஆகவே, முதற்கண் அளவை இலக்கணம் கூறுகின்றார். இதிலிருந்து உயிரின் அறிவாற்றலே பிரமாணம் என்பதும், கருவிகளும் உபசாரத்தால் பிரமாணம் எனப்படும் என்பதும் நினைவில் கொள்ளத் தக்கது. உபசாரம் என்பது மரியாதைக்காகக் கூறப்படுவது ஆகும்.

எல்லாப் பிரமாணங்களும் மூன்றில் அடங்கும் என்பது

அளவை காண்டல், கருதல், உரை,
அபாவம், பொருள், ஒப்பு, ஆறுஎன்பர்;
அளவை மேலும் ஒழிபு, உண்மை,
ஐதிகத்தோடு, இயல்புஎன நான்கு
அளவை காண்பர்; அவையிற்றின்
மேலும் அறைவர்; அவை எல்லாம்
அளவை, காண்டல், கருதல், உரை
என்றுஇம் மூன்றின் அடங்கிடுமே. 7

தெளிவுரை:

பிரமாணம் (அளவை) என்பது, பிரத்யட்சம், அநுமானம், ஆகமம், இன்மை, அருத்தாபத்தி, உவமை என ஆறுவகைப்படும் என்று ஒருசாரார் கூறுவர். அந்த அறுவகைப் பிரமாணங்கட்கு மேலும், பாரிசேடம், சம்பவம், உலகவாதம் சகசம் என நான்கு பிரமாணம் உள என்பாரும் உளர். இந்தப் பத்துக்கு மேலும், பிரமாணம் உள என்பாரும் உளர். அவை எல்லாம் பிரமாணமே ஆயினும், பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் என்னும் இந்த மூன்றினுள் அடங்குவன ஆகும்.

பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் ஆகிய மூன்று பிரமாணங் களைக் குறித்து அடுத்த செய்யுளில் காணலாம். ''இன்மை'' என்பது ஐந்து வகைப்படும். அவை வருமாறு:

என்றும் இன்மை	–	முயலுக்குக் கொம்பு இல்லை.
ஒன்றின் ஒன்று இன்மை	–	குடத்தில் படம் இல்லை.
இல்லதன் இன்மை	–	படத்தில் குடம் இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உள்ளதன் இன்மை – பெரியோர் வாயில் பொய் இல்லை.
அழிவு பாட்டின்மை – யானையைக் கட்டும் இடத்தில் காண வில்லை (அல்லது) குடம் உடைந்தால் அஃது இல்லை.

''அருத்தா பத்தி'' என்பது, இவ்வூரில் கொடுப்பவன் இவன் என்றால், இந்த ஊரில் கொடாதாரும் உண்டு என்பது ஆகும். ''உவமை'' என்பது கண்ணன் கருமுகில்போல்வன் என்பது ஆகும். ''பாரிசேடம்'' என்பது, மூவரில் இருவர் கள்வர் அல்லர் என்றால், எஞ்சிய மற்றவன் கள்வன் என்பதாகும். ''சம்பவம்'' என்பது, நூற்றிலே தொண்ணூறு உண்டு என்பதாகும். ''ஐதீகம்'' என்பது, இந்த மரத்திலே பேய் உண்டு என்பதாகும். ''சகஜம்'' என்பது, 'மா' பூத்தது என்றால் மரம் பூத்தது' என்பதாகும்.

பிரத்யட்சம் முதலிய மூன்றின் இலக்கணம்

மாசறு காட்சி ஐயம்
திரிவுஇன்றி விகற்பம் முன்னா
ஆசற அறிவது ஆகும்;
அநுமானம் அவினா பாவம்
பேசுறும் ஏதுக் கொண்டு
மறைபொருள் பெறுவது ஆகும்;
காசறும் உரைஇம் மானத்து
அடங்கிடாப் பொருளைக் காட்டும். 8

தெளிவுரை:

பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் என்னும் மூன்றனுள், பெயர், சாதி முதலியன விகற்பம் இன்றி நிர் விகற்ப உணர்வை முன்ன தாகக் கொண்ட, ஐய உணர்வும் விபரீத உணர்வும் இன்றி, விடயங்களை நேரே அறிவது ஆகிய ஆன்மாவின் அறிவாற்றல், குற்றம்மற்ற காட்சி அளவை எனப்படும். (விகற்பம், நிர்விகற்பம் குறித்து அடுத்த செய்யுளில் காணலாம்).

அவ்வாறே நேரே அறியப்படுவது அன்றி, மறைந்து நின்ற பொருளை, அதனை விட்டு நீங்காது எக்காலத்தும் உடனாய் நிகழும் காரணத்தைக் கொண்டு, ஐய விபரீதக் குற்றம் இன்றி அறிவது ஆகிய உயிரின் அறிவாற்றல், அனுமான அளவை எனப்படும்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்த இரண்டு பிரமாணங்களாலும் அறியப்படாத பரலோக, பாதாள லோக முதலிய பொருள்களை, அறிவுடையோர் வாக்கைக் கொண்டு, ஐய விபரீதக் குற்றம் இன்றி அறிவது ஆகிய உயிரின் அறிவாற்றல், குற்றமற்ற ஆகம அளவை எனப்படும்.

நிர்விகற்பம் முதலிய நான்கின் இலக்கணம்.

கண்ட பொருளை இரட்டுறவே
கருதல் ஐயம்; திரியவே
கொண்டல் திரிவாம்; பெயர், சாதி
குணமே, கன்மம், பொருள் எனஐந்து
உண்டஅவ் விகற்ப உணர்வினுக்குப்;
பொருளின் உண்மை மாத்திரத்தின்
விண்டல் இல்லா அறிவாகும்
விகற்பம் இல்லாக் காட்சியே. 9

தெளிவுரை:

மேலே கூறிய நிருவிகற்பம், ஐயம், விபரீதம், நேரே அறிவது ஆகிய சவிகற்பம் என்னும் காட்சி நான்கனுள், பெயர் முதலியவற்றால் பகுத்து அறிதல் இன்றி, இஃது ஒன்று தோன்றா நின்றது எனப்பொருள் உண்மை மட்டுமே அறியும் அறிவாற்றல் நிருவிகற்பக்காட்சி எனப்படும்.

அவ்வாறு நிருவிகற்பமாய் அறிந்த பொருளை, இஃது யாதோ என ஒன்றில் துணிவு ஏற்படாமல், ஆராயும் அறிவாற்றல், ஐயக்காட்சி எனப்படும். அப்பொருளை வேறு பொருளாக மயங்கி நிச்சயிக்கும் அறிவாற்றல், திரிபுக் காட்சி எனப்படும்.

'மா' என்பது இதன் பெயர், இஃது இன்ன சாதி, இதன் குணம் இன்னது, இதன் கன்மம் இது,இ ஃது இன்ன பொருள் என்னும் ஐந்தினையும் ஒரு பொருளின் இடத்து, உள்ளவாறு இனிது விளங்க உணரும் அறிவாற்றல், சவிகற்பக் காட்சி எனப்படும்.(விகற்பம் – வேறுபடுதல்; சவிகற்பம் – விகற்பத்தோடு கூடியது; நிருவிகற்பம் – விகற்பம் இன்மை – பகுத்து அறிவு இன்மை.)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எடுத்துக்காட்டாக, மா மரத்தை வைத்துச் சவிகற்பக் காட்சியைக் காண்போம். 'மா' என்பது அந்த மரத்தின் பெயர்; சாதி என்பது அதன் தன்மை; குணம், அந்த மரத்தின் வண்ணம் (நிறம்), வடிவு முதலானவற்றைக் குறிக்கும்; கன்மம் , அசைதல், நிற்றல், காய்த்தல் முதலிய தொழில்களைக் குறிக்கும்; பொருள் என்பது, இஃது ஒரு மரம் என்பதாகும்.

பிரத்தியட்சம் முதலிய மூன்றின் பாகுபாடுகள்,

காண்டல் வாயில் மனம்தன்வே
தனையோடு யோகக் காட்சிஎன
ஈண்டு நான்காம் அனுமானம்
தனக்கும் பிறர்க்கும் என்று இரண்டாம்;
மாண்ட உரைதந்திரம் மந்திரத்தோடு
உபதேசச் சொல் எனமூன்றாம்;
பூண்ட அளவைக்கு எதிர் புலன்தன்
இயல்பு பொது என்று இரண்டாமே,

தெளிவுரை:

பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் என்னும் மூன்றனுள், பிரத்தியட்சப் பிரமாணம் என்பது, இந்திரியப் பிரத்தியட்சம், மானதப் பிரத்தியட்சம், தன்வேதனைப் பிரத்தியட்சம், யோகப் பிரத்தியட்சம் என நான்கு வகைப்படும்.

அநுமானப் பிரமாணம் என்பது, தான் அறிதல் பொருட்டு அனுமானமும், பிறர்க்கு அறிவித்தல் பொருட்டு அனுமானமும் என இரண்டு வகைப்படும். மாட்சிமைப்பட்ட ஆகமப்பிரமாணம் என்பது, தந்திரக்கலை, மந்திரக்கலை, உபதேசக்கலை என்று மூன்று வகைப்படும், பொருந்திய இந்தப் பிரமாணங்களால் அறியப்படும் பொருள்களது இயல்பு, சிறப்பு இயல்பு, பொது இயல்பு என இரண்டு வகைப்படும். இந்த மூன்று பிரமாணங்களில் உள்ள பாகுபாடுகளின் விளக்கத்தைப் பின்வரும் செய்யுள்களில் காணலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிறப்பு இயல்பு பொது இயல்பு – இலக்கணம்.

அன்னிய சாதியும் தன்
சாதியும் அகன்று நிற்றல்
தன் இயல்பு; அன்னி யத்தைத்
தவிர்ந்துதன் சாதிக்கு ஒத்தல்
துன்னிய பொது இயற்கை;
சொன்னஇவ் இரண்டின் உள்ளே
மன்னிய பொருள்கள் யாவும்
அடங்கிடும் மானம் உற்றால். 11

தெளிவுரை:

சிறப்பு இயல்பு, பொது இயல்பு என்னும் இரண்டனுள் ஒரு பொருளுக்கு வேற்றுச் சாதிப் பொருளிலும் தன்சாதிப் பொருளிலும் செல்லாமல் தனக்கு மட்டுமே நிலைபெறும் தன்மை சிறப்பு இயல்பு ஆகும். ஆஃதாவது 'தேமா' என்று கூறும் பொழுது, பலா முதலிய வேற்றுச் சாதியிலும், 'புளி', 'மா' முதலிய தன் சாதியிலும் செல்லா மையைக் குறிக்கும்.

வேற்றுச் சாதிப் பொருள் அளவில் செல்லாமல், தன் சாதிப் பொருட்கு எல்லாம் ஒப்ப நிலை பெறும் தன்மை, பொது இயல்பு ஆகும். அஃதாவது, 'மா' என்ற பொழுது 'பலா' முதலியவற்றை நீக்கி, 'தேமா' முதலிய தன் சாதிக்கு எல்லாம் ஒப்ப நிலைபெறும் இயல்பு ஆகும்.

பிரத்தியட்சம் முதலிய பிரமாணங்களால் பொருந்திப் பொருள்களை அறியும் பொழுது, அப்பொருள்கள் எல்லாம், சிறப்பு இயல்பு பொது இயல்பு என்னும் இங்குக் கூறிய இவ்விரண்டு இயல்பினுள் அடங்கும். தேமா–தித்திப்பான கனிகளை உடைய மாமரம்.

இந்திரியக் காட்சி மானதக் காட்சிகளின் இலக்கணம்

உயிரினோடு உணர்வு வாயில்
ஒளிஉரு ஆதி பற்றிச்
செயிர்உறு விகற்பம் இன்றித்
தெரிவது இந்திரியக் காட்சி;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அயர்வுஇல் இந்திரிய ஞானம்
ஐம்புலன் சார்ந்து உயிர்க்கண்
மயர்வுஅற வந்த ஞானம்
மானதக் காண்டல் ஆமே. 12

தெளிவுரை:

மேற்கூறிய இந்திரியப் பிரத்தியட்சம் முதலிய காட்சி நான்கனுள், ஆன்மாவின் நின்றும் விடயங்களை நோக்கி ஓடும் அறிவு ஆகிய சிற்சத்தி, கண் முதலிய பொறிகளையும் அந்தப் பொறிகளுக்குத் துணையாய் உடன் நிற்கும் தேயு முதலிய பூதங்களையும், அந்தப் பூதங்களுக்கு முதற்காரணமாய் அவற்றைவிட்டு நீங்காத உருவம் முதலிய தன் மாத்திரைகளையும் ஆதாரமாகக் கொண்டு, ஐய விபரீதக் குற்றங்களும், பெயர். சாதி முதலிய விகற்பமும் இன்றி, உருவம் முதலிய விடயங்களை நிருவிகற்பமாய் அறியும் அறிவு ''இந்திரியக் காட்சி'' எனப்படும்.

அவ்வாறு அறிந்த பிறகு, அந்தக் காட்சியை மீண்டும் மறத்தல் இன்றி, பெயர், சாதி முதலியவற்றால் விபரீதம் ஆதல் இன்றி, உள்ளவாறு நிச்சயமாய் புத்தி தத்துவத்தில் வருவது ஆகிய சவிகற்ப உணர்வு, ''மானதக் காட்சி'' எனப்படும்.

புத்தி இல்லாமல் இந்திரியங்கள் தொழிற்படா; ஆயினும், புத்தி துணையாக உள்நிற்க, இந்திரியங்கள் முற்பட்டுத் தொழிற்படுவதால், இந்திரியக் காட்சி எனப்பட்டது. மனம் தொழிற்படும் பொழுது, இந்திரியங்களும் தொழிற்படுகின்றன; ஆயினும், மனத்தின் தொழில் ஆகிய பகுத்தறிவு முற்பட்டும் இந்திரியத்தின் தொழில் ஆகிய பொருள் அளவில் உள்ள அறிவு உட்பட்டும் நிற்பதால், மானதக் காட்சி எனப்பட்டது.

''உயிரினோடு உணர்வு'' என்பதற்கு விளக்கம் வரமாறு;

உயிர் – பிரமாதா – அளப்பவன்;

உணர்வு – பிரமாணம் – அளவை.

விடயங்கள் – பிரமேயப் பொருள்கள் – அளக்கப்படும் பொருள்கள்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விடயங்களை நிருவிகற்பமாய் அறியும் அறிவு இந்திரியக் காட்சி ஆகும்; சவிகற்பமாய் அறியும் அறிவு மானதக் காட்சி ஆகும்.

தன்வேதனைக் காட்சி, யோகக் காட்சிகளின் இலக்கணம்.

அருந்து இன்பத் துன்பம் உள்ளத்து
அறிவினுக்கு அராகம் ஆதி
தரும்தன் வேதனையாம் காட்சி
சமாதியால் மலங்கள் வாட்டிப்
பொருந்திய தேச கால
இயல்புஅகல் பொருள்கள் எல்லாம்
இருந்து உணர்கின்ற ஞானம்
யோகநற் காண்டல் ஆமே. *13*

தெளிவுரை:

மேற்சொன்ன மானதக் காட்சியால், பகுத்து அறியப்பட்ட பொருளில் , மனத்தின் குணம் ஆகிய சத்துவகுண விளக்கத்தால், இன்பம் விளங்குகிறது; இராசத குண விளக்கத்தால், துன்பம் விளைகிறது; தமோகுண விளக்கத்தால், மோகம் உண்டாகிறது.

இந்த மூன்று பயன்களும் புருடனது அறிவிற்கு விளங்கும்படி, காலம், நியதி, கலை, வித்தை, அராகம் ஆகிய ஐந்து தத்துவங்களாலும் சேர்க்கப்படும், அந்த இன்ப துன்ப மோகங்களை அறியும் உயிரின் அறிவாற்றல் தன்வேதனைக் காட்சி எனப்படும்.

இவ்வாறு இன்ப துன்ப மோக வசப்படாது, அவ்வாறு வசப்படுத்துவதற்கு ஏதுவாய்த் தடைசெய்து நின்ற மலசத்திகளை, இயமம், நியமம் முதலிய யோக சமாதியால் கெடுத்து, ஓர் இடத்தில் ஒரு காலத்தில் இருந்தபடி இருந்து, பொருத்தப்பட்ட மூன்று இடங்களிலும் முக்காலத்தும், இயல்பாக விரிந்த பொருள்கள் எல்லாவற்றையும் காண்கின்ற காட்சி ஆகிய உயிரின் உணர்வு தெரிவது, யோகக் காட்சி எனப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தன் – தன்னுடைய; வேதனை – சுகதுக்கம் முதலிய அனுபவம், தன்வேதனைக் காட்சி – தன்னுடைய இன்ப துன்ப மோக அனுபவங்களைத் தன் அறிவில் காண்பது. 'மூன்று இடங்களிலும்' என்பது, மேல் கீழ் நடு ஆகிய மூன்று உலகங்களையும் குறிக்கும். முக்காலம் – இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம். எல்லாவற்றையும் யோக சமாதியில் அறியும் அறிவு, யோகக்காட்சி ஆகும்.

இருவகை அனுமானங்களின் இலக்கணம்.

பக்கம் மூன்றின் மூன்று ஏது
உடைய பொருளைப் பார்த்து உணரத்
தக்க ஞானம் தன்பொருட்டாம்;
பிறர்தம் பொருட்டாம் அனுமானம்
தொக்க இவற்றால் பிறர்தெளியச்
சொல்லல் ஆகும்; அச்சொல்லும்
மிக்க அன்று வயத்தினொடு
எதிர்ஏகச் சொல் என இரண்டாம். 14

தெளிவுரை

இயல்பு, காரியம், அனுபலத்தி என்னும் மூன்று ஏதுக்களுள், ஓர் ஏது உடைய பொருளை பக்கம், சபக்கம், விபக்கம் என்னும் மூன்றில் வைத்து ஏதுவை விட்டு நீங்காதது ஆகிய அவிநாபாவம் பற்றி, ஆராய்ந்து அறிதற்கு உரிய உயிரின் அறிவாற்றல், தன்பொருட்டு அனுமானம் ஆகும்.

பொருந்திய அந்த ஏதுக்களாலே தான் அறிந்த அதனைப் பிறர் அறியப் போதிப்பது ஆகிய அனுமானச் சொல், உடன் பாட்டு வாக்கியம், எதிர்மறை வாக்கியம் என்று இரண்டு வகைப்படும்.

'பக்கம்' மூன்று குறித்துச் செய்யுள் 15லும் 'ஏது' மூன்று பற்றிச் செய்யுள் 16லும் விளக்கம் காணலாம். 'தன் பொருட்டு அனுமானம்' என்பது பக்கம் மூன்றினாலும் ஏதுடைப் பொருள் ஒன்றை ஒருவன் அறியும் அறிவு ஆகும். 'பிறர் பொருட்டு அனுமானம்' என்பது தான் தெரிந்த ஒன்றைப் பிறர் தெரியுமாறு கூறுவது ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பக்கம் மூன்றின் பெயரும் இலக்கணமும்

மூன்று பக்கம் பக்கம், நிகர்
பக்கம், நிகரில் பக்கம் எனத்
தோன்றும்; பக்கம் துணி பொருளுக்கு
இடமாம் உவமை; நிகர்பக்கம்
ஆன்ற பொருள் சென்று அடையாத
இடமாம்; நிகரில் பக்கம் முதல்
என்ற இரண்டும் பொருள் உண்மைக்கு
இடமாம்; ஒன்று பொருள் இன்றாம். 15

தெளிவுரை

பக்கம் மூன்று ஆவன: பக்கம், சபக்கம், விபக்கம் என்பன ஆகும். 'சபக்கம்' என்பது சமானமான பக்கத்தைக் குறிக்கும்:'விபக்கம்' என்பது சமானமில்லாத பக்கத்தைக் குறிக்கும்; அவற்றுள் துணிதற்கு உரிய பொருள் இருக்கும் இடம் ''பக்கம்'' எனப்படும். அந்தப் பொருளுக்கு உவமையாய் எடுத்துக் காட்டப்படும் பொருள் இருக்கும் இடம், 'சபக்கம்' எனப்படும். மாட்சிமை ஆகிய அப்பொருள் இல்லாத இடம் விபக்கம் எனப்படும். இந்த மூன்றனுள், முதற்கண் பொருந்திய பக்கம், சபக்கம் இரண்டும் ''பொருள் உண்டு'' என அறிதற்கு இடமாகும். ஏனை விபக்கம் ''பொருள் இல்லை'' என்று அறிதற்கு இடமாகும்.

புகை காணப்படுகின்ற மலையில், அக்கினி உண்டு என்று அறிவதால், மலை பக்கத்திற்கு உவமை; புகை இருக்கும் அடுக்களையில் (Kitchen) அக்கினி இருப்பதுபோல என்று அறிவதால், அடுக்களை சபக்கத்திற்கு உவமை; :புகை இல்லாத தடாகத்தில் (Tank) அக்கினி இல்லை என்று அறிவதால், தடாகம் விபக்கத்திற்கு உவமை ஆகும்.

ஒரு பொருளை அனுமானித்து அறிவதற்குப் பக்கம், சபக்கம், விபக்கம் என்னும் மூன்றினையும் பற்றிய தெளிவான அறிவு தேவைப்படும். ஒரு பொருள் உண்டு என்பதையும் ஒரு பொருள் இல்லை என்பதையும் இந்த மூன்று பக்கங்களைப் பற்றிய அறிவைக் கொண்டே தெளிந்து துணியவேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏது மூன்றின் பெயரும் இலக்கணமும்

ஏது மூன்றாம் இயல்பு,
காரியத்தோடு, அனுபலத்தி, இவை
ஓதின், இயல்பு மாமரத்தைக்
காட்டல், உறுகாரியம் புகைதன்
ஆதியாய அனல் காட்டல்,
ஆகும் அனுபலத்தி அது
சீதம் இன்மை பனி இன்மை
காட்டல், போலும் செப்பிடினே. 16

தெளிவுரை:

மேலே எடுத்துக் கொண்ட மூன்று ஏதுக்கள் ஆவன, இயல்பு, காரியம், அனுபலத்தி என்பன ஆகும், இவற்றிற்கு இலக்கணம் வருமாறு.

''மா'' முதலிய சொல்லின்கண், மரம் முதலிய பொருளை உணர்த்தும்பொழுது, அந்தச் சொற்களில் இயல்பால் உள்ளதாகிய ஆற்றல், ''இயல்பு ஏது'' எனப்படும். புகை முதலிய காரியங்கள், நெருப்பு முதலிய தத்தம் காரணங்களை உணர்த்தும்பொழுது, அந்த காரியங்கள் பொருந்திய ஏது. ''காரிய ஏது'' எனப்படும். சொல்லும் பொழுது, குளிர் இல்லாமை முதலிய காரியத்தின் இன்மைகள், பனி இல்லாமை முதலிய காரணத்தின் இன்மைகள் குளிர் வராமை முதலிய காரியத்தின் இன்மைகளை உணர்த்தும்பொழுது, அந்த இன்மைகள் ''அனுபலத்தி ஏது'' எனப்படும்.

முன்னிலைப் பொருளை அறிதல், மறைந்த பொருளை அறிதல், இல்லாத பொருளை அறிதல் என அறிதல் மூவகைப்படும். இந்த மூவகை அறிவிற்கும் முறையே இயல்பு, காரியம், அனுபலத்தி என்னும் மூன்றும் ஏதுக்கள் ஆயின.

''காரியம்'' என்றாலும் ''உபலத்தி'' என்றாலும் ஒக்கும். உள்ளது என்னும் உணர்விற்கு விடயம் உபலத்தி ஆகும். இல்லது என்னும் உணர்விற்கு விடயம் அனுபலத்தி ஆகும். இவற்றை, புகை உள்ளதால் அக்கினி உண்டு என்று அறிவது உபலத்தி; குளிர் இன்மையால் பனி இல்லை என்று அறிவது அனுபலத்தி ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''மா'' என்னும் ஓரெழுத்து ஒரு மொழி ஆகிய சொல், மரம், குதிரை, வண்டு முதலியவற்றின் பெயர்; ஆயினும் ''மா'' பூத்தது என்றால் மரத்தையும், மாப்பாய்ந்தது என்றால் குதிரையையும், ''மா''ப் பறந்தது என்றால் வண்டையும் உணர்த்துதல் வழக்கம் (சகஜம்) ஆகலின் அஃது ''இயல்பு'' எனப்பட்டது.

அனுபலத்தி – அறியாமை இல்லை என்னும் அறிவு, அந்–எதிர் மறை; உபலத்தி – அறிதல்; உப – அருகில்; லப்தி – பெறுதல்; அருகில் நின்று பெறுவது அறிவு. இயல்பு – இயற்கை. காரியம் – காரணத்தால் ஆகியது – ஆக்கப்பட்டது. இயல்பாய் உள்ள ஆற்றலை உணர்த்துவது இயல்பேது; காரணத்தை உணர்த்துவது காரிய ஏது; காரியமின்மையை உணர்த்துவது அனுபலத்தி ஏது ஆகும்.

உடம்பாட்டுச் சொல், எதிர்மறைச் சொற்களின் இலக்கணம்

புகையால் அனல் உண்டு அடுக்களைபோல்
என்னப் பகறல் அந்நுவயம்
வகையாம் அனல் இலாஇடத்துப்
புகை இன்று ஆகும்; மலரினொடு
முகையார் நீரில் போல் என்று
மொழிதல் எதிர்ஏகச் சொல் இவை
தொகையார் உறுப்பு ஐந்தொடும்கூடச்
சொல்லுவாரும் உளர் துணிந்தே.17

தெளிவுரை:

மேலே பதினான்காவது செய்யுளில் கூறிய உடன்பாடு, எதிர்மறை என்னும் சொல் இரண்டனுள், புகை உள்ளபொழுதே நெருப்பு உண்டு என்பதும், அதற்குப் புகை இருக்கும் அடுக்களையை உவமை கூறுவதும் உடன்பாட்டுச் சொல் ஆகும்.

விளக்கம் ஆகிய நெருப்பு இல்லாத பொழுது, புகை இல்லை என்பதற்கு, மலரும் அரும்பும் நிறைந்த தாமரை ஓடையை உவமை கூறுவது , மறுதலைச் சொல் அல்லது எதிர்மறைச் சொல் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்த இருவகைச் சொற்களையும் மேற்கோள், ஏது, உவமானம், உபநயம், நிகமனம் என்னும் தொகை பொருந்திய ஐந்து வகை உறுப்புக்களால் இணங்க வைத்துத் தெளியக் கூறுவாரும் உளர்.

மேற்கோள் – இந்த மலை தீ உடைத்து என்பது.

ஏது – புகை இருப்பதனால் என்பது.

உவமை – புகை இருக்கும் அடுக்களை போல் என்பது.

உபநயம் – நெருப்பு இல்லாத தாமரைத் தடாகத்தில் புகை இல்லை என்பது.

நிகமனம் – ஆதலால் இந்த மலை தீ உடைத்து என்பது. இந்த ஐந்தனுள் உபநயம் எதிர்மறைச் சொல் ஏனைய நான்கும் உடன்பாட்டுச் சொற்கள்.

நிகமனம் – முடிபு. உபநயம் – ஏதுவை அருகில் கொண்டு சென்று முடித்தல்.

அந்நுவயம் – உடன்பாடு; அது அயம் – அந்வயம். அநு – பின்; அயம் – போதல்; காரியம் காரணத்தைத் தொடர்தல்.

எதிரேகம் – எதிர் மறை.

அனுமானத்தில் அடங்கும் பிற அளவைகளின் இலக்கணம்.

போது நாற்றத்தால் அறிதல்,
பூர்வக் காட்சி அனுமானம்:
ஓதும் உரையால் அறிவின் அளவு
உணர்தல், கருதல் அனுமானம்;
நீதியால் முன் கன்மபலம்
நிகழ்வது, இப்போது இச்செய்தி
ஆதியாக வரும்பயன் என்று
அறிதல், உரையால் அனுமானம். 18

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

வாசனை முதலிய ஏதுவைக் கொண்டு, வாசனை உடைய மலரை முன் கண்ட உணர்ச்சியினால், இந்த இடத்தில் மலர் உண்டு என்று அறிவது, பூர்வக்காட்சி அனுமானம் எனப்படும். சொல்லப்பட்ட வார்த்தை முதலிய ஏதுவைக் கொண்டு, சொன்ன அவன் அறிவின் அறிவு முதலியவற்றை அறிவது, கருதல் அனுமானம் எனப்படும்.

இந்த இரண்டிலும் வேறாய், இன்பமும் துன்பமும் முன் பிறவியில் செய்த வினை எனப்படும் முயற்சியே. ஆனால் இப் பொழுதும் அந்த வினைகளைச் செய்தால் மேலைக்கு ஆகும், என்றால் போல் நூல்களுள் சொன்னதைக் கொண்டு, சொல்லாத பொருளையும் ஒப்புமை பற்றி ஊகித்துத் துணிதல் உரை அனுமானம் எனப்படும்.

'பூர்வகட்சி அனுமானம்' என்பது முன்பு கண்ட காட்சியைக் கொண்டு அனுமானித்து அறிவதால் ஏற்படுவதைக் குறிக்கும். இது பிரத்யட்ச அனுமானம் எனவும் திருட்டானுமானம் எனவும் கூறப்படும்.

'கருதல் அனுமானம்' என்பது, ஒருவன் சொல்லும் வார்த்தையைக் கொண்டு, அவனது அறிவின் எல்லையை அல்லது அவனறிவின் குறையை அனுமானித்து அறிவதைக் குறிக்கும்.

'உரை அனுமானம்' என்பது வேதாகமங்களில் சொன்னதைக் கொண்டு, சொல்லாத விவரங்களையும் அனுமானித்துத் துணிவதைக் குறிக்கும் . எடுத்துக்காட்டாக, இந்தப் பிறவியில் நிகழும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் முற்பிறவியில் செய்த கன்மங்களின் பயன் ஆகும் என்று வேதாகமங்கள் கூறும்; அதனைக் கொண்டு இந்தப் பிறவியில் செய்யும் கன்மம் காரணமாக, அடுத்த பிறப்பில் இன்பதுன்பம் விளையும் என்று அனுமானித்துத் துணிதல், உரை அனுமானமாகும்.

ஆகமப் பிரமாணம் மூன்றின் இலக்கணம்.

அநாதியே அமலன் ஆய
அறிவன் நூல் ஆகமம் தான்;
பின்ஆதி மாறு இன்றிப் பேணல்
தந்திரம் மந்திரங்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மனாதிகள் அடக்கித் தெய்வம்
வழிபடும் வாய்மை ஆகும்;
தன் ஆதி ஈறு இலாதான் தன்மை
உணர்த்துதல் உபதேசம்தான். **19**

தெளிவுரை:

அநாதி முத்த சித்துரு ஆகிய இறைவன் அருளிச்செய்த நூல்கள் எனப்படும் வேதாகமங்கள், கருமகாண்டம், உபாசனா காண்டம், ஞான காண்டம் என மூவகைப்படும். அவற்றுள், கருமகாண்டம் பற்றி பின்னைய உபாசன காண்டம் ஞான காண்டங்கட்கு மாறுபாடு இன்றிக் கடைப்படித்தலை அறிவது தந்திரக்கலை ஆகிய உரை அளவை எனப்படும்.

உபாசன காண்டம் பற்றி, மனம் முதலிய கருவிகளை அடக்கித், தெய்வத்தை வழிபடும் உண்மையை அறிவது, மந்திரக்கலை ஆகிய உரை அளவை ஆகும். ஞான காண்டம் பற்றி, முதலும் முடிவும் இல்லாத இறைவன் தன்மைகளைத் தான் உணருமாறு, பிறர்க்கு உணர்த்துமாறும் அறிதல், உபதேசக்கலை ஆகிய உரை அளவை ஆகும்.

வேதாகமங்களை ஆப்த வாக்கியம் என்றும், அவற்றை அருளிய சிவபெருமானைப் பரமாத்தன் என்றும் கூறுவர். ஆப்தன் – உள்ளதையே கூறுபவன். பரமாத்தன் – மேலான உண்மையை ஓதுபவன். அறிவன் – முற்றறிவுடையவன் – சர்வஜ்ஞன்.

அனுமான அளவையைப் பயன்படுத்துவதில் உண்டாகும் குற்றங்களின் பாகுபாடு.

ஈண்டு பக்கப் போலி நான்கு,
ஏதுப் போலி ஒரு மூன்றாய்,
வேண்டும் எழுமூன்று ஆகும் விளங்கு
உவமைப் போலி ஈரொன்பான்
காண்டும் தோல்வித் தானம் இரண்டு
இருபத்து இரண்டாம்; கருதில் இவை
யாண்டும் மொழிவர் அவையெல்லாம்
அளக்கில், அறுபத்து ஐந்து ஆகும். **20**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மேலே கூறப்பட்ட அனுமானப் பிரமாணத்திற்கு உறுப்புக்கள் வருமாறு:

பக்கப்போலி நான்கு – ஒரு பக்கம்(புடை) ஒத்துப்பக்கம் போல் தோன்றுவது ஆகிய பக்கப் போலி, (1) துணியும் பொருளுக்கு இடன் ஆகாததும், (2) அதற்கு ஒரு பக்கம் இடன் ஆகாததும், (3) துணிந்த பொருளுக்கு இடன் ஆவதும் (4) அதற்கு ஒரு பக்கம் இடனாவதும் ஆக நான்கு வகைப்படும்.

ஏதுப்போலி மூன்று: ஒரு புடை ஒத்து ஏதுப்போலத் தோன்றுவது ஆகிய ஏதுப்போலி, (1) துணியப்படாததும் (2) மறுதலைக்கப்படுவதும், (3) ஒருதலைப் படாததும் என மூவகைப்படும். இது விரிவாகப் பேசும் பொழுது இருபத்து ஒன்று ஆகும். உவமைப்போலி, உவமை இலக்கணம் இன்றி. உவமைபோலத் தோன்றுவது; இஃது உடன்பாடு பற்றியும் எதிர்மறை பற்றியும், இருவகைப்பட்டு விரியும் பொழுது, பதினெட்டு வகைப்படும்.

இனித் தர்க்க வாதத்தின்கண், பேசத் தெரியாமை ஆகிய தோல்வித்தானம் இருவகைப்படும். அவை ஆவன, (1) மயங்கப்பேசுதல், (2) சும்மா இருத்தல் எனப்படும், இந்தத் தோல்வித்தானம் பற்றி விரித்துப் பேசும் பொழுது, அஃது இருபத்து இரண்டு ஆகும். இவற்றை எல்லாம் அளக்கும் பொழுது, (4+21+18+22=65) அறுபத்து ஐந்து ஆகும். இவற்றைக் கருத்தில் கொண்டு சிந்திக்கும் பொழுது, இவை எந்த இடத்திலும் அனுமான அளவைக்குக் குற்றங்கள் ஆகும். ஆகவே, இவற்றைத் தவித்துத் தர்க்கம் செய்வதே பொருத்தம் ஆகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். போலிகளையும் புரிந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கில், இந்தச் செய்யுள் அருளிச் செய்யப்பட்டது.

பிரமாண இயல்

தோற்றுவாய்:

பதி பசு பாசம் என்னும் முப்பொருள் உண்டு என்று பிரமாணத்தால் சாதிப்பதால், முதன் மூன்று சூத்திரமும் ''பிரமாண இயல்'' என்னும் பெயர் ஆயிற்று. ''இயல்'' என்பது பல சூத்திரங்களின் தொகுதி ஆகும்.

3

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம் என்னும் பிரமாணம் மூன்றனுள், பிரத்தியட்சம் காணப்படும் பொருளை அளத்தற்குக் கருவி ஆகும்; அனுமானம் ஆகமம் இரண்டும் காணப்படாத பொருளை அளத்தற் கருவி ஆகும். ஆகவே காணப்படாத பதி பசு பாசங்கள் உண்டு என்பதை, ஆகமப் பிரமாணத்தை ஒப்புக் கொள்ளாதவரும் ஏற்குமாறு, அனுமானப் பிரமாணத்தால் அறிவிக்கத் தொடங்குகிறார்.

குடத்தைக் கண்டபொழுது, அதனைச் செய்வோன் ஆகிய குயவன் உண்டு எனக் கொள்வது இயல்பு. அதுபோலத் தோன்றி நின்று அழியும் பிரபஞ்சத்தைக் கண்ட அளவிலே அத்தொழிலைச் செய்யும் கடவுள் உண்டு என நாட்டுவது இயல்பு ஏது எனப்படும்.

இயல்பு, காரியம், அனுபலத்தி என்னும் மூன்று ஏதுக்களைக் கொண்டு , மறைந்து நின்ற பொருளை உணர்த்துவது அனுமான அளவை ஆகும். அவற்றுள் இயல்பு ஏது கொண்டு, கடவுள் உண்டு என நாட்டுகின்ற அனுமானப் பிரமாணம் முதல் சூத்திரத்தால் கூறுகிறார்.

முதல் சூத்திரம்

பதி உண்மை

உலகம் தோன்றி நின்று ஒடுங்குவதால், ஒரு கருத்தாவை உடையது எனச் சூத்திர பொருளைத் தொகுத்துக் கூறுகிறது:

ஒருவனோடு ஒருத்தி ஒன்றுஎன்று
உரைத்திடும் உலகம் எல்லாம்
வருமுறை வந்து நின்று
போவதும் ஆதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும்;
தான் முதல் ஈறும் ஆகி
மருவிடும் அநாதி முத்த
சித்துரு மன்னி நின்றே. 21

தெளிவுரை:

''அவன்''என்றும், ''அவள்'' என்றும், ''அது'' என்றும், தனித்தனி வேறுபாடு உடையதாய்க் கூறப்படும் பிரபஞ்சக் கூட்டம், உள்ளது ஆகிய காரணத்தில் நின்று தோன்றுகின்ற காரிய முறையில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தோன்றி, நின்று, அழிதலை உடையது. ஆதலால், அந்தப் பிரபஞ் சத்தைத் தோற்றுவிப்பதற்கு ஒரு கருத்தா வேண்டப்படும். அந்தக் கருத்தா முன் ஒடுங்குதற்கு ஏதுவாய் நின்ற சங்கார காரணனே ஆகும். அக் காரணன் பிரபஞ்சம் ஒடுங்கிய பின்னும், ''அநாதி முத்த சித்துரு'' வாய் நிலைபெற்று நின்று, ''அநாதி பெத்த சித்துரு'' வின் பொருட்டு, மீண்டும் அந்தப் பிரபஞ்சத்தை முன்போலவே தோற்றுவிப்பன். இவ்வாறு ஒடுக்கியும் தோற்றுவித்தும் செய்வதனால், இந்தச் சங்கார காரணனே உலகுக்கு முதற் கடவுள்.

''அநாதி முத்த சித்துரு'' என்பது அநாதியே, அஃதாவது இயல் பாகவே பாசங்க்ளின் நின்றும் விடுபட்ட ஞான வடிவினன் ஆகிய சிவ பெருமானைக் குறிக்கும். ''அநாதி பெத்த சித்துரு'' என்பது, இயல் பாகவே பாசத்தோடு கூடிய ஞான வடிவினன் ஆகிய ஆன்மாவைக் குறிக்கும்.

இந்த முதல் செய்யுள், முதல் நூல் ஆகிய சிவஞான போதம் போல மூன்று கூற்றை உடையது.

முதற் கூறு; – ''ஒருவனோடு ஒருத்தி.... தருபவன் ஒருவன் வேண்டும்''

இரண்டாம் கூறு– ''ஈறும் ஆகி அநாதி முத்த சித்துருவாய் மன்னி நின்று மருவிடும்''

மூன்றாம் கூறு: – ''தானே முதல்.''

முதல் சூத்திரம் – முதல் அதிகரணம்

இந்த முதல் அதிகரணம், ''வருமுறை'' ஒரு கூறும், ''வந்து நின்று போவது'' ஒரு கூறும், ''தருபவன் ஒருவன் வேண்டும்'' என்பது ஒரு கூறுமாக முக்கூற்றை உடையது.

வந்து நின்று போவதை வலியுறுத்துகின்றது:

உதிப்பதும் ஈறும் உண்டு என்று
உரைப்பது இங்கு என்னை? முன்னோர்
மதித்து உலகு அநாதி யாக
மன்னியது என்பர் என்னின்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதற்குயான் அனுமான் ஆதி
எடேன் இப்பூதாதி எல்லாம்
விதிப்படி தோற்றி மாயக்
காணலால் மேதி னிக்கே. 22

தெளிவுரை:

உலகாயத நூல் உணர்ந்தோர், பிரத்தியட்சப் பிரமாணத்திற்கு எய்தாதன பிரமாணம் ஆகா என எண்ணி, உலகம் நித்தமாக நிலைபெறுவதே அன்றித் தோற்றமும் நாசமும் உலகுக்கு உண்டு எனக் கூறுவது பொருந்தாது என்பர். இவ்வாறு அவர்கள் கூறியது போலவே, இந்த உலகத்தில் பஞ்ச பூதங்களிலிருந்து தோன்றிய எல்லாவற்றிற்கும் தோற்றங்களும் நாசங்களும் உடன் நிகழ்ச்சியாக காணும்படி உள்ளன. அஃதாவது ஒரு பொருளும் என்றும் நிலைத்து இருப்பதைக் காண முடியவில்லை. ஒரு பொருள் தோன்றவும், மற்றொரு பொருள் நிற்கவும், பிறிது ஒரு பொருள் அழியவும் காண்பது, பிரத்தியட்சமாக இருக்கிறது. ஆகவே, இந்த உலகம் முத்தொழில்படும் என்பதை நிறுவுதற்கு, உலகாயதர் கொண்ட காட்சி அளவை ஒன்றே போதும். எனவே, அனுமானம் முதலிய வேறு பிரமாணங்கள் தேவை இல்லை.

தருபவன் ஒருவன் வேண்டும் என்பதைக் கூறுகிறது:

இயல்புகாண் தோற்றி மாய்கை
என்றிடின், இயல்பி னுக்குச்
செயலது இன்று; இயல்பு செய்தி
செய்தியேல், இயல்பது இன்றாம்;
இயல்பதாம் பூதம் தானே
இயற்றிடும் செய்தி என்னில்,
செயல் செய்வான் ஒருவன் வேண்டும்,
செயற்படும் அசேத னத்தால். 23

தெளிவுரை:

உலகம், தோன்றி அழியினும், அந்தத் தோற்றக் கேடுகள் உலகிற்கு இயல்பு ஆகலின், அந்தத் தொழில் கொண்டு, ஒரு கருத்தா வேண்டப்படுவது அன்று என்பர் உலகாயதரில் ஒரு சாரார். தோன்று தலும் கெடுதலும் வேற்றுமை ஆகலின், இயல்பிற்கு வேற்றுமை ஆதல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூடாது; அவ்வாறு வேற்றுமை ஆவதாலே. இயல்பு என்று சொல்வது பொருந்தாது. அப்படிச் சொன்னால், வேற்றுமையின் வேறாய் இயல்பு என்பது ஒன்று இல்லை என்று ஒப்புக் கொள்ள வேண்டிவரும். வரவே, தோன்றி மாய்வது இயற்கை என்று முன்பு சொன்னது விட்டுப்போய்த், தோல்வித்தானமாய் முடியும். இது தர்க்க வாதத்திற்குப் பொருந்தாது.

இனி, இயல்பும் வேற்றுமையும் வேறு எனவே கொண்டு, ''பூதம் நான்கும் இயல்பாய் உள்ளன ஆகும்; அவை தோன்றி மாய்தல் ஆகிய வேற்றுமையைச் செய்யும்'' என்று சொன்னால், அதுவும் பொருந்தாது, ஏனென்றால், அந்தப் பூதங்கள் அவ்வாறு தோன்றி அழிதல் ஆகிய தொழிலைப் பொருந்தி நிற்கின்ற காரியப் பொருள்களே ஆகும்; செயப்படும் பொருள்கள் ஆகிய அந்தச் சடப்பொருள்களுக்குத் தாமே தோன்றி அழிதல் தொழிலைச் செய்ய முடியாது; எனவே அந்தத் தொழிலைச் செய்வதற்கு, அந்தப் பூதங்களின் வேறாய் ஒரு கருத்தா வேண்டப்படும்.

இதிலிருந்து, செயப்படுபொருளும் வினை முதலும் ஒன்று ஆமாறு இல்லை என்பது பெறப்படும். 'தன்னைக் குத்தினான்' என்று கூறும்பொழுது, குத்திய வினைமுதல் கை என்பதும் குத்தப்பட்ட செயப்படுபொருள் பிறிதோர் உறுப்பு என்பதும் பெறப்படும். மற்றோர் உவமை; 'தன்னைத் தான் அறிந்தான்' என்று கூறும்பொழுது, அறிந்தது தன் அறிவும், அறியப்பட்டது தன் வடிவும் என்பது பெறப்படும். படவே செயப்படு பொருளுக்குச் செய்பவன் ஒருவன் வேண்டும் என்பது தெளிவாகும்.

இதுவும் அது.

நிலம் புனல் அனல்கால் காண
நிறுத்திடும் அழிக்கும் ஆக்கும்
பலம்தரும் ஒருவன் இங்குப்
பண்ணிட வேண்டாம் என்னில்,
இலங்கிய தோற்றம் நிற்றல்
ஈறுஇவை இசைத லாலே,
நலம்கிளர் தோற்றம் நாசம்
தனக்குஇலா நாதன் வேண்டும். 24

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மண், நீர், நெருப்பு, வாயு என்னும் நான்கு பூதங்களுள் வாயு, ஏனைய மூன்று பூதங்களையும் நிலைக்கச் செய்து, தான் அவற்றது கூட்டத்தில் நிலைபெறும். நெருப்பு ஏனைய மூன்று பூதங்களை அழித்துத் தான் அவற்றது கூட்டத்தில் அழியும்; நீர் ஏனைய மூன்று பூதங்களைத் தோற்றுவித்துத் தான் அவற்றது கூட்டத்தில் தோன்றும்; மண் ஏனைய பூதங்களின் நின்று பயனைப் பயப்பித்துத் தான் அவற்றது கூட்டத்தில் பயன்படும்.

இவ்வாறு செயப்படும் பொருளும் கருத்தாவும் பூதங்களுக்கு உள்ளே அமைந்து கிடக்கின்றமையால், வேறு இறைவன் வேண்டாம் என்று உலகாயதர் கூறுகின்றனர், அது பொருந்தாது; ஏனென்றால், இந்தப் பூதங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே முத்தொழில் படுகின்ற மையால், அத்தொழிலைச் செய்வித்தல் பொருட்டு, முத்தொழில் படாத இறைவன் ஒருவன், அவற்றின் வேறாக வேண்டப்படும் என்பது தெளிவு.

தண்ணீர் இல்லாத பொழுது ஒன்றும் தோன்றாது; எனவே அஃது ஏனையவற்றைத் தோற்றுவிக்கும் காற்று இல்லாத பொழுது ஒன்றும் நிலையாது; எனவே அஃது ஏனையவற்றை நிலைபடுத்தும்; அக்கினி எல்லாவற்றையும் அழிக்கும்; எனவே அஃது ஏனையவற்றை அழிக்கும் என்று இவ்வாறு முத்தொழிலையும் மூன்று பூதங்களே செய்யும் எனப்பட்டது. பலம் தருதல் – காரியப்படுதல். பலம் – காரியம் – பயன். மண்ணும் தண்ணீரினால் தோன்றி, வாயுவினால் நிலைத்து, அக்கினியால் அழிக்கப்படுதல் போல, ஒவ்வொரு பூதமும் தானே முத் தொழிற்படும் என்பது பொருந்தாதது ஆயிற்று. ஆகவே அத்தொழிலைச் செய்விப்பதற்கு இப்பூதங்களின் வேறு ஆகிய இறைவன் ஒருவன் வேண்டப்படும் என்பது தெளிவாயிற்று. இந்தச் செய்யுள் ''கடவுள் உண்டு'' என்னும் பேருண்மையைப், பகுத்தறிவு வாதிகளும் மறுக்க முடியாதபடி, நிலைநாட்டுகின்றது.

சற்காரிய வாத அடிப்படையில் நிறுவுவது

சார்பினில் தோன்றும் எல்லாம்
தருபவன் இல்லை என்னில்
தேரின் இல்லதற்கோ தோற்றம்,
உள்ளதற்கோ நீ செப்பாய்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஓரின் இல்லதுவும் தோன்றாது;
உள்ளதேல் உதிக்க வேண்டா;
சோர்வு இலாது இரண்டும் இன்றி
நிற்பது தோன்றும் அன்றே. 25

தெளிவுரை:

நொடிக்கு நொடி எல்லாப் பொருள்களும் மாறுதலை உடைய தாக உள்ளன. முந்திய நொடியில் தோன்றிய ஒரு பொருள், அடுத்த நொடியில் தோன்றும் ஒரு பொருளுக்குச் சார்பு உடையதாக உள்ளது. இவ்வுண்மையை, முளை தோன்றுவதற்கு வித்து சார்பாய் இருப்ப திலிருந்து அறியலாம். வித்திலிருந்து முளை தோன்ற வேண்டு மாயின், அந்த வித்தை நிலத்தில் முளைக்கச் செய்தற்கு அதனின் வேறாய ஒருவன் இருக்க வேண்டும்.

அதுபோல, இந்த உலகத்தைத் தோற்றுவிப்பதற்கு, இந்த உல கினைப்போல் தோன்றி அழியாத மேம்பாடு உடைய ஒரு கருத்தா வேண் டும் என்பது பெறப்படும். வித்திலிருந்து முளைதானே தோன்றும். அதனைத் தோற்றுவிப்பதற்குக் கருத்தா ஒருவன் தேவை இல்லை, என்று கூறினால் அது பொருந்தாது. அதற்கு விளக்கம் வருமாறு:

ஒரு பொருளின் சார்பில் இன்னொரு பொருள் தோன்றும் என்று கூறுவது, இல் பொருளுக்கோ அல்லது உள் பொருளுக்கோ என்பது கூறப்படவேண்டும். ஆராய்ந்து நோக்கும் பொழுது, இல்பொரு ளுக்கு என்று கூறினால், அது முயல்கோடு போல, ஒரு காலத்தும் தோன் றுமாறு இல்லை; உள் பொருளுக்கு என்று சொன்னால், ஏற்கனவே உள் பொருளாய் இருக்கும் இது தோன்ற வேண்டும் என்பது இல்லை. எனவே, இல்லதும் அன்றி உள்ளதும் அன்றி, உறுதியாகச் சொல்லமுடி யாத வெறுமையாய், சூக்கும வடிவில் நிற்கும் பொருள் தோன்றும் என்று கொள்ள வேண்டும். இதன் விளக்கத்தை அடுத்த செய்யுளில் காணலாம்.

இதுவும் அது

உள்ளதும் இலதும் இன்றி
நின்றது ஒன்று உளதேல் உண்டாம்;
இல்லதேல் இல்லை ஆகும்;
தோற்றமும் இசையா தாகும்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உள்ள காரணத்தில் உண்டாம்
காரியம் உதிக்கும் மண்ணில்
இல்லதாம் படம் கடாதி
எழில்தரும் இயற்று வானால். 26

தெளிவுரை:

மேற்செய்யுளில் கூறியபடி, உள்ளதும் இன்றி இல்லதும் அன்றி அநிர்வசனமாய்க் கூறப்படும் பொருள்தான் உண்டோ இல்லையோ என்று கேட்பவருக்கு உண்டு என்று கூறினால் உள் பொருளே ஆகும். இல்லை என்று கூறினால் இல்பொருளே ஆகும். ஆகவே, முன்பு அநிர்வசனம் என்று கூறியது, போலியாய் ஒழியும். அஃதன்றியும் அநிர்வசனப் பொருள் சூனியம் ஆதலின், அதற்குத் தோற்றமும் கூடாது.

எனவே திகிரி முதலிய துணைக் காரணங்களை, மண் ஆகிய முதல் காரணத்தில் செலுத்துகின்ற குயவனால், அந்த மண்ணிலிருந்து குடம், பானை, கலசம் முதலிய காரியமே வெளிப்பட்டுத் தோன்றும்; துணி முதலிய காரியம் வெளிப்பட்டுத் தோன்றாது. அதுபோல, உள் பொருள் ஆகிய காரணத்தின் நின்றும், உள் பொருள் ஆகிய காரியம், ஒரு கருத்தாவால் வெளிப்பட்டுத் தோன்றும் என்பது தெளிவாயிற்று.

தோன்றி நிற்கும் பொருள், தோற்றுவிக்கப்படத் தேவை இல்லை; இல்பொருள் தோன்றாது தோன்றாமல் நுண்ணிலையில் நிற்கும் உள்பொருளே தோற்றுவிக்கப்பட வேண்டியிருக்கிறது என்பது முந்திய செய்யுளில் கூறப்பட்டது. இந்தச் செய்யுளில், அந்தப் பொருள் அதன் காரணம் ஆகிய நுண்ணிலையில் அடங்கி இருந்து, பின்பு பருநிலையில் (தூலமாய்) சற்காரிய முறைப்படி தோற்றுவிக்கப்படும் காரியப் பொருள் என்பது கூறப்பட்டது; அதனைத் தோற்றுவிப்பதற்கு ஒரு கருத்தா இன்றியமையாது வேண்டப்படும் என்பதும் நிறுவப்பட்டது.

குயவன்	–	கருத்தாவிற்கு உவமை.
மண்	–	காரணப் பொருளுக்கு உவமை.
குடம் முதலியன	–	காரியப் பொருளுக்கு உவமை.

கருத்தா தோற்றுவிக்காவிட்டால், காரணப் பொருள் காரியப் பொருளாக வெளிப்பட்டுத் தோன்றாது என்பது கருத்தில் கொள்ளத் தக்கது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதுவும் அது

ஒருபொருள் ஒருவன் இன்றி
உளது இலது ஆகும் என்னில்
தருபொருள் உண்டேல், இன்றாம்
தன்மை இன்று; இன்றேல் உண்டாய்
வருதல் இன்று; இலது காரியம்
முதல் உளது ஆகும் என்னில்,
கருது காரியமும் உண்டாய்த்
தோற்றமும் கருத்தாவால் ஆம். 27

தெளிவுரை:

இப்பொருளுக்கும் அநிர்வசனப் பொருளுக்கும் தோற்றம் உண்டு என்று கூறுவது பொருந்தாது. எனவே, இதற்கு ஒரு கருத்தா வேண்டப்படுவது இன்றியே உண்டாகும், என்று கொள்வோம் ஆயின், அதுவும் பொருந்தாது. ஏனெனில், ஒரு பொருள் உள்ளது என்று கூறினால் இல்லையாம் தன்மை இன்றி அஃது உள்ளதே ஆகும்; ஒரு பொருள் இல்லை என்று கூறினால் அஃது உண்டாகி வருதல் இன்மையின், அஃது இல்லதே ஆகும். ஆகவே, ''உண்டுமாம் இல்லையுமாம் என மாறுபட்ட இரண்டு தன்மை'' ஒரு பொருட்கு இசைதல் கூடாது.

இவ்வாறு மறுக்கப்பட்ட பிறகும் சித்தாந்தக் கொள்கைப்படி, காரண ரூபமாய் உண்டு, காரியரூப்மாய் இல்லை என்பதே, 'உண்டும் இல்லை' என்பதற்குப் பொருள் என்று கூறினால் அதுவும் பொருந்தாது. ஏனெனில், காரண – காரியங்களுக்குத் தம்முள் வேற்றுமை இன்மையால், காரணம் உள் பொருள் என்றால், காரியமும் அதன்கண் சூக்கும ரூபமாய் உள்ளதேஆகும். ஆகவே, அவ்வாறு சூக்கும ரூபமாய் உள்ள காரியம், பின்னர்த் தூல ரூபமாய் விளங்கித் தோன்றுதல், ஒரு கருத்தா வினாலேயே ஆகும் என்பது, தானே பெறப்படும்.

உடலைப்போல உலகமும் நின்று ஒடுங்கும் எனக் கூறுகின்றது

காயத்தின் அழிவு தோற்றம்
கண்டனம்; உலகில் காணாம்;
நீ இத்தை உரைத்தவாறு இங்கு
என் எனில், நிகழ்த்தும் உண்மை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாய்த்த உலகம் பூ, நீர்,
தீ, வளி, வானம் ஆதி
ஆய இத்தால் ஒன்றின் ஒன்று
தோன்றி நின்று அழிதலாலே. 28

தெளிவுரை:

உடல், உலகம் என்னும் இருகூற்றுப் பிரபஞ்சத்துள், ஆண் பெண் அலி என மேற்கூறிய அவயவப் பகுப்பு, உடலுக்கே அன்றி உலகிற்கு இல்லை; எனவே, தோற்றமும் அழிவும் உடலில் காண்பதுபோல், உலகத்தில் காணவில்லை ஆதலின், இங்கு இரண்டுக்கும் தோற்றக்கேடுகள் ஒரே மாதிரி நிகழ்வதாகக் கூறுவது பொருந்தாது என்று பிற மதத்தவர் மறுப்பர்.

அவர்கள் மறுப்பு பொருந்தாது என்பதற்கு விளக்கம் வருமாறு:

மயக்கத்தை செய்யும் இந்த உலகமும் மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் அவயவப் பகுப்பு உள்ளதாய் இருக்கிறது. உடல், உலகம் ஆகிய இரண்டுக்கும் அவயவப் பகுப்பு உள்ளமையால், இருகூற்றுப் பிரபஞ்சத்தில் ஒன்று ஆகிய உலகமும், உடலைப்போலத் தோன்றி அழிதலை உடையது என்பதுபெறப்படும்.

உலகம் தோன்றி ஒடுங்குவது எனக் கூறுகின்றது

ஓரிடம் அழியப் பின்னும்
ஓரிடம் நிற்கும் ஒக்கப்
பாரிடம் அழிவது இன்றாம்
என்றிடில், பயில்வித்து எல்லாம்
காரிடம் அதனில் காட்டும்
அங்குரம் கழியும் வேனில்
சீருடைத்து உலகு காலம்
சேர்ந்திடப் பெயர்ந்து செல்லும். 29

தெளிவுரை:

நிலம், மலை, கடல் முதலிய வடிவில் உள்ள உலகமும், உடல் போல் அவயவப் பகுப்பு உடைமையால் உடலைப் போலத் தோன்றி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நின்று அழியும் என்பது பெறப்படும். ஆயினும், கண்ணால் காணப் படும் உலகம் முழுவதும் ஒருசேர அழியும் என்று கூறினால், ''உலகம் அநாதி'' என்னும் சுருதியோடு முரணும்; (சுருதி – வேதம்) மேலும் அழிந்தது மீண்டும் தோன்றும் என்பதற்கு ஒரு தொடர்பும் இன்றி முடியும்; எனவே, உலகத்தின் ஒரு பக்கம் அழிந்தாலும், பிறிதொரு பக்கம் நிற்கும் என்பதே பொருத்தம் உடையது. இவ்வாறு பிற மதத்தவர் கூறுவர். இது பொருந்தாது என்பதற்கான விளக்கம் வருமாறு:

ஒரு சாதி பல பொருள் ஆகிப் பழகி வருகின்ற வித்து முதலிய சடப் பொருள்கள், கார் காலம் ஆகிய ஒரு கால நிலையில் ஒரு சேர முளை தோன்றும், வேனில் கால நிலையில் ஒரு சேர அழியும். ஆகவே, அத்தகைய சடத்தன்மை உடைய உலகமும் அந்தந்தக் காலம் வந்த பொழுது, முழுவதும் ஒரு சேரத் தோன்றி, ஒருசேர அழியும்.

பாரிடம் – பூமி – உலகம்; 'காரிடம்' என்பது கார் காலத்தைக் குறிக்கும். கார் காலம் – ஆவணி, புரட்டாசி மாதங்கள். வேனிற் காலம் – ஆனி, ஆடி மாதங்கள். பெயர்தல் – ஒரு சேர அழிதல், அங்குரம் – முளை. வித்து மாயைக்கு உவமை; அங்குரம் உலகுக்கு உவமை.

துணைக் காரணமும் நிமித்த காரணமும்.

காலமே கடவுள் ஆகக்
கண்டனம் தொழிலுக்கு என்னில்,
காலமோ அறிவு இன்று ஆகும்;
ஆயினும், காரியங்கள்
காலமே தரவே காண்டும்;
காரணன் விதியினுக்குக்
காலமும் கடவுள் ஏவ
லால் துணைக் காரணம்காண். 30

தெளிவுரை:

மேலே கூறியபடி, காலம் வந்தபொழுது, வித்துக்கள் தோன்றி அழிவதால், அந்தத் தோற்றக் கேடுகளுக்கும் காலமே கருத்தாவாய் முடியும் என்று பிற மதத்தவர் கூறுவர். ஆயினும் அது பொருந்தாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏனெனில், காலம் அறிவு இல்லாத சடம்; எனவே அது கருத்தா ஆகாது. ஆனால், தோற்றக் கேடுகளைக் காலமே தருவதைக் காண்கிறோம். ஆகலின், அறிவுடைய கருத்தாவின் ஏவலால், கருத்தா செய்யும் தோற்றக் கேடுகளுக்குக் காலமும் துணைக் காரணம் ஆகும். ஆகவே, கருத்தா நிமித்த காரணம் என்றும் காலம் முதலியன துணைக் காரணம் என்றும் அறிவாயாக. (ஏவல் – ஆணை)

அணுக்கள் உலகிற்கு முதற்காரணம் ஆகா

அழிந்தபின் அணுக்கள் தாமே
அகிலமாய் வந்து நின்று,
கழிந்திடும் கன்மத்து என்னில்
கன்மமும் அணுவும் கூட
மொழிந்திடும் சடமே ஆகி
முடிதலால், முடியா செய்தி
ஒழிந்திடும் அணுருபங்கள்
உலகுஎலாம் ஒடுங்கும் அன்றே. 31

தெளிவுரை:

உலகம் அழிந்தபிறகு, அணுக்களாய் ஒடுங்கி மீண்டும் அந்தப் பரமாணுக்கள் தாமே, உயிரின் கன்மத்திற்கு ஏதுவாகப் பிரபஞ்சமாகத் தோன்றி நின்று அழியும். கன்மத்தையும் காலத்தையும் போல, இறைவன் இச்சையும் ஒரு துணைக் காரணம் ஆகும். அவ்வளவே அன்றி வேறு இல்லை என்று பிற மதத்தவர் கூறுவர். அது பொருந்தாது என்பதற்கு விளக்கம் வருமாறு:

கன்மமும் சடம்; அணுவும் சடம், அவை இரண்டும் தம்முள் கூடி, தாமே தொழிற்படுதல் முடியாது. அஃதாவது, பிரபஞ்சமாகத் தோன்றி அழிதல், அறிவுடைய முதல்வன் தொழிலை அன்றிக் கூடாது. மேலும், உலகம் முழுவதும் ஒடுங்கும் பொழுது, அணுவும் கூடவே ஒடுங்கும். ஆகவே, அணுவே பின்பு உலகமாய் வந்து நின்று அழியும் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? ஒருக்காலும் பொருந்தாது.

உலகிற்கு முதற் காரணம் அணு அன்று. அணுக்கள் உருவம் உடையன; இந்த கண்ணால் எளிதில் காணமுடியாதனவே அன்றிக்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காணவே முடியாதன அல்ல. அணு, பிரிக்க முடியாதது (Indivisible) என்னும் விஞ்ஞானக் கருத்தை, இருபதாம் நூற்றாண்டின் கண்டு பிடிப்பு தகர்த்து விட்டது. அணு மூன்றாகப் பிரிக்கப்பட்டு, நேர்மின்மம் (Proton) மின் இயக்கம் அற்ற சிற்றணுக்கள் (Neutron) எதிர் மின்மம் (Electron) என்னும் அவயவப் பகுப்பு உடையதாக உள்ளமையால், அணுவும் அழிவு எய்தும் என்பது தெளிவாயிற்று. ஆகவே, அணுக்கள் உலகிற்கு முதற் காரணம் ஆகா என்பது; பெறப்பட்டது.

மாயையே உலகிற்கு முதற்காரணம்

காரண அணுக்கள் கெட்டால்
காரிய உலகு இன்று என்னில்,
காரணம் மாயை ஆகக்
காரியம் காணல் ஆகும்;
காரணம் மாயை என்னை
காண்பதுஇங்கு அணுவே என்னில்,
காரணம் மாயையே காண்
காரியம் அணுவில் கண்டால். **32**

தெளிவுரை:

அணுக்களும் ஒடுங்கும் என்று கூறினால், காரணம் ஆகிய அணுக்கள் அழிந்தால் காரியம் ஆகிய பிரபஞ்சமும் இல்லை ஆகுமே என்று பிற மதத்தவர் கூறுவர். அது பொருந்தாது. ஏனெனில், உலகிற்கு முதற்காரணம் ஆற்றலின் தொகுப்பு ஆகிய மாயையே ஆகும். ஆகவே, அணுக்கள் அழிவதால், உலகம் மீண்டும் தோன்றும் என்று கூறுவதற்கு இழுக்கு இல்லை.

ஆனால், அணுவே இங்கு முதற்காரணமாய்க் காணப்படுவது இன்றி, மாயை முதற்காரணம் என்று கூறுவது பொருந்தாது என்று பிற மதத்தவர் கூறுவர். அது பொருந்தாது. ஏனெனில், அணுக்களிடத்துத் தோன்றி அழியும் தன்மை காணப்படுகிறது; படவே, தோன்றி அழிதல் இல்லாத மாயையே உலகிற்கு முதற்காரணம் ஆகும் என்பது பெறப்படும்.

''கண்டால்'' என்பது, ''காண்டலால்'' என்னும் பொருட்டு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அணுக்கள் காரியப் பொருள்; ஆகவே அவை முதற்காரணம் ஆகா

காரியம் என்பது என்னை
காரண அணுவை என்னில்,
காரியம் அவயவத்தால்
கண்டனம் கடாதி போலக்
காரிய உருவம் எல்லாம்
அழிதரும் காரணத்தால்,
காரிய உறுப்புஇல் மாயை
தரும் எனக் கருதிடாயே. 33

தெளிவுரை:

காரணம் ஆகிய அணுவைக் காரியம் என்பது எவ்வாறு பொருந்தும் என்றால், மண் ஆகிய காரணத்திலிருந்து தோன்றும் காரியம் ஆகிய குடம் முதலியன போலப் பல்வேறு வகைத்து ஆகிய அவயவம் உடைமையால், அணுக்கள் காரியம் ஆகும். (அணுக்களின் அவயவம் குறித்து 31 ஆவது செய்யுளின் தெளிவுரையில் காண்க.)

அவ்வாறு பல்வேறு வகைத்து ஆகிய காரியம் எல்லாம், அழிதல் தன்மைய; ஆகவே, பல்வேறு வகைத்தாய், அவயவத் தன்மை இல்லாத நிலைபெற்ற மாயையே உலகிற்கு முதற்காரணம் ஆகும். இவ் வுண்மையைக் கருதில் இருத்திக் கொள்வாயாக.

இதிலிருந்து, ''காரணம்'' என்பது, ஒன்றாய்த் தோன்றி அழிதல் ...ன்றி நிலைபெற்று இருக்கும் என்பது அறியப்படும்; ''காரியம்'' என்பது, பலவாய்த் தோன்றி அழிதலை உடையதாய் இருக்கும் என்பது பெறப்படும்.

அவ்வாறாயின், பல ஆகிய ஆன்மா, காரியம் எனப்பட்டுத் தோன்றி அழியும் என்று கூறலாகுமே என்றால், அஃதன்று. பலவாயும் சடமாயும் இருப்பதுவே தோன்றிஅழியும்; அதுவே காரியம் எனப்படும். பலவாயும் சித்தாயும் இருப்பது தோன்றி அழியமாட்டாது. ஆதலின், ஆன்மா காரணங்கட்கு உட்பட்டதன்று என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காரிய உறுப்பு – காரியத்தன்மை – அவ்யவம் உடைமை. உறுப்பு– அவயவம்.

மாயை முதற்காரணம் என்பதற்குப் பிரமாணம்

தோற்றமும் நிலையும் ஈறும்
மாயையின் தொழில்அது என்றே
சாற்றிடும் உலகம் வித்துச்
சாகாதி அணுக்களாக
ஏற்றதேல் ஈண்டு நிற்கும்;
இல்லதேல் இயைவது இன்றாம்;
மாற்றம்நீ மறந்தாய், இத்தால்
மாயையை மதித்திடாயே. *34*

தெளிவுரை:

தோன்றுதல், நிலைபெறுதல், ஒடுங்குதல் என்னும் மூன்று தொழிலையும், மாயை தன்னிடத்திலேயே இயல்பாகக் கொண்டுள்ளது. எனவேதான் ''மாயையே உலகுக்கு மூல காரணம் (பிரகிருதி) என அறிக'' என்று வேதம் கூறுகிறது. வித்தின் இடத்து இலை, தண்டு, மலர் முதலியன சூக்கும ரூபமாக அடங்கித், தூல ரூபமாக வெளிப்படுகின் றன. அவ்வாறு சூக்கும ரூபமாக அடங்கி இல்லை ஆயின், அவை தூல ரூபமாக வெளிப்படுவது இல்லை என்பது கண்கூடாகக் காணப்படு வதாகும். இவ்வாறு காண்டல் அளவையாலும் உரை அளவையாலும் இவ்வுண்மை புலப்படுவதால், அணுவிலிருந்து உலகம் தோன்றியது என்னும் வாதத்தை விட்டு இந்த உலகத்திற்கு முதற்காரணம் மாயையே என்பதை அறிவாயாக.

'சாகாதி' என்பது, வித்துவினுள் சாகாமல் அஃதாவது உண்டு பண்ணக் கூடியதாய் (Germinating) அடங்கி இருக்கும் இலை, தண்டு, மலர் முதலான வற்றைக் குறிக்கும்.

வித்தினுள் அதன் விளை பொருள்கள் சூக்குமமாய் அடங்கி இருந்து, பின்பு தூலமாய்த் தோன்றுவது போல், மாயையினுள் இந்தப் பரந்து விரிந்த உலகம் சூக்குமமாய் அடங்கி இருந்து, பின்பு தூலமாய் வெளிப்படுகின்றது. எனவே உலகத்திற்கு முதற்காரணம் மாயையே அன்றி வேறு இல்லை என்பது தெளிவு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வித்து மாயைக்கு உவமை;
சாகாதி, பிரபஞ்சத்திற்கு உவமை.

'பிரபஞ்சம்' என்ற சொற்கு ''விரிந்த உலகம்'' என்பது பொருள். ''பஞ்ச்'' என்ற வடசொற்கு ''விரிதல்'' என்பது பொருளாகும். பிர – உபசர்க்கம்.

காரண காரிய இயைபு

மாயையின் உள்ள வஞ்சம்
வருவது போவ தாகும்;
நீ அது இங்கு இல்லை என்னில்,
நிகழ்ந்திடும் முயலின் கோடு;
போய்உகும் இலைகள் எல்லாம்
மரங்களில் புக்குப் போதின்
ஆயிடும் அதுவும் என்னில்
காரணம் கிடக்க ஆமே. 35

தெளிவுரை:

உள்ளது ஆகிய காரணத்தில், உள்ளது ஆகிய காரியம் தோன்றும். அதனைக் கொள்ளாமல், இல்லது தோன்றும் என்று கூறினால், முயலுக்குக் கொம்பு உள்ளது என்பதாகும். ஆகவே, உள்ள பிரபஞ்சமே மாயையில் ஒடுங்கி, மீண்டும் தோன்றும் என்கிறது சைவ சித்தாந்தம். அவ்வாறே மரத்தின் நின்றும் உதிர்ந்த இலைகள் எல்லாம், மரத்தில் ஒடுங்கி அதற்கு உரிய காலத்தில் மீண்டும் தோன்றல் வேண்டும் என்னும் கருத்தும் ஏற்கத் தக்கதே ஆகும். அஃது எப்படி என்றால், உதிர்ந்த இலைகள் எல்லாம், ஆற்றல் வடிவுடன் காரணமாய் நிலைபெற்று இருக்கும்; அந்த ஆற்றல் மீண்டும் தோன்றுவதற்கு உரிய கன்மம், காலம் முதலிய பிற காரணங்கள் எல்லாம், அதனோடு ஒருங்கே கூடியபொழுது, அவ்வாறு தோன்றும். அவை கூடாதபொழுது தோன்றாது. எனவே, அதுபற்றி எந்தவித ஐயத்திற்கும் இடமில்லை.

மரத்தில் நின்று உதிர்ந்த இலை முதலியன, ஆற்றல் வடிவாய் மரத்தில் ஒடுங்குவது எவ்வாறு என்றால், அந்த இலை முதலியன தம் தன்மை கெட்டு உரமாக மரத்தின்கண் அடங்கி மீண்டும் தோன்றும் என்க. அவ்வாறு ஒடுங்குவதற்கு முன்பு உதிர்ந்த இலை முதலியன

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தோன்றுவதற்கு மரத்தில் அவ்வாறு பல ஆற்றல்கள் உள்ளன. எனவே, அந்த மரத்தில் நின்று உதிர்ந்த இலை முதலியன, அந்த மரத்திற்கு மட்டுமன்றி ஏனைய பயிருக்கும் உரமாகப் பயன்படுகின்றன. ஆயினும் உரத்தின் ஆற்றல்களும் பலவாய் இருப்பதால், எந்தப் பயிருக்கு இட்டாலும், அந்தந்தப் பயிரின் இலை முதலியனவே தோன்றும்; அது பற்றி இழுக்கு இல்லை என்பது அறிக.

வஞ்சம் – பிரவஞ்சம் – பிரபஞ்சம். உதிர்ந்த இலைகள், ஆற்றல் வடிவாய்ப் பூமியில் கிடந்து, பின்பு இலை முதலியனவாய் வருதல் ஆகும்.

பிரபஞ்சம் நித்தப் பொருள் எனக் கூறுகின்றது

கருது காரணம் உண்டாகக்
காரியம் உள்ளது ஆகி
வருதலால் அநாதி வையம்
மற்றொரு கடவுள் இத்தைத்
தருதலால் ஆதி யாகச்
சாற்றலும் ஆகும் மாயைக்கு
ஒருவன் ஆர் என்இங்கு என்னில்
உள்ளவாறு உரைப்பக் கேள், நீ. 36

தெளிவுரை:

மேல் செய்யுளில் கூறியவாறு, உள்ளதே காரியப்படும் என்னும் சற்காரிய வாத அடிப்படையில் சிந்திக்கையில், உலகம் அழியக்கூடிய பொருள் என்று கூறுவது பொருந்தாது. கருதும் காரணப் பொருள் உள் பொருளாக இருப்பதால், அதில் தோன்றும் காரியமும் உள் பொருளே ஆகும். ஆகவே காரியப் பொருள் ஆகிய இந்தப் பிரபஞ்சம் நித்தப் பொருளே ஆகும். ஆயினும், இந்தப் பிரபஞ்சம் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டு, ஒரு காலத்தில் விளங்குதலும், ஒரு காலத்தில் மறைதலும் ஆகிய நிலை வேறுபாடு உடையது ஆதல் பற்றி, அழி பொருள் என்றும் சொல்லப்படும்.

இந்தப் பிரபஞ்சம் நிலை வேறுபாடு உடைமையாலேயே அழி பொருள் என்று சொல்லப்படுகிறது. நிலை வேறுபாடு கருதாத பொழுது பிரபஞ்சம் நித்தப்பொருள் என்பதே துணிபு ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காரியம் ஆகிய பிரபஞ்சம், அதன் காரணம் ஆகிய மாயையினைப் போல் உள் பொருளாய் இருப்பதால், அது நித்தப் பொருளே ஆகும்; தோன்றி ஒடுங்கும் நிலை வேறுபாடு பற்றி, பிரபஞ்சம் அநித்தம் (நிலையற்றது) என்று சொல்லப்படுகிறது; ஆயினும், உண்மையிலேயே இந்த உலகம் நித்தப் பொருளே ஆகும்.

உலகம் இறைவனாலேயே தோற்றுவிக்கப்பட்டு ஒடுக்கப்படுகிறது எனக் கூறுகின்றது

புத்திமன் காரியத்தால்
பூதாதி புருடன் தானும்,
அத்தனு கரணம் பெற்றால்,
அறிதலால் அவற்றை மாயை
உய்த்திடும் அதனால், மாயைக்கு
உணர்வு ஒன்றும் இல்லை என்றே
வைத்திடும் அதனால் எல்லாம்
வருவிப்பான் ஒருவன் வேண்டும். 37

தெளிவுரை:

குடம் முதலியன, மண்ணிலிருந்து செய்யப்படும் காரியம் ஆயினாற்போல, பூதம் முதலான பிரபஞ்சம் அனைத்தும்அறிவு உடைய ஒருவனால், மாயையிலிருந்து செய்யப்படும் காரியமே ஆகும்.

ஆன்மா அறிவுடைப் பொருள் ஆதலால், இந்த உலகத்தை ஆன்மாவே தோற்றுவிக்கும் என்று கூறக்கூடாதோ என்றால்,

1. பூதம் முதலியவற்றால் ஆகிய தனுகரணம் முதலியவற்றைப் பெற்ற பிறகே, ஆன்மாவின் அறிவு செயற்படுகிறது.

2. மாயை, தனுகரணம் முதலியவற்றிற்கு முதல்காரணமாய் நின்று, அவற்றை மயக்கிச் செலுத்துவதனால், மாயைக்கு அறிவு சிறிதும் இல்லை.

மேற்கூறிய இரு காரணங்களால், ஆன்மாவிற்குப் பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் தகுதி இல்லை என்பது பெறப்படும்; மாயை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிவற்றது ஆதலால், அது தானே பிரபஞ்சமாகத் தோன்ற முடியாது. எனவே இவ்விரண்டின் வேறு ஆகிய பேரறிவும் பேராற்றலும் உடைய ஒருவனாலேயே இந்தப் பிரபஞ்சம் தோற்றுவிக்கப்பட்டு ஒடுக்கப் படுகிறது என்பது பெறப்படும்.

காரிய நிகழ்ச்சிக்குத் தேவைப்படும் மூவகைக் காரணங்கள்

காரிய காரணங்கள்
முதல், துணை, நிமித்தம் கண்டாம்;
பாரின் மண், திரிகை, பண்ணும்
அவன், முதல் துணை நிமித்தம்;
தேரின், மண்மாயை ஆகத்,
திரிகைதன் சத்தி ஆக,
ஆரியன் குலாலன் .ஆய்நின்று
ஆக்குவன் அகிலம் எல்லாம். *38*

தெளிவுரை:

ஒரு காரிய நிகழ்ச்சிக்குத் தேவைப்படும் காரணங்கள் மூவகைப் படும்; அவை முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் என்பன ஆகும். அக்காரணங்கள் தம்முள் ஒன்று இல்லாவிட்டாலும், காரியம் தோன்றாது; அந்தக் காரணங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு ஆகும். இவ்வுண்மையைக் கீழ்க்காணும் உவமையில் வைத்துக் காணலாம்.

குடம், பானை முதலிய காரியத்தில் மண் முதற்காரணம்; திரிகை துணைக் காரணம்; குயவன் நிமித்த காரணன்.

இவற்றை ஆராயும் பொழுது, பிரபஞ்சக் கூட்டம் ஆகிய காரியத்திற்கு, அவ்வாறே மூன்று காரணங்கள் தேவைப்படும் என்பதை அறியலாம். மண் போல மாயை முதற் காரணம்; திரிகை போல இறைவனது அருள் (சத்தி) துணைக் காரணம்; குயவன் போல அவ்விரு காரணங்களின்வேறாய்ச், சிவபெருமான் நிமித்த காரணனாய் நின்று, இந்தப் பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கிறான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்தத் தெளிவுரையில் ''இரு காரணங்களின் வேறாய் இறைவன் நிற்பன்'' என்று கூறியதற்குப் பொருள், அந்த இரு காரணங்களின் தன்மையின் வேறாய் என்பதே ஆகும். அஃதன்றி உவமையில் கூறிய பொருள்களைப் போல, வெவ்வேறாய் நிற்பன் என்று பொருள் கொள்ளக்கூடாது; ஏனென்றால், அந்த அந்தப் பொருளுக்கு அந்தந்தப் பொருளாய் நிற்கும் முழு நிறைவு உடைய இறைவனுக்கு இந்த உவமை பொருந்தாது என்பதனாலேயே ஆகும். இதன் விளக்கத்தை இந்த நூலில் காணப்பெறும் 47–ஆவது செய்யுளில் வரும் தெளிவுரையைக் கொண்டு அறிக.

''அகிலம் எல்லாம்'' என்னும் தொடர், சுத்தம், சுத்தா சுத்தம், அசுத்தம் என்னும் காரியப் பிரபஞ்சங்கள் அனைத்தையும் குறிக்கும். இந்தச் செய்யுளில் வரும் ''மாயை'' என்ற சொல், சுத்தமாயையினைக் குறிக்கும்.

தருபவன் தரும் முறையைத் தொகுத்துக் கூறுகின்றது

விந்துவின் மாயை ஆகி
மாயையின் அவ்வியத்தம்,
வந்திடும் விந்துத் தன்பால்
வைகரி ஆதி மாயை
முந்திடும் அராகம் ஆதி
முக்குணம் ஆதி மூலம்
தந்திடும் சிவன் அவன்தன்
சந்நிதி தன்னில் நின்றே. 39

தெளிவுரை:

சுத்தப் பிரபஞ்சம், சுத்தா சுத்தப் பிரபஞ்சம், அசுத்தப் பிரபஞ்சம் எனக் காரியப் பிரபஞ்சம் முத்திறப்படும். எனவே, அவற்றிற்கு முதற் காரணங்களும் தம்முள் வேறு ஆதல் வேண்டும். அவற்றுள் மல கன்மங் களோடு விரவாது, முதற்காரணமாய் நிற்பது சுத்தமாயை. அஃது ஏனைய அசுத்த மாயை, பிரகிருதி மாயை இரண்டனையும் வியாபித்து மேலாய் நிற்கும் சுத்தப் பிரபஞ்சத்திற்குக் காரணம் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அசுத்த மாயையின் கீழாய் அடங்கி, மல கன்மங்களோடு விரவி, முதற்காரணமாய் நிற்கின்ற அசுத்த மாயை, சுத்தா சுத்தப் பிரபஞ் சத்திற்குக் காரணம் ஆகும். அந்த அசுத்த மாயையின் தூல பரிணாம மாய்த் தோன்றி நிற்கின்ற பிரகிருதி மாயை, அசுத்தப் பிரபஞ்சத்திற்குக் காரணம் ஆகும்.

அந்தக் காரணம் மூன்றனுள், சுத்த மாயையிலிருந்து ஒடுக்கம் முறை பற்றி, வைகரி முதல் வைத்து எண்ணப்படும் சுத்தா சுத்தப் பிரபஞ்சம் ஆகிய நாலு வாக்கும் தோன்றும்.

அசுத்த மாயையின் நின்றும், ஒடுக்கமுறை பற்றி, அராகம் முதல் வைத்து எண்ணப்படும் சுத்தாசுத்தப் பிரபஞ்சம் ஆகிய ஐந்து தத்துவங் களும் தோன்றும்.

பிரகிருதி மாயையின் நின்றும், தோற்றும் முறை பற்றி குண தத்துவம் முதல் வைத்து எண்ணப்படும் அசுத்தப் பிரபஞ்சம் ஆகிய இருபத்து நான்கு தத்துவங்களும் தோன்றும்.

இவ்வாறு சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என்னும் மூன்றும் தத்தம் காரியங்களைச் சிவசத்தியின் சங்கற்ப ரூபம் ஆகிய சந்நிதியின் நின்றும் தோற்றுவிக்கும்.

''பிரபஞ்சம்'' என்பது தத்துவத்துள் அடங்குதலின், தத்துவம் முப்பத்தாறுக்கும் முதற்காரணம் ஆகிய சுத்தம், அசுத்தம், பிரகிருதி என்னும் மாயை மூன்றில் வைத்து முறையே சுத்தப் பிரபஞ்சம், சுத்தா சுத்தப் பிரபஞ்சம், அசுத்தப் பிரபஞ்சம் எனப் பிரபஞ்சம் முத்திறப்படும் என்று கூறியதாகும்.

''பரிணாமம்'' என்பது ஒன்று, பிறிதொன்று ஆதல் ஆகும். அது தூலபரிணாமம், சூக்கும பரிணாமம் என இருவகைப்படும். தூல பரிணாமம் என்பது, பால் தயிராதல், நெய்யில் புழு உண்டாதல் என இருவகைப்படும். பால் தயிராதல் ஆகிய தூல பரிணாமம் முற்றும் பரிணாமம் ஆகும். பின்னையது, ஏகதேச பரிணாமம் ஆகும். சூக்கும பரிணாமம் என்பது, சேலை கூடார மாதலைக் குறிக்கும். இவற்றுள், சூக்கும பரிணாமம் சுத்த மாயைக்குக் கொள்ளப்படும்; தூலத்தில் ஏகதேச பரிணாமம் அசுத்த மாயைக்குக் கூறப்படும். தூலத்தில் முற்றும் பரிணாமம் பிரகிருதி மாயைக்குப் பேசப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''ஒடுக்க முறை'' என்பது, கடைசியிலிருந்து எண்ணுதலைக் குறிக்கும். ''தோற்றுமுறை'' என்பது, ஆரம்பத்திலிருந்து எண்ணு தலைக் குறிக்கும்.

அவ்வியத்தம் – வெளிப்படாதது; விந்து – சுத்தமாயை.

இறைவன் பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கும் முறைமை, இந்தச் செய்யுளில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

வைகரி வாக்கின் இலக்கணம்

வைகரி செவியில் கேட்ப
தாய்அத்த வசனம் ஆகி,
மெய்தரு உதான வாயு
மேவிட விளைந்த வன்னம்
பொய்யற அடைவு உடைத்தாய்ப்
புந்தி காரணம் அது ஆகி
ஐயம் இல் பிராண வாயு
அடைந்து எழுந்து அடைவு உடைத்தாம். 40

தெளிவுரை:

சுத்தமாயா காரியம் ஆகிய வாக்குகள் நான்கனுள், ''வைகரி வாக்கு'' என்பது கீழ்க்காணும் இலக்கணங்களை உடையது.

தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கப்படுவது; நினைத்த பொருளைச் சொல்லும் சொல்லாய் இருப்பது; சொல்பவனுக்கும் கேட்பவனுக்கும் பகுத்து உணர்வு உண்டாவதற்கு ஏதுவாய் இருப்பது; உடம்பில் எழும் உதான வாயுவினால் தள்ளப்பட்டு, மத்திமைத் தானத்துச் சூக்கும ரூபமாய்ப், பிரிந்து தோன்றிய எழுத்துக்கள், பிராண வாயுவினால் தள்ளப்பட்டு எழுந்து, ஐயத்திற்கு இடம் இல்லாத வ்கையில் விபரீதம் இன்றிப் புறத்தே தூல வடிவில் வருவது ஆகும்.

வன்னம் – எழுத்து; அடைவு – இலக்கணம்.

தனக்கும் பிறருக்கும் பகுத்தறியும்படி கேட்கப்படும் ஒலியே வைகரி வாக்கு எனப்படும்; இது வாயின் வழியாய் வெளிப்படுவது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவன் தரும் முறையை முன்னைய செய்யுளில் தொகுத்துக் கூறினார்; இந்தத் தரும் முறையை இந்தச் செய்யுள் 40 முதல் 46 ஆவது செய்யுள் வரை வகுத்துக் கூறுகிறார்.

மத்திமை வாக்கின் இலக்கணம்

உள்உணர் ஓசை ஆகிச்
செவியினில் உறுதல் செய்யாது,
ஒள்ளிய பிராண வாயு
விருத்தியை உடையது அன்றித்
தெள்ளிய அக்கரங்கள்
சிந்திடும் செயலது இன்றி
மெள்ளவே எழுவது ஆகும்
மத்திமை வேறுஅது ஆயே. *41*

தெளிவுரை:

மத்திமை வாக்கு என்பது, பைசந்தி வாக்குக்கும் வைகரி வாக்குக்கும் வேறாய், அஃதாவது நடுவாய் உள்ளது; சொல்லுபவன் தன் உள்ளே உணரும் சவிகற்ப உணர்விற்கு ஏதுவாய் இருப்பது; செவியில் கேட்கப்படாதது; மெல் ஓசையாய்க் கண்டத்திலே விளங்குவதால், உள்ளே உணரப்படும் ஓசையாய் இருக்கும்; சிறந்த பிராண வாயுவின் தொழிற்பாடு இன்றி உதான வாயுவின் தொழிற்பாடு மட்டும் உடைய தாகி, பல், இதழ், நா, அண்ணங்களில் பட்டு, வெளியே சிதறிப் போகாமல், உள்ளே சூக்கும ரூபமாய் இருப்பது; எழுத்துக்களின் வடிவு பிரிந்து தோன்றி விளங்குவது.

தன் உள்ளே உணரும் ஓசையாய், உள்ளே எழுத்துக்களின் வடிவு பிரிந்து தோன்றுவதாய், உள்ள ஒலியே, மத்திமை வாக்கு என்பது ஆகும்.

பைசந்தி வாக்கின் இலக்கணம்

வேற்றுமைப் பட்ட வன்னம்
வெவ்வேறு விபாகம் ஆகித்
தோற்றுதல் அடைவு ஒடுக்கிச்
சொயம் பிரகாசம் ஆகிச்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சாற்றிய மயிலின் அண்டம்
தரித்திடும் சலமேபோன்று, அங்கு
ஆற்றவே உடையது ஆகிப்
பைசந்தி அமர்ந்து நிற்கும். 42

தெளிவுரை:

''பைசந்தி வாக்கு'' என்பது, ஐந்து நிறங்களையும் சூக்கும ரூபமாக ஒடுக்கி நிற்கும் மயில் முட்டையினுள் இருக்கும் நீர் போல, பலவகைப்பட்ட எழுத்துக்கள் வேறு வேறாக விளங்கித் தோன்றும் முறைமையினை அடக்கி மிகவும் சூக்கும ரூபமாய்க் கொண்டு, சிந்தையில் அமர்ந்து நிற்பது ஆகும்; நிருவிகற்ப உணர்விற்கு ஏதுவாகும் இயல்பினையும் உடையது.

மயிலின் முட்டைக்குள் இருக்கும் நீரிலே, மயிலின் ஐந்து நிறங்களும் கலந்து தோன்றும்; அதுபோல, சித்தத்தில் ஓர் உணர்வு மட்டுமே தோன்றி, எழுத்துக்களை நிருவிகற்பமாய் உணரும் ஒலியே, பைசந்தி வாக்கு எனப்படும்.

சூக்குமை வாக்கின் இலக்கணம்

சூக்கும வாக்கது உள்ஓர்
சோதியாய் அழிவது இன்றி
ஆக்கிடும் அதிகாரத்திற்கு
அழிவினை தன்னைக் கண்டால்
நீக்கம்இல் அறிவு ஆனந்த
முதன்மை நித்தியம் உடைத்தாய்ப்
போக்கொடு வரவு இளைப்பும்
விகாரமும் புருடன் இன்றாம். 43

தெளிவுரை:

''சூக்கும வாக்கு'' என்பது, காரண சரீரத்தின் உள்ளாக, நாத மாத்திரையாய் விளங்குவது; ஞான மாத்திரைக்கு ஏது ஆதல் ஆகிய இலக்கணத்தை உடையது. பைசந்தி, மத்திமை வைகரியாய் விருத்திப் படுவது ஆகிய தன் அதிகார மாத்திரைக்கே அழிவு உண்டாக, அந்தச்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சூக்கும வாக்கு சுத்த மாயா ரூபமாய்க் கேடு இன்றி நிலைபெறுவது ஆகும்.

தவத்தின் சிறப்பால் சூக்கும வாக்கினை உள்ளபடி காணப் பெறுபவர்க்கு, நீங்காத பேரறிவும், ஆனந்தமும், சுதந்தரமும், நித்தியத்துவமும் உடையதாய், சுத்தமாயா புவனத்தில் உள்ள அபரமுத்திப் பெரும் போகம் உண்டாகும். இந்த வாக்கினை உணரப் பெற்றவர்க்கு, நாசோற்பத்தியால் வரும் இளைப்பும் விகாரமும் உறுதல் இல்லை ஆகும்.

''காரண சரீரம்'' என்பது, கேவலம் ஆகிய அறியாமையின் நின்று நீங்கியும், தத்துவங்களுடன் கூடிப் பகுத்தறிதல் இன்றியும், தத்துவத் தோற்றத்திற்குக் காரணமான மாயையோடு கூடிநிற்கும் மயக்க உணர்வு ஆகும்.

சூக்கும வாக்கு, ஏனைய மூன்று வாக்குகளைப் போலத் தோன்றி ஒடுங்குவது இல்லை; பிற வாக்குகள் தோன்றுவதற்குக் காரணமாய் இருப்பது, இந்த வாக்குகளுக்கு வேறாக ஆன்மா, தன்னைக் காணும் பொழுது, அதுவே பரமுத்திப் பேறு ஆகும்.

சோதி – உணர்வு – ஞானம் – நிருவிகற்ப ஞானம், நிருவிகற்ப ஞானமே சூக்கும வாக்கின் இலக்கணம் ஆகும்.

வாக்குகள் நான்கும் கலைகள் ஐந்தும்

நிகழ்ந்திடும் வாக்கு நான்கும்
நிவிர்த்தாதி கலையைப் பற்றித்
திகழ்ந்திடும் அஞ்சு அது ஆகச்
செயல் பரிணாமம் அன்று
புகழ்ந்திடும் விருத்தி யாகும்
படம் குடில் ஆனாற்போல
மகிழ்ந்திடும் பிரமம் அன்று
மாமாயை என்பர் நல்லோர். 44

தெளிவுரை:

மேலே சொன்ன வைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமை ஆகிய நான்கு வாக்குகளும், நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்திய தீதை என்னும் பஞ்ச கலைகளைப், பற்றுக் கோடாகச் சார்ந்து, ஐவகைப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பட்டுச் சிவம், சத்தி சாதாக்கியம், மகேசுவரம், சுத்தவித்தை என்னும் பஞ்ச தத்துவங்களில் இருக்கும்.

இந்த வாக்குகள், சுத்த மாயையின் நின்றும் படமே குடில் ஆயினாற் போல, விருத்தியாய்க் காரியப்படுவன ஆகும். இந்த வாக்கு களைச் சிலர் மகிழத்தக்க பிரமம் என்பர். அது பொருந்தாது. இவை பிரமம் ஆதல் அன்றிப் பிரமத்திற்கு நேரே பரிக்கிரக சத்தி எனப்படும் சுத்தமாயா வடிவம் ஆகும்.

''விருத்தி'' என்றாலும் ''சூக்கும பரிணாமம்'' என்றாலும் ஒரே பொருளையே தரும், ''படம் குடில் ஆதல்'' என்பது, சேலை கூடாரம் ஆவதைப் போன்றது. ''பரிக்கிரக சத்தி'' என்பது வைப்பு சத்தியைக் குறிக்கும்; அஃதாவது வேண்டும் போது பயன்படுதற்குரியதாய் தன்னுள் அடங்கி நிற்பது ஆகும்.

நான்கு வாக்குகளும் ஐந்து கலைகளைச் சார்ந்து ஐவகைப் பட்டு நிற்கும் முறை வருமாறு:

வாக்குகள்	*கலைகள்*	*தத்துவம்*
சூக்குமை	சாந்தியதீதை	சிவம்
பைசந்தி	சாந்தி	சத்தி
மத்திமை	வித்தியா	சாதாக்கியம்
சூக்கும வைகரி	பிரதிட்டை	மகேசுவரம்
தூல வைகரி	நிவிர்த்தி	சுத்தவித்தை

சூக்கும வைகரி தன் செவிக்கு மட்டும் கேட்கப்படுவது; தூல வைகரி தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கப்படுவது.

சுத்தமாயை எனப்படும் விந்து, சொல் வடிவும் (சத்தம்) பொருள் வடிவும் (புவனம்) ஆக உள்ளது, இந்த விந்து சிவ சத்தியினால் கலக்கப் படும் பொழுது, நாதம் உண்டாகும். இவ்வாறு கலக்கப்பட்ட இடம் சாந்தீயதீத கலை என்றும் சிவதத்துவம் என்றும் சொல்லப்படும். சிவ தத்துவத்தின் விருத்தி சத்தி தத்துவம் அல்லது விந்து தத்துவம் எனப்படும், இந்த சத்தி தத்துவத்திலே சூக்குமை வாக்கு எனப்படும் சூக்கும நாதம் இருக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்தச் சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என விருத்திப் பட்டு, மந்திரம் பதம் வன்னம் என்னும் வடிவில் சத்தப் பிரபஞ்சமாய் (சொல் உலகம்) இருக்கும். சத்தி தத்தவம் சாந்தியதீத கலையின் காரியம் ஆகிய சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி என்னும் கலைகள் விருத்திப் படுவதற்கு இடமாகும். சத்தி தத்துவத்திலிருந்து சாதாக்கிய தத்தவமும், இதிலிருந்து மகேசுவர தத்துவமும், இதிலிருந்து சுத்த வித்தியா தத்துவமும் தோன்றும். இந்தத் தத்துவங்கள் ஐந்தும் புவனங் களுக்குக் காரணமாய் இருக்கும். ஆக, இந்த புவனங்களும் தத்துவங்களும் பஞ்ச கலைகளும் அர்த்தப் பிரபஞ்சம் (பொருள் உலகம்) எனப்படும். இவ்வாறு சுத்த மாயையின் காரியம் சொற் பிரபஞ்சம் பொருட் பிரபஞ்சம் என இருவகைப்பட்டு நிற்கிறது.

பரிணாமம் என்பது, இயற்கையினின்று திரிதலைக் குறிக்கும். அஃதாவது உருமாறுதல், ஒன்று பிறிது ஒன்றாதல் ஆகும். பரிணாமம் பற்றிய விளக்கத்தை 39–ஆவது செய்யுள் தெளிவுரையில் காண்க.

சுத்தமாயா காரியமே மந்திரேசுவரர் முதலிய அபர முத்தர்களின் தனுகரணாதிகள் எனக் கூறுகின்றது

வித்தைகள் வித்தை ஈசர்,
சதாசிவர் என்று இவர்க்கு
வைத்துறும் பதங்கள், வன்னம்
புவனங்கள், மந்திரங்கள்,
தத்தவம், சரீரம், போகம்
கரணங்கள் தாம் எலாமும்
உய்த்திடும் வைந்தவம் தான்
உபாதானம் ஆகி நின்றே. 45

தெளிவுரை:

மேற்கூறிப் போந்த வாக்கு மட்டுமன்றி, மந்திரேசுவரர் மந்திர மகேசுவரர், அணு சதாசிவர் முதலிய அபர முத்தர்களுக்கு வேண்டப்படும் பதங்கள் எழுத்துக்கள், புவனங்கள், மந்திரங்கள் தத்துவங்கள், சரீரங்கள், போகங்கள், கரணங்கள் என்னும் சுத்த அத்துவாக்கள் அனைத்திற்கும் முதற்காரணமாய் நின்று செலுத்துவது சுத்தமாயை ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தத்துவம் என்பது இங்குக் காலம் முதலிய வித்தியா தத்துவத்தைக் குறிக்கும்; கரணம் என்பது அந்தக்கரணம் முதலிய ஆன்ம தத்துவத்தைக் குறிக்கும்.

இந்தச் செய்யுளில் மூவகை அபர முத்தர்களைக் குறித்துப் பேசுகிறார். அவர்கள், மந்திரேசுரர், அட்ட வித்தியேசுரர், அணு சதாசிவர் என்பர் ஆவர். 'வித்தைகள்' என்ற சொல் மந்திரேசுரரைக் குறிக்கும். இவர் சுத்த வித்தியா தத்துவத்தில் இருக்கும் சத்தகோடி (ஏழு கோடி) மகா மந்தரர் ஆவர். 'வித்தையீசர்' என்ற தொடர், அட்ட வித்தியேசுரரைக் குறிக்கும். 'சதாசிவர்' என்ற சொல், அணுசதாசிவரைக் குறிக்கும். இவர் சாதாக்கிய தத்துவத்தில் இருக்கும் சதாசிவ மூர்த்தியை வழிபட்டு, அங்குள்ள போகங்களைப் புசிப்பவர்.

இம்மூவரையும் விஞ்ஞானகலர் என்று சிலர் கூறுவர்; அது பொருந்தாது. விஞ்ஞானகலர் ஒரு மலம் உடையவர் இம்மூவரும் மலம் நீங்கப் பெற்று அதிகார மலம் மட்டும் உடையவர் ஆகலின் அபர முத்தர் எனப்படுவர். மேலும் விஞ்ஞான கலருக்கு இருப்பிடம் வேறு; அபர முத்தர்களுக்கு இருப்பிடம் வேறு. விஞ்ஞானகலர் எண்ணற்றவர்களாகி சுத்த வித்தைக்கும் அசுத்த மாயைக்கும் இடையில் உள்ள புவனங்களில் வசிப்பவர்.

இந்த அபர முத்தர்களுக்குத் தனு கரண புவன போகங்கள் சுத்த மாயா காரியங்களே ஆகும். ''வயிந்தவம்'' என்பது விந்துவிலே தோன்றியதாகும். அது விந்துதத்துவம் என்றும் சத்தி தத்துவம் என்றும் கூறப்படும். செய்யுளில் 'சதாசிவர்' என்று இருப்பது, அணுசதாசிவரையே குறிக்கும். தலை (அணு) குறைந்து நின்றது.

சுத்தமாயா காரியம் ஆகிய வாக்கை இன்றி, எவர்க்கும் அறிவு உண்டாகாது என்கிறது

மூவகை அணுக்க ளுக்கும்
முறைமையின் விந்து ஞானம்
மேவினது இல்லை ஆகில்,
விளங்கிய ஞானம் இன்றாம்;
ஓவிட விந்து ஞானம்
உதிப்பதுஒர் ஞானம் உண்டேல்,
சேவுயர் கொடியினான் தன்
சேவடி சேரல் ஆகும். 46

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மேற்கூறிய நால்வகை வாக்குகளும், பகுத்து உணர்வது ஆகிய சவிகற்ப ஞானத்திற்கு ஏது ஆகும். ஆகவே, இங்குக் கூறிய மந்திரேசுரர், அட்ட வித்தியேசுரர் (மந்திர மகேசுரர்), அணு சதாசிவர் ஆகிய அபர முத்தர்களுக்கும், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்களுக்கும், இன்றியமையாது வேண்டப்படும்.

சரீர வேறுபாடு காரணமாக, விஞ்ஞானகலர்க்குத் தூலமாயும், பிரளயாகலர்க்குத் தூலதரமாயும், சகலர்க்குத் தூலதமமாயும், வாக்குகள் பொருந்தி நிற்கும். இந்த வாக்குகள் இல்லை ஆயின், இவர்களுள் எவருக்கும் ஞானம் விளங்குதல் இல்லை ஆகும்.

இந்த வாக்குகளால் உண்டாகும் ஞானம், உலகப் பொருளை அறியும் ஞானம் ஆகும். ஆகவே, அந்த வாக்குகள் அவர்கட்கு மேலான பந்தம் ஆகும். இந்த வாக்குகளைத் தன்னின் வேறாகக் கண்டு நீக்கி, அவற்றிற்கு மேல் ஆகிய பேரறிவு ஒருவனுக்கு விளங்குமாயின், அப்பொழுது இடபக்கொடியை உயர்த்திய சிவபெருமான் திருவடி ஆகிய பரமுத்தியை அவன் தலைப்படுவான்.

தூலம் – விளங்கித் தோன்றுதல்;
தூலதரம் – அதிகமாகத் தோன்றுவது;
தூலதமம் – குறைவாகத் தோன்றுவது.

நான்கு வாக்குகளும் விஞ்ஞானகலர்க்கு விளங்கித் தோன்றும்; பிரளயாகலருக்கு அவ்வாறு இன்றி, சகலரை விட அதிகமாய் விளங்கித் தோன்றும்; சகலருக்குப் பிரளயாகலரைவிடக் குறைந்து விளங்கித் தோன்றும்.

இந்த அளவில் சுத்தமாயா காரியம் கூறுவதை நிறுத்திவிட்டு, அடுத்த செய்யுளில் தருபவன் தரும் முறை வகையில், அசுத்த மாயா காரியத்தைத் தொகுத்துக் கூறுகிறார்.

சுத்தாசுத்த அசுத்தப் பிரபஞ்சங்களின் இலக்கணம்

அருவினில் உருவம் தோன்றி
அங்கஅங்கி பாவம் ஆகி
உருவினில் உருவ மாயே
உதித்திடும் உலகம் எல்லாம்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெருகிடும் சுருங்கும் பேதா
பேதமோடு அபேதம் ஆகும்,
ஒருவனே எல்லாம் ஆகி
அல்லவாய் உடனும் ஆவான். 47

தெளிவுரை:

சூக்குமம் ஆகிய அசுத்த மாயையிலிருந்து தூலம் ஆகிய கலை முதலிய தத்துவங்கள் தோன்றும்; அவற்றினும் தூலம் ஆகிய மூலப் பகுதியும், அதனைவிட தூலம் ஆகிய குண தத்துவம் முதலியனவும் தோன்றும். அந்தத் தூலங்களிலிருந்து தோன்றும் காரியம், அவற்றினும் தூலமே ஆகும். இவ்வாறே காரியப் பிரபஞ்சம் எல்லாம் தோன்றி, நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், ஆண், பெண், அலி என்பது முதலான அவயவப் பகுப்பு உடையனவாக வளர்ந்தும், தேய்ந்தும், மாறியும் வரும்.

இந்தத் தன்மையை உடையன ஆகிய காரிய காரணங்களுக்குத் தம்முள், ஒன்று பிறிது ஒன்றாக மாறுவதை நோக்கினால், அவை பேதாபேதம் ஆகும். அஃதாவது ஒன்றே பிறிது ஒன்று ஆவதில் அபேதமும், முன்னையதில் பின்னையது வேறு ஆதலின் பேதமும் ஆகும். உள்ளது காரியப்படுதலை நோக்கி அபேதம் ஆகும். இவ்வாறு அபேதமாயும் பேதாபேதம் ஆயும் விளங்கும் காரியங்களை, முதற் காரணம் ஆகிய மாயையிலிருந்து தோற்றுவிக்கும் பொழுது, நிமித்த காரணம் ஆகிய முதல்வன், அந்தக் காரணத்தோடு கலப்பினால் ஒன்றாயும், பொருட்டன்மையால் வேறாயும், செலுத்துதலால் உடனாயும் நிற்பன்.

அருவத்திலிருந்து உருவம் தோன்றும் என்கிறது

அருஉரு ஈனா தாகும்
விகாரமும் அவிகாரத்தின்
வருவதும் இல்லை என்னில்
வான்வளி ஆதி பூதம்
தருவது தன்னின் மேக
சலன சத்தங் களோடும்
உருவமின் உரும்ஏறு எல்லாம்
உதித்திடும் உணர்ந்து கொள்ளே. 48

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

பிற மதவாதிகள் சிலர், அருவம் ஆகிய மாயை, உருவம் ஆகிய பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்காது என்பர். அருவம் என்று கூறுவதிலிருந்தே, அது விகாரம் இல்லாதது என்பதுபெறப்படும்; படவே, மாயையிலிருந்து விகாரம் ஆகிய பிரபஞ்சம் தோன்றுவது இல்லை என்று மாயாவாதிகள் கூறுவர். அவர்கள் கூற்று பொருந்தாது. அதற்கு விளக்கம் வருமாறு:

மாயாவாதி மதத்தின்படி, விகாரம் இல்லாத அருவம் ஆகிய ஆகாயத்திலிருந்து, உருவமும் விகாரியும் ஆகிய வாயு முதலிய பூதங்கள் முறையே தோன்றும் என்றும் கூறப்படுகிறது. அது மட்டுமன்றி, ஆகாயத்திலிருந்து பல மேகங்களும், மேகத்தில் பல விகாரங்களும், பல ஓசைகளும், பல மின்னல்களும், பல இடிகளும் இன்னும் இவை போல்வன பலவும் தோன்றும். எனவே, அரூபத்தில் ரூபம் தோன்றாது என்று கூறுவது பொருந்தாது.

இந்த இடத்தில் சைவசித்தாந்த அடிப்படையில் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வுண்மை வருமாறு:

சற்காரிய வாதத்தில், மாயை விகாரம் உற்றுப் பிரபஞ்சம் ஆகும் என்பது கருத்தன்று. மாயை அருவம்; விகாரம் அற்றது. எனவே, பிரபஞ்சம் உள்பொருளாய் இருந்து மாயையிலிருந்து தோன்றி மாயையிலேயே ஒடுங்கும். ஆதலால், மாயையில் உள்ள பிரபஞ்சமே தோன்றி, அதனுள் ஒடுங்கும் என்பதே அன்றி, மாயை பரிணமித்துப் பிரபஞ்சம் ஆகும் என்பது கருத்தன்று. ''இல்லாது தோன்றாது; உள்ளதே சிறக்கும்'' என்னும் சற்காரிய வாதக் கொள்கைப்படி, மாயையில் உள்ளது ஆகிய பிரபஞ்சமே தோன்றும் என்பது, சித்தாந்தம் ஆகும்.

முதல் சூத்திரம்
இரண்டாம் அதிகரணம்

இந்த அதிகரம், கீழ்க்காணும் மூன்று கூறுகளை உடையது:

1. ஈறும் ஆகி மருவிடும்;
2. மன்னி நின்றே மருவிடும்;
3. அநாதி முத்த சித்துரு;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவற்றுள் ''தருபவன் தரும் முறை'' கூறிய இயைபு பற்றி, ''மன்னி நின்றே மருவிடும்'' என்னும் நடுக்கூறு கூறத் தொடங்கி, முதல் மூன்று செய்யுள்களால் கூறப்படுகின்றது.

தருபவன் எதில் நின்று தருவன் என்பது கூறுகின்றது

மண்ணினில் கடாதி எல்லாம்
வருவது குலால னாலே,
எண்ணிய உருவம் எல்லாம்
இயற்றுவன் ஈசன் தானும்
கண்ணு காரியங்கள் எல்லாம்
காரணம் அதனில் காண்பன்
பண்ணுவது எங்கே நின்று, இங்கு
என்னிடில் பகரக் கேள் நீ. 49

தெளிவுரை:

குயவனால் மண்ணிலிருந்து குடம் முதலிய காரியம் அனைத்தும் வருவது போல, இறைவன் கருதிய உலகம் அனைத்தையும் மாயையிலிருந்து ஆக்குவன். அவ்வாறாயின், குயவன் இங்குக் குடம் முதலிய காரியங்களை எல்லாம் ஆக்கும்பொழுது, அவற்றிற்குக் காரணம் ஆகிய நிலத்தின் நின்று செய்ததைக் காண்கிறோமே; அதுபோல இறைவன் எந்த இடத்தின் நின்று செய்வான் என்று கேட்க, நாம் அதற்கு விடை கூற, நீ அதனைக் கேட்பாயாக.

தருபவன் நிராதரமாய் நின்று தருவன் என்கின்றது

சீலமோ உலகம் போலத்
தெரிப்பு அரிது; அதனால் நிற்கும்
கோலமும் அறிவார் இல்லை;
ஆயினும், கூறக் கேள் நீ;
ஞாலம் ஏழினையும் தந்து
நிறுத்திப்பின் நாசம் பண்ணும்
காலமேபோலக் கொள் நீ,
நிலைசெயல் கடவுள் கண்ணே. 50

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

இறைவன் தன்மை, உலகத்தின் தன்மை போன்றதன்று. இறைவன் தன்மை வாக்கு மனாதீத கோசரம் ஆகலான், அவன் நிற்கும் நிலையும் வாக்கு மன அதீத கோசரமே ஆகும். அவ்வாறாயினும், ஒரு வகையில் உவமையில் வைத்து உனக்குக் காட்டுகிறோம்; நீ அறிவாயாக.

உலகம் எல்லாவற்றையும் தோற்றுவித்து, நிறுத்தி, பின்னர் அழித்துக் காரியப் படுத்தும் பொழுது, எல்லாப் பொருளுக்கும் தான் ஆதாரமாய், தனக்கு ஓர் ஆதாரம் இன்றி நிற்பது போல், சிவசத்தியும் நிராதாரமாய் நின்றே உலகத்தைக் காரியப்படுத்தும். இம்முறையை உணர்ந்து கொள்வாயாக. இந்தச் செய்யுளில் காலம், சிவசத்திக்கு உவமை.

''வாக்கு மனாதீத கோசரம்'' என்னும் தொடரில் ''அதீதம்'' என்பது எட்டாமையையும், ''கோசரம்'' என்பது எட்டுவதையும் குறித்து, ஒன்றோடு ஒன்று முரணாதோ எனின், முரணாது. ஏனென்றால், வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாது என்பது தோன்ற, ''வாக்கு மனாதீதம்'' என்றும் எட்டாதது ஒன்று உண்டு என்று கூறுவதால் யாது பயன் என்னும் ஐயம் நிகழாமைப் பொருட்டு, அறிவிற்கு எட்டும் என்பது தோன்ற ''கோசரம்'' என்றும் கூறினார்.

காலம் சடப்பொருள். அது சிவசத்தியால் அதிட்டிக்கப்பட்டு நின்று, பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துகிறது. எனவே, சிவசத்தி நிமித்த காரணமும், காலம் துணைக் காரணமும் ஆகின்றன. இவை இரண்டும் பிரிவின்றி நின்று, பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துவது போல, முதல்வனும் சத்தியும் பிரிவின்றி நின்று காரியப்படுத்தும்.

தருபவன் தரும்பொழுது, இலய போக அதிகாரத்துட்பட்டு, துடக்கு உற்றும் துடக்கு உறுவான் அல்லன் என்று கூறுகிறது

கற்றநூல் பொருளும் சொல்லும்
கருத்தினில் அடங்கித் தோன்றும்
பெற்றியும் சாக்கிராதி
உயிரினில் பிறந்து ஒடுக்கம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உற்றதும் போல எல்லா
உலகமும் உதித்து ஒடுங்கப்
பற்றொடு பற்றது இன்றி
நின்றனன் பரனும் அன்றே. 51

தெளிவுரை:

ஆன்மாவினிடத்தில் சாக்கிரம் முதலிய அவத்தைகள், கரணங்களால் ஒடுங்கித் தோன்றும் நிலையில், ஆன்மா ஐந்தவத்தைப்பட்டு துடக்குறுகிறது. அதுபோல, இறைவனும் தன் வியாபகத்தில் எல்லா உலகமும் ஒடுங்கி உதிப்பதால், தானும் அதுப்ற்றி இலயம், போகம், அதிகாரம் என்னும் அவத்தைப்பட்டு துடக்குறுவான்; ஆயினும், ஒருவன் கற்ற நூற்பொருளும் சொல்லும், அஃதாவது சொர்க்கம், நரகம், நன்மை, தீமை முதலியனவும், அவற்றைக் குறிக்கும் சொல்லும் வாசனை வடிவில் புத்தி தத்துவத்தை ஒட்டி நின்று, ஆன்ம அறிவில் ஒடுங்கி, மீண்டும் தோன்றும் பொழுது, அந்த ஆன்ம அறிவு அதுபற்றித் துடக்கு உறாதவாறு போல, இறைவனும் இலயம் போகம் அதிகாரம் என்னும் அவத்தைப் பட்டாலும், துடக்கு உறுதல் இன்றி நிற்கிறான்.

துடக்குறுதல் – கட்டுப்படுதல். (துடக்கு – கட்டு) 'தொடக்கு' என்பதும் 'துடக்கு' என்பதும் ஒன்றே ஆகும்.

'ஈறும் ஆகி மருவிடும்' என்பதை, ஆறு செய்யுள்களால் வலியுறுத்தத் தொடங்கி, முதற்கண் 'ஈறும் ஆகி மருவுவித்திடும்' என்கிறது

உயிர் அவை ஒடுங்கிப் பின்னும்
உதிப்பதுஎன் அரன்பால் என்னில்,
செயிர்உறும் மலத்தின் ஆகும்
சிதைந்தது ஏது என்னில் சித்தத்து
அயர்வுஒழி காரியங்கள்
அழியும் காரணம் கிடக்கும்
பயில்தரு காரியம் பின்
பண்டுபோல் பண்ணும் ஈசன். 52

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சங்கார காரணன் ஆகிய இறைவனால் சங்காரம் எய்திய (உயிரோடு கூடிய) உலகம் சங்காரம் எய்தியவாறே ஒழியாமல் மீண்டும் இறைவனிடத்து நின்று தோன்றுவதற்குக் காரணம், குற்றம் பொருந்திய ஆணவ மலத்தின் பரிபாகம் ஆன்மாவிற்கு வருதல் பொருட்டு ஆகும்.

அவ்வாறாயின், மீண்டும் தோன்றற்குரிய உலகம், முன்பு அழியாமலே நிலைபெற்று இருக்கலாமே என்னும் தடை எழும். உலகம் அவ்வாறு அழிதல் எதற்காக என்றால், உயிரின் இளைப்பு ஒழிதல் பொருட்டே ஆகும்.

முன்பு இளைப்பினைச் செய்துநின்ற காரியங்கள் அழியும். அழியும்பொழுதும், காரண வடிவில் கிடக்கின்ற உலகங்களை முன்னை வினை தொடர்ச்சிக்கு உரியனவாகத், தத்தம் காரணங்களின் நின்றும் ஒடுங்கியவாறே, பின்னர் உதிக்கும்படி செய்வன்.

சங்காரம் எய்துவது – ஒடுங்குவது.

இந்தச் செய்யுள், உயிர்கள் ஒடுங்கி மீண்டும் தோன்றுவதற்குக் காரணம் கூறுகிறது; ஒடுங்கிய உலகத்தை சங்காரக் கடவுள் ஆகிய சிவபெருமானே மீண்டும் தோற்றுவிப்பான் என்பதையும் கூறுகிறது. இந்தச் செய்யுளில் கூறப்படும் சங்காரம் (ஒடுக்கம்) மாசங்கார காலத்தில் நிகழும் பேரூழிக் கால ஒடுக்கமே ஆகும்.

அந்நிலையில் சடசித்துக்கள் எல்லாம் மாயையில் ஒடுங்கும்; மாயை சத்தியில் ஒடுங்கும்; சத்தி சிவபெருமானிடத்தில் ஒடுங்கும். எனவே, செய்யுளில் ''உயிரவை அரன்பால் ஒடுங்கும்'' என்றார்.

இறைவன் விகாரி ஆகான் என்று கூறுகின்றது

தோற்றுவித்து அளித்துப் பின்னும்
துடைத்துஅருள் தொழில்கள் மூன்றும்
போற்றவே உடையன் ஈசன்,
புகுந்தது விகாரம் என்னில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சாற்றிய கதிரோன் நிற்கத்
தாமரை அலரும்; காந்தம்
காற்றிடும்; கனலை நீரும்
கரந்திடும் காசினிக்கே. 53

தெளிவுரை:

இந்தப் பிரபஞ்சத்தைத் தோன்றச் செய்து, நிலைப்பித்து பின்னர் சங்காரத்தைச் செய்விக்கின்ற முறையில், இந்த மூன்று தொழில்களையும் இடையறாது செய்வானாயின், கடவுள் அதனால் பாரம் எய்தி விகாரி ஆகானோ என்னும் தடை எழும்; விகாரி ஆகான்.

எதுபோல எனின், சூரியன் தன் சந்நிதியில், சூரிய காந்தக் கல்லில் நெருப்பைத் தோன்றச் செய்தும், தாமரையை அலரும்படி செய்தும் பூமியில் நீரைச் சுவறும்படி செய்தும் ஆகிய முத்தொழில் பற்றி, விகாரம் எய்தாதது போல் ஆகும்.

முத்தொழிலையும் செய்யும் உரிமை சங்கார காரணன் ஆகிய சிவபெருமானுக்கே உடையது எனக் கூறுகிறது.

உரைத்தஇத் தொழில்கள் மூன்றும்
மூவருக்கு உலகம் ஓத
வரைத்து ஒருவனுக்கே ஆக்கி
வைத்தது இங்கு என்னை என்னில்,
விரைக் கமலத்தோன் மாலும்
ஏவலான் மேவி னோர்கள்
புரைத்த அதிகார சத்தி
புண்ணியம் நண்ண லாலே. 54

தெளிவுரை:

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களும் முறையே அயன் மால் அரன் என்னும் மூன்று கடவுளருக்கு உரியன என்று உலகம் கூறுகிறது. ஆயினும், முத்தொழிலும் செய்யும் சுதந்தரம் ஒரு கடவுளுக்கே உண்டு என்று இங்கு வரையறுத்துக் கூறுப்படுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதற்குக் காரணம் என்ன என்றால், வாசனை பொருந்திய தாமரை மலரில் உறையும் அயன், மால் இருவரும், சிவபெருமானுடைய ஏவலால், புண்ணியச் சிறப்பு காரணமாக, அவனது உயர்ந்த அதிகார ஆற்றலைப் பெற்றிருப்பவர் ஆவர். அவ்வாறு அன்றி, அவ்விருவரும் அந்தத் தொழிலுக்கு உரியர் அல்லர். எனவே, முத்தொழிலும் செய்தற்கு உரிய சுதந்தரம் சிவபெருமான் ஒருவனுக்கே உண்டு.

புராண அடிப்படையில் நோக்கும்பொழுது, காத்தல் தொழில் திருமாலுக்கு சுதந்தரம் ஆயின், தன் மகன் ஆகிய மன்மதனை சிவ பெருமான் நீறு ஆக்கியபொழுது, நீறுபடாமல் காத்திருக்கலாம்; படைத்தல் தொழில் அயனுக்குச் சுதந்தரம் ஆயின், சிவபெருமானால் கொய்யப்பட்ட தனது தலையை மீண்டும் படைத்திருக்கலாம். அவ்வாறு செய்யாமையாலேயே அவ்விருவருக்கும் அத்தொழில்கள் சுதந்தரம் உடையன அல்ல என்பதுதானே பெறப்படும். எனவே, சிவபெருமானே முத்தொழிலுக்கும் உரியன் என்பது தெளிவாயிற்று.

இதுவும் அது

இறுதியாம் காலம் தன்னில்
ஒருவனே இருவரும் தம்
உறுதியின் நின்றார் என்னில்,
இறுதிதான் உண்டா காதாம்;
அறுதியில் அரனே எல்லாம்
அழித்தலால் அவனால் இன்னும்
பெறுதும்நாம் ஆக்கம் நோக்கம்
பேர்அதி கரணத் தாலே. 55

தெளிவுரை:

மேலும், சங்கார காலத்தில், அயன் மால் இருவரும் தத்தம் ஆற்றலோடு நிலைபெறுவார் ஆயின், உலகம் சங்காரம் ஆகாது. ஆகவே, சங்கார காலத்தில்அவ்விருவரும் சங்கரிக்கப்பட்டு, இருக்க மாட்டார்கள் என்பது பெறப்படும். அஃது அன்றியும், வேறு ஒருவராலும் சங்கரிக் கப்படாத சங்காரக் கடவுள் ஆகிய சிவபெருமான், சிலவற்றை மட்டும் ஒழித்துச் சங்கரிக்க மாட்டான். எனவே முழுவதும் சங்கரித்த பொழுது, சங்காரக் கடவுள் ஆகிய அவன் ஒருவனே எஞ்சி நிற்பன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகவே, ஒடுங்கிய உலகங்களுக்குப் பெரியதோர் ஆதாரம், எஞ்சி நின்ற சங்காரக் கடவுளே ஆவன். ஆதலால், ஒடுங்கிய உலகத்தை மீண்டும் தோற்றுவிப்பதும் நிறுத்துவதும் அவன் ஒருவனே செய்கிறான் என்பது பெறப்படும்.

'அதிகரணம்' என்ற சொற்கு இங்கு ஆதாரம் என்று பொருள்.

சிவபெருமான் முத்தொழில்களைச் செய்வதற்குக் காரணம்

சொன்னஇத் தொழில்கள் என்ன
காரணம் தோற்ற என்னில்
முன்னவன் விளையாட்டு என்று
மொழிதலும் ஆம் உயிர்க்கு
மன்னிய புத்தி முத்தி
வழங்கவும் அருளால் முன்னே
துன்னிய மலங்கள் எல்லாம்
துடைப்பதும் சொல்ல லாமே. 56

தெளிவுரை:

சங்காரக் கடவுள் இவ்வாறு படைத்தல் முதலிய தொழில்களைச் செய்வதற்குக் காரணம் என்ன என்றால், ''காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி'' என்னும் திருவாக்குகள் (திருவாசகம்) பற்றி, அத் தொழிலுக்குக் காரணம் விளையாட்டு என்றலும் ஆகும். விளையாட்டு என்றதனால், சிறு குழந்தைகள் விளையாட்டுப் போல, பயனற்ற வீண் விளையாட்டு அன்று.

விளையாட்டு என்றதன் கருத்து என்ன என்றால்,

''ஐயா, நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகை எல்லாம் உய்ந்து ஒழிந்தோம்''

என்பது முதலிய திருவாக்குகள் (திருவாசகம்) பற்றி, பெரும்பாரம் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டு என்பது போல, எளிதில் செய்யப் படுதலை நோக்கியே ஆகும். அவ்வாறு செய்வதும் தன் பயன் கருதி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அன்று; ஆன்மாக்களுக்கு பெத்த காலத்து, சுவர்க்காதி போகமும் பத முத்திகளும், முத்திக் காலத்து மும்மலங்களும் நீங்குதல் ஆகிய வீடு பேறும் வழங்குதல் பொருட்டே ஆகும். இவ்வாறு செய்வதற்குத்தான் காரணம் யாது எனின், உயிர்களின் மேல் உள்ள கருணையே ஆகும்.

''புத்தி முத்தி வழங்குதல்'' என்பது, உயிர்களைப் பிறப்பு இறப்பில் படுத்தி, இன்ப துன்பம் நுகர்வித்துப் பின்பு மலங்களை நீக்கி முத்தி கொடுத்தலைக் குறிக்கும்.

இறைவனின் ஐந்தொழிலும் அருளே ஆகும் என்கின்றது

அழிப்பு இளைப்பு ஆற்றல், ஆக்கம்
அவ்வவர் கன்மம் எல்லாம்
கழித்திடல், நுகரச் செய்தல்
காப்பது, கன்ம ஒப்பில்
தெழித்திடல் மலங்கள் எல்லாம்,
மறைப்பு அருள் செய்தி தானும்
பழிப்புஒழி பந்தம் வீடு,
பார்த்திடின் அருளே எல்லாம். 57

தெளிவுரை:

மேற்கூறிய முத்தொழில்களையும், ஐந்து தொழில்களாக விரித்துக் கூறவும்படும். அவற்றுள் சங்காரம் ஆவது, இளைப்பாற்றல் ஆகும். படைத்தல் ஆவ்து, அவரவர் கன்மம் முழுவதும் கழியும் வகையில், மலபாகம் வரச்செய்தல் ஆகும். காத்தல் ஆவது, கன்மம் கழியுமாறு அதனை நுகர்வித்தல் ஆகும்.

திரோபாவம் ஆகிய மறைப்பு ஆவது, இருவினை ஒப்பு வரச் செய்து மலங்களைத் தெளித்தல் ஆகும். அஃதாவது, அனுபவிக்க வேண்டிய வினையின் பயனை அனுபவிக்கும் முறைமையில், அதில் உள்ள குணம் குற்றம் தோன்றாது இருக்கும்படி மறைத்து, அனுபவிக்கச் செய்து மலத்தைத் தேய்த்தல் ஆகும்.

அனுக்கிரகம் ஆகிய அருள் ஆவது, பந்தம் விடுவித்தல் ஆகும். இவ்வாறு ஒவ்வொரு தொழிலும் ஒவ்வொரு பயன்தருவதால், ஆராயும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொழுது ஐந்தொழிலும் அருட்செயலே ஆகும். இவற்றுள், சங்காரமும் மறைத்தலும் மறத்தொழிலே போலும் என்று பழிக்க வேண்டா. ஐந் தொழிலை முத்தொழிலாகக் கூறும்பொழுது, மறைத்தலைக் காத்தலின் உள்ளும், அருளலைச் சங்காரத்தின் உள்ளும் அடக்கிக் கூறப்படும்.

''இருவினை ஒப்பு'' பற்றிய விளக்கம் வருமாறு.

மிகுந்த புண்ணியத்தின் பயனும், மிகுந்த பாவத்தின் பயனும், ஒரு காலத்தில் அனுபவத்திற்கு வரும்பொழுது அவ்விரண்டும் ஒன்றோடு ஒன்று முரணுதலின், திருவருட் சத்தி அந்த இரண்டனையும் அனுபவிக்க ஒட்டாது தள்ளி விடும். விடவே, அதுதான் இருவினை ஒப்பு என்பர் ஒரு சாரார்.

அவ்வாறாயினும் எஞ்சிய வினையின் பயன் அனுபவித்துத் தீரவேண்டும் ஆகலின், அஃது இருவினை ஒப்பு ஆகாது.

எல்லா நல்வினைப் பயனும் தீவினைப் பயனும் அனுபவித்து ஒழிதலே இருவினை ஒப்பு என்பர் மற்றொரு சாரார். அவ்வாறாயினும், அது மல சத்தியைக் கெடுக்காது; அஃது ஆணவ மலம் ஒன்று மட்டும் உடைய விஞ்ஞானகலர் ஆக்குதலையே செய்யும். எனவே, அஃதும் இருவினை ஒப்பு ஆகாது.

இனி இருவினை ஒப்பு தான் யாது என்றால், ஆன்ம அறிவின்கண் நல்வினை தீவினைகளும் அவற்றின் பயன் ஆகிய இன்ப துன்பங்களும் விருப்பு வெறுப்பு இன்றி ஒப்பத் தோன்றுதலே ஆகும். இவ்வாறு தோன்றுவதால் நான் என்னும் ஆன்ம போதம் ஆகிய மலச் சேட்டை தேயும். ஆகவே மலபரிபாகத்திற்கு உரிய இருவினை ஒப்பு என்பது இறுதியில் கூறியதே ஆகும்.

இருவினை ஒப்பு பற்றிய இக்கருத்து நினைவில் இருத்திக் கொள்ளத் தக்கது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''அனாதி முத்த சித்துரு'' என்னும் மூன்றாம் கூறு கூறத் தொடங்கிக் கடவுளின் தடத்த வடிவம் அருவம், அருவுருவம், உருவம் என்கிறது

அருவமோ உருவா ரூபம்
ஆனதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தா
வடிவு எனக்கு உணர்த்திங்கு என்னில்,
அருவமும் உருவா ரூபம்
ஆன்தும் அன்றி நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன
ஒருவனுக்கு உள்ள வாமே. 58

தெளிவுரை:

ஐந்தொழில் செய்யும் இறைவனுக்கு வடிவம் இன்றியமையாதது ஆகும். ஆகவே அந்த வடிவம் அருவமா, அருவுருவமா, உருவமா? இம் மூன்றனுள் அவனுக்கே உரிய வடிவம் இஃது என இங்கு எனக்கு உணர்த்த வேண்டும் என்று கேட்பாய் ஆயின், கூறுதும். அனாதி முத்த சித்துரு என மேலே கூறப்பட்ட இறைவனுக்கு, அருவும் அருவுருவும் ஆகிய இரண்டும் இன்றி, நின்ற உருவும் என மூன்று வடிவமும் உள்ளன வாகும். (தடத்த வடிவம் என்பது தூலமாக அறியப்படுவது ஆகும்). அருவம் – நிட்களம். அருவுருவம் – நிட்களசகளம்; உருவம் – சகளம்.

உருவத் திருமேனி மாயாகாரிய வடிவம் அன்று; அஃது அருள் வடிவம் என்கிறது

நண்ணிடும் உருவம் என்னில்,
நமக்குள உருவம் போலப்
பண்ணிட ஒருவன் வேண்டும்;
இச்சையேல் பலரும் இச்சை
கண்ணிய உருவம் கொள்ளேம்
யாம்; பெரும் கடவுள் தானும்
எண்ணிய யோக சித்தர்
போல்உரு இசைப்பன் காணே. 59

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

இறைவனுக்கு உருவம் உண்டு என்றால், உருவம் எல்லாம் ஒரு தன்மைய ஆகலின், நம்மனோர்க்கு உள்ளது போல், அஃதாவது நமக்கு வேண்டிய வடிவத்தை நமது விருப்பப்படி நம்மால் கொள்ள முடியாதது போல், இறைவனுக்கும் உருவம் உண்டாவதற்கு ஒரு கருத்தா உண்டு எனப்படும்; படவே, இறைவன் சுதந்தரம் உடையனல்லன் என்று ஆகிப் பரதந்தரம் உடையன் ஆதல் வேண்டும்.

அஃதன்றி, இறைவன் தான் நினைத்த வடிவம் கொள்வதால், சுதந்தரம் உடையவன் என்று கூறினால் இறைவனுக்குள்ள சுதந்தரம் நம்மனோர் பலருக்கும் உருவம் உடைய ஒற்றுமை பற்றி உள்ளது ஆதல் வேண்டும்.

நம்மனோர்க்கு விரும்பிய வடிவங்கள் எடுக்க முடியாமலும், யோக சித்தர் தாம் கருதியதொரு வடிவத்தை எடுத்துக் கொள்ளுதலும் நடைமுறையில் இருப்பதால் அந்த யோக சித்தர்போல, இறைவனும் தான் கருதியதொரு வடிவத்தை எடுத்துக் கொள்வான் என்றால், அவன் அந்த யோக சித்தரில் ஒருவராய் முடியும்.

இதுவும் அது

வித்தக யோக சித்தர்
வேண்டுருக் கொள்ளு மாபோல்
உத்தமம் கொள்வன் என்னில்,
அவர்களில் ஒருவன் ஆவன்;
அத்தகை யவர்கள் எல்லாம்
ஆக்குவது அருளால் ஆங்கு
வைத்தது மாயை என்னில்
வடிவு எலாம் மாயை ஆமே. 60

தெளிவுரை:

மேற்கூறிய யோக சித்தர், தாம் நினைந்ததொரு வடிவத்தைக் கொள்வது, முதல்வன் அருள் இன்றி முடியாது; மேலும் யோக சித்தர் களுக்கு உள்ள உருவம் மாயா காரியம் ஆகும். ஆகவே, யோகிகள் முதலிய நம்மனோர்க்கும் இறைவனுக்கும் உள்ள வேறுபாடு பெரிது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகும். எனவே, இரண்டு உருவங்களையும் ஒன்றாக ஒப்பிட்டுக் கூறுவது பொருந்தாது. அவ்வாறாயினும், உருவம் எல்லாம் ஒரு தன்மையன ஆகிய மாயா காரியமே ஆகும்; ஆகவே, உருவத்தில் வேற்றுமை இல்லாத பொழுது, வேறுபாடு உள்ளது என்று கூறுவதால் ஏற்படும் பயன் என்ன? இத் தடைக்கு விடையை அடுத்த செய்யுளில் காணலாம்.

இறைவனுக்கு உருவத் திருமேனி உண்டு அது கொண்டு அவன் நம்மில் ஒருவன் ஆவது இல்லை என்கிறது

மாயைதான் மலத்தைப் பற்றி
வருவதோர் வடிவம் ஆகும்;
ஆய ஆணவம் அகன்ற
அறிவொடு தொழிலை ஆர்க்கும்,
நாயகன், எல்லா ஞானத்
தொழில் முதல் நண்ண லாலே
காயமோ மாயை அன்று
காண்பது சத்தி தன்னால். 61

தெளிவுரை:

வடிவத்தை உடையவர்களது ஏற்றத் தாழ்வு காரணமாக, வடிவங்களும் ஏற்றத் தாழ்வு உடையனவே அன்றி, தம்முள் அவை ஒப்பன ஆகா. அந்த ஏற்றத் தாழ்வுகள் என்ன என்றால் கூறுதும்.

யோகிகள் முதலிய நம்மனோர் எல்லாரும், மலத்தைப் பற்றிக் கிடக்கும் உயிர்களே ஆவோம்; அஃதன்றியும், ஒன்றையே அறிதலும் ஒன்றையே செய்தலும் ஒன்றிலேயே முதன்மை ஆதலும் ஆகிய அற்ப அறிவாற்றலை உடையவர் ஆவோம்.

இறைவன், பந்திப்பது ஆகிய ஆணவமலம் நீங்கிய ஆன்ம அறிவிலே தங்கி நின்று உணர்த்தும் செயல் உடையோன் ஆகிய பசுபதி; அஃதும் அன்றி, எல்லா அறிவும் எல்லா செயலும் எல்லா முதன்மையும் உடையவன்.

இவ்வாறு வடிவத்தை உடைய உயிர்களுக்குத் தம்முள் ஏற்றத் தாழ்வுகள் உண்டு ஆகலின், அதற்கு ஏற்ப மலத்தைப் பற்றிய உயிர்களுக்கு, அந்த மலத்தோடு இயைபு உடையதாகிய ஏகதேச அறிவைச் செய்யும் மாயையே வடிவு ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அனாதி முத்த சித்துரு ஆகிய பசுபதிக்கு, ஏகதேசத்தைச் செய்யும் மலத்தோடு இயைபு உடைய மாயை வடிவம் அன்று. மலம் நீங்கிய உயிருக்கு வியாபக அறிவைச் செய்யும் அருளினாலேயே (சத்தியினாலேயே) அவனுக்கு வடிவம் ஆகும். ஆகவே, உடல்களிலும் தம்முள் ஏற்றத் தாழ்வுகள் உண்டு என்பது இனிது விளங்குவதால், அஃது அறியாது கூறுவது அடாது.

இறைவனுக்கு உருவம் கொள்ளுதல் பொருந்தாது; அருவம் கொள்ளுதலே பொருந்தும் என்கிறது

சத்தியே வடிவு என்றாலும்,
    தான் பரிணாமம் ஆகும்;
நித்தமோ அழியும் அத்தால்
    நின்மலன் அருவே என்னில்
அத்துவா மார்க்கத்து உள்ளான்
    அலன் இவன் அருமை தன்னைப்
புத்திதான் உடையை போல
    இருந்தனை, புகலக் கேள் நீ. 62

தெளிவுரை:

இறைவன் அருளையே (சத்தியையே) வடிவாக உடையன்; ஆயினும், உருவங்கள் எல்லாம் கட்டுப்படும் தன்மை உடையன ஆகலின் மாறுதல்களுக்கு உட்பட்டு அழிவு எய்தும். அவ்வாறு அழிவு எய்துதல் சிவசத்திக்குத் தகாது. ஆகவே, அனாதி முத்த சித்துரு ஆகிய இறைவன், அருவப் பொருள் ஆதலே அமைவு உடைத்து ஆகும். அவ்வாறாயின் அருவப் பொருள் ஆகிய அத்துவாவையும் கடந்த கடவுட் பொருளை, அந்த அத்துவாக்களோடு ஒப்ப அருவம் எனக் கூறுவது பொருந்தாது என்றாலும், இறைவன் தன்மை எத்தகையது என்பதை, புத்தி உடையவனைப் போல் இருப்பவனே, கூறுகிறேன், கேள்.

(அத்துவா என்றாலும் வழி என்றாலும் ஒன்றே ஆகும். அது கலை, மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புவனம் என அறுவகைப் படும். பிரபஞ்சம் தோன்றுவதும் ஒடுங்குவதும், ஆன்மாக்கள் வினைகளை ஈட்டுவதும் இந்த வழியே ஆதலால், இது வழி எனப்பட்டது) (அத்துவா – வழி).

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவனுக்கு அருவம் கொள்வதும், அருவுருவம் கொள்வதும் பொருந்தாது என்கிறது

உலகினில் பதார்த்தம் எல்லாம்
உருவமோடு அருவம் ஆகி
நிலவிடும் ஒன்று ஒன்று ஆகா;
நின்ற அந்நிலையே போல
அலகு இலா அறிவன் தானும்
அருவமே என்னில் ஆய்ந்து
குலவிய பதார்த்தத்து ஒன்றாய்க்
கூடுவன் குறித்தி டாயே. 63

தெளிவுரை:

உலகத்தில் காணப்பட்ட பொருள்கள் எல்லாம், உருவமும் அருவுருவமும் அருவமுமாய்க் காணப்படுகின்றன. அவற்றுள் ஆகாயம் முதலிய அருவப் பொருள், உருவத்தின் இயல்பு உடையதாகாது. நிலம் முதலிய உருவப் பொருள், அருவத்தின் இயல்பு உடையதாகாது. சந்திரன் முதலிய அருவுருவப் பொருள், அருவும் ஆகாது; உருவும் ஆகாது; இவ்வாறு ஆறு அத்துவா உட்பட்ட பொருள்கள் எல்லாம், ஒன்று பிறிது ஒன்றின் இயல்பு உடையதாக மாட்டாது. ஆதலால், அனாதி முத்த சித்துரு ஆகிய முதல்வனை அருவப் பொருளே எனின், நிலை பெற்ற அவனும் அப்பொருள்போல் பிறிது ஒன்று ஆக மாட்டாமை உடையன் எனப்பட்டு, பொருந்திய அவற்றுள் ஒருவனாய் முடியும். ஆகவே இதனை ஆராய்ந்து அறிவாயாக.

சந்திரனுக்கு ஒரு கலை என்றும் இருப்பதால், அமாவாசையில் அவனை அறிய முடியாமையின் சந்திரன் அருவம்; மற்றைக் கலைகள் அறியப்படுதலின் உருவம்; ஆகவே அருவுருவம் ஆகும்.

இறைவனுக்கு உருவம் கொள்ளுவதால், மாறுதலை அடைந்து அழிவு எய்துதல் ஆகிய குற்றம் இல்லை என்கிறது

பந்தமும் வீடும் ஆய
பதபதார்த் தங்கள் அல்லான்;
அந்தமும் ஆதி இல்லான்;
அளப்பு இலன் ஆதலாலே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எந்தை தான் இன்னன் என்றும்,
இன்னதாம் இன்னது ஆகி
வந்திடான் என்றும் சொல்ல
வழக்கொடு மாற்றம் இன்றே. 64

தெளிவுரை:

அனாதி முத்த சித்துரு ஆகிய இறைவன், கட்டு வீடு என்னும் பதங்களை உடைய, பசு பாச பதார்த்தங்களது இயல்பு உடையனல்லன்; தோற்றமும் ஒடுக்கமும் உடையனல்லன்; எந்த அளவைகளுக்கும் எட்டாதவன். எனவே, அருவம், அருவுருவம், உருவம் என்னும் முக்கூற்றுள், இன்னான் அவன் என்றாவது, அம்முக்கூறுபடும் விருத்தி, பரிணாமம், விவர்த்தனம் என்பவற்றுள் ஒன்றில் படுபவன் என்றாவது, படாதவன் என்றாவது கூறுவதற்கு எந்தவித ஐயப்பாட்டிற்கும் இடம் இல்லை. ஐயப்பாடு இல்லாமையால், அதற்கு மறுமொழியும் இல்லை. (விவர்த்தனம் என்பது, ஒன்று பிறிது ஒன்றாகத் தோன்றுதல். அஃதாவது கட்டை கள்ளனாய்த் தோன்றுதல் போல்வன)

இறைவன் உயிர்கள்மீது வைத்த அருளினால்தான், நினைந்த வடிவம் கொள்கிறான். எனவே கன்மம் காரணமாக உருவம் கொள்பவர்போல, அவன் உருவம் கொள்வதால் குற்றம் இல்லை என்கிறது

குறித்தது ஒன்று ஆக மாட்டாக்
குறைவிலன் ஆத லானும்,
நெறிப்பட நிறைந்த ஞானத்
தொழில் உடை நிலைமை யானும்,
வெறுப்பொடு விருப்புத் தன்பால்
மேவுதல் இலாமை யானும்
நிறுத்திடும் நிறைந்த மேனி
நின்மலன் அருளி னாலே. 65

தெளிவுரை:

இறைவன், விகாரப்படுவதற்குக் காரணம் ஆகிய நினைத்த தொரு வடிவத்தை எடுத்துக் கொள்ள மாட்டாத குறைபாடு இல்லாதவன்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அஃதாவது நினைத்த வடிவத்தை எடுத்துக் கொள்ளும் நிறைவை உடையவன். முறைப்பட நிறைவான அறிவையும் தொழிலையும் உடையவன்; அஃதாவது சிற்றறிவும் சிறுதொழிலும் இல்லாதவன். சொந்தப்படுதற்கான விருப்பு வெறுப்புக்கள் தன்னிடத்துப் பொருந்துதல் இல்லாதவன். இத்தகைய தன்மைகளை இயல்பாகவே உடையனாக உள்ளவன் ஆகலின், அனாதி முத்த சித்துரு ஆகிய இறைவன், மலம் நீங்கிய அறிவிலே தங்கி நின்று உயிர்களுக்கு உணர்த்தும் அருளுடையவன். எனவே அவன் தான் நினைத்த தொரு திருமேனியைத் தனதாகக் கொண்டு அருள்வன். ''வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுதல் இல்லான்'' என்னும் சிவாகமக் கருத்தையே திருவள்ளுவர் ''வேண்டுதல் வேண்டாமை இலான்'' என்றருளினார்.

இறைவன் உருவம் கொள்ளுதலின் இன்றியமையாமை கூறுகின்றது.

ஆரணம் ஆக மங்கள்
அருளினால் உருவு கொண்டு
காரணன் அருளான் ஆகில்,
கதிப்பவர் இல்லை ஆகும்;
நாரணன் முதலாய் உள்ள
சுரர்.நரர் நாகர்க்கு எல்லாம்
சீரணி குரு சந்தானச்
செய்தியும் சென்றிடாவே. 66

தெளிவுரை:

தன் உடம்மைத் தொழிற்படுத்துவதற்கு, உயிர்க்கு வேறோர் உடம்பு வேண்டியது இல்லை. அதுபோல, அனாதி முத்த சித்துரு ஆகிய இறைவனுக்குத் தன் வடிவம் ஆகிய உலகத்தைத் தொழிற்படுத்துதற் பொருட்டு, வேறொரு வடிவம் வேண்டப்படுவதன்று, ஆயினும், இறைவன் கருணையினால் திருவுருவம் கொண்டு வேதாகமங்களை முறைப்பட அருளிச் செய்யவில்லை என்றால், அறிவித்தால் அறியும் தன்மை உடைய பிரளயாகலர், சகலர் என்னும் உயிர் இனங்கள், பொருளின் இயல்பு உணர்ந்து வீடுபேறு அடைதல் இயலாததாகும். இந்த உயிரினங்களும் நேராகவும் பிறிதொரு வடிவத்தில் மறைந்து நின்றும் அறிவித்தாலே அறியும் தன்மை உடையன. மேலும், திருமால் முதலிய தேவர்களுக்கும் மானுடர்களுக்கும், நரகத்தில் இருப்பவர்களுக்கும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிறப்பு மிக்க குருமரபில் வைத்து அருளுதலும் வேறு எந்த வகையில் அறிவித்தலும், வேதாகமச் செய்திகள் சென்று சேரமாட்டா. எனவே உருவம் கொள்ளுதல் இன்றியமையாது வேண்டப்படும்.

இறைவன் உருவத் திருமேனியில் தோன்றுவன அனைத்தும் அருள்வடிவே ஆகும் என்கிறது.

உருவருள் குணங்க ளோடும்
உணர்வு அருள் உருவில் தோன்றும்
கருமமும் அருள் அரன்தன்
கரசர ணாதி சாங்கம்
தரும்அருள் உபாங்கம் எல்லாம்
தான்அருள் தனக்கு ஒன்றுஇன்றி
அருள்உரு உயிருக்கு என்றே
ஆக்கினன் அசிந்தன் அன்றே. 67

தெளிவுரை:

சிவபெருமானின் திருமேனி அருள் ஆதலால், அந்தத் திரு மேனியில் உள்ள திருக்கை, திருவடிமுதலிய பிற உறுப்புக்களும் அருள் வடிவே ஆகும். அத்திருவடிவு உயிர்களுக்கு அறிவைக் கொடுப்பது. எனவே, அத்திருவுருவில் தோன்றுகின்ற தொழில்களும், வாய்மை முதலிய குணங்களும், சூலம் முதலிய கருவிகளும் அருள் வடிவே ஆகும்.

உபாங்கம் ஆகிய புவன போகங்களும் அருள்வடிவே ஆகும். இத்தகு அருள் ஆகிய வடிவு எல்லாம், உயிர்களின் பொருட்டு அன்றி, சிறிதும் தன் பொருட்டுக் கொள்வோனல்லன். ஆகவே, இந்த வடிவம் பற்றிச் சிந்திக்கப்படுவன் ஆயினும், இறைவன் சிந்தனைக்கு எட்டாத வனே ஆவன்.

அங்கம்: சிரசு, முகம், இருதயம் என்னும் மூன்றும் ஆகும்

பிரத்தியங்கம்: நேத்திரம்(கண்), நாசி, கண்டம், மார்பு, தோள், நாபி, கை, கால், விரல் முதலிய உறுப்புக்கள்.

சாங்கம் : அங்கத்துடன் கூடியது; அஃதாவது சூலம் முதலிய பக்க) அவை வருமாறு:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

1. சூலம் – மூன்று தொழிலுக்குரிய மூன்று சத்திகள், 2. பரசு – சத்தியம்; 3. வாள் – பிரதாபம்; 4. வச்சிரம் – தன்னையாவது தன் செயலையாவது பிறர் எவரும் பேதிக்க முடியாமை; 5. அபயமுத்திரை – அநுக்கிரகம்; 6. நாகம் – சுத்தமாயை; 7. பாசம் – அதோ மாயை; 8. அங்குசம் – வியாபகம் – விரிவு; 9. கண்டை – ஒலி – நாதம்; 10. அக்கினி – பாச சங்காரம்.

உபாங்கம்: அங்கத்தின் சமீபத்தில் இருப்பது: அஃதாவது துயில், மாலை, அணிகலன், இருக்கை முதலியன. அவை இங்கு புவன போகங்களைக் குறிக்கும்.

இறைவன் கொள்ளும் உருவத் திருமேனியின் பேதங்களும், அவற்றின் தொழில்களும் இவை என நூல் பிரமாணத்தால் கூறி, அசிந்திதன் என்பதை வலியுறுத்துகின்றது.

உலகின் இறந்து நின்றது
அரன் உரு என்பது ஓரார்;
உலகு அவன் உருவில் தோன்றி
ஒடுங்கிடும் என்றும் ஓரார்;
உலகினுக்கு உயிரும் ஆகி
உலகுமாய் நின்றது ஓரார்;
உலகனில் ஒருவன் என்பர்,
உருவினை உணரார் எல்லாம். 68

தெளிவுரை:

அசிந்திதன் – சிந்திப்பதற்கு அரியவன்.

இறைவன் வடிவம் உடைவன்; ஆயினும், வாக்கினாலும் மனத்தினாலும் இன்ன தன்மையன் என்று அறிதற்கு அப்பாற்பட்டவன். இறைவன் கொள்ளும் உருத்திரன் வடிவம் உலகினைக் கடந்து நிற்கிறது; எனவே, வேதங்களுள் "உருத்திரன் உலகாதீதன்" என்று கூறும் சுருதியினை அவர்கள் அறியமாட்டார்.

இறைவனது அருள்வடிவில்(திருவுரு) உலகம் தோன்றி ஒடுங்கும். ஆதலால், உலககாரணன் அவன் எனப்படுகிறான். இந்த வேதவாக்கையும் அவர்கள் அறிவதில்லை. உடலுக்கு உயிர் நின்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உடலை இயக்குவது போன்று. இறைவன் உலகுக்கு உயிராய் நின்று உலகை இயக்குகிறான். எனவே இறைவன் உலகுக்கு அந்தரியாமி என்று வேதம் முழக்குகிறது. அதனையும் அவரகள் அறியமாட்டார்கள். ''அந்தரியாமி'' என்பது, அந்தந்தப் பொருளுக்கு அந்தந்தப் பொருளாய்க் கலந்து உள்ளீடாய் இருத்தலைக் குறிக்கும். உலகுக்கு உலகாய் நிற்பதால் உலகரூபி (உலகமே இறைவடிவம்) என்று கூறும் சுருதியையும் அறியமாட்டார்கள். இவ்வாறெல்லாம் கூறும் வேதப் பிரமாணங்கள் சான்றாக இருந்தும், சிவபெருமானின் திருமேனியின் இயல்பினை உணராதவர்கள், சிவபெருமானை உலகத்தில் உள்ள வர்கள் அறியாமல் கூறும் கடவுள்களில் ஒருவன் என்று கூறுவார்கள். பரம்பொருளின் உண்மை இயல்பை எவரும் எளிதில் அறிந்துவிட முடியாது என்பதே இந்தச் செய்யுளின் கருத்தாகும்.

இதுவும் அது,

தேவரில் ஒருவன் என்பர்
　　திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்றது ஓரார்:
　　முதல்உரு பாதி மாதர்
ஆவதும் உணரார்; ஆதி
　　அரி அயற்கு அறிய ஒண்ணா
மேவுரு நிலையும் ஓரார்;
　　அவன்உறு விளைவும் ஓரார் 69

தெளிவுரை:

நான்கு வேதங்களையும் முறையே உறுதிப் படுத்தும் அரியும் அயனும் அடிமுடி தேடி அறியா வண்ணம் உயர்ந்த முதல்வன் திருவுருவின் நிலையினைக் கூறுகின்ற புராண வசனங்களை உணர மாட்டார்கள். மும்மூர்த்திகளும் தன் உறுப்பில் தோன்றி நின்ற திருவுருவின் இயல்பினைக் கூறும் புராண வசனத்தினையும் உணரமாட்டார்கள். இறைவன் வடிவில் விளைந்த வண்ணமே உலகிற்கு விளைவு கூறுகின்ற புராண வசனத்தினையும் உணர மாட்டார்கள். பாதி உரு உமையோடு கூடிய அர்த்த நாரீசுர வடிவு கூறுகின்ற புராண வசனங்கள் சான்றாக இருக்க, இந்த உண்மையை அறியாதவர்கள். சிவபெருமானை ஏனைக் கடவுளரில் ஒருவன் என்பர். இந்தச் செய்யுளிலிருந்து ஒரு முக்கிய உண்மை கருத்தில் கொள்ளத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தக்கது. அஃதாவது, வடிவத்தில் பாதி சத்தி பாகமாக இருப்பது, சிவபெருமான் ஒருவனுக்கே அன்றி, ஏனைய கடவுளருக்குக் கிடையாது என்பதே அவ்வுண்மை. ஏனைய கடவுளருக்குச் சத்தி பாகமாய் இருப்பது உண்டு என்று கூறுவதற்குப் பிரமாணம் இல்லை.

உருவத்திருமேனியின் தொழில்களின் பயன் கூறுகின்றது;

போகியாய் இருந்து உயிர்க்குப்
போகத்தைப் புரிதல் ஓரார்;
யோகியாய் யோக முத்தி
உதவுதல் அதுவும் ஓரார்;
வேகியானால் போல் செய்த
வினையினை வீட்டல் ஓரார்;
ஊகியா மூடர் எல்லாம்
உம்பரில் ஒருவன் என்பர். 70

தெளிவுரை:

இறைவன் கொண்ட திருமேனிகள், போகவடிவம், கோர வடிவம், யோக வடிவம் என முத்திறப்படும். அவற்றுள் போக வடிவம் உயிர்களுக்கு போகம் புரிதல் பொருட்டு என்பதை உணர மாட்டார்; கோர வடிவம் உயிர்கள் செய்த வினையினைக் கெடுத்தல் பொருட்டு என்பதை உணரமாட்டார்; யோக வடிவம் உயிர்களுக்கு யோகம், முத்தி உதவுதல் பொருட்டு என்பதையும் உணரமாட்டார். இவ்வாறு திருமேனி கொள்ளும் முறையினை, ஆராய்ந்து அறியும் வலி இல்லார் அனைவரும் இறைவனை தேவரில் ஒருவன் என்பர்.

திருமேனி கொள்ளுதல் உயிர்களின் பொருட்டே ஆகலின், இறைவன் சிந்தனைக்கு எட்டாதவனே என்கிறது:

ஒன்றொடு ஒன்று ஒவ்வா வேடம்
ஒருவனே தரித்துக் கொண்டு
நின்றலால், உலகம் நீங்கி
நின்றனன் என்றும் ஓரார்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அன்றி அவ்வேடம் எல்லாம்
அருள்புரி தொழில் என்று ஓரார்;
கொன்றது வினையைக் கொன்று
நின்றஅக் குணம் என்று ஓரார். 71

தெளிவுரை:

அவ்வாறு போக வடிவம், கோர வடிவம், யோக வடிவமாய்த் தம்முள் மாறுபட்ட பல வடிவம், ஒருவனே தரித்துக் கொண்டு நிற்பதால், மாறுபட்ட அந்த வடிவங்களும் மேற்கூறியவாறு, போகமும் வீடும் யோகமும் உதவுவது ஆகிய அனுக்கிரகம் (அருள்) ஒன்றற்கே ஏது ஆகும்; இதனையும் உணரார். கொல்லுவது ஆகிய தீமை செய்வது, வினையைக் கெடுத்து நன்மை பயத்தல் ஆகிய நிலைபெற்ற குணம் என்பதையும் உணரமாட்டார். இவ்வாறு உலகத்தில் வைத்து அறியப்படாத அபூர்வ நிலையினை உடையவன் என்பதையும் உணரமாட்டார். எனவே, இந்த அபூர்வ நிலையும் அவன் சிந்தனைக்கு எட்டாதவன் எனபதற்குச் சான்று ஆகும்.

இந்தத் திருமேனியில் நின்று புரியும் தொழில்களும் உயிர்களின் பொருட்டே ஆகும். நெற்றிக் கண்ணின் பயன் கூறுகின்றது.

நாயகன் கண் நயப்பால்
நாயகி புதைப்ப, எங்கும்
பாய்இருள் ஆகிமூடப்
பரிந்து உலகினுக்கு நெற்றித்
தூயநேத்திரத்தி னாலே
சுடர்ஒளி, பொடுத்த பண்பில்
தேயம்ஆர் ஒளிகள் எல்லாம்
சிவன்உருத் தேசுஅது என்பார். 72

தெளிவுரை:

பராசக்தி திருவுளம் மகிழ்ச்சியால், பரசிவனது திருக் கண்களைக் திருவிளையாட்டாகத் தன் இரு கரங்களினால்மூடிய பொழுது, எங்கும் இருள் பரவிச் சூழ்ந்தது. அந்நிலையில் சிவ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெருமான் கருணை கூர்ந்து உலகில் உள்ளவர்களுக்குத் தூய தன் நெற்றிக் கண்ணினால் மிகுந்த ஒளியினை வழங்கி அருளினான். எனவே, உலகில் உள்ள ஒளிகள் எல்லாம், சிவபெருமானின் திருவருள் ஒளியே ஆகும். ஆகவே, இறைவன் கொள்ளும் வேடம் எல்லாம், திருவருளை வழங்கும் செயலே என்பதற்கு இந்நிகழ்ச்சியே சான்று ஆகும். இதன் தாற்பரியம், இறைவன் எல்லாமாய் (அது வதுவாய்) நிற்கிறான் என்பதாகும்.

திருவருட் செயலுக்குத் திருவேடம் இன்றியமையாது வேண்டப்படும் என்கிறது

கண்ணுதல் யோகு இருப்பக்
காமன் நின்றிட வேட்கைக்கு
விண்ணுறு தேவர் ஆதி
மெலிந்தமை ஓரார்; மால்தான்
எண்ணிவேள் மதனை ஏவ
எரிவிழித்து இமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து உயிர்க்குப்
பேரின்பம் அளித்தது ஓரார். 73

தெளிவுரை:

நெற்றிக் கண்ணினை உடைய சிவபெருமான், யோக நிலையில் இருந்தபொழுது, காமத்திற்குக் காரணன் ஆகிய மன்மதன் இருந்தும், தேவர்கள் முதலியோர் காமவேட்கை இன்றி மெலிவுற் றிருந்தனர். அதன் காரணத்தை அறியாமையினால், விட்டுணு அந்த மெலிவைப் போக்கக் கருதி, சிவபெருமானிடத்து மன்மதனை ஏவினார். அப்போது, சிவபெருமான் நெற்றிக்கண்ணை விழித்து மன்மதனை எரித்து, இமயமலை அரசனின் மகளாகிய உமாதேவியை மணந்து, உயிர்களுக்குப் பேரின்பத்தை அருளிச் செய்தான். இதன் உண்மையை அறியாமையால், பல்வேறு வகைப்பட்ட அருள்தரு செயலுக்கு, அந்த வேடத்தை இன்றி முடியாமைக்கு, இந்த நிகழ்ச்சியே சான்று ஆகும். இறைவன் உலகில் உள்ள உயிர்க்கு உயிராய் உடனாய்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நிற்கும் முறையை இந்தச் செய்யுட் கருத்தால் பெறப்படும். உருவத்திருமேனி கொள்ளாமலே இறைவன் இத்தொழில் அனைத்தும் செய்யக் கூடாதோ என்னும் ஐயம் எழும். அதற்கு விளக்கத்தை அடுத்த செய்யுளில் காணலாம்.

இதுவும் அது

படைப்புஆதித் தொழிலும், பத்தர்க்கு
அருளும் பாவனையும், நூலும்
இடப்பாகம் மாதரா ளோடு
இயைந்து உயிர்க்கு இன்பம் என்றும்
அடைப்பானாம் அதுவும், முத்தி
அளித்திடும் யோகும், பாசம்
துடைப்பானாம் தொழிலும், மேனி
தொடங்கானேல் சொல்லொ ணாதே. 74

தெளிவுரை:

முன்பு சொன்னபடி உபதேச அளவில் மட்டும் அன்றி, படைப்பு ஆகிய முதல் தொழிலுக்கும், வாதுள ஆகமத்தில் ஓதியவாறு, அசையும் பொருளும் அசையாப் பொருளும் ஆகிய உலகங்கள் இறைவனது திருமேனியில் ஒவ்வொரு உறுப்புகளின் நின்று தோன்றுமாறு செய்ய வேண்டியுள்ளது.

பத்தர்களுக்கு இருவினை ஒப்பு வந்த பொழுது, அருளுதல் பொருட்டுச் செய்யும் பாவனை ஆகிய மறைத்தல் தொழிற்கும், ஊன நடனம் இயற்ற வேண்டியுள்ளது. உயிர்களுக்கு எந்நேரமும் இன்பத்தைச் செய்வது ஆகிய நிலையான வேதாகமங்களை அருளிச் செய்கின்ற அருள் ஆகிய உமாதேவியோடு இடப்பாகத்தே பொருந்த வேண்டியுள்ளது.

ஆன்மாக்களுக்கு முத்தி அளிப்பது ஆகிய அருளுதலுக்கும் நிட்டை இருந்து காட்ட வேண்டியுள்ளது. பாசம் நீங்குதல் ஆகிய சங்காரத் தொழிலுக்கும், தோன்றிய முறையிலேயே ஒடுங்க வேண்டியுள்ளது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இத்தகு காரணங்களால் இறைவன் உருவத் திருமேனி கொள்ள வேண்டுவது இன்றியமையாததாகும்.

நடனம் – ஊன நடனம், ஞான நடனம் என்று இருவகைப்படும். அவற்றுள் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் ஆகிய நான்கும் ஆன்மாவிற்கு அறிவித்தல் தொழில் ஆக இருப்பதால், அவை ஞான நடனம் எனப்படும். திரோபம், மறைத்தல் தொழிலாய் இருப்பதால், அஃது ஊன நடனம் எனப்படும்.

இறைவனுக்கு உருவத் திருமேனி மட்டும் அன்றி அருவத் திருமேனியும் அருவுருவத் திருமேனியும் உண்டு என்றும் அவையும் கருணையே என்றும் கூறுகின்றது;

உருமேனி தரித்துக் கொண்டது
என்றலும், உருவு இறந்த
அருமேனி அதுவும் கண்டோம்;
அருஉரு ஆன போது
திருமேனி உபயம் பெற்றோம்;
செப்பிய மூன்றும் நம்தம்
கருமேனி கழிக்க வந்த
கருணையின் வடிவு காணே. 75

தெளிவுரை:

மேற்கூறியவாறு, இறைவன் உருவத் திருமேனி தரித்துக் கொண்டான் என்ற அளவில், உருவம் எனப்படும் தூலப் பொருள் களுக்கு எல்லாம், அருவம் எனப்படும் சூக்கும நிலை உண்டு என்பது துணிபு. எனவே, சற்காரிய வாதத்தின் இயல்பு பற்றி, உருவம் ஒடுங்கு வதற்குக் காரணம் ஆகிய அருவத் திருமேனி உண்டு என்பதும் தெளி வாயிற்று.

அந்த அருவம் எனப்படும் சூக்குமப் பொருள், பின்பு உருவம் எனப்படும் தூல நிலையினை எய்தும் பொழுது, அந்த இரண்டிற்கும் பொது ஆகியதொரு நிலையும் உண்டாகும்; ஆகவே, அதுபற்றி அருவுருவத் திருமேனி உண்டு என்பது பெறப்பட்டது.

திருமேனி எல்லாம் ஒரு தன்மையன ஆகலின், இங்ஙனம் கூறிய மூன்று திருமேனியும், நமது பிறவிக்கு ஏது ஆகிய மாயையின் உருவை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒழித்தல் பொருட்டு, இறைவன் கருணையினால் கொண்ட வடிவே ஆகும். ஆகவே இறைவனுக்கு கருணையினால் கொள்ளும் நினைத்ததொரு வடிவமே அன்றி, எவற்றுடனும் கலந்து நிற்கும் வடிவம் இல்லை என்பது கருத்தில் கொள்ளத் தக்கது.

இறைவனுக்குள்ள உபசார வடிவங்கள்

அத்துவா மூர்த்தி யாக
அறைகுவது என்னை என்னின்,
நித்தனாய் நிறைந்து அவற்றின்
நீங்கிடா நிலைமை யானும்,
சித்துடன் அசித்திற்கு எல்லாம்
சேட்டிதன் ஆத லானும்
வைத்ததாம் அத்துவா வும்
வடிவு என மறைகள் எல்லாம். 76

தெளிவுரை:

இறைவனுக்குக் கருணையினால் கொள்ளும் வடிவமே அன்றி, மாயா வடிவம் இல்லை ஆயின், ஆகமங்களில் எல்லாம் அத்துவாக்கள் ஆறும் இறைவனுக்கு வடிவம் என்று கூறுவது எதனால் என்று தடை எழும். அத்தடைக்கு விளக்கம் வருமாறு.

இறைவன் அத்துவாக்கள் முழுவதிலும் நிறைவுற்றுக் கலந்து எல்லாம் ஆகி (ஒன்றாய்) நிற்கிறான். அந்த அத்துவாக்கள் அல்லனாயும் (வேறாய்) நிற்கிறான்; சடப்பொருள் சித்துப் பொருள் ஆகிய எல்லாவற்றையும் இயக்கி உடனுமாயும் நிற்கிறான். எனவே, இந்த மூவகை இயல்புடைய இறைவனுக்கு, அவனது திரோதான சத்தியின் சம்பந்தத்தால், அத்துவாவும் வடிவம் என உபசரித்துக் கூறப்படும்.

மந்திர வடிவத்தின் சிறப்பு

மந்திரம் அத்துவாவின்
மிகுத்துஒரு வடிவமாகத்
தந்தது என் அரனுக்கு என்னில்,
சகத்திினுக்கு உபாதானங்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விந்து மோகினி மான் மூன்றாம்
இவற்றின் மேலாகி விந்துச்
சிந்தையார் அதீதம் ஆன
சிவசத்தி சேர்ந்து நிற்கும். 77

தெளிவுரை:

இறைவனுக்கு அத்துவா வடிவத்தைக் காட்டிலும் மந்திர வடிவம் சிறந்தது ஆகும். இவ்வாறு கூறுவதற்குக் காரணம் வருமாறு.

உலகிற்கு முதற்காரணங்கள் சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என்னும் மூன்றும் ஆகும். இந்த மூன்றனுள் மேல் ஆகிய சுத்தமாயையில் மனத்தால் நினைப்பதற்கும் அப்பாற்பட்ட சிவசத்தி சேரப்பட்டு நிற்கிறது.

இதுவும் அது,

சுத்தமாம் விந்துத் தன்னில்
தோன்றிய ஆத லானும்,
சத்திதான் `பிரேரித்துப் பின்
தான் அதிட்டித்துக் கொண்டே
அத்தினால் புத்தி முத்தி
அளித்தலால் அரனுக்கு என்றே
வைத்தவாம் மந்தி ரங்கள்
வடிவுஎன மறைகள் எல்லாம். 78

தெளிவுரை:

சுத்தமாயை ஆகிய விந்துவில் மந்திரங்கள் முதலாவதாகத் தோன்றியதால், மந்திரங்கள் தலைமை உடையன ஆகும். அந்த மந்திரங்களைச் சாதகம் செய்பவர்கள் கணிக்கும்படி சிவசத்தி செலுத்துகின்றது. அவ்வாறு அவற்றைக் கணித்த பிறகு, அதற்குப் பயன் கொடுத்தல் பொருட்டு போகத்தையும் வீடுபேற்றையும் சிவசத்தியே வழங்குகிறது. எனவே, ஆகமங்களில் எல்லாம் இறைவனுக்கு மந்திர வடிவம், சிறப்பான உரிமை உடையது என உபசாரமாகக் கூறப்படுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அத்துவாக்கள் ஆறு. அவை மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை எனப்படும். இறைவனுக்கு மந்திரம் இரத்தமாகவும், பதம் முடியாகவும், வன்னம் தோலாகவும், புவனம் உரோமமாகவும், தத்துவம் எழுவகைத் தாதுவாகவும், கலை அவயவமாகவும் உபசரித்துக் கூறுப்படும்.

சிவசத்தி ஆகிய சதாசிவ வடிவம் மந்திர வடிவில் உள்ளது. மந்திரங்களுள், ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், இருதயம், சிரசு, சிகை, கவசம். நேத்திரம், அத்திரம் என்னும் பதினொன்றும் முக்கிய மந்திரங்கள் ஆகும். இவற்றுள், ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம் சத்யோசாதம் என்னும் ஐந்து பஞ்சப் பிரமமந்திரம் எனப்படும். இதனை அடுத்துவரும் செய்யுளில் காணலாம்.

ஏனைய ஆறனுள், இருதயம் ஞானத்தையும், சிரசு மிகுந்த உயர்ச்சியையும், சிகை தன்வயம் உடைமையையும், கவசம் காத்தலையும், நேத்திரம் எல்லாம் அறிதலையும், அத்திரம் தாங்கற்கு அரிய பிரதாபத்தையும் குறிக்கும் என்று பௌட்கர ஆகமம் கூறுகிறது. இந்த ஆறும் சடங்க மந்திரம் எனப்படும். சட் – ஆறு. சட் + அங்கம் = சடங்கம்.

பஞ்சப்பிரம மந்திரத்தின் சிறப்பு.

மந்திரம் அதனில் பஞ்ச
மந்திரம் வடிவம் ஆகத்
தந்திரம் சொன்ன வாறு இங்கு
என் எனில், சாற்றக்கேள் நீ;
முந்திய தோற்றத் தாலும்,
மந்திர மூலத் தாலும்,
அந்தமில் சத்தி ஆதிக்கு
இசைத்தலும் ஆகும் அன்றே. 79

தெளிவுரை:

இறைவனுக்குள்ள மந்திர வடிவுகளுள், பஞ்சப்பிரம மந்திர வடிவத்தைச் சிறந்தது என எடுத்து ஆகமங்களில் ஓதப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் வருமாறு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பஞ்சப் பிரம மந்திரம், ஏனைய மந்திரங்களுக்கெல்லாம் முற்படத் தோன்றியது. அதுவே மூலமந்திரம். அழிவில்லாத ஆதி சத்தி ஆகிய திரோதான சத்திக்கு முற்படப் பொருந்துவது ஆகிய வடிவத்தை உடையது.

பஞ்சப் பிரம மந்திரம் யாது என்பது முன்னைய செய்யுளிலேயே கூறப்பட்டது. அவற்றுள் ஈசானம் சிரசையும், தத்புருடம் முகத்தையும் அகோரம் இருதயத்தையும் வாமதேவம் குய்யத்தையும் (மறைபொருள்) சத்தியோசாதம் பாதத்தையும் குறிக்கும்.

ஈசானம், உலகம் முழுவதையும் ஆள்வது(ஈச் – ஆளுதல்)

தத்புருடம், தேவ சரீரம் மானுட சரீரம் முதலிய அந்தந்த சரீரங்களில் அதிட்டித்து நிற்பது.

(தத் – அந்த; புருஷம் – புரத்து இருப்பது; புரம் – சரீரம்)

அகோரம், சாந்தமாய் இருப்பது. (கோரம் – கடுமை; அ – எதிர்மறை)

வாமதேவம், அறம் பொருள் இன்பம் ஆகியவற்றை ஆன்மாக்களுக்கு வழங்கும் ஒளிமயம் ஆனது.

(வாமம் – அறம், பொருள், இன்பம்; தேவம் – ஒளி உடையது)

சத்தியோசாதம், உயிர்களுக்கு உடம்பை உடனே தோற்று விப்பது.

(சத்திய – உடனே: சாதம் – பிறப்பு)

இந்த ஐந்தும் போக சிவத்திற்கு முகங்களாய் இருக்கும்' என்று பௌட்கர ஆகமம் கூறுகிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முதல் சூத்திரம் — மூன்றாம் அதிகரணம்

தான் முதல் என்பது

சிவபெருமானின் சத்தி ஒவ்வொன்றே, பிரமன் முதலியோரிடத்து நிற்பதால், சிவபெருமான் ஒருவனே முதல்வன், அவனுக்கு பிரமன் முதலியோர் இன்றியமையாது வேண்டப்படுவர் என்கிறது.

அயன்தனை ஆதி ஆக
அரன்உரு என்பது என்னை
பயந்திடும் சத்தி ஆதி
பதிதலால் படைப்பு மூலம்
முயன்றனர் இவரே ஆயின்,
முன்னவன் தன்மை முற்றும்
நயந்திடும் அவன் இவர்க்கு
நண்ணுவது ஒரோஒன்று ஆமே. 80

தெளிவுரை:

பிரமாவினுடைய அழகிய உருவம், விட்டுணுவினுடைய உருவம் முதலியவற்றையும், சிவபெருமான் உருவோடு ஒத்த உருவாக வைத்து, வேதாகமங்களில் அவரவர் எல்லை அளவும் அத்துவ நியாசம், மந்திர நியாசம் முதலாயின விதித்தலினால், சங்காரக் கடவுளோடு ஒப்ப அவர்களும் முதல்வர் ஆவார் போலும் என்று மலைய வேண்டாம்.

படைப்பு முதலிய தொழில்களைச் செய்யும் ஜெனனி முதலிய சிவசத்திகள், ஒரோஒன்று பிரமன் முதலியோரிடத்துப் பதிந்து நின்று செலுத்துவதால் அந்தச் சத்தி பதிந்து இருக்கும் இயல்புபற்றி, வேதாகமங்களில் அரனோடு ஒப்ப உபசரித்து ஓதப்பட்டன.

சத்தி பதிந்து இருக்கும் காரணத்தால், படைப்பு முதலிய தொழிலை அயன், அரி முதல் ஆயினாரே முதல்வனின் அருள் இன்றியும் தாம் தாம் நினைந்தவாறு செய்வர் என்று கூறினால், முதல்வன் எதற்காக வேண்டும், வேண்டுவதில்லை என்று ஆகிவிடும். ஆகவே, அமைச்சர் முதலாயினார்க்கு அரசன் ஆணை இன்றிச் செல்லாமை போல, அயன்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அரி முதலாயினார்க்கு, அரன் அருளை இன்றிச் செல்லாது. அப்படியானால் ஐந்தொழிலும் செய்யும் இறைவன், அத்தொழில் அனைத்தும் தான் செய்யாமல் அயன், அரி முதலாயினார்க்கு ஒவ்வொரு தொழில் இயற்றச் செய்வதால், அரசனுக்கு அமைச்சர் முதலாயினார் போல இறைவனுக்கு அயன் அரி முதலாயினாரும் வேண்டப்படுவர்.

அத்துவ நியாசம் – அத்துவ சோதனை
மந்திர நியாசம் – மந்திர வைப்பு

பயத்தல் – தோற்றுவித்தல்; பயந்திடும் சத்தி – தோற்றுவிக்கும் சத்தி – ஜனனி; நண்ணுதல் – சேர்தல் – பொருந்துதல் இறைவனின் கிரியாசத்தி ஒன்றே, தொழில் வேறுபாட்டால் ஜெனனி, உரோதயித்திரி, ஆரிணி என மூன்றாக எனப்படும். ஜெனனி பிரமனை அதிட்டித்து நின்று பிரபஞ்ச உற்பத்திக்குக் காரணமாய் இருக்கும். உரோதயித்திரி விட்டுணுவை அதிட்டித்து நின்று ஆன்மாக்குப் போக நியமனம் செய்யும். ஆரிணி உருத்திரனை அதிட்டித்து நின்று சங்காரம் செய்யும். காத்தலும் மறைத்தலும் உரோதயித்திரி தொழில்கள்; அழித்தலும் அருளலும் ஆரிணியின் தொழில்கள்.

இந்த மூன்று சத்திகளும் சீகண்ட ருத்திரர் இடத்தில் பதிந்து நின்று, பிரகிருதிக்கு உட்பட்ட பஞ்சக் கிருத்தியங்களையும் நடத்தும். ஆயினும், சங்காரம் உருத்திரனது பிரதான கிருத்தியம் ஆகும். ஆகவே, சிவபெருமான் ஒருவனே ஐந்தொழிலையும் செய்கிறான் என்பது பெறப்படும்.

சிவசத்தி ஒன்றின் தடத்தமே பல சத்திகள் ஆகலின்,
சிவபெருமான் ஒருவனே கடவுள் என்கிறது.

சத்திதான் பலவோ என்னில்
தான் ஒன்றே அநேகம் ஆக,
வைத்திடும் காரியத்தால்
மந்திரி ஆதிக்கு எல்லாம்
உய்த்திடும் ஒருவன் சத்தி
போல் அரன் உடையது ஆகிப்
புத்தி முத்திகளை எல்லாம்
புரிந்து அவன் நினைந்தவாறாம். 81

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மேற்கூறியவாறு, இறைவனுக்கு சத்திகள் அநேகமோ என்று கேட்டால், அன்று என்பதே விடை ஆகும். எப்படி என்றால், அரசன் ஆணை ஒன்றே அமைச்சர், படைத்தலைவர். தண்டக்காரர் முதலாயினார் இடத்து நின்று, செய்யும் செயல் வேறுபாடு காரணமாக, பல்வேறு வகைப்பட்டு நிற்பது போல, சிவசத்தி ஒன்றே பிரமன் அரி முதலாயினார் இடத்து நின்று, செய்யும் செயல் வேறுபாடு காரணமாக, ஜெனனி முதலிய னவாய்ப் பல்வேறு வகைப்படும்.

என்றாலும், சிவசத்தி ஒன்றே என்பதும், அதுவே பல தெய்வங்கள் இடத்து நின்று நடாத்தும் என்பதும், போக மோட்சங்கள் எல்லாம், கருணையினால் இறைவன் நினைந்தவாறு இன்றி ஆகாமையின் வைத்து அறியப்படும். இஃது எது போல எனின், அமைச்சர் முதலாயினார் எவை எவை செய்தாலும் அரசன் நினைந்தவாறு அன்றி ஆகாமை போல ஆகும்.

இவ்வுண்மையைத் தக்கன் வேள்வி செய்வதற்கு முற்பட்டது. மார்க்கண்டன் வாழ்நாள் வளர்ந்தது, பாற்கடலில் விடம் தோன்றியபோது தேவர்கள் அஞ்சியது முதலியவற்றால் அறியலாம். மேல் இரண்டு செய்யுள்களில் சிவசக்தியின் தடத்த இயல்பு ஆகிய பொது இயல்பு கூறப்பட்டது.

சிவசத்தியின் சொரூப இயல்பு கூறுகிறது;

சத்திதன் வடிவு ஏது என்னில்
தடைஇலா ஞானம் ஆகும்;
உய்த்திடும் இச்சை செய்தி
இவை ஞானத்து உளவோ என்னில்
எத்திறம் ஞானம் உள்ளது
அத்திறம் இச்சை செய்தி
வைத்தலால், மறைப்புஇல் ஞானால்
மருவிடும் கிரியை எல்லாம். 82

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஒன்று ஆகிய சிவசத்தியின் சொரூபம்(உண்மை) யாது என்றால், உயிர்களுக்கு அருளை மட்டுமே குறியாகக் கொண்டு, அதற்கு வேண்டுவனவற்றைச் சிறப்பு வகையால் தான் அறியாமலும் உயிர்க்கு அறிவிக்காமலும், பொது வகையால் தான் அறிந்தும் உயிர்க்கு அறிவித்தும், நிற்பது ஆகிய ஞானம் ஒன்றே ஆகும். அந்த ஞானமே பராசத்தி எனப்படும்.

அந்த ஞானம் உயிர்கட்கு மலபரிபாகம் வருதல் பொருட்டு, ஐந்தொழில் செய்தலைக் குறித்து சிறப்பு வகையால் வியாபரிக்கும் பொழுது, ஒரு கூற்றானே திரோதான சத்தி என நின்று, இச்சாஞானக் கிரியை என முத்திறப்பட்டுத் தொழிற்படும்.

அவ்வாறாயின் இச்சை கிரியை என்கின்ற இவைகள் ஞானத்தினின்று தோன்றுவனவோ என்றால், ஞானம் எவ்வாறு உள்ளதோ அவ்வாறே இச்சை கிரியைகளும் நடப்பதனால், இவ்விரண்டும் ஞானத்தின் வியாபகச் சிறப்புக்களே அன்றி, வேறாகத் தோன்றுவன அல்ல, ஆதலால், காரிய வேறுபாடுகள் காரணமாக, பலவாக இருக்கும் ஜெனனி முதலிய வியாபார சத்திகள் எல்லாம் முன் கூறப்பட்ட பராசத்தியின் வடிவம் ஆகிய ஞானம் ஒன்றினால் உள ஆவனவே ஆகும்.

இதிலிருந்து, பராசத்தி, திரோதானசத்தி, இச்சாசத்தி ஞானசத்தி, கிரியாசத்தி என ஐந்து சத்திகள் இறைவனுக்கு உண்டு என்பது புலப்படும். அவற்றுள் பராசத்தி ஒன்றே சொரூபம் (உண்மை) ஆகும்; ஏனைய நான்கும். அந்த நான்கின் வியாபார பேதம் ஆகிய ஜெனனி முதலிய சத்திகளும், தடத்தம் (பொது) என்பது புலப்படும்.

''பொது வகையால் அறிதல்'' என்பது, ஆன்மாக்கட்கு அருளுதல் மாத்திரம் குறித்து நிற்றலைக் குறிக்கும். ''சிறப்பு வகையால் அறிதல் '' என்பது, படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல் என்னும் நான்கு தொழிலையும் குறித்து நிற்றல் ஆகும். ''அருளுதல்'' என்பது உயிர்கட்கு உபகாரம் செய்யவேண்டும் என்று எண்ணுதலைப் போன்ற தாகும். ஏனைய நான்கு தொழில்களும் இன்ன விதமாக உயிர்கட்கு உபகாரம் செய்ய வேண்டும் என்று எண்ணுதலைப் போன்றது ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''தடை இலா ஞானம்'' என்று கூறியது கொண்டு, ''தடை செய்யும் ஞானம்'' வருவிக்கப்பட்டது, இந்தத் தடை செய்யும் ஞானமே திரோதான சத்தி ஆகிய மறைப்பு ஆற்றல் ஆகும். தடை – தடுத்தல் – மறைப்பு. தடையிலா ஞானம் மறைத்தல் இல்லாத ஞானம்.

சிவசத்தி ஒன்றே சிறப்பு வகையாய்த் தொழிற்படுவதால் உண்டாகும் பயன் கூறுகின்றது

ஒன்றதாய் இச்சை ஞானக்
கிரியை என்று ஒருமூன்று ஆகி
நின்றிடும் சத்தி இச்சை
உயிர்க்குஅருள் நேசம் ஆகும்;
நன்றுஎலாம் ஞான சத்தி
யால் நயந்து அறிவன் நாதன்
அன்று அருட் கிரியை தன்னால்
ஆக்குவன் அகிலம் எல்லாம் 83

தெளிவுரை:

பராசத்தி ஆவது, தடைஇலா ஞானம் எனப் பொதுமையால் ஒன்றாய் இச்சா ஞானக் கிரியை என வியாபார பேதத்தால் மூன்றாய் அந்த மூன்றே மற்றும் அந்தந்தச் செயல் வேறுபாட்டால் பல திறப்படும். அந்த மூன்றனுள் இச்சா சத்தி ஆவது, உயிர்களுக்கு மலத்தை நீக்கி, சிவானுபவத்தைத் தருதல் பொருட்டுச் சிவபெருமானிடத்து உளதாகிய கருணை ஆகும்.

ஞானசத்தி ஆவது, சிவப்பேறு ஆகிய அதற்குச் செய்யக்கடவது ஆன உபாயங்களை எல்லாம், இறைவன் விரும்பி அறியும் அறிவு ஆகும். அருளின் வேறு அல்லாத கிரியாசத்தி ஆவது, அறிந்த அவற்றை அறிந்தவாறே இறைவன் சங்கற்பித்துச் செய்யும் திறம் ஆகும். (சங்கற்பம் – நினைந்து செய்தல்; உபாயங்கள் படைத்தல் முதலான ஐந்தொழில்கள்).

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இச்சை ஞானம் கிரியை என்னும் மூன்று சத்திகளும் உயிருக்கும் உண்டு; அதனால் சிவன் ஆகிய உயிர் சீவனுக்கு ஒப்பு ஆகான் எனக் கூறுகிறது.

சீவனும் இச்சா ஞானக்
கிரியையால் சிவனை ஒப்பன்
ஆவன் என்றிடில், அநாதி
மலம் இவற்றினை மறைக்கும்;
காவலன் இவன்செய் கன்மத்து
அளவினில் கொடுப்பக் காண்பன்;
பாவியாம் புத்தி முத்திப்
பயன்கொளும் பண்பிற்று ஆகும். 84

தெளிவுரை:

இச்சா ஞானக் கிரியை ஆகிய மூன்று சத்திகளும், முதல்வனோடு ஒப்ப உயிர்க்கும் உள்ளன ஆகும்; அது கொண்டு, உயிர்களும் முதல்வனோடு ஒத்த தன்மை உடையன என்று கூறலாமோ என்று கேட்டால், அவ்வாறு கூறுவது பொருந்தாது. அதற்குக் காரணம் வருமாறு:

உயிர்களின் இச்சா ஞானக் கிரியைகளைக் கேவல நிலையில், அநாதி ஆகிய ஆணவ மலம் மறைக்கும். பின்னர் சகல நிலையில், உயிர்கள் தாம் செய்கின்ற கன்மத்து அளவிற்கு ஏற்ற பயனை, முதல்வன் கொடுக்கப் பெற்று, ஒன்றை அனுபவிக்கும் பொழுது பிறிது ஒன்றை அனுபவிக்க மாட்டாமல் ஏகதேசப்பட்டு அனுபவிக்கும்; சுத்த நிலையில் முத்திப் பயனும், சகல நிலையில் அனுபவிக்கப்படும் போகப் பயன் போல், முதல்வன் வழங்கவே உயிர் கொள்ளும் உரிமை உடையன ஆகும். ஆதலால், இந்தத் தன்மைகள் இல்லாத இறைவனுடைய இச்சா ஞானக் கிரியா சத்திகளுக்கும் இந்தத் தன்மைகளையுடைய உயிரின் இச்சா ஞானக் கிரியா சத்திகளுக்கும் வேற்றுமை பெரிது ஆகலின், இரண்டும் ஒத்த தன்மை உடையன ஆகாவாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தடத்த சிவம் – லயசிவம், போக சிவம், அதிகார சிவம் என முத்திறப்படும் என்கிறது

ஞானமே ஆனபோது
சிவன் தொழில் ஞானம் ஒக்கின்,
ஈனம்இல் சதாசிவன் பேர்
ஈசனாம் தொழில் அது ஏறின்,
ஊனமேல் கிரியை வித்தை
உருத்திரன் இல்யம் போகம்
ஆனபேர் அதிகாரத்தோடு
அதிகரணத்தன் ஆமே. 85

தெளிவுரை:

மேற்சொன்ன சிவசத்தி மூன்றனுள், எப்பொர்ழுதும் ஒரு தன்மையாய்த் தொழிற்படுவது இச்சா சத்தி ஆகும். அந்த இச்சா சத்தி தவிர, ஞானம் கிரியை என்னும் இரண்டு சத்திகளுள் இறைவன் ஞான சத்தியேயாய் நின்றபோது சிவம் எனவும், கிரியா சத்தியேயாய் நின்ற போது சத்தி எனவும், ஞானமும் கிரியையுமாய் ஒத்து நின்றபோது சதாசிவம் எனவும் ஞானம் குறைந்து கிரியை ஏறி நின்றபோது மகேசுவரம் எனவும், கிரியை குறைந்து ஞானம் ஏறி நின்றபோது சுத்த வித்தை எனவும் ஐவகைப்பட்டு, லயம், போகம், அதிகாரம் என்னும் மூன்று நிலைகளையும், அந்தந்த நிலைக்கு ஏதுவாய் வேறுபட்ட ஆதாரங்களையும் உடையவனாய், அவத்தைக்கு (நிலை) ஆதாரம் ஆகிய அவற்றின் பெயரைப் பெற்று நிற்பன்.

சிவம், சத்தி என்னும் இரண்டும், எல்லாம் ஒடுங்குதற்கு இடமாய் நிற்பதால் இலயம் எனப்படும். சதாசிவம், ஏனைய மூர்த்தங்களைத் (வடிவங்கள்) தோற்றுவிப்பதால் போகம் எனப்படும்; மகேசுவரத்தில் இருபத்து மூன்று மூர்த்தங்களும், சுத்த வித்தையில் பிரம விட்டுணுவும் தோன்றி தொழில் செய்வதால், மகேசுவரம் சுத்தவித்தை என்ற இரண்டும் அதிகாரம் எனப்படும்.

அதிகரணம் – ஆதாரம் – இருப்பு. ''அதிகரணத்தன்'' என்பது, சுத்தமாயையில் தோன்றும் சுத்த தத்துவங்கள் ஐந்தும், முதல்வனது அவத்தைகளுக்கு இருப்பிடமாய் இருக்கும் என்பதைக் குறிக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இலய போக அதிகார நிலைகளுக்கு ஏதுவாய் நின்ற ஆதாரங்கள் சிவத் தத்துவங்களே ஆகும் என்கிறது

வித்தையோடு ஈசர் சாதாக்
கியம் சத்தி சிவங்கள் ஐந்தும்
சுத்த தத்துவம் சிவன்தன்
சுதந்திர வடிவம் ஆகும்;
நித்தம் என்று உரைப்பர் காலம்
நீங்கிய நிலைமை யாலே
வைத்திலர் முற்பிற் பாடு
வருவித்தார் கருமத் தாலே. 86

தெளிவுரை:

சுத்தமாயா காரியம் ஆகிய சுத்தவித்தை ஈசுவரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் சுத்த தத்துவங்கள் ஐந்தும், இறைவனுடைய ஞானக் கிரியா வியாபாரங்களுக்கு இடமாய் இருப்பது; மேலும் அவ் வியாபாரங்களால், மேலே சொன்ன சுத்த வித்தை முதலியன, இறைவன் பெயரே பெயராக, இறைவனுக்குச் சுதந்திரம் ஆகிய வடிவமும் ஆகும்.

முன் பின்னாக நிகழும் ஞானசத்தி கிரியா சத்திகளின் வியாபார பேதம் பற்றி, இந்தச் சிவதத்துவங்களுக்கு ஒன்றின் பின் ஒன்றாக முற்பாடு பிற்பாடு கூறினாரே அன்றி, அவற்றின் தோற்றம் பற்றிய காலம் குறித்து அவ்வாறு கூறவில்லை என்பது கருத்தில் இருத்திக் கொள்ளத் தக்கது. அதற்குக் காரணம் வருமாறு:

சுத்த மாயையில் இந்த ஐந்து தத்துவங்களும் தோன்றிய பின்னரே கால தத்துவம் தோன்றியது. எனவே, இந்த ஐந்து தத்துவங் களின் தோற்றத்திற்குக் கால தத்துவம் ஏது ஆகாது, ஆதலினாலேயே காலம் பற்றி முற்பாடு பிற்பாடு கூறிற்றிலர். கால வரையறை கடந்து நிற்பதால், அது பற்றி இந்தச் சிவ தத்துவம் ஐந்தும், சிவ பெருமானுக்கு நிலைத்த வடிவம் என்று உரைப்பர். ''சுதந்திர வடிவம்'' என்பது என்றும் நிலைத்த வடிவத்தைக் குறிக்கும்.

இதிலிருந்து, சிவ தத்துவம் இறைவனுடைய வியாபாரத்திற்கு இடம் ஆவதோடு மட்டுமின்றி, இறைவனுக்கு வடிவமும் ஆகும் என்பது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புலப்படும். இஃது உயிர்க்கு உடம்பு இடம் ஆவதையும் வடிவம் ஆவதையும், போன்றது ஆகும். ''வடிவம்'' என்பது இந்த இடத்தில், அதிட்டானம் ஆகிய வாயிலைக் குறிக்கும்.

உயிர்க்கு வடிவம் உணர்வே ஆகும்; ஆயினும் வாயில் ஆகிய உடம்பும் வடிவம் என்று உபசரித்துக் கூறப்படும். அதுபோல், இறைவனுக்கு வடிவம் சித்தே ஆகும்; ஆயினும், சிவதத்துவமும் வடிவம் என்று உபசரித்துக் கூறப்படும்.

என்றாலும், உயிருக்கு உடம்புமாறி மாறி வருவது போல், இறைவனுக்குச் சிவதத்துவம் வருவது இல்லை. எனவேதான், சிவ தத்துவம் என்றும் அதிட்டானம் ஆகும் என்னும் கருத்து தோன்ற ''நித்தம்'' என்கிறார். அதிட்டானம் என்பது வாயில் ஆகும் என்பதற்கான விளக்கத்தை, இந்நூலின் 78–ஆவது செய்யுளில் காணலாம். அந்தச் செய்யுளில் ''அதிட்டித்துக் கொண்டே'' என்று வரும் தொடரால் அறியலாம்.

சிவபெருமானுக்கு எங்கும் இடமாக இருக்கையில், சிவ தத்துவத்தை இடம் என்று வேறாக எடுத்துக் கூறியதன் நோக்கம் என்ன என்றால், எல்லா இடத்திலும் தான் வெளிப்படாது மறைந்து நிற்றல் பற்றியும், சிவ தத்துவத்தில் வெளிப்பட்டு நிற்றல் பற்றியுமே யாகும். மேலும் சிவதத்துவம் ஏனைய தேவர்களுக்கு இடம் ஆகாமையின், சுதந்திரம் எனப்பட்டது.

காலதத்தவம் தோன்றுவதற்கு முன்பு காலம் இல்லை; காலம் இல்லாத நிலையிலும், இந்த் தத்துவங்கள் முற்பட்டும் பிற்பட்டும் நிற்பதாகக் கூறியதற்குக் காரணம், காலத்தின் இடத்தில் சிவசத்தியே வேறாக அவ்வாறு நின்று வியாபரிப்பதாலேயே ஆகும். பாடு – தோன்றுதல் – உண்டாதல். முற்பிற்பாடு – முன்பின்னாகத் தோன்றும் முறைமை.

சொரூப சிவம் விகாரி ஆகான் என்கின்றது

ஒருவனே இராவ ணாதி
　　　பாவகம் உற்றால் போலத்
தருவன் இவ்வுருவம் எல்லாம்
　　　தன்மையும் திரியான் ஆகும்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வரும்வடிவு எல்லாம் சத்தி
சத்திதான் மரமும் காழ்ப்பும்
இருமையும் போல மன்னிச்
சிவத்தினோடு இயைந்து நிற்கும். 87

தெளிவுரை:

ஒருவன், நாடகத்திற்கு உரிய இராவணன் முதலிய பல வேடம் கட்டி நடிக்கிறான்; ஆயினும் தன் தன்மையில் சிறிதும் மாறுபட மாட்டான். அவனைப் போலவே இறைவனும் ஐந்தொழிற்கு உரியவனாய், மேற்கூறிப் போந்த சுத்த வித்தை முதலிய வேறு வடிவு எல்லாம், எய்தினான் ஆயினும், பொருந்திய அந்த வடிவு வேறுபாடு எல்லாம் சத்தியும் தானும் மரமும் வயிரமும் போல, நிலைபெற்றுப் பிரிப்பு இன்றி நிற்கும் தனது சத்தியில் காணப்படுவனவே ஆகும். ஆகவே, அந்த வடிவங்களின்வேறுபாடு காரணமாகத், தன்மை வேறுபட்டு விகாரியானவன் அல்லன்.

மரம் சத்தி வடிவத்திற்கு உவமை; காழ்ப்பு சிவத்திற்கு உவமை. காழ்ப்பு – வைரம். இருமை – இரண்டு.

சத்தியில் காணப்படுதல் தனக்கு ஆமாறு கூறுகின்றது

பொன்மை நீலாதி வன்னம்
பொருந்திடப் பளிங்கு அவற்றின்
தன்மையாய் நிற்குமாப் போல்
சத்திதன் பேதம் எல்லாம்
நின்மலன் தானாத் தோன்றி
நிலைமை ஒன்று ஆயே நிற்பன்
முன்அருள் சத்தி தன்பால்
முகிழ்க்கும் தான் முளையான் அன்றே. 88

தெளிவுரை:

இறைவன் எல்லா இடத்தும் கருதப்படுகின்ற அருட்சத்தியின் இடமாகவே தோன்றுவான் அன்றி, தானாகத் தனித்துத் தோன்ற மாட்டான். இஃது எதுபோல எனின், பொன்னின் தன்மையையும் நீலம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முதலிய பொருள்களின் தன்மைகளையும், பளிங்கினது நிறமே பற்றவும், அந்தப் பளிங்கும் அந்தப் பொருள்களின் தன்மை அனைத்து மாய்த் தோன்றி வேற்றுமை இன்றி நிற்கும். அதுபோல இறைவனும் தன் சத்தியில் காணப்படும் வடிவபேதம் எல்லாம் தானாகத் தோன்றி, வேற்றுமை இன்றியே நிற்பன்.

பளிங்கு சிவத்திற்கு உவமை; பொன்மை நீலம் முதலியன, ஞானசத்தி கிரியாசத்தி முதலியவற்றிற்கு உவமை. அந்தந்த சத்தி களைப் பொருந்தி அந்த சத்திகளின் பேதம் தானாகத் தோன்றி நின்றாலும், சிவபெருமான் தனது தன்மையில் வேற்றுமை இன்றியே நிற்பன். பளிங்கிற்குள்ள இயற்கையான நிறத்திலே, பொன்மை நீலம் முதலிய நிறங்கள் தோன்றுவன அன்றிப் பளிங்கிலே அவை தோன்ற மாட்டா. அதுபோல இறைவனது சுயம்பான அருட்சத்தியின் இடத்திலே, ஞானசத்தி கிரியாசத்தியின் வேறுபாடுகள் எல்லாம் தோன்றுவன அன்றி, இறைவனிடத்திலே அவை தோன்ற மாட்டா.

இறைவனுக்குரிய பொது இலக்கணத்தைத் தொகுத்துக் கூறுகின்றது.

சத்தியும் சிவமும் ஆய
தன்மை இவ்வுலகம் எல்லாம்
ஒத்து ஒவ்வா ஆணும் பெண்ணும்
உணர் குணம் குணியும் ஆகி
வைத்தனன் அவளால் வந்த
ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்
இத்தையும் அறியார் பீட
இலிங்கத்தின் இயல்பும் ஓரார். 89

தெளிவுரை:

இறைவன் இவ்வாறு சத்தியும் சிவமும் என, தன்னுள்ளே இருவேறு வகைப்பட்ட தன்மைகள் உடையனாய் இருப்பதால்தான் தன் வியாபகத்து உட்பட்ட பல்வேறு வகைப்பட்ட உயிர் இனங்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அனைத்தும், மானுடர் மிருகம் முதலிய அந்தந்த பிறப்பிற்கு இயைய வடிவங்கள் ஒத்தும், அந்தந்த வடிவத்துள்ளும் குறியும் குணங்களும் ஒவ்வாது, இருவேறு வகைப்பட்ட ஆணும், பெண்ணும் ஆகிய குறிகளையும் ஆண்மையும் அமைதியும் (பெண்மை) ஆகிய குணங் களையும் உடையனவாய் ஒத்து, தம்முள் கூடிக் க்ளித்து வாழும்படி செய்தனன்.

ஆதலால், இப்படியே தனு கரண புவன போகமாக்க் கூறிப் போந்த வாழ்வுகள் எல்லாம், சிவமும் சத்தியும் மணந்ததனால் ஆகிய வாழ்வு என்பது புலப்படும். இவ்வாறு எல்லா வடிவங்களும் ஆண்தன்மையும் பெண் தன்மையும் ;ஆகும்படி சிவமும் சத்தியும் நின்ற முறைமையும் உணரார். சத்தியும் சிவமும் ஆக இறைவன், இருவேறு வகைப்பட நிற்பன் என்பதை, பீடமும் இலிங்கமுமாக அமைந்து இருத்தலே, பிரத்தியட்சமான சான்று ஆகவும், அதனையும் உணரார். பீடம் என்பது ஆவுடையாளைக் குறிக்கும். அதுவே சத்தி. இலிங்கம் – சிவம்.

லிங் – லயம் – ஒடுக்கம்; கம் – தோற்றம். அஃதாவது உலகம் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் காரணமாய் இருப்பது ஆகும். இலிங்கம் – ஞானசத்தி வடிவம்; பீடம் – கிரியா சத்தி வடிவம், இலிங்கம் – நாதரூபம்; பீடம் – விந்து ரூபம், விந்து சத்தி பீடரூபமாய் நின்று எங்கும் வியாபித்து நிற்கும்; ஞானசத்தி இலிங்க ரூபாமாய் நின்று அந்த விந்து சத்தியைக் காரியப்படுத்தும், ஞானசத்தி விந்து சத்தியைக் காரியப்படுத்தும் இயல்பே, பீடலிங்கரூபம் ஆகும்.

இறைவனது சிறப்பு இலக்கணத்தைத் தொகுத்துக் கூறுகிறது:

சிவன் அருஉருவம் அல்லன்:
சித்தினோடு அசித்தும் அல்லன்;
பவம்முதல் தொழில்கள் ஒன்றும்
பண்ணிடு வானும் அல்லன்:
தவம் முதல் யோக போகம்
தரிப்பவன் அல்லன்; தானே
இவைபெற இயைந்தும் ஒன்றும்
இயைந்திடா இயல்பி னானே. 90

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சிவபெருமான் அருவும் அருவுருவும் உருவும் அல்லாதவன்; சித்தாகிய சத்தி வடிவமும் அசித்து ஆகிய அத்துவா வடிவும் மந்திர வடிவங்களும் அல்லாதவன்; படைத்தல் முதலிய ஐந்தொழிலில் ஒன்றும் செய்பவனும் அல்லாதவன்; தவம் முதலியவற்றிற்கு உரிய யோக வடிவம், போக வடிவம் கொள்வானும் அல்லாதவன்; ஆகவே, இறைவன் தடத்த இலக்கணம் ஆகிய இவற்றைப் பொருந்தி நின்றான் ஆயினும், அவற்றைச் சிறிதும் பொருந்தாத சொரூப இலக்கணத்தை உடையவன்.

மேற் குறிப்பிட்ட நான்கு தடத்த இலக்கணங்களையும் கீழ்காணும் செய்யுள்களில் காணலாம்.

செய்யுள்		*இலக்கணம்*
58	–	சிவன் அருவுருவும் அல்லன்
61,76,77,78,79	–	சித்தினோடு அசித்தும் அல்லன்
80	–	பவம் முதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடுவானும் அல்லன்.
70	–	தவம் முதல் யோக போகம் தரிப்பவனல்லன்

இறைவனது சொரூப இலக்கணம் இந்தச் சூத்திரத்தில் பொதுவாகக் கூறப்பட்டுள்ளது இந்தச் சொரூப இலக்கணத்தை ஆறாம் சூத்திரத்தில் சிறப்பாகக் காணலாம்.

முதல் சூத்திரம் முடிந்தது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இரண்டாம் சூத்திரம்

தோற்றுவாய்:

முதல் சூத்திரத்தில், ''ஈறும் ஆகி மருவிடும்'' என்றதனாலே, ''எவ்வாறு நின்று மருவிப்பன்? மருவித்தற்கு உரிய பிரபஞ்சத்தை எதனில் நின்றும் தோற்றுவிப்பன்?'' என்னும் ஐயங்கள் நிகழும் அல்லவா? அந்நிகழ்ச்சி பற்றி இரண்டாம் சூத்திரம் எழுந்தது.

குடம் ஆகிய காரியத்தைக் கொண்டு செய்பவன் ஆகிய குயவன் உண்டு என்று கொள்வது மட்டும் அன்றி, முதல் காரணம் ஆகிய மண்ணும், துணைக்காரணம் ஆகிய திகிரியும் உண்டு என்று அறியப் படும். படவே, அதுபோல பிரபஞ்சம் ஆகிய காரியத்தைக் கொண்டு செய் பவன் ஆகிய கருத்தா உண்டு என்பது, முதல் சூத்திரத்தில் விளக்கப் பட்டது; பிரபஞ்சத்திற்கு முதற் காரணம் ஆகிய மாயையும், சிற்சத்தி வழித்தாய துணைக் காரணம் ஆகிய கன்மமும் உண்டு என்பதை நிலை நாட்டுகின்ற அனுமானப் பிரமாணம் இந்தச் சூத்திரத்தால் கூறப்படுகிறது. அனுமானப் பிரமாணம் காரிய ஏது எனவும் படும். மாயையும் கன்மமும் பாசம் ஆகலின் இவற்றை நிலைநாட்டுவதால், இந்தச் சூத்திரம் பாச உண்மை கூறுவதாயிற்று.

முதற்கண் இறைவன் உயிர்களோடு அத்துவிதமாய் நின்று உயிர் களின் கன்மத்திற்கு ஏற்ப, மாயையின் நின்றும்,பிரபஞ்சத்தைத் தோற்று விக்கிறான் என்று இரண்டாம் சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறு கின்றார்.

இறைவன் உயிர்களோடும் பாசங்களோடும் அத்துவிதமாய்க் கலந்து அவற்றை நடத்தும் முறைமை கூறுகின்றது

உலகுஎலாம் ஆகி வேறாய்
உடனும் ஆய் ஒளியாய் ஓங்கி
அலகுஇலா உயிர்கள் கன்மத்து
ஆணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய், இவற்றின் தன்மை
தனக்கு எய்தல் இன்றித் தானே
நிலவுசீர் அமலன் ஆகி
நின்றனன் நீங்காது எங்கும். 91

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சிவபெருமான் புதிதாகப் பிரபஞ்சத்தைத் தோன்றச் செய்யும் பொழுது, உயிர்களிடத்தே கலப்பினால் உடலும் உயிரும் போல் ஒன்றாய் நிற்பன்; பொருளின் தன்மையால் கண்ணும் சூரியனும் போல் அவ்வு யிர்களின் வேறுமாய் நிற்பன்; உயிர்க்கு உயிர் ஆதல் தன்மையால் கண் ஒளியும் ஆன்ம போதமும் போல அவ்வுயிர்களோடு உடனுமாய் நிற்பன்.

அந்நிலையில் அவ்வுயிர்களின் இடமாக மேலாய் நிற்பது ஆகிய சத்தி வடிவாயும். அந்தச் சத்தியினால் கூட்டுவிக்கின்ற இருவினை களுக்கு ஏற்ப எண்ணிறந்த அந்த உயிர்கள் ஐந்தொழிற்பட்டுச் செல்லும் பொழுது, அந்த ஐந்தொழிலை நடாத்துவது ஆகிய பதி ரூபமாயும் நிற்பன். சத்தி வடிவம் பதிரூபம் ஆகிய அத்தன்மைகளில் வேறாயும், அத்தன்மைகளோடு பிரிப்பின்றியும், எவ்விடத்தும் தானே சுயம்பிரகாச ரூபமாம் இயல்பு உடையவனாய் நிற்பன்.

எனவே, சுயம்பிரகாசமாய் நிற்கும் தன்மையில் ''சிவம்'' எனப் படுவன்; உயிர்களின் வழி நிற்கும் தன்மையில் ''சத்தி'' எனப்படுவன்; ஐந்தொழில் செய்யும் தன்மையில்''பதி'' எனப்படுவன். இறைவன் ஒருவனே இவ்வாறு பல பெயர் பெற்று நிற்கிறான் என்பது அறியத் தக்கது.

இந்தச் செய்யுள், முதல் நூலாகிய சிவஞான போதம், இரண்டாம் சூத்திரம் போல, நான்கு கூறுகளை உடையது; அவற்றுள்,

முதற்கூறு ''உலகெலாமாகி வேறாய் உடனுமாய்''

இரண்டாம் கூறு ''அலகிலா உயிர்கள் கன்மத்து ஆணையின்''

மூன்றாம் கூறு ''அமர்ந்து செல்லத் தலைவனாய்''

நான்காம் கூறு ''இவற்றின் தன்மை தனக்கு எய்தல் இன்றித்
தானே நிலவு சீர் அமலனாகி ஒளியாய் ஓங்கி
நின்றனன், நீங்காது எங்கும்''

''நீங்காது எங்கும்'' என்பது எங்கும் நீங்காது அத்துவிதமாய்க் கலந்து நிற்கும். ஔபச்சிலேடிக வியாபகத்தைக் குறிக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஔபச்சிலேடிகம் என்பது ஒரு பொருளில் முழுவதும் வியாபகமாய் அல்லது ஒன்றுபட்டு இருத்தல் ஆகும். இதற்கு உவமையாகப் பாலில் நெய், பழத்தில் மதுரம், எள்ளில் எண்ணெய் முதலானவற்றைக் கூறலாம்.

இரண்டாம் சூத்திரம் – முதல் அதிகரணம்

பல உயிர்களோடும், ஒருவன் என்னும் ஒருவன் ஆகிய இறைவன் கலந்து உடனாய் நிற்பதற்கு உவமை கூறுகின்றது

ஒன்று என மறைகள் எல்லாம்
உரைத்திட உயிர்கள் ஒன்றி
நின்றனன் என்று பன்மை
நிகழ்த்துவது என்னை என்னில்
அன்று அவை பதிதான் ஒன்று என்று
அறையும் அக்கரங்கள் தோறும்
சென்றிடும் அகரம் போல
நின்றனன் சிவனும் சேர்ந்தே. 92

தெளிவுரை:

வேதங்களில் எல்லாம் ஆன்மா ஒன்று என்று உரைக்கப் பட்டுள்ளது. அப்படி இருக்கும் போது இறைவன், உயிர்களோடு கலந்து உடனாய் நிற்பன் என்றும், இங்கு உயிர் பல என்றும் கூறுவது எவ்வாறு பொருந்தும் என்னும் தடை எழும். அதற்கு விடை வருமாறு:

வேதங்களில் ஆன்மா ஒன்று என்றது சீவான்மாவை அன்று; அந்தச் சீவனுக்குப் பதி ஆகிய பரமான்மா ஒன்றே என்பதாகும். ஆதலால் முரண்பாடு இல்லை. சீவான்மாக்கள் பல ஆகவும், பரமான்மா ஆகிய இறைவன் ஒன்று ஆகவும் இருப்பதால், மேலைச் செய்யுளில் உயிர்களின் இறைவன் வேறு என்றதும் பொருந்தும்.

வேறாகவும் ஒருவனாகவும் நிற்கும் இறைவன், பல உயிர்களுடன் கலந்து நின்றனன் என்பது எவ்வாறு பொருந்தும் என்றால் ஒன்று ஆகிய அகர அக்கரமானது (அக்கரம் – அட்சரம் – எழுத்து) அதனின்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேறாகிய பல அக்கரங்களோடும் கலந்து நிற்பது போல, இறைவனும் உயிர்களோடு கலந்து நிற்றல் கூடும். அவ்வாறு கலந்து நிற்பதால், மேலைச் செய்யுளில் உடனுமாய் என்றதும் அமைவு உடைத்து ஆகும்.

''அகரம்'' என்பதுஅக்கரங்களுள் முதலாவதாய் நிற்கும் எழுத்து என்பார் ஒருசாரார். அஃது ஏனை எழுத்துக்களோடு கலந்து நிற்றல் பெறப்படாமையின், அவர் கருத்துப் பொருந்தாது.

இனி அங்காத்தல், எல்லா அக்கரங்களோடும் பொருந்துவதால் அந்த அங்காத்தலே ''அகரம்'' என்பர் மற்றொரு சாரார். (அங்காத்தல் – வாய்திறத்தல், அக்கரம் – எழுத்து) அங்காப்பு இன்றியே, மௌனமாய் இருந்து ஒருவன் ஒரு பொருளைச் சிந்திக்கும் பொழுது அப்பொரு ளுக்கு உரிய சொல்லும் எழுத்தும் அகத்தில் தோன்றுவதும் வாக்கு ஆகும். ஆகவே அவ்வாறு தோன்றும் எழுத்துடன் அங்காத்தல் பொருந் தாமையால், அவர் கருத்தும் பொருந்தாது.

இவ்வாறாகவே ''அகரம்'' என்பதுதான் யாதோ எனின், அகத்தின்கண் எப்பொழுதும் இயங்கிக் கொண்டு இருக்கும் நாதம் ஆகிய ஒலியே அகரம் ஆகும். அந்த ஒலி அகரம் போல் ஒலிப்பதால் அகரம் எனப்பட்டது; அந்த ஒலி பல வேறு வகைப்பட்ட அக்கரங்கள் ஆகிய ஒலிகளுக்கு எல்லாம், முதலாயும் அவ்வொலிகளோடு கலந்தும் நிற்பதால், அகரம் போல் என உவமை கூறப்பட்டது. இதனையே ஆசிரியர் திருவள்ளுவரும் ''அகர முதல எழுத்தெல்லாம்'' என்றார். உரை ஆசிரியர் பரிமேலழகரும், ''நாத மாத்திரை ஆகிய இயல்பால் பிறத்தல்'' என்று அகரத்திற்கு இலக்கணம் கூறினார்.

இறைவன் உயிர்களோடு கலந்து உடனாய் நிற்பினும், வேறு ஆவன் என உவமை முகத்தால் கூறுகின்றது

உருவொடு கருவி எல்லாம்
உயிர்கொடு நின்று வேறாய்
வருவது போல ஈசன்
உயிர்களின் மருவி வாழ்வன்;
தரும் உயிர் அவ்வனை ஆகா;
உயிர் அவை தானும் ஆகான்;
வருபவன் இவைதான் ஆயும்
வேறும்ஆய் மன்னி நின்றே. 93

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

உயிர், நரம்பு முதலியவற்றால் கட்டப்படும் உடம்பையும், செவி, கண் முதலிய கருவிகளையும் பற்றிக் கொண்டு, உடம்போடு உடனாய் நிற்கும். நிற்கும்பொழுது, உடம்பிற்கு இட்ட பெயரால் பிறன் அழைக்கும் போது, உயிர் என்னை? என்று கேட்கும். அப்படிக் கேட்டாலும், உயிர் உயிரே; உடம்பு உடம்பே; உயிர் உடம்பு ஆக மாட்டாது; உடம்பு உயிராக மாட்டாது.

என்றாலும், உயிர் அவ்வுடம்பின் வேறாகியும், அவ்வுடம் பாகியும் நிற்றல் முறையே, என் செவி கேட்டது என்பதனாலும், நான் கேட்டேன் என்பதனாலும் காணப்படும். அது போல, இறைவன் உயிர்களோடு வேறுபடாமல் கலந்து நிற்பன்; ஆயினும், இறைவன் இறைவனே; உயிர் உயிரே. இறைவன் உயிர் ஆகமாட்டான்; உயிர் முதல்வன் ஆகமாட்டாது, அவ்வாறாயினும், இறைவன் அறிவிப்பதால், உயிரின் வேறாகியும் உடன் நின்று உயிர்களைச் செலுத்துகிறான். எனவே இறைவன் உயிர்களின் எல்லாம் ஆகியும் நிற்பன்.

உயிர் உடம்போடு ஒற்றித்து நின்று உடலை இயக்கினால் அன்றி, உடம்பு இயங்க மாட்டாது; அதுபோல இறைவன் உயிரோடு ஒற்றித்து நின்று உயிரை இயக்கினால் அன்றி, உயிர் இயங்காது. இவ்வாறு இறைவன் உயிரோடு என்றும் உடனாய் நிற்கிறான். உடம்பு வேறு உயிர் வேறு ஆயினாற் போல, உயிர்வேறு இறைவன் வேறு ஆகும். இஃது இறைவன் உயிரின் வேறாய் நிற்றலுக்கு உவமை ஆகும். உடம்புக்கு இட்ட பெயரைத் தனக்கு இட்டதாக எண்ணி உயிர், உடம்போடு ஒன்றாய் நிற்றல் போல, இறைவன் உயிரோடு ஒன்றாய் நிற்கிறான். இவ்வாறு உடம்பையும் உயிரையும் உவமை வைத்தே அருணந்திசிவம், இறைவன் உயிரோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்றலை, இந்தச் செய்யுளில் தெளிவுறுத்துகிறார். சிவப்பிரகாசம் இந்த உண்மையினை வேறு விதமாக விளக்குகிறது. (அதனை சிவப்பிரகாசம் 7–ஆம் செய்யுளில் காணலாம்).

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இரண்டாம் சூத்திரம்
இரண்டாம் அதிகரணம்

இறைவன் வினைப்பயன் ஆகிய இன்ப துன்பங்களை உயிர்கட்கு ஊட்டுதல் பொருட்டு, ''கன்மத்து ஆணையின் நிற்றல்.'' என்பதைத் தொகுத்துக் கூறுகின்றது.

இருவினை இன்பத் துன்பத்து
இவ்உயிர் பிறந்து இறந்து
வருவது போவதாகும்;
மன்னிய வினைப் பயன்கள்
தரும் அரன் தரணியோடு
தராபதி போலத் தாமே
மருவிடா வடிவும் கன்ம
பயன்களும் மறுமைக் கண்ணே. 94

தெளிவுரை:

உயிர்க்கு முன் பிறவியில் செய்யப்பட்டுக் கிடந்த இருவினை யின் பயனாக, இப்பிறவியில் இன்ப துன்ப அனுபவம் உண்டாகும். அந்த அனுபவத்தால் மேலும் வினை ஏறும். அதனால், மீண்டும் மீண்டும் பிறந்து இறத்தலும், சுவர்க்க நரகங்களில் சென்று மீளுதலும் கூடும். உடம்பும் வினைப்பயனும் அறிவில்லாத சடம். ஆதலால், உடம்பு வினைப்பயுனை எடுத்துக் கொள்ளாது; வினைப்பயன் உடம்பைப் பொருந்த முடியாது. ஆகவே, உடம்பையும் அந்த உடம்பிற்கு உரிய வினைப்பயன்களையும் இறைவனே தனது சத்தியால் (ஆற்றலால் – அருளைக் கொண்டு) உயிருக்கு ஊட்டுவான்.

இவ்வுண்மையை, வைத்தியன் நோயாளிக்கு மருந்துகொடுத்து நோயைத் தீர்ப்பது போலவும், அரசன் குடிமக்களில் கொடியவரைத் தண்டித்துத் திருத்துவது போலவும், என்னும் உவமையில் வைத்துச் செய்யுள் 120 முதல் 125 வரை விளக்குகிறார்.

தரணி – மருத்துவன்; தரணம் – கடத்துதல். தரணி, நோயைக் கடப்பிப்பதால், மருத்துவனைக் குறித்தது. தராபதி – அரசன். தரை – பூமி; பதி – தலைவன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இன்ப துன்பங்கள் வினையின் பயன் என்பதைக் கூறுகின்றது

இருவினை என்னை இன்பத்
துன்பங்கள் இயல்பு அது என்னில்
ஒருதன்மை இயல்புக்கு உள்ளது
ஒருவனுக்கு இரண்டு செய்தி.
வருவது என்? மலரும் தீயும்
மருவலின் வாசம் வெம்மை
தருவது என்? நீர் என் செய்து
தான் இயல்பு ஆகும் அன்றே. 95

தெளிவுரை:

இருவினை என்பது இல்லை. இன்ப துன்பங்கள் எல்லாம் இயல்பே ஆகும் என்று உலகாயதர் கூறுவர். இயல்பு என்பது எப்பொழுதும் ஒரு தன்மையாய் இருப்பது அன்றி, ஒரு பொருளில், தம்முள் மாறுபட்ட இன்ப துன்பங்கள் ஆகிய, இரண்டு தன்மை இருக்கும் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? அந்த இன்ப துன்பம் காரணத்தால் அன்றிப் பொருந்த மாட்டா; அக்காரணம் இருவினையே ஆகும்.

தண்ணீரில் பூவும் நெருப்பும் பொருந்துவதால், மணமும் சூடும் முறையே உண்டாகின்றன. அவ்வாறின்றி, தண்ணீரில் மணமும் சூடும் இயல்பாகவே இல்லை. எனவே தண்ணீருக்கு மணமும் சூடும் இயல்பு என்று கூறுவது எந்தவிதத்திலும் பொருந்தாது.

பூ நல்வினைக்கு உவமை; நெருப்பு தீவினைக்கு உவமை. வாசம் இன்பத்துக்கு உவமை; செம்மை துன்பத்துக்கு உவமை.

இதுவும் அது

தன் இயல்பு ஒழியப் பூவும்
தழலும் வந்து அணைய நீரின்
மன்னியது இரண்டு செய்தி
வரும் இரு வினையி னாலும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உன்னிய இன்பத் துன்பம்
உறும் உயிர் உணர்வு இல்லாத
துன்னிய அசித்தை இன்பத்
துன்பங்கள் சூழ்ந்திடாவே; 96

தெளிவுரை:

எப்பொழுதும் ஒரு தன்மையான தட்பமாய் இருப்பதே தண்ணீருக்கு இயல்பு ஆகும். ஆகவேதான் நீர் தண்ணீர் எனப்படுகிறது. (தண்மை + நீர் = தண்ணீர்) வாசமும் வெப்பமும் தண்ணீருக்குச் செயற்கையால் ஏற்படுகின்றன. இவற்றைப் போலவே, எப்பொழுதும் ஒரு தன்மையான அறிவே உயிருக்கு இயல்பு ஆகும். அவ்வியல்பு உடைய உயிரே இன்ப துன்பங்களை அனுபவிக்கும். உயிருக்கு இன்ப துன்பங் அனுபவம், இருவினை ஆகிய செயற்கையால் உண்டாகும். அந்த அனுபவம் உடம்புக்கே என்று கூறினால், அது பொருந்தாது. ஏனெனில், உடம்பு சடம்; உடம்புக்கு அனுபவம் கூடாது; எனவே இன்ப துன்ப அனுபவம் உயிருக்கே அன்றி உடம்புக்கு இல்லை என்பது தெளிவாயிற்று.

இன்ப துன்பங்களுக்குக் காரணம் இருவினையே அன்றி முயற்சி அன்று என்று கூறுகின்றது

இம்மையின் முயற்சி யாலே,
இருநிதி ஈட்டி இன்பம்
இம்மையே நுகர்வர் செய்தி
இலாதவர் பொருளும் இன்றி
இம்மையே இடர் உழப்பர்
வேறு இரு வினையது உண்டேல்
இம்மையின் முயற்சி இன்றி
எய்திட வேண்டும் இங்கே. 97

தெளிவுரை:

இன்பதுன்பங்களுக்குக் காரணம் முயற்சியே ஆகும்; வினை என்பது பொருந்தாது. ஏனென்றால், முயற்சியால் இந்த உலகத்தில் பெரும் பொருளைச் சேர்த்து, இன்பத்தையும் இந்தப் பிறப்பிலேயே அனுபவிக்கிறார்கள். முயற்சி இல்லாதவர் பொருளைத் தேடாததோடு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மட்டும் இன்றி, இந்தப் பிறப்பில் துன்பத்தையும் அடைகிறார்கள். இந்த அனுபவத்தைக் கொண்டு, முயற்சியே இன்ப துன்பத்திற்குக் காரணம் என்று நடைமுறையிலேயே அறியப்படுகிறது; எனவே இருவினை என்பது ஒன்று உண்டு என்று வேறும் ஒரு காரணம் கொண்டால், அந்த வினை இந்தப் பிறப்பிலேயே யாதொரு முயற்சியும் இல்லாமலே, இங்குப் பொருள் கைகூடும்படி செய்ய வேண்டும். இவ்வாறு இல்லாத தால் முயற்சியைவிட, வினை என்னும் வேறு காரணம் கொள்வது குற்றம் ஆகாதோ என்றால், ஆகாது.

(இதற்கான விளக்கத்தை அடுத்த செய்யுளில் காணலாம்)

இதுவும் அது

இருவினைச் செயல்காண் இம்மை
இரும்பொருள் இன்பம் வேண்டி
வருவினை செய்யும் காலை
மடிவரும்; மடியும் இன்றித்
தருவினை அதனில் அத்தம்
தான்அறும் துயரும் தங்கும்
ஒருவினை செய்யா தோரும்
உடையர் இவ் உலகத்து உள்ளே. 98

தெளிவுரை:

இந்தப் பிறவியில் பெரும் பொருள் இன்பங்கள் கருதி, வருகின்ற முயற்சியைச் செய்யும்பொழுது, அந்த முயற்சி முற்றுப் பெறாமல் தளர்வு உண்டாகும்; ஆகவே தளர்வு இன்றிப் பொருந்திய முயற்சியில் பயன் இன்றிப் போகும். எனவே முயற்சியான் துன்பம் எய்துவதனாலும், இவ்வுலகில் யாதொரு முயற்சி செய்யாதவரும் செல்வராய்த் தங்குவதனாலும், அந்த முயற்சி பிறழ்வது காணப் படுகிறது. எனவே, இவ்வாறு முயற்சி பிறழ்வதற்கு உரிய காரணம் வேறு உண்டு என்பது பெறப்படும். படவே, அந்தக் காரணமே இருவினை என்று அறியப்படும்.

எனவே, இவ்வுலகில் அனுபவிக்கப்படும் இன்ப துன்பங் களுக்குக் காரணம் முயற்சி அன்று என்பதும் இருவினை என்பதும் பெறப்படும்.

8

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முயற்சியின் பயன் மேல்வினையும், முன்வினைப் பயனை அனுபவிக்கச் செய்கின்ற துணையும் என இருதிறப்படும் எனக் கூறுகின்றது

பேறு இழவு இன்ப மோடு
பிணி மூப்புச் சாக்காடு என்னும்
ஆறும் முன்கருவுட் பட்டது;
அவ்விதி அனுபவத் தால்
ஏறிடும்; முன்பு செய்த
கன்மம் இங்கு இவற்றிற்கு ஏது;
தேறு நீ; இனிச்செய் கன்மம்
மேல் உடல் சேரும் என்றே. 99

தெளிவுரை:

எடுத்த உடம்பில் வரக்கடவன ஆகிய செல்வம், வறுமை, உயர்வு, இழிவு, இன்பம், துன்பம் என்னும் ஆறும் உடம்பு எடுப்பதற்கு முன்பே, சூக்குமமாய் கருவினுள் அமைந்து கிடந்தன ஆகும். ஆனால் அவை அப்போது அப்போது உண்டாவன அல்ல முன் கருவுள் சூக்குமமாய்க் கிடந்த அவை, பின்னர் அனுபவிப்பதற்குத் துணை ஆகிய முயற்சியால் தூலமாய் வந்து கூடும்.

அவ்வாறு அனுபவிப்பதற்குத் துணையாக ஏற்பட்ட முயற்சி, அனுபவிக்கச் செய்தலோடு ஒழியாது. மற்றோர் உடம்பில் பொருந்துவதான அந்த ஆறுவகை இன்ப துன்பத்திற்கும் வித்தாய் நிலைபெறும். முற்பிறவியில் செய்த முயற்சி இப்பிறவியில் வரும் இந்த ஆறற்கும் ஏது ஆயினாற் போல், இந்தப் பிறவியில் செய்யும் முயற்சி, மேல் வினைக்கு வித்து ஆதலே அன்றி, இப்பொழுது பயன் தருவது இல்லை என்பதை நீ தெளிவாயாக.

''அனுபவத்தால் ஏறிடும்'' என்னும் தொடருக்கு விளக்கம் வருமாறு:

முற்பிறவியில் செய்த நல்வினை தீவினைகள், முயற்சியோடு கூடிய அனுபவத்தில் இந்தப் பிறப்பில் தூலமாய் வந்து பொருந்தும். முயற்சி என்பது உற்சாகம் அல்லது பிரயத்தினம் ஆகும். அது விருப்பு வெறுப்புக்களால் உண்டாகி, நல்வினை தீவினைகளாய் முற்றுப் பெறும். ''முயற்சியோடு கூடிய அனுபவம்'' என்பது, விருப்பு வெறுப்புக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

களால் உண்டாகும் நல்வினை தீவினைகளோடு கூடிய அனுபவம் ஆகும். போகம் தூலமாய் அனுபவத்திற்கு வரும்; அதற்கு முன்பு அந்த போகத்தில் ஆசை நிகழும். அந்த ஆசையே விருப்பு வெறுப்புகள் ஆகும்.

விருப்பு வெறுப்புக்கள் உண்டானபோது அவற்றை முற்றுவிப் பதற்காக முயற்சி மேற்கொள்ளப்படும். அந்த முயற்சிகள் நல்வினை தீவினைகளாய் முடிவு பெறும். இந்த நல்வினை தீவினைகளே ஆகாமிய வினை (வருவினை) எனப்படும். இவ்வாறு ஒவ்வொரு போகத்தையும் அனுபவிக்கும்பொழுது, விருப்பு வெறுப்புக்கள் காரணமாக நல்வினை தீவினைகள் உடன் நிகழ்ச்சியாக இருக்கும். எனவே, இன்ப துன்ப அனுபவத்திற்கு நல்வினை தீவினை காரணம் ஆகுமே அன்றி, முயற்சி காரணம் ஆகாது.

பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என்னும் ஆறற்கும் கீழ்க்காணுமாறு பொருள் கூறுவாரும் உளர்.

பேறு –	பெறத்தக்க இன்பங்கள் அனைத்தும்;
இழவு –	இழக்கத்தக்க நன்மைகள் அனைத்தும்.
இன்பம்–	நுகரத்தக்க இன்பங்கள் அனைத்தும்;
பிணி –	பிணிக்கப்பட்ட (கட்டுப்பட்ட) சூழ்நிலை;
மூப்பு –	வாழவேண்டிய ஆயுட்காலம்;
சாக்காடு–	இன்ன முறையில் சாகவேண்டும் என்பது.

முயற்சியால் வினையும் வினையால் முயற்சியும் வித்தும் மரமும் போல் ஆகும் என்று கூறுகின்றது

உடல்செயல் கன்மம் இந்த
உடல்வந்த வாறு ஏது என்னில்,
விடப்படும் முன் உடம்பின்
வினை இந்த உடல் விளைக்கும்
தொடர்ச்சியால் ஒன்றுக்கு ஒன்று
தொன்றுதொட்டு அநாதி; வித்தின்
இடத்தின் மரம்; மரத்தின்
வித்தும் வந்து இயையுமா போல். 100

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

உடலைக் கொண்டு செய்யும் முயற்சியால் வினை உண்டாகும்; அவ்வாறாயின் இந்த உடல் உண்டாவதற்குக் காரணம் யாது என்றால், முன் பிறவியில் நாம் இறந்தபோது, விடப்பட்ட முன் உடம்பினால் செய்யப்பட்ட வினை ஆகும். அந்த வினையே இந்த உடம்பை உண்டு பண்ணும்.

இவ்வாறு உடம்பால் வினையும், வினையால் உடம்பும் வருவது, வித்தில் மரமும் மரத்தில் வித்தும் வந்து பொருந்துவது போல் ஆகும். வினை, உடம்பு என்னும் இவ்விரண்டும் ஒன்றுக்கு ஒன்று காரண காரியமாய், தொன்று தொட்டு ஒன்றன்பின் ஒன்றாக வருவதால், அவற்றிற்கு முற்பாடு பிற்பாடு கூற முடியாது.

இப்படி எது முதலில் உண்டாகி வரும் என்பது எளிதில் அறிய முடியாதபடி வருவதை பிரவாகாநாதி என்பர். (பிரவாகம் – நீர்ப்பெருக்கு; அநாதி – ஆதி அற்றது; முதல் இல்லாதது) ஆற்று நீர் ஓடும் போது ஒன்று போக, ஒன்றாய்ப் பெருக்கு வந்து கொண்டு இருக்கும், அதுபோல, உடம்பும் வினையும் ஒன்று போக, ஒன்றாய்த் தொன்று தொட்டு அநாதியாய் வந்து கொண்டு இருக்கும். ''அநாதி'' க்கும் ''பிரவாகா நாதி'' க்கும் வேற்றுமை வருமாறு:

தொடக்கமும் முடிவும் இன்றி என்றும் ஒரு தன்மையாய் இருப்பது அநாதி; தோன்றி அழிந்து தொடர்பாய் வருவது பிரவாகா நாதி ஆகும்.

வித்தும் மரமும் ஒன்றுக்கு ஒன்று காரண காரியமாய் இருப்பினும், இறைவன் இரண்டில் ஒன்றைத்தான் முதலாவதாக உற்பத்தி செய்திருக்க வேண்டும். அது மரமாகவே இருக்க வேண்டும். இக்கருத்துப் பற்றியே, ''விச்சதுஇன்றியே விளைவு செய்குவாய்'' என்று மணிவாசகப் பெருந்தகை அருளிச் செய்தார்கள். (விச்சு – வித்து).

இதுபோல, கேவல நிலையில் அறிவு தொழிற்பாடு இன்றிக் கிடந்த ஆன்மாவுக்கு, குருடனுக்குக் கோல் கொடுப்பது போல், இறைவன் சூக்கும தேகத்தைக் கருணையினால் கொடுப்பன். அந்தச் சூக்கும தேகத்தை இறைவன் தருவது, வினை காரணமாக அன்று; உயிர்கள் அறியாமை உட்பட்டு வருந்தும் காரணத்தால் தரப்பட்டது ஆகும். அந்தச் சூக்கும தேகம், முத்தி அடையும் வரை எத்துணைப் பிறவிகளை எடுத்தாலும், உயிருடன் ஒன்றாகவே இருந்து, முத்தி அடையின் நீங்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அந்தச் சூக்கும தேகம் எல்லா உயிர்க்கும் ஒரே தன்மையாகவே இருக்கும். இதனையே திருவள்ளுவர், ''பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்'' என்று அருளிச் செய்தார். ஆயினும் உயிரை முன் பொருந்தி நின்ற அறியாமை பல்வேறு வகைப்படும் ஆகலின், அவ்வறியாமைக்கு ஏற்பத் தூல உடம்பும், அந்த உடம்பால் வினையும் உயிர்கள் தோறும் மாறி மாறி வரும். ஆதலால் வினை உடல் என்னும் இரண்டிற்கும் மூலமாகிய சூக்கும தேகம் ஒன்று உண்டு என்பதால், வினைக்கும் உடலுக்கும் முற்பாடு பிற்பாடு கூற முடியாத குற்றத்திற்கு உட்படாமை தெளியலாயிற்று.

முயற்சி இன்றி வினைப்பயன் அனுபவிக்க முடியாது என்றும் முன் வினைப்பயனை அனுபவிப்பதற்கான அந்த முயற்சி மேல் வினைக்கு வித்து ஆகும் என்று கூறுகின்றது

முற்செயல் விதியை இந்த
முயற்சியோடு அனுபவித்தால்
இச்செயல் பலிக்குமாறு என்?
இதம் அகிதங்கள் முன்னர்
அச்செயல் ஆனால், இங்கும்
அவை செயில், மேலைக்கு ஆகும்;
பிற்செயாது அனுபவிப்பது
இன்று பின் தொடரும் செய்தி, 101

தெளிவுரை:

இதுவரை கூறியதிலிருந்து முற்பிறவியில் செய்த முயற்சி, இப்பிறவியில் வரும் செல்வம் முதலியவற்றை மேல் 99–ஆவது செய்யுளில் கூறிய ஆறற்கும் ஏது என்பதும், அந்தச் செல்வம் முதலியவற்றை இப்பிறவியில் முயற்சி ஆகிய துணையால்அனுபவித்தல் கூடும் என்பது பெறப்பட்டது. அவ்வாறு முன்வினைப் பயனுக்கு ஈடாக, இப் பொழுது வருகின்ற முயற்சி, மேல் உடல் எடுப்பதற்கு உரிய வினை ஆமாறு எப்படி என்றால், முன்வினை எனப்படும் நல்வினை தீவினைகள் ஆவன, முற்பிறவியில் அவ்வாறு நிகழும் முயற்சியே அன்றி வேறு இல்லை. எனவே, இப்பொழுதும் அந்த முயற்சி நிகழ்ந்தால், அது மேலைக்கு வினை ஆகும் என்பது தானே விளங்கும்.

அவ்வாறாயின் சில இடத்தில் முயற்சி இன்றி இருப்பவர்க்கு, மேல் வினை ஏறுமாறு இல்லை என்று கொள்ள வருமே என்றால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அனுபவம் ஆவது பின்னர் முயற்சியை ஒட்டியே நிகழும் ஆதலால், பிராரத்த வினையில் அனுபவம் உள்ள அளவே முயற்சியும் உறுதியாய் உண்டு என்பது பெறப்படும். ஆதலால், அனுபவம் உள்ள இடத்தில் மேல் வினை ஏறுமாறு இல்லை என்பது பொருந்தாது.

மேல் முயற்சி செய்யாதவரும் செல்வராய் இருப்பர் என்றதன் கருத்து, வருந்திச் செய்ய வேண்டாது எளிதில் பெறுவது நோக்கியே ஆகலின், அதனோடு முரணாகாமை புலப்படும்.

(இதம் – நல்வினை; அகிதம் – தீவினை)

முயற்சியானது செயல் வகையால் அனுபவமாயும், ''யான் செய்தேன்'' என்னும் கருத்து வகையால், மேல் வினைக்கு வித்தாயும் இரு திறப்படும் எனக் கூறுகின்றது

மேலைக்கு வித்தும் ஆகி
விளைந்தவை உணவும் ஆகி
ஞாலத்து வருமா போல
நாம் செய்யும் வினைகள் எல்லாம்
ஏலத்தான் பலமாச் செய்யும்
இதம் அகிதங்கட்கு எல்லாம்
மூலத்தது ஆகி என்றும்
வந்திடும் முறைமை யோடே. 102

தெளிவுரை:

உலகத்தில் உணவின் பொருட்டு விளைந்த கனி முதலாயின, உணவுமாய் மேலும் வித்துமாய் வருவது போல, ''நாம் செய்தோம்'' என்னும் முனைப்பால் செய்யப்படும் முயற்சியும், எக்காலத்திலும் செயல் வகையால், வினைக்கு ஈடாய் வரும் அனுபவத்தைப் பயக்கும் (தரும்). அந்த அனுபவத்தை வினையின் பயன் என்று கருதாது ''நான் செய்தேன்'' என்னும் கருத்து வகையால் கருதிச் செய்கின்றபொழுது நல்வினை தீவினை எனப்படும் ஆகாமிய வினையை அஃது உண்டாக்கும்.

(ஏலத்தான் – ஏலுதல் – இயலுதல் – பொருந்துதல்)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வினை ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என மூவகைப்படும். அவற்றுள் ''ஆகாமியம்'' என்பது, நல்வினை தீவினை என்னும் முயற்சியைக் குறிக்கும். ''சஞ்சிதம்'' என்பது, அந்த முயற்சி பயனுக்கு வராமல் கட்டுப்பட்டு இருப்பதைக் குறிக்கும். கட்டுப்பட்டு இருக்கும் இடம் செய்தவனது புத்தி தத்துவமும் மாயையும் ஆகும். ''பிராரத்தம்'' என்பது, அந்த முயற்சியின் பயனை அனுபவித்தலைக் குறிக்கும். இந்த மூன்றற்கும் எடுத்துக் காட்டு வருமாறு:

வித்தை, நிலத்தில் விடுதல் ஆகாமியம், அந்த வித்து, இட்டவனது புத்தி தத்துவத்தைப் பற்றுக் கோடாக, பலன் தரும் வரை, பூமியில் தங்கி இருப்பது சஞ்சிதம். பலன் அனுபவத்திற்கு வருவது பிராரத்தம் ஆகும்.

உயிர்க்கு இன்பதுன்பப் பயனை இறைவனே தருவன் என்கின்றது

இதம் அகிதங்கள் என்பது,
இகல் மன வாக்குக் காயத்து,
இதம் உயிர்க்கு உறுதி செய்தல்;
அகிதம் மற்று அது செய்யாமை;
இதம் அகிதங்கள் எல்லாம்
இறைவனே ஏற்றுக் கொண்டு இங்கு
இதம் அகிதத்தால் இன்பத்
துன்பங்கள் ஈவன் அன்றே. 103

தெளிவுரை:

இதம் அகிதங்கள் ஆகிய நல்வினை தீவினைகளின் இயல்பு யாது என்றால், நினைத்தலும் சொல்லுதலும் செய்தலும் ஆகிய, மாறு பட்ட மனம் வாக்கு காயங்களால், வேதாகமங்களில் உயிர்க்கு உறுதி என விதித்தவற்றைச் செய்தலே இதம் எனப்படும்; வேதாகமங்களில் விலக்கி யவற்றைச் செய்தலே அகிதம் எனப்படும்.

இதம் செய்பவன் தன் மனத்தில் இதம் என்று கருதிச் செய்யும் காலத்தில், அவனை அறியாது அகிதம் வருதலும் கூடும்; அகிதம் செய்பவனிடத்து இவ்வாறு இதம் வருதலும் கூடும். மேலும், அகிதம் செய்பவன் அதனை அகிதம் என்று எண்ண மாட்டான்; ஆதலால், இதம் அகிதம் ஆகிய அந்த இரண்டையும் அறிபவன் இறைவன் ஒருவனே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆவன். ஆகவே, இறைவனே அந்த இதம் அகிதங்களைப் பொருந்தி அறிந்து, இங்கு அவற்றிற்கு ஏற்ப இன்ப துன்பம் ஆகிய பயனைத் தருவன்.

உயிர்க்கு உறுதி செய்தல் – உயிர்க்கு நன்மை செய்வது.

மனத்தின் நினைவால் உண்டாகும் நல்வினைகள் (இதம்):

அருள் உடைமை, பொறை உடைமை, பிறர் பொருளை விரும்பாமை, செய்ந்நன்றி மறவாமை, வஞ்சகம் இன்மை, நடுநிலை நிற்றல், அபிமானம் பேணுதல், பொறாமை இன்மை, அவா அறுத்தல், பிறர் துயர் கண்டு இரக்கப்படுதல் முதலியன.

வாக்கினால் உண்டாகும் நல்வினைகள்:

அறச் செயல்களைப் போதித்தல், புறங்கூறாமை, உண்மை பேசுதல், இனியன சொல்லுதல், கடுஞ்சொல் விலக்கல், வேதாகமங் களை ஓதுதல் முதலியன.

காயத்தினால் செய்யப்படும் நல்வினைகள்:

அரிய தவங்களைச் செய்தல், பூசைகள் ஓமங்கள் செய்தல், பகுத்து உண்பது, நந்தவனம் சோலைகள் உண்டாக்குதல், பிறர்மனை விழையாமை, குளம் தோண்டல், கிணறு தோண்டுதல், வித்தியாசாலை, திருக்கோயில், மடங்கள் கட்டுவித்தல் முதலியன.

இவற்றிற்கு மாறான செயல்கள் தீவினைகள் (அகிதம்) ஆகும். உயிர்க்கு நன்மை செய்வதைப் பிற உயிர்க்கும் என்று பொருள் கொள்வது சாலப் பொருந்தும்.

இறைவன் இதம் அகிதங்களைப் பொருந்தி அறிவதற்குக் காரணம், உயிர்கள் மாட்டு அவன் கொண்ட கருணையே ஆகும் என்கின்றது

இறைவன் இங்கு ஏற்பது என்னை
இதம் அகிதங்கள் என்னில்,
நிறைபரன் உயிர்கட்கு வைத்த
நேசத்தின் நிலைமை ஆகும்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறம்மலி இதம்செய் வோருக்கு
அனுக்கிர கத்தைச் செய்வன்;
மறம்மலி அகிதம் செய்யின்,
நிக்கிர கத்தை வைப்பன். **104**

தெளிவுரை:

ஆன்மாக்கள் செய்த இதம் அகிதம் ஆகிய நல்வினை தீவினையை இறைவன் இங்குப் பொருந்தி அறிவதற்குக் காரணம் என்ன என்றால், எங்கும் நிறைந்துள்ள இறைவன் உயிர்கள் முத்தி இன்பம் அடைதல் பொருட்டு, வைத்த கருணையே ஆகும். இறைவன் உயிர்களிடத்து என்றும் கருணை வைத்திருக்கிறான் என்றாலும், உயிர்கள் செய்யும் வினை ஆகிய காரணம், நல்வினை தீவினை என இருவேறு வகைப்பட்டு நிகழ்கின்றமையால், அவற்றிற்கு ஏற்ற பயனைக் கீழ்க் காணுமாறு செய்கிறான்.

அறம் மிகுந்த நல்வினை செய்பவர்க்கு இன்பத்தையும் வழங்குகிறான். மறம் மிகுந்த தீவினை செய்பவர்க்கு துன்பத்தைச் செய்வன்.

அனுக்கிரகம்	–	அருள்
நிக்கிரகம்	–	தண்டனை
அறம்	–	புண்ணியம் – நல்வினை – இதம்
மறம்	–	பாவம் – தீவினை – அகிதம்
நேசம்	–	கருணை – இரக்கம்
நிறைபரன்	–	எங்கும் எதிலும் குறைவற நிறைந்திருக்கும் பரசிவன்.

இறைவனால் செய்யப்படும் அனுக்கிரகம், நிக்கிரகமாகிய இரண்டும் கருணையே என்கிறது

நிக்கிர கங்கள் தானும்
நேசத்தால் ஈசன் செய்வது
அக்கிர மத்தால் குற்றம்
அடித்துத் தீர்த்து அச்சம் பண்ணி
இக்கிர மத்தி னாலே
ஈண்டு அறம் இயற்றிடு என்பன்
எக்கிர மத்தினா லும்
இறை செயல் அருளே என்றும். **105**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

இறைவன் நல்வினை செய்தவருக்கு அனுக்கிரகம் செய்வது போல, தீவினை செய்தவரைத் தண்டிப்பதும் அவர்களை நல்வழிப் படுத்தும் பொருட்டுச் செய்யும் கருணையே ஆகும். தண்டிப்பது எப்படிக் கருணை ஆகும் என்றால், நெறி தவறிச் (அக்கிரமத்தால்) செய்யப்பட்ட குற்றங்களைத் தண்டித்து நீக்குவதால், அவர்களுக்கு அச்சம் உண்டாகச் செய்து, இவ்வாறு குற்றம் செய்யாமல் இனி அறத்தினைச் செய்திட வேண்டும் என்று உணர்த்துவதால் அவ்வாறு தண்டிப்பதும் கருணையே ஆகும்.

வினையின் பயனை உயிர்கள் அனுபவிக்கும் முறைமையில், இறைவன் செய்யும் மறைத்தல் ஆகிய திரோபவ கிருத்தியமும், உடம்பினை நீக்குதல் ஆகிய சங்கார கிருத்தியமும் உட்பட, இறைவன் செய்யும் எந்தச் செயலும் எந்தக் காலத்திலும் கருணையே என்று கூறுவதற்கு இழுக்கு இல்லை.

அக்கிரமம்	–	நெறி தவறிய செயல்.
கிரமம்	–	முறை; இக்கிரமம் – இந்த முறை
எக்கிரமும்	–	எந்த முறையிலும்.

தண்டித்தலும் கருணையே என்பதை உவமை முகத்தால் கூறுகின்றது

தந்தை தாய் பெற்ற தத்தம்
புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடா விடின், உறுக்கி
வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர்; எல்லாம்
பார்த்திடில் பரிவே ஆகும்;
இந்தநீர் முறைமை அன்றோ
ஈசனார் முனிவும் என்றும். ***106***

தெளிவுரை:

உலகத்தில் தந்தை தாயர்கள் ஆவார், தம்முடைய புதல்வர்கள் தம்முடைய சொற்படி நடக்காவிட்டால், அந்தப் புதல்வர்களை அச்சம் உறுத்தி, வளாரினால் அடித்துக் கொடிய விலங்கும் இடுவர். பார்க்கும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொழுது, இந்தச் செயல்கள் செயல்வகையால் துன்பம் செய்வது போலத் தோன்றினாலும், அவர்களை நல்வழிப்படுத்தவேண்டும் என்னும் கருத்து வகையால் அருளே ஆகும் என்பது, பின்னர்அந்தப் புதல்வர்கள் நல்வழிப்படுவதிலிருந்து புலப்படும். இதுபோல் இறைவன் செய்யும் தண்டமும் எக்காலத்தும் கருணையே ஆகும்.

பந்தம் – விலங்கு. ''அன்றோ'' என்பது நிச்சயம் என்னும் பொருள் உணர்த்தும் ஓர் இடைச்சொல்.

வினையே பலன் தரும் என்பதை மறுத்துக் கூறுகின்றது

செயல்களே பலத்தைச் செய்யும்
தெய்வம் வேண்டா இங்கு என்னில்
முயலும்இச் செயல்கள் இங்கே
முழுவதும் அழியும் எங்கே
பயன் அளிப்பன அழிந்தே
பலன்களைப் பண்ணும் கெட்டே
வயல்இடும் தழையும் தின்னும்
மருந்தும் பின் பலிக்கு மாபோல். 107

தெளிவுரை:

நல்வினை தீவினைகள் தத்தம் பயன்களைத் தாமே தரும். இந்தப் பயனைத் தருவதற்கு இறைவன் வேண்டுவது இல்லை என்று கூறினால், செய்த இந்த வினைகள் செய்த பொழுதே இங்கு முழுவதும் கெட்டு ஒழிவன ஆகலின், அவை எங்கே நின்று பயனைத் தரும்? வயலில் இட்ட தழைகளும் உண்ணப்பட்ட மருந்துகளும் கெட்டுப் பின்பு பயன் தருவன போல, இந்த இரு வினைகளும் கெட்டே பின்னர் பயன் தருவன ஆகும். (இவ்வாறு புறச் சமயத்தவர் கூறுவர்; இதற்கு மறுப்பு அடுத்த செய்யுளில் கூறப்படுகிறது).

வினை, கெட்டுப் பயன்தரும் என்பதை மறுத்துக் கூறுகின்றது

செய்க்கிடும் தழையும், தின்னும்
திரவியம் அதுவும் போல,
உய்த்திடும் செய்தி கெட்டே
உறுவிக்கும் பலத்தை என்னில்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வைத்திடும் சோறும் பாக்கும்
அருந்தினர் வயிற்றில் மாய்ந்தால்
மெய்த்திடும் பலம் உனக்கு
மலம் அலால் வேறும் உண்டோ? 108

தெளிவுரை:

வயலில் இட்ட தழையும் உண்ணப்பட்ட மருந்தும் கெட்டுப், பின்பு பயன் தருவது போல, செய்யப்பட்ட வினைகளும் கெட்டே பின்பு பயனைப் பொருந்தச் செய்யும் என்று கூறினால், அது பொருந்தாது. ஏனென்றால், உண்பதற்காக வைக்கப்பட்ட சோறு, கறி முதலிய உணவுகளும், பாக்கு, வெற்றிலை முதலியனவும் உண்டவரது வயிற்றில் அழிந்து விட்டால் உனக்குக் கண்கூடாகக் காணும் பலன் மலம் அல்லாது வேறு இல்லை. எனவே, வினைகெட்டுப் பயன் தரும் என்று கூறுவது எந்த இடத்திலும் பொருந்தாது.

கெட்ட வினை பிறிதோர் இடத்தில் பயன்தராது என்று கூறுகின்றது

திரவியம் உவமை அன்று
செய்திக்கண் திரவி யங்கள்
விரவிய இடத்து வீந்து
பலம்தரும் இம்மை அம்மை
பரவி நீ பார், நீர், அங்கி
பாத்திரத்து இட்ட எல்லாம்
கரவிடும் இங்கே எங்கே
பலன்கொளக் கருதி னாயே. 109

தெளிவுரை:

தழை முதலிய பொருள்களும் தாம் கிடந்த இடத்திலேயே கெட்டு கெட்ட அந்த இடத்திலேயே பலனைத் தரும். அவ்வாறு அன்றி, இந்த உடம்பில் செய்த வினை, இந்த உடம்பிலேயே கெட்டு, மற்றோர் உடம்பில் பலன் தரும் ஆகலின், வினைக்குத் தழை முதலிய பொருள்கள் உவமை ஆகா.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தானமாகத் தண்ணீரிலும், யாகமாக அக்கினியிலும் சேர்க்கப் பட்ட பொருள்கள், அந்த இடத்தில் கெட்டு, மற்றோர் இடத்தில் பலிக்கும் எனக் கொள்வது போல், வினையும் கெட்டுப் பலன் தரும் என்று கூறினால் அது பொருந்தாது. அதற்குக் காரணம் வருமாறு:

தீ ஒழுகக் காய்ந்த பாத்திரத்தில் இட்ட நீர் முதலியன, இந்த இடத்தில் கெட்டுப் போகிறதே அன்றி வேறிடத்தில் பலன் தருவதைக் காண முடிவது இல்லை. ஆதலால் தானமாகவும் யாகமாகவும் கொடுத்துக் கெட்ட பொருள், பிறிதோர் இடத்தில் பலன் தராது. அந்தப் பொருளால் செய்யும் தானம், யாகம் என்ற வினையே, பிறிதோர் இடத்தில் பலன் தருதல் வேண்டும். அந்த வினை சடம் ஆதலின், தானே பயன் ஆகி வரும் என்பது கூடாது. இவ்வுண்மையைக் கருத்தில் கொள்வாயாக.

வினை, செய்தவரின் புத்தியிலே கிடந்து பயன்தரும்
என்பதை மறுத்துக் கூறுகின்றது

செய்தவர் மனத்தே எல்லாச்
செய்தியும் கிடந்து, பின்னர்
எய்தவே பலன்கள் ஈனும்
என்றிடில், இரும் சுவர்க்கம்
பொய்யர்வாழ் நரகம் பூமி
புந்தியில் கிடந்து போந்தது;
ஐயனே அழகுஇது உன்சொல்
இந்திர சாலம் ஆய்த்தே. 110

தெளிவுரை:

வினை செய்தவர் மனத்திலே எல்லா வினைகளும் தங்கிப் பின்பு பலன்தரும். எனவே, வயலில் இட்ட தழை கெட்டுப் பயன் தரும் என்னும் உவமை பொருந்தும் என்று கூறியதை நீ புரிந்து கொள்ள வில்லை. வினைக்குப் பயன் ஆவன யாவை என்றால், சுவர்க்கம், நரகம், பூமி என்னும் பல்வேறு வகை புவனங்களில் பிறந்து, அவற்றுட்பட்ட பல்வேறு போகங்களை அனுபவித்தலே ஆகும். அவை அனைத்தும் வயலில் விளையும் பயிர்கள் போல, உயிரின் புத்தியில் கிடந்து தோன்றினவாகும். ஆகவே, ஐயனே, இந்திரசாலம் போல் நீ கூறுவது மிக அழகாக இருக்கிறது!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

'இந்திரசாலம்'' என்பது, மந்திரம் மருந்து முதலியவற்றால் ஒன்றை மற்றொன்றாகக் காட்டும் சாலவித்தையைக் குறிக்கும். அஃதாவது காண்பவரை மயக்கும் வித்தை ஆகும்.

வினைப்பயன் ஆகிய போகங்கள் எல்லாம் புத்தியில் கிடந்து தோன்றும் என்று கூறுவது, சொல்வதற்கு அழகாக இருக்குமே அன்றி, அவை எல்லாம் பொருளாகக் கொள்ளப்பட மாட்டாது. உயிர்களுக்கு வினைப்பயனை இறைவனே ஊட்டுவன் என்பதே உண்மைப் பொருள் ஆகும். செய்தவினை உயிரின் புத்தியில் கிடந்து, போகத்தைத் தானே செய்யும் என்பது பொருந்தாது என்பது கருத்தில் கொள்ளத் தக்கது.

இறைவனே வினைப்பயனை உயிர்க்குத் தருவன் என்பதும், தருவது அவன் கடமை என்பதும் கூறுகிறது

தானம்செய் பொருள் தரித்தோர்
செய்தவர் தக்க செய்தி
ஊனம்பின் உறவே காண்டும்
பலம் உறுவிப்பான் வேண்டும்;
ஈனம்இல் செய்தி ஈசன்
இடும்பணி, இவை நாம் செய்தால்
நூனங்கள் அதிகம் நோக்கி
நுகர்விப்பன் வினைநோய் தீர. 111

தெளிவுரை:

வினை, செய்தவர் மனத்தில் கிடந்து பலன் தரும் என்பது பொருந்தாது; ஆயினும் செய்யப்படும் பொருளில் கிடந்து பின்னர் பலன் தரும் என்று கொள்ளலாமா என்றால், அதுவும் பொருந்தாது. ஏனென்றால், தானம் செய்யப்பட்ட பொருளும், தானத்தை ஏற்றவரும், தானம் செய்தவரும், தானம் ஆகிய செயலும், ஆகிய அனைத்தும் நிலை இன்றிக் கெட்டு ஒழிவனவே ஆகும். ஆதலால், நிலைபேறுடைய இறைவனே இவற்றை அறிந்து பலன் தரவேண்டும்.

இறைவன் பலன் தருவன் என்று செல்வதற்குக் காரணம் என்ன என்றால், முயற்சி எல்லாம் முன்வினைப் பயனை அனுபவித்தல் பொருட்டு, முதல்வனால் தரப்படுகின்ற ஏவல்வினை ஆகும். ஆகவே அந்த ஏவல் வினை ஆகிய முயற்சியை நாம் செய்தோம் என்னும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முனைப்பால் செய்வதால் அந்த முனைப்பு தீருதல் பொருட்டு அந்த முயற்சியினால் ஆகிய நல்வினை தீவினைகளை அறிந்து அந்த இருவினை நோயினைத் தீர்த்தல் பொருட்டு, பயன் தருவது இறைவனுக்குக் கடமை ஆயிற்று. இக்கருத்துப் பற்றியே சிவஞான சுவாமிகள் ''அஃது அவன் கடப்பாடு'' என்று அருளிச் செய்தார்கள்.

நூனம் – குறைவு – ஊனம். அதிகம் – ஏற்றம். ''ஈனமில் செய்தி'' என்பது இழிவு இல்லாத செயலைக் குறிக்கும். இழிவான செயல் என்பது, ஆடு, மாடு முதலிய பிற உயிர்களை வதைத்து அவற்றிற்குத் தீமை செய்வதைக் குறிக்கும்.

அறிவில் குறைந்த பேதைகளை ஏமாற்றுவது போன்ற செயல் களும் ஈனச் செயல்களே ஆகும். அவை ஈசன் இட்ட பணி ஆகா. அவை பாவச் செயல்கள் ஆகும். சுயநலம் கருதிப் பிற உயிர்களுக்குச் செய்யும் தீமைகள் அனைத்தும் நூனங்களே ஆகும். அந்த வினைகளின் தன்மையை அறிந்து உயிர்கட்கு வினைப்பயனை இறைவனே ஊட்டும் கடப்பாடு உடையவன் ஆவன்.

உயிர்கள் சிற்றறிவு உடையன ஆகலின், முற்றறிவு உடைய முதல்வனுக்கு வினைப்பயனைக் கூட்டுவித்தல் கடமை ஆயிற்று எனக் கூறுகின்றது

உலகு உடல் கரணம் காலம்
உறுபலம் நியதி செய்தி
பலஇவை கொண்டு, கன்மம்
பண்ணுவது உண்பது ஆனால்,
நிலவிடாது இவைதாம் சென்று
நினைந்து உயிர் நிறுத்திக் கொள்ளாது;
அலகு இலா அறிவன் ஆணை
அணைத்திடும் அருளினாலே. 112

தெளிவுரை:

முயற்சிக்கு முதல் கருத்தா உயிர். அந்த உயிர் தங்குதற்கு இடம் உடல்; உடலில் பொருந்திய கருவிகள் ஏழு வருமாறு:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

1. காரணம்; 2. வினை செய்தற்கு உரிய காலம்; 3. வினை செய்யப்படுகின்ற பொருள்; 4. அந்தப் பொருளைக் கூட்டுகின்ற நியதி; 5. செய்யும் செயல்; 6. செய்யும் உடல்; 7. செய்வதால் உறும் பயன் ஆகியன.

இவற்றைத் துணையாகக் கொண்டு, உயிர்கள் வினைகளைச் செய்தலும் அனுபவித்தலும் கூடும். இஃது எல்லோருக்கும் ஒப்ப முடிந்ததாகும். இந்த ஏழு முதல் நிலைகளும் உயிரை இன்றித் தாமே தொழிற்படமாட்டாத சடம். எனவே அவை தாமே வந்து உயிரைக் கூடமாட்டா. அந்த முதல் நிலைகளை இன்றி, அறிவு தொழிற்பட மாட்டாத உயிர் அவற்றைத் தானே கருதி நிறுத்திக் கொள்ளாது.

உயிரும் ஏனைய முதல் நிலைகளும் இவ்வாறாக இருப்பதால், அளவிட்டு அறிதற்கு அரிய சுதந்தர அறிவினன் ஆகிய இறைவனே, தனது ஆணை ஆகிய திருவருளால் உயிருக்கு, அந்த ஏழு முதல் நிலைகளைக் கூட்டுவிப்பான். ஆதலால், அந்த முதல் நிலைகளோடு கூடிச் செய்யும் செயல்கள் எல்லாம், இறைவன் கட்டளையே ஆகும்.

இறைவன் கருணையால் விதித்த அறச் செயல்கள் இவை எனக் கூறுகின்றது

ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம்,
உபசாரம், உறவு, சீலம்,
வழுக்கு இலாத் தவம், தானங்கள்,
வந்தித்தல், வணங்கல், வாய்மை,
அழுக்கு இலாத் துறவு, அடக்கம்,
அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கு இலா அறங்கள் ஆனால்
இரங்குவான் பணி அறங்கள். *113*

தெளிவுரை:

உயிர்கள் உலகியலில் வாழும்பொழுது கடைப்பிடிக்க வேண்டிய நல்வினைகள் எவை எவை என்பதை இறைவன் கருணை கூர்ந்து கட்டளை இட்டு அருளியுள்ளான்; இந்த நல்வினைகள் அறச் செயல்கள் எனப்படும். அவை வருமாறு:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

1. ஒழுக்கம்	–	உயர்ந்த பண்பு உடையவரோடு பொருந்த நடப்பது ஆகிய உலகத்தோடு ஒட்ட ஒழுகல்.
2. அன்பு	–	யாவரிடத்தும் அன்பு உடைமை.
3. அருள்	–	கருணை உடைமை.
4. ஆசாரம்	–	வேதாகமங்களில் விதித்தவாறு கடைப் பிடித்தல் உடைமை.
5. உபசாரம்	–	தக்கோர் இடத்துச் செய்யும் உபசரிப்பு உடைமை
6. உறவு	–	யாவரிடத்தும் நண்புடைமை.
7. சீலம்	–	நற்குணம் உடைமை.
8. வழுக்கு இலாத்தவம்	–	ஐம்பொறி அடக்கல், விரதம் காத்தல் முதலிய குற்றம் இல்லாத தவம் உடைமை.
9. தானங்கள்	–	தக்கோர் மாட்டு உவகையோடு செய்யும் தானங் கள் உடைமை.
10. வந்தித்தல்	–	தன்னைவிட மூத்தவர்கள் மாட்டு வழிபாடு உடைமை.
11. வணங்கல்	–	யாவரிடத்தும் பணிவு உடைமை.
12. வாய்மை	–	மெய்மை உடைமை.
13. அழுக்கு இலாத்துறவு	–	பிறர்மனை விழையாமை, வரைவின் மகளிர் விழையாமை முதலிய குற்றமற்ற ஆண் தகைமை உடைமை.
14. அடக்கம்	–	தீய நெறியில் செல்லாமல் அடக்கம் உடைமை.
15. அறிவு	–	தக்கன இவை, தகாதன இவை எனப் பகுத்து அறிதல் உடைமை.

9

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

16. அர்ச்சித்தல் – குலதெய்வத்தைப் பூசனை செய்தல் உடைமை.

இவை அல்லாதன தீவினைகள் ஆகும்.

நல்வினைகளுள் சிறந்தது சிவ வழிபாடு செய்தலே என்பதும், அதுவும் குறிப்பிட்ட உபாசன மூர்த்த வழிபாடு தேவை என்பதும், அதற்குப் பயன் சிவனே தருவன் என்பதும் கூறுகின்றது

மனம் அது நினைய, வாக்கு
வழுத்த மந்திரங்கள் சொல்ல,
இனமலர் கையில் கொண்டு, அங்கு
இச்சித்த தெய்வம் போற்றிச்,
சினம் முதல் அகற்றி வாழும்
செயல் அறம் ஆனால் யார்க்கும்
முனம்ஒரு தெய்வம் எங்கும்
செயற்குமுன் நிலையாம் அன்றே. 114

தெளிவுரை:

மேற்கூறிய ஒழுக்கம் முதலிய நன்மைகளை உடையவனாய், அவற்றின் மறுதலை ஆகிய தீமைகளை நீக்கி ஒழுகுபவன், தன் விருப்பத்திற்கு உகந்ததொரு இறைவடிவத்தை (இச்சித்த தெய்வம்) மனத்தால் நினைந்து, வாக்கினால் துதித்து, அந்தத் தெய்வத்திற்கு உரிய மந்திரத்தை உச்சரித்து, கைகளால் பல மலர்களைக் கொண்டு அர்ச்சித்து வழிபட்டு வாழும் செயல் ஆகிய அறம் உடையவன் ஆயின், அவனுக்குச் சிவபெருமான், அவன் வழிபடும் தெய்வத்தின் இடமாக நின்று, அச்செயலை ஏற்றுக் கொண்டு பயன் கொடுப்பன்.

''சினம் முதல் அகற்றி'' என்பது, கோபம், கொலை, களவு, கள், காமம் முதலிய பாவச் செயல்களைக் குறிக்கும். காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என்றும் கூறலாம்.

''இச்சித்த தெய்வம்'' என்பது, சிவாகமங்களில் சொல்லப்பட்ட இருபத்து ஐந்து வடிவங்களுள் ஒன்று ஆகிய அவரவருக்கு விருப்பமான வடிவத்தைக் குறிக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''முனம் ஒரு தெய்வம் எங்கும் செயற்கு முன் நிலையாம்'' என்பது, மேற் சொன்னவாறு வழிபாடு செய்பவரின் செயல்கள் அனைத்தையும், சிவபெருமானே அந்த வழிபடு தெய்வத்தின் வடிவத்தில், முன் நின்று நிறைவேற்றி வைக்கும் என்பதாகும். ஆகவே, வழிபடு தெய்வ வழிபாடு இன்றியமையாதது என்பது நினைவில் கொள்ளத் தக்கது.

எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் சிவபெருமானே பயன் கொடுப்பன் என்பதைக் கூறுகின்றது

யாதொரு தெய்வம் கொண்டீர்
அத்தெய்வம் ஆகி ஆங்கே
மாது ஒரு பாகனார் தாம்
வருவர்; மற்றத் தெய்வங்கள்
வேதனைப்படும்; இறக்கும்;
பிறக்கும்; மேல் வினையும் செய்யும்;
ஆதலால் இவை இலாதான்
அறிந்து அருள் செய்வன் அன்றே. 115

தெளிவுரை:

நீர் எந்த ஒரு தெய்வத்தைப் பொருளாகக் கொண்டு வழி பட்டீரோ, அந்தத் தெய்வம் ஆகி, தேவியை ஒரு பாகத்தில் உடைய சிவபெருமானே அங்கு எழுந்தருளி வந்து நின்று உமது வழிபாட்டை ஏற்றுப் பயன் அளிப்பன். வழிபட்ட அந்தத் தெய்வமே பலன் கொடுக்கும் என்று கூறினால், அதனால் உண்டாகும் குறை என்ன என்றால், நால்வகை யோனியுள் ஒருயோனிவாய்ப் பட்டுப் பிறப்பன எல்லாம் உயிர் இனமே ஆகும். அவ்வாறு யோனிவாய்ப் பட்டுப் பிறக்காதவனே இறைவன் ஆவன். இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள வேற்றுமை இஃதே ஆகும்.

ஏனைத் தெய்வம் எல்லாம் யோனிவாய்ப்பட்டு, பிறந்து இறப்பதே அன்றி மேல் வினையும் செய்யும் என்பதால், அவை சுதந்தர அறிவு இல்லாதனவே ஆகும். பிறப்பு இறப்பு ஏதும் இல்லாத சுதந்தர அறிவு உடையவன் சிவபெருமான் ஒருவனே ஆவன். எனவே, நீர் எந்த இடத்தில் இருந்து கொண்டு, எந்த ஒரு தெய்வத்தைப் பொருளாகக் கொண்டீராயினும், சிவபெருமான் அந்த இடத்தில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அந்தத் தெய்வத்தின் இடமாக நின்று, அந்த வழிபாட்டை அறிந்து உயிர்களுக்குப் பலனைக் கூட்டுவன். ஏனைத் தெய்வங்கள் சுதந்தர அறிவு இன்மையால் பயன் கொடுக்க மாட்டா.

மேற்கூறியதனை உவமை முகத்தால் விளக்கிக் கூறுகிறது

இங்கு நாம் சிலர்க்குப் பூசை
இயற்றினால், இவர்களோ வந்து
அங்கு, வான் தருவர்? அன்றேல்
அத்தெய்வம் அத்தனைக் காண்;
எங்கும் வாழ் தெய்வம் எல்லாம்
இறைவன் ஆணையினால் நிற்பது;
அங்கு நாம் செய்யும் செய்திக்கு
ஆணை வைப்பால் அளிப்பன். 116

தெளிவுரை:

''பசு, அந்தணர், தந்தை, தாய் முதலாயினாரை இங்கு நாம் வழிபட்டால், சுவர்க்கம் முதலிய உலக்ங்களில் அவர்களா வந்து பயன் தருகிறார்கள்? நம் வழிபாட்டைக் கடவுள் அறிந்து, அதற்கு ஏற்ற பலன் களைத் தருவார் என்பது எல்லார்க்கும் ஏற்கத் தக்க முடிவு ஆகும்.

அதுபோல், எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும், அந்த வழிபாட் டிற்குச் சிவபெருமானே பலன் தருவன் என்பது பொருந்தும். அவ்வா றாயின், பிற தெய்வத்தை வழிபட்டவர்க்கு, அந்தந்த தெய்வமே எதிரில் தோன்றி நின்று பலன் கொடுத்தது என்று நூல்களில் கூறப்பட்டுள்ளதே; அதனால், அந்தத் தெய்வங்களும் பலன் கொடுக்கும் வல்லமை உடையன என்று எண்ண வருமே என்றால் அதற்கு விளக்கம் வருமாறு:

அரசன் ஆணையே மந்திரி முதலாயினாரிடத்தில் நின்று பிறர்க்குப் பலன் கொடுப்பது போல, சிவபெருமானே தன் ஆணையைத், தன் ஏவல் வழி நிற்கும் அந்தந்தத் தேவரிடம் வைத்து, அந்தத் தேவரிடத்தில் நாம் செய்யும் வழிபாட்டிற்கு, அந்தத் தேவரிடமாக நின்று பலன் தருவன். எனவே, ஏனைத் தேவர்கள் சுதந்தரமாய்ப் பலன் கொடுப்பதில்லை. இந்த இடத்தில் வேறோர் உண்மையும் சிந்திப் பதற்கு உரியது. அது வருமாறு:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பசு வர்க்கம் ஆகிய பிற தெய்வங்களின் வழிபாட்டிற்குச் சிவ பெருமானே பலன் தருவன் என்று பெறப்பட்டமையால், பசு புண்ணியமும் சிவபுண்ணியம் ஆகும் என்று கொள்ள வருமே என்றால் அதற்கு விளக்கம் வருமாறு:

பசுக்களை நோக்கிச் செய்யும் புண்ணியம் பசு புண்ணியம். பதியை நோக்கிச் செய்யும் புண்ணியம் பதி புண்ணியம். ஆயினும் இகபர போகத்தை விரும்பி, பதியை நோக்கிச் செய்யும் புண்ணியமும் பசு புண்ணியமே. முத்தி இன்பம் வேண்டிப் பதியை நோக்கிச் செய்யும் புண்ணியம் பதி புண்ணியமே. இனி பசுக்களிடத்து சிவ பாவனை யோடு செய்யும் புண்ணியமும் பதி புண்ணியமே ஆகும். பதியினிடத்து நம்மில் ஒருவன் என்னும் பசு பாவனையோடு செய்யும் புண்ணியம் பசு புண்ணியமே ஆகும். ஆகவே, புண்ணியச் செயல், செய்பவன் கருத்து வகையால் வேறுபடும் என்பது தெளிவாக அறியத்தக்கது.

சிவபெருமானை வழிபடுவது ஒன்றே சிறந்த அறம் என்று கூறுகிறது

காண்பவன் சிவனே ஆனால்
அவன் அடிக்கு அன்பு செய்கை
மாண்பு அறம்; அரன் தன் பாதம்
மறந்து செய் அறங்கள் எல்லாம்
வீண் செயல்; இறைவன் சொன்ன
விதி அறம்; விருப்பு ஒன்று இல்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும்
பூசனை புரிந்து கொள்ளே. 117

தெளிவுரை:

இதுவரை கூறியதிலிருந்து, ஏனைத் தெய்வங்கள் மாட்டுச் செய்யும் வழிபாடுகளையும் சிவபெருமானே ஏற்றுக் கொண்டு பலன் தருவன் என்பது பெறப்பட்டது. ஆதலால், சிவபெருமான் திருவடியை வழிபடுவது ஒன்றே அறம் ஆகும். அஃதாவது வழிபாட்டின் முழுப் பயனையும் பெறச் செய்யும் புண்ணியச் செயல் ஆகும். ஆகவே, சிவ பெருமான் திருவடியை மறந்து செய்கின்ற புண்ணியச் செயல்கள் அனைத்தும் வீண் செயல்கள் ஆகும். புண்ணியம் என்பது, சிவ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெருமானால் வேதாகமங்களில் விதிக்கப்பட்ட விதி ஆகும். அவ்வாறு விதித்ததற்குக் காரணம், ஒரு பொருளிலும் பற்று இல்லாதவனாய், உயிர்களிடத்துச் சிவபெருமான் வைத்த கருணையே ஆகும்.

அவன் கருணையை நினைந்து நினைந்து, கசிந்து உருகி, அவனிடத்துச் செய்ந்நன்றி உணர்வோடு, அவன் திருவடிகளை உறுதியாகப் பற்றி நின்று பூசிப்பதே, வழிபாட்டின் நோக்கம் ஆகும்.

இந்த இடத்தில் திருவள்ளுவப் பெருந்தகை அருளிச் செய்த,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம்; உய்வு இல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" **119**

என்னும் தமிழ்மறை நினைவு கூர்தற்கு உரியது.

சிவபெருமானை வழிபடுதற்கு உரிய இடங்கள் இவை எனக் கூறுகின்றது

தாபர சங்க மங்கள்
என்று இரண்டு உருவில் நின்று
மாபரன் பூசை கொண்டு
மன்உயிர்க்கு அருளை வைப்பன்;
நீ, பரன் தன்னை நெஞ்சில்
நினைவையேல் நிறைந்த பூசை
ஆய் பரம் பொருளை நாளும்
அர்ச்சி நீ அன்பு செய்தே. **118**

தெளிவுரை:

வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாத சிவபெருமான், திருமேனி கொண்டு அருள்கின்ற பொழுது, அந்தத் திருமேனி சுத்தமாயா தத்துவ புவனத்தில் தோன்றி விளங்குதல் அன்றி, இந்த உலகத்தில் தோன்றி விளங்குவது இல்லை. எனவே, இந்த உலகத்தில் உள்ளவர்கள் வழிபடும் பொருட்டு, மாட்சிமை பொருந்திய சிவபெருமான், திருக்கோயிலில் உள் இருக்கும் திருமேனியும், திருநீறு, கண்டிகை (உருத்திராக்கம்) முதலிய திருவேடமும் ஆகிய இரண்டையும் ஆதாரமாகக் கொண்டு நிற்கிறான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அந்தச் சிவபரம்பொருளை மனத்தினால் வழிபட விரும்புவை ஆயின், அவன் அகத்தே உயிரினை இடமாகக் கொண்டு நின்று, இந்தப் பூவுலகில் உள்ளவர் செய்யும் நிறைந்த பூசையை ஏற்று, அவர்க்கு அருள் செய்வன் ஆதலால், இந்த உண்மையை அறிந்து நீ நாள்தோறும், மேற் குறித்த இடங்களில் சிவபெருமான் மாட்டு அன்பு மீதூர்ந்து அவனை வழிபடுவாயாக.

சிவபெருமானிடத்து அன்பு இலாது செய்யும் அறமும் பாவம் ஆகும் எனவும், அவனிடத்து அன்போடு இருந்து செய்யின், பாவமும் அறமாகும் எனவும் கூறுகின்றது

அரன் அடிக்கு அன்பர் செய்யும்
பாவமும் அறம்அது ஆகும்,
பரன் அடிக்கு அன்பு இலாதார்
புண்ணியம், பாவம் ஆகும்;
வரம் உடைத் தக்கன் செய்த
மா வேள்வி தீமை ஆகி,
நரரினில் பாலன் செய்த
பாதகம் நன்மை ஆய்த்தே. 119

தெளிவுரை:

புண்ணியமும் பாவமும் பலன் தருவது எப்படி என்றால், கொள்பவரது உயர்வு தாழ்வு பற்றியே ஆகும். அவ்வாறன்றி, புண்ணிய பாவங்களைச் செய்பவரது உயர்வு தாழ்வு பற்றியாவது செய்யப்படும் வினைகளின் உயர்வு தாழ்வு பற்றியாவது, அவை பலன் தருவது இல்லை. ஆதலால், சிவபெருமான் திருவடிக்கு அன்பு உடையவர், பாவம் செய்யினும், அந்தப் பாவம் புண்ணியமாய் முடியும்; அவன் திருவடிக்கு அன்பு இல்லாதவர் செய்யும் புண்ணியம் பாவமாய் முடியும்.

தேவர்களில் ஒருவர் ஆகிய தக்கன் செய்த பெரிய யாகம் புண்ணியமே ஆயினும், சிவபெருமானிடத்து அவனுக்கு அன்பு இல்லாமையினால், அந்தப் புண்ணியச் செயல் பாதகமாய் முடிந்தது. மானுடர்களில் பாலப் பருவத்தை உடைய சண்டீச நாயனார், தம் தந்தைக்குச் செய்த கொலைப் பாதகம், அவர் சிவபெருமானிடத்து அன்பு மீதூர்ந்து இருந்தமையால் புண்ணியமாய் முடிந்தது. புண்ணிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாவங்களைக் கொள்பவரது உயர்வு தாழ்வுகளுக்கு இவையே சான்றுகள் ஆகும். ஆகவே, சிவபெருமான் மாட்டு அன்பு மீதூர்ந்து வழிபடுதல் வேண்டும் என்பது பெறப்படும்.

தக்கன் பிரமாவின் புத்திரன்; சகல வேதங்களையும் ஓதி உணர்ந்தவன்; படைக்கும் தொழிலைச் செய்யும் வல்லமை பெற்றவன். பிரமன், விட்டுணு முதலிய தேவர்களும், சகல முனிவர்களும் அஞ்சத் தக்க ஆற்றலும் பெற்றவன். இவ்வளவு பெருமையை உடைய தக்கன்; வேதத்தில் விதிக்கப்பட்ட புண்ணியங்களுள் ஒன்று ஆகிய வேள்வியை, அந்த வேத விதிப்படி தவறாமல் செய்தாலும் அந்த வேள்வியை விதித்த வேத நாயகன் ஆகிய சிவபெருமானை மறந்து செய்தமையால் அது சிவத்துரோகம் ஆகிய பாவம் ஆகி, அந்த வேள்வி அழிக்கப்படலாயிற்று.

சண்டீச நாயனார் மானுடர். பாலிய பருவம் உள்ளவர். அவர் செய்தது கொலைப் பாதகம். ஆயினும், எல்லாம் வல்ல சிவபெருமான் அவரது பின் செயலை அறிந்து, அந்தப் பாதகத்தைப் புண்ணியமாகக் கொண்டு அவருக்குச் சண்டீசப் பதத்தை வழங்கியருளினான்.

உயிர்கள் அனைத்திற்கும் இன்பதுன்பங்கள் இறைவன் ஆணை ஆகிய அருளால் வந்து கூடும் என்று கூறுகின்றது

மறைகள் ஈசன் சொல்; அச்சொல்
வழிவரா உயிரை வைக்கும்
சிறைகள் மா நிரயம்; இட்ட
பணி செய்வோர் செல்வத்தோடும்
உறையும் மா பதிகள் உம்பர்
உலகங்கள்; யோனிக்கு எல்லாம்
இறைவன் ஆணையினால் இன்பத்
துன்பங்கள் இயைவது ஆகும். **120**

தெளிவுரை:

வேதாகமங்கள் என்பன சிவபெருமான் கற்பித்து அருளிய வாய் மொழியே ஆகும். அந்த வேதாகமங்களின் வழியில் நடவாதவரைத் தண்டித்துத் திருத்தும் பொருட்டு, அவனால் அமைக்கப்பட்ட சிறைக் களமே, பெரிய நரகம் எனப்படும். அந்த வேதாகம் வழி நடப்பவரை வாழ்வித்தல் பொருட்டு, அவனால் அமைக்கப்பட்ட பெரிய நகரமே,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சுவர்க்க உலகம் எனப்படும். படவே, உயிர்கட்கு இன்பத் துன்பங்கள் சிவபெருமானின் ஆணையால் ஆகற்பாலனவே ஆகும். (யோனிக் கெல்லாம் – உடல்களை உடைய எல்லா உயிர்கட்கும்) (யோனி – உடல்).

மேற்சொன்னபடி தண்டித்தற்கும் வாழ்வித்தற்கும் அரசனை உவமையாகக் கூறுகின்றது

ஆணையால் அவனி மன்னன்
அருமறை முறை செய்யாரை,
ஆணையின் தண்டம் செய்தும்,
அரும்சிறை இட்டும் வைப்பன்;
ஆணையின் வழிசெல் வோருக்கு
அரும்பதி செல்வம் நல்கி,
ஆணையும் வைப்பன்; எங்கும்
ஆணையே ஆணையே காண். 121

தெளிவுரை:

உலகத்தில் அரசன் தனது ஆணையால் இட்ட கட்டளைப்படி நடக்காதவர்களைத், தனது ஆணையினால் தண்டித்துப் பொறுக்க முடியாத சிறைச் சாலையில் வைப்பான். அந்தக் கட்டளைப்படி நடப்பவர்களுக்கு உயர்ந்த பட்டமும் பதவியும் செல்வமும் கொடுத்து வாழ்விப்பதோடு மட்டுமன்றி அவர்களைத் தம் கீழ் அதிகாரமும் செய்ய வைப்பான். அவ்வாறு அதிகாரம் பெற்றிருக்கும் மந்திரி, சேனாபதி முதலாயினாரிடத்தில் காணப்படும் ஆணை, அந்த அரசனது ஆணையே ஆகும். இந்த உவமையைக் கொண்டு, இறைவன் உயிர்களுக்கு வினைப்பயன் ஆகிய இன்ப துன்பங்களைச் செய்வதையும் கண்டு கொள்ளலாம். அரசனது அதிகாரம் இறைவனது ஆணைக்கு உவமையாகும்.

அரசன் செயலும் இறைவன் ஆணை வழிபட்டதே ஆகும் எனக் கூறுகின்றது

அரசனும் செய்வது ஈசன்
அருள்வழி அரும் பாவங்கள்
தரையுளோர் செய்யில், தீய
தண்டலின் வைத்துத் தண்டத்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உரை செய்து தீர்ப்பன்; பின்பு
சொல்வழி நடப்பர் தூயோர்
நிரயமும் சேரார்; அந்த
நிரயம் முன் நீர்மை ஈதாம். 122

தெளிவுரை:

இந்த உலகத்தில் உள்ளவர்கள், பெரும் பாதகங்கள் செய்தால் செய்த அவர்க்கு அரசன் கொடிய தண்டம் செய்து, மேலும் தவறு செய்தால் இந்த அளவில் அல்லலாமல், இன்னும் கொடியதாகத் தண்டம் செய்வன் என்று செய்யப்படும் தண்டத்தை எடுத்துச் சொல்லி அச்சம் உறுத்திப் பாதகத்தைத் தீர்ப்பன். அறிவுடையவர் அவ்வாறு செய்வித்த பின்னர், விதிக்கப்பட்ட வழியில் நடந்து, பாவத்தின் பயனாகிய நரகத்தில் அழுந்த மாட்டார்.

அந்த நரகத் தண்டம், இந்த அரசதண்டம் போல உண்டு என்று கருதுவதற்கு, அரச தண்டம் காரணமாகின்ற தன்மை உடையது ஆகும்.

இவ்வாறு அரச தண்டம் வைத்தற்குக் காரணம், இறைவன் ஆணையால் வரும் நரகதண்டம் வராமல், பாவத்தைத் தொலைத்து உயிர்களைக் காத்தல் பொருட்டு ஆகும். அரசன் தண்டிக்கும்படியான நிலையில் வெளிப்படாமல் மறைவாகப் பாவம் செய்தால், உயிர்க்கு உயிராய் இருக்கும் இறைவன் அதனை அறிந்து, நரகதண்டத்தைத் தந்து உயிர்க்கு அறிவுறுத்துவான். ஆகவே அரசன் ஆணையும் இறைவன் ஆணையின் வழியாய் நிகழ்வதன்றி, சுதந்தரமாய் நிகழ்வதன்று.

இதிலிருந்து, இந்தப் பிறப்பில் செய்த பாவத்திற்கு அரச தண்டனை இந்தப் பிறப்பிலேயே வழங்கப்பட்டு விட்டால், அந்த உயிர் நரக தண்டனை அனுபவிக்க வேண்டியது இருக்காது என்பது பெறப் படும். புண்ணியத்திற்கும் இந்த விதி பொருந்தும். சில பாவ புண்ணி யங்கள் இந்தப் பிறவியிலேயே பக்குவப்பட்டு, இந்த சரீரத்தைக் கொண்டே அவற்றின் பயனை அனுபவிக்க வேண்டியனவாகவும் வரும். அப்படி வருபவைகளை இப்பிறவியிலேயே அனுபவித்து ஒழித்தலும் கூடும்; அவ்வினை ஒழிந்தமையால், பின்பு அதன் பொருட்டு நரகத் துன்பம் வரமாட்டாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்தப் பிறவியில் பக்குவமாகி இந்தப் பிறவியிலேயே அனுபவத்திற்கு வரும் வினை, திருட்ட கன்மம் எனப்படும்; இப் பிறப்பில் செய்த வினை மறுபிறப்பில் பக்குவமாகி மறு பிறப்பில் அனுபவத்துக்கு வரும் வினை, அதிருட்ட கன்மம் எனப்படும். இந்த இருவகையும் அன்றி, இன்ன காலத்தில் பக்குவம் ஆகும், இன்ன காலத்தில் அனுபவத்திற்கு வரும் என்று சொல்லுவதற்கு இடம் இன்றி நின்று, பலகாலம் கடந்து பக்குவம் உற்று, ஏதாவது ஒரு பிறப்பில் அனுபவத்திற்கு வரும் வினை, திருட்டா திருட்ட கன்மம் எனப்படும்.

இறைவன் ஒரு மருத்துவரைப்போல், உயிர்களுக்கு இன்ப துன்பங்களைப் புசிப்பித்து இருவினையைப் போக்குவன் என்று கூறுகின்றது

அருளினால் உரைத்த நூலின்
 வழிவராது அதன்மூம் செய்யின்,
இருள் உலா நிரயத் துன்பத்து
 இட்டு, இரும் பாவம் தீர்ப்பன்;
பொருள் உலாம் சுவர்க்கம் ஆதி
 போகத்தால் புணியம் தீர்ப்பன்;
மருள் உலாம் மலங்கள் தீர்க்கும்
 மருந்து இவை வயித்திய நாதன். *123*

தெளிவுரை:

இறைவன் கருணையினால் உரைத்து அருளிய வேதாகம வழி நில்லாது உயிர்கள் பாவம் செய்தால், இருள் நிறைந்த நரகத்தில் அவ் வுயிர்களைச் செலுத்தித், துன்பத்தினை அனுபவிக்கச் செய்து அந்தப் பாவத்தினைத் தீர்ப்பன். அந்த வேதாகம வழி நிற்பவரை, அதிசயமான பொருள்கள் இடம் பெறும் சுவர்க்கம் முதலிய உலகங்களில் வைத்து, இன்பத்தினை அனுபவிக்கச் செய்து, அந்தப் புண்ணியத்தினைத் தீர்ப்பன்.

புண்ணியம் நூல்வழி நிற்றலே ஆயினும், நான் செய்தேன் என்னும் ஆணவ மலம் அறுத்தல் ஆகிய அருள்வழி நில்லாமையால் அதுவும் பந்தமே ஆகும். பந்தம் உறுதற்குக் காரணம் ஆகிய பாவம் புண்ணியம் இரண்டும் உயிர்க்கு நோய் ஆகலின், சிவபெருமான் ஆகிய மருத்துவனுக்கு, இன்பத்துன்பங்கள் அந்நோயைத் தீர்ப்பதற்கு உரிய மருந்து ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவபெருமான், மருத்துவனைப் போலத் துன்பத்தை அனுபவிக்கச் செய்து, பாவத்தைப் போக்கும் முறைமையைக் கூறுகின்றது

மருத்துவன் உரைத்த நூலின்
வழிவரின் பிணிகள் வாரா;
வருத்திடும் பிணிகள் தப்பின்
தப்பிய வழியும் செய்யத்
திருத்தினன் மருந்து செய்யாது
உறும்பிணி சென்றும் தீர்ப்பன்
உரைத்த நூல் சிவனும் இன்னே
உறும் கன்மம் ஊட்டித் தீர்ப்பன். 124

தெளிவுரை:

மருத்துவ நூலில் உரைத்தபடி நடப்பவர்க்கு நோய்கள் வந்து அணுகமாட்டா. அந்த நூலில் தப்பியவர்க்கு, தன் செயலாலும் செயலுக்கு முன் உள்ள பொருள்களாலும் நோய்கள் வரும். இந்நோய் பத்தியக்குறைவால் உண்டானது. ஆதலால் அதற்குத் தக்க மருந்துகளை மருத்துவன் கொடுத்து, அந்த நோயைத் தீர்ப்பன்.

மருத்துவ நூலின் வழியில் தப்பாது இருந்தால், கன்மம் காரணமாகப் பிணிகள் வரக்கூடும். அந்தப் பிணிகளை அவற்றிற்குத் தக்க கழுவாய்கள் (பிராயச் சித்தங்கள்) ஆகிய தானம், பூசை, ஓமம் முதலிய புண்ணியச் செயல்களை, நோயாளியைச் செய்யச் செய்து மருந்து கொடுத்து மருத்துவன் தீர்ப்பன். இவ்வாறே வேதாகமங்கள் உணர்த்திய வண்ணம், சிவபெருமானும் உயிர்கட்கு வரும் இருவினை ஆகிய நோயை, பல திறத்தாலும் இன்ப துன்பங்களை ஊட்டித் தீர்ப்பன்.

பிணிகள் – பாவ கன்மம் – தீவினைகள். பாவகன்மங்கள் அனுபவத்துக்கு வரும்போது மூன்று வகைப்பட்டு வரும். அவை வருமாறு:

ஆதி தைவிகம் – தெய்வத்தால் வருவது;

ஆதி பௌதிகம்– பஞ்ச பூதங்கள் வாயிலாக வருவது;

ஆதி யான்மிகம் – உயிர்களால் வருவது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நரகமே அன்றி சுவர்க்கமும் மருந்து ஆகும் என உவமை முகத்தால் விளக்குகின்றது

மண்ணுளே சில வியாதி
மருத்துவன் அருத்தியோடும்
திண்ணமாய் அறுத்துக் கீறித்
தீர்த்திடும்; சிலநோய் எல்லாம்
கண்ணிய கட்டி பாலும்
கலந்து உடன் கொடுத்துத் தீர்ப்பன்;
அண்ணலும் இன்பத் துன்பம்
அருத்தியே வினை அறுப்பன். 125

தெளிவுரை:

இந்த உலகத்தில் உள்ளவர்க்கு உண்டாகும் சில வியாதிகளை, மருத்துவன் நோயாளியின் இடத்து அன்பும் உறுதியும் உடையவனாய், அறுத்துக் கீறித் தீர்த்திடுவன்; வேறு சில வியாதிகளைச் சர்க்கரையும் பாலும், மருந்தோடு கலந்து கொடுத்துத் தீர்த்திடுவன். இவ்வாறு மருத்துவன் செய்யும் துன்பமும் இன்பமும் மருந்து ஆவது போல, இறைவனும் இன்பத் துன்பங்கள் ஆகிய மருந்தை, உயிர்கள் அனுபவிக்கும்படி செய்து இருவினை ஆகிய நோயைத் தீர்ப்பன்.

பூமி, நரகம், சுவர்க்கம் ஆகிய உலகங்களில் உயிர்கள் அனுபவித்தற்கு உரிய சரீர இயல்பு கூறுகிறது

பூதனா சரீரம் போனால்
புரியட்ட ரூபம் தானே,
யாதனா சரீரம் ஆகி
இன்பத் துன்பங்கள் எல்லாம்
நாதனார் ஆணை உய்க்க
நரகொடு சுவர்க்கம் துய்த்துத்
தீதிலா அணுவாய் யோனி
சேர்ந்திடும் சீவன் எல்லாம். 126

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சிவபெருமான் ஆகிய மருத்துவன் ஊட்டும் மருந்து ஆகிய இன்பத் துன்பங்களை, உயிர் அருந்தும் முறை எவ்வாறு என்றால், இந்தத் தூல உடம்பு நீங்கிய பொழுது சூக்கும உடம்புஅந்த உடம்போடு உடன் போகாது. முத்திவரை அஃது உயிரோடு நிலைபெற்று இருக்கும். அந்தச் சூக்கும உடம்பில் நின்று வினைப்பயனை அனுபவிப்பதற்கு உரிய வெவ்வேறு உடம்புகள் உயிர்க்கு உண்டாகும். ஆகவே, உயிர்கள் எல்லாம் அந்தச் சூக்கும உடம்போடு, இறைவன் ஆணையின்படி சுவர்க்கம் அல்லது நரகத்திற்குச் சென்று, அந்தந்த உலகத்திற்கு உரியனவாகிய தூல உடம்புகளைப் பெற்று, இன்பத் துன்பங்களை அனுபவிக்கும். அதன் பிறகு எஞ்சிய சஞ்சித வினைப்பயனை அனுபவிக்கும் பொருட்டு, குற்றமற்ற அந்தச் சூக்கும உடம்போடு, மண்ணுலகத்தில் தாயின் கருப்பையில் வந்து விழும்.

பூமியில் உயிர்கள் பெறும் பரு உடம்புக்குப் பூத சரீரம் என்று பெயர். சுவர்க்கத்தில் பெறும் பருஉடம்பிற்குப் பூதாசார சரீரம் என்று பெயர்; நரகத்தில் அதன் பெயர் யாதனா சரீரம் எனப்படும். பூதனாசரீரம்– பூத சரீரம் – பஞ்ச பூதங்களும் பரிணமித்து உண்டாகும் சரீரம்; பரிணமித்தல் – ஒன்று பிறிது ஒன்றாதல். யாதனை – வேதனை – துன்பம்; யாதனா சரீரம் – நரகத்தில் துன்பத்தை அனுபவித்தற்கு உரியது, பூதாசார சரீரம் – பஞ்ச பூதங்களின் சாரங்களால் ஆக்கப்பட்ட தூல உடம்பு. புரியட்ட ரூபம் – சூக்கும உடம்பு. தன் மாத்திரை ஐந்தும் மனம் புத்தி அகங்காரம் என்னும் அந்தக் கரணம் மூன்றும் ஆகிய எட்டு உறுப்புக்களும் கூடிய உடம்பு. இந்தச் சூக்கும உடம்பு படைப்புக் காலம் முதல் சங்காரகாலம் வரை உயிரோடு நிலைபெற்று இருந்து, பல தூல உடம்புகள்தோன்றுவதற்குக் காரணமாக இருப்பதாகும். இஃது இறைவனால் அநாதியே உயிர்க்கு வழங்கப்பட்டது ஆகலின், இதனைத் ''தீது இலாஅணு'' என்று அருணந்தி சிவம் அருளிச் செய்துள்ளார். இந்தச் சூக்கும உடம்பினைப் பெறுதற்கு முன்பு உயிர்க்கு விருப்பு வெறுப்புக்கள் தோன்றாமையால் இது ''குற்றமற்ற சூக்கும உடம்பு'' என்று உரை செய்யப்பெற்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உலகில் பெற்ற உடலை விட்டவுடன், உயிர் பிறிதோர் உடலைப் பெறுதலும் உண்டு, அல்லது கல்போல் கிடத்தலும் உண்டு என்பதைக் கூறுகின்றது

உடல்விடா யோனி பற்றி
உதிப்பினும் உதிக்கும்; ஒன்றில்
படர்வுறாது உறும் பாவத்தால்
பாடாணம் போல் கிடந்து
கடன் அதாம் காலம் சென்றால்,
கடுநரகு அதனில் வீழ்ந்து, அங்கு
இடர் உறம் உருவம் கன்மத்து
அளவினில் எடுக்கும் அன்றே. 127

தெளிவுரை:

அந்த அந்த வினைகளது வன்மை மென்மைகளுக்கு ஏற்ப, பூத சரீரம் ஆகிய இந்த உடல் போனபொழுது, யாதனா சரீரத்தை எடுக்காமல் மற்றும் ஒரு பூத சரீரத்தை இந்த உயிர் எடுப்பதும் உண்டு; யாதனா சரீரம் போன பொழுது, பூத சரீரத்தை எடுக்காமல் மற்றும் ஓர் யாதனா சரீரம் எடுப்பதும் உண்டு. ஆதலால், இந்த உடம்பினை விட்டுப் பிறிதோர் உடம்பை எடுப்பது இடைவிடாமல் நிகழ்வதும் உண்டு; ஒரு உடம்பிலும் தங்காமல் மிகுந்த பாவம் செய்த காரணத்தால், கல்போல் சூக்கும தேகத்துடன் பிரகிருதியில் சிறிது காலம் கிடந்து,அந்தக் கால எல்லை நீங்கும் பொழுது, உயிர் கொடிய நரகத்தில் வீழ்ந்து அங்குத் துன்புற்று, இந்த உலகத்துக்கு வந்து பிறப்பதும் உண்டு.

ஒரே காலத்தில் சுவர்க்கத்தையும் நரகத்தையும் அடையத் தக்க நிலையில், உயிரின் புண்ணியமும் பாவமும் பக்குவப் பட்டு இருக்கும் பொழுது, உயிரைச் சுவர்க்கத்துக்கு அனுப்புவதா நரகத்திற்கு அனுப்புவதா என்னும் நிலை ஏற்படும். இரண்டு இடங்களுக்கும் உயிர் ஒரே காலத்தில் செல்ல முடியாது. ஆகவே, இறைவன் உயிரின் புண்ணிய பாவங்களின் வன்மையையும் மென்மையையும் நோக்கி, மெலிய வினையை நிறுத்தி வைத்து, வலிய வினையைக் கொடுத்து அதற்கு ஏற்ற பிறவியில் உயிரைச் செலுத்துவன். இதனையே இந்தச் செய்யுள் ''உருவம் கன்மத்து அளவினில் எடுக்கும்'' என்று கூறியது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புண்ணியமோ, பாவமோ பக்குவப்பட்டுப் பயனை அனுபவிப்பதற்கு உரிய காலம் வரும் வரையில் உயிர் கல்போல் கிடக்கும். இவ்வுண்மையையே, ''பாடாணம் போல் கிடந்து கடனதாம் காலம் சென்றால்'' என்றார். இவ்வாறு உயிர் எந்த உலகுக்கும் சென்று எந்த உடலையும் எடுக்க மாட்டாமல், கல்போல் கிடப்பதையே ஒரு பிறவியாகக் கருதி மணிவாசகப் பெருந்தகை, சிவபுராணத்தில்,

''பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய்ப் பேயாய்''

என்று அருளிச் செய்தார்கள் என்பது இங்குக் கருத்தில், கொள்ளத் தக்கது. அஃதன்றி ''கல்லாய்'' என்று சிவபுராணத்தில் வரும் சொற்குப் பூவுலகில் உள்ள ''கல்'' எனப் பொருள் கொள்வது பொருந்தாது என்பதும் நினைவில் கொள்ளத் தக்கது.

உடல், இடம், குறி, உணர்வு மாறினும், உயிர் ஒன்றே என்பதை உவமை முகத்தால் கூறுகின்றது

பன்னகம் அண்ட சங்கள்
பரகாயம் தன்னில் பாய்வோர்,
துன்னு தோல் முட்டை யாக்கை
துறந்து செல்வதுவே போல
உன்னிய உயிர்கள் தூல
உடல் விட்டு வானின் ஊடு
மன்னிடும் நனவு மாறிக்
கனவினை மருவு மாபோல். 128

தெளிவுரை:

முன்னைத் தோல் ஆகிய நெருங்கிய உடலை விட்டுச் சென்று, மற்றொரு தோல் ஆகிய உடலினைப் பற்றும் பாம்பு போலவும், முன்னை முட்டை ஆகிய இடத்தினை விட்டுச் சென்று, மற்றோர் இடத்தினைப் பற்றும் பறவைகள் போலவும், முன்னைச் சரீரத்தை விட்டு மற்றோர் சரீரத்தினைப் பற்றும் பரகாயப் பிரவேசிகள் போலவும், நனவு உணர்வு மாறி கனவு உணர்வைத் தலைப்படுவது போலவும் கருதப்படும் உயிர்கள் வேறுபடுவது இல்லை. இவ்வுவமைகளிலிருந்து, உயிர்களின் அறிவு வேறுபட்டு, தூல உடலாகிய முன்னை உடம்பை விட்டு, வான் ஏறிச் சென்று – மற்றோர் உடம்பில் நிலைபெறம் என்பது பெறப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பன்னகம் – பாம்பு; அண்டசங்கள் – முட்டையில் தோன்றும் பறவைகள்; ஊடு – இடம்; மன்னிடும் – சேரும்–அடையும் –நிலை பெறும்.

நனவில் கண்டவற்றை, கனவு காணும்போது மறந்து, அறிவு வேறு படுவதுபோல, முற்பிறப்பில் நிகழ்ந்தவற்றை எல்லாம் மறந்து, சுவர்க்க நரகங்களில் இருக்கும்போது உயிரின் அறிவு வேறுபட்டு இருக்கும்.

இருவினை என்பது முயற்சி என்றும் அதுவே கன்ம மலம் என்றும், அக்கன்மத்திற்கு மூலம் உண்டு என்றும் கூறுகிறது

தன்மமோடு அதன்மம் ஆகித்
தான் இரு பயனும் தந்து,
நன்மை தீமையினும் இன்பத்
துன்பினும் நாடிக் காண
முன்னமே ஆன்மாவின் தன்
மும்மலத்து ஒன்றது ஆகிக்
கன்மமும் மூலம் காட்டிக்
காமிய மலமாய் நிற்கும். 129

தெளிவுரை:

கன்மம் என்பது, முற்பிறவியில் ஆன்மாவினால் செய்யப்படும் நல்வினை தீவினை என்னும் முயற்சி ஆகும். இதுவே ஆகாமியம் எனப்படும். அந்த முயற்சி பலனுக்கு வரும் வரையில் கட்டுப்பட்டு புண்ணியம் பாவம் என இருவகைப்படுவது ஆகும். இதுவே சஞ்சிதம் எனப்படும். அந்தப் புண்ணியம் பாவம் பலனுக்கு வரும்பொழுது, இன்பம் துன்பம் என இருவகைப்படுவது ஆகும். இதுவே பிராரத்தம் எனப்படும்.

இவ்வாறு ஆகாமியத்தால் சஞ்சிதமும் பிராரத்தமும், அந்த பிராரத்தத்தை அனுபவிக்கும் முறையில் மேல் ஆகாமியமும் உண்டாகும். அப்படியானால், முன்னர் தோன்றியது பிராரத்தமா அல்லது ஆகாமியமா என்னும் ஐயம் எழும். பிராரத்தம் என்பது, ஆகாமியத்தின் பலனே அன்றிப் பிறிது இல்லை. ஆகவே, ஆகாமியமே முன்னர் உண்டாயிற்று என்று கூறவேண்டும். அந்த ஆகாமியம் ஆகிய நல்வினை தீவினையை பிராரத்தத்திற்கு முன்னர்ச் செய்வதற்கும் ஒரு காரணம் வேண்டும்; இல்லையேல் ஆகாமியம் நிகழாது.

10

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகவே, ஆகாமியம் ஆகிய நல்வினை தீவினை நிகழ்வதற்கு முன்னர் ஏற்பட்ட மூல கன்மமே அந்தக் காரணம் ஆகும். மூல கன்மம் என்று ஒன்று உண்டு என்பதைக் காட்டுதல் பொருட்டும், அஃது ஆணவம் மாயை போல் அநாதியே உள்ளது என்பதை நிறுவுதல் பொருட்டும், ''கன்மமும் மூலம் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்'' என்று அருளிச் செய்தார். மூலகன்மம் காரண கன்மம் எனவும் படும். இவ்வுண் மையைத் தெளிவுறுத்தியே, சிவஞான போதச் சிற்றுரை நான்காம் சூத்திரம் இரண்டாம் அதிகரணத்தில், சிவஞான சுவாமிகள், ''அநாதியே மலத்தைப் பற்றுதல் உயிரின் வினையாய் உயிர்க் குற்றங்களுள் வைத்து எண்ணப்படும்'' என்று அருளிச் செய்தார்.

''கன்மமும் மூலமும் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்'' என்பதில், ''கன்மமும்'' என்றதால் கன்மம் உயிரின் விருப்பு வெறுப்புக் காரணமாக நல்வினை தீவினை என்னும் காரிய கன்மமாக மட்டும் இன்றி, அந்தக் காரியத்திற்குக் காரணம் ஆகிய மூலகன்மம் என்னும் காரண கன்மமாகவும் உள்ளது என்பது பெறப்படும். ''மூலம் காட்டி'' என்பதால், மூல கன்மம் என்று ஒன்று உண்டு என்பதும் பெறப்படும். மூல கன்மம் அநாதியே உள்ளது என்பதைக் ''காமிய மலமாய் நிற்கும்'' என்னும் தொடர் குறிக்கின்றது. எனவே இந்தச் செய்யுள், கன்மம் அநாதியே உள்ளது என்பதற்குத் தக்கதோர் பிரமாணமாகும்.

மூலகன்மம் தொடர்ச்சியாய் இறைவன் ஆணையால்,
உயிர்க்குப் பல்வேறு வகைப்பட்ட உடல்களைத்
தோற்றுவிக்கும் என்று கூறுகிறது

இருவினை அநாதி ஆகி
இயற்றலால் நுகர்வால் அந்தம்
வருமலம் சார்ந்து மாயா
உருவுகள் மருவி ஆர்த்துத்
தருசெயல் முறைமை யாலே
தான்பல பேதம் காட்டி
அரு அதாய் நின்று அரன்தன்
ஆணையின் அமர்ந்து செல்லும். 130

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஆகாமிய வினை ஆகிய நல்வினை தீவினை செய்யப்பட்டும் அழியப்பட்டும் வருகிறது. ஆகவே அஃது ஆதியும் அந்தமும் உடைய தாகும். ஆயினும், இடையறாது ஓடும் நீர்ப் பெருக்குப் போல, தொடர்ச்சி யாய் தொன்றுதொட்டு வருவதால் பிரவாக அநாதி ஆகும். அந்த ஆகாமியம் ஏனை ஆணவமல காரியம் ஆகிய மோகம் முதலிய குணங் களோடும், மாயா மல காரியம் ஆகிய தனு கரண புவன போகங்களோடும் கூடி உயிரைப் பிறப்பு இறப்பில் கட்டுப்படுத்தி, தனது காரியம் ஆகிய இன்ப துன்பங்களின்வேறுபாட்டிற்கு ஏற்ப, பல்வேறு வகைப்பட்ட உடல்களை இறைவன் ஆணையால் உயிர்க்குத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருக்கிறது.

''அருவதாய் நின்று'' என்பது, தூலமாய்ச் செய்யப்பட்ட கன்மம், பின் புண்ணிய பாவ ரூபமாய் இருக்கும் சூக்கும நிலையைக் குறிக்கும்.

ஆகாமிய கன்மம் பலன் கொடுப்பதற்கு, இறைவனது மறைப் பாற்றலையும் ஆணவமலம் முதலானவற்றையும் வேண்டி நிற்றலால், ''மலம் சார்ந்து'' என்றார்.

உயிர்கள் அச்சு மாறிப் பிறக்கும் என்று கூறுகின்றது

சங்கமம் தாப ரங்கள்
தத்தம் கன்மத்து ஈடா
அங்குஉரு யோனி மாறும்
அச்சு மாறாது இங்கு என்னில்,
இங்கு மானுடர் இயற்றும்
புண்ணியத்து இன்ப ஈட்டம்
அங்கு வான் சுரர்க ளாயோ
நரர்களாய் அருந்து வாரோ? 131

தெளிவுரை:

அவரவரது வினைக்கு ஈடாக, அசையாதனவும்அசைவனவும் ஆகிய உயிர்கள், தம் உடலை விட்டுப் பிரியும் பொழுது, மீண்டும் அந்தந்த உடலோடு பிறப்பதே அன்றி, வேறு உடலோடு கூடிய பிறவியில் பிறப்பது இல்லை என்று ஒரு சாரார் கூறுவர்; ஆனால் அது பொருந்தாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏனென்றால், இந்த உலகத்தில் மனிதர்கள் செய்யும் நல்வினைப் பயனாகிய இன்ப மிகுதியை, மேல் உலகத்தில் வாழ்கின்ற தேவர்களாய்ச் சென்று அனுபவிப்பதேயன்றி, மானுடர்களாய் அனுபவிப்பது உண்டோ? இல்லையே! இந்த உலக இன்பம், மேல் உலக இன்பத்தைவிடக் குறைவு உடையதாகும். கூடுதலாகப் புண்ணியம் செய்பவருக்குப் பயன் ஆகிய கூடுதல் இன்பம் இவ்வுலகத்தில் இல்லை. ஆகலின், அவ்வாறு புண்ணியம் செய்தவர், தேவர் உடம்பைப் (பூதாசாரசரீரம்) பெற்று மேலுலகில் உள்ள இன்பத்தைப் பெறுவர். எனவே தேவ போகத்தை மானுட உடலில் இருந்தும், மானுட போகத்தைத் தேவர் உடம்பில் இருந்தும் அனுபவிக்க முடியாது. ஆகவே உயிர்கள் அச்சு மாறிப் பிறக்கும் என்பது புலப்படும்.

அச்சு –	மூல வடிவம் – தூல உடல்.	
சங்கமம்–	சரம்	–அசையும் உடல் – இயங்கும்
	சரீரங்கள்	– தாவரம் தவிர மற்ற உயிர்கள்
தாவரம் –	அசரம்	– இயங்கும் தன்மை இல்லாத
	சரீரம்	– மரம் செடி முதலியன.

உயிர்களுக்குப் பிறவிகள் தோன்றும், உடல் மாறும் என்பதை வலியுறுத்துகின்றது

நரர்களாய்த் துய்ப்பர் என்னில்,
நரர் பதி சுரர் உலோகம்
சுரர்களாய்த் துய்ப்பர் என்னில்,
சொன்ன அச்சு அழியும் ஆகும்;
சுரர்களாய்ப் பலன்கள் துய்த்துத்
தாம் இங்குத் தோன்றும் போது,
நரர்களாய்ப் பிறப்பர்; ஞாலத்து
அமரராய் நண்ணி டாரே. 132

தெளிவுரை:

இன்பம் ஆகிய தேவபோகத்தை, மேல் உலகில் மானுட வடிவு கொண்டே மனிதர் அனுபவிப்பர் என்று சொன்னால், அவ்வாறு அனுபவிக்கையில் அது தேவ உலகம் ஆகாது; மண் உலகமே ஆகும். தேவர்களாயே மனிதர் அந்த இன்பத்தை அனுபவிப்பர் என்பதை ஒப்புக் கொண்டால், மேற் கூறியவாறு உடல் மாறுதல் உண்டு என்பது இனிது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விளங்கும். ஆதலால், தேவர்களாய் இன்பப் பயனை அனுபவித்துத் தொலைத்த பொழுது, தேவர்கள் மீண்டும் இந்த உலகில் தோன்றும் நிலையில், மானுட வடிவாய்ப் பிறப்பதுஅன்றி, தேவராய் இந்த உலகத்தில் பிறக்க மாட்டார்கள்.

தேவருக்கும் மனிதருக்கும் அவர் அவர்க்கு உரிய வடிவம் மாறினாலும், உறுப்புக்களும் அங்கங்களும் மாறா ஆகலின், உடல் மாறும் என்பது பொருந்தாது என்று வாதிடுபவருக்கு அடுத்த செய்யுளில் உவமை காட்டித் தெளிவுஉறுத்துகிறார். எனவே, எடுத்த பூத உடல் நீங்கியதும் அடுத்த பிறப்பில், அதே பூத உடல் வரும் என்பது பொருந்தாது; இதுவே அச்சு மாறிப் பிறத்தல் ஆகும்.

மயிர்க் குட்டி முதலியன வண்டு முதலியனவாய் மாறும் நடைமுறை உண்மையைக் காட்டி உடல் மாறும் என்பதை வலியுறுத்துகின்றது

வண்டுகள் ஆகி மாறும்
மயிர்க்குட்டி மற்றோர் செந்துப்
பண்டைய உருவம் தானே
வேட்டுவனாய் பிறக்கும்;
கண்டுகொள் யோனி எல்லாம்
கன்மத்தால் மாறும் என்றே
கொண்டன சமயம் எல்லாம்;
இச்சொல் நீ கொண்டது எங்கே? 133

தெளிவுரை:

கம்பளிப் பூச்சி வண்டாகவும், புழு குளவியாகவும் உடல் மாறும்; அவ்வாறு மாறுவதில் அது அதற்கு உரிய உறுப்புக்கள் வேறு வேறு ஆகும்; இது உலகில் நடைமுறையில் உள்ள உண்மை. எனவே உயிர்களின் கன்மத்துக்கு ஏற்ப உடல்கள் மாறுவது உண்டு என்பது எல்லாச் சமய நூல்களுக்கும் ஒப்ப முடிந்தது ஆகும். பிரத்தியட்சப் பிரமாணத்தோடும் நூல் பிரமாணத்தோடும் மாறுபட்டு, முற்றும் மாறுவது இல்லை என்று நீ கூறும் போலிக் கூற்றினை எங்கே கண்டாய்?

மயிர்க்குட்டி – கம்பளிப் பூச்சி; வேட்டுவன் – புழு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

யோனியும் அச்சும் மாறும் என்பதற்கு உவமை கூறுகின்றது

அகலியை கல் அது ஆனாள்;
அரி பல பிறவி ஆனான்;
பகலவன் குலத்தில் தோன்றிப்
பார்எலாம் முழுதும் ஆண்டு,
நிகரிலா அரசன் ஆகும்
சிலந்தி நீடு உலகம் போற்றச்
சகம் அதில் எலிதான் அன்றே
மாவலி ஆய்த்துத் தானே. 134

தெளிவுரை:

மேற் செய்யுளில் கூறியவாறு, வண்டு முதலியனவற்றின் உடல்களே மயிர்க்குட்டி முதலிய உடல்களாய் மாறுபட்டன அன்றி, முன் உடல் அழிந்து வேறு உடல் தோன்றுவதன்று. ஆதலால், முன் உடல் கெட்டு, பிறிது ஓர் உடல் தோன்றும் என்பதோடு பொருந்தாது என்று கூறினால், அதற்கு விளக்கம் வருமாறு:

அகலிகை கௌதம முனிவன் இட்ட சாபத்தினால், முன் உடல் அழிந்தே, கல்லாக மாறினாள். விட்டுணு பிருகு முனிவன் இட்ட சாபத்தினால், முன் உடல்அழிந்தே, மச்சம் முதலிய பத்துவித தோற்றத் தில் மாறினான். சிலந்திப்பூச்சி திருவானைக்காவில் சிவபெருமானை அர்ச்சித்த பலனால், முன் உடல் அழிந்தே, சூரிய வம்சத்தில் அரசனாய்த் தோன்றி, பூமி முழுவதையும் ஆண்டது. எலி சிவாலயத்தில் உள்ள திருவிளக்கைத் தூண்டியதால், முன் உடல் அழிந்தே, தேவ உலகத்தில் உள்ளவரும் துதிக்கும்படி, இந்த மண்ணுலகில் மாபலி சக்கரவர்த்தி யாக மாறியது. இவ்வாறு நூல்களில் கேட்கப்படுவதால், இதிலிருந்து எங்கும் இவ்வாறு தெளிந்து அறிதல் நல்லது.

அகலிகை முதலிய பிரமாணம் எல்லாம் சாபமும் அருளுமே அன்றி, வினைப்பயன் அன்று என்று கூறுபவர்க்கு வினைப்பயன் தருவதும் இறைவன் சாப அருளே ஆகும் என்று கூறுகின்றது

செப்பினாய் மாற வேறு
சிலர் விதியாலே கன்மால்
வைப்பு உறும் யோனி எல்லாம்
மாறி வந்திடா இங்கு என்னில்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எப்படி யானும் செய்திக்கு
இறை கரி ஆவன் என்றே
முற்பட மொழிந்தேன் எல்லாம்
முதல்வன்தன் விதியே ஆகும். 135

தெளிவுரை:

மேற்கூறியவாறு, அகலியை முதலியவர்க்கு உடல் மாறியது சாப அருள்களால் அன்றி, கன்மத்தால் அன்று ஆகலின், அதுபற்றி எங்கும் அவ்வாறு உடல் மாறும் என்பது பொருந்தாது என்று கூறினால், அதற்கு விளக்கம் வருமாறு:

அவரவர் செயலுககு ஏற்ப, சாபமும் அருளும் நிகழ்ந்தது போல, எந்த வகையாலும் உயிர்கள் செய்யும் கன்மங்களுக்கு இறைவன் சான்று ஆவன் என்று மேற் செய்யுள்களில் கூறப்பட்டுள்ளதாகலின், வினைப் பயன் எனப்படுவன எல்லாம், இறைவனுடைய சாப அருள்களே ஆகும். ஆகவே, எந்த இடத்திலும் உடல் மாறும் என்பதே பொருந்தும்.

''செய்திக்கு இறைவன் கரி ஆவான்''

என்பது, உயிர்கள் செய்யும் கன்மங்கள் அனைத்தையும் அறிந்து, அவற்றின் பயனை அளிப்பவன் இறைவனே என்பதைக் குறிக்கும். இந்த உண்மையைக் கீழ்க்காணும் செய்யுள்களில் கூறப்பட்டிருப்பதிலிருந்து காணலாம். 103, 104, 111, 115 மற்றும் 116 – ஆக ஆறு செய்யுள்கள்.

(கரி – சான்று – பற்றின்றி அறிந்திருப்பது)

ஒன்றைப் பற்றி, அதுவாய் நிற்கும் உயிர், முன் பற்றியதை விட்டுப், பிறிது ஒன்றை இறைவன் ஆணையால் பற்றி, அதுவாய் நிற்கும் என்று கூறுகின்றது

அவ்வவ் யோனி தோறும்
அவ்வவ் உலகம் தோறும்
செவ்விதின் அறிந்து கன்மம்
சேர்ந்திடா; சீவன் சேரா;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வகை தம்மில் சேர்வும்
இறைசெயல்; ஆனால் செய்த
எவ்வுருவும் தம் கன்மால்
மாற்றுவன் இறைவன் தானே. 136

தெளிவுரை:

உயிர் ஒன்றனைப் பற்றி அதுவாய் நிற்பதே அன்றி, பிறிது ஒன்றனை எவ்வாறு பற்றும் என்றால் கூறுதும்; வினைகள் சடம்; ஆதலால் அந்த வினைகளுக்கு ஈடு ஆகிய உடல்களும் உலகங்களும் நேராக அறிந்து சென்று உயிரைஅணையமாட்டா. உயிர்கள் அறிவுடைப் பொருள் ஆயினும், தமக்கு என அறிவு இன்மையால், வினையின் பயனைத் தாமே அறிந்து எடுத்துக் கொண்டு அனுபவிக்க மாட்டா.

எனவே, மாயையினையும் வினையையும் காரியப்படுத்தி உயிர்களுக்குச் சேர்த்தல் இறைவன் செயலே என்பதுபெறப்பட்டது. படவே, இறைவன் செய்த எந்தவகை உடலையும், அந்த இறைவன் உயிர்களின் வினைக்கு ஏற்ப மாற்றி, பிறிது ஓர் உடலைப் பற்றச் செய்வன்.

இறைவன் ஆற்றலால் ஒரு சூக்கும உடம்பே பல தூல உடல்களாய் மாறுவதால், சற்காரிய வாதத்திற்கு இழுக்கு இல்லை என உவமை முகத்தால் விளக்குகின்றது

மாறி இவ் உருவம் எல்லாம்
வருவது எங்கே நின்று என்னில்,
கூறிய சூக்குமத்து ஆம்;
உரு எனில், குறி ஒன்று என்னில்,
வேறு ஒரு குறியாம் ஆரம்
வீர சங்கிலியும் ஆகும்;
தேறு நீ ஒருவனால் இச்
செயல் எலாம் சிவனால் ஆகும். 137

தெளிவுரை:

அவ்வாறு உடல் மாறித் தோன்றுவது ஆயின், ''உள்ளது காரியப்படும்'' என்னும் சற்காரிய வாதத்திற்கு இழுக்கு ஆகாதா? ஆகாது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்றால், வேறு உடல் எங்கிருந்து தோன்றும் என்னும் கேள்வி எழும். அதற்கு விடை மூலம் ஆகிய சூக்கும உடம்பின் நின்றும் பல தூல உடம்புகள் உண்டாகும் என்பதே ஆகும்.

காரணம் ஒன்றாக இருக்கக், காரியம் பலவாக எவ்வாறு அமையும்? காரணம் ஆகிய ஒரு பொன், செய்பவனது திறமையால், ஆரம், வளையல் முதலிய வெவ்வேறு அணிகலன்களாய் மாறுபடுவது போல, ஒரு சூக்கும உடம்பாகிய காரணம், இறைவனது ஆற்றலால், வெவ்வேறு உடல்களாய்த் தோன்றும். ஆதலால், சற்காரியவாதத்திற்கு இழுக்கு இல்லை என்பதைத் தெளிவாக அறிவாயாக.

சூக்கும உடம்பு என்பது, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் தன்மாத்திரை ஐந்தும், மனம் புத்தி அகங்காரம் என்னும் அந்தக் கரணம் மூன்றும் ஆகிய எட்டு தத்துவங்களால் ஆயது. இவற்றுள் தன்மாத்திரை ஐந்தும் சூக்கும பூதங்கள் எனப்படும். மண், நீர், நெருப்பு, காற்று, வளி என்னும் ஐந்து தூல பூதங்களுக்கும் சூக்கும பூதங்கள் ஐந்தும் காரணமாய் இருக்கின்றன.

இந்த தூல பூதங்களால் உண்டாவன தூல சரீரங்கள். இந்த தூல சரீரங்கள் அழியும்போது, சூக்கும உடம்போடு கூடிய சூக்கும பூதங்களிலிருந்து தூல பூதங்கள் உண்டாகி, இவற்றால்வேறு பல தூல உடம்புகளும் உண்டாகும். எனவே, ஒரு சூக்கும உடம்பிலிருந்து பல தூல உடம்புகள் தோன்றும் என்பது பெறப்படும். படவே, சற்காரிய வாதத்தில் இழுக்கு அன்று என்பது தெளிவாகும்.

ஒரு சூக்கும உடம்பிலிருந்து பல தூல உடம்புகள் தோன்றி அழிவதற்கு உவமை கூறுகின்றது

சூக்குமம் கெட்டுத் தூலம்
 தோன்றிடா; சூக்குமத்தின்
ஆக்கி ஓர் உடல் கிடப்பது
 இன்று உடல் ஆக்கும் தன்மைக்கு
ஒக்கிய சத்தி உண்டாய்
 உடல் தரும் காலம் உற்று
நீக்கிட மரம் பின் வேர் ஓர்
 நீள்மரம் நிகழ்த்துமா போல். 138

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஒரு சூக்கும உடம்பின் நின்றும் பல தூல உடம்பு வருவது, பொன் – அணிகலன்கள் ஆயினாற்போல, ஒன்று பிறிது ஒன்று ஆவதும் அன்று; வித்து மரம் ஆயினாற் போல, ஒன்று கெட்டு ஒன்று தோன்றுவதும் அன்று.

அப்படியானால், சூக்கும உடம்பிலிருந்து தூல உடம்புகள் உண்டாவதற்கு வேறு என்னதான் எடுத்துக்காட்டு என்று கேட்டால் கூறுதும்; ஒரு மரம் கெடுகின்ற காலம் அமைவதால், அஃது அழிய இருக்கையில், அந்த மரத்தில் உள்ள வேரின் நின்றும் மற்றொரு நீண்ட மரம் உண்டாகும். இஃது அது போன்றதே ஆகும். ஆகவே, தூல உடம்புகள் தோன்றுவதற்கு இயைபுடைய ஆற்றல் சூக்கும உடம்பில் அடங்கி இருந்து தோன்றுகின்றன என்பது பெறப்படும்.

வெட்டப்பட்ட மரத்தின் வேரில் மற்றொரு மரம் ஆற்றல் வடிவில் இருந்து தோன்றுவது போல, சூக்கும உடம்பில் தூல உடம்புகள் ஆற்றல் வடிவில் இருந்து தோன்றும்.

பல தூல உடம்பு தோன்றி ஒடுங்குவதற்கு ஒரு சூக்கும உடம்பு வேண்டப்படும் என உவமை முகத்தால் விளக்குகின்றது

விதிப்படி சூக்கு மத்தே
உருவமும் வினையால் இங்கே
உதித்திடா உருவம் ஆக
உருவரும் மரங்கள் வித்தில்
கதித்து எழு மரமும் வித்தும்
கழியும்பின் அழியும் சூக்கம்
மதிக்கு எழு கலைகள் போல
வருவது போவ தாமே. 139

தெளிவுரை:

உருவமாய் விளங்குகின்ற மரங்கள், அவற்றின் வித்திலிருந்து தோன்றி விளங்கும். அதுபோல, இறைவன் ஆணையால் வினைக்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏற்ப, சூக்கும உடம்பிலிருந்து தூல உடம்புகள் தோன்றும். மரம் அழியும் பொழுது, அதன் வித்தும் உடன் அழிவது போல, தூல உடம்பு கெட்ட பொழுது, அதற்குக் காரணமான சூக்கும உடம்பும் கெடுமோ என்றால் கூறுதும்.

மேற்கூறிய உவமை சூக்குமத்தினின்றும் தூலம் தோன்றுவதற்கு மட்டுமே அன்றி, முற்றுவமை அன்று. ஆதலால், தூல உடம்பு கெட்டபொழுது சூக்கும உடம்பு கெடாது. அவ்வாறு கெடாது இருக்கவும். தூல உடம்பு தோன்றி ஒடுங்குவது எது போல எனின், சந்திரனுக்கு உள்ள கலை பதினாறில் காரணம் ஆகிய ஒரு கலை அழியாமல் நிற்க. மற்றக் கலைகள் தோன்றுதலும் ஒடுங்குதலும் போல ஆகும். ஒரு கலை இல்லாதிருந்தால் மற்றக் கலைகள் தோன்றாது போவதுபோல, சூக்கும உடம்பு இல்லாத பொழுது, தூல உடம்புகள் உருவமாகத் தோன்றிவிடா.

சூக்கும உடம்பிற்கு மூலம் அசுத்த மாயை என்றும் தூல சூக்கும உடல்கள் சிவத்தைச் சார்தல் பொருட்டு அஞ்ஞான காலத்தில் உள்ளனவாகும் என்றும் கூறுகின்றது

தூலமாம் உருவினுக்குச்
சூக்கும முதல்; அதற்கு
மூலம்மான்; அதற்கு மூலம்
மோகினி; அதன் முதல்தான்
மேலதாம் விந்து சத்தி
சிவம் இவை மிசையாம் எல்லாம்
சால இன்று ஆகும் ஆன்மாச்
சிவத்தினைச் சார்ந்த போது. 140

தெளிவுரை:

தூல உடம்பிற்கு முதற் காரணம் சூக்கும உடம்பு என்பது பெறப்பட்டது. சூக்கும உடம்பிற்கு முதற் காரணம் மூலப் பிரகிருதி ஆகும். மூலப் பிரகிருதிக்கு முதற்காரணம் அசுத்த மாயை ஆகும்.

மூலப் பிரகிருதிக்கு முதற்காரணம் ஆகிய அந்த அசுத்த மாயையே, இந்தப் பிரபஞ்சத்திற்கு மேலாகிய முதற்காரணம் ஆகும். எனவே, அசுத்தமாயை, மேலாகிய முதற்காரணம் என்றதனால், மூலப்பிரகிருதி அதன் கீழாகிய முதற்காரணம் என்பது புலப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏனைச் சுத்தமாயை ஆகிய குண்டலினி சத்தி, சுத்தமாய் இந்த இரண்டு மாயைக்கும் வியாபகமாய் நிற்கும். பிரகிருதி மாயை அசுத்த மாயை ஆகிய இரு மாயைகளால் உண்டாகும் தூல சூக்குமங்கள் ஆகிய இருவகைப் பிரபஞ்சமும், ஆன்மா சிவத்தை அடைவதற்கு ஏது ஆகிய பக்குவ காலம் பொருந்தும் பொருட்டு, இந்தப் பெத்த காலத்தில் (பிறப்பு நிலையில்) இறைவனால் ஏற்படுத்தப்பட்டன ஆகும்.

மான் – மூலப் பிரகிருதி.
மோகினி – அசுத்த மாயை.

மாயையினைக் குறித்து மூன்றாவது அதிகரணத்தில் விரிவாகப் பேசப்படுகிறது.

இரண்டாம் சூத்திரம்

மூன்றாம் அதிகரணம்

ஆணவ மலம் கன்மமலம் என்னும் நோயைத் தீர்த்து, சிவத்தை அடைவித்தற்கு தூல சூக்கும உடம்புகளை உயிர்க்கு இறைவன் தருகிறான் என்று கூறுகின்றது

அரன்விதி அருள் அது என்றே
அறைந்தனன்; அதுவும் முன்னே
தரை, நரகு, அரும் துறக்கம்
தனு கரணாதி எல்லாம்
வருவதும் செய்து, அநாதி
மலங்கள் இம் மருந்தால் தீர்த்துப்
பரகதி அதுவும் தந்து
பாத பங்கயமும் சூட்டும். 141

தெளிவுரை:

இறைவன் செய்யும் செயல்கள் கருணையே என்று முன்பே கூறப்பட்டது. அந்தக் கருணையும் பூமி, நரகம், சுவர்க்கம் முதலிய வற்றில் சென்று, அவற்றிற்கு உரிய பயனை அனுபவிப்பதற்குத் தனு கரண புவன போகங்களை எல்லாம், மாயையினின்றும் தோற்றுவித்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உயிர்களைப் பந்தித்துள்ள மலகன்மங்கள் என்னும் நோயை, இந்தத் தனு முதலிய மருந்துகளினால் தீர்த்துப் பின்பு உயிர்களுக்குப் பரஞானத்தை விளக்கி, சிவானந்தப் பெரும் பேற்றினை வழங்கும்.

இறையருள் உயிர்க்கு உள்ள மலநோயைத் தீர்த்து, மேலான ஞானத்தை விளங்கச் செய்து திருவடிப் பேற்றினைத் தரும்.

பரகதி – மேலான ஞானம்
பாதம் – திருவடி – சிவப்பேறு

ஆணவ மலத்தைத் தீர்த்தல் பொருட்டு, இறைவன் தனு கரணாதிகளை உயிர்களுக்கு வழங்குகிறான் எனக் கூறுகின்றது

எழும்உடல் கரணம் ஆதி
இவைமலம்; மலம் மலத்தால்
கழுவுவன் என்று சொன்ன
காரணம் என்னை என்னில்
செழுநவை அறுவை சாணி
உவர் செறிவித்து அழுக்கை
முழுவதும் கழிப்பன் மாயை
கொடு மலம் ஒழிப்பன் முன்னோன். 142

தெளிவுரை:

தனு கரணம் முதலிய யாவும் மாயா மல காரியங்கள். இந்த மாயா மலத்தினால் ஆணவ கன்ம மலங்களை இறைவன் நீக்குவன் என்று கூறியதற்கு என்ன காரணம் என்றால், அதற்கு விளக்கம் வருமாறு:

அழுக்கு உடைய மெல்லிய ஆடையின் அழுக்கை, சாணி உவர் மண் முதலிய பிறிது ஓர் அழுக்கைக் கொண்டு, வண்ணான் முழுமையாக நீக்குகிறான். அது போலவே, மாயா மலம் ஆகிய மருந்தைக் கொண்டு, ஏனை ஆணவ கன்ம மலங்கள் ஆகிய நோயை இறைவன் தீர்ப்பன்.

தனு என்பது உடல்; கரணம் என்பது ஐம்பொறிகளும் மனம் முதலிய அந்தக் கரணங்களும் ஆகும்; புவனம் என்பது உலகம்; போகம் என்பது உலகத்தில் உள்ள பொருள்களைக் குறிக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாயையின் இலக்கணம் கூறுகின்றது

நித்தமாய் அருவாய் ஏக
நிலையதாய் உலகத்திற்கு ஓர்
வித்துமாய் அசித்தாய் எங்கும்
வியாபியாய் விமலனுக்கு ஓர்
சத்தியாய்ப் புவன போகம்
தனு கரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை
மயக்கமும் செய்யும் அன்றே. 143

தெளிவுரை:

உலகிற்கு முதற் காரணம் எனப்படும் அசுத்த மாயையின் இலக்கணம் என்ன என்றால், கூறுதும்; மாயை உற்பத்தி இல்லாதது ஆதலால், நித்தம் ஆனது; கண்ணுக்குத் தோன்றாமையால், அருவமானது; வித்து ஆகியும் அறிவு இல்லாததால் சடம் ஆகியும், எந்த இடத்திலும் ஆன்மாக் களுக்கு தனு கரண புவன போகங்களைக் கொடுப்பதால் வியாபகமா யும், இறைவனின் வியாபகத்துள் அடங்குவதால், அவனுக்கு ஒரு வைப்பு சத்தியாகவும், புவனமும் போகமும் தனுவும் கரணமுமாக உயிர்களின் பொருட்டு விரிவதால், ஒரு மலமாகவும், உயிர்க்கு விபரீத உணர் வினைச் செய்வதால், மயக்கமாயும் உள்ள இலக்கணங்களை உடையது ஆகும்.

ஒன்றாய் உள்ளது அழியாது என்பதால், பல ஆகிய ஆன்மா அழியுமோ என்றால், பலவாயும் சித்தாயும் இருப்பதால் ஆன்மா அழியாது. ஆகவே, பலவாயும் சடமாயும் உள்ளனவே அழியும், ஒன்றாயும் சடமாயும் உள்ளது அழியாது; சித்து ஒன்று ஆயினும் பல ஆயினும் அழியாது என்பது அறியத்தக்கது.

மாயையினின்று காலதத்தவம் தோன்றும் எனவும் அதன் இயல்பும் கூறுகின்றது

மாயையில் கால மோடு
நியதிபின் கலாதி தோன்றும்
ஆய அக் காலம் மூன்றாய்
ஆக்கியும் அளித்தும் போக்கிக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காய மோடு உலகுக்கு எல்லாம்
கால சங்கயினைப் பண்ணி
நாயகன் ஆணையாலே
நடத்திடும் சகத்தை எல்லாம். **144**

தெளிவுரை:

அசுத்த மாயையிலிருந்து கால தத்துவமும் நியதி தத்துவமும் கலை தத்துவம் முதலியனவும் முறையே தோன்றும். அவற்றுள் ஒன்று ஆகிய கால தத்துவம் இறைவன் ஆணையால் இறந்த காலம், நிகழ் காலம், வருங்காலம் என முத்திறப்படும். கால தத்துவம், தோன்றுதல் நிற்றல் அழிதல் என்னும் முத்தொழிலை அடைவதாகும். ஆகவே உடலும் உலகும் ஆகிய காரியப் பிரபஞ்சம் அனைத்தையும், கால வரையறைக்கு உட்படுத்தி உலகத்தை எல்லாம் கன்மத்து அளவில் நடத்தி நிற்கும்.

கால தத்துவத்தின் பின்னர் நியதி தத்துவமும் கலா தத்துவமும் தோன்றும் எனவும், கலையில் வித்தை தத்து வமும் தோன்றும் எனவும் அவற்றின் இயல்பும் கூறுகின்றது

நியதிபின் தோன்றிக் கன்ம
நிச்சயம் பண்ணி நிற்கும்;
அயர்வு இலாக் கலைபின் தோன்றி
ஆணவம் ஒதுக்கிச் சித்தின்
செயல் புரி கிரியா சத்தி
தெரிவிக்கும் சிறிதே வித்தை
உயர்கலை அதனில் தோன்றி
அறிவினை உதிக்கப் பண்ணும். **145**

தெளிவுரை:

கலை தத்துவத்தின் பின்னர், அசுத்த மாயையிலிருந்து நியதி தத்துவம் தோன்றும். நியதி தத்துவம் அவரவர் செய்த கன்மத்தை அவரவரே அனுபவிக்குமாறு இறைவன் ஆணையால் நியமிக்கும். அதன் பிறகு அசுத்த மாயையிலிருந்தே அயற்சி இல்லாத கலை தத்துவம் தோன்றி, ஆன்மாவிடம் உள்ள ஆணவமல மறைப்பைச் சிறிது நீக்கி,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆன்மாவின் தொழில் செய்யும் கிரியா சத்தியை விளக்கி, இறைவன் ஆணையால், ஆன்மாவின் வினைக்கு ஈடாக வரும் போகத்தில் செலுத்தி நிற்கும். கலை தத்துவத்திலிருந்து வித்தியா தத்துவம் (வித்தை) தோன்றி, ஆன்மாவினது அறிவினைச் சிறிது விளக்கி, இறைவன் ஆணையால், ஆன்மாவைப் போகத்தில் செலுத்தி நிற்கும்.

வித்தையிலிருந்து அராகதத்துவம் தோன்றும் எனவும் அதன் இயல்பும் காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்றும் ஐந்தினோடு கூடிய உயிர் புருட தத்துவம் எனவும் கூறுகின்றது

விச்சையில் அராகம் தோன்றி
வினைவழி போகத்தின் கண்
இச்சையைப் பண்ணி நிற்கும்;
தொழில் அறிவு இச்சை மூன்றும்
வைச்ச போது இச்சா ஞானக்
கிரியை முன் மருவி ஆன்மா
நிச்சயம் புருடன் ஆகிப்
பொதுமையின் நிற்பன் அன்றே. **146**

தெளிவுரை:

வித்தை தத்துவத்திலிருந்து அராக தத்துவம் தோன்றும். அராகம், ஆன்மாவின் இச்சா சத்தியை விளக்கி, வினைக்கு ஈடாக வரும் போகத்தில், இறைவன் ஆணையால் ஆன்மாவைச் செலுத்தும். இவ்வாறு கலை, வித்தை, அராகம் என்னும் மூன்றும், முறையே ஆன்மாவின் செயல் அறிவு இச்சை என்னும் மூன்றனையும் விளக்கும்; அந்நிலையில் ஆன்மாவின் வினையை வரையறை செய்யும் கால தத்துவமும், ஒழுங்குபடுத்தும் (நியமிக்கும்) நியதி தத்துவமும் ஆக, காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்து தத்துவங்கள் ஆகிய சட்டையோடு கூடிய உயிர், இச்சா ஞானக் கிரியை மூன்றையும் சிறிது பொதுவகையால் பொருந்தி நிற்கும். அத்தகைய உயிரே உறுதி ஆகிய புருட தத்துவம் எனப் பெயர் பெற்று இறைவன் ஆணையால் போகத்தில் பற்றுச் செய்து நிற்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கலா தத்துவத்திலிருந்து மூலப் பிரகிருதியும் அதிலிருந்து குண தத்துவமும் தோன்றும் எனவும் குண தத்துவத்தின் இயல்பும் கூறுகிறது

வரும் குண வடிவாய் மூலப்
பிரகிருதி, கலையில் தோன்றித்
தரும் குணம் மூன்றாய், ஒன்றில்
தான் மூன்றாய், மும் மூன்று ஆகும்;
இரும் குண ரூபம் ஆகி
இயைந்திடும் எங்கும் ஆன்மாப்
பெரும் குண வடிவாய்ப் போக
சாதனம் பெந்தம் ஆமே. 147

தெளிவுரை:

அசுத்த மாயையிலிருந்து மேற்கூறியவாறு, காலம் முதலிய தத்து வங்கள் தோன்றியபிறகு, அந்தத் தத்துவங்களுள் ஒன்று ஆகிய கலை தத்துவத்திலிருந்து, குணங்கள் அடங்கி இருக்கின்ற மூலப்பிரகிருதி இறைவன் ஆணையால் தோன்றும். மூலப் பிரகிருதியிலிருந்து சாத்து விகம், இராசதம், தாமதம் என்னும் மூவகையான குண தத்துவம் தோன்றும். அந்தக் குணம் ஒவ்வொன்றும் மூன்று வகைப்பட்டு, ஒன்பது வகை ஆகும். குண தத்துவத்தில் போகத்துக்குச் சாதகம் ஆகிய புத்தி முதலிய தத்துவங்கள் தோன்றும்; அந்த தத்துவங்கள் எல்லாம் குண வடிவமாகவே இறைவன் ஆணையால் உயிரைப் பந்திக்கும் ஆதலி னால், போகம் அனுபவிக்கும் பொழுதெல்லாம் உயிர் குண ரூபமாகவே நிற்கும்.

சத்துவ குணம், பொறுமையையும், மன உறுதியையும் மனத் தின் நுட்பத்தையும், துன்பத்திலும் மகிழ்ச்சியாய் இருக்கும் தன்மை யையும், மனம் வாக்கு காயம் மூன்றும் கபடம் இன்றி ஒத்திருக்கும் தன்மையையும், நல்ல உற்சாகத்தையும் பெறுவதால், மகிழும் தன்மை, வீடு பேற்றில் விருப்பம், கருவி கரணங்களில் அடக்கம், எல்லா உயிர்களிடத்தும் இரக்கம், மென்மையான உணவு முதலியவற்றை உண்டு பண்ணும்.

இராசதகுணம், உலகியலில் முயற்சி (இலௌகீகப் பிரவிருத்தி) கோபம் முதலிய குரூரத் தன்மை, யான் எனது என்னும் நேசம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(அபிமானம்) வஞ்சனை, இரக்கம் இல்லாமை, போகத்தில் இச்சை, டம்ப நடை, துக்கம் முதலானவற்றை உண்டு பண்ணும்.

தாமத குணம், ஒன்றிலும் நிறைவு இல்லாமை, உற்சாகம் இன்மை, ஈனத் தொழில் (பிரவிருத்தி) கோள் சொல்லுதல், அசுத்த உணவு, அதிக உறக்கம், கர்வம், சோம்பல், பிறர் மதிப்பைக் குறைக்க எண்ணுதல், அறிவில்லாமை, மோகம், முதலானவற்றை உண்டு பண்ணும்.

ஒவ்வொரு குணமும் மூன்று வகைப்படுவது வருமாறு.

ஒரு குணம் மேம்பட்டு இருக்கும் பொழுது, ஏனைய இரண்டு குணங்கள் அடங்கித் தோன்றும். அவ்வாறு தோன்றும் பொழுது, சாத்து விகத்தில் சாத்துவிகம். இராசதம், தாமதம்; இராசதத்தில் இராசதம், தாமதம், சாத்துவிகம்; தாமதத்தில் தாமதம், சாத்துவிகம், இராசதம் என்று ஒன்பது வகைப்படும்.

மூலப்பிரகிருதியிலிருந்து குணதத்துவமே அன்றி, அஞ்ஞானமும் தோன்றும் எனவும், குணதத்துவத்திலிருந்து புத்தி தத்துவம் தோன்றும் எனவும், அவற்றின் இயல்பு கூறுகிறது

சித்தமாம் அவ்வியத்தம்
சிந்தனை அதுவும் செய்யும்;
புத்தி அவ்வியத்தில் தோன்றிப்
புண்ணிய பாவம் சார்ந்து
வத்து நிச்சயமும் பண்ணி
வரும் சுக துக்க மோகப்
பித்தினில் மயங்கி ஞானக்
கிரியையும் பேணி நிற்கும். 148

தெளிவுரை:

குண தத்துவத்திற்குக் காரணம் எனச் சித்தரிக்கப்படுவதாகிய மூலப் பிரகிருதி, குண தத்துவத்தைத் தோற்றுவிப்பதோடு மட்டும் அன்றி, ஒன்றைப் பிறிதொன்றாக உணரும் அவிச்சை ஆகிய அஞ்ஞானத்தினையும் தோன்றுவிக்கும். அதன்பிறகு, அந்தக் குண தத்துவத்திலிருந்து புத்தி தத்துவம் தோன்றும். புத்தி தத்துவம் உயிர்கள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செய்த நல்வினை தீவினைகளைப் பொருந்தி, அவற்றிற்கு ஈடாக வந்த பொருளை இன்னது என நிச்சயிக்கும்; அதன் பிறகு, அந்தப் பொருளை சுகம், துக்கம், மோகம், என்னும் வடிவில்வேறுபடுத்தும். அப்பொழுது அந்த வேறுபாட்டிற்கு ஏற்ப, ஆன்மாவின் அறிவையும் செயலையும் பொருந்தி நிற்கும்.

''சிந்தித்தாய்ச் சித்தம் தெளியாதாய், அங்காரம் புத்தியாய் ஆய்ந்து மனம் ஆகி'' என்னும் சிவஞான போதத் திருவெண்பாவில் சித்தம், மனம், அகங்காரம், புத்தி ஆகிய இவை முறையே ஒன்றன்பின் ஒன்றாய்த் தொழிற்படும் என்று கூறியிருக்கிறது.

ஆயினும், இந்த இடத்தில் புத்தியை முன்னதாகக் கூறி, வரும் செய்யுள்களில் அகங்காரம், மனம், சித்தம் முறையே ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றும் எனக் கூறுதல் முரணாகாதோ எனின், முரணாது; ஏனென்றால் இந்த இடத்தில் தோற்ற முறையும் சிவஞான போத்தில் தொழிற்படு முறையும் கூறியதனாலேயே ஆகும். இஃது எது போல எனின், ஓர் அரசனது மாளிகையைக் கூறமிடத்து, அகத்தே கொலுவீற்று இருக்கும் மண்டபம் முதல், வெளி வாயில் வரை ஒவ்வொன்றும் உள்ளனவாகக் கூறுவதும், அந்த மாளிகைக்குச் செல்லும் பொழுது, வெளிவாயில் முதலாக ஒவ்வொன்றாய்க் கடந்து செல்வதும் போலாகும்.

இந்தச் சித்தியார்ச் செய்யுளுக்குக் கொழும்பு, திரு.மு. திருவிளங்கம் அவர்கள் எழுதிய புத்துரையில் உள்ள குறிப்பு வருமாறு:

மூலப் பிரகிருதி குணவடிவாய் நிற்றலே அன்றிச் சித்த வடிவாயும் நிற்கும். குண வடிவாய் நின்று முக்குணங்களைத் தோற்றுவிக்க, ஆன்மா அவற்றைப் பொருந்தி, அக்குணங்களின் மயமாய் நிற்கும். சித்த வடிவாய் நின்று போக சிந்தனையை உண்டாக்க, குணங்களின் மயமாய் நிற்கும் ஆன்மா, விடய போகங்களை அறிந்து இச்சித்து அவற்றில் அழுந்தும். சாத்துவிக குணம் விடய போகங்களை அறியச் செய்யும்; தமோ குணம் அப்போகங்களில் இச்சையை உண்டாக்கும்; இராசத குணம் அப்போகங்களைப் பற்றச் செய்யும்.

மேற் கூறிய்வாறுஅன்றி, அவ்வியத்திலிருந்து சித்தம் தோன்றும் என்று பொருள் கூறினால், புருட தத்துவத்துக்குக் கீழ் உள்ள தத்துவங்கள் இருபத்து நான்கு என்று 160 ஆவது செய்யுளில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நூலாசிரியர் கூறுவதாலும், புரியட்ட உடம்பிற்குக் காரணமாய் உள்ள தத்துவங்களுள் ''சித்தம்'' சேர்க்கப்படாமையாலும் (செய்யுள் – 154) ''சிந்தை நினைவு ஐயம் வந்து தரும் மனம் ஒழிய வகுப்பு ஒணாதே'' என்று சிவப்பிரகாசம் (43)– புடை நூலாசிரியர் கூறுவதாலும், ''சிந்தனை அதுவும் செய்யும்'' என்று செய்யுளில் வரும் ''உம்மை'' பற்றிச் சித்தத்திற்கு வேறும் ஒருதொழில் உண்டு என்பது பெறப்படுவ தாலும், அது பொருந்தாது. அஃதாவது, ''அவ்வியத்திலிருந்து சித்தம் தோன்றும்'' என்று பொருள் கூறுவது பொருந்தாது என்பது திரு.மு. திருவிளங்கம் அவர்களின் கருத்து ஆகும். ஆகவே, மூலப்பிரகிருதி சித்த ரூபமாயும் நின்று புருடனுக்குப் போக சிந்தனையை உண்டாக்கும் என்பதே பொருந்தும்.

புத்தி தத்துவத்திலிருந்து அகங்காரத் தத்துவம் தோன்றும் எனவும் அதன் இயல்பும், அது மூன்று வகைப்படும் எனவும் கூறுகின்றது

ஆங்காரம் புத்தியின் கண்
உதித்து, அகந்தைக்கு வித்தாய்
ஈங்கு ஆர்தான் என்னோடு ஒப்பார்
என்று, யான் என்னது என்றே
நீங்காதே நிற்கும், தானும்
மூன்றதாய் நிகழும் என்பர்;
பாங்கு ஆர்பூதாதி வைகா
ரிகம் தைசதம்தான் என்றே. *149*

தெளிவுரை:

புத்தி தத்துவத்திலிருந்து அகங்கார தத்துவம் தோன்றும் இந்த இடத்தில் அகங்காரம் ''என்னோடு ஒப்பவர் ஒருவரும் இலர்'' என்று அகந்தைப் படுவதற்குக் காரணமாய் இருக்கிறது; உடலை 'யான்' என்றும், மற்றப் பொருள்களை 'என்னது' என்றும், அபிமானித்து உயிரோடு வேற்றுமை இன்றியும் அகங்காரம் நிற்கும். இவ்வாறு நிற்கும் அகங்கார தத்துவம், தனக்கு மூலம் ஆகிய குண தத்துவத்தின் வேறுபாடு காரணமாக, மூன்று வகைப்படும். அவை வருமாறு:

1. தாமத குணத்தின் தோற்றமான பூதாதி அகங்காரம்;
2. இராசத குணத்தின் தோற்றமான வைகரி அகங்காரம்;
3. சத்துவ குணத்தின் தோற்றமான தைசத அகங்காரம்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தைசத அகங்காரத்திலிருந்து மனம் தோன்றி, அந்த மனம் சித்த ரூபமாய் நிற்கும் எனவும், அவற்றின் இயல்பும், தைசத அகங்கா ரத்தில் மனத்தின் பின்னாக ஞானேந்திரியமும் தோன்றும் எனவும் கூறுகின்றது

மனம் அது தைசதத்தின்
வந்து ஒரு பொருளை முந்தி
நினைவதும் செய்து அங்கு ஐய
நிலைமையில் நிற்கும் ஆங்கே
இனம் மலி சோத்தி ராதி
கன்ம இந்திரியம் எல்லாம்
முனம்உரை செய்த வைகா
ரிகம் தரும் என்பர் முன்னோர். 150

தெளிவுரை:

அகங்காரம் மூன்றனுள்ளே, தைசத அகங்காரத்திலிருந்து மனம் தோன்றும், மனம் எதிர்ப்பட்ட பொருளைச் சித்த வடிவில் நின்று, அந்தப் பொருளின் உண்மையை அறியாமல், பிண்டமாக அறிந்து சிந்திக்கும். அதுவன்றி, அந்த மனமே அவ்வாறு சிந்தித்த பிறகு, அந்தப் பொருளில் அதுவோ இதுவோ, எது உண்மை என்று சந்தேகித்து நிற்கும்.

இவ்வாறு சந்தேகித்து நிற்பதால், அது மனம் என்றும் சிந்தித்து நிற்பதால் அது சித்தம் என்றும், மனம் ஒன்றே இவ்வாறு இரண்டு வகைப்பட்டு நிற்கும் என்பது புலப்படும்.

மனம் தோன்றிய பிறகு உணரும் வகையில், அந்த மனத்திற்கு இனம் ஆகிய ஞானேந்திரியங்கள், அந்த தைசத அகங்காரத்திலிருந்து, இறைவன் ஆணையால் தோன்றும். முன்பு கூறிய ஏனை வைகரி அகங்காரத்திலிருந்து கன்மேந்திரியம் ஐந்தும், இறைவன் ஆணையால் தோன்றும் என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

மனம் ஒருபொருளை இஃது யாதோ எனச் சிந்தித்து நிற்கும் நிலை சித்தம் எனப்படும், சிந்தித்த பிறகு அந்தப் பொருளில்அதுவோ இதுவோ என்று சந்தேகித்து நிற்கும் நிலை மனம் ஆகும். ஆகவே மனம் என்னும் தத்துவம் ஒன்றே, தொழில் வேறுபாடு காரணமாக, இருவகைப் பட்டு நிற்கும் என்பது கருத்தில் கொள்ளத் தக்கது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஞானேந்திரியங்கள் ஆவன இவை என்றும் அவற்றின் குணங்கள் இவை என்றும் கூறுகின்றது

நற்செவி, துவக்குக், கண், நா
நாசி ஐந்தினையும் நல்லோர்
புத்தி இந்திரியம் என்று
புகன்றனர்; இவை தமக்குச்
சத்த நற் பரிச ரூப
இரத கந்தங்கள் ஐந்தும்
வைத்தனர் விடயம் ஆக
அடைவினில் மருவும் என்றே. 151

தெளிவுரை:

இருவகை இந்திரியங்களுள், நல்ல தன்மையை உடைய செவி, உடல், கண், நாக்கு, நாசி ஆகிய ஐந்தினையும் ஞானேந்திரியங்கள் என்று நல்லவர்கள் சொல்லுவார்கள். அறியும் தன்மை உடைமையால் அவற்றிற்கு ஞானேந்திரியம் (அறிகருவி) என்பது பெயர் ஆயிற்று. இந்த இந்திரியங்கள் ஐந்திற்கும் முறையே சப்தம், பரிசம்,ரூபம், இரதம், கந்தம் ஆகியன விடயமாகப் பொருந்தும் என்று வைத்தனர்.

கன்மேந்திரியங்கள் இவை என்றும், அவற்றின் தொழில்கள் இவை என்றும் கூறுகின்றன

வாக்கொடு பாதம் பாணி
பாயுவோடு உபத்தம் ஐந்தும்
நீக்கினார் முன்னே கன்மேந்
திரியங்கள் என நினைந்தே
ஆக்கிய வசன கமன
தானமும் விசர்க்க ஆனந்தம்
ஊக்கம் ஆர் ஐந்தும் ஐந்தின்
தொழில் என ஓதி னாரே. 152

தெளிவுரை:

கன்மேந்திரியங்கள் ஆவன, வாக்கு, பாதம், கை, மல விசர்க்கம் செய்யும் பாயு, சல விசர்க்கம் செய்யும் உபத்தம் என ஐந்து ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

(இவற்றைத் தமிழில் முறையே வாய், கால், கை, எருவாய், கருவாய் என்பர்) இந்த ஐந்தும் தொழில் செய்யும் கருவிகள்; ஆதலால் இவற்றை ஞானேந்திரியங்களின் வேறாகக், கன்மேந்திரியங்கள் என்று முன்பே கருதி வைத்தனர். இந்த ஐந்து கன்மேந்திரியங்களின் தொழில்கள் முறையே வசனம், நடை, கௌடை, மலவிசர்க்கம், ஆனந்தம் என்னும் ஐந்தும் ஆகும் என்று கூறியுள்ளார்கள்.

விசர்க்கம்	–	கழித்தல்	–	விடுதல்
உபத்தம்	–	மறைவிடம்	–	குறி.

உயிர்க்கு ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் புறக் கருவி யும், மனம் முதலிய நான்கும் அகப்புறக் கருவியும், கலை முதலியன அகக் கருவியும் ஆகும் முறைமை கூறுகின்றது

வாயாதி சோத்தி ராதி
புறத்து வாழ் கருவி ஆகும்;
ஓயாத மனாதி காயத்து
உணரும் உட்கருவி ஆகும்;
ஆய்வார்கட்கு அராகம் ஆதி
அவற்றின் உட்கருவி என்பர்;
மாயாள் தன் வயிற்று இவற்றால்
துடக்குண்டு வாழும் ஆன்மா. 153

தெளிவுரை:

ஆன்மாவின் அறிவு தொழில்களை விளக்குவதற்கு இந்திரியம், அந்தக் கரணம், கலாதி என்னும் முத்திறத்துள் ஒன்று போதாதோ என்றால், போதாது. ஏனென்றால், ஒரு பொருளை அறிய வேண்டு பவர்க்கு, கன்மேந்திரிய ஞானேந்திரியங்கள் ஆகிய அந்த இருவகை இந்திரியங்களும் புறத்துத் தோன்றி, அறிந்து தொழிற்படும் புறக் கருவிகள் ஆகும். ஒழிவு இல்லாத மனம் முதலிய கரணங்கள், அந்த இந்திரியங்களால் அறியப்பட்ட பொருளை, உடம்பின் உள்ளே நின்று பகுத்து அறியும் உட்கருவிகள் ஆகும்.

ஏனைக் கலாதிகள் ஆவன, ஆய்வார்க்கு அந்தக் கரணங்களால் அறியப்பட்ட பொருள்களில் விருப்பு வெறுப்பு உற்று ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியா சத்தி பொருந்தச் செய்கின்றன; எனவே அவை உள் அந்தக் கரணங்கள் ஆகிய கருவிகள் ஆகும் என்பர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்த உள் அந்தக் கரணங்களை நோக்க மனம் முதலிய அந்தக் கரணம் புறம் ஆகவும் இந்திரியங்களை நோக்க அகமாகவும் இருக் கின்றன; எனவே மனம் முதலியவற்றை அகப்புறக் கருவி என்றும், கலை முதலியவற்றை அகக் கருவி என்றும் கூறுவர். இவ்வாறு இவை தம்முள் வேறுபட்டு உள்ளமையால், மாயையில் உண்டாகிய இந்த முத்திறக் கருவிகளாலும், உயிர் கட்டுப்பட்டு நிற்கும்.

பூதாதி அகங்காரத்திலிருந்து சப்தாதி தன்மாத்திரை ஐந்தும் தோன்றும் எனவும் அவற்றின் இயல்பும் தன் மாத்திரை ஐந்தும் மனம் புத்தி அகங்காரம் மூன்றும் ஆக எட்டும் புரியட்ட சரீரம் எனவும் கூறுகின்றது

ஓசை நற் பரிச ரூப
இரத கந்தங்கள் என்று
பேசும் மாத்திரைகள் ஐந்தும்
பிறக்கும் பூதாதி கத்தின்
நேச இந்திரியங்கட்கு
நிகழ் அறிவு இதனால் காண்டும்
ஆசை சேர் மனாதி தன் மாத்
திரை புரியட்டகம் தான். **154**

தெளிவுரை:

கன்மேந்திரியம் ஞானேந்திரியம் ஆகிய இருவகை இந்திரியங் களும் தோன்றிய பின்னர், ஏனைப் பூதாதி அகங்காரத்திலிருந்து சப்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம் என்று கூறப்படும் தன் மாத்திரைகள் ஐந்தும் தோன்றும். இவை முறையே ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்று கூறப்படும். விரும்பப் பெற்ற மேற்கூறிய இந்திரியங்கள், தத்தம் விடயங்களை விடயிக்குமாறு, இறைவன் ஆணையால் அந்தத் தன் மாத்திரைகள் ஊக்குவித்து நிற்கும். இந்தத் தன் மாத்திரைகள் ஐந்தும், இச்சையின் வடிவாகிய மனம், புத்தி, அகங்காரம் மூன்றும் ஆக எட்டும் புரியட்டக உடம்பு ஆகும்.

ஆன்மாவின் இச்சை அந்தக் கரணங்கள் இடத்தும், ஞானம் ஞானேந்திரியங்கள் இடத்தும், கிரியை கன்மேந்திரியங்கள் இடத்தும் நின்று விடயங்களை அறிந்து, பற்றி அவற்றில் அழுந்தும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேலே 151 ஆவது செய்யுளில் ஞானேந்திரியங்களின் குணங்களாகக் கூறிய சத்தாதி விடயம் வேறு; இந்தச் செய்யுளில் கூறிய சத்தாதி விடயம் வேறு. 151–ல் கூறிய சத்தாதி விடயம் போக வடிவில் புறத்தே இருக்கும், இந்தச் செய்யுளில் கூறிய சத்தாதி விடயம், தேக ரூபமாய் அகத்தே இருக்கும். அவ்வாறு இருப்பதுஎப்படி என்றால், சப்தம் அகத்தில் கேட்கும் தன்மையான அறிவாயும், புறத்தில் கேட்கப்படும் தன்மையான ஒலியாயும் இருக்கும். கேட்பது தன் அளவிற்றாயும், கேட்கப்படுவது பொருள் அளவிற்றாயும் இருக்கும்; ஆகவே, தன் அளவில் கேட்பதற்குத் தன்மாத்திரை என்றும், பொருள் அளவில் கேட்கப்படுவதற்கு விடயம் என்றும் பெயர் ஆயிற்று, இந்தச் செய்யுளில் 'மனாதி தன் மாத்திரை'' என்று கூறியது. அகத்தில் இருப்பதை உணர்த்துதல் பொருட்டாகும்.

ஆகாயம் முதலிய ஐந்து பூதங்கள் தன் மாத்திரையி லிருந்துதோன்றும் எனவும், அவற்றின் குணங்கள் ஒன்றற்கு ஒன்று ஏற்றமாய் இருக்கும் எனவும், இப் பூதங்களின் காரியங்கள் தாத்துவிகங்கள் ஆகிய அங்கம் ஆகவும், இப் பூதங்கள் அங்கியாகவும் இருக்கும் எனவும் கூறுகின்றது

சாற்றிய பஞ்ச தன்மாத்
திரைகளில் சத்தம் முன்னாத்
தோற்றும்; வான் வளி தீ நீர் மண்
தொடக்கியே ஒன்றுக்கு ஒன்று அங்கு
ஏற்றமாம்; ஓசை ஆதி
இருங்குணம் இயைந்து நிற்கும்
ஆற்றவே விடய பூதம்
அங்க அங்கி பாவத்து ஆமே. 155

தெளிவுரை:

சத்தம் முதலியவாகக் கூறிய தன் மாத்திரைகள் ஐந்தனுள் சத்தத்தில் ஆகாயமும், பரிசத்தில் வாயுவும், ரூபத்தில் அக்கினியும், இரதத்தில் அப்புவும், கந்தத்தில் பிருதிவியும்.ஆகிய தூல பூதம் ஐந்தும் தோன்றும். அந்தப் பூதங்களுள் ஆகாயம் சப்த குணத்தையும், வாயு சப்த பரிச குணங்களையும், அக்கினி சப்தபரிச ரூப குணங்களையும், அப்பு சப்த பரிச ரூப இரத குணங்களையும், பிருதிவி சப்த பரிச ரூப இரத கந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குணங்களையும் உடையனவாய் இருக்கும். இந்த ஐம்பெரும் பூதங்களும், தன் மாத்திரையோடு கூடி நின்று இந்திரியங்களைத் தொழிற்படுத்துவதற்கு, இந்தப் பூதங்களில் நின்று, காரிய பூதங்கள் ஆகிய அறுபது தாத்துவீகங்களும் தோன்றும், அந்தத் தாத்துவிகம் அங்கம் ஆகவும் இந்தத் தூல பூதங்கள் அங்கியாகவும் நிற்கும்.

''காரிய பூதம்'' என்பது, தூல பூதத்தின் நின்றும் காரியப் படுகின்ற பஞ்சீகரண பூதங்கள் ஆகும். ''பஞ்சீகரணம்'' என்பது, ஒரு பூதத்தை இரண்டு பங்கு ஆக்கி, ஒருபாதி நிற்க, மற்றப் பாதி ஒவ்வொன்றையும் நான்குகூறாகச் செய்து, ஒவ்வொரு நான்கு கூறையும் தன் பாதி நீங்கிய ஏனைய பாதியோடு கூட்டுதலைக் குறிக்கும். கூட்டவே, பிருதிவியில் எலும்பு, தசை, மயிர், தோல், நரம்பு முதலானவையும், அப்புவில் மூத்திரம், ரத்தம், சிலேட்டுமம், வியர்வை, சுக்கிலம் முதலானவையும், அக்கினியில் இருதய உஷ்ணம், அன்ன பானாதிகளைச் சீரணக்கச் செய்கை, கண்ணில் சூடு, தேகத்தில் சூடு, பயித்தியம் முதலானவையும், வாயுவில் தச வாயுக்களும், ஆகாயத்தில் தச நாடிகளும் உள்ளன ஆகும்.

'''அங்க அங்கி பாவம்'' என்பது, உடலும் உயிரும் பிரிப்பு இன்றி நிற்பது போல, இந்தப் பூதங்களும் சத்தாதி குணங்களும் பிரிப்பு இன்றி நிற்கும் தன்மையைக் குறிக்கும். பாவம் – தன்மை. அங்கம் – உடல்; அங்கி – உயிர், ஆற்றவே – மிகவும். விடய பூதம் – விடய வடிவான அகப்புறப் பூதங்களும் புறப்பூதங்களும்; விடய – அறியத் தக்க.

தூல சரீர தத்துவங்கள் ஆகிய தாத்துவீகங்கள், சூக்கும சரீர தத்துவங்கள் போல, ஆன்மாவுக்கு நிலைத்து இருப்பது இன்றி, அழியும் தன்மை உடையது; ஆதலால் தாத்துவீகம் எனப்பட்டது. தாத்துவீகம் எனப்படும் தூல சரீர தத்துவங்கள் அறுபதும் எவைஎன்பதை, இந்தப் பயிற்சசி மையத்தின் வெளியீடு ஆகிய ''சைவ சித்தாந்த அடிப்படைக் கொள்கைகள்'' (தடைகளும் விடைகளும்) என்னும் நூலில் காணலாம். சுத்தமாயா காரியம் ஆகிய சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்குகள் நான்கும் தாத்துவிகங்கள் அறுபதில் காணப்படுவதற்குக் காரணம், அவை தொழிற்படும் முறை பற்றி, தூல பூத காரியமாய்க் கூறப்பட்டது என்பது கருத்தில் கொள்ளத் தக்கது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஐந்து பூதங்களின் குணமும் தொழிலும் இவை எனக் கூறுகின்றது

இரந்திரம் ஆகி வான்தான்
இடம் கொடுத்திடும்; சலித்துப்
பரந்தவை திரட்டும் கால்; தீச்
சுட்டு ஒன்று வித்தல் பண்ணும்;
நிரந்தரம் குளிர்ந்து நின்று
பதம் செய்யும் நீர்; மண் தானும்
உரம்தரு கடினம் ஆகித்
தரித்திடும்; உணர்ந்து கொள்ளே; **156**

தெளிவுரை:

ஐம்பெரும் பூதங்களுள் ஆகாயம் வெளி ஆகிய குணத்தையும் இடம் கொடுத்தல் ஆகிய தொழிலையும் உடையதாகும். வாயு, சலித்தல் ஆகிய குணத்தையும் பரந்தவற்றைத் திரட்டுதல் ஆகிய தொழிலையும் உடையதாகும். அக்கினி சுடுதல் ஆகிய குணத்தையும் எவற்றையும் சுட்டு நீறு ஆக்கும் தொழிலையும் உடையதாகும். நீர் இடைவிடாது குளிர்தல் ஆகிய குணத்தையும் நனைத்தல் ஆகிய தொழிலையும் உடையதாகும். மண், வலிமை தருவதற்கு ஏது ஆகி கடினமான குணத்தையும் எவற்றையும் தாங்குதல் ஆகிய தொழிலையும் உடையதாகும். இவற்றின் குணத்தையும் தொழிலையும் இவ்வாறு அறிவாயாக.

ஐந்து பூதங்களின் வடிவும், நிறமும், பீஜ அக்கரம் இவை எனக் கூறுகின்றது

மண், புனல், அனல், கால், வான் பால்
வடிவு நாற்கோணம் ஆகும்;
தண்பிறை மூன்று கோணம்
தகும் அறுகோணம் வட்டம்
வண் பொன்மை வெம்மை செம்மை
கறுப்பொடு தூம வன்னம்
எண்தரும் எழுத்துத் தானும் **157**
லவரய அவ்வும் ஆமே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

பூதங்களின் வடிவங்கள், நிறங்கள், பீச எழுத்துக்கள் ஆகியன வருமாறு:

பூதம்	வடிவம்	நிறம்	பீச எழுத்து
நிலம்	நாற்கோணம்	பொன்நிறம்	ல காரம்
நீர்	பிறைபோல் இருகோணம்	வெண்நிறம்	வ காரம்
தீ	முக்கோணம்	செந்நிறம்	ர காரம்
காற்று	அறுகோணம்	கருமைநிறம்	ய காரம்
ஆகாயம்	வட்டம்	புகை நிறம்	அ காரம்

ஐந்து பூதங்களின் அடையாளங்களும் அதி தெய்வங்களும் இவை எனக் கூறி நிவர்த்தி முதலிய பஞ்சகலைகட்கும் அவை உன் எனக் கூறுகின்றது

குறிகள் வச்சிரத்தி னோடு
மோகனதம் சுவத்தி
அறுபுள்ளி அமுத விந்து
அதி தெய்வம் அயன் மால் ஆதி
செறிபுகழ் ஈசனோடு
சதாசிவம் பூத தெய்வம்
நெறிதரு கலை ஐந்திற்கும்
நிகழ்த்துவர் இந்த நீர்மை. 158

தெளிவுரை:

ஐந்து பூதங்களுள் பிருதிவி வச்சிராயுதத்தை அடையாளமாகவும் பிரமாவை அதிதேவதையாகவும் உடையதாய் இருக்கும். பூதங்களின் அடையாளங்களும் அதி தேவதைகளும் வருமாறு:

பூதம்	அடையாளம்	தேவதை
பிருதிவி	வச்சிராயுதம்	பிரமா
அப்பு	தாமரை	விட்டுணு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தேயு	இருதலை மேழி	உருத்திரன்
வாயு	அறுபுள்ளி	மகேசுவரன்
ஆகாசம்	அமிர்த விந்து ஆகிய வட்டம்	சதாசிவதேவன்

மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்னும் அத்துவாக்கள் ஆறனையும் அடக்கி நிற்கும் நிவர்த்தி முதலிய ஐந்து கலைகளுக்கும். இந்த அடையாளங்களும் அதிதெய்வங்களும் உண்டு என்று பெரியோர் கூறுவர். ஐந்துகலைகள் ஆவன வருமாறு: நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தி அதீதை என்பனவாகும். இவற்றைப் பின்பு எட்டாம் சூத்திரத்தில் விரிவாகக் காணலாம்.

தத்துவம் முப்பத்தாறும் மூவகை இயல்பை உடையன எனக் கூறுகின்றது

சுத்த தத்துவங்கள் என்று
முன்னமே சொன்ன ஐந்தும்
இத்தகைமையின் இயம்பும்
இவை முப்பத்து ஒன்றும் ஆகத்
தத்துவம் முப்பது ஆறாம்
சைதன்னியங்கள் ஐந்தும்
சித்தசித்து ஆன்மா ஒன்று
முப்பதும் அசித்தே செப்பில் *159*

தெளிவுரை:

இந்நூலின் முதல் சூத்திரத்தில் சொன்ன சுத்த தத்துவங்கள் ஐந்தும், இந்தச் சூத்திரத்தில் இதுவரை கூறிய தத்துவம் முப்பத்து ஒன்றும் ஆக, தத்துவம் முப்பத்து ஆறு ஆகும். இவற்றுள் சுத்ததத்துவம் ஆகிய ஐந்தும் சடம் ஆயினும், சிற்சத்திக்கு சுதந்தரவடிவு ஆதலின், சைதன்னியம் என்று சொல்லப்படும். (சைதன்னியம் – சேதனம் – அறிவுடையது) ஏனை முப்பத்து ஒன்று தத்துவங்களுள், புருட தத்துவம் ஒன்று சித்தையும் அசித்தையும் சார்ந்து அதன்தன் வண்ணமாய் நிற்கும் உரிமை உடைமையால், சித்தசித்து எனப்படும். (சித்து – அறிவுடையது; அசித்து – அறிவற்றது) அஃது ஒழிந்த முப்பது தத்துவங்களும் சடம் ஆதலால், அசித்து என்றே கூறப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முப்பத்தாறு தத்துவமும் சுத்தம், சுத்தாசுத்தம், அசுத்தம் என மூவகையாகவும், பிரேரகாண்டம், போக காண்டம், போக்கிய காண்டம் என்ற மூன்று காண்டமாகவும் இருக்கும் எனக் கூறுகின்றது:

ஐந்து சுத்தத்தின் கீழ், ஏழ்
சுத்தாசுத்தம், அசுத்தம்
தந்திடும் புமான் கீழ், எண் மூன்று
ஆய தத்துவம் சீவர்க்கு
வந்திடும்: பிரேர காண்டம்
மருவு போக சயித்திரத் தோடு
அந்தமில் அணுக் களுக்குப்
-போக்கிய காண்டம் ஆமே. 160

தெளிவுரை:

தத்துவம் முப்பத்து ஆறனுள், முற்கூறிய ஐந்து தத்துவமும் சுத்ததத்துவம் ஆகும். அதன் கீழான காலம் முதலிய ஏழு தத்துவமும் சுத்தா சுத்த தத்துவம் ஆகும். புருடதத்துவத்தின் கீழான ஏனைய இருபத்து நாலு தத்துவமும் அசுத்த தத்துவம் ஆகும். இவை முறையே சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயையில் உண்டானதினால், இவ்வாறு வகுக்கப்பட்டன.

அசுத்த மாயை, சுத்தமாயைக்கும் பிரகிருதி மாயைக்கும் நடுவில் நின்றமையால், சுத்தாசுத்தம் எனப்பட்டது. பிரகிருதி மாயை, தூல சூக்கும உடல்களுக்கு ஆதாரமாய் நின்றமையால், அசுத்தம் எனப்பட்டது. சுத்ததத்துவம் ஐந்தும், கலாதி தத்துவங்களைப் போகத்தில் செலுத்துவதற்கு ஏதுவாய் நிற்கும் ஆதலால் சுத்த தத்துவம் பிரேர காண்டம் ஆகும். (பிரேரகம்–செலுத்துதல்) சுத்தாசுத்த தத்துவம் ஏழும் உயிர்களுக்குப் போகங்களைத் தோற்றுவிக்கும்; ஆதலால் சுத்தாசுத்த தத்துவம் போகசயித்துருகாண்டம் ஆகும். (சயித்துரு – உண்டு பண்ணுவது) அசுத்த தத்துவம் இருபத்துநாலும், உயிர்கள் போகங்களை அனுபவிப்பதற்கு ஏதுவாய் இருக்கும்; ஆதலால் அது போக்கியகாண்டம் ஆகும் (போக்கியம் – அனுபவம்) அசுத்த தத்துவம் ஆன்மாவோடு சம்பந்தப்பட்டு இருப்பதால் ஆன்மதத்துவம் எனவும்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிரபஞ்சம் அனைத்தும் தத்துவம் வடிவாய், தூலம் சூக்குமம் அதிசூக்குமம் என முத்திறப்படும் எனவும் இந்த தத்துவங்களைப் பொருந்தும் அணுபக்க சம்புபக்கத்து அதிதெய்வங்கள் அந்த அந்த தத்துவப் பெயரைப் பெறும் எனவும் அனைத்தையும் தத்துவத்தில் வைத்துக்காணவேண்டும் எனவும் கூறுகின்றது:

தத்துவ ரூபம் ஆகும்
　　தரும் அரு உருவம் எல்லாம்
தத்துவம் தூல சூக்க
　　பரங்களும் ஆகி நிற்கும்;
தத்துவம் தன்னில் சாரும்
　　அணுக்கள் சாதாக்கியத்தில்
தத்துவ சத்தம் சாரும்;
　　சகலமும் தத்துவம காண். 161

தெளிவுரை:

மாயையினாலே தரப்பட்ட பிரபஞ்சம் அனைத்தும் அருவும் உருவும் அருவுருவும் என முத்திறப்படும். எவ்வாறு என்றால், பிரபஞ்சம் எல்லாம் பஞ்சபூதத்தில் அடங்கும். அந்தப் பஞ்ச பூதத்துள், ஆகாயம் கண்ணுக்குப் புலப்படாமையால், அஃது அருவம் ஆகும்; வாயு கண்ணுக்குப் புலப்படாமையாலும்; உடலினால் பரிசித்தலினாலும், அஃது அருவுருவம் ஆகும்; அக்கினி, அப்பு, பிருதிவி என்னும் மூன்றும் கண்ணுக்குப் புலப்படுவதால் உருவம் ஆகும். இந்தப் பூதங்களின் காரியம் ஆகிய பரபஞ்சம் முழுவதையும் இவ்வாறே கண்டு தெளிதல் வேண்டும்.

இந்தத் தன்மையை உடைய பிரபஞ்சம் அனைத்தும், தத்துவங்களுள் அடங்குவதால், தத்துவ வடிவே ஆகும். தத்துவம் முப்பத்து ஆறும் தூல தத்துவம், சூக்கும தத்துவம், அதிசூக்கும தத்துவம் என முத்திறப்படும். எவ்வாறு என்றால் தத்துவங்களுக்குக் காரணமான பிரகிருதி மாயை, தூல தத்துவம் ஆகும்; அசுத்தமாயை சூக்கும தத்துவம் ஆகும்; சுத்தமாயை அதிசூக்கம தத்துவம் ஆகும். ஆகவே இந்த மூன்று மாயைகளில் தோன்றிய பல்வேறு தத்துவங்களும் தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என முத்திறப்படும். இந்தத் தன்மையை உடைய தத்துவங்களைப் பொருந்திச் செலுத்துகின்ற அணுபக்க சம்புபக்கத்து அதிதெய்வங்களும், அந்தந்த தத்துவப் பெயரையே பெறும்; எனவே, எல்லாப் பொருள்களையும் தத்துவங்களில் வைத்துக் காணல் வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தத்துவங்களைப் பொருந்திய தெய்வங்கள், அந்த தத்துவப் பெயரைப் பெறுதல் எதுபோல எனில், அரசனது ஆணையாகிய உத்தியோகத்தைப் பெற்ற ஒவ்வொரு அரசு அதிகார்ரியும், அந்தந்தப் பெயரைப் பெறுவதுபோல் ஆகும். அணுபக்கம் என்பது மூவகை உயிர்கள் ஆகிய அதிதெய்வங்களைக் குறிக்கும்; சம்புபக்கம் என்பது, பதிவர்க்கம் ஆகிய சிவ மூர்த்தங்களைக் குறிக்கும்.

தத்துவங்கள் ஒடுங்கும் முறை இவ்வாறு எனவும், ஒடுக்கும் கடவுளர் இவர் எனவும் கூறுகின்றது:

தத்துவம் எண் மூன்றும் சென்று
ஆன்ம தத்துவத்து ஒடுங்கும்;
வித்தையின் ஒடுங்கும் ஆறும்;
சிவத்தினின் ஒடுங்கும் மூன்றும்;
நித்த தத்துவம் இம் மூன்றும்
என்பார்கள், இரண்டும் நின்ற
சுத்தமாம் சிவத்து ஒடுங்கும்;
தோற்றமும் இதுபோல் ஆகும். 162

தெளிவுரை:

முப்பத்தாறு தத்துவங்களும் சங்கார காலத்தில், தத்தம் காரணங்களில் ஒடுங்கும் பொழுது, நிலம் முதல் மூலப்பிரகிருதி ஈறாகிய இருபத்து நான்கு தத்துவங்களும் சென்ற, சகல வர்க்கத்து ஆன்மாக்களுக்கு அதிதெய்வம் ஆகிய சீகண்டருத்திரனால் ஒடுங்கும்.

மூலப் பிரகிருதிக்கு மேல் உள்ள ஆறு தத்துவமும், வித்தை ஈசர் ஆகிய அனந்ததேவரால் ஒடுங்கும். சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம் ஆகிய மூன்று தத்துவமும், லய சிவனால் ஒடுங்கும் ; ஏனைச் சத்தி தத்துவம், சிவதத்துவம் இரண்டும், சுத்த சிவனால் ஒடுங்கும். புனர் உற்பவம் ஆகும்பொழுது, அந்த அந்த தத்துவங்கள் அவர் அவரால் தோன்றும். சுத்த சிவன் ஒருவனே, தோற்றம் ஒடுக்கம் இல்லாத நித்தியன். லயசிவன், போகசிவன் ஆகிய அனந்த தேவர், அதிகாரசிவம் ஆகிய சீகண்ட ருத்திரன் என்னும் மூவரையும் அவ்வாறு நித்தியர் என்பாரும் உளர்; அஃது உபசாரமே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குறிப்பு: அனந்ததேவரால் ஒடுங்கும் ஆறும், அராகம் முதல் மாயை ஈறாக உள்ள வித்தியா தத்துவங்கள் ஆறும் ஆகும்.

இரண்டாம் சூத்திரம்

நான்காம் அதிகரணம்

இவற்றின் தன்மை தனக்கு எய்தல் இன்றித் தானே நிலவு சீர் அமலன் ஆகி, ஒளியாய் ஓங்கி நின்றனன், நீங்காது எங்கும் என்பது.

இந்த அதிகரணம் முக்கூற்றை உடையது. அவற்றுள் முதற்கூறு, ''நிலவுசீர் அமலன் ஆகி'' என்பது; இரண்டாவது கூறு, ''நின்றனன் நீங்காது எங்கும்'' என்பது; மூன்றாம் கூறு, ''இவற்றின் தன்மை தனக்கு எய்தல் இன்றி'' என்பது, இவை முறையே இந்த அதிகரணத்தில் விரித்துக் கூறப்படுகின்றன.

மூவகைப் புறச் சமயத் தெய்வங்கள், பிரகிருதி மாயா தத்துவம், அசுத்த மாயா தத்துவங்களில் நிலைபெறும் எனவும், அகச்சமய தெய்வம் ஆகிய லய போக அதிகார சிவபேதங்கள், சுத்தமாயா தத்துவத்தில் நிலைபெறும் எனவும், சுத்தசிவம் இந்த முப்பத்தாறு தத்தவங்களையும் கடந்து நிற்கும் எனவும், அமலன் ஆதலை விளக்கிக் கூறுகின்றது:

மொய்தரு பூதம் ஆதி
மோகினி அந்தம் ஆகப்
பொய்தரு சமயம் எல்லாம்
புக்கு நின்றிடும்; புகன்று
மெய்தரு சைவம் ஆதி
இருமூன்றும் வித்தை ஆதி
எய்து தத்துவங்கள் ஏயும்
ஒன்றும் இன்று எம் இறைக்கே. *163*

தெளிவுரை:

நிலையில்லாத கொள்கைகளை உடைய பொய்ச் சமயங்கள் எனப்படும் சாருவாகம் முதல் ஐக்கியவாத சைவம் ஈறாக உள்ள புறப்புறச் சமயம், புறச்சமயம், அகப்புறச் சமயம் என்னும் முக்கூற்றுச்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சமயத் தெய்வங்கள் எல்லாம் நெருங்கிய பூதம் முதல் அசுத்தமாயா தத்துவம் ஈறாகிய ஒவ்வொரு தத்துவங்களில் நிலைபெறும்.

சிவாமகங்களுள் கூறப்படும் ஏகன், அநேகன், இருள். கன்மம், மாயை இரண்டு என்னும் ஆறு பொருளின் உண்மைத் தன்மையை விளக்குகின்ற சைவம் எனப்படும் தலையாகிய அறுவகைச் சமயத் தெய்வமாய் நின்ற அதிகார சிவம், போகசிவம், லயசிவம் என்னும் சிவபேதங்கள், சுத்தவித்தை முதலிய சுத்ததத்துவம் ஐந்தனுள் ஒவ்வொன்றில் நிலைபெறும். சித்தாந்த சைவம் என்னும் நிலையான கொள்கைகளை உடைய உண்மைச் சமயத்தின் தெய்வம் ஆகிய எங்கள் சிவபெருமான (சுத்த சிவம்) இந்த முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து நிற்கும்.

சுத்த சிவம் ஆகிய சிவபெருமானே சுத்தமாயா தத்துவங்களில் ஒன்பது பேதமாய் நின்று தொழில் செய்வன் எனக் கூறுகின்றது:

சிவம், சத்தி, நாதம், விந்து,
சதாசிவன், திகழும் ஈசன்,
உவந்து அருள் உருத்திரன் தான்,
மால், அயன் ஒன்றின் ஒன்றாய்ப்,
பவம்தரும் அருவம் நாலு இங்கு
உருவம் நாலு; உபயம் ஒன்றாய்
நவம் தரு பேதம் ஏக
நாதனே நடிப்பன் என்பர். *164*

தெளிவுரை:

அவ்வாறு முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து, ஒன்றும் இன்றி நிற்கும் எங்கள் இறைவனே, ஒவ்வொரு தத்துவங்களில் நின்றுகொண்டு, தத்தம் தொழில்களைச் செய்யும் முறைமையில் 'சிவம்' எனவும், 'சத்தி' எனவும், 'நாதம்' எனவும், 'விந்து' எனவும், 'சதாசிவன்' எனவும், 'மாகேசன்' எனவும், 'உருத்திரன்' எனவும், 'விட்டுணு' எனவும், 'பிரமன்' எனவும் ஒன்றின் ஒன்றாகத் தோன்றி ஒன்பது பேதம் ஆவான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அந்த பேதங்களுள் சிவம், சத்தி, நாதம், விந்து ஆகிய நான்கும் இறைவனுக்கு அருவத் திருமேனி ஆகும்; மகேசன், உருத்திரன், விட்டுணு, பிரமன் ஆகிய நான்கும் உருவத் திருமேனி ஆகும்; சதாசிவம் அருவுருவத் திருமேனி ஆகும். அருவம், உருவம், அருவுருவம் என்னும் இந்த முத்திறத்து ஒன்பது பேதத்திலும் இறைவன் வேற்றுமை இன்றி நின்று, அந்தந்த தொழில்களைச் செய்வன் என்பர்.

இந்த ஒன்பது பேதத்துள், சத்தி, விந்து என்னும் இரண்டும் சத்தி பேதம் ஆகும்; ஆயினும் சிவம் முதல் பிரமன் ஈறாகிய சிவபேதம் ஏழும் தோன்றும் முறையில் ஒன்றுக்கு ஒன்று காரணமாய் இடையில் நிற்பது பற்றி, சிவபேதத்துடன வைத்து எண்ணியவாறு ஆகும்.

சிவபேதம் ஏழும் தோன்றும் முறை வருமாறு.

சிவபெருமான ஆன்மாக்களின் மலநோயைத் தீர்த்தல் பொருட்டுச் சுத்த மாயையில் தொழில செய்தற்குத் திருவுளம் கொண்ட அவதாரம் ''சிவம்'' ஆகும். துன்பத்தை நீக்க நினைந்த அவதாரம் ஆகலின், இதனைப் ''பரநாதம்'' என்பர். அதன் பிறகு எவ்வாறு தொழில் செய்ய வேண்டும் என்று எண்ணிய அவதரம் ''சத்தி'' ஆகும். சத்தி என்பது அடங்கி நிற்கும் ஆற்றலைக் குறிக்கும். அஃது இந்த இடத்தில் இவ்வாறு செய்யலாம் எனத் தோன்றாது நிற்பதைக் குறித்து நின்றது. இந்த அவதரத்தில் ஓர் குறிப்பு நிகழ்வதால், இந்த சத்தியை ''பரவிந்து'' என்பர். ''நாதம்'' என்பது ஒலியையும் ''விந்து'' என்பது கிரியையும் உணர்த்தும்.

அதன்பிறகு, எண்ணியவாறே செய்வதற்கு முதற் காரணமாய் தன்னுள் அடங்கி இருந்த சுத்த மாயையோடு கூடிய அவதாரம் ''நாதம்'' ஆகும். அந்தச் சுத்த மாயையோடு கூடிச் செய்ய வேண்டுவனவற்றைச் செய்ய எண்ணிய அவதரம் ''விந்து'' ஆகும். முன்னர்க் கூறிய நாதம் விந்து, சுத்தமாயையோடு கூடாத அவதரத்தில் உண்டானமையால், அவையிரண்டும் பரநாதம், பரவிந்து எனப்படும். பின்னர்க் கூறிய நாதம் விந்து சுத்தமாயையோடு கூடிய அவதாரத்தில் உண்டானமையால், அபரநாதம் அபரவிந்து எனப்படும். இந்த அபரநாதம் அபரவிந்துவையும் சிவம், சத்தி எனக் கூறுவதும் உண்டு.

மேலே முதல் சூத்திரத்தில் இலயசிவம் என்று கூறிய சிவம் சத்தி, இந்த அபரநாதம் அபர விந்துக்களே ஆகும். அதன் பிறகு இன்ன

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இன்னவாறு செய்ய வேண்டும் என்று எண்ணிய அவதரம் ''சதாசிவம்'' ஆகும். சத்தியோடு கூடிய சிவம் சதாசிவம். எண்ணும் முதன்மை சிவத்தையும் எண்ணுதற்கு உரிய ஆற்றல் சத்தியையும் குறித்துச் சதாசிவம் எனப்பட்டது.

எண்ணியவாறு செய்யும் பொழுது, அவரவர் கன்ம பலத்தை அனுபவிக்கச் செய்யும் முறைமையில், அனுபவிக்க வேண்டாத கன்ம பலன்களையும் அனுபவிக்க வேண்டிய கன்மபலன்களின் உள்ள குண தோடங்களையும் மறைத்தல் ஆகிய அவதரம் ''மகேசுவரம்'' ஆகும். மகத்தான ஐசுவரியத்தை உடையது மகேசுவரம். அனுபவிக்க வேண்டிய ஐசுவரியங்களை கொடுத்தும், அனுபிவக்க வேண்டாத ஐசுவரியங்களை மறைத்தும் வைப்பதனால் மகேசுவரம் எனப்பட்டது.

அவ்வாறு அனுபவிக்கும் காலத்தில், இளைப்பு ஒழித்தல் பொருட்டும், வேறு உலகத்தில், இன்பதுன்பம் அனுபவித்தல் பொருட்டும், இந்த உலகத்தில் வேறு சரீர வாயிலாக இன்ப துன்பம் அனுபவித்தல் பொருட்டும் சங்கரித்தல் ஆகிய அவதரம் ''உருத்திரன்'' ஆகும். அனுபவிப்பதற்காக நிலைக்கச் செய்யும் அவதாரம் ''விட்டுணு'' ஆகும். அனுபவத்திற்கு உரிய உடல்கருவி உலகம் பொருள் முதலியவற்றைத் தோற்றுவிக்கும் அவதரம் ''பிரமம்'' ஆகும். இதற்கு மேல் செய்ய வேண்டுவது ஒன்றும் இல்லாமையால் ஒன்பது பேதம் என வரையறுக்கப்பட்டது.

சிவம், சத்தி, நாதம். விந்து என்னும் நான்கும் வெளிப்படாது தன் மாட்டு நிகழ்வதால், அருவத் திருமேனி (நிட்களத் திருமேனி) எனப்படும். தன் மாட்டு நிகழும் இத்திருமேனியோடு கூடிய சிவபெருமான் ''சத்தர்'' எனப்படுவர்.

சதாசிவம் சத்தியோடு கூடிப் பிறபொருளோடு கலந்தும் கலவாமலும் நிற்பதால் அருவுருவத் திருமேனி (சகள நிட்களத் திருமேனி) எனப்படும். ஆலோசனை வடிவாய் இருக்கும் இந்தத் திருமேனியோடு கூடிய சிவபெருமான் ''உத்தியுத்தர்'' எனப்படுவர். மகேசுவரம் முதலிய நான்கும் உருவமாய்க் காணப்படுவதால், உருவத்திருமேனி (சகளத் திருமேனி) எனப்படும். தொழில் செய்வது ஆகிய இந்தத் திருமேனிகளோடு கூடிய சிவபெருமான், ''பிரவிருத்தர்'' எனப்படுவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

'களம்' என்பது வடிவத்தைக் குறிக்கும்; 'சகளம்' என்பது வடிவத்தோடு கூடியது; இதுவே நடராசர் முதலிய மூர்த்தங்கள், சகள நிட்களம் மகாலிங்கம்.

பிரமம் முதல் சிவம் ஈறாகிய சிவபேதம் ஏழற்கும் பராசத்தி ஆகிய ஒருத்தியே சரஸ்வதி முதலிய சத்தி பேதம் ஏழாய் நிற்பன் எனக் கூறுகின்றது.

சத்தியாய், விந்து சத்தி
யாய், மனோன்மணி தானாகி,
ஒத்துறும் மகேசை ஆகி,
உமை, திரு, வாணி ஆகி
வைத்துறும் சிவாதிக்கு இங்ஙன்
வரும் சத்தி ஒருத்தி ஆகும்;
எத்திறம் நின்றான் ஈசன்
அத்திறம் அவளும் நிற்பள். 165

தெளிவுரை:

மேற்கூறிய ஒன்பதனுள் சத்தி, விந்து இரண்டும் சத்தி பேதம். ஆதலால், ஏனைய சிவபேதம் ஏழற்கும் உரிய சத்தி பேதமும் ஏழு ஆகும். அவை வருமாறு:

சிவத்திற்கு சத்தி; நாதத்திற்கு விந்து; சதாசிவத்திற்கு மனோன்மனி; மகேசனுக்கு மகேசை; உருத்திரனுக்கு உமை; விட்டுணுவிற்குத் திரு (இலட்சுமி), பிரமனுக்கு வாணி (சரஸ்வதி). எங்கள் இறைவன் ஆகிய பரமசிவன், சிவபேதம் ஏழிலும் நின்று நடாத்தும் போது எல்லாம். அவனோடு பிரிப்பின்றி நிற்கும் ஒருத்தி ஆகிய பராசத்தியும், இந்த சத்தி பேதம் ஏழிலும் அவனுக்குத் துணையாய் நின்று நடாத்தும்.

சுத்த சிவன் ஆகிய பரமசிவனிடத்துப் பிரிப்பின்றி நிற்கும் சத்தி, பராசத்தி ஆகும். இந்தச் செய்யுளில் சிவத்திற்குச் சத்தி என்றது, சிவதத்துவம் தோன்றிய பின்னர் தோன்றும் சத்தி தத்துவம் ஆகும். இந்தச் செய்யுளில் உள்ள,

''எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்''

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்னும் செய்தி நினைவில் நிலைநிறுத்திக் கொள்ளத் தக்கது.

சிவமும் சத்தியும் எனப் பிரித்து எண்ணப் படினும் அவ்விரண்டும் பிரிப்பின்றி நாயகன் நாயகி பாவமாய் நிற்கும் எனக் கூறுகின்றது.

சத்திதான் நாதம் ஆதி
தான ஆகும்; சிவமும் அந்தச்
சத்திதான் ஆதி ஆகும்;
தரும் வடிவு ஆன எல்லாம்
சத்தியும் சிவமும் ஆகும்;
சத்திதான் சத்தனுக்கு ஓர்
சத்தியாம்; சத்தன் வேண்டிற்று
எல்லாம் ஆம் சத்திதானே. *166*

தெளிவுரை:

பராசத்தி, நாதம் முதலிய சிவபேதம் ஏழினும் கூடி இருக்கும்; அவ்வாறே சுத்த சிவம். சத்தி முதலிய சத்தி பேதம் ஏழினையும் வாயிலாகக் கொண்டு நிற்கும். இவ்வாறு சத்தியும் சிவமும், மரமும் வயிரமும் போல் ஒப்பக் கூடிநிற்கும் ஆதலால், சத்தியால் தரப்படும் எல்லாத் திருமேனிகளும், சத்தி சிவம் இரண்டிற்கும் பொது வடிவே ஆகும். அவ்வாறு கூடிப் பிரிப்பின்றி நின்றாலும் தான் வேண்டியவாறு எல்லாம் ஆவது ஆகிய சத்தியே, சத்தனுக்கு ஒப்பற்ற தேவியும் ஆவள். சத்தி, சிவம் இரண்டற்கும் உரிய வடிவுச் சிறப்பு. குணச்சிறப்புப் பற்றி, சத்தி பேதம் சிவபேதம் என்று ஆயின.

அக்கினி பொருளால் ஒன்று ஆயினும், வடிவால் செம்மை என்றும் குணத்தால் சூடு என்றும் பிரித்து எண்ணப்படுகிறது. அதுபோல, பரம்பொருள் ஒன்றே ஆயினும், எவற்றையும் கடந்து தன்பால் கலந்து எவற்றையும் நிற்கும் வெளி ஆகிய வடிவால் 'சிவம்' எனப்படுகிறது. எவற்றுடனும் கலந்து எவற்றையும் இழுக்கும் வலிமை ஆகிய குணத்தால் சத்தி எனப்படுகிறது. எனவே, இரண்டும் பிரிப் பின்றி நிற்பினும் பிரித்துக் கூறப்படுவதற்குக் காரணம் இஃதே ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவனும் சத்தியும் நாயகனும் நாயகியுமாய் நிற்பினும் சிவன் பிரமசாரியும் சத்தி கன்னியும் ஆவர் என ''இவற்றின் தன்மை தனக்கு எய்தல் இன்று ஆதலை'' விளக்கிக் கூறுகின்றது.

சிவம் சத்தி தன்னை ஈன்றும்,
சத்திதான் சிவத்தை ஈன்றும்,
உவந்து இரவரும் புணர்ந்து இங்கு
உலகு உயிர் எல்லாம் ஈன்றும்,
பவன் பிரமசாரி ஆகும்;
பால் மொழி கன்னி ஆகும்;
தவம்தரு ஞானத்தோர்க்கு இத்
தன்மை தான் தெரியும் அன்றே. 167

தெளிவுரை:

சிவதத்துவத்திலிருந்து சத்தி தத்துவம் தோன்றும். சத்தி தத்துவத்திலிருந்து சதாசிவ தத்துவம் தோன்றும். சதாசிவ தத்துவம், சத்தியும் சிவமும் கூடிய நிலை ஆகும். (சத்தி + சிவம் = சதாசிவம்) சத்தி சிவம் ஆகிய இருவரும் கூடிய அதனாலேயே, இங்குச் சடமும் சேதனமும் ஆகிய பிரபஞ்சம் எல்லாம் தோன்றும். இவ்வாறு தோன்றினாலும் எல்லாம் தோன்றுவதற்குக் காரணமாய், சத்தியோடு கூடி நின்ற சிவபிரான் பிரமசாரி ஆவன். எல்லாவற்றையும் தோற்றுவித்த சிவசத்தி கன்னிகை ஆவள். சத்தியும் சிவமுமாய் நின்று செய்யும் செயல்கள் எல்லாம் நம்மனோர் பொருட்டாக நடித்துக் காட்டும் நாடக மாத்திரையே அன்றி, பிறிது இல்லை என்பது, முன் தவச் சிறப்பால் முதல்வன் அருள் பெற்ற ஞானிகளுக்கு விளங்கும்.

பிரமசாரியும் கன்னிகையும் போகத்தில் விருப்பம் இல்லாது இருப்பதுபோல், தனக்கு என விருப்பு இன்றி ஆன்மாக்களின் பொருட்டு எல்லாவற்றையும் செய்வதால், சிவன் பிரமசாரி எனவும், சத்தி கன்னிகை எனவும் கூறப்பட்டது. இதனையே திருக்குறள்,

''வேண்டுதல் வேண்டாமை இலான்''

என்கிறது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சதாசிவ தத்துவத்திலிருந்து உயிரும் உலகமும் தோன்றும் என்றது, உயிரும் உலகத்திற்கு முதற்காரணம் ஆகிய மாயையும் அநாதி என்றதனோடு முரணாதோ எனின், முரணாது. எவ்வாறு எனின், இங்குக் கூறுவது எல்லாம் ஒடுக்கி வைத்திருந்த உயிரையும் மாயை யினையும் மீண்டும் தோற்றுவிப்பது ஆகிய புதிய படைப்பையே ஆதலினாலேயே ஆகும். அநாதியில் தோற்றுவித்தது எவ்வாறு எனில், கேவலத்துள் அடங்கி கிடந்த உயிரையும், இறைவன் தன்னுள் அடங்கிக் கிடந்த மாயையினையும் சதாசிவ தேவர் வெளிப்படுத்துவர் என்று தெளிவு பெறல் வேண்டும்;

தத்துவங்கள் எல்லாம் உயிர்களோடு பொருந்துவன என்று அறிந்து நீக்கி, தத்துவாதீதன் ஆகிய பரசிவனை அறிபவன், தத்துவ ஞானி ஆவன் எனக் கூறுகின்றது.

தனு கரண புவன போகம்
தற்பரம் பந்தம் வீடுஎன்று
அணுவினோடு எல்லாம் ஆகி
அடைந்திடும் தத்துவங்கள்
இனிது அறிந்து இவை நிவர்த்தி
முதல்கலை இடத்தே நீக்கி
நனி பரம் உணர்ந்தோன் அந்த
தத்துவ ஞானி ஆவன். 168

தெளிவுரை:

தனுகரண புவன போகங்களும், அவற்றிற்கு மூலமாய் உள்ள பந்த முத்திகளும், அந்த பந்தமுத்திகளுள் உண்டாகும் பேதங்கள் அனைத்தும், மேற்சொன்ன தத்துவங்களால் ஆயின என்றும், அந்த தத்துவங்கள் உயிர்களோடு பொருந்துவன அன்றி இறைவனோடு பொருந்துவன அல்ல என்றும், நூல்களாலும புத்தியாலும் தெளிவாக உணர்ந்து, அந்த தத்துவங்களை அவற்றிற்கு ஆதாரம் ஆகிய நிவர்த்தி கலை முதலிய பஞ்சகலைகளில் வைத்துக் கழித்து, அந்த தத்துவங்களகைக் கடந்து மேலாய் நிற்கும் ஒருவன் ஆகிய பரசிவனை, ஐய விபரீதக் குற்றம் இன்றி உணரப் பெற்றவன் யாவனோ அவனே, முந்திய செய்யுளில் ''பவன் பிரமசாரி – பால்மொழி கன்னி'' என்பதை அறிந்த தத்துவஞானி ஆகிய உண்மை அறிவு உடையவன் ஆவான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்த நூலின் 161–ஆவது செய்யுளில், தத்துவங்களை அதிட்டிக்கும் அணுபக்க சம்புபக்கத்து அதிதெய்வங்கள், அந்தந்த தத்துவப் பெயரைப் பொருந்தும் என்றும் 164–செய்யுளில் சுத்த சிவனே சுத்தமாயா தத்துவங்களைப் பொருந்தி தொழில் செய்வன் என்றும் கூறியதனால், தத்துவங்கள் சிவனோடும் மற்றத் தெய்வங்களோடும் பொருதுவன ஆகும் எனப் பெறப்படும் அல்லவா? அப்படி இருக்கும் பொழுது இந்தச் செய்யுளில் தத்துவங்கள் எல்லாம் உயிர்களோடு பொருந்துவன எனக் கூறியது முரணாகாதோ என்றால், ஆகாது. எப்படி என்றால், சுத்த சிவனும் மற்றைத் தெய்வங்களும் தத்துவங்களைக் கூடியது உயிர்களின் பொருட்டே ஆதலானும், அந்த தத்துவங்களையும் அவற்றில் நிற்கும் சிவபேதங்களையும் கடந்து செல்லுதற்கு உரிய நிலைமையில் அவற்றில் கட்டுப்பட்டு இருப்பது உயிரே ஆகலானுமே என்று தெளிவு பெறுதல் வேண்டும்.

தத்துவங்கள் உயிரைப் பொருந்துவதற்குக் காரணம், உயிர் கட்கு வினைப்பயனை அனுபவிக்கச் செய்து, அதனால் கன்ம மலம் ஆணவ மலங்களைப் போக்குதல் பொருட்டு ஆகும் எனக் கூறுகின்றது

எல்லாமாய் தத்துவங்கள்
இயைந்தது என் அணுவுக்கு என்னில்
தொல்லாய கன்மம் எல்லாம்
துய்ப்பித்துத் துடைத்தற்கும் பின்
நில்லாமை முற்றுவித்து
நீக்கவும் கூடி நின்ற
பொல்லாத ஆணவத்தைப்
போக்கவும் புகுந்தது அன்றே. 169

தெளிவுரை:

தத்துவங்கள் பலவேறு வகைப்பட்ட உயிரோடு பொருந்தியதற்கு என்ன காரணம் என்றால், அதற்கு விளக்கம் வருமாறு:

இன்ப துன்பம் என்னும் பலன்களை உயிர்கள் அனுபவிக் கும்படி செய்து, பழைமை ஆகிய பிராரத்தம் என்னும் இருவினைகளை நீக்குதல் பொருட்டும், அவ்வாறு நீக்குவதால் அதற்கான பக்குவம் ஏற் பட்ட பொழுது, எஞ்சிய சஞ்சிதம் ஆகிய இருவினைகளை, மேலைக்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வித்து ஆகாதவாறு தீக்கையால் சோதித்துக் கழித்தல் பொருட்டும், அவ்வாறு கழிவதால் எல்லா அநர்த்தங்கட்கும் மூலமாய், உயிரோடு கலந்து நின்ற ஆணவ மலத்தைப் போக்குதல் பொருட்டும் உயிரோடு தத்துவம் பொருந்தியது ஆகும்.

இரண்டாம் சூத்திரம்
நான்காம் அதிகரணத்தின் ஒழிபு

ஒழிபு என்பது ஒன்றறன் சேடம். முதல் செய்யுளின் பகுப்பின்படி நான்காம் அதிகரணம் கூறி முடித்து, அந்த அதிகரணத்தின் சேடமாய்க் கூறவேண்டுவது ஆகிய ஆணவ மலம் முதலியவற்றின் இலக்கணம் கூறுதலின் ஒழிபு எனப்பட்டது. (சேடம் – மிச்சம்)

ஆணவ மலத்தின் இலக்கணம் கூறுகின்றது

ஒன்றதாய், அநேக சத்தி
உடையதாய், உடனாய், ஆதி
அன்றதாய், ஆன்மாவின் தன்
அறிவொடு தொழிலை ஆர்த்து,
நின்று போத் திருத்துவத்தை
நிகழ்த்திச் செம்பினில் களிம்பு ஏய்ந்து,
என்றும் அஞ்ஞானம் காட்டும்
ஆணவம் இயைந்து நின்றே. 170

தெளிவுரை:

ஆணவமலம் ஒன்றாய் உள்ளது; அளவில்லாத ஆற்றல்களை உடையது; உயிர்களோடு சேர்ந்து நிற்பது; ஆன்மா உள்ள அன்றே ஆணவமலமும் உள்ளது; அநாதியே ஆன்மாவுடன் சேர்ந்து இருப்பதால், செம்பில் களிம்பு போல ஆன்மாவுடன் கலந்துநிற்பது. உயிர்கள் கேவல நிலையில் நிற்கும் பொழுது உயிர்களுக்கு உள்ள அறிவையும் செயலையும் நிகழ ஒட்டாமல் தனது மறைப்பு ஆற்றலால் மறைத்து நிற்பது.

உயிர்கள் கேவல நிலையிலிருந்து நீங்கி, தனு கரண புவன போகம் என்னும் சகல நிலையில் நிற்கும் பொழுது, ஆணவ மலம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அதன் கீழ்ச் செலுத்தும் ஆற்றலால், உயிர்க்கு மோகத்தை உண்டு பண்ணி, போக அனுபவத்திற்கு ஏற்ற கர்த்தாத் தன்மையை நிகழ்த்தி நிற்கும். இவ்வாறு கேவல நிலையிலும் சகல நிலையிலும், ஆணவ மலம் உயிர்க்கு அஞ்ஞானத்தை உண்டு பண்ணும்.

ஆணவமலம் ஒன்றாய் இருந்து பல உயிர்களுடன் கூடி மறைப்பது, எதுபோல என்றால், இருள் ஒன்றாய் இருந்து, பல கண்க ளுடன் கூடி மறைப்பது போல் ஆகும். பல உயிர்களுடன் கலந்து நிற்கும் தன்மை உள்ளமையால், ஆணவமலம் வியாபகம் உடையதாகும். இவ்வாறு உயிர்களுடன் கலந்து நிற்கும் இறைவன் வியாபகத்திற்கும், ஆணவமல வியாபகத்திற்கும்வேற்றுமை என்ன என்றால், கூறுதும்.

இறைவன் வியாபகம், உயிரின் வியாபகத்திற்கு மேம்பட்டதாய், அதனால் அஞ்ஞான காலத்தில் விளங்கித் தோன்றாமையும், முத்தி காலத்தில் விளங்கித் தோன்றுதலும் ஆகிய வேற்றுமையுடன், உயிரை விட்டு என்றும் நீங்காது இருப்பதாகும்.

ஆணவ மல வியாபகம், உயிரின் வியாபகத்திற்கு மேம் படாமலும் குறையாமலும் சம வியாபகமாய், அதனால் குருஅருளால் முத்தி காலத்தில் நீங்கப் பெறுவதாயும் இருக்கும். (வியாபகப் பொருள் ஆகிய ஆணவ மலம் முத்தியில் உயிரை விட்டு நீங்குவது என்பது ஆணவமலத்தின் மறைக்கும் ஆற்றல், உயிரின் வியாபகத்திற்குக் கீழ்ப் பட்டு மடங்கி நிற்கும் என்பதைக் குறிக்கும்.

ஆணவ மலத்தின் காரியம் வருமாறு;

1 மோகம் – குருவினாலும் நூலினாலும் தீயன என்று அறிந்தவற்றில் நீங்காமல் நிற்கும் மயக்கம்.

2 மதம் – தன்னைப்போல் ஒருவரும் இல்லை என மதித்தல்.

3 இராகம் – கிடையாத பொருளினிடத்தில் ஆசைப்படுதல்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

4 கவலை – கிட்டிய பொருள் பிரிந்த பொழுது வருந்துதல்.

5 தாபம் – சுற்றத்தை விட்டுப் பிரிவதற்கும் பிரிந்த தற்கும் ஆற்றாமை.

6 வாட்டம் – அந்த ஆற்றாமையால் மலர்ச்சி இன்றி வாடுதல்.

7 விசித்திரம் – எந்தச் செயலும் வினையின் வழியாய் நிகழ்வது என்று எண்ணாது, தான் செய்ததாகவும் பிறர் செய்ததாகவும் எண்ணுதல்.

இந்த ஏழும் ஆணவமலத்தின் காரியங்கள் ஆகும்.

மாயையே ஆணவமலம் என்பதை மறுத்து உரைக்கின்றது

மலம் என வேறுஒன்று இல்லை,
மாயா காரியம் அது என்னில்
இலகு உயிர்க்கு இச்சா ஞானக்
கிரியைகள் எழுப்பும் மாயை;
விலகிடும் மலம் இவற்றை
வேறும் அன்று அதுவேறு ஆகி
உலகு உடல் கரணம் ஆகி
உதித்திடும் உணர்ந்து கொள்ளே. 171

தெளிவுரை:

'மாயா காரியமே உயிர்க்கு மறைத்தல் தொழிலைச் செய்யும்; ஆகவே மாயையின் வேறாக மலம் என்று ஒரு பொருள் இல்லை' என்று கூறினால் அது பொருந்தாது. எப்படி என்றால், விளங்கா நின்ற உயிர்க்கு வேறாய் நின்று, மாயை உயிரின் அறிவு இச்சை செயல்களை விளக்கும்; ஆணவமலம் உயிர்களோடு கலந்து நின்று, உயிரின் அறிவு இச்சை செயல்களை மறைக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விளக்குவது ஆகிய மாயைக்கும், மறைப்பது ஆகிய ஆணவ மலத்திற்கும் தம்முள் வேற்றுமை பெரிது ஆகலான், அந்த வேற்றுமை அறியாது தனு கரண புவன போகமாயும், உயிர்க்கு வேறாகியும் உதிக்கும் மாயையினையே, உயிரோடு கலந்து நிற்கும் மலம் என்பவர் மதம், போலி என்பதை அறிவாயாக.

(குறிப்பு: 170–ஆவது செய்யுளில் ஆணவமலம் உயிரின் அறிவையும் செயலையும் மறைக்கும் என்று கூறிவிட்டு, 171–ஆவது செய்யுளில் ஆணவமலம் உயிரின் அறிவு இச்சை செயல்களை மறைக்கும் என்று கூறியது எப்படிப் பொருந்தும் என்றால், முன்னையது உயிரின் கேவல நிலை பற்றியும், பின்னையது உயிரின் சகல நிலை பற்றியும் கூறுவது ஆகலின் பொருந்தும்)

மாயா மலத்தைத் தவிர ஆணவமலம் வேறு இல்லை என்பதற்குக் கூறப்பட்ட உவமை பொருந்தாது எனக் கூறுகின்றது

மாயையே ஆன்ம ஞானக்
கிரியையை மறைத்து நிற்கும்;
தூய அப்பரிதி தன்னில்
சுடர் முகில் மறைத்தால் போலப்
போய்முகில் அகலச் சோதி
புரிந்திடும் அதுவே போலக்
காயமும் அகல ஞானத்
தொழில் பிரகாச மாமே. 172

தெளிவுரை:

மேகம், சூரியனின் வேறாய் நின்று சூரியனின்பரிசுத்த ஒளியை மறைப்பது போல, மாயை தனு கரண புவன போகமாய், ஆன்மாவின் வேறாய் நின்று, அதன் அறிவு இச்சை தொழில்களை மறைத்தல் கூடும். அந்த மேகம் நீங்கும் போது, சூரிய ஒளி வெளிப்பட்டுத் தோன்றும்; அது போல சரீரம் முதலிய மாயை நீங்கும் போது, ஆன்மாவின்அறிவு இச்சை தொழில்கள் பிரகாசித்தல் கூடும், இவ்வாறு மாயையே ஆணவமலம் என்று, இந்த உவமையில் வைத்து அறியப்படும் என்று கூறினால், அது பொருந்தாது. ஏன் பொருந்தாது என்பதற்கு விளக்கம் அடுத்த செய்யுளில் கூறுகிறார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இதுவும் அது

பரிதியை முகில் மறைப்பப்
பாய் ஒளி பதுங்கினால் போல்
உருஉயிர் மறைக்கில் ஞானக்
கிரியைகள் ஒழிக்கும் ஆகும்,
கருதிடும் இச்சா ஞானக்
காரியம் காயம் பெற்றால்
மருவிடும் உயிர்க்குக் காயம்
வந்திடா விடில் மறைப்பே. 173

தெளிவுரை:

மேகம் சூரிய ஒளியை மறைப்பது போல், மாயை ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களை மறைக்கும் என்று கூறினால், மேகத்தால் சூரிய ஒளி மறைபடுவது போல, மாயா காரியத்தால் உயிரின் அறிவு இச்சை செயல்கள் நிகழாது இருத்தல் வேண்டும். அவ்வாறு இன்றி மாயா காரியம் ஆகிய உடம்பைப் பெற்றால் விளங்குகின்ற உயிர்க்கு அறிவிச்சை செயல்கள் நிகழ்வதையும், அந்த உடம்பைப் பெறா விட்டால், ஆன்மாவின் அறிவிச்சை செயல்கள் நிகழாமல் மறைவ தையும், நடைமுறையில் காண்கிறோம்; எனவே, அந்த உவமை இந்த இடத்தில் பொருந்தாது.

ஆணவமல மாயாமலங்களின் வேற்றுமையை விளக்கி, ஆணவ மலத்தின் தன்மை, உயிரின் உணர்வைத் தடுத்தல் ஆகும் எனக் கூறுகின்றது

போத காரியம் மறைத்து
நின்றது புகல் மலம் காண்;
ஓதலாம் குணமும் ஆக
உயிரினுள் விரவ லாலே,
காதலால் அவித்தை சிந்தத்
தரும்கலை ஆதி மாயை
ஆதலால் இரண்டும் சோதி
இருள் என வேறாம் அன்றே. 174

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மேலும் ஆணவமலத்தால் ஆகிய மறைப்பு, சூரியனின் வேறாய் நிற்கும் மேகத்தால் ஆகிய மறைப்புப் போல் அன்று. அந்த மறைப்புத் தான் எவ்வாறு நிகழும் என்றால், உயிரோடு வியாபகமாய்க் கலந்து, உயிரின் குணம்போலத் தோன்றி நின்று மறைப்பது ஆகும். அவ்வாறு மறைக்கும் ஆணவம் ஆகிய இருள் கெடுவதற்கு, கலை முதலிய தத்துவங்கள் ஆகிய விளக்கை, மாயை உயிர்க்கு விருப்பத்தோடு தரும். இவ்வாறு மாயையும் ஆணவமும், ஒளியும் இருளும் போலச் செயலின்கண் மாறுபட்டு நிற்பன. ஆதலால், இருள் போலக் கூறும் தன்மையை உடைய ஆணவமலமே, உயிர் உணர்வின் காரியத்தைத் தடுக்கும் வல்லமை உடையது என உறுதியாக அறிவாயாக.

ஆணவமலம் உயிர்க்குக் குணம் என்பவரை மறுத்து உரைக்கின்றது

புருடன் தன் குணம் அவித்தை
எனில், சடம் புருடன் ஆகும்;
குருடன்தன் கண்ணின் குற்றம்
கண்ணின்தன் குணமோ? கூறாய்
மருள்தன் தன் குணம் அது ஆகி
மலம் அசித்து ஆகி நிற்கும்;
தெருள்தன் தன் குணம் அது ஆகிச்
சித்துஎன நிற்கும் சீவன். **175**

தெளிவுரை:

உயிரோடு கலந்து நிற்கும் ஆணவமலத்தை உயிரின் வேறாய் ஒரு பொருள் என்று கூறமுடியாதவாறு, உயிரோடு கலந்து நிற்பதால், ஆணவமலம் உயிரின் குணம் என்பது பொருத்தமா என்றால், அது பொருந்தாது. ஏனென்றால், அறியாமை வடிவாகிய ஆணவமலம் உயிர்க்குக் குணம் ஆயின் அறிவு வடிவாகிய ஆன்மா, சடம் எனப்படும். ஒரு பொருளின்கண் குணம் போலக் குற்றமும் உடனாய்க் கலந்து நிற்றல் கூடும் என்று கூறுவது, குருட்டுக் கண்ணில் காணப்படும் கண்ணிற்குக் குணம் ஒளியே ஆகும். ஆகவே குருடனது கண்ணில் ஒளிக் குணத்தை மறைத்து கண்ணுடன் கலந்து நிற்கும் படலம் ஆகிய குற்றம், கண்ணின் குணம் ஆகாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேலும், அறியாமையைத் தனது குணமாகக் கொண்டு நிற்கும் ஆணவமலம், அறிவில்லாத சடமாய் நிற்பது அன்றி, அறிவுடைய பொருள் ஆகாது. உயிர் அறிதல் தொழிலை உடைய சித்தேயாய் நிற்கும். எனவே, உயிரிலே குற்றமாகக் காணப்படும் அறியாமைக் குணத்திற்குக் குணிப் பொருள் எது என்றால், அஃது உயிரின் வேறாய் உயிரோடு கலந்து நிற்கும் ஆணவமலம் என்பதை அறிவாயாக.

மும்மலங்களும் உயிரைப் பந்தப்படுத்துதல் நெல்லுக்கு முளை தவிடு உமி போல எனவும் வேறு இரு மலம் உண்டு எனவும் கூறுகின்றது

மும்மலம் நெல்லி னுக்கு
முளையொடு தவிடு உமிப்போல்
மம்மர் செய்து அணுவின் உண்மை
வடிவினை மறைத்து நின்று
பொய்மை செய் போக பந்த
போத் திருத் துவங்கள் பண்ணும்
இம்மலம் மூன்றி னோடும்
இருமலம் இசைப்பன் இன்னும். 176

தெளிவுரை:

ஆணவம் கன்மம் மாயை என்னும் மூன்று மலங்களும், உயிரினது உண்மை வடிவினை மறைத்து, மயக்கத்துக்கு ஏதுவாகக் கூடிநிற்கும். இஃது எது போல எனின், நெல்லுக்கு முளைத்தல் ஆற்றலும் தவிடும் உமியும் போல ஆகும். அஃது எப்படி என்றால், முளைத்தல் ஆற்றல் முளையைத் தோற்றுவிப்பது போல், கன்ம மலம் பொய்மையைச் செய்கின்ற இன்ப துன்பங்களைத் தோற்றுவிக்கும், தவிடு, நெல் முளைப்பதற்கு அனுகூலமாக நிற்பது போல, மாயாமலம் அந்த இன்ப துன்பங்கள் தோன்றுவதற்கு, அனுகூலமாகத் தனு கரணம் முதலியவற்றைத் தோற்றுவிக்கும். உமி, அந்த முளை தோன்றுவதற்கு நிமித்தமாய் நெல்லைப் பற்றி நிற்பது போல, ஆணவமலம் அந்த இன்ப துன்பங்களை உயிர் அனுபவிக்குமாறு பற்றுச் செய்து நிற்கப் பண்ணும். இவ்வாறு பந்தப்படும் இம்மலங்கள் மூன்றனோடும் வேறும் இரு மலங்கள் உள்ளனவாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நெல் என்பது அரிசியைக் குறிக்கும். அரிசிக்கு, முளை, தவிடு உமிப் போல் என்றது மும்மலங்கள் உயிரைப் பந்தப்படுத்துதற்கும் பந்தத்திற்குக் காரணம் ஆவதற்கும் உவமை ஆகும், அப்படி யல்லாமல், உயிரும் அந்த மூன்று மலங்களும் கூடி நிற்கும் சம்பந்தத்திற்கு உவமை ஆகாது.

இஃது எப்படி என்றால், முளைத்தல் ஆற்றல் அரிசியினுள் அடங்கி நின்று அரிசியைப் பந்தப்படுத்துகின்றது; அது போல கன்ம மலம் ஆன்மாவினுள் அடங்கி நிற்பது இல்லை; அஃது ஆன்மாவினால் செய்யப்படுவதாய் இருக்கிறது.

தவிடு அரிசியைத் தொடர்ந்து நின்று பந்தப்படுத்துகிறது. அதுபோல மாயாமலம் உயிரைத் தொடர்ந்து நின்று பந்தப்படுத்துவ தில்லை; அஃது உயிரைக் கூடி நின்று பந்தப்படுத்துவதாய் இருக்கிறது.

உமி அரிசியின் வேறாய் நின்று அரிசியைப் பந்தப்படுத்து கின்றது; அதுபோல ஆணவமலம் உயிரின் வேறாய் நிற்பது இல்லை; அஃது உயிரோடு கலந்து நின்று உயிரைப் பந்தப்படுத்துவதாய் இருக் கின்றது, எனவே, மும்மலங்களும் உயிரும் கூடி நிற்கும் சம்பந்தத்திற்கு, முளை தவிடு உமி மூன்றும் நெல்லும் கூடி நிற்பதற்கும் சம்பந்தம், உவமை ஆகாது என்பது புலப்படும்.

இந்த மூன்று மலங்களுள் கன்மமலம் முதற்காரணம்; மாயா மலம் துணைக் காரணம்; ஆணவமலம் நிமித்த காரணமும் ஆகும். எவ்வாறெனில், இன்ப துன்பம் ஆகிய காரியங்களை உயிர் அனுப விப்பது, ஆணவமலத்தால் அன்றி இல்லை; ஆதலால் ஆணவமலம் நிமித்த காரணம் ஆயிற்று. கன்ம மலத்தை இன்றி உயிர்க்கு இன்ப துன்பங்கள் உண்டாகாமையால், கன்ம மலம் முதற்காரணன் ஆயிற்று. உடம்பு முதலியன இன்றி உயிர் இன்ப துன்பங்களை அனுபவிக்க முடியாது; ஆகையால் மாயாமலம் துணைக்காரணம் ஆயிற்று.

பந்தப்படுத்தும் முறைமையின் வேற்றுமைக்கு ஏற்ப, மும்மலங் களும் வேற்றுமைப்படும். அஃதாவது, ஆணவமலம் உயிரோடு கலந்து நின்று, அறிவு இச்சை செயல்களைத் தடுப்பதால், பிரதிபந்தம் ஆகும்; (பிரதி – எதிர்; பந்தம் – தடை; பிரதிபந்தம் – எதிரான தடை), கன்ம மலம் உயிர் செல்லும் இடம் எல்லாம் தொடர்ந்து சென்று, இன்ப
13 துன்பங்களைக் கூட்டுவதால் அனுபந்தம் ஆகும், (அனு – தொடர்ச்சி;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அனுபந்தம் – பின்தொடர்ச்சி) மாயாமலம் உயிரோடு கூடி தனு கரணம் முதலியனவாய் நிற்பதால், சம்பந்தம் ஆகும்.

(சம் – கூட; சம்பந்தம் – கூடி நிற்பது)

''போக பந்த போத்திருத்துவம்'' என்பதற்கு விளக்கம் வருமாறு;

போகம் – இன்ப துன்பம். பந்தம் – தனுகரணாதிகள். போத்திருத்துவம் – வினை முதலாகும் தன்மை. மம்மர் – மயக்கம்;

இருமலம் என்பது மாயா காரியமும் திரோதான சத்தியும் ஆகும் எனவும் ஐந்து மலமும் உயிர்க்குப் பந்தம் செய்யும் எனவும் கூறுகின்றது;

மாயையின் காரியத்தை
மாயேய மலம் அது என்றும்
ஏயும் மும்மலங்கள் தத்தம்
தொழிலினை இயற்ற ஏவும்
தூயவன் தனது ஓர் சத்தி
திரோதான கரி அது என்றும்
ஆய்வர் இம் மலங்கள் ஐந்தும்
அணுக்களை அணைந்து நிற்கும் 177

தெளிவுரை:

இன்ப துன்ப விளைவுகளுக்கு எல்லாம் இடமாய் நின்று, ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களை ஏகதேசப்படுத்துவது என்று மேற்கூறிப் போந்த மாயா காரியம் ஆகிய தனு கரண புவன போகங்களை மாயேய மலம் என்பர். பொருந்திய மும்மலங்களையும் தத்தம் தொழில் களைச் செய்ய ஏவும் சிவசத்தியை, மறைப்பைச் செய்யும் திரோதாயி மலம் என்பர். இவ்வாறு வேறு இருமலம் உண்டு என்று ஆராய்ந்து கூறுவர்.

அந்த இரு மலங்களுள் மாயா காரியம் மாயையில் அடங்கும் ஆயினும், பந்தப்படுத்தும் வேற்றுமை பற்றி, வேறு வைத்து எண்ணப்படும். அந்த வேற்றுமை ஆவது மாயை உயிரின் அறிவோடு கூடி அவ்வறிவை மயக்கும்; மாயா காரியம் மயக்கத்திற்கு முன்னிலைப் பொருளாய் இருக்கும். இவையே வேற்றுமை ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மலங்களைத் தொழிற்படுத்தும் சிவசத்தியும், பராசத்தியில் அடங்கும் ஆயினும், தொழில் வேற்றுமை பற்றி, வேறு வைத்து எண்ணப் படும். அந்த வேற்றுமையாவது, பராசத்தி கருணை ஒன்றே செய்து நிற்கும்; திரோதாயி சத்தி உயிரின் கன்மத்திற்கு ஏற்றவாறு, உயிரின் அறிவை மறைத்து நிற்கும். இவை வேற்றுமை ஆகும். இவ்வாறு இந்த ஐந்து மலமும் உயிர்தோறும் நின்று செய்யும் பந்த வேறுபாடு கண்டு கொள்க.

ஐந்து மலங்களையும் மும்மலங்களுள் அடக்கிக் கூறும் பொழுது, மாயேய மலத்தை மாயா மலத்திலும், திரோதாயி சத்தியை மறைக்கும் தொழில் ஒப்புமையால் ஆணவ மலத்திலும் அடக்கிக் கூறுவர்.

உயிர், மேற்கூறியஐந்து மலங்களினால் பிறந்து இறந்து உழலும் எனக் கூறுகின்றது

மலம், மாயை, கன்மம், மாயே
யம், திரோதாயி மன்னிச்
சலம் ஆரும் பிறப்பு இறப்பில்
தங்கி, இத் தரைகீழ் மேலும்
நிலையாத கொள்ளி வட்டம்
கறங்கு என நிமிடத்தின் கண்
அலமாரும் இறைவன் ஆணை
யால்உயிர் நடக்கும் அன்றே. 178

தெளிவுரை:

ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி ஆகிய இந்த ஐந்து வகை மலங்களும் உயிருடன் பொருந்துவதால், அந்த மலங்களுக்கு ஏற்ப முதல்வன் ஆணையால், நிலை இல்லாத கொள்ளி வட்டமும் காற்றாடியும் போல கணப்போதில் பலமுறை சுழற்சி உற்றுப் பிறப்பு இறப்பைப் பொருந்தி, பூமி, நரகம், சுவர்க்கங்களிலே போக்கு வர உடையதாய் உயிர் திரியும். (நிமிடத்தின் கண் – கணப் பொழுதில்).

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிறந்து இறந்து உழலுதற்கு உரிய பிறவிகளுள், மானுடப் பிறவியே அரிது எனக் கூறுகின்றது;

அண்டசம் சுவேத சங்கள்
உற்பிச்சம் சராயுசத் தோடு
எண்தரு நால் எண் பத்து
நான்கு நூறு ஆயிரத்தாய்,
உண்டுபல் யோனி எல்லாம்
ஒழித்து மானுடத்து உதித்தல்
கண்டிடில், கடலைக் கையால்
நீந்தினன் காரியம் காண். 179

தெளிவுரை:

உயிர்கள் பிறப்பதற்கு உரிய முட்டை, வேர்வை, வித்து, கருப்பை என்று எண்ணப்படும். நால்வகைத் தோற்றத்திலிருந்து உண்டாகும் பிறவிகள், தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என ஏழு வகைப்படும். அந்த ஏழு வகைப் பிறப்பிலிருந்து உண்டாகும் உறுப்பு பேதம் எண்பத்து நான்கு நூறு ஆயிரம் ஆகும். அந்த பேதங்களிலிருந்தும் விரிந்த பேதங்கள் அளவு இன்றி உள்ளன. அவற்றுள் மற்றைப் பிறவிகள் எல்லாம் ஒழிந்து, ஓர் உயிர் மானுடப் பிறவியைப் பொருந்தக் காணப்பெற்றுவிட்டால், அந்தப் பேறு சமுத்திரத்தைக் கையால் நீந்திக் கரை ஏறியவன் காரியத்தோடு ஒக்கும். இந்த மானுடப் பிறவியே பிறப்பு இறப்பில் பட்டு உழலும் சுழற்சியை நீக்குவதற்கு வாயில் ஆகும்.

மானுடப் பிறவியின் உள்ளும் உத்தம நாட்டில், உத்தம குலத்தில், உத்தம சமயத்தில் பிறத்தல் அரிது எனக் கூறுகின்றது

நரர் பயிர் தேயம் தன்னில்
நான்மறை பயிலா நாட்டில்,
விரவுதல் ஒழிந்து தோன்றல்
மிக்க புண்ணியத்தால் ஆகும்;
தரையினில் கீழை விட்டுத்
தவம்செய் சாதியினில் வந்து
பர சமயம்கண் செல்லாப்
பாக்கியம் பண்ணொ ணாதே. 180

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மானுடப் பிறவியின் உள்ளும், மானுடர் வாழ்கின்ற இந்த உலகத்துள், வேதாகம விளக்கம் இல்லாத நாட்டில் பிறக்காமல், அந்த வேதாகம வழக்கு, மிகுந்துள்ள உத்தம நாட்டில் பிறப்பதுஅரிது. அவ்வாறு பிறப்பது மிகுந்த புண்ணியத்தால் உண்டாகும், அந்த உத்தம நாட்டில் உள்ளும் கீழ்க் குலத்தில் தோன்றாமல் தவம் செய்வதற்கு உரிய உத்தம குலத்தில் தோன்றுதல் அதனை விட அரிதாகும் (சாதி என்ற சொற்குக் குலம், மரபு என்று பொருள் உள்ளது). அவ்வாறு தோன்றி னாலும், புறச் சமயங்களில் செல்லாமல் அந்தப் பிறப்பு இறப்பை ஒழிப்பதற்கு வாயிலாக, உத்தம சமயத்திற்கு உரிய நன்மை ஒருவனுக்கு உண்டாகுதல் அரிது.

உத்தம குலத்தில் பிறந்தாலும், வாழ்வினால் ஆகிய செருக்கும் வறுமையால் ஆகிய சிறுமையும் நீங்கிச், சைவ சமயத்தைச் சாரல் மிக அரிது எனவும், அதைவிடச் சித்தாந்த நெறியினால் சிவபெருமானை வழிபடுவோரே வீடு பெறுவர் எனவும் கூறுகின்றது

வாழ்வு எனும் மையல் விட்டு,
வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வு எனும் தன்மை யோடும்
சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது; சால
உயர்சிவ ஞானத் தாலே
போழ்இள மதியி னானைப்
போற்றுவார் அருள் பெற்றாரே. 181

தெளிவுரை:

மேற்கூறியவாறு உத்தம குலத்தில் பிறந்தாலும் பொருள் உடைய வர் இளமை கல்வி செல்வம் அதிகாரம் என்னும் இவைகளால் உண்டா கும் அகங்காரம் ஒழிந்தும், பொருள் இல்லாதவர் வறுமையால் அந்தச் செருக்கு உடையவர் பின் சென்று தாழ்ந்து நிற்கும் சிறுமை நீங்கியும், இருப்பது அரிது. அவ்வாறு இருப்பது உயர்ந்த குலத்தைக் காட்டிலும் உயர்ந்த குடிப்பிறப்பில்தான் உண்டாகும். அந்த உயர்ந்த குடிப் பிறப்பே, பிறப்பு இறப்பை நீக்குவதற்கு வாயில் ஆகும். (குடி – குடும்பம், கோத்திரம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகவே, அந்த உயர்ந்த குடியில் பிறந்து, 'சிவபெருமானுக்கு நாம் என்றும் அடிமை ஆவோம்' என்று கருதி, சிவபெருமானிடத்து மெய்யன்போடு சைவ சமயத்தைப் பொருந்தும் புண்ணியப் பேறு பெரிதும் அரிது ஆகும். சைவ சமயத்தின் உள்ளும் உயர்ந்த சித்தாந்த நெறி உணர்வைப் பொருந்தி, அவ்வுணர்வால் இளம்பிறை அணிந்த சிவபெருமானை வழிபடப் பெறுவார் உளர் ஆயின், அவரே ஆணவ மலத்தால் உண்டாகும் துன்பங்களிலிருந்து நீங்கிப், பிறவா நெறி ஆகிய முத்திப் பேறு அடைவர் (போழ் இள மதி – பிளவு பட்ட இளம் பிறை).

உத்தம நாட்டில், உத்தம குலத்தில் மானுடராய்ப் பிறத்தல் வேண்டப்படும் எனவும், அவ்வாறு வேண்டப்படுவதற்குக் காரணம் உணர்ச்சி விசேடமே எனவும் கூறுகின்றது.

மானுடப் பிறவி தானும்
வகுத்தது, மனவாக் காயம்
ஆன் இடத்து ஐந்தும் ஆடும்
அரன் பணிக்கு ஆக அன்றோ?
வான் இடத்தவரும் மண்மேல்
வந்து அரன்தனை அர்ச்சிப்பர்;
ஊன் எடுத்து உழலும் ஊமர்
ஒன்றையும் உணரார் அந்தோ! **182**

தெளிவுரை:

பிறப்பை நீக்குதல் பொருட்டு, பசுவினிடத்து உண்டாகும் பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்னும் பஞ்ச கவ்வியத்தினை, அபிடேகமாகக் கொண்டு அருளும் சிவபெருமானை, மனத்தால் நினைந்தும், வாக்கினால் அவன் புகழைப் பாடித் துதித்தும், மந்திரங்களைச் செபித்தும், காயத்தால் பணிந்தும் வழிபாடு செய்யவேண்டும். இந்த வழிபாடு ஏனைப் பிறவிகளில் செய்தல் கூடாமையால், இந்த வழிபாட்டின் பொருட்டாக அன்றோ, பிறவி விசேடம் ஆகிய மானுடப் பிறவியை, முன் செய்த தவத்தால் வகுத்தது ஆகும்?

மேல் உலகத்தில் உள்ள விட்டுணு முதலிய தேவர்களும் சிவபெருமானை வழிபடுவது ஏனை உலகங்களில் கூடாமையால், தேச விசேடம் ஆகிய இந்த மண்ணுலகத்தில் வந்து அவனை அர்ச்சித்து வழி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

படுவர். அவ்வாறு வழிபடுதற்கு உரிய இந்த உலகத்தில், அதற்கு உரிய மானுடச் சரீரம் பெற்றும், வழிபட வேண்டும் என்னும் உண்மையை, ஐயோ! பிறவியில் பட்டு உழலும் ஊமர் ஆகிய ஏனையோர் சிறிதும் அறிய மாட்டார். ஆதலால், உண்மை அறிதற்கு உரிய குலச் சிறப்பும், குடிப் பிறப்புச் சிறப்பும் வேண்டப்படும். எனவே, மானுடப் பிறப்பின் பயன் சிவவழிபாடே என்பது இனிது புலப்படும்.

வாழ்வினால் ஏற்படும் மயக்கத்தை நீக்குவதற்கு, சரீர நிலையாமையை நோக்குவது உபாயம் எனக் கூறுகின்றது

கருவினுள் அழிவ தாயும்,
கழிந்திடாது அழிவ தாயும்,
பரிணமித்து அழிவ தாயும்,
பாலனாய் அழிவ தாயும்,
தருணனாய் அழிவதாயும்,
தான் நரைத்து அழிவ தாயும்,
உருவமே அழிமே ஆனால்,
உள்ளபோதே பார் உய்ய. *183*

தெளிவுரை:

மானுட யாக்கை அவ்வளவு பெருமை உடையது ஆயினும் மாதாவின் கருப்பத்திலேயே அழியினும் அழியும்; பிறந்த உடனே அழியினும் அழியும்; பிறந்து சிறிது காலம் இருந்து அழியினும் அழியும்; பாலப் பருவத்தில் அழியினும் அழியும்; யௌவனப் பருவத்தில் அழியினும் அழியும்; நரை உண்டாகும் விருத்தப் பருவத்தில் அழியினும் அழியும்.

இவ்வளவு நாள் நிற்கும் என்று அறிய முடியாமல், நீரின் இடத்து உண்டாகும் குமிழி நிலைபெறாது அழிவது போல், எப்பொழுதிலும் சரீரம் அழியும் தன்மையது ஆகும். ஆதலால், நிலைத்து இருக்கும் போதே உய்யும் வண்ணம் அந்த நிலையாமைகளை உற்று நோக்குவாய். அவ்வாறு நோக்குபவர்க்கு சரீரம் முதலியவற்றால் உண்டாகும் மயக்கம் நீங்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விடயங்களை அறியும் அறிவும், வாழ்க்கையும் நிலை உடையன அல்ல என அறிதலும், அந்த மயக்கத்தை நீக்குவதற்கு உபாயம் எனக் கூறுகின்றது

ஒருபுலன் நுகரும் போது அங்கு
ஒன்று இல்லை, ஒன்றின் பாலும்
வருபயன் மாறி மாறி
வந்திடும் எல்லாம் மாறும்
ஒருபொழுது உணரின் உண்டாம்
அல்லது இவ் அல்லல் வாழ்க்கை
மருள் கனவு அதுவும் போல்
மாயும் பின் மாயும் அன்றே. 184

தெளிவுரை:

மானுட சரீரத்தைப் பெற்று அதில் நின்று கொண்டு ஒரு பொருளை அனுபவிக்கும் பொழுது, மற்றொரு பொருளை அனுபவிக்க முடியாமையால், பொருளை அறியும் அறிவையும் எல்லாவற்றையும் ஒருசேர ஆன்மா அறியமாட்டாது; ஒன்றை அறியும்பொழுது விட்டுவிட்டு அறிவது அன்றி, தடை இன்றி அறியமாட்டாது; அவ்வாறு அறிவதும் உறக்கம் மூர்ச்சை முதலியவற்றில் சிறிதும் இல்லையாய் விடும். அது அன்றி இந்த வாழ்க்கையின் பொருட்டு உண்டான செல்வம் என்னும் அல்லலும் கனாப்பொருள் போலவும், மயக்கப் பொருள் போலவும் மாயும் தன்மை உடையது ஆகும். எப்படி என்றால், கனவு முடிவாகப் போகாமல் இடையிலே மாய்வது போலவும், மயக்கம் தோன்றிய பொழுதே மாய்வது போலவும், செல்வமும் மாய்ந்துவிடும். ஆதலால், இந்த அறிவு நிலையாமை, செல்வம் நிலையாமைகளை உணர வல்லவர்க்கு, அவற்றால் ஆகிய மயக்கம் விடுபட்டுவிடும்.

இதுவும் அது

அரிசனம் பூசி மாலை
அணிந்து பொன் ஆடை சாத்திப்
பரிசனம் பின்பு செல்லப்
பாரகர் பரிக்கக் கொட்ட

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வரிசின்னம் ஊதத் தொங்கல்
வந்திட உணர்வு மாண்டு
பெரியவர் பேச்சும் இன்றிக்
கிடத்தலால் பிணத்தோடு ஒப்பர். 185

தெளிவுரை:

அதிகாரம் செய்பவர் சந்தனம் முதலிய வாசனா திரவியங்கள் பூசியும், வாசத்தோடு கூடிய பூமாலைகள் அணிந்தும், பீதாம்பரம் போர்த்தும், தம் பரிவாரங்கள் பின்னே வரவும், சுமப்பவர் சிவிகை சுமப்பவும், வாத்தியங்கள் முழங்கவும், வரிபொருந்திய சின்னங்கள் ஊதவும், சத்திர சாமரங்கள் சூழ வரவும், அறிவற்றுப் பெரியவராய்ப் பேச்சு இன்றி, அகங்காரத்தைப் பொருந்திக் கிடப்பதால் அவர் செத்தவரோடு ஒப்பர் என்பதை அறிய வல்லவர் ஆயின், அவ்வாறு அறிபவர்க்கு வாழ்வினால் உண்டான மயக்கம் விடுபடுதல் கூடும். (சத்திரம் – கையில் திரமாய் இருப்பது; அஃதாவது கத்தி முதலிய ஆயதங்கள், சத்திர சாமரங்கள் – எடுபிடிகள்,)

வறுமையால் உண்டாகும் சிறுமை நீங்குவதற்கு உபாயம் கூறுகின்றது

பிணத்தினை ஒத்து வாழ்வோர்
பின் நடைப்பிணங்கள் போல
உணக்கியே உழல்வீர் உங்கள்
உடல் உயிர் உணர்வும் எல்லாம்
கணத்திடைத் தோன்றி மாயும்
காயம் என்று அறிந்து ஒருக்கால்
வணக்குறீர் அரனை என்றும்
வானவர் வணங்க வைப்பன். 186

தெளிவுரை:

மேற் கூறியவாறு செல்வம் முதலியன நிலையா என்பதனை உணர்ந்து, சிவபெருமானை ஒருகாலேனும் வழிபாடு செய்கின்றிலீர். செய்யப் பெற்றால் எக்காலத்தும் தேவர்களும் வணங்கும் வண்ணம், அழியாச் செல்வத்தைச் சிவபெருமான் தருவன், அந்தச் செல்வத்தை நோக்க, உடம்பு கணத்தில் தோன்றி அழியும் தன்மை உடையதாகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உடம்பின் பொருட்டு, உம்முடைய உடல், உயிர், உணர்வு முதலிய எல்லாம் வருத்தம் உறும்படி வருந்தி, நீர் சேர்க்கும் செல்வம் செல்வம் அன்று. இவ்வாறு உடலின் தன்மையினையும் செல்வத்தின் தன்மையையும் உணர்வீர் ஆயின், இந்தச் சிறு செல்வத்தை வேண்டிப், பிணத்தினை ஒத்து வாழும் அதிகாரச் செருக்கு உடையவர் பின் சென்று, நடைப்பிணங்கள் போல், நின்று தாழ்தல் ஆகிய சிறுமையிலிருந்து உமக்கு நீங்க முடியும்.

இவ்வாறு வறுமையாம் சிறுமை தப்பி வாழ்வீராக.

இரண்டாம் சூத்திரம் முடிந்தது

மூன்றாம் சூத்திரம்

பசு உண்மை

தோற்றுவாய்:

குடத்தைக் குயவன் செய்கிறான் என்பதால், அதனைக் கொள்பவன் உண்டு என்பது கருதப்படும். அதுபோலப் பிரபஞ்சத்தை இறைவன் தோற்றுவித்தான் என்பதனாலேயே, அந்தப் பிரபஞ்சத்தைப் பற்றி நிற்கும் உயிர் உண்டு என்பது பெறப்படும். இவ்வுண்மையை இந்தச் சூத்திரத்தில் கூற வேண்டுவதே முறை; ஆயினும், இயைபு பற்றிச் மேலைச் சூத்திரத்தில் ''அலகிலா உயிர்களின்'' பொருட்டு என்று ஓதினார். அதனால் 'உயிர்' என்பதுதான் உண்டா? இல்லையா? இல்லை ஆயின், உயிர்களின் பொருட்டு என்றது பொருந்தாது; உண்டு ஆயின், அது யாது? அஃது எங்கு இருக்கும்? என்னும் தடைகள் நிகழும் அல்லவா? அந்தத் தடைகளை நீக்குதல் பொருட்டு மூன்றாம் சூத்திரம் எழுந்தது.

குளிர் இல்லாததால், பனி இன்மை காணப்படுவதுபோல, உடலின் இயக்கம் இல்லாமையால், உயிர் இன்மை காணப்படும் அல்லவா? இந்த எதிர்மறையினைக் கொண்டு, உடன்பாட்டு முகத்தால் உடலின் இயக்கம் உள்ளதால், உயிர் உண்டு என்று நாட்டுகின்ற அனுமானப் பிரமாணம் (கருதல் அளவை) இந்தச் சூத்திரத்தால் கூறுகிறார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சூனியம், தூல உடம்பு, ஐம்பொறி, சூக்கும உடம்பு, பிராண வாயு, பிரமம், சமுதாயம் என்னும் ஏழும் உயிர் அன்று என்றும், இவற்றின் வேறாய்க் காணப்படும் உடலின்கண் உயிர் உண்டு என்றும் கூறுகின்றது

உயிர் எனப் படுவது இந்த
உடலின் வேறு உளதாய் உற்றுச்
செயிர் உறும் இச்சா ஞானச்
செய்திகள் உடையது ஆகிப்
பயில் உறும் இன்பத் துன்பப்
பலன்களும் நுகரும்; பார்க்கில்
துயிலொடும் அஞ்சு அவத்தைப்
படும் உண்மை துரியாதீதம். 187

தெளிவுரை:

உயிர் அறியப்படாமையால், 1. உயிர் சூனியம் என்பர். ''சூனியம்'' என்று உணர்வது வேறு உண்டு ஆதலின், அவ்வாறு உணர்வதே உயிர் ஆகும் என்று மறுக்கப்பட்டது; அவ்வாறு உணர்வது மறுத்ததும். 2. உடம்பே உயிர் என்பர். உடம்பினை யான், எனது என்று அபிமானித்து நிற்பது ஒன்று உண்டு ஆதலின், அவ்வாறு அபிமானித்து நிற்பதே உயிர் என்று மறுக்கப்பட்டது; அவ்வாறு மறுத்ததும், 3. ஐம் பொறியே உயிர் என்பர். அந்த ஐம்பொறிகட்கு அறிவது மட்டுமே அன்றி, இச்சையும் தொழிலும் இல்லாமையின், இந்த மூன்றனையும் உடையதாய், ஐம்பொறிகளின் வேறாய் உள்ளதே உயிர் என்று மறுக்கப்பட்டது; அவ்வாறு மறுத்ததும், 4. சூக்கும உடம்பே உயிர் என்பர்.

சூக்கும உடம்பு என்றும் ஒரு தன்மை உடையதாய் அகத்தே இருந்தும், கனவில் ஒன்றைத் தெளிவாய் அறியவும், நனவில் அதனையே மயங்கி அறியவும் ஆக இருப்பது காணப்படுவதால், அந்தச் சூக்கும தேகத்தின் வேறாக நின்றும் அதனோடு கூடி அகத்தில் சென்ற பொழுது தெளிவாய் அறியவதும், தூல தேகத்தோடு கூடி புறத்தில் சென்ற பொழுது மயங்கிஅறிவதும் ஆகியது ஒன்று உண்டு ஆதலின், அவ்வாறு அறிவதே உயிர் என்று மறுக்கப்பட்டது. அவ்வாறு மறுத்ததும் 5. பிராண வாயுவே உயிர் என்பர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உறக்கத்தில் பிராண வாயு இயங்கிக் கொண்டு இருக்கிறது; ஆயினும் அஃது இன்ப துன்பம் அனுபவிப்பது இல்லை; எனவே பிராண வாயுவின் வேறாய் இன்ப துன்பம் அனுபவிப்பது ஒன்று உண்டு என்று மறுக்கப்பட்டது. அவ்வாறு மறுத்தும், 6.பிரமமே உயிர் என்பர். பிரமம் அறிந்தபடியே அறிவது அன்றி, மயங்கி ஐந்து அவத்தைப்படுவது இல்லை. அவ்வாறு மயங்கி ஐந்து அவத்தைப்படுவது ஒன்று உண்டு ஆதலின், அஃதே உயிர் என்று மறுக்கப்பட்டது, அவ்வாறு மறுத்ததும், 7. அனைத்தும் கூடிய சமுதாயமே உயிர் என்பர்.

அந்த அனைத்திற்கும் தனித்தனிப் பெயர் இருப்பதனாலும் அவற்றிற்கு உயிர் எனப் பெயர் இல்லாமையாலும், அந்த அனைத்தும் நீங்கிய அவற்றைக் கடந்த நிலையில் (அதீதத்தில்) நிற்பது ஒன்று உண்டு ஆகலானும், அஃதே உயிர் என்று மறுக்கப்பட்டது. அவ்வாறு மறுத்ததும், அந்த உயிர் எங்கே இருக்கிறது என்று கேட்கப்பட்டது. அதற்கு ''விடையாக காணப்படும் இந்த உடலின் கண் இதுவரை கூறப்பட்ட இவற்றின் வேறாய் உயிர்உள்ளது'' என்று கூறப்பட்டது.

சிவஞான போதம் மூன்றாம் சூத்திரம் போல், இந்தச் செய்யுளும் ஏழு கூற்றை உடையது; அந்த ஏழு கூறுகளும் வருமாறு:

1. ''உளதாய்'' என்றதனால், உயிர் சூனியம் என்றது.

2. ''உற்றுச் செயிர் உறும்'' என்றதனால் உடம்பே உயிர் என்றது.

3. ''இச்சா ஞானச் செய்திகள் உடையதாகி'' என்றதனால் ஐம்பொறியே உயிர் என்றது.

4. ''துயிலொடும் பயில்வுறும்'' என்றதனால், சூக்கும உடம்பே உயிர் என்றது.

5. ''இன்ப துன்பப் பலன்களும் பார்க்கில் நுகரும்'' என்றதனால், பிராணவாயுவே உயிர் என்றது.

6. ''அஞ்சவத்தைப்படும்'' என்றதனால், பிரமமே உயிர் என்றது.

7. ''துரியாதீதம் உண்மை'' என்றதனால், சமுதாயம் உயிர் என்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவற்றுள் சூனியம் உயிர் என்னும் முதற்கூறு, உளதாய் என்றதனால், இந்தச் செய்யுளில் சாதிக்கப்பட்டது. அதில் வேறு தடை இல்லை ஆதலால், முதற்கூற்றினை விரித்துப் பேசவில்லை. ஏனைய ஆறு கூற்றுள், இந்த இரண்டு, மூன்று, நான்கு ஆகிய கூறுகள் பற்றி இந்தச் சூத்திரத்தில் முறையே 2,3,4 என்னும் செய்யுள்களில் கூறுகிறார். ஐந்து, ஆறு, ஏழு ஆகிய கூறுகள் பற்றி நான்காம் சூத்திரத்தில் விரித்துரைக்கப்படுகின்றது.

இரண்டாம் கூறு ஆகிய "உடம்பு உயிர்" என்பதைப் பிணமாய்க் கிடப்பதிலும், உறக்கத்திலும் உணரப்படாமையின் வைத்து விளக்குகின்றது

உடலின் வேறு உயிர்ஏன் இந்த
உடல் அன்றோ உணர்வது என்னில்,
உடல் சவம் ஆனபோதும்
உடலினுக்கு உணர்வு உண்டோதான்?
உடலினின் வாயுப் போனால்
உணர்ச்சி இன்று உடலுக்கு என்னில்
உடலினின் வாயுப் போகாது
உறக்கத்தும் உணர்வது இன்றே. 188

தெளிவுரை:

ஏழுவகை ஏதுக்களாலும் உடம்பு முதலியவற்றின் வேறாய், உயிர் உண்டு எனச் சாதித்த பின்னரும், அறியும் தன்மை உடம்பில் காணப்படுவதால், உடம்பே உயிர் ஆகும். அதனின் வேறாய் உயிர் உண்டு என்றல் பொருந்தாது என்பர், அவ்வாறு உடம்பே அறியும் என்றால், உடம்பு பிணமாய்க் கிடந்த பொழுதும் உணர்வு நிகழ வேண்டும்; நிகழப் பெறாமையினால், உடம்பு உயிர் என்பது எவ்வாறு பொருந்தும்?

இவ்வாறு மறுத்தபொழுது, பிணமாய்க் கிடந்த பொழுது, உடம்பை விட்டுப் பிராணவாயு நீங்கிவிட்டமையால் உணர்வு நிகழவில்லை; பிராணவாயு நீங்காமல் இருந்தால் உணர்வு நிகழும்; ஆதலால், உடம்பின் வேறாய் உயிர் உண்டு என்பது பொருந்தாது என்று மறுப்பர். அவ்வாறாயின், உறங்கும் பொழுது பிராணவாயுவும் உடம்பும் இருப்பதால் உணர்வு நிகழ வேண்டுமே? அப்போதும் உணர்வு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நிகழவில்லையே? எனவே ''உடம்பு அறியும்'' என்று சொன்னதும், ''உடம்பே உயிர்'' என்று சொன்னதும் எவ்வாறு பொருந்தும்?

மூன்றாம் கூறு ஆகிய ஐம்பொறிகள் உயிர் என்பதை, ஒவ்வொன்றையே அறிவதிலும் ஒன்றை ஒன்று அறியாமை யிலும், தாமே அறியாமையிலும் வைத்து விளக்குகின்றது

அறிவது ஐம்பொறியே என்னில்,
உறக்கத்தின் அறியா ஆகும்;
அறிவது ஒன்று ஒன்றாக
ஒன்று ஒன்றாய் அறியும் என்னில்,
அறிவுகள் ஒன்றை ஒன்று அங்கு
அறிந்திடா; ஐந்தையும் கொண்டு
அறிவது ஒன்று உண்டு; அது ஆன்மா;
ஐம்பொறி அறிந்திடாவே. 189

தெளிவுரை:

அறியும் தன்மை உடம்புக்கு இல்லை. எனவே, அஃது உயிர் அன்று எனச் சாதித்தபொழுது, ஐம்பொறிகளே அறியும் தன்மை உடையன ஆகும்; உடம்பு பிணம் ஆகும் பொழுது ஐம்பொறிகள் கெட்டு ஒழியும்; நனவில் ஐம்பொறிகளே உடம்பில் நின்று அறிந்தும், உறக்கத்தில் அறியாதும் நிற்கும். ஆதலால் ஐம்பொறியே உயிர் என்பர். அவ்வாறாயின், நனவிலும் ஐம்பொறிகள் ஒவ்வொரு பொருளாக அறிவது அன்றி, எல்லாப் பொருளையும் ஒன்றாய் அறியமாட்டாது. ஒவ்வொன்றாக அறிவதே அவற்றின் இயல்பு ஆகும் என்றால், அவ்வாறு அறிவதிலும் ஒரு பொறி ஒரு பொருளை அறியும் போது, மற்றைப் பொறி மற்றொரு பொருளை அறியாது.

அவ்வாறு அறிவதிலும், ஒரு இந்திரியம் தனக்கு உரிய ஒரு பொருளை அறியுமே அன்றி, பிற இந்திரியங்களால் அறியப்படும் பொருள்களை அறியாது. அஃதாவது கண் உருவத்தை அறியும்போது ஓசையைக் கேளாது. கண்ணும் ஒவ்வொரு உருவப் பொருளாய் அறியுமே அன்றி, எல்லா உருவப் பொருளையும் அறியாது. கண் உருவத்தை அறியுமே அன்றி ஒலியை அறியாது. இவ்வாறே பிற பொறிகளிலும் வைத்துக் காண்க. ஆகவே, ஐந்து பொறிகளையும் கொண்டு ஐந்து விடயங்களையும் அறியும் பொருள் ஒன்று உண்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்பது பெறப்படும். அந்தப் பொருளே உயிர் ஆகும். அஃதன்றி ஐம்பொறிகள் தாமே அறியாமையால் உயிர் ஆகமாட்டா.

நான்காம் கூறு ஆகிய பிராணவாயு உயிர் என்பதை பிராண வாயு நிற்கும் போதும் கருவிகள் நில்லாமையில் வைத்து விளக்குகிறது

அறிந்திடும் பிராண வாயு
அடங்குதல் விடுதல் செய்தால்,
அறிந்திடாது உடல் உறக்கத்து
அறிவு இன்மை கரணம் இன்மை
அறிந்திடும் முதலி ஆகில்
அதுநிற்கக் கரணம் போகா;
அறிந்திடும் பிராணன் தன்னை
அடக்கியும் விட்டும் ஆன்மா, 190

தெளிவுரை:

ஐம்பொறிகள் உயிர் அன்று என்று சாதித்தபொழுது பிராண வாயு இயங்குவதனாலேயே அறிவு நிகழ்வதைக் காண்கிறோம்; ஆதலின் பிராணவாயுவே, அந்த ஐம்பொறிகளையும் கொண்டு அறிவது ஆகிய உயிர் ஆகும் என்று கூறினால் அது பொருந்தாது. ஏனென்றால், உறக்கத்தில் உடம்பில் பிராணவாயு இயங்குகின்றது; என்றாலும் ஐம்பொறிகள் ஆகிய கருவி இல்லாமையால், அறிவின்மையாய்ப் பிராணவாயு அறியாதது ஆயிற்று. ஆகவே, பிராணவாயுவின் வேறாய் உயிர் உண்டு என்பது பெறப்படும்.

அது பொருந்தாது என்று கூறினால், பிராணவாயுவே அறியும் தன்மை உடைய கர்த்தா ஆயின், உறக்கத்தில் பிராணவாயும் இருக்கும் பொழுது, கருவிகள் போகக் கூடாது; ஆதலால்; கருவிகளை அடக்கியும் விட்டும், பிராண வாயுவ்வையும் கொண்டு அறிவது ஆகிய உயிர் வேறு உண்டு என்பது பெறப்படும்.

உறக்கத்தில் உயிர் இருக்கையில் கருவிகள் ஒடுங்கி இருக்கும் என்று கூறுவது போல், பிராணவாயுவே கருவிகளை ஒடுக்கியும் விட்டும் அறியும் என்று ஏன் கூறக்கூடாது என்றால், அதற்கு விளக்கம் வருமாறு:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உறக்கத்திலும் நனவிலும் பிராணவாயு, ஒரு தன்மையான போக்கு வரவு உடையதாய் இயங்கக் காண்கின்றோம்; அவ்வாறு உயிர் அறிவும் ஒரு தன்மையாய் இன்றி, நனவில் அறிந்தும் உறக்கத்தில் அறியாதும் நிற்பது ஆகிய வேறுபாடு காணப்படுகிறது. எனவே பிராண வாயுவின் வேறாய் அந்த வேறுபாடு உடையது வேறு ஒன்று உண்டு என்பது அறியப்படும். அவ்வாறு அறியப்படும் அதுவே பொறிகளை ஒடுக்கியும் விட்டும், பிராணவாயுவைத் துணையாகக் கொண்டு அறிவது ஆகிய உயிர் எனப்படும்.

மூன்றாம் சூத்திரம் முடிந்தது

இலக்கண இயல்
நான்காம் சூத்திரம்
பசு இலக்கணம்

தோற்றுவாய்:

மேல் மூன்று சூத்திரத்தாலும், பதி, பசு, பாசம் என்னும் முப் பொருள் உண்டு என்பதற்கு பிரமாணம் கூறப்பட்டது. அதனைக் கேட்ட பிறகு, அந்த முப்பொருள்களின் இயல்பு (இலக்கணம்) யாதோ என்னும் வினா எழும். ஆகவே, பசு இலக்கணம், பாச இலக்கணம், பதி இலக்கணம் என்னும் மூன்றனையும் முறையே மூன்று சூத்திரங்களால் கூறத் தொடங்கி முதற்கண் மேல் அடுத்த நின்ற பசு இலக்கணம் கூறுகின்றார்.

அந்தக் கரணங்கள் ஆன்மா அன்று எனவும், ஆணவ மலத்தின் சேர்க்கையால், ஆன்மா அந்தக் கரணங்களைக் கூடி ஐந்து அவத்தைப்படும் எனவும் கூறுகின்றது

உணர்வன கரணம் என்னில்
ஒன்றை ஒன்று உணரா; வெவ்வேறு
அணைதரும் செயல்கள் நான்கும்
அறிந்து அவை அடக்கி ஆக்கிப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புணரும் உட்கருவி ஆக்கிப்
புறக்கருவியினும் போக்கி,
இணைதரும் இவற்றின் வேறாய்
யான் எனது என்பது ஆன்மா. *191*

தெளிவுரை:

''அடக்கி'' என்பது கனவு நிலையையும், ''ஆக்கி'' என்பது நனவு நிலையையும் குறிக்கும். இனி மனம் முதலிய அந்தக் கரணமே அறியும் ஆகலின், அதுவே உயிர் என்றால் இந்த அந்தக் கரணமும் ஐம்பொறியினைப் போல், ஒன்றனை ஒன்று உணர மாட்டா. அஃதாவது மனம் சங்கற்பிக்குமே அன்றி, சிந்தித்தல், நிச்சயித்தல், அகங்கரித் தல்களைச் செய்யாது. இவ்வாறு புத்தி, சித்தம், அகங்காரம் மூன்றின் இடத்தும் கண்டு கொள்க. ஆதலால், அந்தக்கரணம் நான்கினையும் கொண்டு அறியும் உயிர் அவற்றின் வேறு ஆகும்.

வேறு ஆகி நின்றாலும், ''யான் எனது'' என்னும் செருக்கு உறுதற்கு ஏது ஆகிய ஆணவமலம், உயிரோடு அநாதியே பொருந்தி நிற்பதால், உயிருக்கு, தனக்கு என அறிவு இன்றி, இந்த அந்தக் கரணங்களால் ஆகிய நான்கு தொழிலையும், இவற்றோடு கூடி உயிர் அறியும்; அவ்வாறு அறிகின்ற ஆன்மா, கனவு நிலையில் இந்த அந்தக் கரணங்களை அடக்கி, உட்கருவிகள் ஆக்கி அகத்து நிகழ்வதை அறியும்; நனவு நிலையில் அந்த அந்தக்கரணங்களைப் புறக்கருவிகளோடு சேர்த்துப், புறக்கருவிகள் ஆக்கிப் புறத்து நிகழ்வதை அறியும்.

இவ்வாறு அகத்தும் புறத்தும் சேர்வதால், நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் என்னும் ஐந்தவத்தைகளை ஆன்மா பொருந்தும்; இவ்வாறு பொருந்தி நிற்பது ஆன்மாவுக்குப் பொது இயல்பு ஆகும்.

இந்தச் செய்யுள் சிவஞான போதம் நாலாம் சூத்திரம் போல முக்கூறது ஆகும்; அவற்றுள்

முதற்கூறு : உணர்வன கரணம் என்னின் ஒன்றை ஒன்று
உணரா ஆகலான் ஆன்மா இவற்றின் வேறாம்.

இரண்டாம் கூறு : யான் எனது என்பது இணை தரும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மூன்றாம் கூறு : செயல்கள் நான்கும் அறிந்து அவை அடக்கி ஆக்கிப் புணரும் உட்கருவி ஆக்கிப் புறக்கருவி யினும் போக்கி வெவ்வேறு அணை தரும்.

நான்காம் சூத்திரம்

முதல் அதிகரணம்

உணர்வன கரணம் என்னில் ஒன்றை ஒன்று உணரா ஆகலான், ஆன்மா அவற்றின் வேறாம் என்பது

அந்தக் கரணங்கள் கருவி எனவும், ஆன்மா இவற்றின்வேறு எனவும், இவ்வான்மாவை அறியும் ஞானம், பசு ஞானம் எனவும், சிவஞானம் அதனினும் வேறு எனவும் கூறுகின்றது

கருவி ஆம் மனமும் புத்தி
அகங்காரம் சித்தம் நான்கும்
மருவி ஆன்மாவே என்ன
வரும் தீபம் எனத் தெரிந்து அங்கு
ஒருவி ஆன்மாவின் உண்மை
உணர்ந்தவர் தமை உணர்ந்தோர் .
தரும் இது பசு ஞானம், பின்
சிவஞானம் தனக்கு மேலாம். 192

தெளிவுரை:

மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்கின்ற நான்கும் ஒரு விடயத்தை அறிவதற்குக் கருவியாக ஆன்மாவோடு ஒற்றித்து நிற்கும். அப்படி நிற்கும்பொழுது அக்கருவியே கருத்தா என்னும் படியாக விளங்கும். அவற்றைக் கருவியாகக் கொண்டு ஆன்மா விடயங்களை அறியும். அஃது எப்படி என்றால், விளக்கைக் கருவியாகக் கொண்டு, கண் பொருள்களை அறிவது போல் ஆகும்.

ஆகவே, அந்தக் கரணங்கள் உயிர்க்குக் கருவியாக, உயிரின் வேறாய் நிற்பன என்று அறிந்து, அவற்றின் நீங்கி நின்று இக்கரு வியைக் கொண்டு, அறியும் கருத்தாவின் உண்மை யாது என்று ஆராய்ந் தோரே, தாம் ஆகிய ஆன்ம சொரூபத்தை இனிது உணர்ந்தவர் ஆவர்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவ்வாறு ஆராயும் அறிவும் பசுஞானமே ஆகும். ஆகவே அந்தப் பசுஞானம் வந்த பின்பு, அந்த ஞானம் நம்மிடத்தில் முன்பு நிகழாமையால் நாமாக எதையும் அறிந்தோம் என்பது பொருந்தாது. அறிவிக்கும் பொருள் வேறாக இருந்து, இந்தப் பருவத்தில் அந்த அறி வினைத் தந்திருக்க வேண்டும் என்று உணர்ந்து, அந்த அறிவினைத் தரும் பொருள் யாது என்பதில் தெளிவு ஏற்பட்டால், அவ்வாறு தெளிவு பெற்றவர்க்கு அந்த பசுஞானத்தின் மேலாகிய சிவஞானம் விளக்கும்.

அந்தக் கரணங்களின் வேறாக நின்று அவற்றை அறியும் கருத்தா உயிர் என்பதை அறிவதே பசுஞானம். இவ்வாறு தன்னை உயிர் என்று அறியும் அறிவைத் தனக்குத் தந்த பரம்பொருளைப் பற்றிய தெளிவே பதிஞானம்.

அந்தக் கரணங்களை உடன் நின்று செலுததும் அக்கரங்கள் இவை என்றும், அந்த அக்கரங்களைச் சேர்த்து நோக்கினால் பிரணவம் ஆகும் என்றும், இந்தப் பிரணவத்தின் உண்மை நால்வகை வாக்குகளை உற்றுநோக்க வல்லார்க்கு விளங்கும் என்றும் கூறுகின்றது

அவ்வுடன் உவ்வும் மவ்வும்
மனம் புத்தி அகங்காரங்கள்;
செவ்விய விந்து நாதம்
சித்தமோடு உள்ளம் ஆகும்;
ஒவ்வெனும் எழுத்தாம் ஐந்து
உணர்வு உதித்து ஒடுங்கும் ஆறும்
பவ்வமும் திரையும் போலும்
பார்க்கில் இப் பண்பு தோன்றும். 193

தெளிவுரை:

அகங்காரம், புத்தி, மனம், சித்தம், உள்ளம் என்கின்ற ஐந்தும் சடம் ஆதலால், அவை கருவியாக நின்று எவ்வாறு அறிதலைச் செய்யும் என்றால், அக்கருவிகளுள் அகங்காரத்திற்கு ''அ'' காரமும், புத்திக்கு ''உ'' காரமும், மனதிற்கு ''ம'' காரமும், சித்தத்திற்கு விந்துவும், உள்ளத்திற்கு நாதமும் என்கின்ற எழுத்துக்கள் உடன் நின்று செலுத்துவதால், அவை அறிதலைச் செய்யும். அந்த எழுத்துக்கள் ஐந்தும் பிரிப்பு இன்றி நோக்கும் பொழுது, அவை பிரணவ ரூபம் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்த ஐந்து எழுத்தாலும் உயிரின்கண் உணர்வு மாறி மாறித் தோன்றும். அஃது எப்படி என்றால், கடலில் அலை புதிது புதிதாகத் தோன்றியும் ஒடுங்கியும் வருவது போலாகும். இந்த ஐந்து எழுத்தாலும் கருவிகள் தொழிற்படுவதான விகற்பத்தோடு கூடிய இயல்பு, நிவர்த்தி முதலிய பஞ்ச கலைகளைப் பற்றுக் கோடாகச் சார்ந்து தோன்றும் சூக்குமை முதலிய நால்வகை வாக்குகளை உற்று நோக்குபவர்க்கு இனிது விளங்கும்.

''உள்ளம்'' என்பது புருடதத்துவம் ஆகும் தன்மையைக் குறிக்கும்.

''விகற்பத்தோடு கூடிய இயல்பு'' என்பது வேறுபடுத்திக் காணும் தன்மையைக் குறிக்கும். பிரணவம், சமட்டிப் பிரணவம், வியட்டிப் பிரணவம் என இருவகைப்படும். சமட்டிப் பிரணவம் ''ஓம்'' என நிற்பது; வியட்டிப் பிரணவம் அகார உகார மகார விந்து நாதம் என நிற்பது, சமட்டி – தொகுத்துச் சொல்வது; வியட்டி – பகுத்துச் சொல்வது. கடலில் உள்ள அலைகள் தோன்றி ஒடுங்குவது போல், ஆன்ம அறிவும் கணந்தோறும் நினைப்பும் மறப்புமாக, தோன்றியும் ஒடுங்கியும் வருவதாய் இருக்கும். இந்த நினைப்பு மறப்புக்கள் சகல கேவலம் எனப்படும்.

அந்தக்கரணங்களைச் செலுத்தும் அக்கரங்களின் அதி தெய்வங்கள் இவை எனவும், இந்தப் பதினைந்தும் கூடிய பொழுது ஆன்மா அறிதலைச் செய்யும் எனவும், யோகப் பயிற்சி உடைய வர்க்கு இந்தப் பதினைந்தின் உண்மை விளங்கும் எனவும் கூறுகின்றது.

அயன் அரி அரனும் ஈசர்
சதாசிவம் அதி தெய்வங்கள்
உயவரும் அவ்வோடு உவ்வும்
அவ்விந்து நாதங் கட்குப்
பயன் உறும் அஞ்சில் ஆன்மாப்
பரவிடில் அசித்தாம் பார்க்கில்
சயம் உறு வளி இரண்டும்
தவிர்த்து உறில் தானும் தோன்றும். 194

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

அகார உகார மகார விந்து நாதங்கள் ஆகிய அந்த எழுத்துக் களும் சடம்; ஆகவே அந்த எழுத்துக்களை முறையே அயன், மால், அரன், ஈசன், சதாசிவன் என்னும் ஐவரும் அதி தெய்வங்களாக நின்று செலுத்துவர். ஆதலால் இவ்வாறு கரணங்கள் ஐந்தும், எழுத்துக்கள் ஐந்தும், அதிதெய்வம் ஐந்தும் என்கின்ற இந்த மூன்று வகையில் ஆன்மா பொருந்திய பொழுது, அறிதல் தொழிலைச் செய்யும் இந்தப் பதினைந்தோடும் பொருந்தாத பொழுது, ஆன்ம சடம்போல் அறிவின்றிக் கிடக்கும். வலி பொருந்திய பிராணன், அபானன் என்னும் இருவகை வாயுவையும் அடக்கிச் செய்யும் யோகிகளுக்கு, அந்த யோகப் பயிற்சியில் இந்த இயல்பு இனிது விளங்கும்.

அதி தெய்வம் – அதிட்டித்து நிற்கும் தெய்வம்; அஃதாவது அக்கரங்களை வாயிலாகக் கொண்டு நிற்கும் தெய்வம்.

முத்திறத்துப் பதினைந்தும் வருமாறு:

கரணங்கள்	எழுத்துக்கள்	அதிதெய்வம்
அகங்காரம்	அ	அயன்
புத்தி	உ	மால்
மனம்	ம	அரன்
சித்தம்	விந்து	ஈசன்
உள்ளம்	நாதம்	சதாசிவன்

அந்தப் பதினைந்தும் சுட்டி அறியப்படுதலின் அவை ஆன்மாவின் வேறு எனக் கூறுகின்றது

ஆன்மாவின் வடிவு தானே
அநேக அர்த்தக் கூட்டம் என்னில்
பார்ப்பார்கட்கு ஆன்மா இன்றாய்
பலபொருள் உண்மை ஆகும்;
சேர்ப்பாய் பலவே உண்மை
என்றிடில் சென்று இவற்றை
ஓர்ப்பான் வேறு உணர்வோர்க்கு எல்லாம்
உணர்பொருள் வேறு அது ஆமே. 195

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

கரணம், அக்கரம், அதி தெய்வங்கள் ஆகிய முத்திறத்தோடும் கூடிய பொழுதே ஆன்மா, அறிதலைச் செய்யும் என்றதனால், அந்தப் பல பொருட் கூட்டமே ஆன்ம சொரூபம் என்று சொல்ல வேண்டிவரும். அதனை ஆராயும்பொழுது, கூட்டம் என்பதற்கு ஒரு பொருளாய் இல் லாமல், பல பொருளேயாய் அது விளங்கும். அதுபோல ஆன்மா என் பது, ஒரு பொருளாய் இல்லாமல் பல பொருளாய் இருப்பதாக முடியும்.

ஆன்மா தனி ஒருபொருள்; எனவே, ஆன்ம சொரூபம் பல பொருட் கூட்டம் என்பது பொருந்தாது. கூட்டம் ஆகிய அந்தப் பதினைந் துமே உண்மையான ஆன்மா என்றால் அதுவும் பொருந்தாது. ஏனென் றால், அந்தப் பதினைந்தையும் சுட்டி அறியலாம்; ஆனால் ஆன்மா சுட்டி யறியப்படாத ஒன்று ஆகும். ஆகவே, அந்தப் பதினைந்தின் வேறு ஆகிய ஆன்மா வேறாகும் உண்மையை உணர்பவர்களுக்கு எல்லாம், இவ் வுண்மை ஒப்ப முடிந்தது. எனவே, ஆன்மா அந்தக்கரணங்களுள் ஒன்று அன்று என்பது பெறப்பட்டது.

நான்காம் சூத்திரம்
இரண்டாம் அதிகரணம்

யான் எனது என்பது இணை தரும் என்பது

கருவி முதலிய பதினைந்தோடும் கூடிய இடத்து அன்றி, அறிவு விளங்காமையால் ஆன்மா, இயல்பாகவே அறிகின்ற பிரமம் ஆகாது எனக் கூறுகின்றது

அறிவு இச்சை செயல்கள் எல்லாம்
அடைந்து, அனல் வெம்மையும் போல்,
குறி உற்று அங்கு ஏக அநேக
குண குணி பாவம் ஆகி,
நெறியுற்று நிற்கும் என்னில்,
நிகழ் புலன் கரணம் எல்லாம்
செறிவு உற்று அங்கு அறிவு கொள்ள
வேண்டுமோ சீவனார்க்கே. 196

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஆன்மாக்கள் எல்லாம், கருவி முதலிய பதினைந்தின் வேறு ஆகும் என்று மேலே சாதிக்கப்பட்டது. அதன் பிறகு, பிரமப் பொருளே வேறுபட்டு சீவன் எனத் தோன்றி, அறிவு இச்சை செயல்களை அடைந்து, தீயும் சூடும் போல பிரமமும் சீவனும், பேதாபேதம் ஆகிய குணம் – குணித்தன்மை உற்று, குணம் ஆகிய சீவனும், குணம் – குணித் தன்மையாய் பல்வேறு வகைப்பட்டு நிற்கும் என்று பரிணாம வாதிகள் கூறுவர். அவ்வாறு பிரமப் பொருளே சீவன் ஆயின், அந்த சீவனார்க்குப் பொறி கரணங்களின் கூட்டுறவு இல்லாதபோது, அறிவு நிகழாமைக்குக் காரணம் யாது? சீவன் பிரமப் பொருளாயின் பொறி கரணங்களின் துணை இன்றி அறிய வேண்டும். அவற்றைத் துணையாகக் கொண்டு சீவனுக்கு அறிவு நிகழ்வாதல், சீவன் பிரமம் ஆகமாட்டாது.

''பேதாபேதம்'' என்பதற்கு விளக்கம்; தீ ஆகிய ஒரு பொருளில் செம்மையும் சூடும் பிரிக்க முடியாமையால் அபேதம்; ஆயினும் செம்மைத் தன்மை வேறு, சூட்டுத் தன்மை வேறு ஆதலினால் பேதம்; இவற்றுள், செம்மை குணி; சூடு குணம்; இதுபோல பிரமமும் சீவனும் பேதாபேதமாய், பிரமம் குணியும் சீவன் குணமுமாய் நிற்கும் என்பர். இந்தக் கருத்து சைவ சித்தாந்தத்திற்குப் பொருந்தாது; ஏனென்றால், குணி என்பது குணத்தை உடைய பொருளைக் குறிக்கும். சைவ சித்தாந்தம் உயிர், தனியொரு குணிப் பொருள் என்கிறது. எனவே, இது பொருந்தாது.

அறிவு இச்சை செயல்கள் ஆகிய குணம் ஆன்மாவுக்கு இல்லை எனவும், ஆன்ம சந்நிதியில் கரணங்களுக்கே உண்டு எனவும் கூறுபவரை மறுத்து ஆன்மாவுக்கு அறிவிச்சை செயல்கள் ஆகிய குணம் உண்டு எனக் கூறுகின்றது

குணங்களை இன்றி ஒன்று ஆம்
குறியுடைத்து ஆன்மா என்னில்
இணங்கிடா இச்சா ஞானக்
கிரியைகள் இவை உடல்கண்
பிணங்கிடும் சந்நிதிக் கண்
எனில், பிணத்து உறக்கத்து இன்றாம்;
உணங்கிடும் கரணம் என்னில்
சந்நிதி ஒழிந்தது அன்றே. **197**

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

"ஆன்மா குணி அன்று. அறிவு இச்சை செயல்கள் ஆன்மாவுக்குக் குணம் அன்று. ஆன்மா ஓர் அறிவுடைப் பொருள், அவ்வளவே" என்று சாங்கியர் கூறுவர். அவ்வாறாயின் ஆன்மாவின் உடலில் அறிவு மட்டுமே நிகழல்வேண்டும்; அவ்வாறின்றி அறிவு இச்சை செயல்கள் மூன்றுமே உடலில் நிகழக் காண்கிறோம்; ஆகவே, ஆன்மா அறிவு மட்டும் உடையது என்பது பொருந்தாது. "உயிரின் அருகில் கரணங்கள் தொழிற்படுகின்றன. எனவே உடலின்கண் அறிவு இச்சை செயல்கள் நிகழும்; ஆதலால்அந்நிகழ்ச்சி பற்றி ஆன்மாவுக்கு அறிவு இச்சை செயல்கள் உண்டு எனக் கூற வேண்டா' என்று சாங்கியர் மேலும் கூறுவர்.

அப்படியானால் வியாபகம் ஆகிய உயிரின் அண்மையில் (சந்நிதியில்) உடம்பு பிணம் ஆன பொழுதும், உறக்கத்திலும் அறிவு இச்சை செயல் உயிரின்கண் நிகழ்தல்வேண்டும்; அந்நிலையில் அவ்வாறு நிகழாமையால், அதற்குக் காரணம் என்ன என்று கேட்டால் சாங்கியர் "கரணங்கள் அந்நிலையில் ஒடுங்கினமையால், அறிவிச்சை செயல்கள் நிகழவில்லை" என்பர்.

கரணங்கள் ஒடுங்கிய காலத்தும், வியாபகமான உயிரின் சந்நிதிக்குக் கேடு இல்லை. ஆகவே, அறிவு இச்சை செயல்கள் உயிரின் சந்நிதியில் மட்டுமே நிகழும் என்பது பொருந்தாதாயிற்று. ஆதலால், ஆன்மாவின் குணம் ஆகிய அறிவு இச்சை செயல்களின் தொழிற்பாட்டால், கரணங்கள் தொழிற்படுமே அன்றி, சந்நிதியளவில் கரணங்கள் தாமே தொழிற்படமாட்டா.

காந்தத்தின் முன்பு இரும்பு தொழிற்படுவது போல, ஆன்மாவின் முன் கரணம் தொழிற்படும் என்பவரை மறுத்து, நினைத்தல் மறத்தல் முதலிய மாறுபட்ட தொழில்கள், கரணத்தில் நிகழக் காண்டலின், இழுக்கப்படுதல் ஒன்றே நிகழும் அந்த உவமை பொருந்தாது எனக் கூறுகின்றது

சந்நிதி குணம் அது ஆகும்
தான் என்போல் என்னில், காந்தம்
முன் இரும்பு என்றாய் ஈர்க்கும்
முறைமை உண்டு அகற்றல் இன்றாம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உன்னுதல் ஒடுங்கல் ஓடல்
இருத்தலே கிடத்தல் நிற்றல்
என்னும் இத் தொழில்கள் மற்றும்
இயற்றுவது ஆன்மா என்னே. 198

தெளிவுரை:

சந்நிதி என்பது வியாபகமாய் நிற்கப் பெறுதல் என்பதைக் கொண்டு, 'சந்நிதி மாத்திரையில் கரணங்கள் தொழிற்படும்' என்பதை மறுத்தது பொருந்தாது. சந்நிதி ஆவது எதுபோல என்றால் காந்தத்தின் முன் இரும்பு தொழிற்படுவது போல உயிரின் முன் உடம்பு தொழிற்படுவதற்கு ஏது ஆவதொரு குணவிசேடம் போல ஆகும் என்பர்.

அவ்வாறாயினும் ஒரு குணம் உடைய காந்தம், இரும்பை இழுக்குமே அன்றி, மாறுபட்ட தொழில் ஆகிய அகற்றுதலைச் செய்யாது. அதுபோல ஆன்ம சந்நிதியில் கரணங்கள் ஒரு தொழிலைச் செய்யாமல், நினைத்தல், மறத்தல், ஓடல், இருத்தல், கிடத்தல், நிற்றல், முதலிய மாறுபட்ட தொழில்களைச் செய்வதற்கு என்ன காரணம்?

அந்தக் காரணத்தை ஆராயும்பொழுது அந்தத் தொழில்களைச் செய்வதற்கு ஏது ஆகிய அறிவு இச்சை செயல்கள் ஆன்மாவின் இடத்துக் குணமாக இருந்து, அந்தக் குணங்கள் தொழிற்படுவதால் உடம்பு தொழிற்பட்டதே அன்றி, ஆன்மா சும்மா இருக்க அதன் சந்நிதியில் உடம்பு தொழிற்பட்டது என்றது பொருந்தாது என்பது நன்கு விளங்கும்.

ஆன்மா உருவப் பொருள் என்பவரை மறுத்து உரைக்கின்றது

உரு உயிர் என்னில் இந்த
உடலினுள் காண வேண்டும்;
வருவது பரிணா மத்தாய்
அனித்தமாம் பூதம் ஆகும்
கருவினுள் நுழையும் ஆறும்
காட்டிட வேண்டும் கண்ணில்
மருவிடாது என்னில் உன்தன்
வாயினால் உரு அன்று என்னே. 199

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

இவ்வாறு கூறப்பட்ட ஆன்மா, அருவமோ, உருவமோ, அருவுருவமோ என்னும் சந்தேகத்தில், பவுராணிகர் ஆன்மா உருவமே என்பர். அவ்வாறாயின், இந்த உடம்பின் உள்ளேயே வேறொருவடிவம் காணவேண்டும். மேலும், காணப்படும் உருவப்பொருள், மாறுபட்டு அழியக்கூடிய பூதத்தோடு ஒப்பு ஆகும். அஃதன்றியும், உருவமாய் இருக்கின்ற உயிர், தாயின் கருப்பத்தினுள் எப்படி நுழையும் என்பதையும் தெரிவிக்க வேண்டும். ஆதலால் ஆன்மா உருவுடைப் பொருள் என்று கூறுவது பொருந்தாது. இவ்வாறு மறுத்துக் கூறியதும், கண்ணினால் காணமுடியாத உருவை உடையது ஆன்மா என்று கூறுவர். உருவத்தை அறிவது கண். ஆதலால் கண்ணுக்கு எட்டாதது ஆன்மா என்று நீ சொல்வதிலிருந்தே, ''ஆன்மா அருவம்'' என்று நீயே ஒப்புக் கொண்டாய் என்பதைத் தெளிவாயாக.

ஆன்மா அருவம் ஆகிய சூக்கும உருவம் என்பவரையும், அதிசூக்கும உருவம் என்பவரையும் மறுத்து உரைக்கின்றது

சூக்கும உரு அது என்னில்
தூல காரணம் அது ஆகும்,
ஆக்கிய மனாதி தன் மாத்
திரை வடிவு அசேதனம் பின்
நீக்கிய சூக்கு மத்தே
நிற்பதோர் உரு உண்டு என்னில்,
ஆக்கிடும் உருவம் எல்லாம்
அசித்துமாய் அநித்தம் ஆமே. **200**

தெளிவுரை:

உயிர் உருவம் அன்று என்று மறுத்தபொழுது, அந்த மறுப்பு தூல உருவத்தையே குறிக்கும் என்று கொண்டு, அருவம் ஆகிய சூக்கும உருவே உயிர் என்பர். அந்த சூக்கும வடிவம், தூல உருவத்தைத் தோற்றுவிக்கின்ற சடம் ஆகிய மனம் புத்தி முதலிய கரணங்கள், தன் மாத்திரைகளால் ஆக்கப்பட்ட புரியட்டக உடம்பு ஆகும். ஆகவே அதுவும் ஆன்மா அன்று. அதன்மேல் அந்தப் புரியட்டக தேகத்துள், அதி சூக்கும

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உருவாய் நிற்பதே உயிர் என்பர். அவ்வாறு நிற்பது, கலை முதலிய தத்துவங்களைத் தோற்றுவிக்கின்ற அசுத்த மாயையின் ஏகதேச பாகம் ஆகிய பரசரீரம் ஆகும், ஆகவே, அதுவும் உயிர்அன்று. இந்த சூக்கும சரீரம், அதிசூக்கும சரீரம் ஆகிய அனைத்தும் அறிவு இல்லாததும் அழிவு எய்தக் கூடியதும் ஆகும். ஆகவே, அந்த இயல்புகள் இல்லாத உயிர், அந்த இயல்புகளை உடைய உருவப் பொருள் என்பது எப்படிப் பொருந்தும்? பொருந்தாது.

ஆன்மா அருவுருவம் என்பவரை மறுத்து உரைக்கின்றது

அருஉரு என்னில் ஆன்மா
அருஉரு ஆவது இன்றாம்;
உரு அரு ஆகா தாகும்
ஒரு பொருட்கு இரண்டு தன்மை
வருவதும் இல்லை; காட்ட
வன்னிபோல் மருவும் என்னில்
உருவமும் காண வேண்டும்
உண்மையும் ஒழிந்து போமே. **201**

தெளிவுரை:

ஆன்மா உருவும் அன்று, அருவும் அன்று என்று மறுத்த பொழுது, கவுளர் என்னும் ஒரு சாரார், ஆன்மா அருவுருவப் பொருள் என்று கூறுவர். அவ்வாறாயின், அரு உரு ஆவது இல்லை; உரு அரு ஆவது இல்லை, இஃது எது போல எனில், அரு ஆகிய ஆகாயம், உரு ஆகாதது போல் ஆகும்; உரு ஆகிய மண், அரு ஆகாதது போலும் ஆகும். ஒன்று பிறிது ஒன்று ஆகாது என்பது ஒக்கும்.

ஒரு பொருளிடத்தில் இரண்டு தன்மைகள் இருக்கும் என்பது கூடாது என்றால், இரண்டு மாறுபட்ட தன்மைகள் ஒரு பொருளிடத்தில் என்றும் இரா ஆகும். இவ்வாறு கூறியதும், விறகும் அக்கினியும் ஆகிய இரண்டு மாறுபட்ட தன்மைகள், விறகினிடத்தில் காணப்படுகின்ற படியால் மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஒருபொருளிடத்தில் இராது என்றல் பொருந்தாது என்பர்.

இந்த உவமையை ஆராயும்பொழுது, விறகாய்த் தோன்றிய பொழுது அக்கினி தோன்றுவதுஇல்லை. அக்கினி தோன்றியபொழுது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விறகு கெட்டு ஒழிகிறது. அதோடு அக்கினியும் கெட்டு ஒழியும். இவ்வாறு ஒன்று தோன்றும் பொழுது பிறிதொன்று தோன்றாது ஆதலால், அந்த இரண்டும் தம்முள் வேறு ஆகி, ஒவ்வொன்றும் காணப்படும்; ஆதலால் உருவாகி அழிவினை எய்தும் ஆகலின், இந்த இடத்தில் உருவம் இல்லாததாய் அழியப்படாததாய் இருக்கின்ற ஆன்மாவிற்கு, உவமை ஆவது செல்லாது.

இந்த இடத்தில் மற்றொன்று சிந்திப்பதற்கு உரியது. இறைவனுக்கு அருவுருவத் திருமேனி உண்டு என்று நூல்களில் கூறப்படுகின்றதே? அருவமும் உருவமும் ஆகிய மாறுபட்ட இரண்டு தன்மைகள் ஒன்றாய் இருப்பது எப்படி முடியும்? காணப்படாத அருவமாய் இல்லாததால் ''உருவம்'' என்றும், காணப்பட்ட உருவமாய் இல்லாததால் ''அருவம்'' என்றும், கூறினதே அன்றி, அருவும் உருவும் ஆகிய இரண்டின் கூட்டம், ''அருவுருவம்'' எனக் கூறியது அன்று. இவ்வுண்மை என்றும் நினைவில் கொள்ளத் தக்கது.

மீண்டும், சந்திரன்போல் ஆன்மா அருவுருவம் என்பவரை மறுத்து உரைக்கின்றது

சந்திரன் வடிவு போலத்
தான் அரு உருவம் என்னில்,
வந்து நம் கண்ணில் தோன்றும்
வடிவு உளதாம் உயிர்க்கும்
இந்த ஊன் உருவம் தானாய்
எழுவதும் உயிரே என்னில்
பந்தமாய் அசித்தாய் ஆன்மாப்
பவுதிகம் ஆகும் அன்றே. 202

தெளிவுரை:

சந்திரன் அமாவாசை நாளில் ஒரு கலையுடன் அருவமாய் நின்று, பின்பு ஒவ்வொரு கலையாய் வெளிப்பட்டு, உருவமாய்த் தோன்றும்; அதுபோல ஆன்மாவும் அருவுருவம் ஆகும் என்று மீண்டும் கூறுவர். அவ்வாறாயின், சந்திரனுடைய உருவ நிலை காணப்படுதல் போல ஆன்மாவின் உருவ நிலை காணப்படவேண்டுமே? என்று கேட்டால், ஆன்மாவும் அருவமாய் நின்றே, கருவுட் பதிந்து இந்த உடம்புருவாய் வளர்ந்து காணப்படுகிறது; ஆதலால் ஆன்மாவின் வடிவம் அருவுருவம் என்பது பொருந்தும் என்பர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவ்வாறாயின், சித்தாய் அஃதாவது அறிவு உடையதாய், அழியா ததாய் பந்தத்தில் பட்டு நீங்குவதே ஆன்மா என்று கருதியதோடு முர ணாக, அறிவு இல்லாததாய், அழிவதாய், பந்தமாய் உள்ள உடம்பு, ஆன்மாவின் வடிவம் என்பது எப்படிப் பொருந்தும்?

ஆகாசம்போல் ஆன்மா அருவம் ஆகும் என்பவரை மறுத்து உரைக்கிறது

அரு அவிகாரி ஆன்மா
ஆகாயம் போல் என்னில்,
உருவினைக் கட்டி ஆட்டி
ஓட்டி மீட்டு உலாவப் பண்ணி,
மருவி நிற்பித்து இருத்திக்
கிடத்தி மண் புரட்டி மற்றும்
பெரு விகாரங்கள் எல்லாம்
தருவது என்? பேசிடாயே. 203

தெளிவுரை:

பாதஞ்சலர் என்னும் ஒரு சாரார், ஆன்மா ஆகாயம்போல் அரு வாய் அவிகாரியாய் நிற்கும் என்பர். (அவிகாரி - விகாரம்அற்றது) மேலே அருவம் என வாதித்தது, சூக்கும வடிவையும் அதி சூக்கும வடிவையும் குறிக்கும் ஆகலின், இந்த இடத்தில் அருவம் என்றது, அதன் வேறு ஆகிய வடிவம் இல்லாமையைக் குறித்தது ஆகும்.

ஆன்மா ஆகாயம் போல் அருவம் ஆயின், உடலோடு கூடி உடலை ஆட்டியும், அந்த உடலை நிற்கும்படி செய்தல், நடக்கும்படி செய்தல், மண் ணில் புரளும்படி செய்தல் முதலிய இந்தப் பெரிய விகாரங்கள் எல்லாம், எவ்வாறு செய்ய முடியும்? சொல்வாயாக. ஆகாயம் அருவாயும் சடமாயும் இருப்பதால், அதற்கு விகாரம் இல்லாமை கூடும். ஆன்மா அருவாயும் அறிவுடைப் பொருளாயும் இருப்பதால், அதற்கு விகாரம் இல்லாமை கூடாது. ஆதலால் ஆன்மா ஆகாயம் போல் அரு என்பது பொருந்தாது.

அறிவுடைப் பொருளாய் இருக்கின்ற இறைவனை விகாரம் இல்லாதவன் என்று கூறும் கருத்து என்ன என்றால், விகாரம் இல்லா தவன் என்பது ஒன்றும் செய்யாதவன் என்பது அல்ல; எல்லாம் செய்தும் ஒன்றிலும் பற்று இல்லாதவன் என்பதாகும். ஆதலால் முரண் இன்மை புலப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆன்மா 'அசித்து' என்பவரையும் 'சித்தசித்து' என்பவரையும் 'சுத்தசித்து' என்பவரையும் மறுத்து உரைக்கின்றது

அசித்து எனில் உணராது ஆன்மா;
அசித்துச் சித்து ஆகும் எனில்,
அசித்துச், சித்து ஆகாது ஆகும்;
சித்து அசித்து ஆவது இல்லை;
அசித்து ஒரு புறமாய் ஒன்றில்,
சித்து ஒரு புறமாய் நில்லாது;
அசித்து உறாச் சித்தே என்னில்,
அசித்து அடைந்து அறிவது இன்றாம். 204

தெளிவுரை:

வைசேடிகர் என்னும் ஒருசாரர், ஆன்மா அறிவில்லாத சடப் பொருள் என்பர்; சடப்பொருள் ஆயின் அறியமாட்டாது. அறியும் தன்மை காணப்படுவதால் ஆன்மா சடம் ஆகாது. இவ்வாறு கூறியதும், ஆன்மா சடம் என்றாலும் பின்பு மனத்தோடு கூடி அறியும் என்பர். அது பொருந்தாது. எவ்வாறு என்றால், அறிவுடையது அறியாமை உடையதாகாது; அறியாமை உடையது அறிவுடையதாகாது. இவ்வாறு கூறியதும், அதற்கு மேல் சைவரில் ஒரு சாரார், ஆன்மா அறிவாயும் அறிவின்மையாயும், அஃதாவது சித்த சித்தாயும் (சித்து, அசித்து) இருக்கும் என்பர்.

ஒரு பொருளில் மாறுபட்ட இரண்டு தன்மை இருத்தல் கூடாது. ஆதலால் அதுவும் பொருந்தாது என்று கூறியதும், அதற்கு மேல் பட்டாசாரியர் என்னும் ஒரு சாரர், கருவிகளைப் பொருந்தாத சித்தே ஆன்மா என்பர். அவ்வாறாயின் கருவிகளின் துணை இன்றியே ஆன்மா அறியவேண்டும். கருவிகளின் துணையை இன்றி ஆன்மாவுக்கு அறிதல் கூடாமையால் அதுவும் பொருந்தாது.

''சித்த சித்து'' (சித்து, அசித்து) என மாறுபட்ட இரண்டு தன்மைகள், ஆன்மாவின் இடத்தில் இருக்கும் என்பது பொருந்தாது. என்றால், பின்னர் வரும் ஏழாம் சூத்திரத்தில், ஆன்மா ''நித்தனாய் சதசத்தாகி'' என்று மாறுபட்ட இரண்டு தன்மைகளை உடையது ஆன்மா என்று கூறுவதோடு முரணாதோ என்றால், முரணாது., எவ்வாறு எனின், சத்தும் அசத்தும் ஆகிய இரண்டு தன்மைகள் ஒன்றாய் இருக்கும் என்று கூறவில்லை. சத்தோடு கூடி சத்தாயும், அசத்தோடு கூடி அசத்தாயும் நிற்பதற்கு உரிமை உடையது என்று கூறியது ஆகும். ஆகவே முரண் இன்மை புலப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆன்மா 'பரம அணு' என்பவரை மறுத்து உரைக்கின்றது

உயிரினை அணு அது என்னில்
உடல்பல துவாரம் ஓடும்
பயில்வு உறக் கட்டுணாது;
பாரமும் தரித்துச் செல்லாது;
அயர்வு உறும் அசித்தாய்ப் பூத
அணுக்களில் ஒன்றுஅது ஆகும்;
இயல்பு உறும் அவயவத்தால்
அணு உரு இறக்கும் அன்றே. 205

தெளிவுரை:

பாஞ்சராத்திரிகள், 'ஆன்மா அணு அளவு' என்று வேதங்களில் கூறுவதால், இந்த உடம்பின் உள் ஆன்மா அணு அளவாக நிற்கும் என்பர். அணு வடிவு என்றால், இந்த தேகத்தின் உள் இருக்கும் பல துவாரங்களில், ஒரு துவாரத்தின் வழியாய் ஆன்மா ஓடிப் போய்விடும். அன்றியும், அந்த உடம்பு பிறிதொரு பொருளோடு பயில்வதற்கும் கட்டுண்டு இருப்பதற்கும், ஆன்மா வியாபித்து இருந்தால் அன்றி முடியாதாகும். அணுவாய் ஆன்மா ஒரு பக்கத்தில் இருந்தால் மேற்கூறிய செயல்கள் நடைபெற முடியாது. உடம்பு பெரும் பாரங்களைத் தாங்கிச் செல்வதற்கும், ஆன்மா அணுவாய் இருந்தால், உடம்பு உடன்படாது. அது மட்டுமா? பூத பரமாணுக்களோடு ஒன்றாம் அழிவு எய்தும் சடமாய், ஆன்மா வேறு வேறாய் நிற்கும்; இத்தகைய இயல்பினை உடையதாகிப் பகுக்கப்படும் தன்மையை உடையது எனப்பட்டு ஆன்மா அழிவினை எய்தும். ஆதலால் ஆன்மா அணு என்பது பொருந்தாது.

வேதங்களில் ஆன்மாவை அணு என்றதனோடு இந்த இடத்தில் கூறியது முரணாதோ என்றால், முரணாது. எப்படி என்றால், ஆன்மா அந்தக்கரணத்துடன் கூடி இருதயத்தில் நின்றுகொண்டு, கண் முதலிய பொறிகளின்வழியாய் விடயங்களைக் கிரகிக்கும். அந்நிலையில் கிரகிக்கின்ற ஆன்மா, அந்த அவத்தையில் மனம், இந்திரியம், விடயம், என்னும் கருவிகளில் அதி சூக்குமமாய் நிற்பதால், ''அணு'' எனக் கூறியது ஆகும். அஃதன்றி எப்பொழுதும் ஆன்மாவிற்கு வடிவம் அணு அளவு என்பதன்று. ஆதலால் முரண் இன்மை புலப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆன்மா உடம்பினுள் ஏகதேசமாய் நிற்கும் என்பவரை மறுத்து உரைக்கின்றது

உடலினில் ஏக தேசி
உயிர் எனின், உருவாய் மாயும்;
படர் உறும் அறிவு இன்று; எங்கும்
சுடர் ஒளிப் பண்பு அது என்னில்,
சுடர் தொடில் சுடுவது; எங்கும்
தொட்ட இடம் அறிவு உண்டாகும்;
அடர்புலன் இடத்தும் ஒக்க
அறிவு எழ வேண்டும் அன்றே, 206

தெளிவுரை:

மிருதி நூலார், புல்லின் நுனியில் இருக்கும் நீர்த்துளி போல், ஆன்மா உடம்பின் உள்ளே இதயத்தில் மிகச் சிறியதாய் நிற்க, அந்த ஆன்மாவின் அறிவு எந்த இடத்திலும் வியாபிக்கும் என்பர்; ஒரு வீட்டின் உள்ளே ஓர் இடத்தில் ஒரு விளக்கு இருக்க, அந்த விளக்கின் ஒளி வீடு முழுவதும் பரவி பிரகாசிப்பதைப் போன்று என்று உவமை வாயிலாகவும் கூறுவர்.

அவ்வாறு ஆன்மா ஓர் இடத்தில் இருப்பதாயின், உருவம் உடையத்து எனப்பட்டு, மேலே உருவம் என்றதற்கு ஓதிய குற்றம் அனைத்தும் உண்டாகும். அன்றியும், குணம் குணத்தை உடைய பொருள் அளவில் நிற்பதன்றி, அந்தப்பொருளின் வேறாய் வியாபித்து நிற்பது செல்லாது; ஆகையால் ஓர் இடத்தில் இருக்கும் ஆன்மா, எங்கும் வியாபித்து அறியும் என்று கூற முடியாது.

விளக்கின் ஒளி, அந்த விளக்கினுடைய சூக்கும வடிவே அன்றி, விளக்கின் குணம் அன்று; விளக்கின் குணம் சூடே ஆகும்; ஒளி அன்று. ஆகவே, விளக்கு உவமை இந்த இடத்தில் பொருந்தாது. பொருந்தும் எனக் கொண்டாலும், விளக்கின் சுடரைத் தொட்டால் சுடுவது போல், ஆன்மாவும் இருந்த இடத்தைத் தொட்டால் அறிவதே அன்றி, உடம்பில் எந்த இடத்தைத் தொட்டாலும் அறிதல் கூடாது; அவ்வாறன்றித் தொட்ட இடம் எல்லாம் உணரக் காண்கிறோம். அஃதன்றியும் அந்த உவமையைக் கொள்ளும் பொழுது, விளக்கு ஓரிடத்தில் இருந்து, ஏக காலத்தில் மற்றுள்ள இடங்களை விளக்குவது போல, ஆன்ம அறிவும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஐம்பொறி வாயிலாக விடயங்களையும் ஏக காலத்தில் அறியவேண்டும். அவ்வாறு இல்லாமையால் விளக்கு உவமை எந்த விதத்திலும் பொருந்தாது.

ஆன்மா உடம்பு அளவாக நிறைந்து நிற்கும் என்பவரை மறுத்து உரைக்கின்றது

உருவினில் நிறைந்து நின்று அங்கு
உணர்ந்திடும் உயிர்அது என்னில்,
மருவிடாது உறக்கம் வாயில்
அறிவு ஒக்க வழங்க வேண்டும்
பெருகிடும் சுருங்கும் போதும்
பேருடல் சிற்றுடல் கண்
வரும் உடல் குறைக்க ஒக்கக்
குறைந்து பின் மாயும் அன்றே. 207

தெளிவுரை:

சமணர், உடம்பு அளவாக உயிர் நிறைந்து நின்று, அந்த உடம்பால் விடயங்களை அறியும் என்பர். அவ்வாறாயின் பருவுடல் நீங்கிய கனவு நிலையும், பருஉடல் நுண்ணுடல் இரண்டும் நீங்கிய உறக்க நிலையும், பொருந்தாது இருக்க வேண்டும்; அன்றியும் எல்லா உடம்போடும் கூடி நிற்கின்ற நனவு நிலையிலும் ஐம்பொறியிலும் ஏக காலத்தில் அறிவு நிகழ்தல்வேண்டும். அதுவும் அன்றி, பெரிய தேகத்திற்குப் பெரிய அறிவும், சிறிய தேகத்திற்கு சிறிய அறிவும் ஆதல் வேண்டும்; உடம்பில் ஓர் அங்கம் குறைய உயிரும் ஒரு பாகம் குறைந்து, உடம்பு அழியும் பொழுது உயிரும் அழிய வேண்டும். ஆதலால் சமணர் மதமும் பொருந்தாது.

முதல்வன் போல் ஆன்மாவும் வியாபகப் பொருள் ஆகும் என்பவரை மறுத்து உரைக்கின்றது.

எங்கும்தான் வியாபியாய் நின்று
உணரும்இவ் ஆன்மா என்னில்
தங்கிடும் அவத்தை, போக்கு
வரவுகள் சாற்றல் வேண்டும்;

15

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பங்கம்ஆர் புலன் ஒன்று ஒன்றாப்
பார்த்திடல் பகரல் வேண்டும்;
இங்கு எலாம் ஒழிந்தால் நிற்பது
எங்ஙனம் இயம்பல் வேண்டும். 208

தெளிவுரை:

ஐக்கிய வாதிகள், முதல்வன் போல் எந்த இடத்திலும் வியாபியாய் நின்று அறிவது உயிர் என்பர். அவ்வாறாயின், நனவு, கனவு முதலிய ஒவ்வொரு அவத்தைகளில் தங்குவதும், பிறப்பு இறப்பு ஆகிய வரவு போக்குகளைப் பொருந்துவதும் ஐம்பொறி வழியாய் ஐந்து விடயங்களையும் ஒவ்வொன்றாய் அறிவது இன்றி, ஏக காலத்தில் எல்லா விடயங்களையும் அறிய முடியாமல் இருப்பதுவும், உயிர்க்கு நிகழ்தல் கூடாது. அனுபவத்தில் இவ்வாறு காணப்படுவதால், முதல்வன் போல உயிர் வியாபகம் என்பதுபொருந்தாது.

மேலும் எல்லாமாய் வியாபித்து நிற்கும் இறைவன், அவ்வாறு நிற்பதை ஒழித்து, உடம்பினுள் ஏகதேசமாய் எப்படி நிற்க முடியும்? உருவப் பொருள் அனைத்தினும் கூடுவதே வியாபகம் என்றும், அவை அனைத்தினையும் அறிவதே முற்றுணர்வு என்றும் கொள்வதே ''எங்கும் நிறைந்த பொருள்'' என்பதன் பொருள் என்று கூறினால், சங்கார காலத்தில் எல்லாப் பொருளும் அழியும் பொழுது, உயிரும் அழிந்து போக வேண்டும். அவ்வாறு அழியும் ஆயின், புனர்உற்பவம் இன்றாகும். அவ்வாறின்றி சங்காரத்தின் பின் புனர்உற்பவம் உண்டு என்று கேட்கப் படுவதால், எல்லாம் ஒழிந்த சங்காரத்திலும் உயிர் இருக்க வேண்டும். சங்காரத்தில் உயிர் இருந்தும் ஏனைய பொருள் இல்லை ஆதலால், உருவப் பொருளைக் கூடுவது வியாபகம் என்பதும் பொருந்தாது.

மாயா காரியத்தால் ஆன்மாவின் அறிவு ஏகதேசப் படுவது ஆயிற்று என்பவரை மறுத்து உரைக்கின்றது

சுத்தமாம் ஆன்ம சிந்தைத்
துகள்உடல் மறைத்தது என்னில்,
வைத்துறாது உடல்கண் வாயில்
கரணங்கள் வழியால் ஞானம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒத்து உறும் மலம் அற்றாலும்
உறும் மலம் வீடும் இன்றாம்
பெத்தமும் அடையான் முத்த
னாய்ப் பிரகாசன் ஆமே. 209

தெளிவுரை:

மீண்டும் ஐக்கியவாதிகள், ''ஆன்மா முதல்வன் போல எங்கும் வியாபகமாய் நின்று அறியும் தன்மை உடையது; ஆயினும் ஆன்மாவின் அறிவை மாயாகாரியம் ஆகிய தனுகரணாதிகள் தடைசெய்வதால் சாக்கிரம் முதலிய அவத்தை உறுதலும், பிறப்பு இறப்புகளில் போக்குவரவு உறுதலும், ஐம்புலன்களை ஒவ்வொன்றாய் அறிதலும், இவை போல்வன பிறவும் பொருந்தி, ஆன்மா ஏகதேசப்படுவது ஆயிற்று'' என்று கூறுவர். அவ்வாறாயின், மாயா காரியம், ஆகிய கருவி கரணங்களால் ஆன்மாவுக்கு அறிவு விளங்குவதாய் இருக்கவும், அதனோடு முரணாக அவை ஆன்ம அறிவைத் தடை செய்யும் என்பது எப்படிப் பொருந்தும்?

அன்றியும், வியாபகமான ஆன்மா மாயா காரியத்தால் தடைப்பட்டது என்றால், மாயா காரியத்தை விடுபட்ட முத்திக் காலத்திலும், முன்பு சுத்தமாய் இருந்து பற்றியது போல, பின்பும் பற்றும் எனப்பட்டு, முத்தி என்பது இன்றாயும் முடியும். வீடு பெற்ற பின்பு மாயா காரியத்தைப் பற்றாது என்றால், முன்பும் மாயா காரியத்தைப் பற்றாது இருந்திருக்க வேண்டும். முன்பு சுத்தமாய் இருந்து பற்றியது என்றால், பின்பு சுத்தம் எய்தினாலும் பற்றும் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். எனவே, மாயா காரியத்தால் ஆன்மாவின் அறிவு தடைப் பட்டது என்று கூறுவது பொருந்தாது. (ஏகதேச அறிவு – சிற்றறிவு. சிலவற்றை மட்டும் அறியும் அறிவு, தடைப்பட்ட அறிவு)

சைவ சித்தாந்த நெறிப்படி ஆன்ம இலக்கணம் இது எனக் கூறுகின்றது

அசித்துஅரு வியாபகம் போல்
வியாபகம், அருவம் இன்றாய்,
வசித்திட வரும் வியாபி
எனும் வழக்கு உடையன் ஆகி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நசித்திடா ஞானச் செய்தி
அநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவம் உடையன் ஆகிப்
பசு என நிற்கும் ஆன்மா. 210

தெளிவுரை:

இதுவரை, ஆணவமலம் உண்டு என்பதை ஒப்புக் கொள்ளாது, ஆன்ம இலக்கணம் கூறிய, மதவாதிகளை மறுத்தபொழுது, ஆன்ம இலக்கணந்தான் யாது என்று வினவுபவர்க்குச் சைவ சித்தாந்த நெறிப்படி ஆன்ம இலக்கணம் இஃதே என்பது கூறப்படுகிறது.

ஆன்மா, இறைவனைப்போல பூரண வியாபகம் உடையதன்று; அதிசூக்கும சித்தும் அன்று. சார்ந்த பொருளினிடத்து அப்பொருள் அளவாக வியாபித்து இருக்கும் ஏகதேச வியாபகம் இருக்கிறது. இச்சை ஞானக் கிரியை என்னும் குணங்களை உடையதாகும். ஆயினும் அந்த இச்சா ஞானக் கிரியைகள், அநாதியே பற்றி நிற்கும் ஆணவமலத்தினால், தொழிற்படாமல் மறைப்புண்டு கிடக்கும் ஆதலால் ஆன்மா தூல சித்தாய் நிற்கும். இவ்வாறு கட்டுப்பட்டு நிற்கும் நிலையில் ஆன்மா ''பசு'' எனப்படும்.

''தூல சித்து'' என்பது, பிறிது ஒன்றன் உபகாரத்தினால் அறிவதைக் குறிக்கும்.

''சூக்கும சித்து'' என்பது, தானே அறிவது ஆகும். தூல சித்துக்குக் கண்ணொளியையும், சூக்கும சித்துக்குச் சூரியனொளியையும், உவமைகளாகக் கொள்ளலாம்.

''பசுத்ததுவம்'' என்பது, பாசத்தால் பந்திக்கப்பட்ட பசுவின் தன்மை ஆகும். (பச்+உ= பசு. பச்—பந்தித்தல்; உ—செயப்படுபொருள் விகுதி)

''வசித்திட வரும் வியாபி'' என்பது, ஆன்மா எதனை எதனைச் சார்ந்ததோ, அதன் அதன் தன்மையே தன் தன்மையாய், அது அதுவாய் வசிப்புண்டு நின்று அறியும் இயல்பு உடையது என்பதைக் குறிக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காரண சரீரம், கஞ்சுக சரீரம், குண சரீரம் என்னும் மூன்றனையும் ஆன்மா பொருந்தும் முறைமை கூறுகின்றது

மாயையின் வயிற்றுள் மன்னி,
வரும் செயல் ஞானம் இச்சை
ஏயும் அக் கலாதி மூன்றால்
ஏகதேசத்தின் ஏய்ந்து இங்கு
ஆயும் முக்குணங்கள் அந்தக்
கரணங்கள் ஆதி எல்லாம்
காயம் பெத்தங்கள் ஆகிக்
கலந்து உடன் நிற்கும் ஆன்மா. 211

தெளிவுரை:

அநாதியே ஆணவமலத்தால் மறைப்புண்டு 'பசு' என நின்ற ஆன்மாவுக்கு, அந்நிலை கேவலம் எனப்படும். அதன்பின், ஆன்மா அறியாமையினால் துன்பம் அடைந்து வருந்துவதற்கு இரங்கி, அநந்த தேவர் அருளால் தரப்பட்ட அசுத்த மாயையில் கலக்குண்ட பாகம் ஆகிய காரண சரீரத்தைப் பொருந்தும். எல்லாச் சரீரங்களும் தோற்றுவதற்குக் காரணம் ஆகிய மாயையோடு பொருந்தினதால், காரண சரீரம் எனப்பட்டது, பொருந்திய பொழுது மறைக்கப்பட்ட அறிவு இச்சை செயல்கள் பொது வகையால் விளங்கப் பெறும். அஃதாவது ஆன்மா வின் உணர்வும் விருப்பமும் செய்யும் திறமும் தோன்றி, நல்லது தீயது என்ற அறிவின் பகுப்பும் (பகுத்தறிவு), வேண்டும் வேண்டாம் என்ற விருப்பின் பகுப்பும், செய்யும் முறை இவ்வாறு என்ற செயலின் பகுப்பும் விளங்காத கேவல நிலை, அப்போது பொதுவாக நீங்கப் பெறும். இது மூர்ச்சையாய் கிடந்த ஒருவன் தெளிவு பெற்ற முதல் நிலை போல ஆகும்.

அதன்பின் அந்த அசுத்த மாயையிலிருந்து தோன்றும் கலை முதலிய சட்டை ஆகிய சரீரத்தைப் பொருந்தும். பொருந்தவே, முன்பு பொதுவகையால் விளங்கிய அறிவு இச்சை செயல்கள், சிறப்பு வகையால் விளங்கப் பெறும். அஃதாவது முன் பொதுவகை என்றதற்கு எதிர்மறை.

அதன்பின் சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்கள் ஆகிய குண சரீரத்தைப் பொருந்தி, அக்குணங்களுள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அடங்கி நின்று பின்பு வெளிப்படுவன ஆகிய மனம் முதலிய சூக்கும சரீரம், எலும்பு, நரம்பு முதலிய தூல சரீரம் ஆகிய இரண்டு சரீரங்கள் இடமாக வரும் விடயங்களைப் பற்றித் தொழில் செய்யப்பெறும். முக் குணங்களுள் யாதானும் ஒரு குணத்துடன் கூடாமல் தொழில் செய்ய முடியாது; ஆதலால்அந்த குணத்துடன் கூடுதலே குண சரீரத்தைப் பொருந்துதல் ஆகும்.

பொதுவகையால் விளங்கப் பெறும் நிலையில் பெறும் சரீரம் காரண சரீரம் ஆகும்; சிறப்பு வகையால் விளங்கப் பெறும் சரீரம் கஞ்சுக சரீரம் ஆகும். பின்புபெறுவது குண சரீரம் ஆகும்.

சூக்கும சரீரம், தூல சரீரங்களை ஆன்மா பொருந்தி, ஐந்தவத்தைப்படும் முறைமை கூறுகின்றது

சூக்கும தேகி ஆகித்
தூல ரூபத்தில் மன்னிச்
சாக்கிரம் முதலாய் உள்ள
அவத்தையுள் தங்கி எங்கும்
போக்கொடு வரவும் எல்லாம்
புரிந்து புண்ணியங்கள் பாவம்
ஆக்கியும் பலன்கள் எல்லாம்
அருந்தியும் நிற்கும் ஆன்மா. 212

தெளிவுரை:

மேற்கூறிய மூன்று சரீரங்களும் பரசரீரம் எனப்படும். அவ்வாறு பரசரீரம் மூன்றையும் முறையால் எய்திய ஆன்மா, அதன் பிறகு சூக்கும தேகத்தைப் பொருந்தி எந்த இடத்தும் போக்கு வரவுகள் செய்து, சூக்குமம் ஆகிய இருவினைகளைச் செய்து, அவ்வினைகளின் பயன் ஆகிய இன்ப துன்பங்களை அனுபவிக்கும்.

அதன்பின், தூலசரீரத்தைப் பொருந்தி எந்த இடத்திலும் போக்கு வரவுகள் செய்து தூலரூபமாகிய இருவினைகளைச் செய்து, அந்த வினைப் பயன்களை அனுபவிக்கும். இவ்வாறு தூலம், சூக்குமம், குணம், கஞ்சுகம்,காரணம் என்னும் ஐந்து சரீரங்களைப் பொருந்தி நிற்கும் முறைமையில், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆகிய ஐந்து அவத்தைப்பட்டு நிற்கும். (போக்குவரவு - பிறப்பு இறப்பு).

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சூக்கும வினையும் பலனும் மனத்தின் தொழில் ஆகும்; அஃதாவது, கனவில் செய்யும் வினையும் அநுபவமும் ஆகும். சாக்கிரம்–எல்லாக் கருவிகளோடும் கூடி நிற்கும் அவத்தை ஆகும். சொப்பனம் – சில கருவிகளைத் தொழிற்படாமல், அஃதாவது தூலதேகம் தொழிற் படாமல் கனவோடு நிற்கும் அவத்தை ஆகும். சுழுத்தி – கனவும் இன்றி உறங்கி விழித்த பின் ''ஒன்றும் தெரியவில்லை; சுகமாய்த் தூங்கி னேன்'' என்று சொல்லப்படும் அவத்தை ஆகும். துரியம் – பிராணவாயு இயக்கத்துடன் மூர்ச்சையாய்க் கிடந்து, தெளிந்தபின் ''ஒன்றும் தெரியவில்லை'' என்று சொல்லப்படும் அவத்தை ஆகும். துரியாதீதம்–பிராணவாயு இயக்கம் இன்றி மூர்ச்சையாய்க் கிடக்கும் அவத்தை ஆகும்.

ஐந்து சரீரங்களும் ஐந்து கோசங்கள் எனப் பெயர் பெறும் எனவும்; அவற்றில் ஆன்மா கட்டுபட்டுப் போக்கு வரவு செய்து நிற்கும் எனவும் கூறுகின்றது

மருவு ஆனந்தம், விஞ்ஞான,
மனோ, பிராணன், அன்னமயம்
உருவாம் தன்மை உண்டாய் முன்
ஒன்றுக்கு ஒன்று சூக்குமமாய்
வருமாம் அன்னமயம் பற்றி
மாயை முதற்காரணம் ஆகும்;
அருவாய் ஆன்மா ஐங்கோசத்து
ஆர்ப்பு உண்டு அவற்றின் அகம்புறமாம். 213

தெளிவுரை:

கேவலத்தில் ஒரு சரீரமும் இன்றி ஆணவ மலத்தோடு கூடி அந்த ஆணவமல மாத்திரையாய் நின்ற ஆன்மாவுக்கு, முதற்காரணம் ஆகிய மாயையிலிருந்து தோன்றிய மேற்கூறிய காரண சரீரம் முதலாகிய ஐந்து சரீரங்களும் வடிவம் ஆகும். வடிவாய் நிற்கும் பொழுது காரண சரீரம், ஆனந்தமய கோசம் எனப் பெயர் பெறும்; கஞ்சுக சரீரம் விஞ்ஞானமய கோசம் எனப் பெயர் பெறும்; குண சரீரம், மனோமய கோசம் எனப் பெயர் பெறும்; சூக்கும சரீரம், பிராணமய கோசம் எனப் பெயர் பெறும்; தூல சரீரம், அன்னமய கோசம் எனப் பெயர் பெறும். இந்த ஐந்து கோசங்களும் அன்னமயம் முதல், ஒன்றுக்கு ஒன்று சூக்குமமாய் நிற்கும். ஆன்மா, இந்த ஐந்து கோசங்களில் கட்டுப்பட்டு நிற்கும் பொழுது, அது அதுவாய் நின்று போக்கு வரவு செய்யும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காரண சரீரம் தோன்றுவதற்கு ஏதுவாகிய மாயை, அசுத்த மாயையைக் குறிக்கும். கோசம் – கவசம் – கூடு.

கேவலத்தில் அறிவிச்சை செயல்கள் விளங்கப் பெறாது நின்ற ஆன்மா, மாயையில் கலக்குண்ட பாகத்தைப் பொருந்திய பொழுது, அந்த அறிவு இச்சை செயல்கள் பொது வகையால் விளங்கப் பெற்ற அளவிலே, ஓர் ஆனந்தம் உண்டாகப் பெற்று ஆன்மா அதன் மயமாய் நிற்பதால், ஆனந்தமய கோசம் எனப்பட்டது.

அதன்பிறகு, கலை முதலிய ஐந்து தத்தவங்கள் ஆகிய கஞ்சுக சரீரத்தைப் பொருந்தி, அறிவு இச்சை செயல்கள் சிறப்பு வகையால் விளங்கப் பெற்று அதன் மயமாய் நிற்பதால் விஞ்ஞானமய கோசம் எனப்பட்டது.

அதன்பின், குணசரீரத்தைப் பொருந்தி, அந்தக் கரணத்தின் தன்மை விளங்கப் பெற்று, தன் மயமாய் நிற்பதால் மனோமய கோசம் எனப்பட்டது.

அதன்பிறகு, சூக்கும சரீரத்தைப் பொருந்தி, பிராண வாயுவின் சம்பந்தம் பெற்று, அதன் மயமாய் நிற்பதால், பிராணமய கோசம் எனப்பட்டது.

அதன்பின் தூல சரீரத்தைப் பொருந்தி, அந்த சரீரத்தை வளர்ப்பதற்காக அன்னமயமாய் நிற்பதால் அன்னமய கோசம் எனப்பட்டது. அன்னம் – சோறு – சாதம்.

பஞ்ச கோசங்களிலும் ஆன்மா நிற்கும் முறைமை கூறுகின்றது

தோற் பாவைக் கூத்தும் தொல்லை
மரப்பாவை இயக்கமும் சீர்த்
தேர்ப் பாரில் செலவும் வேறாய்ச்
செலுத்துவோர் செய்தி தானும்
பார்ப்பாய வேடம் கட்டி
ஆடுவோர் பரிசு போலும்
ஆர்ப்பாய காயம் தன்னை
ஆன்மா நின்று ஆட்டும் ஆறே. 214

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மேற்கூறியவாறு கட்டுப்படுத்தப்பட்ட ஐந்து கோசங்களிலும் ஆன்மா, வேற்றுமை இன்றி நின்று, அந்தக் கோசங்களைச் செலுத்தும் விதம் எவ்வாறு எனின், தேரைச் செலுத்துபவர் தன்மை போல அன்ன மய கோசத்தை ஆன்மா நின்று செலுத்தும். மரப்பாவையை இயக்குபவர் தன்மைபோல, பிராணமய கோசத்தையும், தோல்பாவையை ஆட்டுபவர் தன்மை போல மனோமய கோசத்தையும், பரகாயப் பிரவேசம் செய்பவர் தன்மை போல விஞ்ஞானமய கோசத்தையும், வேதியர் வேடம் முதலிய பல வேடம் கட்டி ஆடுபவர் தன்மை போல ஆனந்த மய கோசத்தையும் ஆன்மா நின்று செலுத்தும். இந்நிலையை இன்னும் சற்றுத் தெளி வாகக் கீழ்க்காணுமாறு காணலாம்.

1. தேரைச் செலுத்தும் பொழுது, குதிரை, யந்திரம், அறிவு உற்சாகங்களால் பாகன் செலுத்தி, அந்தத் தேரின் வேறின்றி நிற்பது போல, அன்னமய கோசமயம் ஆகிய தூல தேகத்தை, பிராணன், மனம், கலாதி, மாயைகளால் ஆன்மா செலுத்தி, அந்த தூல தேகத்தில் வேறின்றி நிற்கும்.

2. மரப்பாவையை இயக்கும்பொழுது, கயிற்றால் இயக்கி இயக்குபவன், அந்தக் கயிற்றின் வேறின்றி நிற்பது போல, பிராணமய கோசம் ஆகிய சூக்கும தேகத்தைச் செலுத்தும் பொழுது, பிராணனால் இயக்கி ஆன்மா, அந்த பிராண வாயுவின் வேறின்றி நிற்கும்.

3. தோல் பாவையை ஆட்டும் பொழுது, ஆட்டுபவன் தன் உறுப்பினுள் ஒன்று ஆகிய கரத்தினால் ஆட்டி, அதனின் வேறின்றி நிற்பதுபோல், மனோமயகோசம் ஆகிய குண சரீரத்தைச் செலுத்தும் பொழுது, மனத்தினால் செலுத்தி ஆன்மா, அந்த மனத்தின் வேறின்றி நிற்கும்.

4. பரகாயப் பிரவேசம் செய்யும் பொழுது, உயிர் நீங்கிய பரகாயத்தில் விருப்பால், பிறிதோர் உயிர் பிரவேசித்து அந்த உயிராய் நிற்பது போல், விஞ்ஞானமய கோசம் ஆகிய கஞ்சுக சரீரத்தைச் செலுத்தும் பொழுது, அறிவு முதலியன இல்லாத கலாதிகளில் ஆனந்தத்தால் ஆன்மா பிரவேசித்து அந்தக் கலாதிகளில் வேறின்றி நிற்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

5. வேடம் கட்டி ஆடுபவர் கட்டிய வேடத்திற்கு உரியவனாய் நின்று நடித்து, அதனின் வேறு இன்றி நிற்பது போல், ஆனந்தமயகோசம் ஆகிய காரண சரீரத்தைச் செலுத்தும்பொழுது ஆன்மா, அந்த ஆனந்த மயமாய் அதனின் வேறின்றி நிற்கும்.

தூலதேகம் முதல் காரண தேகம் ஈறாக தத்துவங்களின் குறை விற்கு ஏற்ப, ஆன்மா ஒன்றுக்கு ஒன்று சூக்குமமாய் நிற்கும் என்பது இவ்வுவமைகளிலிருந்து புலனாகும்.

ஆன்மா, பஞ்சகோசங்களினும் வேறு என்பதை உவமை முகத்தால் விளங்குகின்றது

என் உடல் பொறி பிராணன்
கரணம் என் உணர்வு என்றக்கால்,
தன்னின் வேறாகும் நீ என்
தன் மனை என்ற எல்லாம்
நின்னின் வேறு ஆகும் என்னில்
நீங்கிடா இவை இங்கு என்னில்
உன்னின ஆகும் நீ யாம்
உகிர் மயிர் உகவும் காண்டி. 215

தெளிவுரை:

மேற்கூறியவாறு பஞ்சகோசங்களிலும் ஆன்மா அபேதமாய் நின்று செலுத்தினும், என் மனைவி, என் கணவர் என்று அபேதமாய் வழங்கி வந்தன எல்லாம், தன்னின்வேறு ஆவது போல, என் உடல் என் பொறி, என் பிராணன், என் கரணம், என் அறிவு என்று தனித்தனியாக 'எனது' என்று வழங்கப்படும். ஆதலால் அவை அனைத்தும் உன்னின் வேறு ஆகும்; நீ அவைகளின் வேறு ஆகும்; நீ அவைகளின் வேறு ஆவாய். இவ்வாறு கூறியதும், மனை முதலிய புறப் பொருள்கள் என்னின் வேறு ஆதல் கூடும்; உடல், பொறி முதலியன என்னைவிட்டு நீங்கமாட்டாதன; எனவே இவை எப்படி என்னில் வேறு ஆகும் என்று நீ கேட்பாய் ஆயின், அதற்கு விளக்கம் வருமாறு:

உன்னுடையன ஆகி அபேதமாய் 'எனது' என்று வழங்கப்படும் நகம், மயிர் முதலியன உன்னைவிட்டு நீங்குவதை நீ காண்பதுபோல, உடல் முதலியனவும் அதற்கு உரிய காலம் வரும்பொழுது உன்னை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விட்டு நீங்கிவிடும். ஆதலால், நீ அவற்றின்வேறு என்பது துணிவாக அறியப்படும். படவே ஆன்மா பஞ்ச கோசங்களின் வேறு என்பது இனிதே புலப்படும்.

அபேதம் பற்றி பஞ்சகோசங்களை 'எனது' என்று வழங்கப் படுவதால், ஆன்மா அவற்றின்வேறு என்பது கூடாது என்பவரை மறுத்து உரைக்கின்றது

பொன் அணி ஆடை மாலை
போது மேல் ஆனபோது இங்கு
என் அணி யான் என்று உன்னி
இருந்தனை பிரிந்த போது
நின் அணி நீயும் அல்ல
ஆயினை காயம் நின்னின்
அன்னியம் ஆகும் உன்னை
அறிந்து நீ பிரிந்து பாரே. **216**

தெளிவுரை:

இராகுவினது தலை என்றபொழுது, தலையின் வேறாய் இராகு காணப்படாது. அதுபோல கருவி கரணங்களை 'எனது' என்று கூறுவ தால், அந்தக் கருவி கரணங்களின்வேறாய், ஆன்மா உண்டு என்பது பொருந்தாது என்கிறாய். இவ்வாறு கூறுவது எந்த வகையிலும் பொருத் தம் உடையது ஆகாது; எப்படி என்றால் இராகுவும் அதன் தலையும் வேறன்று என்று அபேதம் பற்றி நிகழும் இந்த உவமை, பெரும்பாலும் வழக்கில் இல்லை. ஏகதேசமாகவே பேசப்படுகிறது. எனவே இந்த உவமை பொருந்தாது.

பொன்னால் ஆகிய அணிகலன், நூலால் ஆகிய ஆடை, மலரால் ஆகிய மாலை முதலிய புறப்பொருள்களை அணிந்து இருக்கும் பொழுது, அபேதம் (வேறு இன்மை) பற்றி அப்பொருள்கள் எல்லாம் நீயாகவே இருந்தும், என்னுடையது என்று வழங்கப்படுவதே மிகுதியும் காணப்படும். அந்தப் புறப் பொருள்கள் நீங்கிய பொழுது, அந்தப் பொருள்கள் உனக்கு அன்னியமாய், நீ இந்தப்பொருள் அல்லனாய் ஆயினாற் போல, உடல் பொறி முதலிய அன்னைத்தும் அபேதம் பற்றித் தானாக இருப்பினும், அவை வேறு ஆகும். ஆதலால், உன்னுடைய உண்மையான ஆன்ம சொரூபத்தை அறிந்து, உடல், பொறி முதலியவற்றை உன்னின் வேறாக அறிவாயாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசங்களே ஆன்மா என்பவரை மறுத்து உரைக்கிறது

உடல் யான் அல்லேன், இந்த
உணர்வு யான் அல்ல, ஆன
கடன் யாது என்னில், வேறு
கண்டு உணர்வு என்னது, என்கை
இடர் இலா என்றன் ஆன்மா
என்ற போது, அன்மா வேறோ
திடனதா உயிரை வேறு
கண்டிடார் செப்பலே காண். 217

தெளிவுரை:

அன்னமய கோசம், பிராணமய கோசம் ஆகிய உடல், பொறி முதலியன யான் அல்லன் என்பது ஒக்கும் (பொருந்தும்). குற்றம் இல்லாத ஆன்மாவை, ''என்னுடைய ஆன்மா'' என்றபொழுது, ஆன்மாவின் வேறாய் ''என்'' என்பதற்குப்பொருள் இல்லை. அதுபோல, அறிவு தொழிற்படுவதற்கு துணையாய் இருக்கும் விஞ்ஞானமய கோசம் ஆனந்தமய கோசங்களின் வேறாய் ஆன்மா உண்டு என்பது பொருந்தாது என்று கூறினாய் ஆயின், ஆன்மாவைத் தன்னின் வேறாகக் காணும் அறிவில்லாதவன், 'இராகுவின் தலை' என்று கூறினாற்போல, 'என் ஆன்மா' என்று கூறுவான். அவ்வாறு கூறுவது பெரிதும் வழக்கில் இல்லை; சிறுபான்மை வழக்கிலேயே உள்ளது. அஃதும் ''என்'' என்பதும், ''ஆன்மா'' என்பதும், வேறு பொருளாய் இல்லாத அபேதம் பற்றிய வழக்கே ஆகும்.

விஞ்ஞானமய கோசம் ஆனந்தமய கோசங்கள் அவ்வாறு அன்று. வேறு எவ்வாறு என்றால், என் அறிவு, என் ஆனந்தம் என்று ஏனைக் கோசங்கள் போல, எல்லோராலும் வேறாகக் காணப்படும் பெருவழக்கு ஆகும்; ஆகவே, அஃது அபேதம் பற்றிய வழக்கு என்று கூற அமையாது. அஃது அவ்வாறு அமையும் என்றால், ''என்'' என்பதன் வேறாக ஆன்மா இல்லாதது போல, அறிவும் ஆனந்தமும் நீங்காது இருக்க வேண்டும். கோசங்களால் ஏற்படும் அறிவும் ஆனந்தமும் நீங்கக் காண்கிறோம். ஆதலால் ஏனைய உடல் முதலிய போல, விஞ்ஞானமய ஆனந்தமய கோசங்களும் உன்னின் வேறானவையே ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''என்னுடைய ஆன்மா'' என்பதற்குப் பொருள் கூறி மேற்கூறியதனை வலியுறுத்துகின்றது

புந்தியை மனம்அது என்றும்,
மனம்அது புந்தியென்றும்,
சிந்தையைச் சீவன் என்றும்
சீவனைச் சிந்தை என்றும்,
முந்தனை ஆன்மா என்றும்,
ஆன்மாவை முந்தன் என்றும்,
வந்திடும் என்தன் ஆன்மா
என்றது மற்று ஒன்றைக் காண். 218

தெளிவுரை:

''என்னுடைய ஆன்மா'' என்று கூறப்படும் வழக்கில், ஆன்மா என்பது ஆகுபெயரால் பிராணவாயுவை உணர்த்தும். அஃது எதுபோல எனின், புத்தியை மனம் என்றும், மனத்தைப் புத்தி என்றும், சிந்தையை உயிர் என்றும், உயிரைச் சிந்தை என்றும், சிவபெருமானை ஆன்மா என்றும், ஆன்மாவைச் சிவபெருமான் என்றும், ஆகுபெயரால் கூறும் வழக்குப்போல ஆகும். ''ஆகுபெயர்'' என்பது ஒரு பொருளுக்கு உரிய பெயரை, அதனோடு தொடர்பு உடைய பிறிது பொருளுக்கு இட்டு வழங்குவது ஆகும். ஆகவே ''என்னுடைய ஆன்மா' எனும் அந்தத் தொடர் கொண்டும் விஞ்ஞானமய கோசம் ஆனந்தமய கோசங்களின் வேறாய், ஆன்மா இல்லை என்று நீ கருதுவது நிறைவுறுமாறு இல்லை.

ஐந்து கோசங்களை ஆன்மா என வேதத்துள் கூறியதும் ஆகுபெயராலேயே ஆகும் எனக் கூறுகின்றது

அறிவு உடல் சிந்தை ஆன்மா
அணைதலால் ஆன்மா என்பர்;
எறிசுடர் விளக்கு இருக்கும்
இடத்தையும் விளக்கு என்றால் போல்,
பொறிபுலன் கரணம் எல்லாம்
புலப்படும் அபேதம் ஆகிப்
பிறிதராது அறிவது ஆன்மா
அறிபொருள் பின்னம் ஆமே. 219

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

உபநிடதங்களில் ஆன்மாவின் வேறாகிய விஞ்ஞானம் முதலிய பஞ்சகோசங்களை ஆன்மா பொருந்தி நிற்கும் சம்பந்தம் பற்றி, அந்த கோசங்களை ஆன்மா எனக் கூறும் என்பர். அவ்வாறு கூறுவது, ஒளியை வீசும் விளக்கு இருக்கின்ற தகளியை விளக்கு என்றாற் போல அன்றிப் பிறிது இல்லை. (தகளி – அகல்) ஆதலால் உடல், பொறி முதலிய எல்லாவற்றிலும் அபேதமாய்ப் பிரிப்பின்றி நின்று அறிவதாகிய ஆன்மா, அறியப்படும் அந்தப் பொருள்களுக்கு வேறு ஆகும்.

ஐந்து கோசங்களிலும் ஆன்மா வேறு என்பதை அனுபவத்தால் வலியுறுத்துகின்றது

கண்டு உணர் புருடன் வேறு
கனவு கண்டு ஒடுங்கிக் காயம்
உண்டியும் வினையும் இன்றிக்
கிடந்து உயிர்த்திட உணர்ந்து
கண்டிடும் கனவும் சொல்லி
ஒடுக்கமும் கருதி வேறாய்
உண்டியும் வினையும் உற்று இங்கு
உணர்த்திட உணரா நிற்கும். 220

தெளிவுரை:

ஐந்து மய கோசங்களும் ஆன்மா என்றால், அன்னமய கோசத்தை விட்டுப் பிராணமய கோசத்திலும், பிராணமய கோசத்தை விட்டு மனோமய கோசத்திலும், மனோமய கோசத்தை விட்டு விஞ்ஞான மய கோசத்திலும், விஞ்ஞானமய கோசத்தை விட்டு ஆனந்தமய கோசத்திலும் நிற்கும் பொழுது, முறையே சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆகிய ஐந்துஅவத்தைப்பட்டு விழித்த பிறகு, சாக்கிர அவத்தையில் அந்த ஐந்து கோசங்களையும் கூடிநின்று அந்த கோசங்கள் ஆகிய கருவிகளால் காணப்பட்ட கனவைச் சொல்லும்; சுழுத்தியில் ஒன்றும் தெரியாமல் சுகமாய் இருந்ததைக் கருதும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிராணவாயுவின் இயக்கத்துடன் மூர்ச்சையாய்க் கிடந்த துரியத்தையும், பிராணவாயுவின் இயக்கமும் இன்றி மூர்ச்சையாய்க் கிடந்த துரியாதீதத்தையும், இவற்றிற்கு மறுதலை ஆகிய சுகானுபவத்தில் வைத்து ஆன்மா அறியும். இவ்வாறு சாக்கிரத்தில் வந்தபோது எல்லாவுற்றையும் அறிவதன்றி அந்தந்த அவத்தையில் நின்று ஆன்மா அறிவதில்லை. அந்த கோசங்கள் ஆன்மாவாக இருக்குமாயின், ஒவ்வொரு அவத்தையினையும் அந்தந்த அவத்தையில் இருந்தவாறே அறிதல் வேண்டும். அவ்வாறு அறிவது அனுபவத்தில் இல்லை ஆகலின், ஆன்மா அவற்றின்வேறு என்பதைத் தெளிவாயாக.

ஆன்மா, முதல்வனின் வேறாய், அநாதியே ஆணவமலத்தின் மறைந்து நிற்கும் எனக் கூறுகின்றது

புருடனே அறிவன் ஆகில்
பொறி புலன் ஆதி போதம்
தருவது என் அறிவு மாயா
தனு கரணாதி பற்றி
வருவது இங்கு அநாதி ஆக
மலத்தினின் மறைந்து நிற்பன்;
அருவனாய் இவற்றோடு ஆளும்
அமைச்சரும் அரசும் போல்வன். 221

தெளிவுரை:

ஆன்மா சித்துப் பொருள் ஆதலால், முதல்வன் போல கருவிகளின் துணை இன்றி அறியாதோ என்றால், அறியாது. எதனால் என்றால், முதல்வன் போல ஆன்மா சுத்த சித்து அன்று. அஃதாவது முதல்வன் அநாதியே ஆணவமலத்தைப் பற்றாத சித்து. அவ்வாறு ஆன்மா சுத்த சித்தாக இருக்குமாயின் தனுகரணாதிகளுடன் அமைச்சரும் அரசும் போல, உடன்நின்று அந்த தனுகரணாதிகளை அறிதல் வேண்டாம். அவ்வாறு அறிதல் ஆன்மாவினிடத்துக் காணப்படுவதால், ஆன்மா அநாதியே ஆணவமலத்தால் மறைக்கப்பட்டு, அறிவு இச்சை செயல்கள் விளங்கப் பெறாது, பின்பு மாயா கருவிகளோடு கூடி, தத்துவ ரூபனாய் நின்று அறிவது என்பது பெறப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நான்காம் சூத்திரம்

மூன்றாம் அதிகரணம்

செயல்கள் நான்கும் அறிந்தவை அடக்கி ஆக்கிப், புணரும் உட்கருவி ஆக்கிப், புறக்கருவியினும் போக்கி, வெவ்வேறு அணைதரும் என்றது

ஆன்மா ஐந்து அவத்தையில் போக்கு வரவு புரிவதை, அரச உவமையில் வைத்து விளக்குகின்றது

படைகொடு பவனி போதும்
பார்மன்னன் புகும்போது இல்லில்
கடைதொறும் விட்டு விட்டுக்
காவலும் இட்டுப் பின்னர்
அடைதரும் தனியே அந்தப்
புரத்தினில் அதுபோல் ஆன்மா
உடலினில் அஞ்சு அவத்தை
உறும் உயிர் காவல் ஆக. 222

தெளிவுரை:

உடல், பொறி முதலியவற்றோடு ஆன்மா கூடி நிற்பது எதுபோல் என்றால், அமைச்சர் முதலாயினாரும் அரசனும் போல ஆகும். அமைச்சர் படைத்தலைவர் முதலிய பரிசனங்களோடு உலாவுவதற்குச் சென்ற அரசன் மீண்டும் அரண்மனையுள் புகும்பொழுது, அமைச்சர் முதலியோரை எந்தெந்த வாசலில் எவரெவரை நிறுத்த வேண்டுமோ அந்தந்த வாசலில் அவரவரை நிறுத்திவிட்டு, பிறர் நுழையாதபடி காவலும் வைத்து அந்தப்புரத்திற்குத் தனியே செல்வன்.

அதுபோல ஆன்மாவும் மனத்தைத் தேர்ஆகவும் பிராண வாயுவைக் குதிரை ஆகவும், புத்தியை மந்திரி ஆகவும், அகங்காரத்தைச் சாரதி ஆகவும், ஞானேந்திரிய கன்மேந்திரியங்களைக் காலாட்கள் ஆகவும் கொண்டு, புறத்து விடயங்களில் உலாவச் சென்று, அகத்து மீண்டும் வரும் பொழுது, புருவ மத்தியம், கண்டம், இருதயம், நாபி என்னும் இடங்கள் தோறும், நீக்கவேண்டிய தத்துவங்களை நீக்கி,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உடலைப் பிறர் மோசம் செய்துவிடாமல் பிராண வாயுவைக் காவலாக வைத்துவிட்டு, மூலாதாரத்திற்கு மேலும் நாபிக்குக் கீழும் ஆகிய சுவாதிட்டானம் என்னும் அந்தப்புரத்திற்குத் தனியே சென்று, மாயையோடு கூடி ஆனந்தமய கோசனாய் நிற்கும். துரியாதீதத்தில் புருடதத்துவம் ஒன்று என்று கூறியதும் இக்கருத்துப் பற்றியே ஆகும். ஆன்மா இவ்வாறு ஐந்து அவத்தையினைப் பொருந்துமாறு அறிவாயாக.

மாயையோடு கூடி நிற்கும் நிலை தனிமை ஆவது எவ்வாறு என்றால், தொழிற்பாட்டிற்கு உரிய தத்துவங்கள் இல்லாமல், தத்துவம் இல்லாமையால் கேவலம் இன்றிச் சகலனாய் நிற்பதற்கு மட்டும் துணையாய் மாயை நின்றமையால், தனிமை எனப்பட்டது.

துரியாதீத அவத்தையில் பிராணவாயு இயக்கம் இல்லாமல் இருக்கவும், ''காவலாகப் பிராணவாயுவை வைத்துவிட்டு'' என்று கூறியது எவ்வாறு பொருந்தும் என்றால், அரசன் நித்திரையின்றி இருக்கும் பொழுது, காவலாய் உள்ளவன் வாசலைத் திறந்து வைத்து யாவர்க்கும் தெரியும்படியாக நிற்பன்; அரசன் நித்திரை செய்யும் பொழுது, அந்தக் காவலன் வாசலைப் பூட்டிக் கொண்டு உட்புறமாகப் பிறருக்குத் தெரியாமல் நிற்பன். அதுபோல துரியாதீதத்தில் பிராண வாயு அடங்கிக் காவலாய் இருக்கும். அப்படி இல்லாவிட்டால், பின்பு ஆன்மா உயிர்த்து எழ முடியாமல் போய்விடும். எனவே, ''பிராண வாயுவைக் காவலாக வைத்து'' என்றது, துரியாதீத அவத்தையிலும் பொருந்தும்.

ஐந்து அவத்தையுள் ஒவ்வோர் அவத்தைக்கு உரிய தத்தவங்களும் தானங்களும் இவை என உணர்த்துகின்றது

சாக்கிரம் முப்பத்து ஐந்து
நுகலினில், கனவு தன்னில்
ஆக்கிய இருபத்து ஐந்து
களத்தினில் சுழுமுனை மூன்று
நீக்கிய இதயம் தன்னில்,
துரியத்தில் இரண்டு நாபி,
நோக்கிய துரியா தீதம்
நுவலில் மூலத்தில் ஒன்றே. 223

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

அரசன் போல ஆன்மாவும் விட்டுவிட்டுச்சேரும் பொழுது, எந்தெந்த இடத்தில் எந்தெந்த தத்துவங்களை விட்டுச் சேரும் என்றால், புறத்து விடயங்களை அறியும் பொழுது புருவ மத்தி ஆகிய இலாடத்தில் சாக்கிராவத்தையைப் பொருந்தி, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந் திரியம் ஐந்து, சத்தாதி ஐந்து, வசனாதி ஐந்து, பிராணாதி வாயு பத்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று ஆக முப்பத்தைந்து தத்துவங்களுடன் கூடி நிற்கும்.

இதனை விட்டுக் கண்டதானத்தில் சொப்பனாவத்தையை அடையும்; அடையும் பொழுது வாயு பத்து, சத்தாதி ஐந்து, வசனாதி ஐந்து, அந்தக் கரணம் நான்கு, புருடன் ஒன்று ஆக இருபத்தைந்து தத்துவங்களுடன் கூடி நிற்கும். இதனை விட்டு இருதய தானத்தில் சுழுத்தி அவத்தையை அடையும். அடையும் பொழுது, பிராணன், சித்தம், புருடன் என்னும் மூன்று தத்துவங்களுடன் கூடி நிற்கும். இதனை விட்டு நாபி தானத்தில் துரிய அவத்தையை அடையும். அடையும்பொழுது, பிராணன் புருடன் என்னும் இரண்டுடன் கூடி நிற்கும். இதனை விட்டு மூலம் ஆகிய சுவாதிட்டானத்தில் துரியாதீத அவத்தையை அடையும். அடையும் பொழுது புருடன் ஒன்றினைக் கூடி நிற்கும்.

கலாதி தத்துவங்களும் சுத்த தத்துவங்களும் நீங்காமல், சாக்கிரம் முதல் துரியம் வரை, உடனாக வெளிப்பட்டு நின்று துரியாதீதத்தில் அடங்கி நிற்கும். ஆதலால் விட்டு நீங்கும் தத்துவங்களோடு வைத்து எணணாதவாறு அறியத்தக்கது. கலாதிகளும் சுத்த தத்துவமும்இல்லை ஆயின், புருட தத்துவம் தோன்றாது; ஆகவே அதீதத்தில் அவை அடங்கி நிற்பது காண்க.

ஐந்து அவத்தைகளும், சகலத்தில் கீழால் அவத்தை, மேலால் அவத்தை என இருதிறப்படும் எனக் கூறுகின்றது

இருவகை சாக்கி ராதி
அவத்தைகள் இயல்பு தானும்
ஒருவகை கீழே நூக்கி
உற்பவம் காட்டும் ஒன்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெருகமேல் நோக்கித் தீய
பிறப்பு அறுத்திடும் யோகில்
தருவதோர் சமாதி தானும்
தாழ்ந்து பின் சனனம் சாரும். 224

தெளிவுரை:

சாக்கிரம் முதலாகிய ஐந்து அவத்தைகளும், கீழால் அவத்தை மேலால் அவத்தை என இரு திறப்படும். அவற்றுள் கீழால் அவத்தை கீழ் நோக்கிச் சென்று ஒடுங்கும் முறையும், மேல்நோக்கித் தோன்றும் முறையும் என இரு திறப்படும். அவற்றுள் ஒடுங்கும் முறை மேற் கூறியவாறு புருவ நடு முதல், ஒவ்வொரு தானமாய் விட்டுச் செல்லுதல் ஆகும்.

அவ்வாறு செய்வது, வினை செய்ததனால் ஏற்பட்ட இளைப்பு நீங்குதல் பொருட்டு ஆகும். இளைப்பு நீங்கவே, மேல் வினை செய்வதற்கு உரிய வலிமை உண்டாகும். அதனால் அந்த ஒடுங்கும் முறை, கன்மம் சம்பாதிப்பதற்கு ஏதுவாய், பிறவிக்கு வித்து ஆகும். பிறிது ஒன்று ஆகிய தோன்றும் முறை, துரியாதீதத்தை அடைந்த உயிர் ஒடுங்கியவாறே மீண்டும் ஒவ்வொரு தானத்தில் ஒவ்வொரு அவத்தையாய்ப் பற்றி புருவ நடுவில் சாக்கிரத்திற்கு வருவது ஆகும்.

இவ்வாறு வருவதால் உயிர் கன்மத்தின் பயனை அனுபவித்தல் கூடும். கன்ம அனுபவம் பிறவி அறுப்பதற்குக் காரணம் ஆகும். இனி மேலால் அவத்தையும் இருதயம், கண்டம், நாக்கின் அடி, புருவ நடு, பிரமரந்திரம் என்னும் ஐந்து தானங்களில் முறையே சாக்கிரம் முதலாக ஐந்து அவத்தைப் பட்டு மேல் சென்று ஒடுங்குதலும், கீழ்நோக்கித் தோன்றுதலும் என இருவகைப்படும்.

மேல் நோக்கிச் செல்வது ஆகிய இந்த ஐந்து அவத்தையும், யோக சமாதிகளால் உண்டாகும். இந்த சமாதியால் பிரபஞ்ச நாட்டம் குறையும். அவ்வாறு குறைவது பிறவி அறுவதற்குக் காரணம் ஆகும். பிறிது ஒன்று ஆகிய கீழ் நோக்கித்தோன்றுவது என்பது, பிரமரந்திரத்திலிருந்து வெளியே வருவது ஆகும். அது பிரபஞ்ச நாட்டத்தைத் தோற்றுவித்து, பிறவிக்குக் காரணம் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கீழால் அவத்தையில் கீழ் நோக்கி ஒடுங்குதல், சகலத்தில் கேவலம் எனப்படும்; கீழால் அவத்தையில் மேல் நோக்கித் தோன்றுவது சகலத்தில் சகலம் எனப்படும். மேலால் அவத்தையில்மேல் நோக்கி ஒடுங்குதல், சகலத்தில் சுத்தம் எனப்படும். மேலால் அவத்தையில் கீழ் நோக்கித் தோன்றுதல், பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணம் ஆதலால், அது கீழால் அவத்தையின் மேல் நோக்கித் தோன்றுதலோடு ஒக்கும்.

அவ்வாறாயின் கீழால் அவத்தையில்மேல் நோக்குதல் பிறவி அறுதற்குக் காரணம் என்றும், மேலால் அவத்தையில் கீழ் நோக்குதல் பிறவிக்குக் காரணம் என்றும் மேலே கூறியது எவ்வாறு பொருந்தும்? அதற்கு விளக்கம் வருமாறு.

வினைப்பயனை அனுபவிப்பதால், பல பிறவிகளைப் பெற்று இருவினை ஒப்பு முதலிய பக்குவம் எய்தி, பரம்பரையில் பிறவி அறுமே அன்றி, வினைப்பயனைஅனுபவித்துக் கொண்டு மட்டும், பிறவி அறாது; எனவே பொருந்தும்.

கீழால் அவத்தையில்மேல் நோக்கிப் பிறப்பு அறுத்திடுவதும், மேலால் அவத்தையில் மேல் நோக்கிப் பிறப்பு அறுத்திடுவதும் ஆகிய இருவகைப் பிறப்பு அறுத்திடுவதும் வருகின்ற செய்யுளில் கூறும் மத்தியால் அவத்தைக்கும் ஒக்கும்.

சகலத்தில் மத்தியால் அவத்தை ஐந்து உண்டு எனவும், சுத்தத்திலும் ஐந்து அவத்தை உண்டு எனவும் கூறுகின்றது

அறிதரு முதல் அவத்தை
அடைதரும் இடத்தே ஐந்தும்
செறிதரும் கரணம் தன்னில்
செயல்தொறும் கண்டுகொள் நீ;
பிறிவு இலா ஞானத்தோரும்
பிறப்பு அற அருளால் ஆங்கே
குறியொடு அஞ்சு அவத்தை
கூடுவர் வீடு கூட. **225**

தெளிவுரை:

மேற்கூறிய ஐந்து அவத்தையினுள், எல்லா விடயங்களையும் அறிகின்ற முதல் அவத்தை ஆகிய சாக்கிரத்தை அடைகின்ற இலாடத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தானத்திலும், சாக்கிரம் முதல் ஐந்து அவத்தை உள ஆகும். அந்த அவத்தைகள், விடயங்களை அறியும் செயற்பாடுகளில், அதி நுணுக்கமாக இடைவிடாமல் நிகழும். அவ்வாறு நிகழ்வதை நுண்ணுணர்வால் நீ கண்டு கொள்வாயாக.

இனி இந்த சகலத்தில் நிகழும் இந்த அவத்தைகளே அன்றி, பிறவிலா ஞானத்தை அறிந்தவரும், பிறப்பு நீங்கி அந்த அருள் ஞானத்தால் வீடு அடைவதற்கு உரிய சுத்த அவத்தையிலும், அவ்வாறே சாக்கிரம் முதலாக ஐந்தவத்தையினைப் பொருந்துவர்.

சாக்கிரத்தில் நிகழும் ஐந்து அவத்தைகள் வருமாறு:

1. சாக்கிரத்தில் சாக்கிரம் – விடயங்களை நேரே அனுபவித்தல்.

2. சாக்கிரத்தில் சொப்பனம் – துன்பங்களும், இன்பங்களும் வந்த வரலாற்றை நாடி, மனோ வியாபாரம் செய்து நிற்பது.

3. சாக்கிரத்தில் சுழுத்தி – இன்ப துன்பத்தில் மூழ்கி நிற்றல்

4. சாக்கிரத்தில் துரியம் – இன்ப துன்பம் தோன்றாது பெரு மூச்செறிந்து நிற்றல்.

5. சாக்கிரத்தில் அதீதம் – இன்ப துன்பங்களைக் கேட்ட அளவிலேயே திடுக்கிட்டு பிராண வாயு இயங்காமல் மூர்ச்சித்து மயங்கி நிற்றல்.

சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தையிலும், சிவதத்துவம் நின்று செலுத்தும் முறைமை இவ்வாறு எனக் கூறுகின்றது

ஐந்து சாக்கிரத்தில், நான்கு
கனவினில், சுழுமுனை மூன்று
வந்திடும் துரியம் தன்னில்
இரண்டு, ஒன்று துரியாதீதம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தந்திடும் சாக்கிராதி
அவத்தைகள் தானம் தோறும்
உந்திடும் கரணம் தன்னில்
செயல் தொறும் உணர்ந்து கொள்ளே. 226

தெளிவுரை:

சாக்கிராதி அவத்தைகள் ஐந்திலும், கலாதிகளைச் செலுத்தி நிற்கும் சிவ தத்துவம் எப்படி நிற்கும் என்றால், கூறுதும்.

சாக்கிரத்தில் சுத்தவித்தை, மகேசுவரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் ஐந்து தத்தவங்களும், சொப்பனத்தில் மகேசுவரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் நான்கு தத்துவங்களும், சுழுத்தியில் சாதாக்கியம், சத்தி, சிவம் என்னும் மூன்று தத்துவங்களும், துரியத்தில் சத்தி சிவம் ஆகிய இரண்டு தத்துவங்களும் துரியாதீதத்தில் சிவ தத்தவம் ஒன்றும், தொழிற்படுவதான அந்த அந்த தானங்கள் (இடங்கள்) தோறும் உள்ள கருவியால், அந்த அந்த தானங்களில் விடயங்களை அறியும்; செய்கை தோறும் அந்தச் செயல் நிகழ்வதற்குக் கலாதி தத்துவங்களைச் செலுத்தி நிற்கும். இதனை நீ நுண்ணுணர்வால் உணர்ந்து கொள் வாயாக.

(இனி, இந்தச் செய்யுளுக்கு இவ்வாறு அன்றி, சாக்கிரத்தில் சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தையும், சொப்பனத்தில் சொப்பனம் முதலிய நான்கு அவத்தையும், சுழுத்தியில் சுழுத்தி முதலிய மூன்று அவத்தையும், துரியத்தில் துரியம் முதலிய இரண்டு அவத்தையும், துரியாதீதத்தில் துரியாதீதம் ஆகிய ஓர் அவத்தையும் பொருந்தும் என உரைத்தலும் ஒன்று)

காரிய அவத்தை ஆகிய சாக்கிராதி ஐந்திற்கும், காரண அவத்தை கேவல, சகல, சுத்தம் என மூன்று உண்டு எனவும், அவற்றின் பொது இயல்பு இவை எனவும் கூறுகின்றது

கேவலம் சகலம் சுத்தம்
என்று மூன்று அவத்தை ஆன்மா
மேவுவன்; கேவலம் தன்
உண்மை; மெய் பொறிகள் எல்லாம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

காவலன் கொடுத்த போது
சகலனாம்; மலங்கள் எல்லாம்
ஓவின போது சுத்தம்
உடையன் உற்பவம் துடைத்தே. 227

தெளிவுரை:

காரிய அவத்தைகள் ஆகிய சாக்கிராதி அவத்தைகளை ஆன்மா பொருந்துவதற்குக் கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்று காரண அவத்தைகளைப் பொருந்தும். அவற்றுள் கேவலம் ஆவது, இச்சா ஞானக் கிரியா சத்திகள் சிறிதும் தொழிற்படாமல், ஆன்மா தான் மட்டும் ஆணவ மலத்தோடு கூடி நிற்றல் ஆகும். சகலம் ஆவது; அவ்வாறு ஆணவ மலத்தோடு கூடி நின்ற ஆன்மா பின்பு தனு கரணாதிகளோடு முதல்வன் கூட்டக் கூடி, அதன் இச்சா ஞானக் கிரியைகள் ஒரு வாறு விளங்கி நிற்றல் ஆகும். சுத்தம் ஆவது, அவ்வாறு தனு கரணாதியோடு கூடி நின்ற ஆன்மா, ஆணவம் முதலிய பஞ்ச மலங்களையும் நீங்கும்படி செய்து அம்மலங்கள் நீங்கியதால் பிறவி ஒழிந்து சிவத்தோடு கூடி, இச்சா ஞானக் கிரியைகள் எங்குமாய் வியாபித்து விளங்கி நிற்றல் ஆகும்.

சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகளும், கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்று அவத்தையிலும் தனித்தனி காரியப்படுவதால், அந்த மூன்றும் காரணமாகவும், சாக்கிராதி ஐந்தும் காரியமாகவும் கூறப் பட்டன. அவத்தை என்னும், சொல் ஒற்றுமை கொண்டு, சாக்கிராதி அவத்தைக்கும் கேவலம் முதலிய அவத்தைக்கும் வேறுபாடு உண்டோ, இல்லையோ என்னும் ஐயம் நிகழாமைப் பொருட்டுக் காரண காரியமான வேற்றுமை உண்டு என்று காட்டப்பட்டது.

கேவலத்தில், ஐந்து அவத்தை உண்டு என்பது எப்படி என்றால், ஆணவ மலத்தால் மறைக்கப்பட்டு, அறிவு முதலியன தொழிற்பாடு இன்றிக் கிடக்கும் நிலை துரியாதீதம் ஆகும். அந்நிலையிலிருந்து சிறிது எழுச்சி உண்டாகும் நிலை துரியம் ஆகும்; எழுச்சி உண்டாகியும் கேவலத் துன்பம் தோன்றாது இருக்கும் நிலை, சுழுத்தி ஆகும்; அப்போது துன்பம் தோன்றும் நிலை, சொப்பனம் ஆகும்; கேவலத் திலிருந்து சகலத்திற்கு வருவதற்கு முன்பு, துன்பத்துக்கு வருந்தும் நிலை, சாக்கிரம் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கருவிகள் இல்லாத கேவல நிலையில் துன்பம் தோன்றுவதும், துன்பத்துக்கு வருந்துவதும் எப்படி முடியும் என்றால், கேவலத்திலும் ஆன்மாவுக்கு இச்சா ஞானக் கிரியா சத்திகள் இருப்பதனால் முடியும். கருவிகளோடு கூடிய நிலையில் உண்டாகும் வருத்தத்திற்கும், கருவிகளோடு கூடாத நிலையில் உண்டாகும் வருத்தத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன என்றால், கருவிகளோடு கூடிய நிலையில் கார்ணம் தெரிந்து வருந்துவதும், கருவிகளோடு கூடாத நிலையில் காரணம் தெரியாமல் வருந்துவதுமே, இரு நிலைகளுக்கும் உள்ள வேறுபாடு ஆகும்.

இஃது எதுபோல எனின், சிசுப்பருவத்தில் பசியினால் வருந்தும் வருத்தமும், முதிர்ந்த பருவத்தில் பசியினால் வருந்தும் வருத்தமும் போல் ஆகும். சிசு துன்பத்திற்கு ஆற்றாது வருந்துமே அன்றி அத்துன்பம் பசியினால் வந்தது என்று சிசுவுக்குத் தெரியாது, பருவம் வந்த பின்பு துன்பமும் துன்பத்திற்குக் காரணமும் அறியப்படும். இவ்வாறே கருவிகளோடு கூடாத நிலையினையும், கூடிய நிலையினையும் கண்டு கொள்வாயாக.

சகலத்திலும் சாக்கிரம் முதலிய ஐந்து அவத்தைகள் நிகழும் முறைமையை இந்நூலின் (225) ஆவது செய்யுள் விளக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

சுத்தத்தில் ஐந்தவத்தை உண்டு என்பது எப்படி என்றால், இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் நிரம்பிய நிலை நின்மல சாக்கிரம்; குரு தரிசனம் ஆகி அவர் அருளுபதேசம் பெறுவது நின்மல சொப்பனம்; உபதேசத்தில் உறைத்து நின்று சாதிப்பது நின்மல சுழுத்தி; பாசநீக்கம் நின்மல துரியம்; சிவப்பேறு நின்மல துரியாதீதம், இவற்றைத் தசகாரிய விளக்கம் என்னும் பகுதியில் *"உண்மை நெறி விளக்கம்"* என்னும் நூலில் காண்க.

ஆன்மா இவ்வாறு நிற்பதற்குக் காரணம் என்ன என்றால், சார்ந்த பொருளின் வண்ணமாய் நிற்றல் ஆன்மாவின் இயல்பு ஆதலினாலேயே ஆகும். அறியாமையைச் செய்யும் மலத்தைச் சார்ந்து அறியாமையாகவும், ஏகதேசத்தைச் செய்யும் கருவியைச் சார்ந்து ஏகதேசமாகவும், வியாபகத்தைச் செய்யும் சிவத்தைச் சார்ந்து வியாபகமாகவும் ஆன்மா நிற்கும்.

கேவலம் ஒன்றும் இல்லாமையைக் குறிக்கும்; சகலம் எல்லாம் உடைமையைக் குறிக்கும்; சுத்தம் அழுக்கு நீக்கத்தைக் குறிக்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகவே, அறிவு இச்சை செயல் ஆகியன பிண்டமாய்த் தொழிற்படுவதே அன்றி, பகுத்துத் தொழிற்படுவதற்கான கருவிகள் இல்லாத நிலையைக் கேவலம் என்றும், கருவிகளுடன் கூடிய நிலையைச் சகலம் என்றும், கருவிகளும் மலமும் ஆகிய அழுக்கு நீங்கிய நிலையைச் சுத்தம் என்றும் காரணக் குறியாய் வந்த முறைமை நினைவில் கொள்ளத் தக்கது. முத்தியைக் கேவலம் என்பதும், தத்துவம் ஆகிய கருவிகளின் நீக்கம் பற்றியே ஆகும். முன்னைய கேவலம் அறியாமையோடு கூடி நீங்கும் தன்மை உடையது; பின்னைய கேவலம் அறிவோடு கூடி நீங்கும் தன்மையை உடையது. (முன்னையதில் நீங்குவது மலம்; பின்னை யதில் நீங்குவன மலமும் கருவிகளும் ஆகும்)

கேவலத்தின் சிறப்பு இயல்பு இது எனக் கூறுகின்றது

அறிவு இலன்; அமூர்த்தன்; நித்தன்;
அராகாதி குணங்களோடும்
செறிவு இலன்; கலாதியோடும்
சேர்வு இலன்; செயல்கள் இல்லான்;
குறி இலன்; கருத்தா அல்லன்
போகத்தில் கொள்கை இல்லான்;
பிறிவு இலன் மலத்தினோடும்;
வியாபி கேவலத்தில் ஆன்மா. 228

தெளிவுரை:

காரண அவத்தை மூன்றனுள், கேவல அவத்தையில் ஆன்மா எப்படி இருக்கும் என்றால், உடம்பு இன்றியும், கலை முதலிய தத்துவங் களோடு கூடிஅறிவது இன்றியும், பேகத்தின் குணம் ஆகிய தருமம், ஞானம், வயிராக்கியம், ஐசுவரியம், அதருமம், அஞ்ஞானம், அவயிராக் கியம், அனைசுவரியம் ஆகிய எட்டும் இன்றியும், மனம் முதலிய கருவிகள் இன்றியும், இச்சை இன்றியும், அறிவு இன்றியும், ஒரு தொழிலும் இன்றியும், தனக்கு என ஒரு சுதந்தரம் இன்றியும், போகத்தில் கொள்கை இன்றியும், சரீரக் தோற்றக் கேடுகள் இன்றியும், சரீரம் இல்லாமையால் ஏகதேசியாய் இன்றியும், ஆணவ மலத்தோடு அந்த மலத்தின் அளவில் வியாபித்து நிற்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சகலத்தின் சிறப்பு இயல்பு இது எனக் கூறுகின்றது

உருவினைக் கொண்டு, போக
போக்கியத்து உன்னல், செப்பல்,
வருசெயல் மருவிச், சத்தம்
ஆதியாம் விடயம் தன்னில்
புரிவதும் செய்து இங்கு எல்லா
யோனியும் புக்கு உழன்று
திரிதரும் சகல மான
அவத்தையில் சீவன் சென்றே. 229

தெளிவுரை:

சகல அவத்தையில் ஆன்மா எவ்வாறு நிற்கும் என்றால், மேலே சொன்ன கேவல அவத்தையைப் பொருந்தி நின்ற ஆன்மா, அந்நிலைக்கு மறுதலை ஆகிய உடம்பினைப் பெற்றும், கலாதி தத்துவங் களோடு கூடியும், தருமம் முதலிய குணங்களைப் பொருந்தியும், மனம் முதலிய கருவிகளைக் கூடியும், இச்சை, வாக்குகளால் நிகழும் அறிவு, செயல்களைப் பொருந்தியும், சத்தாதி விடயத்தில் விருப்பம் செய்தும், போகத்தை அனுபவித்தும், பிறப்பு இறப்புக்களில் புகுந்து திரிந்தும், ஏகதேசி ஆகியும், சகலாவத்தையில் சீவித்து நிற்கும்.

சுத்தத்தின் சிறப்பு இயல்பு இது எனக் கூறுகின்றது

இருவினைச் செயல்கள் ஒப்பில்,
ஈசன்தன் சத்தி தோயக்
குருஅருள் பெற்று ஞான
யோகத்தைக் குறுகி, முன்னைத்
திரிமலம் அறுத்துப், பண்டைச்
சிற்றறிவு ஒழிந்து, ஞானம்
பெருகி நாயகன் தன்பாதம்
பெறுவது சுத்தம் ஆமே. 230

தெளிவுரை:

சுத்த அவத்தையில்ஆன்மா எவ்வாறு நிற்கும் என்றால் மேற் கூறிய சகல அவத்தையில் நின்ற ஆன்மா, அந்நிலையை விட்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இருவினை ஒப்பு வந்து, சிவசத்தி பதியப் பெறுவதால், குருவருள் பெற்று யோகத்தைப் பொருந்தி, மும்மலங்களையும் நீக்கி விடய அனுபவத்திற்கு ஏது ஆகிய விருப்பு வெறுப்பு என்னும் பழயவாதனையையும் நீக்கி ஞானத்தைப் பெருக்கி, சிவபெருமான் திருவடியை (திருவருளை) அடைந்து நிற்கும்.

இருவினை ஒப்பால் சத்தாதி விடயத்தைப் பற்றிய செயல் நீக்கமும், சத்தி பதிவதால் கருவிகளின் கூட்டம் நீக்கமும், குருவருள் பெறுவதால் தானம் செய்தல் காரணமாக உடம்பு நீக்கமும், ஞான யோகம் பெறுவதால் பிறப்பு இறப்பு நீக்கமும், மலம் அறுவதால் ஏகதேசத் தன்மை நீக்கமும், விருப்பு வெறுப்பு நீக்கத்தால் விடயானுபவ நீக்கமும், ஞானப் பெருக்கால் விடயஞான நீக்கமும் உண்டாகும். விடய ஞானம் என்றதனால், விடய இச்சை செயல்களும், கருவி என்றதனால்போக காண்டம் ஆகிய கலாதிகளும் நீங்கும்.

நான்காம் சூத்திரம் முடிந்தது.

ஐந்தாம் சூத்திரம்

பாச இலக்கணம்

தோற்றுவாய்:

இரண்டாம் சூத்திரத்தில் கூறப்பட்ட பாசத்திற்கு இலக்கணம் இந்த சூத்திரத்தில் கூறப்படுகிறது.

''பாசம்'' என்பது, ஆணவம், கன்மம், மாயை, மாயா காரியம், திரோதாயி என ஐந்து வகைப்படும். அவற்றுள் திரோதாயி என்பது மறைத்தலைச்செய்வது, இதனால் ஏனைய நான்கு மலங்களும் காரியப்படும். எனவே திரோதாயின் இலக்கணம் கூறினால் எல்லாப் பாசங்களின் இலக்கணமும் கூறியதாகும். ஆதலால் திரோதாயி என்கின்ற திரோதான சத்தியின் இலக்கணம் மட்டுமே இந்தச் சூத்திரத்தில் கூறப்படுகின்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''திரோதான சத்தி'' என்பது உயிரினுள் மறைந்து நின்று உயிரின் கன்மத்துக்கேற்ப உயிருக்கு அறிவிக்கும் சிவசத்தி ஆகும். இந்த சத்தி உயிருக்குப் பந்தம் உறுத்துவதால், இது ''பாசம்'' எனப்பட்டது, உயிர்க்குப் பந்த நீக்கம் ஏற்படும்பொழுது இஃதே அருட்சத்தியாகின்றது.

ஆன்மா தன்னைச் செலுத்தி உடனாய் நிற்கும் முதல்வனை அறிய மாட்டாது எனச் சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது

பொறி புலன் கரணம் எல்லாம்
புருடனால் அறிந்து ஆன்மாவை
அறிதரா; அவையே போல
ஆன்மாக்கள் அனைத்தும் எங்கும்
செறிதரும் சிவன்தனாலே
அறிந்திடும்; சிவனைக் காணா;
அறிதரும் சிவனே எல்லாம்
அறிந்தும் அறிவித்தும் நிற்பன். *231*

தெளிவுரை:

இந்திரியம் அந்தக்கரணம் முதலியன, ஆன்மாவினால் உடன் நின்று செலுத்தி அறியும்படி செய்ய தத்தம் விடயங்களில் சென்று இஃது இன்னது என்று அளவிட்டு அறியும். அவ்வாறு அறிந்தும், அறிகின்ற தம்மையும் தம்மோடு உடனாய் மறைந்து நின்று செலுத்தும் ஆன்மாவையும் அந்த இந்திரியங்களும் அந்தக் கரணங்களும் அறியமாட்டா.

அவ்வாறே எந்த இடத்திலும் வியாபகம் ஆகிய இறைவனது சிற்சத்தியின் அம்சம் ஆகிய திரோதானசத்தி, உடன் நின்று வினைப்பயன்களை அறிந்து அனுபவிக்கும்படி செய்ய, ஆன்மா அவற்றையறிந்து அனுபவிக்கும். அவ்வாறு அனுபவித்தாலும், தம்மையும் தம்மைச் செலுத்தி நிற்கும் திருவருள் ஆகிய திரோதான சத்தியையும், ஆன்மாக்கள் அறிய மாட்டாவாம்.

ஐம்பொறி முதலியன ஆன்மாவை அறியா, ஆயினும் ஆன்மா ஐம்பொறி முதலியவற்றை அறிந்து உடன் நிற்கும். அதுபோல ஆன்மாக்கள் இறைவனை அறியா, ஆயினும் பாச நீக்கத்தில் தன்னை அறியும்படி செய்பவன் ஆகிய இறைவன் ஆன்மாக்களை அறிந்தும் அவற்றிற்கு அறிவித்தும் அவற்றுடன் நிற்பன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்திரியம் முதலான கருவிகள் சடம்; ஆதலால் அவை ஆன்மாவை அறியமாட்டா. ஆன்மா சித்துப்பொருள்; ஆதலால் அஃது எக்காலத்தும் இறைவனை அறியமாட்டாது என்பது பொருந்தாது. அன்றியும் இறைவன் அறிந்து இன்புறுவது ஆகிய முத்தி நிலையும் இல்லையாய் முடியும். ஆதலால் அஞ்ஞான காலத்தில் ஆன்மா இறைவனை அறியாது; அஞ்ஞானம் நீங்கிய காலத்தில் அறியும். அப்பொழுது அறிவது கூட, இறைவன் அறிவிக்கவே ஆன்மா இறைவனை அறியும் என்பதை உணர்த்தும் பொருட்டே, ''அறிதரும் சிவன்'' என்று கூறினார் ''அறிதரும் சிவன்'' என்றதை, ''அறிவதைச் செய்யும் சிவன்'' என்று விரித்துக் கொள்ள வேண்டும். அறியப்படாது நின்ற இறைவன் என்றது. இறைவனது சிற்சத்தி ஆகிய திரோதான சத்தியை ஆகும்.

இந்தச் செய்யுள், முதல் நூல் ஆகிய சிவஞான போதம் ஐந்தாம் சூத்திரம் போல, இரு கூற்றை உடையது, அவற்றுள்,

முதற்கூறு	:	பொறி புலன் கரணம் எல்லாம் புருடனால் அறிந்து ஆன்மாவை அறிதரா.
இரண்டாம் கூறு	:	அவையே போல ஆன்மாக்கள் அனைத்தும் எங்கும் செறிதரும் சிவனாலே அறிந்திடும். சிவனைக் காணா. அறிதரும் சிவனே எல்லாம் அறிந்து அறிவித்து நிற்பன்.

இவற்றுள் முதற்கூறு உவமை மூலமாக முதல் செய்யுளிலேயே எந்தவித ஐயப்பாட்டிற்கும் இடம் இன்றி விளக்கப்பட்டுவிட்டமையால், அதனை உள்ளடக்கி நிற்கும் இரண்டாம் கூறு கூறத் தொடங்குகிறார்.

ஐந்தாம் சூத்திரம்
இரண்டாம் அதிகரணம்

அவையே போல அறிந்துஅறிவித்து நிற்பன் என்றது

ஆன்மாக்களைச் செலுத்துதல் கன்மமே அன்றி முதல்வன் அல்லன் என்பவரை மறுத்து உரைக்கின்றது

இறைவனே அறிவிப்பானேல்
ஈண்டு அறிவு எவர்க்கும் ஒக்கும்
குறைவு அதிகங்கள் தத்தம்
கன்மமேல் கோமான் வேண்டா;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முறைதரு செயற்குப் பாரும்
முளரிகட்கு இரவியும் போல்
அறைதரு தத்தம் கன்மத்து
அளவினுக்கு அளிப்பன் ஆதி. 232

தெளிவுரை:

ஆன்மாக்களுக்கு இறைவனே அறிவிப்பான் என்றால், இறைவன் நடுவு நிலைமை உடையவன் ஆதலால், எல்லா ஆன்மாக்களுக்கும் ஒன்றுபோல் அறிவிக்கவேண்டும். நடுவு நிலைமை உடையவன் ஆயினும், அவரவர் கன்மத்துக்கு ஈடாக, வேறு வேறு விதமாய் அறிவிப்பான் என்றால், அறிவிப்பதற்குக் கன்மமே அன்றி, இறைவன் வேண்டாம் என்பதாக முடியும். எனவே தாமரை விரிவதற்கு சூரியன் வேண்டப்படுவது போலவும், உழவு முதலிய செயல்கள் பலன் தருவதற்கு நிலம் வேண்டப்படுவது போலவும், கன்மம் பலன் தருவதற்கு இறைவன் வேண்டப்படும். ஆதலால், ஆன்மாக்களைச் செலுத்துவ தற்குக் கன்மமே போதும் என்பது பொருந்தாது.

கன்மத்தோடு கூடிய ஆன்மா அறிவுடைப் பொருள் ஆதலின், ஆன்மாவே தன்னைச் செலுத்திக் கொள்ளும்; இறைவன் வேண்டாம் என்பவரை மறுத்து உரைக்கின்றது

அறிந்திடும் ஆன்மா, ஒன்றை
ஒன்றினால் அறித லானும்,
அறிந்தவை மறத்த லானும்
அறிவிக்க அறித லானும்
அறிந்திடும் தன்னையும் தான்
அறியாமை யானும், தானே
அறிந்திடும் அறிவன் அன்றாம்;
அறிவிக்க அறிவன் அன்றே. 233

தெளிவுரை:

கன்மத்தோடும் கூடிய ஆன்மா, அறிவுடைப் பொருள் ஆதலான், ஆன்மாவே கன்மத்தின் பலனை அறிந்து எடுத்துக் கொள்ளும் என்றால், அது பொருந்தாது. ஏனென்றால், ஆன்மா அறிவுடைப் பொருள் ஆயினும் ஒவ்வொரு விடயங்களை ஒவ்வொரு இந்திரியங்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

களால் அறிதலே அன்றி, இந்திரியத்தின் துணை இல்லாமல், தானே ஒரு விடயத்தையும் அறியாது. அவ்வாறு இந்திரியத்தைக் கொண்டு விடயத்தை அறிவதே, ஆன்மாவின் இயல்பு என்பாய் ஆயின், முன்பு அறிந்த விடயத்தைப் பின்பு ஒரு விடயத்தை அறியும் பொழுது, மறவாது இருக்க வேண்டும். ஆனால் மறத்தல் காணப்படுகிறது.

அறிந்த விடயத்தைப் பின்பு அறிய வேண்டாமையால் மறக்கலாயிற்று என்பாய் ஆயின், மறந்து பிறிது ஒன்றை அறிந்து கொண்டு இருக்கும் பொழுது, மறந்த விடயத்தை மீண்டும் ஒருவன் அறிவிக்க. அதில் அறிவு செல்கின்றது; அவ்வாறு ஆயினும் ஏதேனும் ஒன்றை அறிந்து கொண்டு இருப்பதனால், அறிவதில் வேறுபாடு இல்லை என்பாய் ஆயின், அறிகின்ற தன்மை அறியாமையினால், அறிவதில் வேறுபாடு இல்லை என்பது எப்படி முடியும்? முடியாது. ஆதலால், ஆன்மா இறைவன் போலே, தானே அறியும் சுதந்தர அறிவு இன்றி இறைவன் அறிவிக்க அறியும் தன்மை உடையது.

இந்தச் செய்யுளில், விடயத்தை இந்திரியத்தால் ஆன்மா அறியும் எனக் கூறியதனால், இந்திரியம்ஆன்மாவினால் விடயத்தை அறிந்து தன்னையும் ஆன்மாவையும் அறியாது என்ற முதற்கூறு அடங்கியவாறு காணப்படும்.

மாயேயம் ஆகிய தத்துவங்களே ஆன்மாவிற்கு அறிவதை உண்டு பண்ணும்; இறைவன் வேண்டாம் என்பவரை மறுத்து உரைக்கின்றது

கருவியால், பொருளால், காட்டால்,
காலத்தால், கருமம் தன்னால்,
உருவினால், அளவால், நூலால்,
ஒருவரால், உணர்த்த லானும்,
அருவனாய் உண்மை தன்னில்
அறியாது நிற்ற லானும்,
ஒருவனே எல்லாம் தானும்,
உணர்த்துவன் அருளினாலே. 234

தெளிவுரை:

மாயா காரியம் ஆகிய தத்துவங்களே ஆன்மாவுக்கு அறிவு விளங்கும்படி செய்யும், இறைவன் தேவையில்லை என்று சொன்னால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அது பொருந்தாது. ஏனென்றால், ஆன்மாவின் அறிவைச் செலுத்து கின்ற அக்கருவிகள் ஆகிய ஆன்ம தத்துவமும் புறக் கருவிகள் ஆகிய தாத்துவிகமும், அறிவு முதலியவற்றை விளக்கும் கலை, முதலிய தத்துவங்களும், கன்ம பலனை வரையறை செய்யும் காலம், நியதி முதலிய தத்துவங்களும், தூல உடம்பும் பிரத்யட்சம் முதலிய பிரமாணங் களும் அறிவதற்குக் காரணம் ஆகிய நால்வகை வாக்குகளும் ஆன்மாவைப் பொருந்தும்படி இறைவன் இவற்றைக் கூட்டி உணர்த்தவே உயிர் உணரும். அவைகளைக் கூட்டாத அநாதி கேவலத்தில் மலத்துடன் உயிர் கூடி இருக்கும் பொழுது, உயிர் அறிவை விளங்கச் செய்யும் மாயா காரியங்களும், சடம் ஆகலின், தாமே சென்று ஆன்மாவைக் கூடமாட்டா. எனவே, அவற்றை ஆன்மாவுடன் கூட்டி, ஆன்மாக்களுக்கு அறிவிப்பதற்கு இறைவன் வேண்டப்படும் என்பது தெளிவு. ஆதலால் இறைவனை இன்றி மாயா காரியங்களால் உயிர் அறிய முடியாது என்பது பெறப்படும்.

பிறர் அறிவிக்க வேண்டாது இறைவன் தானே ஆன்மாக் களின்பொருட்டு தூலம் சூக்குமம் அதிசூக்குமம் என்னும் மூவகையான ஐந்தொழிலைச் செய்வன் எனக் கூறுகின்றது

கருவியும் பொருளும் காட்டும்
காலமும் கருமம் தானும்
உருவமும் அளவு நூலும்
ஒருவரும் உணர்த்தல் இன்றி
அருவனாய் உலகம் எல்லாம்
அறிந்து அவை ஆக்கி வேறாய்
ஒருவனே உயிர்க்கு எல்லாம்
உயிருமாய் உணர்த்தி நிற்பன். 235

தெளிவுரை:

சித்துப் பொருள் ஆகிய ஆன்மா, தன்னின் வேறு ஆகிய இறைவனால், தத்தவம் முதலியவற்றைக் கூட்டி, அறிவிக்க அறிவது போல, சித்துப் பொருளாகிய இறைவனும் அவ்வாறே வேறு ஒருவனால் அறிவிக்க அறிவன் என்று கூறல் ஆகாதோ எனின், அவ்வாறு கூறலாகாது. ஏனென்றால், இறைவனுக்கு மற்றொருவனும், அவ்வாறே வரம்பு இன்றி ஓடுதல் என்னும் குற்றத்திற்கு இடம் ஆகும். ஆதலால், தத்துவம் முதலியனவும், வேறு அறிவுடைப் பொருளும் அறிவிக்க

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேண்டாது இறைவன் தானே முதல்வனாய் உயிர்களின் பொருட்டு கேவல அவத்தையில் அறிவது ஆகிய வகையில் சூக்கும ஐந்தொழிலையும், சகல அவத்தையில் விடயத்தைத் தோற்றுவிக்கும் முறையில் படைத்தல் முதலிய தூல ஐந்தொழிலையும், அந்த சகலஅவத்தையின் உள்ளும் சாக்கிரத்தில் இன்ப துன்பப் பயனை ஊட்டுவிக்கும் முறையில் அதிசூக்கும ஐந்தொழிலையும் செய்து நிற்பன்:

சூக்கும ஐந்தொழில் வருமாறு:

1. கேவலத்தில் ஆன்மாக்களின் பரிபாகத்தை அறிவது – படைத்தல்.
2. பரிபாகம் இல்லாத ஆன்மாக்களைக் கேவலத்தில் வைத்தல்– காத்தல்.
3. பரிபாகம் உள்ள ஆன்ம்ாக்களைக் கேவலத்திலிருந்து நீக்குதல் – சங்காரம் (அழித்தல்).
4. கேவலத்தில் இருக்கும் பரிபாகம் இல்லாத ஆன்மாக்களுக்கு அது கேவலம் எனத் தோன்றாது இருக்கச் செய்தல் – மறைத்தல்.
5. கேவலத்தில் இருக்கும் ஆன்மாக்களின் பரிபாகம் அறிந்து சகலத்தில் விடுதல் – அருளல்.

இந்த சூக்கும ஐந்தொழில் உயிர்களின் பொருட்டு, இறைவனிடத்தில் நிகழ்வன ஆகும்.

தூல ஐந்தொழில் வருமாறு:

1. தனு கரண புவன போகங்களைத் தோற்றுவித்தல் – படைத்தல்.
2. அவற்றை நிலைப்படுத்துதல் – காத்தல்.
3. அவற்றை ஒடுக்குதல் – அழித்தல்.
4. அவற்றுள் அனுபவிக்க வேண்டாதனவற்றை மறைத்து வைத்தல் – மறைத்தல்.
5. அனுபவிக்க வேண்டுவனவற்றைத் தோற்றுவித்தல் – அருளல்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்த தூல தொழில், உயிர்களின் பொருட்டு உடல் உலகம் ஆகிய பாசத்தினிடத்து நிகழ்வது ஆகும்.

அதிசூக்கும ஐந்தொழில் வருமாறு:

1. ஆன்மாவிற்கு அறிவித்தல் – படைத்தல்.

2. அறிந்தவற்றுள் அழுத்துதல் – காத்தல்.

3. முன்பு அறிந்தவற்றினின்றும் பிரித்தல் – அழித்தல்.

4. ஒன்றனை அறியவேண்டும் நிலையில், பிறிது ஒன்றனை அறிய வொட்டாமல் மறைத்தல் – மறைத்தல்.

5. அறிந்தவற்றை அனுபவிக்கச் செய்தல் – அருளுதல், இந்த அதிசூக்கும ஐந்தொழில் உயிரினிடத்து நிகழ்த்தப்படுவது.

இந்த மூன்று வகையான ஐந்தொழில்களுள், தூல ஐந்தொழில் முதல் சூத்திரத்தாலும், சூக்கும ஐந்தொழில் இரண்டாம் சூத்திரத்தாலும், தடை விடைகளில் வைத்துக் கூறி விட்டமையால், இந்தச் சூத்திரத்தில் அதிசூக்கும ஐந்தொழிலின்கண் உண்டாகும் தடைவிடைகளை விரித்துக் கூறுகிறார்.

உயிருக்கு இறைவன் அறிவிப்பதால், அவன் உயிர்போலும் பந்தம் அடையான் எனக் கூறுகின்றது

இறைவன்தன் சந்நிதிக் கண்
உலகின்தன் சேட்டை என்னும்
மறைகளும் மறைந்தாய் மாயை
மருவிடான் சிவன்; அவன்கண்
உறைதராது அசேதனத்தால்
உருவுடை உயிர்கட்கு எல்லாம்
நிறைபரன் சந்நிதிக் கண்
நீடு உணர்வு உதிக்கும் அன்றே. 236

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

கருவி முதலியன விடயங்களை அறிவதால் வரும் பயன், அக்கருவிகளுக்கு அறிவித்து நிற்கும் உயிர்க்கு ஆகிறது; அதுபோல உயிர் அறிவதால் வரும் பயன், அவ்வுயிருக்கு அறிவித்து நிற்கும் இறைவனுக்கு ஆதல் வேண்டும்; வேண்டவே, இறைவனும் பந்தம் உறுவன் எனப்பட்டு வழு ஆகும். ஆகவே கருவி முதலியவற்றிற்கு உயிர் அறிவிப்பது போல, உயிர்க்கு இறைவன் அறிவிப்பன் என்பது பொருந்தாது என்று கூறினால், அது பொருந்துமாறு கூறுதும்.

1. கருவி முதலியன உயிரின் எண்ணத்தினால் உணரும், உயிர், இறைவனின் எண்ணம் இல்லாமலே, அவனது வியாபகம் ஆகிய முன்னிலையிலேயே உணரும்.

2. உயிர் வெவ்வேறு விதமாய் உணர்வதற்கு, வினைக்கு ஈடான உடம்பினை உடையதாய் நிற்கும்; இறைவன் அவ்வாறு உணர்வதும் அல்லன்; வினையையோ வினைப்பயன் ஆகிய உடம்புடன் கூடுவதையோ இன்றியும் நிற்பன்.

3. அன்றியும், உயிருக்குப் பிரபஞ்சம் சுட்டி அறியப்படும்; அகண்டாகாரம் ஆகி நிற்கும் இறைவனுக்கு பிரபஞ்சம் சுட்டி அறியப்படமாட்டாது.

ஆகவே சடம் ஆகிய பிரபஞ்சத்தையும், சுதந்தர அறிவு இல்லாத உயிரையும் இறைவன் சந்நிதி (அருள்) கூட்டுவிக்கும் என்னும் ஆகமப் பிரமாணத்தையும் மறந்து பிணங்குகின்றவனே உயிர்க்கும் இறைவனுக்கும் காட்டிய வேற்றுமையால், 1. பிரபஞ்சத் தோற்றத்தையும், 2. எண்ணத்தையும், 3. உடம்பையும் உடைய உயிர்க்கே, அறிதலினால் வரும் பயன் உண்டே அன்றி, அந்த மூன்றும் இல்லாத இறைவனுக்கு அறிவதால் வரும் பயன் இல்லை என்பதைத் தெளிவாக அறிவாயாக.

இறைவனுக்கு உலகத் தோற்றமும் உடம்பும் இல்லை என்பது ஒக்கும். (ஒத்துக் கொள்ளத் தக்கது) இறைவனது எண்ணம் இன்றி சந்நிதி அளவிலே, உயிரும் உடலும் கூடும் என்றால், கேவலத்திலும் இறைவன் சந்நிதிக்க கேடு இல்லையே, அந்நிலையிலும் உயிரும் உடலும் கூடி இருக்க வேண்டும் அன்றோ? உயிர்க்குக் கேவல நிலையில் எந்த உடம்பும் கூடாமல் இருந்தமையாலும், சிவனே எல்லாம் அறிந்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிவித்து நிற்பன் என்று இந்நூலின் 231–ஆவது செய்யுளில் கூறுவதாலும், ''சந்நிதி மாத்திரையே'' என்றல் எவ்வாறு பொருந்தும் என்றால், சந்நிதி என்றது, நேராக எதிர்முகம் ஆவதைக் குறித்தது அன்று; அஃது இறைவனோடு பிரிப்பின்றி நிற்கும் திருவருளைக் குறித்தது ஆகும். ஆகவே சந்நிதி மாத்திரையால் என்றது. ''திருவருளால்'' என்றபடியாகும்.

அந்தத் திருவருளுக்குச் சங்கற்பம் உண்டோ இல்லையோ என்றால், உண்டு என்றே கூறவேண்டும்; ஏன் என்றால், ''இல்லை'' என்று கூறினால் மேற்கூறிய குற்றம் உண்டாகும்; உண்டு, என்று கூறினால், உயிர் போலத் திருவருளும் பந்தத்தைப் பொருந்தும். ஆதலால் திருவருளுக்குச் சங்கற்பம் உண்டு. அந்த சங்கற்பம் தன் பொருட்டு அன்று; உயிர்களின் பொருட்டே ஆகும். உயிர்களின் சங்கற்பம் இந்திரியத்தின் பொருட்டு அன்று; தன் பொருட்டே ஆகும். ஆகவே உயிர் உணர்தலின் பயன் உயிர்க்கு ஆவது போல இறைவன் உணர்தலின் பயன் இறைவனுக்கு ஆவது இல்லை. இதுவே வேறுபாடு.

''சந்நிதி'' என்பதற்குத் திருவருட் சங்கற்பம் என்பதே முடிவான பொருள் ஆகும் என்பதை இந்நூல் 39–ஆவது செய்யுளில், ''சிவன்தன் சந்நிதி தன்னின்றே'' என்றதற்குச் ''சிவசத்தி சங்கற்ப ரூப சந்நிதியின் நின்றும்'' எனவும், சிவஞானபோதச் சிற்றுரை ஐந்தாம் சூத்திரம், 2–ஆம் அதிகரணத்து முதல் வெண்பா உரையில், ''சிவசத்தி அந்த அந்த காரி யங்களின் உன்முகம் ஆதல் ஆகிய சங்கற்பமே, ஈண்டு ''சந்நிதி'' எனப்படும் எனவும் மாதவச் சிவஞான யோகிகள் அருளியவாற்றால் அறிக.

இறைவன் உயிர்க்கு அறிவிப்பதால், விகாரம் எய்தான் எனக் கூறுகின்றது

உலகமே உருவம் ஆக,
யோநிகள் உறுப்பது ஆக
இலகு பேர் இச்சா ஞானக்
கிரியை உட்கரணம் ஆக
அலகு இலா உயிர்ப் புலன்கட்கு
அறிவினை ஆக்கி, ஐந்து
நலமிகு தொழில் களோடும்
நாடகம் நடிப்பன் நாதன். 237

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

இறைவன் உயிர்களுக்கு அறிவிக்கும் பொழுது, உடம்பு முதலிய வற்றைக் கொண்டு நின்று ஆன்மா உணர்வது போல, இறைவனும் இரு நூற்று இருபத்து நாலு புவனங்களைத் திருமேனியாகவும், எண்பத்து நான்கு நூறு ஆயிரம் குறி பேதங்களை அவயவங்களாகவும், விளக்கம் மிக்க இச்சா ஞானகிரியைகளை உட்கரணமாகவும் கொண்டு, எண்ணி றந்த உயிர்களிடத்து அறிவுக்கு அறிவாய் நின்று உணர்த்துவான். இவ் வாறு உணர்த்துவது ஆகிய நலம் மிகுந்த அதிசூக்கும ஐந்தொழிலும், மேற் கூறிய திருமேனி முதலிய கருவிகளின் துணையைக் கொண்டு அன்றி, சங்கற்பம் மாத்திரையாகவே அக்கருவிகளைக் கொண்டு இறை வன் செய்து அருள்வன்.

திருமேனியாகவும்அவயவங்களாயும், புவனத்தையும் குறி பேதத்தையும் கூறியதனால், இறைவன் உயிர்க்கு உயிராய் நின்று உணர்த்துவது மட்டும் அன்றி, அந்த உயிரால் உணரப்படும் பொருள் களிலும் நிறைந்து நின்றுஅப்பொருள்களை விளங்கும்படி செய் கிறான் என்பது அறிதற்குரியது. இறைவன் இவ்வாறு பொருள்களில் நிறைந்து நிற்கவில்லை என்றால், உயிர்களுக்குள்ள அப்பொருள்கள் விளங்க மாட்டா; உயிர்க்கு அறிவிப்பதால் பயனும் இல்லாது போய் விடும். இறைவன் இவ்வாறு நின்று உணர்த்துவதும் சங்கற்ப மாத்திரையே என்றதனால், கரணத்தோடு கூடித் தொழில் செய்யும் உயிர் விகாரம் எய்துவது போல, இறைவன் விகாரம் எய்தான் என்பது குறிப்பால் உணரக்கிடந்தது. விகாரம் – வேற்றுமைப்படுவது.

இறைவன் உயிர்க்கு அறிவித்தலில், அதிசூக்கும ஐந்தொழிற் குப் பயன், ஏகதேச அறிவும், வியாபக அறிவும் நிகழ்ந்து, அவற் றால் போக மோட்சங்களை உயிர் அடைதல் ஆகும் எனக் கூறுகின்றது

தெரிந்து கொண்டு ஒரோ ஒன்று ஆகச்
சென்று, ஐந்து புலனும் பற்றிப்
புரிந்திடும் உணர்வினோடும்
போகமும் கொடுத்து, யோனி
திரிந்திடும் அதுவும் செய்து,
செய்தி கண்டு உயிர்கட்கு எல்லாம்
விரிந்திடும் அறிவும் காட்டி
வீட்டையும் அளிப்பன் மேலோன். 238

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

அதிசூக்கும ஐந்தொழில் ஆகிய அறிவித்தல், எப்படி நலம் மிகுந்த தொழில் ஆகும் என்றால், ஆன்மாவுக்கு நலம் என்பது போகம், மோட்சம் என்று இருவகைப்படும். இவற்றுள் ''போகம்'' என்பது வருமாறு:

இறைவன், அறிவித்தல் ஆகிய தொழிலால் ஆன்மாவிற்கு ஐம்பொறி வழியாக விடயங்களை அறிவித்தல், அவ்வாறு அறிவித்தலால் ஏகதேச அறிவு நிகழச் செய்து, உலக போகத்தைக் கூட்டி, அந்த போக அனுபவத்தினால் பல பிறவிகளை எய்தம்படி செய்தல்.

'மோட்சம்' என்பது வருமாறு:

பல பிறவிகளை எய்துவதால், அவற்றில் வெறுப்புத் தோன்றும் படி செய்து, பருவம் முதிர்ந்த பொழுது, வியாபக அறிவை விளக்கி. அவ்வறிவிற்குப் பயனாக பரபோகம் ஆகிய மோட்சத்தை இறைவன் கொடுத்து அருள்வன். எனவே அதிசூக்கும ஐந்தொழில் நலம் மிகுந்த தொழில் ஆயிற்று.

ஐந்தொழிலால் இறைவனுக்கு யாதொரு பயனும் இல்லை என்றும், அருட்பெருக்கால் அவ்வாறு செய்வது இறைவனுக்கு இயல்பே ஆகும் என்றும் கூறுகின்றது.

அருளது சத்தி ஆகும்
அரன் தனக்கு; அருளை இன்றித்
தெருள் சிவம் இல்லை, அந்தச்
சிவம் இன்றிச் சத்தி இல்லை;
மருளினை அருளால் வாட்டி
மன் உயிர்க்கு அளிப்பன்; கண்கட்கு
இருளினை ஒளியால் ஓட்டும்
இரவியைப் போல ஈசன். 239

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

ஐந்தொழில் என்பது, ஆன்மாவின் பொருட்டு இறைவன் செய்யும் அறிவித்தலே ஆகும். ஆகவே, ஐந்தொழிலைச் செய்வதால் இறைவனுக்கு ஆகக் கடவது என்ன என்றால், ஆன்மாக்களுக்கு அறிவித்த விடயத்தைக் காட்டி, அதனைக் கூட்டி அனுபவிக்கும்படி செய்வது ஆகிய கருணை ஒன்றே ஆகும். ஆகவே, கருணை என்பது, இறைவனுக்கு இயற்கைக் குணம் எனப்படும் சத்தி ஆகும். அந்த அருட்குணம் ஆகிய சத்தியை இன்றி, சிவம் இல்லை: சிவத்தை விட்டு சத்தி நீங்குவது இல்லை.

ஆதலால், உலகத்தில் புற இருளைக் கிரணத்தால் ஓட்டி, கண்களுக்கு ஒளியைச் செய்கின்ற சூரியன் போல, சத்தியின் அருட் குணமாக இறைவன் அந்த அருளால், உயிர்களுக்கு மயக்கத்தினை நீக்கி அனுக்கிரகம் (அருள்) செய்வன். சூரியனுக்கு இருளை ஓட்டுவது இயற்கையால் உள்ளது. எனவே, அதனால் அவனுக்கு ஆகக்கடவதோர் பயன் ஏதும் இல்லை. அதுபோல, இறைவனுக்கு அருட்குணம் மேம்பட்டு இருப்பது இயற்கையாய் உள்ளது, ஆகவே அதனால் இறைவனுக்கு ஆகக்கடவதோர் பயன் இல்லை.

ஐந்தாம் சூத்திரம் முடிந்தது

ஆறாம் சூத்திரம்

பதி இலக்கணம்

மேலே நான்காம் சூத்திரத்தில் பசு இலக்கணமும், ஐந்தாம் சூத்திரத்தில் பாச இலக்கணமும் கூறியமையால், இலக்கணம் கூறவேண்டியதாய் எஞ்சி நின்ற பதிப் பொருளுக்கு இலக்கணம் இந்தச் சூத்திரத்தால் கூறுகின்றார்.

சிவம் அறியப்படும் பொருளாகவும், அறியப்படாத பொருளாகவும் இன்றிச் சித்துச் சத்தாய் நிற்கும் என சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிவுறும் பொருளோ ஈசன்
அறிவுறாதவனோ என்னில்,
அறிபொருள் அசித்து அசத்தாம்;
அறியாதது இன்றாம்; எங்கும்
செறி சிவம் இரண்டும் இன்றிச்
சித்தொடு சத்தாய் நிற்கும்;
நெறிதரு சத்தின் முன்னர்
அசத்து எலாம் நின்றிடாவே; 240

தெளிவுரை:

ஆன்மாக்களுக்கு அறிவித்தலைச் செய்யும் சிவபெருமான், மனத்தால் கருதி கண்ணால் அறியப்படும் பொருளோ? எந்த வகையாலும் அறியப்படாத பொருளோ? என்றால்,

கருதிக் கண்ணால் அறியப்படும் பொருள் என்றால், அவ்வாறு அறியப்படும் உலகப் பொருள் போல, அறிவு இல்லாததாய் அழிந்து போவதும் ஆகும். அறியப்படாத பொருள் என்று சொன்னால் சூனியம் (இல்பொருள்) எனப்படும். மேலும் இறைவனை அறிவது முத்தி என்பதும் வீண் ஆகும்.

ஆதலால் கண்ணால் அறியப்படாததாய், மனத்தால் கருதி அறியப்படும் என்று கூறலாமோ என்றால், சடம் ஆகிய மனம் முதலிய கரணங்கள், சிவபெருமான் முன்னர் முனைத்து நிற்கும் வலிமை இல்லாததாய் நிற்கும் தன்மை உடையன. ஆதலால் அத்தகைய மனத்தால் அறியப்படும் என்பதும் பொருந்தாது. அப்படியானால் உண்மைதான் என்ன என்றால், எந்த இடத்திலும் வியாபகம் ஆகி நிற்கும் சிவம், கருவி கரணங்களால் அறியப்படாததாய், எந்த வகையாலும் அறியப்படாதது அல்லாதாய், சிவஞானத்தால் அறியப்படும் சித்துச் சத்தாய் நிற்கும்.

இவ்வாறு நிற்பது இறைவனுக்குச் ''சொரூப இலக்கணம்'' எனப்படும் சிறப்பு இயல்பு ஆகும்.

அழியும் பொருள் சடம் ஆவது போல, சடப்பொருள் அழியும் என்பது கூடாது; கூடும் என்று கூறினால், மலம் நித்தியம் என்பது இல்லாமற் போய் வழு ஆகும். ஆகவே, சடமாயும் பலவாயும் இருந்தால் அழியும் என்றும், சடமாயும் ஒன்றாயும் இருந்தால் அழியாது என்றும் அறிவாயாக.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''சித்துச்சத்து'' என்று இரண்டு இலக்கணம் கூறுவானேன் என்றால், பாச ஞானத்தால் அறியப்படாது என்றமையால், அதனால் அறியப்படும் சடம்போல் அன்றிச் சித்தாயும், பதிஞானத்தால் அறியப் படும் என்றமையால், பொதுவாக அறியப்படும் உலகப் பொருள்போல அழிவு இன்றிச் சத்தாயும் விளங்கும். உண்மையை உணர்த்துவதற்குச் ''சித்துச்சத்து'' என்றார். 'சத்து சித்து' என்று கூறாமல், 'சித்து சத்து' என்று ஏன் கூறினார் என்றால், பாச நீக்கத்தில் உயிர்க்கு முதற்கண் விளங்குவது சித்தும், அதில் அழுந்துவதால் சத்தும் அனுபவம் ஆகும் முறை பற்றியே ஆகும்.

அவ்வாறாயின் சத்து வேறு சித்து வேறோ என்றால், அன்று. அவ்விரண்டும் எதுபோல எனின், சூரியனும் ஒளியும் போல ஆகும். உலகப் பொருளை விட்டுச் சூரியனை நோக்குபவர்க்கு, முதலில் விளங் குவது ஒளியாகும். அந்த ஒளியை ஊடுருவிச் சென்ற பிறகு விளங்குவது சூரியன் ஆகும். ஒளி சித்துக்கு உவமை; சூரியன் சத்துக்கு உவமை, இரண்டும் பிரிப்பின்றி நிற்கும் ஒரு பொருளே ஆகும். ஆகவே, ''சத்துச் சித்து'' என்று கூறும் இடம் எல்லாம், பொருள் இருக்கும் முறை பற்றியே ஆகும். ''சித்துச் சத்து'' என்றது, பொருளின் அனுபவ முறை குறித்து என்பது கருதற்பாலது. இத்தகு வேறுபாடு எப்பொருளிடத்தும் உண்டு.

இந்தச் செய்யுள் சிவஞான போதம் ஆறாம் சூத்திரத்தில் கொண்ட இரு கூற்றோடும், ''அறியாதது இன்றாம்'' என்றதனை ஒரு கூறாக் கொண்டு முக்கூற்றினை உடையதாகும். அவற்றுள்,

முதற்கூறு	:	அறிபொருள் அசித்து அசத்தாம்.
இரண்டாம்கூறு	:	அறியாதது இன்றாம்.
மூன்றாம் கூறு	:	அறிவுறும் பொருளோ ஈசன் அறிவிலாதவனோ என்னில், நெறிதரு சத்தின் முன்னர் அசத்து எலாம் நின்றிடா (ஆகலான்), எங்கும் செறி சிவம் இரண்டும் இன்றி, சித்தொடு சத்தாய் நிற்கும்.

முதல் நூல் ஆகிய சிவஞான போதத்தில் இரண்டாம் கூற்றின் கண் ஐயப்பாடு முதலியன நிகழாது. எல்லாச் சமயத்தார்க்கும் ஒப்ப முடிந்தமையால், வேறு எடுத்து உரைக்காது விட்டார். ஆயினும், மந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உணர்வு உடையவர்க்கு அதன் கண் ஐயம் நிகழாமைப் பொருட்டு, இந்நூலாசிரியர் வேறு கூறாக எடுத்து ஓதிப் பரிகரித்தனர்.

ஆறாம் சூத்திரம்

முதல் அதிகரணம்

வேறாகச் சுட்டி அறியப்படுவதால், அறியப்படும் பொருள் அனைத்தும் அசத்து எனக் கூறுகின்றது.

ஆவதாய் அழிவது ஆகி
வருதலால், அறிவு தானும்
தாவலால் உலகு போகம்
தனு கரணாதி ஆகி
மேவலால் மலங்கள் ஆகி,
விரவலால் வேறும் ஆகி,
ஓவலால் அசத்தாம் சுட்டி
உணர்பொருள் ஆன எல்லாம். ***241***

தெளிவுரை:

விடயத்தை வேறாக நின்று கருதி உணரும் சுட்டறிவு, ஒரு பொருள் பற்றித் தோன்றியும், பின்னொரு பொருளைப் பற்றும் பொழுது முந்தின தோற்றம் கெட்டும் நிற்பதால், அந்த அறிவு தோன்றி அழிவது ஆகும். ஆதலினாலும், ஒன்றில் நிலை பெறாது அந்த அறிவு ஓர் இடம் விட்டு ஓர் இடம் தாவுவதாலும் தனு கரண புவன போகம் முதலியவைகளாய்ப் பல்வேறு வகைப்பட்டு அறிவதனாலும், அந்தப் பொருள்களின் நிலையாமையை ஆன்மா அறிவது இல்லை. ஆன்மாவுக்கு உண்மை ஞானம் வரும்பொழுது, சுட்டறிவு வேறுபட்டு ஒழிகிறது. எனவே சுட்டறிவு அசத்தே ஆகும். ஆகவே, அந்தச் சுட்டறிவினால் சுட்டி அறியப்பட்ட பொருள் அனைத்தும் அசத்து ஆவன அன்றி, அவற்றுள் ஒரு பொருள்கூட சத்து ஆவது இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேலைச் செய்யுளில் அறிவின் மேல் வைத்து அறியப்படும் பொருள் அசத்து என்று கூறினமையால் இந்தச் செய்யுளில், பொருளின் மேல் வைத்து அழிதல் தன்மை பற்றி, அறியப்படும் பொருள் அசத்து எனக் கூறுகின்றது

மண்தனில் வாழ்வும், வானத்து
அரசு அயன் மாலார் வாழ்வும்,
எண்தரு பூதபேத
யோனிகள் யாவும் எல்லாம்
கண்ட இந்திரமா சாலம்
கனாக்கழுது இரதம் காட்டி
உண்டுபோல் இன்றாம் பண்பில்
உலகினை அசத்தும் என்பர். 242

தெளிவுரை:

மேற்கூறியவாறு, அறியும் தன்மை பற்றிக் காணப்படும் பொருள் அசத்து ஆவதுபோல, பொருளின் தன்மை பற்றி ஆராயும்பொழுதும், அசத்தே ஆகும். எப்படி என்றால், மண்ணுலகில் உள்ள அரசர் வாழ்வும், விண்ணுலகில் உள்ள இந்திரன், பிரமா, விட்டுணு முதலியோர் வாழ்வும், பூத பரிணாமம் ஆகிய எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களுள் ஏனையவற்றுள் பொருந்திய வாழ்வும் ஆகிய காணப் படுவன எல்லாம் தோன்றும் பொழுதே இல்லையாய் மாறுபடுகின்ற இந்திர ஜாலம் போல்வன ஆகும்.

இடையிலே அழியும் கனவுக் காட்சி, கடும் வேனல் நீங்கும் காரணத்தால் அழியும் கானல் நீர் முதலியன போல, நெடுங்காலம் நிலைபெறுவன போல் தோன்றி, விரைவில் கெட்டு மறைந்து போகும். ஆதலால், அவ்வாறு கெட்டு ஒழிந்து போகும் தன்மை பற்றி, உலகப் பொருள் அனைத்தும் அசத்து எனக் கூறுவர்.

சற்காரிய வாதத்தில் ''உள்ளது போகாது; இல்லது தோன்றாது'' என்னும் முறைபற்றி, எல்லாம் உள் பொருளே அன்றி, ''அசத்து'' என்பது ஒன்று இல்லை என்று கூறியிருக்கவும், இந்த இடத்தில் அறியப் படும் பொருள் அசத்து என்று கூறியது முரணாதோ என்றால், முரணாது. ஏனென்றால், காரண ரூபமாய் ஒடுங்கி இருப்பதையே அசத்து என்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கூறுகிறோமே அன்றி, சற்காரிய வாதத்தில் காரியத்தின் அழிவு கூறப் படுதல் இல்லை. அஃதாவது, எந்த ஒரு பொருளும் அதன் காரியத்தில் தோன்றி கரணத்தில் ஒடுங்கும் என்பதே அன்றி, 'அசத்து' என்ற சொற்குப் பொருள் இல்லாமற் போய்விடும் என்பது பொருள் அன்று. எனவே, சற்காரிய வாதத்திற்கு முரணாமை அறியப்படும்.

ஆறாம் சூத்திரம்
இரண்டாம் அதிகரணம்

அறியாது இன்றாம் என்பது

அறியாத பொருள் உண்டு எனக் கொள்வோம் என்பவர்க்கு, அப்பொருள் வினை செய்பவனால் அறியப்படாமையால் உண்டு என்றல் பொருந்தாது எனக் கூறுகின்றது

உணராத பொருள் சத்து என்னில்,
ஒரு பயன் இல்லை தானும்
புணராது, நாமும் சென்று
பொருந்துவது இன்றாம்; என்றும்
தணவாத கருமம் ஒன்றும்
தருவதும் இல்லை; வானத்து
இணர்ஆர்பூந் தொடையும் யாமைக்கு
எழும் மயிர்க் கயிறும் போலும். 243

தெளிவுரை:

அறியப்படும் பொருள்கள் தோன்றி அழியக் காண்கிறோம். அது போல அறியப்படாத பொருளுக்குத் தோற்றக் கேடு முதலியன இல்லை. அதனால் அந்த அறியப்படாத பொருளைச் சத்து என்று கொண்டால் ஏற்படும் இழுக்கு என்ன என்றால்,

அவ்வாறு கொள்வதால் அந்த அறியப்படாத பொருள் நம்மைப் பொருந்தாது; நாமும் ஒருநாளும் அதனைப் பொருந்துவது இல்லை. ஆகவே, 'ஆகாயத்தில் பூ இருக்கிறது, ஆமைக்கு மயிர் உண்டு' என்று கொள்வதால் ஏதேனும் பயன் உண்டா? இல்லை அல்லவா? அதுபோல அறியப்படாத பொருளால் பெறக்கூடிய பயன் ஒன்றும் இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகாயத்திலும் ஆமையிலும் முறையே மலரும் மயிரும் தோற்றம் இன்றி, அதி சூக்குமமாக உள்ளன என்றும், கொள்ளக் கூடாதோ என்றால் கூடாது. ஏனென்றால், ஆகாய மலரிலிருந்து ஆக்கப் பட்ட மாலையையோ, ஆமை மயிரிலிருந்து ஆக்கப்பட்ட கயிறையோ யாரும் செய்ததாக அறிய முடியவில்லை. எனவே; ஆகாய மலர், ஆமை மயிர் முதலியன உண்டு எனக்கூறுவது பொருந்தாது.

ஆறாம் சூத்திரம்

மூன்றாம் அதிகரணம்

அறிவும் பொருளோ ஈசன், அறிவிலாதவனோ என்னில்
நெறிதரு சத்தின் முன்னர் அசத்து எலாம் நின்றிடா (ஆகலான்)
எங்கும் செறி சிவம் இரண்டும் இன்றி சித்தொடு சத்தாய் நிற்கும்.

அறியப்படுவதும் அறியப்படாததும் ஆகிய பரம்பொருள், அநிர்வசனமும் அன்று, மனம் வாக்குகளுக்கு எட்டுவதும் அன்று எனக் கூறுகின்றது

தத்துவம் சத்து அசத்துச்
சதசத்தும் அன்று என்றால் என்?
உய்த்து உணர்ந்து உண்டோ இன்றோ
என்றவர்க்கு உண்டு என்று ஓதில்,
வைத்திடும் சத்தே ஆகும்;
மனத்தொடு வாக்கு இறந்த
சித்துரு அது அசித்தாம்
மனத்தினால் தேர்வது எல்லாம். **244**

தெளிவுரை:

"அறியப்படுவதும் அறியப்படாமையும் அல்லாத பரம்பொருள் உள்ளதும் அன்று; இல்லதும் அன்று; உள்ளதும் இல்லதும் அன்று; வேறும் அன்று" என்று கூறும் அநிர்வசனமாகக் கொண்டால், உண்டாகும் இழுக்கு என்ன என்றால், அவ்வாறு ஆராய்ந்து உணர்ந்து அநிர்வசனம் என்று கூறப்படும் பொருள் உண்டோ இல்லையோ என்று வினாவும் பொழுது, 'உண்டு' என்றால் உள் பொருளாகவே முடியும்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

'இல்லை' என்றால் இல்லாத சூனியப் பொருளுக்குச் சொன்ன குற்றம் உண்டாகும். அந்தக் குற்றத்திற்கு அஞ்சி, உண்டு என்று ஒத்துக் கொண்டால்; பரம்பொருள் உள் பொருள் ஆவது அன்றி, அநிர்வசனம் அன்று என்பதாக முடியும்.

'உள்பொருள் என்னால் அறியப்படவேண்டும்' என்று கூறினாய் ஆயின், பரம்பொருள், மனம் வாக்குக் காயங்கள்ஆகிய பாச உணர்வைக் கடந்து நின்ற அறிவுடைப் பொருள் ஆதலின், அந்த மனம் வாக்குக் காயங்களைக் கொண்டு அதனை அறிய முடியாது. மனம் வாக்குக் காயங்களைக் கொண்டு, பரம்பொருள் அறியப்படும் என்று கூறினால், அவற்றால் அறியப்பட்டன எல்லாம், சடமாய் அழிவு எய்துவது போல, பரம்பொருளும் சடமாய் அழிவு எய்திவிடும். ஆதலால், பரம்பொருள் பாச அறிவால் அறியப்படாது என்பதை அறிவாயாக.

சிவபரம்பொருளை, அப்பரம்பொருளின் அருளினால், ஆன்மா பிரிப்பின்றி நின்று அறியும் எனக் கூறுகின்றது

அறிபொருள் அசித்தாய் வேறாம்
அறிவுறாப் பொருள் சத்து என்னில்,
அறிபவன் அறியான் ஆகில்
அது இன்று, பயனும் இல்லை;
அறிபவன் அருளினாலே
அனன்னியம் ஆகக் காண்பன்
அறிபொருள் அறிவாய் வேறாய்
அறிவு அருள்உருவாய் நிற்கும். **245**

தெளிவுரை:

மேலே கூறியதிலிருந்து, அறியப்படும் பொருள் சடமாய் அறிவதும், அறியப்படாத பொருள் உண்டு என்றால், அதனால் பயன் இல்லை என்பதும் பெறப்படும். எனவே, சிவபரம்பொருள் அறியப் படுவதும் அன்று, அறிய மாட்டாததும் அன்று என்று கூறினால் அவ்வாறு கூறுவது, உள்ளதும் அன்று இல்லதும் அன்று என்பது போல அநிரு வசனம் ஆகாதோ என்றால், மேலே சொன்னபடி அந்தப் பொருள் உண்டோ இல்லையோ என்று வினவும் பொழுது, 'உண்டு' என்பை ஆயின், அறியப்பட்ட பொருளாய், சடமாய் அழிவு எய்தும்; அறியப் படாத பொருட்குத் தோற்றக்கேடு முதலிய இல்லாமையால், இல்லாத பொருள்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உண்டு என்று கொள்வோம் என்பாய் ஆயின், அப்பொருள் அறிதற்கு உரிய ஆன்மாவால் அறியப்படுதல் வேண்டும், ஆன்மா அப்பொருளை அறியும் என்றால், அதனை இல்பொருள் என்று கூற முடியாது. அப் பொருளை ஆன்மா அறியமுடியாது என்றால், அவ்வாறு கொண்ட பொருளும் இல்லையாய் முடியும்; அதனால் பெறக்கூடிய பயனும் இல்லையாய் முடியும்.

எனவே பரம்பொருள் அறியப்படும் என்று கூறுவதும், அறியப் படாதது என்று கூறுவதும் குற்றம் ஆகும். அப்படியானால் உண்மைதான் என்ன என்றால், கூறுதும்.

''சிவம்அறியப்படுவது அன்று'' என்பதற்குக் கருவி கரணங் களால் அறியப்படுவதன்று என்று கொள்ளல் வேண்டும்.

''சிவம் அறியப்படாதது அன்று'' என்பதற்குச் சிவஞானத் தால்அறியப்படாததன்று என்று கொள்ளல் வேண்டும்.

இந்த முறைப்படி, பசு பாச ஞானங்களைக் கடந்து நின்று அறிவதற்கு வல்லமை உடைய ஒருவன், அந்தச் சிவப்பொருளை அப் பொருளோடு ஒன்று பட்டு நின்று, அப்பொருளின் அருளால் அறிவன்.

ஒன்றாய் நின்றால் அறிய முடியாதே? அறிய முடியுமாயின் ஒன்றாய் நிற்க முடியாதே? என்னும் ஐயப்பாடு நிகழ்தல் கூடும். இதற்கு விளக்கம் வருமாறு:

சிவபரம்பொருளை அறியும் அனுபவத்தில், ஆன்ம அறிவு நிகழ்வதற்கு, இறைவன் ஆன்மாவின் அறிவுடன் கலந்து ஒன்றாயும் அவன் அறியப்படுவதற்கு ஆன்மாவின் வேறாயும் அந்த அறிதல் தொழில் நிகழ்வதற்கு ஆன்மாவின் அறிவைச் செலுத்தி அவ்வறிவோடு உடனா யும், இவ்வாறு இறைவன் அத்துவிதமாய் நிற்பன்.

இஃது எது போல எனின், கண், சூரியனை அறியும் பொழுது, கண் ஒளியோடு சூரியன் கலந்து ஒன்றாயும், காணப்படுவதற்கு சூரியன் கண்ணின் வேறாயும், காணும் தொழில் நிகழ்வதற்கு சூரியன் கண் ஒளியைச் செலுத்தி உடனாயும் நிற்பது போல ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

யோக பாவனையால் இறைவனைக் காணக் கூடும் என்பவரை மறுத்து, ''அவன் அருளால் காண வேண்டும்'' என்பதை வலியுறுத்துகின்றது

பாவிப்பது என்னில் பாவம்
பாவகம் கடக்கில் பாவம்
பாவிக்கும் அது நான் என்னில்
பாவகம் பாவம் கெட்டுப்
பாவிப்பது என்னில் பாவம்
பாவனை இறந்து நின்று
பாவிக்கப் படுவது ஆகும்
பரம்பரன் அருளி னாலே. 246

தெளிவுரை:

இறைவனைத் தரிசிப்பதற்கு மேற்கூறியவாறு அவன் அருளால் பிரிப்பின்றி நிற்க வேண்டாம், யோக பாவனையினால் இறைவனைத் தரிசிக்க முடியும் என்றுகூறுவாய் ஆயின், அந்த பாவனை கருவிகளோடு கூடியது என்றால், அது சகல அவத்தை ஆகும். கருவிகளை நீங்கி நின்றது ஆயின், அது சகலத்தில் துரியாதீதம் எனப்படும் கேவல அவத்தை ஆகும். இரண்டும் இன்றி நின்று பாவிப்பது ஆயின், அது அநிர்வசனம் எனப்பட்டு, ஒன்றும் இல்லாத பாழாய் முடியும்.

ஆதலால், அவ்வாறு ஒன்றும் இன்றி, பாவனைக்கு எய்தாத அந்த பரம்பொருளைத், தன்னிடத்தில் வைத்து நானே அப்பரம் பொருள் என்று அப்பொருளை எய்தியதாகப் பாவிப்பன் என்பாய் ஆயின், அந்த பாவனை எப்படி இருக்கும் என்றால், கண்ணில் சூரியன் இருப்ப தாகவும், நாக்கில் சர்க்கரை இருப்பதாகவும் பாவிப்பதால், ஒளியும் தித் திப்பும் பொருந்தாதது போல, பயன் இல்லாததாய் முடியும். ஆதலால், அந்த பாவனை அனைத்தும் நாடக மாத்திரையே அன்றி, பரம் பொருளை அறிவதற்குச் சாதனம் ஆகாதாகும். ஆகவே, மேற் கூறியவாறு பிரிப்பின்றி நின்று, அவனருளால் அவனைக் காண்பதுவே அவனை அறிதற்கு ஏற்ற பாவனை ஆகும். (பாவனை – தியானம்).

''அநிர்வசனம்'' என்பது உறுதியாகச் சொல்லமுடியாதது. எவ்வாறு என்றால், வசனம் – சொல்வது; நிர்வசனம் – நிர்ப்பந்தம் என்பது போல் உறுதியாய்ச் சொல்வது; அநிர்வசனம் – உறுதியாச் சொல்ல முடியாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆணவமலம் ஆகிய குற்றம் நீங்கிய உயிரின் அறிவால், சிவனை அறியக் கூடும் என்னும் சிவசமவாதியை மறுத்து உரைக்கின்றது

அன்னியம் இலாமையானும்,
அறிவினுள் நிற்ற லானும்,
உன்னிய எல்லாம் உள்நின்று
உணர்த்துவன் ஆதலானும்,
''என்னது யான்'' என்று ஓதும்
இருஞ்செருக்கு அறுத்த லானும்,
தன்அறிவு அதனால் காணும்
தகைமையன் அல்லன் ஈசன். 247

தெளிவுரை:

மேலே சொன்னபடி, பாவனையான யோகத்தால் இறைவனை அறிய முடியாது; ஆயினும் ஆணவமலம் நீங்கிய பொழுது, ஆன்ம அறிவு தடைஇன்றி விளங்கும். ஆதலால், அந்த அறிவால் இறைவனை அறியமுடியும் என்பதே பொருந்தும். ''அவனருளால் அறிய வேண்டும் என்பது பொருந்தாது'' என்றால், அது பொருந்துமாறு இல்லை. ஏனென்றால், உயிரின் அறிவால் அறியப்படும் பொருள் உயிரின் வேறாய் இருக்க வேண்டும்.

சிவபெருமான், உயிரின் வேறு அல்லாமையால் ஒன்றாயும், அறிவிப்பதற்கு உயிர் அறிவின் உள்ளீடாக நிற்பதால் வேறாயும், அறிந்தவற்றில் செல்வதற்கு உயிர் அறிவின் உள்ளாக நின்று செலுத்துவதால் உடனாயும் நிற்கின்றான். இவ்வாறு நிற்கும் இந்நிலையுடைய பொருளை, வேறாய் நிற்கும் முறையால், தானாக அறிய முடியாது. ஒன்றாய் நிற்பதால், தன் அறிவாக அறிய முடியாது. உடனாய் நிற்பதால், வேறு பொருளாகப் பிரித்து அறிய முடியாது.

இவ்வாறு அறிய முடியாமையினாலே, ''யான் எனது'' என்னும் செருக்கால் அப்பரம்பொருளைப் பகுத்துஅறிய முடியாதாகும். மேலும், ''யான் அறிவேன்'' என்றதனால் மலம் நீங்கியதும் இல்லை. ஆதலால் இறைவன் உயிரறிவால்அறியப்படுவன் என்பது பொருந்தாது.

''ஒன்றாய்'' என்றதனால் உயிர் தனித்து நில்லாமையையும் 'வேறாய்'' என்றதனால், தனித்து நில்லாவிட்டாலும், இறைவனைஉயிர்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறிய முடியும் என்பதையும், ''உடனாய்'' என்றதனால், இறைவனை அறிவது கொண்டு, உயிருக்குச் சுதந்தரம் உண்டு என்று கொள்ள லாகாதோ என்னும் ஐயம் நீக்கப்பட்டது. எப்படி என்றால், இறைவனை உயிர்அறியும் பொழுதும், இறைவனுடன் இருந்துஅறியும் என்பதையும், அப்படியானால் ''உயிர் அறிந்தது'' என்று எப்படிக் கூறுவது என்றால், அறிவதன் பயன் உயிர்க்கு ஆவதால், அதுநோக்கி என்பதையும் இந்தச் செய்யுளால் உய்த்து உணர்ந்து கொள்ளத்தக்கது.

பிரித்து அறிய முடியாத நிலையில் ஒன்று ஆதலும், வேறு ஆதலும், உடன் ஆதலும் உள என்பதற்கு ஏது கூறுகின்றது

ஒன்றுஎனும் அதனால் ஒன்றுஎன்று
உரைப்பது உண்டு ஆகையாலே,
நின்றனன் வேறாய்த் தன்னின்
நீங்கிடா நிலைமை யாலே
பின்றிய உணர்வுக்கு எட்டாப்
பெருமையன், அறிவின் உள்ளே
என்றும் நின்றிடுத லாலே,
இவன் அவன் என்னல் ஆமே. 248

தெளிவுரை:

இறைவன் ஒன்றே என்று வேதங்கள் கூறுகின்றன. இவ்வாறு கூறவும் மேற்கூறியவாறு, உயிரோடு ஒன்றாய் நிற்றல், வேறாய் நிற்றல், உடனாய் நிற்றல் ஆகிய முத்திறமும் உயிரும் உளவாகும் என்று கூறியதை எப்படி அறிய முடியும் என்றால், கூறுதும்.

உயிரும் சிவமும் ஒன்று என்று சொன்னால், அவ்வாறு சொல்கிறவன் ஒருவன் உண்டு ஆதலால், அந்தச் சிவம் சொல்பவனுக்கு வேறாய் நிற்பது பெறப்படும். அது கொண்டு வேறு என்று சொன்னால், அவ்வாறு வேறாக அறிவதற்கு, உயிருக்குச் சுதந்தர அறிவுஇல்லை; எனவே, அறிவுக்கு அறிவாய் நின்று அறிய வேண்டும் ஆகலின், உடனாதல் பெறப்படும். அவ்வாறு அறியும்பொழுது, அந்த அறிவின் உள்ளாக நீரின் இடத்து ஒன்றாகக் கலந்து இருக்கும் நிழல்போல, உயிரே சிவம் எனும்படி கலந்து நிற்கும். ஆதலால், ஒன்றாதல் பெறப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆதலால், இவ்வாறு உயிரோடு பிரிப்பின்றி அத்துவிதமாய் நிற்கும் இறைவனைக் காண வேண்டுமானால், அவன் அருளால் காண்பதே தக்கது ஆகும். இஃது எதுபோல எனின், கண்ணொளியோடு பிரிப்பின்றி நின்று, கண்ணுக்கு விடயங்களைக் காணும்படி உபகரிக்கும் சூரியனைக் கண் காண வேண்டுமானால், அவன் கிரணத்தால் காண்பதைப் போன்றது ஆகும்.

நீரின் இடத்து வெளி (ஆகாயம் – வெற்று இடம்) இல்லை; எனவே நீரில் நிழல் உண்டு என்பது எப்படி அறியப்படும் என்றால், நீரினுள் இயங்கும் மீன் தவளை போன்ற உயிர்களுக்கு நீர் இடம் கொடுத்திருப்பதால், நீரின் கண் வெளிஉண்டு என்பது பெறப்படும். வெளி உண்டு ஆதலால், நீரில் நிழல் உண்டு என்பதும் பெறப்படும். அந்த நிழல் வேறாக நில்லாமல், நீரோடு கலந்து நிற்பதால், நீர்போலக் காணப்படாதது ஆயிற்று. இதனைச் சிவஞான போதத்தில் எட்டாம் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்து மூன்றாவது வெண்பா உரையில் காணலாம்.

''அத்துவிதம்'' பற்றிய விளக்கம்:

அத்துவிதம் என்னும் சொல்லில் முன்னின்ற ''அ'' கரம், அன்மை, இன்மை, மறுதலை என்னும் மூன்று பொருளை உணர்த்தும். எடுத்துக்காட்டாக, ''அப்பிராமணன்'' என்று கூறும் பொழுது, பிராமணன் அல்லாத சத்திரிய வைசிய சூத்திரரைக் குறிக்காமல், பிராமணனாய் இருந்தும் பிராமணத் தன்மை இல்லாமையைக் குறிக்கும். ஆதலால் ''அ'' கரம் அன்மைப் பொருளில் வந்தது.

''அமலம்'' என்று சொல்லும் பொழுது, மலம் இன்மையைக் குறிக்கும். எனவே, இந்தச் சொல்லில் உள்ள ''அ'' கரம் இன்மைப் பொருளில் வந்தது.

''அநீதி'' என்று கூறும்பொழுது, நீதியின் மறுதலையைக் குறிக்கிறது. எனவே, இந்தச் சொல்லில் உள்ள ''அ'' கரம் மறுதலைப் பொருளில் வந்தது. இந்த மூன்றனுள்

இன்மைப் பொருள் கொண்டு பேசும்பொழுது, இரண்டாவது ஆகிய பசு, பாசப் பொருள்கள் இல்லை. பிரமப் பொருள் ஒன்றே உள்ளது என்பர் ஏகான்ம வாதிகள். ''ஒன்றே உள்ளது'' என்று உணர்கின்ற வேறு ஒரு பொருள் உள்ளமையால் இவர் கருத்து பொருந்தாது என்கிறோம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மறுதலைப் பொருள் கொண்டு பேசும்பொழுது ''நீதி'' யின் மறுதலை ஆகிய ''அநீதி'' யின் உண்மை பெறப்படும். படவே நீதி, அநீதி என்னும் இரண்டு பொருள்களின் உண்மை கொள்ளப்படும். நீதி வேறு; அநீதி வேறு; இரண்டும் வேறு வேறு ஆதல் போல, ஒன்று ஆகிய கடவுளும் இரண்டாவது ஆகிய உயிரும் வேறு வேறு ஆகி நிற்கும் என்பர் மாத்துவர்; அஃதாவது இரண்டு பொருள்களுக்கும் தொடர்பு இல்லை என்பர். இரண்டும் தொடர்பு இன்றிவேறு வேறாக நிற்கும் என்று கொண்டால், கடவுள் முழு நிறைவு உடையவர் என்று கூறுவது பொருந்தாததாக முடியும்.

அது மட்டும் அன்று. கடவுளின் உதவி இன்றித் தனித்து நிற்கும் சுதந்தரம் உயிர்க்கு உண்டு என்றும் கொள்ள வேண்டி வரும். இவ்வாறு கூறுவது நூல் பிரமாணத்தோடும் அனுபவத்தோடும் முரண்படும். எனவே மாத்துவர் கருத்தும் பொருந்தாது.

இனி, பாஞ்ச ராத்திரிகள் கூறுவன பற்றிச் சிந்திப்போம். மேலே கூறிய இன்மைப் பொருள் கொண்டு, கடவுள் ''வியாபகப் பொருளே'' என்றும் (வியாபகம் – முழு நிறைவு உடைமை) ''உயிரும் பாசமும் கடவுளில் அடக்கம்'' என்றும் கூறும் பாஞ்சராத்திரிகள், ''உயிரும் பாசமும் பல ஆயினாற் போல கடவுள் பல அல்ல'' என்றும் கூறுவர். ''ஒன்று'' என்று கூறுவதற்கு வடமொழியில் ''ஏகம்'' என்னும் சொல் இருப்பதால், அதனை விட்டு ''அத்துவிதம்'' என்னும் சொல்லால் உய்த்து உணரவைக்க வேண்டாம் என்று பாஞ்சராத்திரிகள் மறுக்கிறார்கள். இந்த இடத்தில், ''பிரமம் ஏகம்'' என்று ஓர் இடத்திலும், ''பிரமம் அத்துவிதம்'' என்று பிறிதோர் இடத்திலும் கூறப்படுகிறது. எனவே, ''அத்துவிதம்'' என்பதும் ''ஏகம்'' என்பதும் ஒரு பொருட் சொற்கள் ஆகும் என்பர் பாஞ்சராத்திரிகள்.

''ஏகமேவ அத்துவ தீயம் பிரமம்'' என்று ஓர் இடத்திலேயே ''ஏகம்'' எனவும், ''அத்துவிதம்'' எனவும் கூறுவதால் ''ஏகம்'' என்பதும், ''அத்துவிதம்'' என்பதும் வேறு வேறு பொருளைக் குறிக்கும் என்னும் கருத்தை மறுக்கும் பாஞ்சராத்திரிகள், அவ்வாறு கூறியிருப்பது உறுதி பயக்கும் அடுக்குமொழி ஆகும் என்பர். அடுக்கு மொழியாய் இருந்தால் ''ஏகம் ஏகம்'' என்றாவது, ''அத்துவிதம் அத்துவிதம்'' என்றாவது இருக்க வேண்டுமே அன்றி, இருவேறு சொற்களாய் இருக்க முடியாது. எனவே, ''ஏகமேவ அத்துவ தீயம் பிரமம்'' என்னும் வாக்கியத்திற்குப் பொருள், ''ஏகம் ஆகிய பிரமம் பல உயிர்களோடும் கலந்து நிற்கும்''

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்பதே ஆகும். ஆகவே, ''அத்துவிதம்'' என்னும் சொல்லுக்குக் ''கடவுள் ஒன்றே'' என்று கொண்ட பாஞ்சராத்திரிகள் கருத்தும் பொருந்தாது.

இனி, ''அத்துவிதம்'' என்னும் சொற்குப் பொருள்தான் என்னையோ? என்றால் கூறுதும்.

அகரம், பொருட் பெயர்ச் சொல்லில் வரும் பொழுதுதான், அன்மை, இன்மை மறுதலை என்னும் முப்பொருளைப் பயக்கும். எண்ணுப் பெயர்ச் சொல்லில் வரும் பொழுது, அன்மைப் பொருள் ஒன்றே அன்றிப் பிறபொருள் பயவாது. எடுத்துக்காட்டாக, எண்ணுப் பெயர்மேல், ஏகத்தின் முன்னாகவும் துவிதத்தின் முன்னாகவும் அன்றி, ஏனைய எண்ணுப் பெயர்களுடன் அகரம், முன் நிற்பது இல்லை. அவற்றுள் ஏகத்தின் முன்னாக நின்ற அகரம், அன்மைப் பொருள் பற்றி, ''அநேகம்'' என்று பொருள் தரும்; அதுபோல துவிதத்தின் முன் நின்ற அகரமும், ''இரண்டு அன்மை'' யைக் குறிக்கும் என்பது தெளிவாகும்.

இக்கருத்தே பற்றி, அன்மைப் பொருள் கொண்டு, பிராமண னாக இருந்தும் பிராமணத் தன்மை இல்லாததுபோல கடவுளும் உயிர் களும் பொருள் தன்மையால் இரண்டாக இருந்தும், இரண்டின் தன்மையும் வேறாகப் பிரித்து அறிய வாராமல், கண்ணொளியும் சூரியன் ஒளியும் போலக் கலந்து நிற்கும்.

இக்கருத்துப் பற்றியே, அத்துவிதம் என்பது, வேறுபட்ட இரண்டு பொருள்கள் தம்முள் வேறுபடாமல் நிற்கும் தொடர்புச் சிறப்பினைக் குறிக்கும் என்கிறது சைவ சித்தாந்தம். இதனைச் சிவஞான சுவாமிகள்,

> *"அத்துவிதமாவது, பேதப்பொருள் இரண்டும் தம்முள்*
> *அபேதம் ஆதற்கு உரிய சம்பந்த விசேடம்"*

என்று சிவஞானபோதச் சிற்றுரையில் பதினொன்றாம் சூத்திரத்தில் கூறியருளியுள்ளார்கள்.

பதி, பசு, பாசம் என்னும் பொருள் மூன்று ஆக இருக்கையில், ''அத்துவிதம்'' என்று இரண்டின் மேல் வைத்துக் கூறியதன் கருத்து என்ன என்றால், பாசம் – ஆணவம், கன்மம், மாயை என முத்திறப்பட்டு, அவற்றுள் ஆணவம் அநாதியே ஆன்மாவுடன் கலந்தும், கன்மமும் மாயையும் இறைவன் உடைமைப் பொருளாகவும் நிற்பதால், பதி, பசு என்னும் இரண்டு பொருளின் மேல் வைத்துக் கூறினார் எனக் கொள்க.

ஆறாம் சூத்திரம் முடிந்தது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சாதன இயல்

ஏழாம் சூத்திரம்

தோற்றுவாய்:

நான்காம் சூத்திரம் முதல் மூன்று சூத்திரத்தாலும் முறையே பசு இலக்கணம், பாச இலக்கணம், பதி இலக்கணம் கூறி முடித்தமையால், அவ்வாறு இலக்கணம் கேட்டபொழுது, அந்த முப்பொருள்களுள் 1.பதிப்பொருளை அடையதவதற்கு உரிமை உடையது எது? 2. அதற் காகச் செய்ய வேண்டுவது யாது? 3. செய்யும் முறை எவ்வாறு? எனும் ஐயங்கள் நிகழும் அல்லவா? அந்நிகழ்ச்சி பற்றி, சாதன இயல் மூன்று சூத்திரத்தால் கூறத் தொடங்குகிறார்.

மேலே ஆறாம் சூத்திரத்தில், பதி பாசத்தை அறியாது, பாசம் பதியை அறியாது என்று கூறினமையால், அந்த இரண்டினையும் அறிதற்கு உரியது எது என்னும் ஐயத்தைப் போக்குதல் பொருட்டு, இந்த ஏழாம் சூத்திரம் எழுந்தது. இந்தச் சூத்திரத்தில் பதி, பாசம் இரண் டினையும் அறிதற்கு உரிமை உடையது பசு எனக் கூறுகின்றார்.

ஆறாம் சூத்திரத்தில் ''பதி இலக்கணம்'' கூறியபொழுது, ஆன்மாவால் பதி அறியப்படும் என்று கூறப்பட்ட பின்பு, இந்தச் சூத்திரத் திலும் அதற்கு உரிமை உடையது ஆன்மா என்று கூறுவது, ''கூறியது கூறல்'' ஆகாதோ? ஆகாது. எப்படி என்றால், பதி அறியப்படும் பொருளோ, அறியப்படாத பொருளோ என்னும் தடைக்கு விடையாக, ''ஆன்மாவால் அறியப்படும் பொருள்'' என்று அங்குப் பதிக்கு இலக் கணம் கூறினார். இங்குப் பதியை அடையும் முறைமையில், ''சாதனம் செய்து அடைதற்கு உரியது ஆன்மா'' என்று அதிகாரி இயல்பு கூறுகிறார். எனவே கூறியது கூறல் ஆகாமை பெறப்படும்.

பாசத்தைப் பதி அறியாது, பதியைப் பாசம் அறியாது எனக் கூறுகின்றது

அனைத்தும் சத்து என்னில், ஒன்றை
அறிந்திடாது; அசத்தால் என்னில்
முனைத்திடாது; அசத்துச் சத்தின்
முன் இருள் இரவி முன் போல்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நினைப்பது இங்கு அசத்தே என்னில்
சத்தின்முன் நிலாமை யானும்
தனைக்கொடு ஒன்று உணர்தலானும்
தான் அசத்து உணராது அன்றே. 249

தெளிவுரை:

ஆறாம் சூத்திரத்தில் சொன்னபடி, சத்து அசத்தினையும், அசத்து சத்தினையும் அறியாது என்றால், அறியப்படாத பொருள் பயன் இல்லை எனப்பட்டு வழு ஆகும். ஆகவே, அந்த இரண்டினையும் அறியும் பொருள் யாது என்னும் வினா எழும்.

சத்து ஆகிய சிவமே, அசத்து ஆகிய பாசம் அனைத்தையும் அறியும் என்று சிவாத்துவித சைவர் கூறுவர். சத்து ஆகிய சிவம் வியாபக அறிவு ஆதலால், எல்லாவற்றையும் (எவற்றையும்) உடனாய் நின்று ஒருசேர அறிந்து நிற்பது அன்றி, ஒன்றையும் தனித்தனியாகப் பிரித்து அறியாது. இவ்வாறு அவர்களிடம் மறுத்த பொழுது, அவ்வாறு சிவம் வியாபக அறிவு ஆயினும் உயிரின் பொருட்டு அசத்து ஆகிய கருவி கரணங்களைக் கூடி நின்று பகுத்து அறிய முடியும் என்று கூறுவர்.

சூரியன் முன் இருள்போல, சிவ சந்நிதியில் அசத்து ஆகிய கருவி கரணங்கள் முனைத்து நிற்கமாட்டா. ஆதலால் சிவம், கருவி கரணங்களின் இடமாக நின்று, பகுத்து அறியும் என்றும் கூற முடியாது. இவ்வாறு கூறியபொழுது, விகாரம் இன்றி நிற்கும் ஆன்மாவின் சந்நிதியில் அசத்து ஆகிய கருவியே, சிவகரணமாய் நின்று சத்து ஆகிய சிவத்தை அறியும் என்று சிவசங்கிராந்த வாதிகள் கூறுவர்.

அப்படியானால், மேலே சொன்னபடி, 1. அசத்து ஆகிய கருவிகள் சிவசந்நிதியில் முனைத்து நில்லாமையானும், 2. அந்தக் கருவியும் உயிர் அறிவதற்குத் துணையாய் நிற்பதன்றி, அதற்குத் தனக்கு என அறிவு இன்மையானும், 3. அந்தக் கருவிகள் சிவகரணமாய் நின்று சத்து ஆகிய சிவத்தை அறியும் என்று கூறவும் முடியாது.

இவ்வாறு சத்து அசத்தையும், அசத்து சத்தையும் அறியாது என்பது பெறப்பட்டது. படவே, இந்த இரண்டு பொருளின் வேறாம் எஞ்சி நின்ற உயிர்ப் பொருளே இவ்விரண்டினையும் பகுத்து அறியும் என்பது தெளிவாயிற்று.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்தச் செய்யுள் முதல் நூல் ஆகிய சிவஞான போதம் ஏழாம் சூத்திரம் போல், முக்கூற்றினை உடையது. அவற்றுள்,

முதல் கூறு : ''அனைத்தும் சத்து என்னின்...... இரவி முன் போல்'' (சத்து அசத்தை உணராது)

இரண்டாம் கூறு : ''நினைப்பது இங்கு அசத்தே.... அசத்து உணராதன்றே'' (அசத்து சத்தை உணராது)

மூன்றாம் கூறு : பதி பாசம் இரண்டனையும் உயிர் அறியும் என்பது

இந்த முக்கூற்றினுள், முன்னை இரு கூற்றிலும் விரிக்கக் கூடியதான தடைவிடைகள் இல்லாமையின், அவற்றை இந்த முதல் செய்யுளினால் உணர்த்தியதோடு நிறுத்தி ஏனைய மூன்றாம் கூற்றை, மூன்று செய்யுள்களினால் விரிக்கின்றார்.

ஏழாம் சூத்திரம்
மூன்றாம் அதிகரணம்

பதி பாசம் இரண்டினையும் ஆன்மா அறியும் எனவும், அவ்விரண்டினையும் அறியும் முகத்தால் ஆன்மா தன்னை அறியும் எனவும் கூறுகின்றது

சத்து அசத்து அறிவது ஆன்மாத்
தான் சத்தும் அசத்தும் அன்று;
நித்தனாய்ச் சதசத்து ஆகி
நின்றிடும் இரண்டன் பாலும்;
ஒத்துஉடன் உதித்து நில்லாது;
உதியாதும் நின்றிடாது;
வைத்திடும் தோற்றம் நாற்றம்
மலரினில் வருதல் போலும். 250

தெளிவுரை:

சத்தும் அசத்தும் மேற்கூறியவாறு, ஒன்றினை ஒன்று அறிவதற்கு உரிமை இல்லாமையால், அவ்விரண்டினையும் அறிவது ஆன்மாவே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆகும். அந்த ஆன்மா தன்னை அறியுமோ அறியாதோ என்று வினவினால், சத்தையும் அசத்தையும் ''இது சத்து'', ''இது அசத்து'' எனத் தனித்து அறிவது போல், ஆன்மா தன்னைத் தனித்து அறியமாட்டாது.

அவ்வாறு அறியப்படாமையால், ஆன்மா சூனியமும் அன்று. மலரின் வாசனை, மலர்போல விளங்கித் தோன்றாமலும், சூனியம் அல்லாமலும், மலரில் அடங்கித் தோன்றுவது போல, சத்து அசத்து என்னும் இரண்டின் வேறு ஆகிய ஆன்மாவும் சத்தோடு கூடி தன்னைச் சத்தாகவும், அசத்தோடு கூடி தன்னை அசத்தாகவும் அறியும். அவ்வாறு அறிவதால், ஆன்மா ''சதசத்து'' என்று சொல்லுதற்கு உரிமை உடையது. இதிலிருந்து ஆன்மா யாதானும் ஒன்றைச் சார்ந்து நிற்பது அன்றித், தனித்து நில்லாது என்பது அறியப்படும்.

பதி சூக்குமசித்தும், பசு தூலசித்துமாய் நிற்பதால், பசுவைப் பாசம் பற்றும் என்றும், அந்தப் பற்று அநாதியே நிகழ்வது என்றும், அந்தப் பற்றே பதிபாசம் இரண்டினையும் பசு அறிவ தற்குக் காரணம் என்றும், பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுக்கு உவமையும் கூறுகின்றது

சுத்த மெய்ஞ்ஞான மேனிச்
சோதிபால் அசத்து அஞ்ஞானம்
ஒத்துஉறா குற்றம் எல்லாம்
உற்றிடும் உயிரின் கண்ணே
சத்து உளபோதே வேறாம்;
சதசத்தும் அசத்தும் எல்லாம்
வைத்திடும் அநாதி ஆக
வாரிநீர் லவணம் போலும். 251

தெளிவுரை:

பதியும் பசுவும் சித்துப் பொருள். அப்படி இருக்கும் பொழுது பதியின் முன் முனைத்து நில்லாத பாசம், பசுவினால் அறியப்படுவதாய் பசுவின் முன் முனைந்து நிற்பதற்கு என்ன காரணம்? கூறுதும்.

பதியும் பசுவும் சித்து என்னும் சாதி ஒற்றுமையால் பொது வகையால் ஒக்கும் என்றாலும், அவற்றுள் உண்மை ஞானமே சொரூபமாக உடைய பதி சூக்கும சித்து ஆதலால் பதியின் முன் பாசம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முனைத்து நில்லாது. பசு தூல சித்து, ஆகவே பசுவின் முன் பாசம் முனைத்து நிற்கும். உயிர்க்கு (பசு) இந்த இயல்பு எந்தக் காலத்தில் உண்டாயிற்று என்றால் சத்தாகிய சிவம் என்று உள்ளதோ அன்றே சத சத்தாகிய உயிர்களும் உள்ளன; அன்றே உயிர்களை அசத்து ஆகிய பாசம் பற்றி நிற்கிறது. இவ்வாறு நிற்பது எதுபோல எனின், நீருக்கு இடம் கொடுத்து இருக்கும் ஆகாயம் ஆகிய கடலும், கடலில் உள்ள நீரும், நீரில் உள்ள உப்பும் போல, சிவமும் உயிரும் பாசமும், தொடக்கமில் காலம் தொட்டு உள்ளன.

ஆகாயம் ஆகிய கடலும், நீரும், உப்பும் அநாதியே ஓரிடத்தில் உள்ளன. அவற்றுள் உப்பு, ஆகாயத்தைப் பற்றாமல் நீரைப் பற்றி நிற்கும். உப்பு ஆகாயத்தைப் பற்றாமைக்குக் காரணம், ஆகாயம் சூக்குமமாய் இருப்பதனாலேயே ஆகும். உப்பு நீரைப் பற்றுவதற்குக் காரணம், நீர் தூலமாய் இருப்பதனாலேயே ஆகும். அதுபோலவே, பதி பசு பாசம் மூன்றும் அநாதியாய் ஓரிடத்தில் இருந்தாலும், பாசம் சூக்குமம் ஆகிய பதியைப் பற்றாது; தூலம் ஆகிய பசுவைப் பற்றி நிற்கும். அவ்வாறு பற்றுவதற்குப் பசுவின் தூலத் தன்மையே காரணம் ஆகும்.

இந்தப் பாசப்பற்றே, பதியைப் பசு அறிவதற்குக் காரணம் ஆயிற்று. எப்படி என்றால், பாசத்தைப் பற்றி நின்றதால் துன்பம் அடைந்த உயிர், துன்ப நீக்கத்தை வேண்டி, பாசத்தின் நின்றும் நீங்கிப் பதியைப் பற்றி நின்று, பதியை அறியலாயிற்று.

சிவம் சூக்கும சித்து ஆவதற்கும் சீவன் தூல சித்து ஆவதற்கும் காரணம், பற்றும் தன்மை இன்மையும், பற்றுந் தன்மை உண்மையுமே எனக் கூறுகின்றது

அறிவிக்க அறிதலானும்;
அழிவு இன்றி நிற்றலானும்
குறிபெற்ற சித்தும் சத்தும்
கூறுவது உயிர்க்கு; ஈசன்
நெறி நித்த முத்த சுத்த
சித்து என நிற்பன் அன்றே,
பிறிவிப்பன் மலங்கள் எல்லாம்
பின் உயிர்க்கு அருளினாலே. 252

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சிவம் சூக்கும சித்து என்பதும், சீவன் தூல சித்து என்பதும் எதனால் அறியப்படுகின்றன என்றால், உயிர் தன் அறிவு தொழிற்பட வேண்டுமாயின், சகல நிலையில் கருவி முதலிய துணையையும், சுத்த நிலையில் திருவருள் துணையையும் இன்றி முடியாமையால், சீவன் தூல சித்து எனப்படுகின்றது; அவ்வாறு அறிந்து என்றும் அழிவு இன்றி நிற்பதால் தூலசத்தும் ஆகும்.

சிவம் தனக்கு ஒரு துணை வேண்டாது, தானே அறியும் முறைமையினை உடையது; ஆதலால் அது சூக்கும சித்து ஆகும். உயிர்க்கு மலத்தை அருளால் நீக்கித் தன் உண்மையினை அறிவிக்கும் துணை உடையது ஆகலின் சூக்கும சத்தும் ஆகும்.

தூல சித்து என்பது, பிற பொருள் ஆகிய தூலத்தைக் கொண்டு அறியும் காரணத்தால் வந்தது. இது பிற ஒளியைக் கண்டு அறியும் கண் ஒளி போல் ஆகும். சூக்கும சித்து என்பது, பிற பொருள் ஆகிய தூலம் வேண்டாது தானே அறியும் காரணத்தால் வந்தது. இது தானே அறிகின்ற சூரிய ஒளி போல் ஆகும்.

இந்த நூலின் 251–ஆவது செய்யுளில், பதி, பசு, பாசம் மூன்றுக்கும் கடல், நீர், உப்பை உவமை கூறியது, அந்த மூலப் பொருள்களின் இருப்புக்கும், பாசம் பசுவைப் பற்றுவதற்கும், பதியைப் பற்றாமைக்கும் என்பது அறியப்படும்.

இந்தச் செய்யுளில் கூறிய சூரிய ஒளி கண் ஒளி உவமை அந்த முப்பொருள்களின் இலக்கணம் ஆகிய வியாபகத்திற்கும், பாசம் பதியைப் பற்றாமல் பசுவைப்பற்றுவதற்குக் காரணம், பற்றும் தன்மை பசுவிற்கு உள்ளது, பதிக்கு இல்லை என்பதனாலேயே ஆகும்.

எப்படி என்றால், கடல் நீர் உப்பு உவமை, பதி பசு பாசம் மூன்றும் அநாதியே உள்ளன என்பதையும், பாசம் பதியைப் பற்றாது பசுவைப் பற்றும் என்பதையும் உணர்த்தும்.

சூரியன், ஒளி பதிக்குப் பூரண வியாபகம் உண்டு என்பதையும், கண் ஒளி பசுவுக்கு ஏகதேச வியாபகம் உண்டு என்பதையும் உணர்த்தும். கண் ஒளியை மறைக்கும் இருளுக்கும் சமவியாபாகம் காணப்படுவது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

போல, பல உயிர்களோடும் கலந்து நிற்கும் பாசத்திற்குச் சம வியாபகம் உண்டு என்பதை உணர்த்தும்.

''சமவியாபகம்'' என்பது, மறைக்கப்படும் பொருளின் ஆற்ற லுக்குக் குறையாமலும், கூடாமலும் அதன் அளவாக நிற்பதைக் குறிக்கும்; குறைந்தால் ஒரு காலத்தில் தானே நீக்குதல் கூடும்; கூடினால் எக்காலத்திலும் எவராலும் நீக்க முடியாது. ஆகவே, நீக்கப்படும் பாசம் சம வியாபகமாய் நின்றது. இந்த விதமாக, பதி பசு பாசம் என்னும் முப் பொருள்களின் இருப்புக்கும் இலக்கணத்திற்கும் கூறிய உவமை வேறுபாடுகளைத் தெளிவாகப் புரிந்து கொள்வது நல்லது.

ஏழாம் சூத்திரம் முடிந்தது

எட்டாம் சூத்திரம்

தோற்றுவாய்:

ஏழாம் சூத்திரத்தால் பதிப்பொருளை அடைவதற்கு உயிர் உரிமை உடையது எனக் கூறியதனால், அந்த உயிர் பதிப்பொருளை எவ் வாறு அடையும் என்னும் ஐயம் நிகழும் அல்லவா? அந்நிகழ்ச்சி பற்றி செய்ய வேண்டுவது இது என்று கூறுவதற்கு எழுந்தது எட்டாம் சூத்திரம்.

அடைவதற்கு உரிய உரிமை தனக்கே உண்டு என்பதை உணர்ந்த உயிர்க்கு, பதியை அடைவது ஆகிய அந்தப் பேறு தனக்கு வேண்டும் என்பதையும், அந்தப் பேறு அடைவதற்குச் சிறந்த சாதனம் இது என்பதையும், அந்தச் சாதனம் எவ்வாறு வரும் என்பதையும் அறிந்தால் அன்றி, பதியை அடைதற்கு உரிய மன எழுச்சி கூடாதாகும். ஆகவே, உயிர்க்கு மன எழுச்சி உண்டாகும் பொருட்டு 1. பதியை அடைய வேண்டியது அவசியம் என்றும், 2. அதற்குச் சிறந்த சாதனம் இது என்றும், 3. அது ஞான சற்குருவால் வரும் என்றும் மூன்று வகையாகப் பிரித்து, செய்ய வேண்டுவதை இந்தச் சூத்திரத்தால் கூறுகின்றார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவன் குருவாகி வந்து உணர்த்துவன் என சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது

மன்னவன்தன் மகன்வேடர் இடத்தே தங்கி
வளர்ந்தவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்அவனும் ''என்மகன் நீ'' என்று அவரின் பிரித்துப்
பெருமையொடும் தானாக்கிப் பேணுமாப்போல்
துன்னிய ஐம்புல வேடர் சுழலில்பட்டுத்
துணைவனையும் அறியாது, துயர் உறும் தொல் உயிரை
மன்னும் அருள் குருவாகி வந்து அவரின் நீக்கி
மலம் அகற்றித் தானாக்கி மலர் அடிக் கீழ்
வைப்பன். 253

தெளிவுரை:

அரசகுமாரன் ஆகிய ஒருவன், பிள்ளைப் பருவத்து மடமையால், வேடரிடத்தில் சேர்ந்து அவ்வேடன் வசமாய் நின்று, தன் சாதிக்கு உரிய பெருந்தகைமையினை இழந்து இழிதொழில் செய்து வளர்ந்து, தந்தை ஆகிய அரசனையும் தன்னையும் அறியாது மயங்கி நின்றான். அதன் பிறகு தந்தை ஆகிய அந்த அரசன் வந்து, மகனைப் பார்த்து, ''நீ வேட குமாரன் அல்லன்; என் மகன்'' என்று அறிவுறுத்தி, அந்த வேடரிடம் இருந்து அவனை நீக்கி, அரசகுமாரனுக்கு உரிய பெருந்தகைமையுடன், அரசன் ஆகிய தான் ஆகும் வண்ணம் செய்து அந்த அரசகுமாரனைப் போற்றினான்.

அதுபோலவே, நிலைபெற்ற உயிர் தன் நிலையிலிருந்து வேறுபட்டு, நெருங்கிய ஐம்பொறியாகிய வேடருடைய சுழலில் பட்டு, அறிவினை இழந்து தன்னை அறியாமல் மட்டும் அன்றி தலைவனையும் அறியாமல் வருந்துவதை அறிந்து, அந்த உயிர் செய்த மிகுந்த தவ முதிர்ச்சியால் இரங்கி நித்த முத்த சுத்த சித்து எனப்படும் தலைவன் ஆகிய அந்த ஈசன், குரு வடிவம் கொண்டு எழுந்தருளி வந்து, தன்னையும் தலைவனையும் அறியும் வண்ணம் உணர்த்தி, அந்த ஐம்பொறியிலிருந்து நீங்குவதற்கு, அதனோடு கூடும்படி செய்த ஆணவமல வலியைக் கெடுத்து, அதிலிருந்து மீட்டிப் பழைய நிலை ஆகிய தன் வண்ணம் ஆக்கி, அந்த உயிரை மலர்போலும் தனது திருவடிக்கீழ் வைத்து வாழ்விப்பன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்தச் செய்யுள் முதல் நூலாகிய சிவஞான போத சூத்திரம் எட்டாம் சூத்திரம் போல், நான்கு கூற்றை உடையது. அவற்றுள்,

முதற்கூறு	:	குருவாகி வந்து உணர்த்தி.
இரண்டாம் கூறு	:	மன்னும் அருளால் உணர்த்தி. ...
மூன்றாம் கூறு	:	மன்னவன் தன் மகன் ... ... துயர் உறும் தொல் உயிர்.
நாலாம் கூறு	:	அவரின் நீக்கி, மலம் அகற்றி, தான் ஆக்கி மலரடிக்கீழ் வைப்பன்.

முதல் கூற்றிலும் இரண்டாம் கூற்றிலும் "உணர்த்தி" என்பது வருவிக்கப்பட்டது.

எட்டாம் சூத்திரம்

முதல் அதிகரணம்

குருவாகி வந்து உணர்த்தி என்பது

உணர்த்தும் முறையில், தீக்கையால் உணர்த்துவன் ஆதலின், அந்தத் தீக்கை சாதார தீக்கை, நிராதார தீக்கை என இருவகைப்படும் எனவும், சாதார தீக்கைக்கு உரியார் சகலரும், நிராதார தீக்கைக்கு உரியார் பிரளயாகலரும் விஞ்ஞானகலரும் எனவும் கூறுகின்றது

உரைதரும் இப்பசு வர்க்கம் உணரில் மூன்றாம்;
உயரும் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர்
நிரையில் மலம், மலம் கன்மம், மலம் கன்மம் மாயை
நிற்கும் முதல் இருவர்க்கும் நிராதாரம் ஆகிக்
கரையில் அருட்பரன் துவிதா சந்நிதி பாதத்தால்
கழிப்பன் மலம் சகலர்க்குக் கன்ம ஒப்பில்
தரையில் ஆசான் மூர்த்தி ஆதாரம் ஆகித்
தரித்து ஒழிப்பன் மலம் சதுர்த்தா சத்திநிபாதத்தால்.

254

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

பதியை அடைவதற்கு உரிமை உடையது என மேற்கூறிய ஆன்மாக்கள் எண்ணிறந்தன. ஆராயும்பொழுது அந்த ஆன்மாக்கள், உயர்ந்த விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகைப்படுவர். அவருள் விஞ்ஞானகலர் ஆணவமலம் ஒன்று உடையவர். பிரளயாகலர் ஆணவமலம் கன்மமலம் இரண்டும் உடையவர். சகலர் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலமும் உடையவர்.

அவருள் மும்மலங்களும் உடைய சகல வருக்கத்து உயிர்கள், இருவினை ஒப்பால் மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்னும் நால்வகையான சத்திநிபாதத்தைப் பொருந்துவதற்கு உரியவர். ஆதலால் சகல வர்க்கத்து உயிர்களுக்கு இருவினை ஒப்பு வந்தபொழுது, பொருந்திய சத்திநிபாதத்திற்கு ஏற்ப உணர்த்த வேண்டுவது முறையாகும். ஆகவே, அவ்வாறு உணர்த்துவதற்கு இந்த உலகில் இறைவன், குருமூர்த்தியை ஆதாரமாகக் கொண்டு தோன்றி, சாதார தீக்கை செய்து மலத்தை நீக்குவன்.

பிரளயாகலர் ஆகிய உயிர்கள், தீவிர, தீவிரதர சத்திநி பாதத்தைப் பொருந்துவதற்கு உரியர், ஆதலால் அவருக்கு இறைவன், மான், மழு, நான்கு தோள்களையுடைய திருமேனியோடு தோன்றி, நிராதார தீக்கை செய்து மலத்தை நீக்குவன். விஞ்ஞானகலர் ஆகிய உயிர்கள், தீவிரதர சத்திநிபாதத்தைப் பொருந்துவதற்கு உரியவர். ஆதலால்அவருக்கு அளவிடுதற்கு அரிய கருணை வடிவு ஆகிய இறைவன், அவர் அறிவின் உள்ளீடாக நின்று உணர்த்தி, உணர்த்தும் முறையில் நிராதார தீக்கை செய்து மலத்தை நீக்குவன்.

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என ஆன்மாக்களை வகுத்தற்கு என்ன காரணம்? கூறுதும். ''கலர்'' என்பது கலையை உடையவர் எனப் பொருள்படும். படவே கலை முதலிய தத்துவங்களோடு கூடிய ஆன்மாக்களைச் சகலர் என்றும், கலை முதலிய தத்துவங்களைப் பிரளயத்தில் நீக்கப்பெறும் ஆன்மாக்களை பிரளயாகலர் என்றும், கலை முதலிய தத்துவங்களை விஞ்ஞானத்தால் நீக்கப்பெறும் ஆன்மாக்களை விஞ்ஞானகலர் என்றும் பிரித்தவாறு ஆகும். ''விஞ்ஞானாகலர்'' என்பது செய்யுளில் ''விஞ்ஞானகலர்'' என்று நின்றது. பிரளயத்தில் கலை அற்றவர் ''பிரளயாகலர்'' எனப்படுவது போல், விஞ்ஞானத்தால் கலை அற்றவர் ''விஞ்ஞானகலர்'' எனப் படுவதே பொருத்தம் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விஞ்ஞானகலர் பற்றிய விளக்கம்:

அநாதி கேவலத்தில் ஆன்மாக்கள் எல்லாம், ஆணவமலத்தால் மறைப்புண்டு கிடக்கும். மலத்தின் சக்தி பல ஆதலால் மறைப்பும் பலவேறு வகைப்படும். அவ்வாறு மறைப்புண்டு கிடக்கும் ஆன்மாக் களுக்கு, மல நோயை தீர்க்கச் சிவபெருமான் திருவுளம் கொண் டருள்வன். அந்நிலையில், கன்ம மல மாயா மலங்களைக் கூட்டாமலே விஞ்ஞானத்தால் ஆணவமலத்தை நீக்குதற்கு உரிய மறைப்பினை உடைய ஆன்மாக்களுக்கு, விஞ்ஞானத்தால்ஆணவமலத்தை நீக்குவன். விஞ்ஞானம் என்பது விசேட ஞானம். அஃதாவது, பாச ஞானம் பசு ஞானங்களைக் காட்டிலும் மேம்பட்ட பதிஞானம் ஆகும்.

இந்தப் பதி ஞானத்தை இறைவன் எவ்வாறு நின்று உணர்த் துவான் என்றால், அறிவினுள் அறிவாய் நின்று உணர்த்துவன். அவ்வாறு உணர்த்துவதற்குக் கலை முதலிய தத்துவங்களால் ஆக்கப் படும் சரீரமும் புவனமும் இன்றியமையாது வேண்டப்படும். படவே, சுத்தமாயா காரியம் ஆகிய கலாதி தத்துவங்களால் ஆக்கப்பட்ட சரீரத்தைக் கொடுத்து, அசுத்தமாயைக்கு மேலேஅவர்களைத் தங்கும்படி செய்வன். இவ்வாறு சுத்த மாயையில் உள்ள கலாதி தத்துவங்களைப் பெற்று விஞ்ஞானத்தால் அந்த தத்துவங்களில் கட்டுப்படாது இருப்பதனால், அவர்களுக்கு விஞ்ஞானகலர் எனப் பெயர் ஆயிற்று.

இத்தகைய ஆன்மாக்களுக்கு ஆணவமல பந்தம் இருப்பதால் இவர் ஒருமலம் உடையவர் எனப்படுவர். இந்த விஞ்ஞானகலரும் பக்குவர், அபக்குவர் எனஇருதிறப்படுவர். பக்குவர் இறைவன் பதி ஞானத்தை உணர்த்திய அப்பொழுதே சிவசாயுச்சியத்தைப் பெறுவர். அபக்குவர் உத்தமர், மத்திமர், அதமர் என முத்திறப்படுவர். அவர்களுள் உத்தமர், அணுசதாசிவர் முதலியோராய் சதாசிவ தத்துவத்திலும், மத்திமர், அட்டவித்தியேசுவரர் முதலியோராய் ஈசுவர தத்துவத்திலும், அதமர், மூன்றரைக்கோடி தேவர்களாய் சுத்தவித்தியா தத்துவத்திலும் வசித்து அதிகாரம் உடையவராய், பிரளயத்திலும், மத்தியிலும் முத்தி அடைவர். இந்த விஞ்ஞானகலருக்கு எடுத்த பிறவியையன்றி, வேறு பிறவி கிடையாது.

இந்த இடத்தில் கூறிய தேவர்கள் வேறு; சகல வருக்கத்துத் தேவர் கள் வேறு. (இந்த விஞ்ஞானகலர்ஆன்மாக்கள் ஆகிய தேவர் களுக்குத் தலைவன். ஆதலினாலேயே, சிவபெருமான் ''மாதேவன்'' எனப்படு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கிறான். சகல வருக்கத்து ஆன்மாக்கள் ஆகிய தேவர்களுக்குத் தலைவன் தேவேந்திரன் ஆவான்).

பிரளயாகலர் பற்றிய விளக்கம்:

கன்ம மலத்தைக் கூட்டி ஆணவமலத்தை நீக்குதற்குரிய மறைப்பினையுடைய ஆன்மாக்கள் பிரளயாகலர் எனப்படுவர். இவர்களுக்கு அசுத்தமாயா காரியம் ஆகிய கலாதி தத்துவங்களால் ஆக்கப்பட்ட சரீரத்தைக் கொடுத்து, அந்த அடுத்த மாயையில் தங்கும்படி செய்து, பிரளயத்தில் இறைவன் தடத்தத் திருமேனி கொண்டு அருள் செய்வன். இவர்களுக்குப் பிரளயத்திற்குப் பிறகு, பின் பிறவி இல்லாமையால் பிரளயாகலர் எனப் பெயர் ஆயிற்று. விஞ்ஞானகலரில், பிரளயத்தில் முத்தி அடைபவருக்கும் இவர்களுக்கும் வேற்றுமை என்ன என்றால், விஞ்ஞானகலருக்குக் கன்மம் இல்லாமையால், பிரளயம் வரை ஒரு பிறவியே அன்றி மறு பிறவி இல்லை. பிரளயாகலருக்குக் கன்ம மலம் உண்மையால், ஒரு பிரளயத்திலேயே சில பிறவிகள் உள்ளன. இவையே வேற்றுமை ஆகும். பிரளயாகலர் ஆணவம் கன்மம் என்னும் இருமலம் உடையவர்.

சகலர் பற்றிய விளக்கம்:

கன்மமலம் மாயா மலத்தைக் கூட்டி, ஆணவமலத்தை நீக்குவதற்கு உரிய மறைப்பினை உடைய ஆன்மாக்கள் சகலர் எனப்படுவர். இவர்களுக்கு அசுத்த மாயா காரியம் ஆகிய கலாதி தத்துவங்களால் ஆக்கப்பட்ட சரீரத்தைக் கொடுத்து, பிரகிருதி மாயையில் தங்கும்படி செய்து, பக்ககூம் வந்த காலத்தில், இறைவன் குருமூர்த்தியாய்த் தோன்றி நின்று அருள் செய்வன்.

ஆணவம், கன்மம் என்னும் இரண்டு மலங்களோடு, இவர்கள் மாயா மலம் உடையவர் ஆதலின், மயக்கத்தினால் பிரளயம் வரை பல பிறவிகளை எடுத்து, பிரளயகாலத்தில் கலாதிகளுடன் ஒடுங்கிக் கிடந்து, புனர் உற்பவம் ஆகும் காலத்தில் மீண்டும் தோன்றி, இவ்வாறே பிறப்பு இறப்புக்களில் பட்டு உழல்வர். எனவே, சகலர் எனப்பட்டனர். தேவர் முதல் எறும்பு ஈறாக உள்ள உயிர்கள் சகலர் எனப்படும்.

சகலரில் பிரளயாகலரும் விஞ்ஞானகலரும் பற்றிய விளக்கம்:

சகலரிலும் பிரளயாகலத் தன்மை, விஞ்ஞானாகலத் தன்மை சித்தித்தல் கூடும். அஃதாவது பிரகிருதி மாயா புவனப் பற்று நீங்கப் பெற்றவர், சகலரில் பிரளயாகலர் ஆவர். இவருக்கு இறைவன் தடத்தத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருமேனியைத் தரிசித்தல் கூடும், பிரகிருதி மாயா புவனம், அசுத்த மாயா புவனம் ஆகிய இரு புவனங்களின் பற்றும் ஞானத்தால் நீங்கப் பெற்றவர், சகலரில் விஞ்ஞானாகலர் ஆவர். இவருக்கு இறைவன் அறிவுக்குள் அறிவாய் நின்று உணர்த்துவன். சகலரில் விஞ்ஞானா கலத்துவம் வந்தால் மேல் பிறவி இல்லை. சகலத்தில் பிரளயாகலத்துவம் வந்தால் சில பிறவி உண்டு. மேலே கூறிய விஞ்ஞானாகலர் பிரளயாகலர் அநாதியாக உள்ளவர். சகலரில் விஞ்ஞானாகலர் பிரளயாகலர் ஆதியாய் உள்ளவர். (இந்தப் பத்தியைக் கூர்ந்து நோக்குக. முயன்றால் இந்தப் பிறவியிலேயே முத்தியைப் பெறலாம் என்பது இதனால் பெறப்படும்).

''சத்தி நிபாதம்'' என்பது சத்தி பதிதல் எனப் பொருள்படும். அஃதாவது திருவருட் சத்தியின் விளக்கம், ஆன்ம அறிவின்கண் உண்டாதல் ஆகும். அது மந்ததரமாக உண்டாகுதல் என்பதற்குப் பொருள். அதிக மந்தமாக என்பது ஆகும். அஃதாவது அருட்சத்தியின் விளக்கம் சிறிது உண்டாகி, அதற்கு ஏற்றவாறு சிறிது மலவாசனை நீங்குவதாகும். இதனை ''மந்ததரம்'' முதல் நான்கு வகையாகப் பிரித்ததன் நோக்கம் வருமாறு:

மலவாசனையை நான்கு கூறு ஆக்கி, அவ்வாறே திருவருட் சத்தியையும் நான்கு கூறு ஆக்கி, ஒரு கூறு திருவருட் சத்தி தோன்ற, ஒரு கூறு மலவாசனை நீங்குவதை, ''மந்ததர சத்தி நிபாதம்'' என்பர். இருகூறு திருவருட் சத்தி தோன்ற இருகூறு மலவாசனை நீங்குவதை ''மந்த சத்தி நிபாதம்'' என்பர். மூன்று கூறு திருவருட் சத்தி தோன்ற மூன்று கூறு மலவாசனை நீங்குவதை ''தீவிர சத்திநிபாதம்'' என்பர். நான்கு கூறு திருவருட் சத்தி தோன்ற, மலவாசனை முற்றும் விடுபடுவதை, ''தீவிரதர சத்திநிபாதம்'' என்பர். இதுபோலவே, மலபரிபாகமும் நான்கு வகைப்படும் என்பது அறியத்தக்கது. ''மலபரிபாகம்'' என்பது மலத்தினது ஆற்றல் தேய்தலைக் குறிக்கும்.

சகல வர்க்கத்து உயிர்கள், பிரகிருதி மாயா புவன வாசிகள் ஆதலால், நால்வகை சத்திநிபாதத்தையும் பொருந்துதற்கு உரியர். பிரளயாகலர், விஞ்ஞானாகலர் ஆன்மாக்களுக்கு, பிரகிருதி மாயா புவனம் இல்லாமையால், மந்ததரம், மந்தம் என்னும் இருவகைச் சத்திநிபாதம் அவர்களுக்குக் கிடையாது.

''இருவினை ஒப்பு'' என்பது குறித்து, இந்நூலின் 57-ஆவது செய்யுள் தெளிவுரையில் கூறி இருக்கின்றமையால், அதுபற்றி அந்த இடத்தில் கண்டுகொள்க.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''சாதார தீக்கை'' என்பது, ஆதாரத்தோடு கூடிநின்று செய்யும் தீக்கை எனப்படும். அஃதாவது இறைவன், குருமூர்த்தியை ஆதாரமாகக் கொண்டு நின்று செய்யும் தீக்கை ஆகும்.

''நிராதார தீக்கை'' என்பது, ஆதாரம் இன்றி நின்று செய்யும் தீக்கை ஆகும். அஃது இருவகைப்படும். அவற்றுள் ஒன்று, இறைவன் தடத்த திருமேனியோடு முன்னின்று செய்யும் தீக்கை; மற்றொன்று, சொரூபத் திருமேனி ஆகிய ஞான சொரூபியாய் ஆன்மாவின் அறிவினுள் நின்று உணர்த்துவது ஆகிய தீக்கை ஆகும்.

தீக்கையின் வகைகளைப் பற்றிக் கூறுகின்றது

பலவிதம் ஆசான், பாச மோசனம்தான் பண்ணும்
படி நயனத்து அருள் பரிசம் வாசகம் மானதமும்,
அலகில் சாத்திரம், யோகம், அவுத்தி ராதி,
அநேகம் உள; அவற்றின் அவுத்திரி இரண்டு திறனும்;
இலகுஞானம், கிரியை என ஞானம் மனத்தால்
இயற்றுவது கிரியை எழில் குண்டம் மண்டலாதி
நிலவுவித்துச் செய்தல், கிரியாவதிதான் இன்னும்
நிர்பீசம் சபீசம் என இரண்டு ஆகி நிகழும். 255

தெளிவுரை:

சகல வர்க்கத்து உயிர்களுக்கு மலபரிபாகம், மந்ததரம் முதலாக பலவகைப்படுவதால், அவற்றிற்கு ஏற்ப ஆசிரியன் ஆணவமலத்தைக் கெடும்படி செய்யும் சாதார தீக்கை இருவகைப்படும். அவற்றுள் திருவருள் நோக்கம், பரிசம், வாக்கு, பாவனை, நூல், யோகம் என ஆறும் ஒருவகை. அந்த ஆறுடனே கூடிய அவுத்திரி, சாம்பவம் மற்றொரு வகை. அவுத்திரி தீக்கைக்கு உரியவர் அல்லாதவருக்கு, அந்த ஆறு தீக்கை மட்டும் செய்யப்படும்.

அந்த அவுத்திரியும் ஞானவதி, கிரியாவதி என இருதிறப்படும். அவற்றுள் அழகினை உடைய குண்டம், மண்டலம், அங்கி, நெய் முதலிய அனைத்தும் மனத்தால் கற்பித்துக் கொண்டு விதிப்படி, ஆகுதி முதலிய கிரியையினை அகத்தே செய்வது ஞானவதி ஆகும். அவை அனைத்தும் புறத்தே அமைத்துக்கொண்டு அக்கிரியையினைப் புறத்தே செய்வது கிரியாவதி எனப்படும். இந்த இருவகைப்பட்ட அவுத்திரி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தீக்கையும், நிர்ப்பீசம், சபீசம் என இருவகைப்பட்டு, ஞானத்தில் நிர்ப்பீசம், ஞானத்தில் சபீசம், கிரியையில் நிர்ப்பீசம், கிரியையில் சபீசம் என நால்வகைப்படும்.

திருவருள் நோக்கம், திருவருள் பரிசம் முதலியன பற்றிய விளக்கம்:

1. நோக்கம் – சட்சு தீக்கை எனப்படும். அஃதாவது கண்ணால் பார்வை இடுதல். இந்தப் பார்வை, அனுக்கிரகம் என்றும் நிக்கிரகம் என்றும் அவ்விரண்டும் இல்லாத பொதுவான அழகு என்றும் மூன்று வகைப் படும். அவற்றுள் அனுக்கிரகப் பார்வையே சட்சு தீக்கை ஆகும். அஃதாவது ஆசிரியன் உண்மைப் பொருளிலே சித்தத்தை வைத்து அந்தச் சித்த விருத்தியோடு கூட மாணாக்கனுடைய பந்தம் நீங்கும்படி பார்த்தல்.

2. பரிசம் – பரிச தீட்சை எனப்படும். அஃதாவது ஆசிரியன் தனது வலதுகையில் சிவபெருமானைப் பாவனை செய்து பூசித்து, அந்தக்கையால் மாணாக்கன் தலையைப் பரிசித்து, அஃதாவது கையைத் தலைமேல் வைத்து, பாசம் நீங்கும்படி செய்தல்.

3. வாக்கு – வாசக தீட்சை எனப்படும். அஃதாவது மாணாக்கனது வருணத்திற்கும் ஆச்சிரமத்திற்கும் ஏற்றவாறு, பஞ்சாக்கர மந்திரத்தை உபதேசித்தல்.

4. பாவனை – மானத தீட்சை எனப்படும். அஃதாவது ஆசிரியன் தன்னுடைய யோகாப்பியாசத்தால், மாணாக்கனுடைய இருதயத்தில் பிரவேசித்து (நுழைந்து) அந்த மாணாக்கன் அறிவில் சிவமாம் தன்மை விளங்கும்படி செய்தல்.

5. நூல் – சாஸ்திர தீட்சை எனப்படும். அஃதாவது ஞான சாத்திரப் பொருளை எல்லாம் தொகுத்து, பதி, பசு, பாசங்களினுடைய இலக்கணங்களையும், சிவ சீவர்களுடைய ஐக்கியத்தையும் நூல் வழியாகப் போதித்தல். (சிவ சீவர்கள் – சிவமும் ஆன்மாக்களும்)

6. யோகம் – யோக தீட்சை எனப்படும். அஃதாவது, சிவ யோகத்தை அப்பியாசம் பண்ணும்படி உபதேசித்தல்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

7. அவுத்திரி – அவுத்திரி தீட்சை எனப்படும். அஃதாவது ஓமத்தோடு கூடிச் செய்யும் தீட்சை ஆகும்.

8. சாம்பவம் – சத்தி தீட்சை எனப்படும். அஃதாவது சத்தியோடு கூடிச் செய்யும் தீட்சை ஆகும்.

9. ஞானவதி – ஞானவழி – ஞானமார்க்கம்.

10. கிரியாவதி – கிரியா வழி – கிரியா மார்க்கம்.

11. நிர்ப்பீசம் – பீசம் இல்லாதது. அஃதாவது செபிக்கக்கூடிய மந்திரத்திற்கு மூலம் ஆகிய பீசாக்கரம் இன்றி, மந்திரத்தை மட்டும் உபதேசிப்பது நிர்ப்பீசம் ஆகும்.

12. சபீசம் – பீச எழுத்தோடு கூட மந்திரத்தை உபதேசிப்பது.

நிர்பீச தீட்சைக்கு அதிகாரி இவர் எனவும், அந்தத் தீக்கையின் இலக்கணம் இது எனவும், அது நிரதிகார தீக்கை எனச் சொல்லப்பட்டு, சமயம், விசேடம், நிருவாணம் என மூன்றாய் விளங்கும் எனவும் கூறுகின்றது.

பாலரொடு வாலீசர், விருத்தர், பணிமொழியார்,
பலபோகத்தவர், வியாதிப் பட்டவர்க்குப் பண்ணும்
சீலம் அது நிர்ப்பீசம், சமயா சாரம்;
திகழ்சுத்தி சமயி புத்திரர்க்கு நித்தத்து
ஏலும் அதிகாரத்தை இயற்றித் தானும்
எழில் நிரதி காரை என நின்று இரண்டாய்
விளங்கும்;

சாலநிகழ் தேக பாதத்தினோடு
சத்திய நிர்வாணம் எனச் சாற்றுங் காலே. 256

(கொண்டுகூட்டு) நிர்ப்பீசம் பாலரொடு வாலீசர், விருத்தர், பணி மொழியார், பல போகத்தவர், வியாதிப்பட்டவர்க்கு திகழ் சமய ஆசாரம், சுத்தி நித்தத்து ஏலும் அதிகாரத்தை இயற்றி எழில் நிரதிகாரை என நின்று அதுதானும் சமய புத்திரர்க்குப் பண்ணும் சீலம் சாற்றும் காலே, சால நிகழ்தேக பாதத்தினோடு சத்திய நிர்வாணம் என இரண்டாய் விளங்கும்).

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மேற்கூறிய நிர்பீசம், சபீசம் என்னும் இரண்டனுள் நிர்பீசத் தீக்கை என்பது, மலபரிபாகம் உடையவராயும், சமய ஆசாரங்களை அனுட்டிக்கும் ஆற்றலும், கர்மத்தை அனுட்டிக்கும் அறிவும் இல்லாத வரும் ஆகிய பாலர்கள், அறிவு இல்லாதவர்கள், வயது முதிர்ந்தவர்கள், மாதர்கள், போக அனுபவம் மிகுதியும் உடையவர்கள், நோயினை உடையவர்கள் முதலியவர்களுக்குச் செய்யப்படுவது ஆகும்.

செய்யும்பொழுது, அவர்கள் அனுபவிக்கவேண்டிய கன்மங்களை ஆகுதியினால் (ஓமாக்கினி) ஆசிரியன் சுத்தி செய்கிறான். அனுட்டிக்கவேண்டிய சமய ஆசாரங்களையும் அவ்வாறே ஆகுதியால் சுத்தி செய்து கன்மங்களையும் சமய ஆசாரங்களையும் அனுபவத்திற்கு வராமலும் செய்ய வேண்டுவது இல்லாமலும் நீக்குகிறான்; நித்திய கன்ம அளவில் இயன்றவாறு அனுட்டிக்கும் அதிகாரத்தைக் கொடுத்து, நைமித்திக கன்மத்திலும் காமிய கன்மத்திலும் அதிகாரம் கொடுக்கப்பட மாட்டாது. நைமித்திக கன்மத்திற்கும், காமிய கன்மத்திற்கும் அதிகாரம் இல்லாமையால், இந்த தீக்கை நிரதிகார தீக்கை எனப்படும்.

இவ்வாறு செய்யப்படும் அவுத்திரி தீக்கை சமயம், விசேடம், நிர்வாணம் என மூன்று ஆகும். அவற்றுள் சமயம் சமயிக்கும் விசேடம் புத்திரருக்கும் செய்யப்படும். நிர்வாணம் சத்தியோ நிர்வாணம், அசத்தியோ நிர்வாணம் என விளங்கும். சத்தியோ நிர்வாணம் என்பது, தீட்சை செய்த அப்பொழுதே முத்தியைத் தருவது ஆகும். அசத்தியோ நிர்வாணம் என்பது பிராரத்த தேகம் ஒழிந்தபிறகு முத்தியைத் தருவது ஆகும். இந்த நிர்வாண தீக்கைமோட்ச விருப்பம் உடையவர்க்குச் செய்யப்படுவது.

''நித்திய கன்மம்'' என்பது, நாள்தோறும் செய்யவேண்டிய சந்தியா வந்தனம் முதலிய கிரியைகளைக் குறிக்கும். ''நைமித்திக கன்மம்'' என்பது, விசேட காலம் ஆகிய கிரஹணம் முதலிய புண்ணிய தினங்களில் சிறப்பாகச் செய்யும் செபம், ஆராதனம் முதலியவற்றைக் குறிக்கும். காமிகம் என்பது சித்தி முதலிய பயனை வேண்டிச் செய்யும் விசேடக் கிரியை ஆகும்.

''சமய தீக்கை'' என்பது சைவ சமயத்தில் பிரவேசிக்கச் செய்யும் தீக்கை ஆகும். ஆகவே, இந்தத் தீக்கையைப் பெற்றவர் ''சமயி'' எனப்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

படுவர். ''விசேட தீக்கை'' என்பது சமயப் பிரவேசம் செய்தவனுக்குச் சிவபூசை முதலிய ஆராதனங்கள் செய்யும்படி செய்வது ஆகும். ஆராதிப்பதால் இவர் ''புத்திரர்'' எனப்படுவார்.

(ஆராதனை – பூசை) ''நிர்வாண தீக்கை'' என்பது, பந்த பாசம் அனைத்தையும் அறவே நீக்கிச் சிவபெருமான் திருவடியை அடையும்படி செய்வது ஆகும்.

மந்ததர பக்குவம் உடையவர்க்குச் ''சமய தீட்சை'' ஒன்று செய்து, சரியை நெறியினை அநுட்டிக்கும்படி செய்வர். மந்தபக்குவம் உடைய வர்க்கு சமயம் விசேடம் இரண்டும் செய்து கிரியை நெறியைக் கடைப் பிடிக்கும்படி செய்வர். தீவிர பக்குவம் உடையவர்க்கு அவ்விரண்டு தீக்கையையும் ஒரேநேரத்தில் செய்து யோக நெறியினை ஒழுகும்படி செய்வர். தீவிரதர பக்குவம் உடையவர்க்கு நிருவாண தீக்கை செய்து ஞான நெறியினை அநுட்டிக்கும்படி செய்வர். சபீச தீட்சைக்கும் இந்த முறையே கடைப்பிடிக்கப்படுகிறது.

மேலும் தீக்கை வகைகளைப் பற்றிக் கூறுகின்றது

ஓதி உணர்ந்து ஒழுக்கநெறி இழுக்கா நல்ல
உத்தமர்க்குச் செய்வது, உயர்பீசம், இவர் தம்மை
நீதியினால் நித்திய நைமித்திக காமியத்தில்
நிருத்தி; நிரம்பு அதிகாரம் நிகழ்த்துவதும் செய்து
சாதக ஆசிரியரும் ஆக்கி, வீடு
தருவிக்கும் உலோக சிவ தருமிணி என்று இரண்டாம்
ஆதலினால், அதிகாரையாம் சமயம், விசேடம்,
நிருவாணம், அபிடேகம் இவற்று அடங்கும்
அன்றே. 257

தெளிவுரை:

உயர்ந்த சபீச தீக்கை, மலபரிபாகத்தோடு கூட கற்று அறிந்து ஒழுக்க நெறியில் வழுவாது நிற்கும் ஆற்றல் மிகுந்த உத்தமருக்குச் செய்யப்படுவது ஆகும். அவ்வாறு செய்யும் பொழுது, அதிகாரியி னுடைய பக்குவத்தை அறிந்து அநுட்டிக்க வேண்டிய சமய ஆசார கன்மம் மட்டும் அனுட்டிக்கும்படி நிறுத்தி, உலகபோக அனுபவத்திற்கு உரிய ஏனைய கன்மங்களைச் சுத்தி செய்து, அஃதாவது அனுபவத்திற்கு வர ஒட்டாமல் சிவாக்கினியால் கெடுத்து ஒழித்து, நித்தியம், நைமித்திகம், காமியம் என மூன்றினும் பேரதிகாரம் உடையவராகச் செய்யப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வாறு செய்வதால் இந்தத் தீக்கை சாதிகார தீக்கை எனவும் பெயர் பெறும். இந்தத் தீக்கைப் பேறு உடையவர் சாதகரும் ஆசிரியரும் என்று இருதிறப்படுவர். அவ்வாறு இரு திறப்படுவதற்குக் காரணம், தீக்கையின் வேறுபாடே ஆகும். அந்த வேறுபாடு ஆவது; இந்த சபீச தீக்கை, சமயம், விசேடம், நிர்வாணம், அபிடேகம் என நால்வகைப்படும். அவற்றுள், சமயம், விசேடம், நிர்வாணம் மட்டும் செய்யப்பெற்றவர் சாதகர் ஆவர்; அந்த மூன்றுடன் அபிடேகமும் செய்யப் பெற்றவர் ஆசிரியர் ஆவர்; இதுவே அந்த வேறுபாடு ஆகும்.

இவ்வாறு செய்யும்படியான இந்தத் தீக்கையும், இல்லறம் உடையவருக்கு சிகையோடு கூடிச் செய்வது உலகதருமிணி எனப்படும். துறவறம் உடையவருக்குச் சிகாச்சேதத்தோடு செய்வது சிவதருமிணி எனப்படும். உலக தருமிணியை பவுதிக தீக்கை என்றும், சிவதரு மிணியை நைட்டிக தீக்கை என்றும் கூறுவர். இவ்வாறாக நிர்ப்பீசம் சபீசம் என்னும் இருவகைத் தீக்கையினுள், சமயம், விசேடம், நிர்வாணம், அபிடேகம் என்னும் பேதம் எல்லாம் அடங்கும்.

''சமய ஆசார கன்மம்'' என்பது, சந்தியா வந்தனம், சிவபூசை முதலிய கருமங்களைக் குறிக்கும். ''சாதி கார தீக்கை'' என்பது, அதி காரத்தோடு கூடிய தீக்கையைக் குறிக்கும். ''அபிடேகம்'' என்பது ஆசிரி யன் ஆவதற்கு உரிய மந்திரக் கிரியைகளை கும்பத்தில் செய்து ஸ்நானம் (முழுக்கு) செய்விப்பது ஆகும். ''பவுதிக தீக்கை'' என்பது, பூதாகாரியம் ஆகிய உலகத்தோடு கூடி இருக்கும்படி செய்யும் தீக்கையைக் குறிக்கும். (பவுதிகம் – பூதா காரியம்) ''நைட்டிக தீக்கை'' என்பது நிட்டையோடு கூடி இருக்கும்படி செய்யும் தீக்கையைக் குறிக்கும். (நைட்டிகம் – நிட்டை).

தீக்கை செய்யும் ஆசிரியன் சிவம் எனவும், செய்யும் விதம் ஆகிய அத்துவ சுத்தி இவ்வாறு எனவும் கூறுகின்றது

அழிவு இலாக் கிரியையினால் ஆதல் சத்தி மத்தால்
ஆதல் அத்துவா சுத்தி பண்ணி, மலம் அகற்றி
ஒழிவிலாச் சிவம் பிரகாசித்தற்கு ஞானம்
உதிப்பித்து உற்பவம் துடைப்பன் அரன் ஒரு மூவர்க்கும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வழுவிலா வழி ஆறாம், மந்திரங்கள், பதங்கள்,
வன்னங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள்
கழிவிலாது உரைத்த முறை ஒன்றின் ஒன்று வியாத்தி
கருதுகலை சத்தியின்கண் சத்தி சிவன் கண்ணும்.
258

தெளிவுரை:

மேலே கூறியவாறு தீக்கையை, சிவபெருமானே குருமூர்த்தியை வாயிலாகக் கொண்டு நின்று செய்வன், தீக்கையைப் பெறும் மாணாக்கர், ஞான மார்க்கத்திற்கு உரியவரும், கிரியை மார்க்கத்திற்கு உரியவரும் என இருதிறப்படுவர். அவ்விரு திறத்தவரும், உத்தமர், மத்திமர், அதமர் என முத்திறப்படுவர். அவருள் மேற்கூறியவாறு கற்று அறிந்து ஒழுக்க நெறியில் நிற்பவர் உத்தமர். கற்று அறிந்து ஒழுக்க நெறியில் நில்லாதவர் மத்திமர். கற்று அறிந்தாலும் ஒழுக்க நெறியில் நில்லாதவர் அதமர். ஒழுக்க நெறியில் நில்லாதவர் என்பதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் ஒழுக்கநெறி இல்லாதவர் என்று பொருளே அன்றி, இழுக்க நெறி உடையார் என்பது பொருள் அன்று.

இத்தகைய பக்குவருக்கு அவரவர் பக்குவத்திற்கு ஏற்ப ஞான தீக்கை, கிரியா தீக்கை என்கின்ற இரண்டனுள் ஒன்றை ஆசிரியர் செய்வர். எப்படிச் செய்வார் என்றால், மந்திரங்கள், பதங்கள், வன்னங் கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள் என அறுவகைப்படுவதான குற்றம் இல்லாத ஆறு அத்துவாக்களுள் மந்திரம் பதத்திலும், பதம் வன்னத்திலும், வன்னம் புவனத்திலும், புவனம் தத்தவத்திலும், தத்துவம் கலையிலும் அடங்க, நீக்கமின்றி ஒடுக்கிச் செய்வர். அவற்றுள் முடிவான கலையே திரோதான சத்தியிலும், அந்த திரோதான சத்தியைச் சிவத்திலும் அடங்குறு ஒடுக்குவர். அவ்வாறு ஒடுக்குவதனால், பிறவிக்கு ஏது ஆகிய மலத்தைக் கெடுத்து, எங்கணும் வியாபகம் ஆகிய சிவம் பிர காசிப்பதற்கு ஏதுஆகிய ஞானத்தைக் கொடுத்துப் பிறவியை ஒழிப்பர்.

மந்திரம் முதலிய அத்துவாக்களை வழி என்று கூறுவர். அந்த வழியும் 1. உயிருக்கு நல்வினை தீவினை என்னும் கன்மம் வருகின்ற வழி எனவும், 2. உயிர் இறைவனை அடைவதற்கு உரிய வழி எனவும் இருவகைப்படும். அவற்றுள் கன்மம் வரும் வழி வருமாறு.

1. மந்திரங்களை உரத்துச் சொல்வது, மெல்லச் சொல்வது உச்சரிப்பின்பேதம் என்னும் இந்த மூன்று முறையில், எந்த மந்திரத்தை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எவ்வாறு சொல்லவேண்டுமோ அவ்வாறு சொல்வது நல்வினையாகும்; முறைதவறிச் சொல்வது தீவினை (பாவம்) ஆகும்.

2. பதங்களில் பிரிக்கக்கூடிய பதமாய் இருந்தால் பிரித்தும், பிரிக்கக்கூடாத பதமாய் இருந்தால் பிரிக்காமலும் இருந்தால் நல்வினை ஆகும். இதற்கு மாறுபட்டால் தீவினையாகும். (பதம் – சொல்).

3. வன்ன்ம் என்பது எழுத்து. அந்த எழுத்துக்களில் குறிலைக் குறிலாகவும், நெடிலை நெடிலாகவும், அளபெடையை அளபெடை யாகவும், அந்த அந்த இடங்களில் உச்சரித்தால் நல்வினைஆகும்; மாறுபட்டால் தீவினை ஆகும்.

4. புவனங்களுக்குப் பதி ஆகிய தெய்வத்தைப் பூசித்தால் புண்ணியம்; பூசிக்காமல் நிந்தனை செய்தால் பாவம் ஆகும்.

5. தத்துவங்கள் ஆகிய ஞானேந்திரியம், கன்மேந்திரியம், அந்தக்கரணம் ஆகியவற்றால் பிறர்க்குச் செய்யும் நன்மை நல்வினை ஆகும்; பிறர்க்குச் செய்யும் தீமை தீவினை ஆகும். நல்வழியில் பொருளைத் தேடிப் போகம் அனுபவிப்பது புண்ணியம்; தீயவழியில் திரவியத்தைத் தேடிப்போகம் அனுபவிப்பது பாவம் ஆகம்.

6. பஞ்சகலைகளுக்கு அபிமானிகள் ஆகிய பஞ்ச சத்திகளுக் குப் பூசை செய்வது புண்ணியம்; பூசை செய்யாமல் இருப்பது பாவம்.

இவ்வாறு மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்தவம், கலை என்னும் ஆறு வழிகளாலும் (ஆறு அத்துவா) உயிர்க்கு நல்வினை, தீவினை ஆகிய கன்மம் வரும் என்பது அறியத்தக்கது.

பஞ்ச கலைகளுக்கு அபிமானிகள் ஆகிய பஞ்ச சத்திகள் வருமாறு

கலைகள்	-	சத்திகள்
நிவிர்த்திக்கலை	–	கிரியா சத்தி
பிரதிட்டாகலை	–	ஞான சத்தி
வித்யாகலை	–	இச்சா சத்தி
சாந்தி கலை	–	ஆதி சத்தி
சாந்தியதீதகலை	–	பராசத்தி.

(அபிமானம் – நேசம் – விசுவாசம்)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்த ஆறு அத்துவாக்களும் சொல் பிரபஞ்சம், பொருள் பிரபஞ்சம் என இருவகைப்படும். அவற்றுள் மந்திர, பதம், வன்னம் மூன்றும் சொற் பிரபஞ்சம். புவனம், தத்துவம், கலை மூன்றும் பொருட் பிரபஞ்சம் (பிரபஞ்சம் – உலகங்கள்). பிரபஞ்சம் எல்லாம் சொல், பொருள் என்னும் இரண்டில் அடங்கும். அவற்றுள் ''சொல்'' என்பது, எழுத்து ஆகும். அந்த எழுத்தால் ஆகிய பதம், பதத்தால் ஆகிய சொல் (மந்திரம்) என விரியும்.

''பொருள்'' என்பது, உடலும் உலகமும் அவற்றை ஆக்கும் சத்தியும் என மூவகைப்படும். அவற்றுள் உடல், இந்திரியம் அந்தக் கரணம் முதலிய தத்துவ வடிவாய் இருக்கும்; புவனம், பஞ்சபூத வடிவாய் இருக்கும்; சத்தி, கலை வடிவாய் இருக்கும்.

இவ்வாறு பிரபஞ்ச வடிவாய் இருக்கின்ற சொல்லும் பொருளும், ஆகிய ஆறு அத்துவாக்களும் அநாதியே ஆணவ மலத்தைப் பற்றி, கேவலத்துள் கிடந்து அறிவு விளங்காத ஆன்மாக்களுக்கு, அறிவு விளங்குவதற்கு வழியாய்த் தோன்றி, அதனால் அறிவு விளங்கும். அந்த அறிவு விளக்கமும் ஏகதேச விளக்கமே என்பதை ஆன்மா உணர்ந்த பிறகு, இந்த அத்துவாக்கள் ஆறினையும், ஒன்றின் ஒன்று ஒடுங்கும் வழியினால், இறைவனை அடைவதற்கும் அவை வழி ஆயிற்று.

ஆறு அத்துவாக்களும் ஒடுங்கும் முறை வருமாறு:—

ஒன்றின் ஒன்று ஒடுங்குவதற்குக் காரணம், மந்திரம் என்னும் சொல் பதத்தை இன்றி இல்லாமையால், மந்திரம் பதத்தில் ஒடுங்கும். பதம் எழுத்தை இன்றி இல்லாமையால், பதம் எழுத்தில் ஒடுங்கும். மந்திரம், பதம், வன்னம் (எழுத்து) ஆகிய இந்த மூன்றும் சொல் ஆதலால், சொல் பொருளைக் குறித்து அன்றி நில்லாமையால், அச் சொல் பொருளில் ஒடுங்கும். பொருள் என்பது, புவனம், தத்துவம், கலை ஆதலால், அவற்றுள் வெளிப்படையாகக் காணப்படும் புவனத்தில், முதற்கண் சொல் ஒடுங்கும். புவனம் தத்துவத்தை இன்றி நில்லா மையால், தத்துவத்தில் புவனம் ஒடுங்கும். தத்துவம் கலையை இன்றி தோன்றாமையால், கலையில் தத்துவம் ஒடுங்கும். அஃதாவது பேச்சை நிறுத்தி, உலகை வெறுத்து, உடலைத் தான் அல்ல என அறிந்து, அருளால் தன்னையும் தலைவனையும் அறியும் முறை இஃதே ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கலை பற்றிய விளக்கம் வருமாறு:

நிவர்த்திகலை, பிரதிட்டை கலை, வித்தியாகலை, சாந்தி கலை, சாந்தி அதீத கலை என கலை ஐந்து வகைப்படும். ஒவ்வொன்றும் சத்தி கலை, சத்தி அதிட்டித்த கலை என்று இருவகைப்படும். அவற்றுள், ''சத்தி கலை'' என்பது சத்தியின்அம்சம் எனப் பொருள்படும், (அம்சம் – பங்கு) அந்த அம்சம் உயிருக்குப் பிரபஞ்ச விடுதலையை உண்டு பண்ணும் பொழுது, நிவர்த்தி கலை எனப்படும். விடுதலை செய்த பிரபஞ்சத்தை மீண்டும் பற்றாமல், விடுதலையை நிலைப்படுத்தும் நிலையில் பிரதிட்டா கலை எனப் பெயர் பெறுகிறது. விடுதலை அடைந்த உயிருக்கு உண்மைப் பொருளை உணர்த்தும்பொழுது வித்தியாகலை எனப்படும்.

உண்மைப் பொருளை உணர்ந்த உயிர் அப்பொருளில் அடங்கி இருக்கச் செய்யும் நிலையில் சாந்திகலை எனப் பெயர் பெறும். அவ்வாறு அடங்கிய உயிர், அடங்கி இருக்கிறோம் என்னும் போதம் இறந்து, அதீதப்படச் செய்யும் பொழுது சாந்தி அதீதகலை எனப்படும். திருவருட் சத்தி ஒன்றே செயல் வேறுபாட்டால் இவ்வாறு ஐந்து வகைப்படும். இந்தச் செயல் அனைத்தும், உயிர் சுத்த அவத்தையில் இருக்கும் நிலையில், அதன் அறிவின்கண் நிகழ்த்தப் பெறுவது ஆகும். இதுவரை ''சத்திகலை'' பற்றிப் பார்த்தோம்.

''சத்தி அதிட்டித்தகலை'' என்பது, பிறிது ஒன்றின் வாயிலாகத் தொழில் செய்யும் சத்தியின் அம்சம் ஆகும். அஃதாவது, திருவருட்சத்தி பிரமாவை வாயிலாகக் கொண்டு, கேவலத்தில் இருந்த ஆன்மாக் களுக்கு, கேவலத்தை நிவர்த்தி செய்து பிரபஞ்சத்தைத் தோற்றுவிக் கையில் ''நிவர்த்திகலை'' எனப்படும். ''தோற்றிய பிரபஞ்சத்தை விட்டுணுவின் வாயிலாக நின்று நிலைப்படுத்தும் சிவசத்தி, பிரதிட்டா கலை எனப்படும், (பிரதிட்டை – நிலைபேறு). வேறொரு புவனத்தை அறிவிக்கும் பொருட்டு ''நிலைப்படுத்திய புவனத்தை உருத்திரன் வழியாய் நின்று அழிக்கும் சிவசத்தி, வித்தியா கலை எனப்படும்.

புவனத்தில் தங்கி போகங்களை அனுபவிக்கும்பொழுது, கன் மத்துக்கு ஏற்ற போகங்களில் அமைந்து அனுபவிக்கும்படி, மகேசன் வாயிலாகச் செய்யும் சிவசக்தி சாந்தி கலை எனப்படும். அனுபவிக்க வேண்டிய போகப் பொருள்களை அனுபவிக்கும்படி சதாசிவர் வாயி லாகக் கூட்டிவைக்கும் சிவசத்தி சாந்தி அதீதகலை எனப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வாறு சத்தி அதிட்டித்த கலை ஐவகைப்படும். இந்தச் செயல் உயிரின் சகல அவத்தையில், தனு கரண புவன போகங்களிடத்தில் செய்யப்படுவதாகும்.

திரோதான சத்தி என்பது மறைப்பாற்றலைக் குறிக்கும். அது மேற்கூறிய மகேசன் வாயிலாக நின்று செய்யும் சாந்தி கலை ஆகிய சத்திக்கும், இந்த பஞ்ச கலைகளுக்கும் ஆதாரம் ஆகிய சத்திக்குப் பெயர் ஆகும். மகேசன் வாயிலாக நிகழும் திரோதான சத்தி, உயிர்க்கு போகத்தில் அமையும்படி செய்வது என்பது மேற்கூறி ஆயிற்று. இனிப் பஞ்ச கலைகளுக்கும் ஆதாரம் ஆகிய திரோதான சத்தி ஆவது, ஞான சொரூபம் ஆகிய சிவசத்தி பஞ்ச கலைகளாக மாறுவதற்கு உரிய அவசர பேதம் ஆகும். (அவசர பேதம் – நிலை வேறுபாடு)

நிவர்த்தி பிரதிட்டை என்னும் இரண்டு கலைகளுள் அடங்குவன ஆகிய ஏனைய அத்துவாக்களின் தொகை இவை எனக் கூறுகின்றது

மந்திரங்கள் முதல் ஐந்தும், கலை ஐந்தின் வியாத்தி,
மருவு மந்திரம் இரண்டு பதங்கள் நால் ஏழ்,
அந்த நிலை எழுத்து ஒன்று, புவனம் நூற்று எட்டு
அவனி தத்துவம் ஒன்று நிவர்த்தி அயன் தெய்வம்
வந்திடும் மந்திரம் இரண்டு பதங்கள் மூவேழ்,
வன்னங்கள் நால் ஆறு, புரம் ஐம்பத்து ஆறு,
தந்திடும் தத்துவங்கள் இருபத்து மூன்று
தரு பிரதிட்டா கலை மால் அதிதெய்வம் தானாம்.
259

தெளிவுரை:

மேற்கூறிய அத்துவாக்களுள் மந்திரம், பதம், வன்னம் என்னும் மூன்றும் சுத்தமாயா காரியமாகும். ஆகவே இவை மூன்றும் சுத்தாத்துவா எனப்படும். தத்துவம், சுத்தமாயை அசுத்தமாயை காரியம் ஆகும். ஆகவே தத்தவம் மிச்சிராத்துவா எனப்படும். புவனம், சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதி மாயா காரியம் ஆதலால், புவனம் சுத்தாத்துவா மிச்சிராத்துவா அசுத்தாத்துவா எனப்படும். எனவே, சுத்தம், மிச்சிரம், அசுத்தம் என்னும் மூவகை அத்துவாக்களும், மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம் என்னும் ஐந்தாக விரியும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்த ஐந்து அத்தவாக்களும், ஒன்றின் ஒன்றாக மேற்கூறிய வாறு, நிவிர்த்தி முதலிய பஞ்ச கலைகளுள் எவ்வாறு அடங்கும் என்றால், நிவிர்த்திக் கலையில் சத்தியோசாதம், இதயம் ஆகிய மந்திரம் இரண்டும், ''ஓம் நமோ நம'' என்னும் பதம் முதலாக ''மகாதேவ'' என்னும் பதம் ஈறாக, இருபத்து எட்டுப் பதங்களும் முடிவான ''க்ஷ'' கார அக்கரம் (வன்னம் – எழுத்து) ஒன்றும், காலாக்கினி ருத்திர புவனம் முதல் வீர பத்திரர் பத்திரகாளி புவனம் ஈறாக புவனம் நூற்று எட்டும், பிருதிவி தத்துவம் ஒன்றும், ஆகிய இவைகள்மேற்கூறிய முறையே, ஒன்றின் ஒன்றாக அடங்கும். இந்த நிவிர்த்திக் கலைக்கு அதிதெய்வம் பிரமன்.

பிரதிட்டா கலையில் வாமதேவம், சிரசு ஆகிய மந்திரம் இரண்டும் மகேசுவரம் முதலிய பதம் முதலாக அரூபின் முதலிய பதம் ஈறாக பதங்கள் இருபத்து ஒன்றும், ''ள'' காரம் முதலாக ''ட'' காரம் ஈறாக எழுத்துக்கள் (வன்னம்) இருபத்து நான்கும், அமரேசாதி புவனம் முதல் சீகண்ட புவனம் ஈறாக புவனம் ஐம்பத்தாறும், அப்பு தத்துவம் முதல் பிரகிருதி ஈறாக தத்துவங்கள் இருபத்து மூன்றும், ஒன்றின் ஒன்றாக ஒடுங்கும். இந்த பிரதிட்டா கலைக்கு அதி தெய்வம் விட்டுணு.

வித்தை, சாந்தி என்னும் இரண்டு கலைகளுள் அடங்குவன ஆகிய ஏனைய அத்துவாக்களின் தொகை இவை எனக் கூறுகின்றது

வித்தையில் மந்திரம் இரண்டு, பதம் நால் ஐந்து,
விரவும் எழுத்து ஏழு, புரம் இருபத்து ஏழு,
தத்துவமும் ஓர் ஏழு, தங்கும் அதிதெய்வம்
தாவில் உருத்திரன் ஆகும், சாந்திதன்னில்
வைத்தன மந்திரம் இரண்டு, பதங்கள் பதினொன்று
வன்னம் ஒரு மூன்று, புரம் பதினெட்டு ஆகும்,
உத்தமமாம் தத்துவமும் ஒரு மூன்று ஆகும்
உணரில் அதிதேவதையும் உயிர் ஈசன் ஆமே. 260

தெளிவுரை:

வித்தியா கலையில் அகோரம், சிகை ஆகிய மந்திரம் இரண்டும் வியாபின், என்னும் பதம் முதலாக 'தியானகாராயா' என்னும் பதம் ஈறாகப் பதங்கள் இருபதும், ''ஓ'' காரம் முதல் ''வ'' காரம் ஈறாக எழுத்துக்கள் ஏழும், வாமாதி புவனம் முதல் அங்குட்ட ருத்திராந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புவனம் ஈறாக புவனம் இருபத்து ஏழும், புருடதத்துவம் முதல் மாயை ஈறாக தத்துவங்கள் ஏழும் ஒன்றின் ஒன்றாக ஒடுங்கும். இந்த வித்தியா கலைக்கு அதிதெய்வம் உருத்திரன்.

சாந்தி கலையில் தற்புருடம், கவசம் ஆகிய மந்திரம் இரண்டும், ''நித்திய யோகினே'' என்னும் பதம் முதல் ''வியோம வியாபினே'' என்னும் பதம் ஈறாக பதம் பதினொன்றும், ''வக'' என்னும் எழுத்து மூன்றும், வாமை புவனம் முதல் சாதாக்கிய புவனம் ஈறாக புவனம் பதினெட்டும் சுத்தவித்தை ஈசுவரம், சாதாக்கியம் ஆகிய தத்துவங்கள் மூன்றும் ஒன்றில் ஒன்றாக அடங்கும். இந்த சாந்தி கலைக்கு அதிதெய்வம் மகேசுவரன்.

சந்தியாதீத கலையில் அடங்குவன ஆகிய ஏனைய அத்துவாக்களின் தொகை இவை எனக் கூறுகின்றது

சாந்தியா தீத கலை தன்னில் மந்திரங்கள்
தாம் மூன்று, பதம் ஒன்று, அக்கரங்கள் பதினாறு,
வாய்ந்த புரம் மூவைந்து, தத்துவங்கள் இரண்டு,
மருவும் அதிதேவதையும் மன்னு சதாசிவராம்,
ஏய்ந்தமுறை மந்திரங்கள் பதினொன்று பதங்கள்
எண்பத்து ஒன்று, அக்கரங்கள் ஐம்பத்து ஒன்று ஆகும்
ஆய்ந்தபுரம் இருநூற்றோடு இருபத்து நாலாம்;
அறிதரு தத்துவம் முப்பத்து ஆறு கலை ஐந்தே. 261

தெளிவுரை:

சாந்தியாதீத கலையில் ஈசானம், அத்திரம், மூலமந்திரம் என்னும் மந்திரங்கள் மூன்றும், ''ஓம்'' என்னும் பதம் ஒன்றும், ''க'' காரம் முதல் ''க'' காரம் வரை எழுத்துக்கள் பதினாறும், நிவர்த்தி முதல் சாந்தியதீதம் ஈறாக புவனம் ஐந்தும், இந்திகை முதல் அனாசிருதை ஈறாக புவனம் பத்தும் ஆக புவனம் பதினைந்தும் சத்தி தத்துவம் சிவதத்துவம் என்னும் தத்துவம் இரண்டும் ஒன்றின் ஒன்றாக அடங்கும், இந்த சாந்தியாதீத கலைக்கு அதிதெய்வம் சதாசிவ தேவர்.

இவ்வாறு சத்தியோசாதம் முதலிய பதினொரு மந்திரங்களும் ''சிவாய நமோ நம'' முதலிய எண்பத்து ஒரு பதமந்திரங்களும், ''க்ஷ'' காரம் முதலிய எழுத்து ஐம்பத்து ஒன்றும், அனாசிருத புவனம் முதல் புவனம் இருநூற்று இருபத்து நாலும் பிருதிவி முதல் தத்துவம் முப்பத்து ஆறும், நிவர்த்தி முதலிய கலை ஐந்தும் ஒடுங்கும் முறையில் வைத்துக் கண்டு கொள்க.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மந்திரம் முதலிய ஆறு அத்துவாக்களும் வியாபகம் ஆகும். அப்படி வியாபகமாக இல்லாவிட்டால், அவை எல்லா ஆன்மாக்க ளோடும் பொருந்த முடியாது. ஆயினும் அவை ஒன்றின் ஒன்று மேலான வியாபகம் ஆகும். அவ்வாறு இல்லையேல், உயர்ந்த வியாபகம் ஆகிய கலையில் மந்திரம் முதலியன அடங்குமாறு இல்லை. அப்படியானால், இந்நூலில் உள்ள 258–ஆவது செய்யுளில், ''மந்திரங்கள், பதங்கள், வன்னங்கள், புவனங்கள், தத்துவங்கள் ஆகிய ஐந்தும், கலை ஐந்தின் வியாத்தி'' என ஒன்றின் ஒன்று அடங்குமாறு கூறியதனோடு, இந்த இடத்தில் ''எல்லாம் வியாபகம்'' என்று கூறுவது முரணாகாதோ என்றால், முரணாது. எவ்வாறு என்றால்மேலே கூறியவாறு ஒன்றின் ஒன்று அடங்குவது ஆகிய வியாபகம் ஆதலினாலேயே ஆகும்.

இவ்வாறு கூறியதன் கருத்து என்ன என்றால், ஏகதேச வியாபகம் ஆகிய வியாப்பியத்திற்கு ஒடுக்கம், அடக்கம் ஆகிய வியாத்திக் குக் கேடுமே உரிமை ஆகும். இது வியாபகம் ஆகிய சூரியனின் ஒளி முன்பு, வியாப்பியம் ஆகிய கண்ணொளி ஒடுங்குவதும், வியாத்தி ஆகிய இருள் கெடுவதும் போல் ஆகும். ஆகவே மேலே 258–அவது செய்யுளில் ''வியாத்தி'' என்று கூறியதால் ''கேடு'' சொல்லுதல் வேண்டும். இந்தச் செய்யுளில் ''ஒடுங்கும்'' என்று கூறியதால், ''வியாப்பியம்'' சொல்லல் வேண்டும். இவ்வாறு கூறும்பொழுது, 'வியாத்தி' என்று கூறியதோடு, ''வியாப்பியம்'' என்று கூறியது முரணும். அவ்வாறு முரணாகாமல், ''வியாத்தி'' என்றது, ஒன்றின், ஒன்று அடங்கும் வியாபகத்தையே குறித்தது என்று கொள்ளுதல் பொருட்டே ஆகும் எனத் தெளிவு பெறுக.

பூரண வியாபகம், ஏகதேச வியாபகம், சம வியாபகம் என்று வியாபகம் மூன்று வகைப்படும். அவற்றுள், ஏகதேச வியாபகத்தை வியாப்பியம் என்றும், சம வியாபகத்தை வியாத்தி என்றும் கூறுவர். பூரண வியாபகம் ஒன்றே ''வியாபகம்'' எனப்படும். (பூரண வியாபகம் – முழு நிறைவு).

''வியாப்பியம்'' என்பது, பிறிது ஒன்றினால் வியாபிக்கப் படுவது ஆகும்; ''வியாத்தி'' என்பது, பிறிது ஒன்றில் அடங்கி இருப்பது ஆகும். ''வியாபகம்'' என்பது, பிறிது ஒன்றினால் வியாபிக்கப் படுவதலோ, பிறிது ஒன்றில் அடங்குதலோ இன்றி இருப்பது ஆகும். வியாபகத்திற்கு உவமை சூரியன்; வியாப்பியத்திற்கு உவமை கண்ணொளி; வியாத்திக்கு உவமை இருள். இந்த இருள் கண் அளவில்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மறைப்பதால் சமவியாபகம் (வியாத்தி) எனப்பட்டது. இவ்வாறே பதி, பசு, பாசம் மூன்றின் இடத்தும் கண்டு கொள்க. பதி பூரண வியாபகம்; பசு ஏகதேச வியாபகம்; பாசம் சம வியாபகம்.

கன்மங்கள் யாவும் அத்துவா ஆகிய வழியால் வருவதால், அத்துவ சுத்தியே சிறந்தது என்றும், இந்த அத்துவ சுத்தியால் ஆணவம், கன்மம் ஆகிய ஏனைய மலங்களும் சுத்தி ஆகும் என்றும் கூறுகின்றது

மூன்று திறத்து அணுக்கள் செய்யும் கன்மங்கட்கு
முன்னிலையாம் மூவிரண்டாம் அத்தவாவின்
ஆன்றமுறை அவை அருத்தி அறுத்துமலம் முதிர்வித்து,
அரும்பருவம் அடைதலுமே, ஆசான் ஆகித்
தோன்றி நுகராத வகை முன்செய் கன்மத்
துகள் அறுத்து அங்கு அத்துவாத் துடக்கு அறவே
சோதித்து
ஏன்ற உடல் கன்மம், அனுபவத்தினால் அறுத்து இங்கு
இனிச்செய் கன்மம், மூலமலம் ஞானத்தால்
இடிப்பன். 262

தெளிவுரை:

இறைவன் குருமூர்த்தியை ஆதாரமாய்க் கொண்டு நின்று செய்யும் தீக்கையில், ஆணவமலம் கன்ம மலங்களைச் சுத்தி செய்யாமல், மாயாமலம் ஆகிய அத்துவ சுத்தியைச் செய்வன் என்று, அத்துவ சுத்தியைச் சிறந்து எடுத்துக் கூறியதன் நோக்கம் யாது என்றால்,

ஆன்மாக்கள் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலும் செய்யப்படும் கன்மங்களுக்கு முன்னிலையாய்ப் பற்றுக் கொடுத்து நிற்பது அத்துவாக்கள் ஆறுமே ஆகும். இந்த அத்துவா ஆகிய வழியால் செய்த கன்மங்களைச் செய்த முறையால் அன்றி, அந்த கன்மங்கள் பக்குவமான முறையில் அனுபவிக்கும்படி செய்து, இறைவன் அந்தக் கன்மங் களை ஒழிப்பன்.

அவ்வாறு செய்வதால், ஆணவமலத்தைத் தேயும்படி செய்து, அந்த ஆணவமலத் தேய்வினால் ஏற்படுகின்ற அருமையான பக்குவம் நோக்கி, இறைவனே குருவடிவாய் எழுந்தருளி வந்து, அத்துவ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சோதனை செய்து, தன்னுடைய கிரியாசத்தி விருத்தி ஆகிய தீக்கை பினால், மாணாக்கன் அனுபவிக்க வேண்டியதாய்ப் பக்குவப்படாமல் கட்டுப்பட்டு இருக்கும் சஞ்சித கன்மத்தைச் சுத்தி செய்து, அனுபவி பாதபடி ஒழித்து, பிராரத்த கன்மத்தை அனுபவிக்கும்படி செய்து ஒழித்து. ஞானசத்தியினால் ஆணவ மலத்தையும், வாதனை பற்றி நிகழும் ஆகாமிய மலத்தையும், ஒளி முன் இருள்போல் ஒழிப்பன்.

ஆணவமலம், கன்ம மலங்கள் அத்துவாக்கள் இடமாக தொழிற் படவேண்டும் ஆதலாலும், அத்துவ சுத்தியால் அந்த இருமலங்களும் சுத்தி எய்தும் ஆதலாலும், அத்துவ சுத்தியைச் சிறந்து எடுத்துக் கூறினார். ''சுத்தி'' என்பது இந்த இடத்தில் நீக்கத்தைக் குறிக்கும்.

கன்ம அனுபவத்தால் ஆணவமலத்தின் ஆற்றல் எவ்வாறு கெடும் என்றால், கன்ம பலன்களை அனுபவிக்கும்படி செய்வதால், ஆன்மாவுக்கு இளைப்புத் தோன்றும். தோன்றவே, ஆன்மா அந்த இளைப்பு ஆகிய துன்பத்தில் நிவர்த்தியை நாடும். அவ்வாறு நாடும் நாட் டம் மல ஆற்றலின் தேய்வைக் குறிக்கும். ஆகவே, கன்ம பலனை அனுப விக்கும்படி செய்வது மலத்தின் ஆற்றல் கெடுதற்கு உபாயம் ஆயிற்று.

எட்டாம் சூத்திரம்

இரண்டாம் அதிகரணம்

''மன்னும் அருளால் உணர்த்தி'' என்பது

புறச்சமய நெறி முதல், படிமுறையால் மேம்பட்டு, சைவத்தை அடைந்தவர்க்கு அத்துவசுத்தி எய்துவதற்கு உரிய பருவம் உண்டாகும் என்றும், அந்தச் சைவம் ஆகிய தவநெறியும் சரியை முதல் நான்கு வகைப்படும் என்றும் கூறுகின்றது

புறச்சமய நெறி நின்றும், அகச் சமயம் புக்கும்,
புகல் மிருதி வழி உழன்றும் புகலும் ஆச்சிரம
அறத்துறைகள் அவை அடைந்தும், அரும் தவங்கள் புரிந்தும்,
அருங்கலைகள் பல தெரிந்தும்,ஆரணங்கள் படித்தும்,
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத
சிரப்பொருளை மிகத் தெளிந்தும் சென்றால், சைவத்
திறத்து அடைவர், இதில் சரியை கிரியா யோகம்
செலுத்திய பின், ஞானத்தால் சிவனடியைச் சேர்வர். 263

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

கன்ம நுகர்ச்சியால் அத்துவசுத்தி எய்துவதற்கு உரிய அரும் பருவம் எப்படி ஏற்படும் என்றால், உலோகாயதம், பௌத்தம், சமணம், மீமாம்சம், மாயாவாதம், பாஞ்சராத்திரம் என்னும் தூலம் ஆகிய புறச் சமயங்களில் நின்று, அவ்வாறு ஒழுகியும், அந்த ஒழுக்கத்தின் முதிர்ச் சியால் அந்தப் புறச் சமயத்தில் நின்று நீங்கி, சைவம், பாசுபதம், வாமம், பைரவம், மாவிரதம், காளாமுகம் என்னும் சூக்குமம் ஆகிய அகச் சமயங்கள் ஆறில் புகுந்து, அந்நூல் வழியே ஒழுகியும், மனு முதலிய வரால் சொன்ன தருமசாத்திரம் பதினெட்டின் வழியே சென்று ஒழுகியும் வேதத்தில் சொல்லப்பட்ட பிரமசரியம் முதலிய ஆச்சிரமங்கள் நான்கின் நெறிகளில் வழுவாது ஒழுகியும்,

அனுட்டித்தற்கு அரிது ஆகிய பஞ்சாக்கினி முதலியவற்றில் நின்று அரிய தவங்களைச் செய்தும், கற்பதற்கு அரிது ஆகிய கலை ஞானங்கள் பலவற்றைப் பயின்றும், இருக்கு முதலிய நான்கு வேதங்களை ஓதியும், சிறப்பினை உடைய பதினெட்டுப் புராணங்களை ஓதி உணர்ந்தும், வேதாந்தம் ஆகிய உபநிடதப் பொருளை மிக ஆராய்ந்து தெளிந்தும், இவ்வாறு படி முறையாகப் பல பிறவிகளிலும் அப்பியாசம் பண்ணி, அவைகள் முற்றுப் பெற்றால், சைவக் கூற்றின் முடிவாகிய சித்தாந்த சைவத்தை அடைவர்.

இவ்வாறு படிமுறையால் அன்றி, ஒரு காலத்தில் எல்லாவற் றையும் பெற முடியாது. முறையே ஒன்றன் பின் ஒன்றாய்ப் பயின்று, முடிவில் அடையப்பெறும் இந்தச் சித்தாந்த சைவத்திலும் சரியை கிரியா யோகங்களை முறையாய்க் கடைப்பிடித்து, முற்றியபின் ஞானத்தைப் பெற்று அந்த ஞானத்தால் சிவபெருமான் திருவடிகளைச் சேர்வர்.

புறச்சமய நெறி முதல் பல்வேறு வகைப்பட்ட நெறிகளின் பயன் ஆகிய முத்திகளின் இலக்கணமும், சைவ முத்தியின் இலக்கணமும் இவை எனக் கூறுகின்றது

இம்மையே ஈரெட்டு ஆண்டு எய்தி எழில் ஆரும்
ஏந்து இழையார் முத்தி என்றும், இரும் சுவர்க்கமுத்தி
அம்மையே என்றும், முத்தி ஐந்து கந்தம்
அறக் கெடுகை என்றும், அட்ட குணம் முத்தி என்றும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மெய்மையே பாடாணம் போல்கை முத்தி என்றும்,
விவேகம் முத்தி என்றும், தன் மெய்வடிவாம் சிவத்தைச்
செம்மையே பெறுகை முத்தி என்றும் செப்புவர்கள்;
சிவனடியைச் சேரும் முத்தி செப்புவது இங்குயாமே. 264

தெளிவுரை:

சித்தாந்த சைவம் அல்லாத ஏனைச் சமய நூலாருக்கும் முத்தி கள் உள்ளன. அந்த முத்திகள், படிமுறையால் நிலம் முதல் நாதம் ஈறா கிய முப்பத்தாறு தத்துவங்களில் ஒவ்வொன்றில் இருப்பன ஆகும். அவை வருமாறு;

உலோகாயதன் ''இவ்வுலகமே உள்ளது; பரலோகம் ஆகிய சுவர்க்கம் நரகம் என்பது ஒன்று இல்லை; குளிப்பது, உண்பது முதலிய இன்பமே சுவர்க்கம், இவைகள் அன்றி, வறுமையினாலும் நோயி னாலும் துன்பப்படுவதே நரகம். அழகினை உடைய பதினாறு ஆண்டுள்ள, நகைகள்அணிந்துள்ள பெண்களுடனே கூடி இன்புறுவதே முத்தி'' என்றுகூறுவன்.

மீமாம்சநூலார் ''வேதங்களில் விதித்துள்ள யாகம் முதலிய கன்ம அனுட்டானங்களைச் செய்து, இந்தத் தேகம் நீங்கிய பிறகு, மறுமையில் திவ்யதேகத்தைப் பெற்று, பெரிய போகத்தை உடையதாகிய சுவர்க்க லோக போகம் அனுபவிப்பதே முத்தி'' என்பர்.

பௌத்தன் ''ரூபம், வேதனை, குறிப்பு, பாவனை விஞ்ஞானம் என்கிற ஐவகைக் கந்தங்கள் முழுவதும் கெடுவதே முத்தி'' என்பன்.

சைனன் ஆகிய ஆருகதன் (சமணன்), ஆனந்த ஞானம், ''அனந்த தெரிசனம், அனந்த வீரியம், அனந்த சுகம், நிர்நாமம், நிர்க் கோத்திரம், நிர் ஆயுஸ்யம், (ஆயுஸ்யம் – ஆயுள்) சகல சம்யதாபாவம்'' என்னும் எண் குணங்களை அடைவதே முத்தி என்பர்.

வைசேடிகர், ஆன்ம ஞானத்தினாலே சுக துக்கங்களும் அவற்றிற்கு ஏது ஆகிய ஞானமும் நீங்க பாடாணம் (கல்) போல, ஓர் அறிவும் அற்று இருப்பதே மோட்சம் என்பர்.

சாங்கியர், பிரகிருதி புருஷ விவேகத்தைப் பண்ணி பிரகிருதி விகாரங்களுக்கு ஆன்மா ஆகிய தான் அன்னியமாக, யான் எனது என்பது அற நிற்பதே மோட்சம் என்பர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாயாவாதி மாயை பிரமங்களை விசாரித்து மாயையை நீங்குவதே மோட்சம் என்பர்.

பாஞ்சராத்திரிகள், மகாவிஷ்ணுவின் கிருபையினால் இந்தத் தேகத்தின் நின்றும் நீங்கி, சத்திய சொரூபம் ஆகிய சுத்த சித்து ரூபியாய் விட்டுணுவுக்குச் சமானமாய் சகல போகங்களும், மகாவிஷ்ணுவைப் போலவே நித்தியம் உடையவராய் இருத்தலே மோட்சம் என்பர்.

சிவசமவாதி முதலிய சைவர்கள், சிவன் அருளாலே ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் நீங்க, சத்தியமும் சுத்தமும் ஆகிய ஆன்மாவின் முன் ஞானக் கிரியைகள் பிரகாசிக்கப் பெற்று, அந்த ஞானக்கிரியைகளின் பிரகாசத்தால், சர்வஞ்ஞுத்துவம் முதலிய ஆறு குணங்களும் விளங்கப் பெற்று, சிவசமமாய் இருப்பதே மோட்சம் என்பர். இதுவும் சிவபிரானுடைய உண்மை நிலையை அறிந்து இன்புறாத நிலை ஆதலால் பதமுத்தியே ஆகும்.

இந்த இடத்தில் வேதாகம நூல் உண்மையின்படி, யாம் கூறும் முத்தி எது என்றால், கூறுதும்; ஆன்மாவும் சிவமும் அநாதியே பிரிவற்று உள்ளன. அப்பிரிவு இல்லாமையைத் தோன்றாதபடி அநாதியே ஆணவ மலம் ஆன்மாவின் அறிவைத் தடுத்து இருக்கிறது. எனவே அந்தத் தடையினால், நிலை இல்லாத போகங்களை நிலையானவை என மயங்கி நின்று, சிவனருளால் அந்த மயக்கம் நீங்க, கண்ணினது காசம் (நோய்) நீங்கியபொழுது அந்தக் கண் காட்சியைப் பெற்றது போல, அந்த மயக்கம் நீங்கிய பொழுது, சிவனுடைய பிரிவில்லாமையை, ஆன்மா அநன்னியமாக நின்று கண்டு, சிவானந்த பரவசத்தினாலே முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து சிவபெருமான் திருவடியை அடைதலே ஆகும்.

''திருவடி'' என்பது இறைவனுடைய சித்துத் தன்மையைக் குறிக்கும். இக்கருத்துப் பற்றியே ''அடியேனும் அதுவும் அருள் எனும் அதுவும் அறைந்திடில் பூரண நிறைவு'' என்று தாயுமான சுவாமிகளும் அருளிச் செய்வார் ஆயினர்.

''அடைதல்'' என்றதனால், வேறாகப் பிரிந்து இருந்து அடைந்தது என்று பொருளன்று. தன்னுடைய பிள்ளை வியாதியினால் பெரிதும் துன்பப்பட்டு குணமானபோது, இந்தப் பிள்ளையை இப்பொழுது பெற்றேன் என்று கூறுவது போல யான், எனது என்னும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

போதத்தினால் சிவானுபவம் விளங்காது இருந்து, அப்போதத்தின் முடிவில் அந்தச் சிவானுபவம் விளங்குவதையே அடைந்தது என்று கூறியது ஆகும். ஆகவே அடைதல் என்பதற்குப் பொருள் சிவானுபவத்தை விளங்கிக் கொள்வது என்பதே ஆகும்.

உண்மைச் சமயமும், அதன் இலக்கணமும், உண்மை நூலும் இவை எனக் கூறுகின்றது

ஓது சமயங்கள் பொருள் உணரும் நூல்கள்
ஒன்றோடு ஒன்று ஒவ்வாமல் உள; பலவும் இவற்றுள்
யாது சமயம் பொருள் நூல் யாது இங்கு என்னின்
இது ஆகும் அது அல்லது எனும் பிணக்கு அது இன்றி
நீதியினால் இவை எல்லாம் ஓர் இடத்தே காண
நின்றது யாது ஒரு சமயம் அது சமயம் பொருள் நூல்
ஆதலினால் இவை எல்லாம், அருமறை ஆகமத்தே
அடங்கியிடும் இவை இரண்டும் அரன் அடிக்கீழ்
அடங்கும். 265

தெளிவுரை:

பல சமயங்களும் அந்தச் சமயப் பொருள்களை அறிவதற்கு ஏது ஆகிய பல நூல்களும் மாறுபட்டனவாகக் காணப்படுவதால், அவற்றுள் முதன்மையான சமயம் யாது? அதன் இலக்கணம் யாது? அந்தச் சமயப் பொருளை உணர்த்தும் நூல் யாது? என்னும் தடைகள் பல எழும். அவற்றிற்கெல்லாம் விடை வருமாறு:—

கண் இல்லாத பலர் கூடிக்கொண்டு, யானையைக் கையால் தடவி தந்தமக்கு எய்திய உறுப்புக்களின் இலக்கணமே யானையின் இலக்கணம் எனச் சொல்லி முரண்பட்டபொழுது, யானையின் இலக்கணம் முழுவதும் கண்ட கண் உள்ளவன் ஒருவன், ஏனையோர் கூறும் இலக்கணங்கள் எல்லாம் தான் கண்ட இலக்கணங்களில் அடங்கிய ஒவ்வோர் இலக்கணம் என்றும், அந்த இலக்கணங்களும் கொள்ளத் தக்கனவே என்றும்அறிவன்.

அதுபோல, இந்தச் சமயம் பொருந்தும், அந்தச் சமயம் பொருந்தாது என்னும் பிணக்கு இன்றி, படி முறையால் இந்தச் சமயம் அனைத்தும் அங்கமாகத் தன்னிடத்தில் காணப்பட்டு நின்றது எந்தச்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சமயமோ, அந்தச் சமயமே உண்மையான சமயம் ஆகும். அந்த சமய சாத்திரமே உண்மையான சாத்திரம் ஆகும். ஏனைச் சமயங்களோடு பிணக்கு இன்மையே அதன் இலக்கணம் ஆகும்.

அந்த சாத்திரம் எது என்றால், எல்லாப் பொருளையும் சொல்வதே சாத்திரம் என்பதன் பொருள் ஆகும். ஆகவே, அவ்வாறு எல்லாப் பொருளையும் சொல்லுவன ஆகிய முதல்வன் அருளில் செய்த வேதாகமங்களே அந்த சாத்திரமாகும். அந்த வேதாகமங்களில் எல்லாச் சமய நூற் பொருள்களும்அடங்கிக் காணப்படும். அவ்வாறு காணப் பட்டாலும், அந்த வேதாகமங்களால் சிறந்து எடுத்துக் கூறப்படும் சமயமே உண்மையான சமயம் ஆகும். அந்த உண்மைச் சமயம், சிவபெரு மானையே தெய்வம் எனக் கொள்வதாலும், அந்தச் சமயம் சாத்திரத்தைப் பூர்வபட்சம் பண்ணுவதற்கு வேறு சாத்திரம் இல்லாமையாலும், அந்த உண்மைச் சமயம் சித்தாந்த சைவம் எனக் கூறப்படும்.

உண்மை நூல்கள் ஆகிய வேதாகமங்களே முதல் நூல் எனவும், ஏனைய நூல்கள் எல்லாம் வழிநூல் சார்பு நூல்களாய் முதல் நூலில் அடங்கும் எனவும், கூறுகின்றது

அருமறை ஆகமம் முதல்நூல்; அனைத்தும் உரைக்கையினால்,
அளப்பு அரிதாம்; அப்பொருளை அரன் அருளால் அணுக்கள்
தருவர்கள்; பின் தனித்தனியே தாம் அறிந்த அளவில்
தர்க்கமொடு உத்தரங்களினால் சமயம் சாதித்து,
மிருதி, புராணம், கலைகள் மற்றும் எல்லாம்
மெய்ந்நூலின் வழி புடையாம்; அங்கம் வேதாங்கம்
சுருதி சிவாகமம் ஒழியச் சொல்லுவது ஒன்று இல்லை;
சொல்லுவார் தமக்கு அறையோ சொல் ஒணாதே. 266

தெளிவுரை:

மேற்கூறிய நூல் எனப்படுவன எல்லாம் முதல் நூல், வழி நூல் சார்பு நூல், பூர்வ பக்கம் நூல் எனப் பலவேறு வகைப்படும். அவற்றுள், முதல் நூலில் வழி நூலும், அவ்விரண்டில் சார்பு நூலும் அம்மூன்றில் பூர்வ பக்க நூலும் முறையே அடங்கும். ஆகவே, முதல் நூல் பொருள் களையே வேறுவேறாக எடுத்துக் கூறுவதால், எல்லா நூல்களும் மேன்மை உடையனவே ஆகும். வேறுவேறாகக் கூறுவானேன் என்றால் முதல் நூல் ஆகிய வேதாகமங்களில் அனைத்தும் கூறுவதால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவ்வாறு கூறியுள்ள அளவிடுதற்கு அரிய உயர்ந்த பொருள்களை, முழுவதும் உள்ளவாறு உணரமாட்டாத உயிர்கள் முதல்வன் அருளால், அந்தவேதாகமங்களுள் சில பொருளைத் தத்தம் அறிவிற்குஏற்ப எடுத்துக்கொண்டு, தடை விடைகளால் நிறுவி தொகுத்தும் விரித்தும் செய்தனர். அவை எல்லாம் சைவம் அல்லாத ஏனைச் சமய நூல்கள் ஆகும். ஆகவே அந்நூல்கள் பூர்வபக்க நூல் எனப்படும்.

ஸ்மிருதி, புராணம் முதலாயின எல்லாம், அந்தவேதாகமப் பொருளை இனிது விளக்குதல் பொருட்டு, அவற்றை உள்ளவாறு உணர்ந்தோர் செய்த நூல் ஆகும்.

ஆகவே அந்நூல்கள் வழிநூல் எனப்படும். காருடம், தக்ஷணம், சிட்சை, கற்பசூத்திரம், முதலியஅங்க நூல்கள், வேதாகமங்களை உள்ள வாறு உணர்தற்குச் சார்பாகப் பக்கத்தில் நிகழ்வதால், சார்பு நூல் எனப் படும். ஆதலால், வேதாகமங்களில் அடங்காத பொருளாக ஒன்றனை எடுத்துச் சொல்லும் நூல் ஒன்றும்இல்லை; உண்டு என்று பிணங்கும் பேதையர்க்கு உத்திரம் சொல்லி அறிவுறுத்த இயலாது, (காருடம் – உபநிடதம் முப்பத்திரண்டில் ஒன்று; தக்ஷணம் – புராணங் களுள் ஒன்று; சிட்சை – வேதாங்கத்தில் ஒன்று; கற்ப சூத்திரம் – மந்திர நூல்).

வேதம் பொது நூல் எனவும் ஆகமம் சிறப்பு நூல் எனவும் சித்தாந்தம் எனவும் கூறுகின்றது

வேதநூல் சைவநூல் என்று இரண்டே நூல்கள்,
வேறுரைக்கும் நூல், இவற்றின் விரிந்த நூல்கள்,
ஆதிநூல், அநாதி அமலன் தரும் நூல் இரண்டும்
ஆரண நூல் பொது, சைவம் அரும் சிறப்பு நூலாம்;
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும்
நிகழ்த்தியது நீள் மறையின் ஒழிபொருள் வேதாந்தத்
தீதுஇல் பொருள் கொண்டு உரைக்கும் நூல் சைவம் பிறநூல்
திகழ் பூர்வம்; சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும். 267

தெளிவுரை:

மேற்கூறிய நூல்களுள் வேதம் ஆகமங்கள் இரண்டும், எல்லா நூல்களுக்கும் முதல் நூல் ஆகி இறைவனால் தரப்படும் நூல் ஆகும். ஏனைய நூல் எல்லாம், இந்தவேதாகமங்கள் இரண்டிலிருந்தும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விரிந்த நூல்கள் ஆதலின், இந்த வேதாகமங்களே நூல் என்று உயர்த்துக் கூறப்படுவன ஆகும். இறைவன் இருவேறு வகைப்பட நூல் செய் வானேன் என்றால், அதற்கு விளக்கம் வருமாறு:–

இறைவன் பெருங்கருணையாளன். எனவே நீதிநெறியில் நிற்கும் உலகில் உள்ளவர்களும் ஞான நெறியில் நிற்கும் உயர்ந்தவர் களும் ஆகிய இருவரும் உய்தல் பொருட்டு வேதத்தையும், ஞான நெறி யில் நிற்பவர் மட்டும் உய்தல் பொருட்டு ஆகமத்தையும் அருளிச் செய்த னன். அன்றியும் வேதத்தில் கூறும் கரும காண்டத்துள் சிவார்ச்சனை செய்ய என்று கூறி, அதனை செய்யும் விதம் அந்தக் காண்டத்தில் கூறா மையால் அதனைக் கூறுபதற்காகவும், ஞான காண்டம் ஆகிய உபநிடதம் பல கடவுள்களுக்கும் பரத்துவம் கூறுவதால் அந்தப் பலகடவுளர் உள்ளும் இவன் ஒருவனுக்கே பரத்துவம் கூறுவதற்காகவும் ஆகமத்தை அருளிச் செய்தனன்.

இதனால் வேதம் சூத்திரம் போன்றது; ஆகமம்அந்த சூத்திரத்தின் விருத்தி உரை ஆகிய பாடியம் போன்றது. வேதம் உலகர்க்கும் ஞானாதி காரிக்கும் உரித்து ஆதலின் பொதுவும், ஆகமம் ஞானாதிகாரிக்கே உரித்து ஆதலின் சிறப்பும் ஆகும். அன்றியும் வேதம் பல கடவுளர்க்கும் பரத்துவம் கூறுவதால் பொது. ஆகமம் சிவபெருமானுக்கே பரத்துவம் கூறுவதால் சிறப்பு. இந்தச் சிவாகமப் பொருளுக்கு வேறாய் வேதத்தின் பூர்வபக்கப் பொருளைச் சொல்லும் நூல்கள் எல்லாம், மேற்கூறியவாறு பூர்வபக்க நூல் எனப்படும். வேதத்தின் முடிவான பொருளைச் சொல்லும் சிவாகமம், சித்தாந்தம் எனப்படும்.

சித்தாந்த நெறியில் நிற்போருக்கு அந்தப் பிறப்பிலேயே சிவபெருமான் முத்திதந்து அருள்வன் எனக்கூறுகின்றது

சித்தாந்தத்தே சிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
சௌனனம் ஒன்றிலே, சீவன் முத்தர் ஆக
வைத்து ஆண்டு மலம் கழுவி, ஞானவாரி
மடுத்து, ஆனந்தம் பொழிந்து, வரும் பிறப்பை
அறுத்து
முத்தாந்தப் பாதமலர்க்கீழ் வைப்பன் என்று
மொழிந்திடவும், உலகர் எல்லாம் மூர்க்கர் ஆகிப்,
பித்தாந்தப் பெரும் பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர்; இது என்ன பிராந்தி!
268

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சித்தாந்தமே முத்திக்கு நேர்வழி ஆகும். சித்தாந்த நெறியில் நிற்கும் பக்குவ ஆன்மாக்களுக்கு எடுத்த பிறப்பு ஒன்றிலேயே சிவபிரான், தம் காருண்யத்தில் குருமூர்த்தியாய் எழுந்தருளி வந்து, திருக்கண் நோக்கம் முதலிய தீக்கை செய்து மலத்தைப் போக்கி, ஞான சாகரத்தில் மூழ்குவித்து, சிவானந்தம் மேலிடச் செய்து, சீவன் முத்தர் ஆக்கி, மேல் வரும் பிறவியை ஒழித்து முத்தி முடிவு ஆகிய திருவடி மலர்க்கீழ் அடங்கி நிற்கச்செய்வன்.

இத்துணைப் பெருமை மிக்க சித்தாந்த நெறி, வீடு பேற்றிற்கு நேர் வழி என்று உபமன்னியர், அகத்தியர் முதலிய உயர்ந்தோர் எல்லாம் எடுத்து ஓதியுள்ளனர். ஆயினும் உலகத்தில் உள்ளவர்கள் இவ்வுண் மையைத் தெளிய மாட்டாது துர் அபிமானம் (வீண் பெருமை) கொண்டு, தத்தமக்கு வேண்டியவாறே பிதற்றுகின்றனர். அவர்கள் அவ்வாறு பிதற்றிய பாவத்தால் கொடு நரகத்தில் வீழ்வர், ஈது என்ன மயக்கம்?

முற்றுணர்வு முதலிய குணங்களை உடைய சிவபெருமான், ஒரு பிறவியிலேயே முத்தியை தரமுடியும் எனவும், அந்த குணங்கள் சிவபிரானிடத்து உள்ளன என்பதற்கு ஏதுக்கள் இவை எனவும் கூறுகின்றது

இறைவன் ஆவான் ஞானம் எல்லாம், எல்லா
முதன்மை அனுக்கிரகம் எல்லாம் இயல்புடையான் இயம்பும்,
மறைகள், ஆகமங்களினால் அறிவு எல்லாம் தோற்கும்;
மரபின்வழி வருவோர்க்கும், வாராதோற்கும்,
முறைமையினால் இன்பத் துன்பம் கொடுத்தலாலே,
முதன்மை எல்லாம் அறிந்தும் முயங்கு இரண்டு போகத்
திறம் அதனால் வினை அறுக்கும் செய்தியாலே
சேரும் அனுக்கிரகம் எலாம் காணுதும் நாம் சிவற்கே.
269

தெளிவுரை:

ஆன்மாக்களுக்கு எடுத்த ஒரு பிறவியிலேயே முத்தியைக் கொடுப்பது, எப்படிச் சிவபெருமானால் முடியும் என்றால், முற்று

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ணர்வும், முடிவில் ஆற்றலும், பேரருளும் ஆகிய மூன்று குணங்களும் சிவபெருமான் இடத்திலேயே இருப்பதைக் காண்கிறோம். இம்மூன்றும் இயல்பாக உடைய வல்லவன் ஆதலினால் இஃது அவன் ஒருவனாலேயே கூடும். சிவபெருமான் இந்த மூன்று குணங்களும் உடையவன் என்பதை எப்படி அறிவது என்றால், வேதாகமங்களை அவன் அருளிச் செய்த காரணத்தால், முற்றுணர்வு உடையவன் என்பது பெறப்படும். அஃது எப்படி என்றால், பல்வேறு வகைப்பட்ட ஆன்மாக்களுக்கு வேண்டிய எல்லாச் செய்திகளும் வேதாகமங்களில் காணப்படுகின்றன. அவ்வாறு சொல்லுவதற்கு முற்றுணர்வு இருந்தால் அன்றி முடியாது. ஆதலால் சிவபெருமான் முற்றுணர்வு உடையவன் என்பது தெளியப்படும்.

வேதாகமங்களின் வழி நடப்பவர்க்கு இன்பத்தையும், நடவாதவர்க்குத் துன்பத்தையும் அவன் தருகின்ற காரணத்தால், அவனுக்கு முடிவில் ஆற்றல் உண்டு என்பது பெறப்படும். அவ்வாறு ஆன்மாக்கள் இன்பத் துன்பங்களை அனுபவிக்கும்படி செய்து, அந்த இன்பத்துன்பங்களுக்குக் காரணம் ஆகிய இருவினைகளை, ஆன்மாக்களிடமிருந்து சிவபெருமான் நீக்குகின்ற காரணத்தால், அவன் பேரருள் உடையவன் என்பது தெளியப்படும்.

சைவநெறி ஆகிய முத்திநெறி சரியை முதலிய நான்கு பேதப்படும் என்றும், அவற்றின் பயன் பதமுத்தி பரமுத்தி என இருவகைப்படும் என்றும் கூறுகின்றது

சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம்,
தாதமார்க்கம், என்றும் சங்கரனை அடையும்
நன்மார்க்கம் நால்; அவைதாம் ஞானயோக
நற்கிரியா சரியை என நவிற்றுவதும் செய்வர்,
சன்மார்க்க முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய
சாரூப்பிய சாயுச்சியம் என்று சதுர்விதமாம்;
முன்மார்க்க ஞானத்தால் எய்தும் முத்தி
முடிவு என்பர்; மூன்றினுக்கும் முத்தி பதம் என்பர். 270

தெளிவுரை:

சிவபெருமான் திருவடியை அடைவதற்கு உரிய சைவநெறி ஆகிய நன்னெறி, தாதமார்க்கம், சற்புத்திர மார்க்கம், தோழ மார்க்கம், சன்மார்க்கம் என நான்கு வகைப்படும். அவை முறையே, சிவசரியை,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவகிரியை, சிவயோகம், சிவஞானம் என வழங்கப்படும். அந்த நன்மை ஆகிய மார்க்கத்திற்குப் பயன் முறையே, சிவசாலோகம், சிவ சாமீபம், சிவசாரூபம், சிவசாயுச்சியம் என நான்கு வகைப்படும்.

அவற்றுள் சிவசரியை, சிவகிரியை, சிவ்யோகம் ஆகிய மூன்றி னாலும் முறையே அடைதற்கு உரிய சிவசாலோகம், சிவசாமீபம், சிவசாரூபம் ஆகிய மூன்றனையும் பதமுத்தி ஆகிய அபரமுத்தி எனக் கூறுவர். முடிவான சிவஞான நெறியரல் அடையும் சிவ சாயுச்சியத்தைப் பரமுத்தி எனக் கூறுவர்.

''சிவசாலோகம்'' என்பது சிவபெருமான் திருமேனி கொண்டு எழுந்தருளி இருக்கும் உலகத்துள், எல்லா இடத்திலும் தடை இன்றி சஞ்சரித்து அந்த உலக போகங்களை அனுபவித்து வாழ்வது ஆகும்.

''சிவசாமீபம்'' என்பது, அந்த உலக போகத்தை அனுபவிப்ப தோடு, மைந்தர்க்கு உளதாகிய உரிமை போல, சிவபெருமானுக்குச் சமீபமாக இருந்து அந்த போகங்களை அனுபவித்து வாழ்வது ஆகும்.

''சிவசாரூபம்'' என்பது, தோழர்க்கு உரிய உரிமை போல, சிவ பெருமான் கொண்டருளும் திருமேனிகளுள் ஒரு திருமேனியைப் பெற்று, அந்தத் திருமேனிக்கு உரிய அணிகலனும் போக அனுபவமும் உடையவராய் வாழ்வது ஆகும்.

''சிவசாயுச்சியம்'' என்பது, சிவபெருமான் திருவடியில் இரண்டு அறக் கலந்து நின்று, நித்திய ஆனந்தத்தை அனுபவித்து வாழ்வது ஆகும்.

தாச நெறி ஆகிய சரியையின் இலக்கணமும் அதன் பயனும் இவை எனக் கூறுகின்றது

தாத மார்க்கம் சாற்றில் சங்கரன்தன் கோயில்
தலம் அலகிட்டு, இலகுதிரு மெழுக்கும் சாத்திப்,
போதுகளும் கொய்து, பூந்தார் மாலைகண்ணி,
புனிதற்குப் பல சமைத்துப், புகழ்ந்து பாடித்
தீபமொடு் திருவிளக்கு இட்டுத் திருநந்த வனமும்
செய்து, திருவேடம் கண்டால், ''அடியேன் செய்வது
யாது? பணியீர்; '' என்று பணிந்து அவர்தம் பணியும்
இயற்றுவது; இச்சரியை செய்வோர் ஈசன் உலகு
இருப்பர். 271

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

தாதமார்க்கம் ஆகிய சரியை என்பது யாது என்றால், சிவ பெருமான் திருமேனி கொண்டு எழுந்தருளி இருக்கும் திருக் கோயிலில் அசுத்தத்தைப் போக்கித் திருமெழுக்கு இடுவது, திருவிளக்கு இடுவது; நந்தனவனங்கள் வைத்து மலர்கள் எடுத்து, இண்டை முதலிய மாலைகள் அமைத்து, சிவபெருமான் திருமேனியில் அழகுறும் வண்ணம் சாத்துவது; சிவபெருமானுடைய மேலான கீர்த்தியினை வாயார வாழ்த்துவது; சிவனடியார் திருவேடத்தைக் கண்ட பொழுதே ''அடியேனால் செய்யத்தக்க அடித்தொண்டு யாது? அதனை அருள வேண்டும்'' என்று வணங்கி, அவர் அருளிச் செய்யும் பணி விடையைச் செய்வதும் ஆகும். இந்த சரியைத் தொண்டு, இந்திரியத் தொழில் ஆகிய புறத்தொழில் அளவில் மட்டும், சிவபெருமான் உருவத் திருமேனியை நோக்கி வழிபடுவதுஆகும். ஆகவே, இதனைக் கடைப்பிடிப்பவர் சிவசாலோகம் ஆகிய பதமுத்தியைப் பெறுவர்.

புத்திர நெறி ஆகிய கிரியையின் இலக்கணமும் அதன் பயனும் இவை எனக் கூறுகின்றது

புத்திர மார்க்கம் புகலில், புதிய விரைப்போது
புகை, ஒளி, மஞ்சனம்,அமுது முதல் கொண்டு ஐந்து
சுத்தி செய்து, ஆசனம், மூர்த்தி, மூர்த்திமான் ஆம்
சோதியையும் பாவித்து, ஆவாகித்துச் சுத்த
பத்தியினால் அருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினொடும் எரியில் வரும் காரியமும் பண்ணி,
நித்தலும் அக்கிரியையினை இயற்றுவோர்கள்
நின்மலன்தன் அருகு இருப்பர் நினையும் காலே. 272

தெளிவுரை:

புத்திரநெறி ஆகிய கிரியையின் இலக்கணம் யாது எனின், புதிய நறுமணம் உடைய மலர்கள், தூபம், தீபம், திருமஞ்சனம் (தூய நீர்), திருவமுது முதலிய பூசைக்கு வேண்டிய எல்லாவற்றையும் தேடி அமைத்துக் கொண்டு, அப்பொருள்களைப் பூத சுத்தி, ஆன்ம சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, லிங்கசுத்தி என்று சொல்லப்பட்ட ஐவகை சுத்திகள் செய்து, சிவாசன மூர்த்தி மூல மந்திரங்களினால் ஆசனம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இட்டு, அந்த ஆசனத்தில் மூர்த்தியை எழுந்தருளச் செய்து, அந்த மூர்த்தியில் மூர்த்திமான் ஆகிய சிவபெருமானைப் பாவனை செய்து வெளிப்படுத்தி நிர்மலம் ஆகிய மெய்யன்பினால் அர்ச்சனை செய்து, துதித்து, நமஸ்காரம் முதலிய வழிபாடு இயற்றி, நித்திய அக்கினி காரியமும் செய்து முடிப்பது ஆகும்.

இந்தக் கிரியை, இந்திரியங்களும் மனமும் கூடித் தொழிற் படுவது ஆகிய புறத்தொழில் அகத்தொழில் என்னும் இரண்டாலும், சிவபெருமானுடைய அருவுருவத் திருமேனியை வழிபடுவது ஆகும். ஆகவே, இதனைக் கடைப்பிடிப்பவர் சிவசாமீபம் ஆகிய பதமுத்தியைப் பெறுவர்.

தோழநெறி ஆகிய யோகத்தின் இலக்கணமும் அதன் பயனும் இவை எனக் கூறுகின்றது

சகமார்க்கம் புலன் ஒடுக்கித் தடுத்து வளிஇரண்டும்
சலிப்பு அற்று, முச்சதுரம் முதல் ஆதாரங்கள்
அகமார்க்கம் அறிந்து, அவற்றின் அரும் பொருள்கள்
உணர்ந்து, அங்கு
அணைந்து போய்,மேல் ஏறி அலர் மது மண்டலத்தின்
முக மார்க்க அமுது, உடலம் முட்டத் தேக்கி,
முழுச் சோதி நினைந்து இருத்தல் முதலாக வினைகள்
உக மார்க்க அட்டாங்க யோகம் முற்றும்
உழத்தல், உழந்தவர் சிவன்தன் உருவத்தைப் பெறுவர்.
273

தெளிவுரை:

தோழ மார்க்கம் ஆகிய யோக நெறி என்பது யாது எனின், கீழ் நோக்கிச் செல்லும் வாயுவையும் மேல் நோக்கிச் செல்லும் வாயுவையும் அடக்கி, சுழுமுனை வாயில் வாயுவ்வுச் செல்லும்படி நிறுத்தி, மனத்தை விடயங்களில் செல்ல ஒட்டாது திருப்பி, முக்கோணம், சதுரம் முதலிய அடையாளங்களை உடைய மூலாதாரம், சுவாதிட்டானம் முதலிய ஆறு ஆதாரங்களையும் உணர்ந்து, அந்த ஆதாரங்களின் அதிதேவதைகளைத் தியானித்து, அந்த ஆறு ஆதாரங்களிலும் சிவபெருமானை வெளிப்படுத்துவதாக நிற்கும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அசபா சத்தியை நோக்கி மேலாகிய பிரமரந்திரம் அளவும், அந்த அசபையுடன் சென்று அணைந்து, அந்த பிரமரந்திரத்தில் (உச்சித்துவாரத்தில்) இருக்கும் தாமரை முகையை மலரும்படி செய்து, அந்த தாமரை மலரின் தாதுக்களில் உள்ள சந்திர மண்டலத்தை மூலாக் கியினால் இளகப் பண்ணி, அந்தமண்டலம் வழியாக ஒழுகும் அமிர் தத்தைத் தேகம் முழுவதும் நிரப்பி, பூரணப் பிரகாசத்தைத் தியானிப்பது முதலியன ஆகும்.

இது வினைகள் கெடுவதற்கு வழி ஆகிய இயமம், நியமம் முதலிய அட்டாங்க யோகம் எனப்படும். இந்த வழிபாடு அகத் தொழில் அளவிலேயே, சிவபெருமானுடைய அருவத் திருமேனியின் இடத்து நிகழ்வது ஆகும். ஆகவே இதனைக் கடைப்பிடிப்பவர், சிவ சாரூபம் ஆகிய பதமுத்தியைப் பெறுவர்.

வாயுவை அடக்கும் முறை வருமாறு:—

வாயு எப்பொழுதும் வெளியே வருவதும் உள்ளே போவதும் ஆக இயங்கிக் கொண்டு இருக்கும். வெளியே வருவது இரேசகம், உள்ளே போவது பூரகம், வெளியே செல்வதை மேல் நோக்கிச் செல்லும் வாயு என்றும் நிசுவாசம் என்றும் கூறுவர். உள்ளே செல்லும் பொழுது கீழ் நோக்கிச் செல்லும் வாயு உசுவாசம் என்றும் கூறுவர். இவ்வாயுவை இவ்வாறு செல்ல ஒட்டாமல் தடுத்து அடக்குவது கும்பகம் எனப்படும். இந்தக் கும்பகம், சுழமுனை நாடி வழியாக, அகத்தில் ஓர் குறியில் மனத்தோடு கூட நிறுத்திப் பழகுவதே வாயுவை அடக்கும் முறை ஆகும்.

ஆறு ஆதரங்கள் வருமாறு:—

1. மூலாதாரம்:— குதத்திற்கு இரண்டு அங்குலத்திற்கு மேல், லிங்கத்திற்கு இரண்டு அங்குலத்திற்குக் கீழ் உள்ள இடம்; இந்த இடத்தில் முக்கோண வடிவம் இருக்கும். அந்த வடிவத்தில் நான்கு இதழ்களை உடைய செந்தாமரையில் வ ஶ ஷ ஸ என்னும் நான்கு எழுத்துக் களும் இருக்கும். இந்த ஆதாரத்தில் விளங்கும் அதி தெய்வம் விநாயகர்.

2. சுவாதிட்டானம்:— இதற்குத் தானம் லிங்கமூலம், வடிவு அறுகோனம். அந்தக் கோணத்தில் அநேக காந்தியினை உடைய ஆறு இதழ்த் தாமரை இருக்கும். அந்தத் தாமரையில், ப ஹ ம ய ர ல என்னும் ஆறு எழுத்துக்கள் இருக்கும். இந்த ஆதாரத்தில் விளங் கும் அதி தெய்வம் பிரமதேவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

3. மணிபூரகம்:– இதற்குத் தானம் நாபி. வடிவு மூன்று வட்டம். இரத்தினப் பிரபை போன்ற பத்து இதழ்களை உடைய தாமரை அந்த இடத்தில் இருக்கும், அதில், 𑌡 𑌢 𑌣 𑌤 𑌥 𑌦 𑌧 𑌨 𑌪 𑌫 என்று பத்து எழுத்துக்கள் இருக்கும். இந்த ஆதாரத்தில் விளங்கும் அதி தெய்வம் விஷ்ணு.

4. அனாகதம்:– இதற்குத் தானம் இருதய கமலம். வடிவு முக்கோணம். இதில் பொன் போன்ற நிறத்தினை உடைய பன்னிரண்டு இதழ்த் தாமரை மலர் இருக்கும். அதில், 𑌕 𑌖 𑌗 𑌘 𑌙 𑌚 𑌛 𑌜 𑌝 𑌞 𑌟 𑌠 எனப் பன்னிரண்டு எழுத்துக்கள் இருக்கும். இந்த ஆதாரத்தில் விளங்கும் அதி தெய்வம் உருத்திரன்.

5. விசுத்தி:– இதற்குத் தானம் கண்டம். வடிவு அறுகோணம். இதில் வெண்மை நிறம் உடைய பதினாறு இதழ்த் தாமரை இருக்கும். அதில் 𑌅 𑌆 𑌇 𑌈 𑌉 𑌊 𑌋 𑍠 𑌌 𑍡 𑌏 𑌐 𑌓 𑌔 𑌅𑌂 𑌅𑌃 என்னும் பதினாறு எழுத்துக்கள் இருக்கும். இந்த ஆதாரத்தில் விளங்கும் அதி தெய்வம் மகேசுவரன்.

6. ஆக்கினை:–இதற்குத்தானம் புருவ நடு. இதில் இரண்டு இதழ்களை உடைய செந்தாமரை இருக்கும். அதில் 𑌹 𑌕𑍍𑌷 என்னும் இரண்டு எழுத்துக்கள் இருக்கும். அதில் விளங்கும் அதி தெய்வம் சதாசிவர்.

இந்த ஆறு ஆதாரங்களையும் ஆதனமாகக் கொண்டு, அவற்றிற்கு மேல் ஆகிய பிரமரந்திரத்தில், ஆயிரம் இதழ்களை உடைய தாமரை மலரின் மேல் பரமசிவன் எழுந்தருளி இருப்பர்.

''அசபை'' என்பது, நாத வடிவாய் இருக்கும். குண்டலினி சத்தியின் சொரூபத்தைக் குறிக்கும். ''அட்டாங்க யோகம்'' என்பது, இயமம், நியமம், ஆதனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எண்வகைப்படும், அவற்றுள், ''இயமம்'' என்பது, கொல்லாமை, உண்மை கூறல், களவு செய்யாமை, பிறர் பொருள் விரும்பாமை, இந்திரியங்களை விடயங்களில் (அனுபவத்தில்) செல்ல ஒட்டாது அடக்குதல் என்பன ஆகும்.

''நியமம்'' என்பது, தவம், சுத்தம் உடைமை, தத்துவ நூல் ஆராய்தல், பெற்றது கொண்டு மகிழ்தல், தெய்வம் வழிபடுதல் என்பன ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''ஆதனம்'' என்பது, உட்கார்ந்து இருக்கும் முறைமையில் பல்வேறு வகையைக் குறிக்கும். அஃதாவது எவ்வாறு இருந்தால் அநுசந்தானம் (இடையறாது சிந்தித்தல்) செய்வதற்குச் சுகமாய் இருக்குமோ அவ்வாறு இருப்பது ஆகும்.

''பிராணாயாமம்'' என்பது, மனத்தைப் புறத்துச் செல்ல ஒட்டாமல் அடக்குவதைக் குறிக்கும்.

''தாரணை'' என்பது மனத்தை அகத்து ஓர் இடத்தில் நிறுத்துவது ஆகும்.

''தியானம்'' என்பது வழிபடு கடவுளின் வடிவத்தை (மூர்த்தியின் சொரூபத்தை) மனத்தால் பாவித்துச் சிந்தித்தலைக் குறிக்கும்.

''சமாதி'' என்பது மூர்த்தி ஆகிய தோற்றமும், சிந்திப்பது. ஆகிய தொழிலும், சிந்திக்கின்ற தானும் ஆகிய பேதங்கள் இன்றி மூர்த்தியும் தானும் இரண்டறக் கலந்து நிற்பதைக் குறிக்கும். இந்த எட்டும் தோழ நெறி என்ற யோகத்துள் அடங்கும்.

இஃது எவ்வாறு எனில், வாயுவை அடக்குவது பிராணாயாமம், புலன் ஒடுக்குவது ஆகிய மனம் அடக்கம் பிரத்தியாகாரம்; சுழுமுனா மார்க்கத்தில் செலுத்துவது தாரணை, ஆதாரங்களையும் அதி தெய்வங் களையும் அறிவது தியானம். இயமம், நியமம், ஆதனம் ஆகிய மூன்றும் உடையவர்க்கே இந்த சிந்தனை கைகூடும்.

சன்மார்க்கம் ஆகிய ஞானத்தின் இலக்கணமும் அதன் பயனும் இவை எனக் கூறுகின்றது.

சன்மார்க்கம், சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்கள் தாம் பலவும் உணர்ந்து
பன்மார்க்கப் பொருள் பலவும் கீழாக மேலாம்
பதி பசு பாசம் தெரித்துப் பரமசிவனைக் காட்டும்;
நன்மார்க்க ஞானத்தை நாடி, ஞான
நேயமொடு ஞாதிருவும் நாடா வண்ணம்,
பின்மார்க்கச் சிவன் உடனும் பெற்று ஞானப்
பெருமை உடையோர் சிவனைப் பெறுவர்;
தானே, 274

21

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சன்மார்க்கம் ஆகிய ஞானநெறி என்பது, எல்லாக் கலை ஞானங்களும், புராணங்களும், வேத சிவாகமங்களில் உள்ள கரும காண்டங்களும், ஏனைச் சமய சாத்திரங்களும் ஆராய்ந்துஅவற்றின் பொருள்கள் யாவும் கீழ் எனக் கண்டு கழித்து, மேல் ஆகிய பதி பசு பாசங்களின் தடத்த இலக்கணங்களையும், அவற்றுள் பசு பாசம் நீங்கிய பதியின் சொரூப இலக்கணத்தையும், உணர்த்துவதாகிய ஞான சாத்திரங்களைத் தானாக ஓதியும் ஆசிரியனிடத்துக் கேட்டும், கேட்டவாறு சிந்தித்தும், சிந்திப்பதில் காணப்படும் ''காண்பான், காட்சி காணப் படும் பொருள்'' ஆகிய சவிகற்ப ஞானத்தையும் கடந்து, அந்த மூன்றும்இன்றி அத்துவிதமாய் இயைந்த அகண்டாகார சச்சிதானந்தப் பிழம்பு ஆகிய சிவபெருமான் இடத்தில் நிருவிகற்ப ஞானத்தால் செய்யும் வழிபாடு ஆகும்.

இந்த இடத்தில் ''வழிபாடு'' என்பது, திரிபுடி இன்றி நிருவிகற்ப ஞானமாய் நிற்பதே ஆகும். இந்த வழிபாடு, புறத்தொழில்அகத்தொழில் இரண்டும் இன்றி, அறிவுத்தொழில் மட்டுமே ஆக, சிவபெருமானுடைய உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூன்று திருமேனிக்கு மேல் ஆகிய சொரூபத் திருமேனி இடத்தில் நிகழ்வதாகும். இதனைக் கடைப் பிடித்தவர் சிவசாயுச்சியம் ஆகிய பரமுத்தியைப் பெறுவர்.

''சன்மார்க்கம்'' என்பது சத்தியம் ஆகிய நெறி எனப்படும். அந்தப் பெயர்க்குக் காரணம், சரியை முதலிய நெறிகளும் அவற்றின் பயன் ஆகிய சாலோகம் முதலிய பத முத்திகளும், அநித்தம் ஆகையால் அசத்தியம் என்பதனாலேயே ஆகும். ''அநித்தம்'' என்பது மேலானது இல்லை என்பதைக்குறிக்கும். ஞானமும் அதனால் பெறும் சிவசாயுச்சியமும் மேல் ஆனதாலும், அதற்கு மேல் இல்லாமையாலும் சத்தியம் ஆயிற்று. ஆகவே இந்த ஞான நெறிக்குச் சத்தியநெறி எனப் பெயர் ஆயிற்று.

சத்தியநெறி ஆகிய சன்மார்க்கத்தைச் சுருக்கமாகக் கூறும் இடத்து, எல்லாச் சாத்திரப் பொருள்களையும் உணர்ந்து, அந்தப் பொருள் எல்லாம் கீழ் எனக் கழித்து, ஞான சாத்திரப் பொருளை நாடி, சிவபெருமான் திருவடியில் இரண்டறக் கலத்தல் என முடித்துக் கொள்ளலாம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஞானத்தால் வழிபடுவதுஆகிய ஞான யாகமே முத்தியைத் தரும் எனவும், கன்மம் முதலிய நான்கு யாகங்களும் போகத்தைத் தரும் எனவும் கூறுகின்றது

ஞான நூல்தனை ஓதல், ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல், தான்கேட்டல், நன்றா
ஈனம் இலாப் பொருள் அதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவன் அடி அடைவிக்கும் எழில்ஞானபூசை.
ஊனம் இலாக் கன்மங்கள், தபம், செபங்கள், தியானம்
ஒன்றுக்கு ஒன்று உயரும்; இவை ஊட்டுவது யோகம்;
ஆனவையால் மேலான ஞானத்தால் அரனை
அர்ச்சிப்பர், வீடுஎய்த அறிந்தோர் எல்லாம். 275

தெளிவுரை:

சிவதருமோத்திரம் என்னும உபாகமத்தில் கூறியவாறு, இறைவனை வழிபடுகின்ற முறை ஐவகைப்படும். அவை கன்ம யாகம், தவயாகம், செபயாகம் தியான யாகம், ஞானயாகம் எனப்படும். ''யாகம்'' என்பது வழிபாடு ஆகும். அவற்றுள் குறைவு இல்லாத ''கன்மயாகம்'' என்பது, விடிய ஐந்துநாழிகை முன்பு எழுந்திருந்து செய்யும் சிவ சிந்தனை முதலாக சிவபூசை, அக்கினி காரியம் ஈறு ஆகிய செயல்கள் ஆகும். ''தவயாகம்'' என்பது சாந்தீராயண விரதம் முதலியவற்றால் சரீரத்தை மெலிவித்தல் ஆகும். ''செபயாகம்'' என்பது, மந்திரங்களை வாசகம், ரகசிய மானதம் என்னும் முறையில் தத்தம் தகுதிக்கு ஏற்றவாறு செபித்தல் ஆகும். ''தியானயாகம்'' என்பது இருதயம் முதலிய இடங்களில் சதாசிவன் முதலிய மூர்த்திகளின் திருமேனிகளைப் பாவித்துத் தியானிப்பது ஆகும். இந்த நான்கு யாகங்களும் ஒன்றுக்கு ஒன்று உயரும். உயர்வானது என்பதற்குப் பொருள் உலகப்பற்று நீங்கப் பெறுவதைக் குறிப்பது ஆகும். ஆயினும் பற்று நீக்கம் அறவே உண்டாகாது; ஆகவே அந்த வழிபாடுகள் போகத்தையே கொடுக்கும். போகம் என்பது, சாலோகம் முதலிய பதமுத்தி ஆகும்.

இனி ''ஞானயாகம்'' என்பது, 1. ஞானசாத்திரத்தை முன்னொடு பின் மலைவு அற ஆசிரியன் இன்றிப் படித்தலும், 2. தான் படித்தபடி பக்குவம் உடைய பிறர்க்குப் படிப்பித்தலும், 3. அந்த சாத்திரப் பொருள்களை நுட்பமாய் ஆராய்ந்து பிறர்க்குச் சொல்லுவதும்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவ்வாறு சொன்னாலும் இஃது ஆராய்ச்சி அறிவே அன்றி அனுப அறிவு ஆகாது; ஆகவே அனுபவ அறிவு விளங்கும் பொருட்டு, 4. ஞானாசிரி யனிடத்து உபதேச முறையில் அந்த சாத்திரப் பொருளைக் கேட்டலும், 5.கேட்டவாறே தனித்து இருந்து சிந்தித்தலும் என ஐந்து வகைப்படும். இந்த ஞானயாகமே முத்தியைத் தரும். முத்தி அடைய விரும்புபவர் யாவரும் மேம்பட்ட ஐவகையான இந்த ஞானயாகத்தினாலேயே சிவ பிரானை வழிபடக்கடவர்.

''சாந்திராயணம்'' என்பது அமாவாசை முதல் பவுர்ணமி வரை உண்ணும் அன்னத்தை, பதினைந்து பங்கு ஆக்கி நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு பங்காகக் குறைத்து உண்ணுவதும், பவுர்ணமி முதல் அமாவாசைவரை அவ்வாறே கூட்டி உண்ணுவதும் ஆகும்.

''வாசகம்'' என்பது பிறர்க்குக் கேட்கும்படி செபித்தல் ஆகும்; ''ரகசியம்'' என்பது, தன் செவிக்குக் கேட்கும்படி செபித்தல் ஆகும்; ''மானதம்'' என்பது, அஞ்செழுத்துக்களை மனத்தால் பாவித்தல் ஆகும். முன்னைய இரு செபங்களிலும் எண்ணிக்கை கூடும்; மானதத்தில் எண்ணிக்கை கூடாது.

ஞானாசிரியனிடத்துக் கேட்கும் முன்பு பிறர்க்குச் சொல்வது கூறியிருப்பதால், சாத்திரப் பொருளைத் தன்னுடைய நுண்ணறி வினால் அறிந்து சொல்ல முடியும் என்பது பெறப்படும். அனுபவம் உண்டாவதற்கு உரிய சிந்தனை கைகூடும் முறைமையை ஆசிரிய னிடத்து உபதேச முறையால் கேளாதவர் சொல்ல முடியாது என்பதும் பெறப்படும். உபதேசம் கேட்டு, அனுபவம் வந்த பின்பு, பிறர்க்கு உபதேச நெறியைச் சொல்லும்பொழுது, அந்தச் செயல் சிந்தனையுள் அடங்கும். எனவே அதனை வேறாகக் கூறாமல் இருந்தார். ''சிந்தித்தல்'' என்று கூறியதனாலேயே அனுபவம் வந்த பிறகு, பிறர்க்கு உபதேசிக்கலாம் என்பது பெறப்படும்.

உண்மை ஞானம் நான்கு வகைப்படும் எனவும் ஞானத்திற்கு வராமல் ஓதல் முதலியவற்றில் நின்று சரீரம் நீங்கினவர் கதி இது எனவும் கூறுகின்றது.

கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை
 கிளத்தல்என ஈர்இரண்டாம்; கிளக்கில் நூன்ம
வீட்டை அடைந்திடுவர்; நிட்டை மேவினோர்கள்
 மேவாது தப்பினவர் மேலாய பதங்கட்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஈட்டிய புண்ணிய நாதர் ஆகி இன்பம்
இனிது நுகர்ந்து அரன் அருளால், இந்தப் பார்மேல்
நாட்டிய நல் குலத்தினில் வந்து அவதரித்துக் குருவால்
ஞான நிட்டை அடைந்து அடைவர் நாதன் தாளே. 276

தெளிவுரை:

மேற்கூறிய ஞான யாகம் ஐந்தனுள் ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தல் ஆகிய முன்னைய மூன்றும், ஆசிரியனை இன்றியும் நிகழ்வன ஆகும். ஆகவே ஆசிரியரால் அறிவுறுத்தப்படும் கேட்டல். சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் நான்குமே உண்மை ஞானம் எனப்படும். இந்த நான்கிலும் முறையே பழகி, நிட்டை பொருந்தியவர் வீட்டினை அடைவர். இந்த நான்கினுள் வாராது, தீக்கையில் அத்துவசுத்தி பண்ணப்பட்டு, ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தல் ஆகிய மூன்றினும் நின்று சரீரம் நீங்கினவர் சிவலோகம் முதலிய பதமுத்திகளைப் பெற்று, அங்குள்ள இன்பத்தினை நன்கு அனுபவித்து, முதல்வன் ஆணையால் அங்கிருந்து நீங்கி, இந்த உலகத்தில் உயர்ந்த குலத்தில் பிறந்து, ஞானாசிரியனை அடைந்து கேட்டல் முதலிய ஞானநெறியால் நிட்டையினைக் கூடி வீட்டினை அடைவர்.

இந்த உலகத்திற்கு வராமல் சிவலோகத்தில் சிவபிரானே குருவாய் உபதேசிக்க, கேட்டல் முதலிய ஞானத்தைப் பெற்று நிட்டை யினால் வீட்டை அடையினும் அடைவர். ஆகவே, இங்கு வரவேண்டும் என்பது நியதம் அன்று.

தானம் முதலியன பசு புண்ணியம் எனவும், சரியை முதலிய மூன்றும் பதி புண்ணியம் எனவும், இந்த மூன்றும் ஞானத்தைப் பயப்பித்து முத்தியைத் தரும் எனவும் கூறுகின்றது.

தானம், யாகம், தீர்த்தம், ஆச்சிரமம், தவங்கள்,
சாந்தி, விரதம், கன்ம யோகங்கள் சரித்தோர்,
ஈனம் இலா சுவர்க்கம் பெற்று இமைப்பளவில் மீள்வர்;
ஈசன் யோகக் கிரியா சரியையினில் நின்றோர்,
ஊனம் இலா முத்தி பதம் பெற்று, உலகம் எல்லாம்
ஒடுங்கும்போது, அரன்முன் நிலாது ஒழியில் உற்பவித்து
ஞானநெறி அடைந்து, அடைவர் சிவனை, அங்கு
நாதனே முன் நிற்கில், நணுகுவர் நல்தானே. 277

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சிறப்பான தரும நெறிகள் வேதத்தில் பல இருப்பினும், ஞானநெறியைச் சிறந்து எடுத்துக் கூறியது ஏன் என்றால், தானம் கொடுத்தல், யாகம செய்தல், புண்ணிய தீர்த்தங்கள் ஆடல், பிரமசரியம் முதலிய தத்தம் நிலைகளில் தவறாது நிற்றல், உண்டி சுருங்குதல் முதலிய தபசுகள் செய்தல், பிராயச் சித்தங்கள் பண்ணல், விரதம் காத்தல், பிராண வாயுவை அடக்குதல் ஆகிய கரும யோகம் செய்தல் ஆகிய இவைகள், பசு புண்ணியம் ஆகும்.

இவற்றைக் கடைப் பிடித்தவர் துன்பம் இன்றி இன்பமே மிகுந்து இருக்கும் சுவர்க்க உலகத்தினை அடைந்து அங்குள்ள போகங்களை அனுபவித்து விரைந்து மீளுவர். இவ்வாறு மேலே போயும் மீளுவதற்கு ஏது ஆகிய பசுப் புண்ணியம் போன்றதன்று சிவ புண்ணியம். சரியை, கிரியை, யோகங்கள் ஆகிய சிவபுண்ணியங்களை விதிப்படி கடைப் பிடித்தவர் உண்மை ஞானத்தைப் பொருந்தாது, ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தல் ஆகிய மூன்றின் நின்று தப்பினவரோடு ஒப்ப சாலோகம் முதலிய பதமுத்திகளில் நெடுங்காலம் தங்கி உலகம் முழுவதும் சங்காரப்படும் பொழுது, போகத்தில் வைராக்கியம் பிறவாது இருந்தால், முதல்வன் குரு மூர்த்தியாய்த் தோன்றி அருள் பாலிக்க மாட்டான். ஆத லால் மீண்டும் பிறவியை அடைந்து, குரு அருளால் ஞான நெறியைத் தலைப்பட்டு வீடு அடைவர்.

சாலோகம் முதலிய பதமுத்தியில் இருந்தவாறே போகத்தில் வைராக்கியம் பிறக்கும் ஆயின், அந்த இடத்திலேயே முதல்வன் குரு மூர்த்தியாய்த் தோன்றி அருள் செய்வன். அவ்வாறு அருள் செய்யப் பெற் றால், பிறவியை எடாமலே முத்தியில் கலப்பர். ஆதலால் தானம் முதலி யன போல் அன்றி, எந்தவகையிலும் சரியை முதலியன, சாலோகம் முதலிய பத முத்திகளைத் தந்து முடிவான முத்தியையும் தரும்.

தானமும் சாமானியருக்குக் கொடாமல், சிவ ஞானிகளுக்குக் கொடுத்தால் முத்திக்கு ஏது ஆகும் எனக் கூறுகின்றது.

சிவஞானச் செயல் உடையோர் கையில் தானம்
திலம் அளவே செய்திடினாம், நிலமலைபோல திகழ்ந்த
பவமாயக் கடலில் அழுந்தாத வகை எடுத்துப்,
பரபோகம் துய்ப்பித்து பாசத்தை அறுக்கத்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தவம் ஆகும் பிறப்பு ஒன்றில் சாரப் பண்ணிச்
சரியை கிரியா யோகம் தன்னிலும் சாராமே
நவமாகும் தத்துவ ஞானத்தை நல்கி
நாதன் அடிக் கமலங்கள் நணுகுவிக்கும்தானே. 278

தெளிவுரை:

சரியை முதலியவைகளைக் கடைப்பிடிக்கும் விதிவழி இன்றி, சிறுத்தொண்டர் முதலாயினார் போன்று பத்தி வழியில் நின்று, சிவஞானச் செயல் உடைய ஞானிகள் கையில், தானமாகக் கொடுத்த பொருள் சிறிதே ஆயினும், அந்த தானம் பூமியைப் போலும் மலையைப் போலும் விரிவாகி ஓங்கும். ஆதலால், அது பதி புண்ணியம் எனப்படும். அந்த தானத்தைச் செய்த பத்தர் (அன்பர்), மேற்கூறியவாறு பசு புண்ணியத்திற்கு உரிய சுவர்க்க உலோகங்களை அடையாது, பதி புண்ணியத்திற்கு உரிய சிவசாலோகம் முதலிய பதங்களை பொருந்தி, அங்குள்ள இன்பங்களை அனுபவித்து, பின்னர் இந்த உலகத்தில் தவம் செய்வதற்கு உரிய உயர்ந்த குலத்தில் ஒரு பிறவியை அடைந்து, சரியை கிரியை யோகங்களை ஏனையோர்க்குப் போல கால நீட்டிப்பும் அருமையும் இன்றிச் செய்து, பிறப்பு இறப்பு என்னும் கடலில் அழுந்தாத வண்ணம், பாசத்தை நீக்குவதற்கு உரிய உண்மை ஞான நெறியினைப் பொருந்தி, முதல்வனது திருவடி ஆகிய வீட்டினை அடைவர்.

வீடு பேற்றிற்குச் சிறந்த சாதனம் ஞானமே அன்றிப் பிறிது இல்லை எனக் கூறுகின்றது:

"ஞானத்தால் வீடு" என்றே நான்மறைகள் புராணம்
நல்ல ஆகமம் சொல்ல, அல்லவாம் என்னும்
ஊனத்தார் என் கடவர்? அஞ்ஞானத்தால்
உறுவதுதான் பந்தம்; உயர்மெய்ஞ்ஞானம்தான்
ஆனத்தால் அதுபோவது, அலர்கதிர்முன் இருள்போல்
அஞ்ஞானம் விடப், பந்தம் அறும் முத்தி ஆகும்;
ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்,
இறைவன் அடி ஞானமே ஞானம் என்பர். 279

தெளிவுரை:

வேதாகமம் முதலிய பிரமாண நூல்கள் எல்லாம், ஞானம் அல்லாத பிற எல்லாம் ஞானத்தை உண்டு பண்ணுவதற்குச் சாதனம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்றும், ஞானம் ஒன்றே வீடுபேற்றிற்குச் சாதனம் என்றும் துணிந்து கூறுகின்றன. அந்நிலையில் அவற்றோடு பிணங்கி வீடு பேற்றிற்கு தீக்கையே அமையும், வேள்வியே அமையும், பத்திநெறியே அமையும் என்று பிதற்றுபவரை எந்த வகையாலும் அறிவுறுத்தித் திருப்ப முடியாது. ஞானம் அல்லாதன எல்லாம் அஞ்ஞானம் ஆதலின், அவர்க்கு அந்த அஞ்ஞானப் பகுதிகளால் பந்தம் உறுதலே அன்றி, வீடுபேறு அடைதல் கூடாது. அந்த அஞ்ஞானங்கள் எல்லாம், விரிந்த ஒளி முன் இருள் போல, ஞானத்தால் கெட்ட ஒழியும் . ஒழியவே அஞ்ஞானத்தால் ஆகிய பந்தம் நீங்கும், பந்தம் நீங்கவே முத்திநிலை கூடும். ஆகவே ஞானம் ஒன்றே முத்திக்குச் சிறந்த சாதனம் ஆகும்.

இந்த ஞானமும் பசுஞானம், பாசஞானம், பதிஞானம் என மூன்று வகைப்படும். அவற்றுள் ஏனைச் சமயிகள் கூறும் ஞானங்கள் எல்லாம், பசுஞானம் பாசஞானங்களே ஆகும். இந்த இரண்டு ஞானங்களின் வேறு ஆகிய முதல்வன் திருவடியை அடையச் செய்வது ஆகிய பதிஞானமே, மேற்கூறிய உண்மை ஞானம் ஆகும். அவ்வாறு வேதாகமங்களை உணர்ந்த பெரியவர்கள் கூறுவர்.

தீக்கை முதலியன அஞ்ஞானம் எனக் கூறியதனால், அவற்றை அனுட்டிக்க வேண்டாமென்பது கருத்தன்று. ஞானம் வருவதற்காக அவையாவும் அனுட்டிப்பதற்கு உரியனவே ஆகும். இல்லாவிட்டால்,

"அழிவு இலாக் கிரியையினால் ஆதல், சத்திமத்தால்
ஆதல், அத்துவா சுத்திபண்ணி, மலம் அகற்றி
ஒழிவிலாச் சிவம் பிரகாசித்தற்கு, ஞானம்
உதிப்பித்து, உற்பவம் துடைப்பன் அரன்"

என்று மேலே கூறிய 258 –ஆவது செய்யுளோடு முரணுமாறு அமையும். எனவே தீக்கை, இன்றியமையாதது என்பது பெறப்படும், அவ்வாறாயின், இந்த இடத்தில் அவற்றை அஞ்ஞானம் எனக் கூறுவானேன் என்றால், அவை ஞானமே எனப் பிணங்குபவர்க்கு, ஞானம் அவை அல்ல என்பது உணர்த்துதல் பொருட்டு, அஞ்ஞானச் சொல் இங்குப் பயன் படுத்தப்பட்டது என்று தெளிவு பெறல் வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கேட்டல் ஆகிய ஞானத்தின் முறையும் அதன்கண் நிகழும் அனுபவமும் இவை எனக் கூறுகின்றது:

சூரிய காந்தக் கல்லின் இடத்தே, செய்ய
சுடர் தோன்றியிடச், சோதி தோன்றுமா போல்,
ஆரியனாம் ஆசான் வந்து அருளால் தோன்ற
அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்; தோன்றத்
தூரியனாம் சிவன் தோன்றும்; தானும் தோன்றும்;
தொல் உலகம் எல்லாம் தன் உள்ளே தோன்றும்;
நேரியனாய்ப் பரியனுமாய் உயிர்க்கு உயிராய் எங்கும்
நின்ற நிலை எல்லாம் முன் நிகழ்ந்து தோன்றும் 280

தெளிவுரை:

ஞானம், கேட்டல் முதலியனவாக நால்வகைப்படும். ஆகவே அவற்றுள் கேட்டலும் அதன்கண் நிகழும் அனுபவமும் வருமாறு:

சூரிய சந்நிதி அளவிலேயே, சூரிய காந்தக் கல்லின் இடத்து நெருப்பு விளங்கித் தோன்றும். அதுபோல ஞான சாத்திரப் பொருளை உபதேச முறையால் சொல்லும் தகுதியுடனே வந்து தோன்றும் ஞானாசிரியன் சந்நிதி அளவிலேயே, மாணாக்கனுக்குக் கேட்டல் அறிவு விளங்கித் தோன்றும். தோன்றவே, முதல்வன் ஆகிய பதியும், பதியின் உள்ளே பசுவும், பசுவின் உள்ளே பிரபஞ்ச வடிவாய் உள்ள பாசமும், உயிர்க்கு உயிராய்ச் சிறிதாயும் எவற்றினும் வியாபகமாய் பெரிதாயும் நின்ற பதியின் நிலையும் நிருவிகற்பமாய்த் தோன்றும்.

ஆசிரியன் நூற்பொருளை உரைக்கும் வழியால், அந்த ஆசிரியனுடைய ஞானமே மாணாக்கன் இடத்துச் சென்று தோன்றுவதே, சந்நிதி மாத்திரையால் (அளவிலேயே) தோன்றும் ஞானம் என்று சிலர் கூறுவர். அதுபொருந்தாது. எப்படி என்றால் சடம் ஆகிய காட்சிப் பொருள் ஒன்றுடன் ஒன்று கூடும். சித்துப்பொருள் அவ்வாறு கூடாது, எதனால் எனின் சித்துப்பொருள் ஆகிய உயிர் வியாபகப்பொருள் ஆகலின், தான் இல்லாத இடம் இல்லை ஆதலால் கூடுமாறு இல்லை, சுவர்க்கம் முதலிய இடங்களில் போக்குவரத்தும் பல சரீரங்களைப் பற்றுதலும் உயிர்க்கு உண்டு என்று கூறும் கருத்துக்குப் பொருள் என்ன என்றால், உயிர் வியாபகம் ஆயினும், ஒன்றினைப் பற்றும் பொழுது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிறிது ஒன்றினைப் பற்றாது என்பதே உண்மை ஆகும். அஃதாவது மண்ணுலகத்தைப் பற்றும்பொழுது, சுவர்க்க நரகங்களைப் பற்றாது. மண்ணுலகத்திலும் ஓர் உடம்பை பற்றும் பொழுது பிறிதோர் உடம்பைப் பற்றாது, ஓர் உடம்பைப் பற்றி நிற்கும் பொழுதும் ஒரு கருவியைப் (இந்திரியம்) பற்றும் பொழுது பிறிது ஒரு கருவியைப் பற்றாது. எனவேதான் உயிர் ஏகதேச வியாபகம் எனப்பட்டது.

போக்குவரத்துக்கள் ஆகிய இறப்பு, பிறப்பு என்பன ஒன்றை விடுதலும் பிறிது ஒன்றைப் பற்றுதலும் ஆகிய அவ்வளவே ஆகும், இத்தகைய உயிர் பிறிதோர் உயிரைக் கூடாது, கூடவேண்டுவதும் இல்லை.

இனி, இறைவன் ஆகிய சித்துப் பொருளோ எக்காலத்தும் உயிரோடு அத்துவிதமாய் கலந்து இருக்கும், இருந்தாலும், உயிர் இறைவனைக் கூடுவது என்பது பிறவற்றின் பற்றை விட்டு இறைவனைக் கலந்து இருப்பதை அறிவதே ஆகும். ஆகவே, சித்துப் பொருள்கள் ஒன்றோடு ஒன்று கூடுவது இல்லை என்பது சிவாகம நூல் துணிபு ஆகும். மலம் மாயா கன்மங்களும் வியாபகமே ஆயினும், ஆணவமலம் ஆன்ம அறிவை மறைப்பதால் ஆன்மாவைப் பற்றியும் மாயை கன்மங்கள் இறைவனுள் அடங்கியும் நிற்பன. ஆதலால் அவையும் ஒன்றுடன் கூடுவனவே ஆகும். ஆகவே, சடப்பொருள்களுக்கு ஒன்றோடு ஒன்று கூடுவது உண்டு என்பது எல்லா இடங்களிலும் பொருந்தும், ''சந்நிதிமாத்திரை'' என்பதற்குப் பொருள், ஆசிரியன் அருளால் மாணாக்கனுடைய அறிவு விளங்கித் தோன்றுதல் ஆகும்.

சிந்தித்தல் ஆகிய ஞானத்தின் முறையும் அதன்கண் நிகழும் அனுபவமும் இவை எனக் கூறுகின்றது:

மிக்கதொரு பக்குவத்தில் மிகு சத்தி நிபாதம்
மேவுதலும், ஞானம் விளைந்து ஓர் குருவின் அருளால்
புக்கு அனுட்டித்தே நிட்டை புரிந்துளோர்கள்
பூதலத்தில் புகழ் சீவன்முத்தர் ஆகித்
தக்க பிரிய அப்பிரியம் இன்றி, ஓட்டில்
தபனியத்தில் சமபுத்தி பண்ணிச் சங்கரனோடு
ஒக்க உறைந்து இவர் அவனை, அவன் இவரை விடாதே
உடந்தையாய்ச் சிவன் தோற்றம் ஒன்றுமே காண்பர். 281

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

தீவிரதர சத்திநிபாதம் உடைய மாணாக்கருக்குக் கேட்டல் அறிவு, மந்தம் ஆதல் அன்றி முதிர்ந்து முறுகி விளையும். அந்நிலையில் தம் ஆசிரியரால் ஆவது, தம்மோடு ஒத்த ஒரு சாலை மாணாக்கருள் மூத்தவர் ஒருவரால் ஆவது. தான் கேட்ட பொருளை அவர் சிந்திக்கத் தலைப் படுவர்; அதன் முறையைச் சொல்லக் கேட்டு, அந்தப் பொருளில் மனம் ஒருப்பட்டு, நிட்டை கூடுவதில் ஆசை உடையவர் ஆகப் பெறுவர். அவ்வாறு பெற்றால் இந்த உலகில் விருப்பு வெறுப்பு இன்றி, சிந்திக்கும் செயல் ஒன்றையே மேற்கொண்டு, ஓடும் செம்பொன்னும், ஒக்கவே நோக்குவதாய், மற்று ஒன்றிலும் பற்று இன்றி, புகழத்தக்க சீவன் முத்தரோடு ஒத்து, பேரறிவு ஆகிய சிவமும் சிற்றறிவு ஆகிய தாமும், ஆதித்தன் ஒளியும் கண் ஒளியும்போல், அத்துவிதமாய்க் கலந்து நிற்பர், அந்நிலையில் தாம் ஒரு பொருள் உண்டு என்று அறியப்படாது, சிவத்தோற்றம் ஒன்று மட்டுமே காணப்பெறுவர். அவ்வாறு காணப்பெறும் நிலை, சவிகற்பம் என்றாவது நிருவிகற்பம் என்றாவது சொல்ல முடியாத இடைநிலையாய் இருக்கும்.

தெளிதல் ஆகிய ஞானத்தின் நெறியும் அதன்கண் நிகழும் அனுபவமும் இவை எனக் கூறுகின்றது

அறியாமை அறிவு அகற்றி, அறிவின் உள்ளே
அறிவுதனை அருளினால் அறியாதே அறிந்து,
குறியாதே குறித்து, அந்தக் கரணங்களோடும்
கூடாதே வாடாதே குழைந்து இருப்பை ஆகில்,
பிறியாத சிவன் தானே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதம் எல்லாம் தானாய்த் தோன்றி
நெறியிலே இவை எலாம் அல்லவாகி
நின்று என்றும் தோன்றிடுவன் நிராதாரன் ஆயே. 282

தெளிவுரை:

மேலே கூறியவாறு ஞானாசிரியன் திருவருளால், முதல்வனை அறியாமலும் உலகத்தை அறிந்தும் இருக்கின்ற இருவகைப் பாசங்களும் நீங்கி, முதல்வனை அறியும் முறையைக் கேட்கும் முறையில் கேட்டு, சிந்திக்கும் முறையில் சிந்தித்து அதன் பிறகு, சிந்திக் கப்பட்ட பொருள் மீது அன்பு வைத்து, அந்தக் கரணங்களில் சேராமல்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அடங்கி நிற்கப் பெறுவார் ஆயின், அந்நிலையில் தம்மோடு பிரிதல் இல்லாத முதல்வன் இயல்பு, முன்பு கேட்டபொழுது பொருள் தன்மை பற்றி வேறாய்த் தோன்றி பின்பு சிந்தித்த பொழுது கலப்புப் பற்றி ஒன்றாய்த் தோன்றினும், தெளிந்த இப்பொழுது அந்த இரு தன்மையும் இன்றி, உடனாய் நிற்றல் பற்றி ஒன்றிலும் பற்று இலனாய் எக்காலத்தும் எந்தப் பொருளிடத்திலும் நிறைந்து தோன்றும். இறைவன் இயல்பு இவ்வாறு நிறைந்து தோன்றுவதே தெளிதல் ஆகிய ஞானத்தில் நிகழும் அனுபவம் ஆகும்.

நிட்டை ஆகிய ஞானத்தின் முறையும் அதன்கண் நிகழும் அனுபவமும் இவை எனக் கூறுகின்றது

புண்ணியம் மேல் நோக்குவிக்கும்; பாவம் கீழ் நூக்கும்;
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே
நண்ணிய ஞானத்தினால் இரண்டினையும் அறுத்து
ஞால மொடு கீழ் மேலும் நண்ணான் ஆகி
எண்ணும் இகலோகத்தே முத்தி பெறும் இவன்தான்
"எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு?" என்று குறைவு இன்றிக்
கண்ணுதல்தன் நிறைவுதனில் கலந்து, காயம்
கழிந்தக்கால், எங்குமாய்க் கருது அரன்போல் நிற்பன். 283

தெளிவுரை:

உயிர் தனது வியாபகத் தன்மையை இழந்து ஏகதேசப்பட்டு, நரகத்திற்குக் காரணமாகிய பாவத்தையும், சுவர்க்கத்திற்குக் காரண மாகிய புண்ணியத்தையும் பொருந்தும். (மேல்–சுவர்க்கம்; கீழ்–நரகம்) புண்ணிய பாவம் ஆகிய இரண்டும் ஏகதேசத் தன்மையில் கட்டுப் படுத்தும் தளையே ஆகும். ஆகவே, சிவபெருமானை அர்ச்சித்தல் ஆகிய ஞான பூசையின் பயனால் விளைந்த தெளிதல் என்னும் அரம் கொண்டு, புண்ணிய பாவம் இரண்டினையும் அறுத்தல் வேண்டும். அவ்வாறு அறுத்தலின் பயனால், பூமி நரகம், சுவர்க்கம் என்னும் இடங்களுக்குப் போவதும் வருவதும் ஆகிய ஏகதேசப்படுவது இல்லை யாய் ஒழியும். அஃது ஒழியவே, அத்தகைய ஆன்மாக்கள் கரணங்களின் வயப்படாமல், இறைவனது வியாபகத்தில் கலந்து நிற்கும். அந் நிலையில், சூரியன் எந்த இடத்தில் உதயம் ஆயினும் அதனால் தமக்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆவதோர் பயன் இல்லை என்று இறுமாந்து, எந்தவிதமான குறைவும் இன்றி, இந்த உலகில் இருக்கும் பொழுதே சீவன் முத்தர் ஆகி, இந்த உடம்பு நீங்கப் பெறும் பொழுது பரமுத்தி நிலையை அடைவர்.

அஃது எதுபோல எனின், பெருங்காயம் இருந்து எடுத்த கலத்தில், அந்த வாசனை தங்கி இருப்பது போல், சீவன் முத்தராய் இருந்த காலத்தும் இடையிடையே வந்து தாக்கிக் கொண்டு இருந்த வாசனாமலம் நீங்கி, அழுக்கு நீங்கிய பொழுது ஆடையினது வெண்மை, ஆடை முழுவதும் விளங்கினால்போல, பரமுத்தி நிலையில் தமது வியாபகம் முழுவதும் அறிவு விளங்கப் பெற்று, அவர்கள் முதல்வனோடு ஒத்து நிற்பர்.

ஞான நிட்டை உடையவர், எந்தத் தொழிலைச் செய்தாலும் இறைவன் திருவடியை விட்டுப் பிரியமாட்டார் என்று கூறுகின்றது

ஞாலம் அதில் ஞான நிட்டை உடையோருக்கு
நன்மையொடு தீமைஇல்லை; நாடுவது ஒன்று இல்லை;
சீலம் இல்லை; தவம் இல்லை; விதரமொடு ஆச்சிரமச்
செயல் இல்லை; தியானம்இல்லை; சித்தமலம் இல்லை,
கோலம்இல்லை; புலன்இல்லை; கரணம் இல்லை;
குணம்இல்லை; குறி இல்லை; குலமும் இல்லை;
பாலருடன் உன்மத்தர் பிசாசர்குணம் மருவிப்
பாடலினொடு ஆடல் இவை பயின்றிடினும்
பயில்வர். 284

தெளிவுரை:

ஞான நிட்டையினை உடைய சீவன் முத்தருக்கு இந்த உலகத் தில் நல்வினை தீவினைகள் ஆகிய இருவினைகளும் இல்லை. வினை களைச் செய்தவர் ஆயினும் அவற்றால் எந்த ஒரு பயனையும் அவர் விரும்புவது இல்லை, பலனைக் கருதாது வினைகளைச் செய்யும் பொழுது, சமய ஆசாரங்கள், தவம், விரதம், ஆச்சிரம தருமம், தியான பாவனைகள், சித்த சஞ்சலம், தான் நிற்கும் சமயத்திற்கு ஏற்ற வேடம், விடயங்களை விடுதல், பற்றுதல், அந்தக் கரணங்களை அடக்குதல், சத்துவ குணத்தில் மேம்பட்டு இருக்க வேண்டும் என்ற நியமம், ஒரு குறியிலே மனத்தை நிறுத்துதல், குல ஆசார தருமத்தில் ஒழுகுதல் ஆகிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இவை யாவும் அவருக்கு இல்லை. இவ்வாறு ஒன்றும் இன்றி பாலரைப் போல, இவை எல்லாம் செய்யாது இருப்பினும் இருப்பர். ஒருக்கால் செய்யினும் பித்தர் போல, நியதி இன்றி நேர்ந்தவாறு செய்வர். அவ் வாறு, செய்யும் பொழுதும், பேய் பிடிபட்டவன் போல், தேகத்தில் தான் என்னும் போதம் அற்று, சிவமே தானாக நின்று செய்வர். இஃதன்றி, பரமானந்த மேலீட்டால் பாடல் ஆடல்களைச் செய்திடினும் செய்வர்.

பாலர் சில செயல்களைச் செய்தாலும், பயன் கருதாது செய்வர்; எனவே பாலர் உவமை மாயா மல நீக்கத்தைக் குறிக்கும்; பித்தர் விருப்பு வெறுப்பு இன்றி ஒரு செயலைச் செய்வர். எனவே பித்தர் உவமை கன்ம மல நீக்கத்தைக் குறிக்கும்; பேய்பிடி உண்டவன் தன்னை மறந்து எதை யும் செய்வன்; எனவே பேய்பிடி உவமை ஆணவமல நீக்கத்தை குறிக்கும்.

இதுவும் அது

தேசம், இடம், காலம், திக்கு, ஆசனங்கள் இன்றிச்,
செய்வது ஒன்றுபோல் செய்யாச் செயல் அதனைச் செய்து, அங்கு
ஊசலபடும் மனம் இன்றி, உலாவல், நிற்றல்,
உறக்கம், உணர்வு, உண்டி, பட்டினிஇருத்தல், கிடத்தல்
மாசு அதனில் தூய்மையினில் வறுமை, வாழ்வின்
வருத்தத்தில், திருத்தத்தில், மைதுனத்தில், சினத்தில்,
ஆசையினில், வெறுப்பில் இவை அல்லாதும், எல்லாம்
அடைந்தாலும் ஞானிகள்தாம் அரனடியை அகலார். 285

தெளிவுரை:

சிவஞானிகள் ஒருதேசம், ஓர் இடம், ஒரு காலம், ஒரு திசை, ஓர் ஆசனம் முதலிய நியமம் இன்றி, செய்வதற்கு எளிய உலக காரியங் களை உலகத்தவர் செய்வது போலச் செய்து, செய்தற்கு அரிய நிட்டை முதலியவற்றைச் செய்து, போக்கு வரத்துக்கள், உறங்குதல், விழித்தல் கள், உண்ணுதல், உண்ணாமைகள், இருத்தல் கிடத்தல்களை, களங்கம் பரிசுத்தங்கள், வறுமை செல்வங்கள், துன்பம் இன்பங்கள், புணர்ச்சி கோபங்கள், விருப்பு வெறுப்புக்கள் என்னும் இவையாவும் இன்றி, விகாரம் உறுவதற்கு ஏதுவாகத் தம்முள் மாறுபட்ட பல தொழில்களைச் செய்வர். ஆயினும், அவை பற்றிச் சிறிதும் விகாரப்படுதல் இன்றி முதல்வன் திருவடியை விட்டு நீங்கார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவ்வாறு விகாரமான செயல்களைச் செய்தும், முதல்வன் திருவடியை நீங்காது இருத்தல் எது போல எனின், வாயு வாசனையுடனே கூடிய மிருதுவான தென்றலாகவும், இதற்கு மாறான சூறாவளியாகவும் சரிக்கின்றது என்றாலும், ஆகாயத்தை விட்டு நீங்காமல் இருப்பது போல ஆகும்.

இதனால், பிராரத்த கன்மம் பலவிதமாக இருப்பதால், சிலர் கோபம் உடையவராயும், சிலர் சாந்தம் உடையவராகவும், சிலர் வைராக்கியம் உடையவராயும், சிலர் ஆசை உடையவராயும், சிலர் போக அனுபவம் உடையவராயும் இருப்பார் ஆகலின், சீவன் முத்தருடைய இலக்கணம் இவ்வாறுதான் இருக்கும் என்று வரையறுத்துக் கூற முடியாது என்பது பெறப்படும்.

ஞான நிட்டையில் நிலை பெறாதவர், அந்த நிட்டையில் நிலைப்பதற்குச் செய்யும் உபாயம் இது எனக் கூறுகின்றது

இந்நிலைதான் இல்லையேல், எல்லாம் ஈசன்
இடத்திலும், ஈசன் எல்லா இடத்தினிலும் நின்ற
அந்நிலையை அறிந்து, அந்தக் கரணங்கள் அடக்கி,
அறிவது ஒரு குறி குருவின் அருளினால் அறிந்து,
மன்னுசிவன் தனை அடைந்து நின்று அவன்தனாலே
மருவு பசுகரணங்கள் சிவகரணம் ஆகத்
துன்னிய சாக்கிரம் அதனில் துரியாதீதம்
*தோன்ற முயல் சிவானுபவம் சுவானுபூதிகமாம்.*286

தெளிவுரை:

மேற்கூறிய முறையாலே அகம் புறம் என்னும் பேதம் இன்றிஎந்த இடத்திலும் ஏக நிலையாகக் கண்டு, இறைவன் நிறைவில் அழுந்துவது ஆகிய நிட்டையினை மேவப்பெறாது, பண்டைப் பழக்க வயத்தால் புறத்தே பிரபஞ்சம் காட்சிப்பட வருமாயின், பிரபஞ்சத்தைக் காணும் பொழுதே, இறைவன் பிரபஞ்சத்திற்கு உள்ளும் புறமுமாய் நிற்கும் நிலைமையை உடையவன் எனக் காணவேண்டும். அவ்வாறு காண்பது முடியாதாயின், குருவருளால் அகத்தே திரும்பி ஒரு குறியில் அறிவை நிறுத்தி இறைவனை அறிந்து, அவ்வாறு அறிகின்ற முறையில் நிலை பெற்ற அந்த ஒருமை நிலையை அறிந்து, அப்படி அறியும்பொழுது அறியும் கரணங்கள் எல்லாம் சிவகரணமாகப் பேணி, இவ்வாறு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கருவிகளோடு தொழிற்படுகின்ற சகல சாக்கிரத்தில் தானே, கருவி ஒன்றனோடும் கூடாத நின்மல துரியாதீத நிலை கைகூடும்படி முயல வேண்டும். முயன்றால், சிவ அனுபவத்தை சுவானுபவமாகக் கொண்டு அனுபவிக்கலாம்.

ஞான நிட்டையில் முயலுபவரின் பெருமை இது எனக் கூறுகின்றது

சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகில்
சருவசங்க நிவிர்த்தி வந்த தபோதனர்கள் இவர்கள்
பாக்கியத்தைப் பகர்வது என் இம்மையிலே உயிரின்
பற்று அறுத்துப் பரத்தை அடை பராவுசிவர்
அன்றோ?
ஆக்கு முடி கவித்து அரசு ஆண்டவர்கள், அரிவையரோடு
அனுபவித்து அங்கு இருந்திடினும் அகப்பற்று
அற்று இருப்பர்;
நோக்கி இது புரியாதோர் புறப்பற்று அற்றாலும்
நுழைவர் பிறப்பினில் வினைகள் நுங்கிடாவே. 287

தெளிவுரை:

சாக்கிரத்தில் நின்று கொண்டே பசுகரணங்கள் எல்லாம் சிவகரணமாக, கரணம் கடந்த துரியாதீதத்தைப் பயில்கின்றவர்கள், கருவிகளினின்றும் நீங்கி நிட்டை பொருந்தினவரோடு ஒப்பச் சிறந்தவரே ஆவர். இவர்கள் இந்நிலையினை அடைவதற்கு, முற்பிறவியில் செய்த சிவபுண்ணியப் பேற்றை என் என்று சொல்வது!

இந்த உலகத்தில் உயிர்ப்பற்று நீங்கி, சிவத்தைப் பற்றி நிற்கையில், இவர்கள் சஞ்சரிக்கின்ற சிவமே ஆவர். இத்தகையவர் முடியினை அணிந்துஅரசு புரிந்தாலும், மகளிரோடு கூடி இன்புற்று இருந்தாலும், அகப் பற்று நீங்கியவரே ஆவர், ஆகவே உண்டு, உடுத்து, பூசிமுடித்துச் செய்யும் தொழில் ஒப்புமை பற்றி, அவரை உலகத்தவரோடு வைத்து எண்ணக்கூடாது. இவ்வாறு அகப் பற்று நீங்காதவர், புறப்பற்று நீக்கம் ஆகிய துறவு பூண்டாலும், அவர்களது வினைகள் கெடாமல் மேலும் அவர்களுக்கு வினை ஏறுவதால், அவர்கள் பிறப்பினை அடைவர். எனவே அகப் பற்று நீக்கமே உண்மையில் பற்றுதல் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எட்டாம் சூத்திரம்

மூன்றாம் அதிகரணம்

துன்னிய ஐம்புல வேடர் சுழலில் பட்டு, துணைவனையும் அறியாமல் துயர் உறும் தொல்லுயிர் என்பது

சிவகரணமாய் நின்றபொழுது, சிவனைக் காணக்கூடும் அன்றி, கரணம் கடந்த நிலையில் சிவனைக் காண்பது என்பது பொருந்தாது என்பவரை மறுத்து உரைக்கின்றது

கருவி கழிந்தால் காணார் ஒன்றும் எனில், காணார்
காணாதார் கன்னிகைதான் காமரதம் காணாள்;
மருவி இருவரும் புணர வந்த இன்பம்
வாயினால் பேச அரிது; மணந்தவர்தாம் உணர்வர்;
உருவின் உயர் வடிவு அதுவும் உணர்ந்திலர்காண் சிவனை
உணராதார்,உணர்வினால் உணர்வது கற்பனைகாண்;
அருள்பெறின் அவ்இருவரையும் அறிவு இறந்து அங்கு அறிவர்
அறியாரேல், பிறப்பும்விடாது; ஆணவமும் அறாதே.
288

தெளிவுரை:

தலைமகனும் தலைமகளும் கூடி அனுபவித்த இன்பம் எப்படி இருக்கும் என்பதை வார்த்தைகளால் சொல்ல முடியாது; ஆயினும் அனுபவித்த அவர் அறிவர். அந்த இன்பத்தைப் பக்குவம் இல்லாத கன்னிகை அறியாள். அதுபோல, அதி தீவிரதர பக்குவம் உடையவர்கள் திருவருளைப் பெற்று, விஷய அறிவு இறந்து, தம்மையும் தலைவனையும் அறிந்து மேற்கூறியவாறு இன்புறுவர். அந்தப் பக்குவம் இல்லாதவர் அந்த இன்பத்தினை அறியார். அவர்க்கு உணர்த்தும் வழியும் இல்லை.

அதற்குக் காரணம் என்ன என்றால், பல நிறங்களால் மயங்கித் தன் ஒளி இழந்த படிகம் போல, பிரபஞ்சக் காட்சியால் மயங்கி, ஆன்ம சொரூபம் ஆகிய தன்னை உணராததாலேயே ஆகும். அவ்வாறு பிரபஞ்சக் காட்சி, தன்னை உணர ஒட்டாது தடை செய்யும் என்பதை உணராதவர், பிரபஞ்சத்தை அறியும் கரணங்களை, சிவ கரணங்களாக

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாற்றிச் சிவனை அறிவோம் என்று கூறுவர். அக்கூற்று வெறும் பாவனையே அன்றி, சிவனைக் கரணத்தால் அறிய முடியாது.

கரணங்கள் யாவும் கடந்து, அருளினால் சிவனை அறியப் பெறார் ஆயின், கரணங்களால் உண்டாகிய பிரபஞ்சக் காட்சி நீங்காது; அதன் காரணமாகப் பிறப்பிற்கு ஏது ஆகிய ஆணவ மலமும் அறாது.

எட்டாம் சூத்திரம்

நான்காம் அதிகரணம்

அவரின் நீங்கி, மலம் அகற்றி, தானாக்கி மலரடிக் கீழ் வைப்பன் என்பது

கரணம் கடப்பதற்கு உபாயம் கூறுகின்றது

பல்நிறங்கள் அவனை காட்டும் படிகம் போல் உள்ளம்
பலபுலன்கள் நிறம் காட்டும் பரிசு பார்த்திட்டு,
இந்நிறங்கள் என் நிறம் அன்று என்று தன்தன்
எழில் நிறம் கண்டு, அருளினால் இந்நிறத்தின் வேறாய்ப்
பொய்ந்நிற ஐம்புல நிறங்கள் பொய் என மெய்கண்டான்
முன் நிறை நீர் சிறை முறிய முடுகி ஓடி
முந்நீர் சேர்ந்து அந்நீராய்ப் பின் நீங்கா முறைபோல். 289

தெளிவுரை:

கரணங்களிலிருந்து ஆன்மா நீங்குவது எவ்வாறு என்றால், பளிங்கு தன்னை அடுத்த பல நிறங்களின் இயல்பையே தன்னிடத்துக் காட்டி நிற்கும். இஃது அப்பளிங்கிற்குப் பொது இயல்பு. இது போல ஆன் மாவும் தன்னால் சாரப்பட்ட கருவிகளின் இயல்பே தன்னிடத்து விளங்க அதுவாய் நிற்கும். இஃது ஆன்மாவிற்குப் பொது இயல்பு. அந்தப் பொது இயல்பினை முன்பு சிந்தித்து அறிந்து கொண்டு, பின்பு பல நிறங்களின் வேறாக, பளிங்கிற்குச் சிறப்பான ஒளி இருப்பது போல, இந்தப் பொது இயல்பைத் தன் இயல்பு அன்று என்றும், தன் இயல்பு ஆகிய சிறப்பு இயல்பை இந்தப் பொது இயல்பின் வேறாய் உண்டு என்றும், அருளால் அறிந்த பொது இயல்பு ஆகிய அந்தக் கருவி ஞானம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நீங்கும்படி, தன் இயல்பு ஆகிய உண்மையை உணர்ந்தால், அந்தத் தன் இயல்பு விளங்கித் தோன்றும். தோன்றவே, ஆன்மா சிவத்தைப் பொருந் துவன். அவ்வாறு பொருந்தினவன், தடைப்பட்ட நீர் தடை நீங்கிய இடத்து, விரைந்து ஓடிக் கடலில் சென்று, அந்தக் கடல் நீராய் அடங்கி பின்பு மீளாதது போல, அந்தக் கருவிக் கூட்டத்தில் மீண்டும் சேரான்.

சிவத்தைப் பொருந்தினவன் கரணங்களில் மீண்டும் வந்தாலும் இழுக்கு இல்லை என்பவரை மறுத்துக், கரணங்களோடு கூடினால் சிவன் அறியப்படான் என்று உரைக்கின்றது

எங்கும்தான் என்னில், நாம் எய்த வேண்டா;
எங்கும் இலன் என்னில், வேறு இறையும் அல்லன்
அங்கம் சேர்உயிர் போல்வன் என்னில், அங்கத்து
அவயவங்கள் கண்போலக் காணா ஆன்மா
இங்குநாம் இயம்பும் தத்துவங்களில் வைத்து அறிவது
இறைஞானம் தந்துதாள் ஈதல் சுடர் இழந்த
துங்கவிழிச் சோதியும் உட்சோதியும் பெற்றால்போல்,
சோதிக்குள் சோதியாய்த் தோன்றிடுவன் காணே.
290

தெளிவுரை:

எல்லாம் சிவமே ஆதலால் கருவிகளோடு ஆன்மா கூடினதினால் இழுக்கு இல்லை என்று கூறினால், அது பொருந்தாது; ஏனென்றால், எல்லாம் சிவமே ஆயின், நாம் அவனை அடைய வேண்டாம். எல்லாம் சிவம் இல்லை ஆயின், அவனுடைய வியாபகத்திற்குக் குறைவாய் முடியும். ஆதலால் இந்த இரு வகையும் இன்றி, உடம்பில் உயிர்போல எல்லாவற்றிலும் இறைவன் கலந்து நிற்கிறான். உடம்பின்கண் உயிர் கலந்து நின்றாலும், கண் இந்திரியம் நீங்கிய ஏனைய செவி முதலிய நாலு இந்திரியங்களும், தன்னிடத்தில் வந்த விடயங்களை மட்டும் அறியும். கண் இந்திரியம் மட்டும் தன்னிடத்தில் வராத விடயங்களையும் சென்று அறியும்.

எல்லா இந்திரியங்களோடும் உயிர் கலந்து நின்றாலும்; இந்திரியங்களின் தொழில் வேற்றுமை காணப்படுவது போல, எல்லா வற்றிலும் இறைவன் கலந்து நின்றாலும், ஆன்மாவினிடத்து விளங்கித் தோன்றுவதும், கருவிகளிடத்து விளங்கித் தோன்றாமையும் ஆகிய வேற்றுமை காணப்படுகிறது. ஆதலினால், விடயங்களை விட்டுத் திருவடிகளைப் பெறவேண்டும். அவ்வாறு பெறுவது ஒளி இழந்த கண்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒளி இழப்பதற்குக் காரணம் ஆகிய மாசு நீங்கியபொழுது, தன் ஒளியையும் தனக்கு உள்ளாய் நிற்கும் ஆன்ம ஒளியையும் பெற்றால் போலாகும்.

கருவிக் கூட்டங்களின் நின்று நீங்கிய ஆன்மாவிற்குத், தானும் தன் அறிவிற்கு உள்ளாய் நிற்கும் இறைவனும் விளங்கித் தோன்றும். ஆகவே ஆன்மா கருவிகளோடு கூடிய பொழுது இறைவன் தோன்றான். ''ஆன்ம ஒளியைக் கண் பெறுவது'' என்பது, ஆன்மாவின் அறிவு, கண் வழியாக விளங்கப் பெறுதல் ஆகும்.

சிவத்தைப் பொருந்தியவர், பழைய வர்சனையால் கரணங் களைக் கூட நேர்ந்தால், உபாயத்தினால் வாசனையை நீக்க வேண்டும் எனக் கூறுகின்றது

பாசிபடு குட்டத்தில் கல்லினை விட்டு எறியப்
படும்பொழுது நீங்கி, அது விடும் பொழுதில் பரக்கும்;
ஆசுபடு மலம், மாயை, அரும் கன்மம் அனைத்தும்
அரன் அடியை உணரும்போது அகலும், பின்
அணுகும்;
நேசமொர்டும் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கும்
நினைவு உடையோர் நின்றிடுவர்,நிலை அதுவேஆகி,
ஆசையொடும் அங்கும் இங்கும் ஆகி அலமருவோர்
அரும்பாசம் அறுக்கும் வகை அருளின் வழி உரைப்பாம்.
291

தெளிவுரை:

மேலே கூறியவாறு சிவபெருமானிடத்து நீங்காத அன்போடு, அந்தச் சிவத்தைப் பொருந்தி நிற்கின்றோம் என்னும் நிலையினையும் கடந்து, அதீதத்தை அடைய விரும்புபவர், சிவமே ஆய் நிற்பர். ஒவ்வொரு இடத்திலும் (ஒரோ இடத்துப்) பாசி பொருந்திய தடாகத்தில் கல்லினை எறியும் போது பாசி நீங்கியும், கல் எறியாதபோது பாசி படர்ந்தும் காணப்படும். அதுபோல, சிவபெருமான் திருவடியை உணரும்போது, ஆணவமலம் மாயாமலம் கன்ம மலங்கள் நீங்கியும், அந்தத் திருவடியை உணராத பொழுது, அந்தச் சமயம் பார்த்து மல மாயா கன்மங்கள் வந்து தலைப்பட்டு நிற்கும். அப்படி அவை தலைப்பட்டு வந்து நிற்பதற்குக் காரணம், பழைய வாசனை பற்றி அது நிகழ்வதாகும். அந்த வாசனையால் சிவத்தின் இடத்தும் கருவிகளின் இடத்தும் நில

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெறாமல் சுழல்பவர் அந்த வாசனையைப் போக்கும் வண்ணம், அடுத்து வரும் ஒன்பதாம் சூத்திரத்தில் சொல்லும் உபாயத்தைக் கடைப்பிடித்து ஒழுகி, அந்த வாசனையை நீக்கிக் கொள்ள வேண்டும்.

<u>எட்டாம் சூத்திரம் முடிந்தது</u>

ஒன்பதாம் சூத்திரம்

தோற்றுவாய்:

எட்டாம் சூத்திரத்தால், பதிப்பொருளை அடைவதே பேறு, அந்தப் பேற்றிற்குச் சிறந்த சாதனம் ஞானம், அந்த ஞானம் ஞானாசிரியனால் உண்டாகும் என்பனவற்றை உணர்ந்த பின்னர், ஞானத்தைக் கடைப்பிடித்து ஒழுகும் முறை (அனுட்டிக்கும் முறை) எவ்வாறு என்னும் ஐயம் எழும். அந்த ஐயத்தைப் போக்குவதற்கு எழுந்தது இந்த ஒன்பதாம் சூத்திரம்.

அநுட்டிக்கும் முறை தெரியாதபொழுது அனுட்டிக்க முடியாது; எனவே அனுட்டிக்கும் முறையை வகுத்து இந்தச் சூத்திரத்தால் கூறுகின்றார்.

பதிஞானத்தால் சிவனை அடைதல் கூடும் என்றும், அந்தப் பதிஞானத்தில் நிலைபெற ஒட்டாது செய்வது மல வாசனை என்றும் அந்த மலவாசனையைக் கெடுக்கும் உபாயங்கள் இவை என்றும் சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது

பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடிப், பாத
நிழல் கீழ் நில்லாதே நீங்கிப் போதின்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆசைதரும் உலகம் எலாம் அலகைத்தேராம் என்று
அறிந்து அகல, அந்நிலையே ஆகும்; பின்னும்
ஓசைதரும் அஞ்சு எழுத்தை விதிப்படி உச்சரிக்க
உள்ளத்தே புகுந்து அளிப்பன் ஊனம் எலாம் ஓட 292

தெளிவுரை:

கருவிகளோடு கூடி அறிவது ஆகிய பாச ஞானத்தாலும் ''நான் பிரமம்'' என்னும் பசு ஞானத்தாலும் பரசிவனை அறிய முடியாது. அந்த இரண்டு ஞானங்களாலும் அடைய முடியாத பரம்பரனை, அவனது திருவடி ஞானம் ஆகிய பதிஞானம் ஒன்றினாலே, தன் அறிவின்கண் வைத்து ஆராய்ந்து, அன்புடனே அந்தத் திருவடி நீழலின் கீழ் நீங்காதே தூங்கிப் பெற வேண்டும். அவ்வாறு நிற்கப்பெறாது, பிரபஞ்ச நாட்டம் வருமாயின், பிரபஞ்சம் யாவும் கானல் நீரின் தன்மை போல, அசத்தியம் எனக் கண்டு கழித்தால், அந்நிலை கைகூடும். அவ்வாறு கழிப்பதற்கு அறிவு, சலனம் இன்றி நிற்க வேண்டும். ஆதலால் பண்டைப் பயிற்சி வசத்தால், வாசனை பற்றிச் சலிப்பு உண்டாகும் ஆயின், அப்படிச் சலியாது இருக்கும் பொருட்டு, பிரபஞ்ச நீக்கமும் சிவப்பேறும் தருவது ஆகிய முத்தி பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க வேண்டும்.

இந்தச் செய்யுள், முதல் நூல் ஆகிய சிவஞான போதம் ஒன்பதாம் சூத்திரம் போல முக்கூறு என்பபடும் மூன்று அதிகரணங்களை உடையது; அவற்றுள்,

முதற்கூறு:

பாச ஞானத்தாலும், பசு ஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனை, பதிஞானத்தாலே நேசமொடும் உள்ளத்தே நாடிப் பாத நிழற்கீழ் (நிற்க).

இரண்டாம் கூறு:

நில்லாதே நீங்கிப் போதின் ஆசைதரும் உலகம் எலாம் அலகைத் தேராம் என்று அறிந்து அகல அந்நிலையே ஆகும்.

மூன்றாம் கூறு:

பின்னும் ஓசைதரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க, உள்ளத்தே புகுந்து அளிப்பன் ஊனம் எலாம் ஓட,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒன்பதாம் சூத்திரம் – முதல் அதிகரணம்

"பாச ஞானத்தாலும்....... பாத நிழற் கீழ் (நிற்க) என்றது"

பாசஞானம் , பசு ஞானம், பதி ஞானங்களின் இலக்கணம் இவை எனக் கூறுகின்றது

வேத சாத்திரம் மிருதி புராண கலைஞானம்
விரும்பு அசபை வைகரி ஆதித் திறங்கள் மேலாம்
நாதமுடிவான எல்லாம் பாசஞானம்;
நணுகி ஆன்மா இவை கீழ் நாடலாலே
காதலினால் "நான் பிரமம்" என்னும் ஞானம்
கருது பசுஞானம்; இவன் உடல் கட்டுண்டு,
ஓதி உணர்ந்து ஒன்று ஒன்றா உணர்ந்திடலால் பசுவாம்
ஒன்றாகச் சிவன்இயல்பினை உணர்த்திடுவன்
காணே. 293

தெளிவுரை:

மூவகை ஞானங்களுள் பாச ஞானம் வருமாறு:– வைகரி முதலிய வாக்கின் பகுதி ஆகிய வேதம், சாத்திரம் முதலிய கலை ஞானங்களும், விரும்புகின்ற அசபையும் ஆகிய சொற் பிரபஞ்சமும், (அசபை – அவன் நான் ஆகிறேன் என்னும் மந்திரம்) நிலம் முதல் நாதம் ஈறாகிய பொருட் பிரபஞ்சமும், ஆகிய இருவகைப் பிரபஞ்சங்களின் வாயிலாக ஆன்மாவின் கண் நிகழும் ஏகதேச ஞானம் ஆகும்.

பசு ஞானம் வருமாறு:–

இந்தப் பிரபஞ்சங்களைப் பொருந்திய ஆன்மா, இவை அனைத்தும் தன் கீழ் அடங்கியது என்று அறிந்து, அவற்றின் நின்றும் நீங்கிய பொழுது, அந்தப் பிரபஞ்சம் ஆகிய பாசம் நீங்கிய காரணத்தால், அநாதியே பாசத்தின் நீங்கி இருக்கின்ற சிவனை ஒப்பேன் என்று, சடுதியில் மதிக்க வருவதொரு சிவசமவாத ஞானம் ஆகும். கருவிகளின் நீங்கிய இந்த ஞானத்தை உடைய பசுவை, சிவனோடு சமம் என்பதனால் ஏற்படும் இழுக்கு என்னவென்றால், இந்த ஆன்மா தூல சூக்கும காரண தேகங்களால் கட்டப்பட்டும், நூல் உணர்வால் உணர்த்த உணர்ந்தும், ஒவ்வோர் இந்திரியங்களை உணர்ந்தும், இவ்வாறு உணர்வது ஆகிய பாசத் தடையை ஞானத்தால் இடையே நீங்கப் பெறுவது. எனவே ஆன்மா ஆதிமுத்தன் எனப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பதிஞானம் வருமாறு:—

ஒருவன் உணர்த்த உணர்தல் இன்றித் தானே முழுதும் ஒருசேர அறிந்து, அநாதியே பாசத்தடை நீங்கிய பேரறிவனாய் இருப்பவன் பதி, எனவே பதி அநாதி முத்தன் எனப்படும். படவே, ஆதிமுத்தன் ஆகிய பசுவை, அநாதி முத்தன் ஆகிய பதியோடு சமம் என்பது கூடாது. இந்த வேற்றுமையைத் தெளிவாய் அறிந்து, அந்தப் பதியினுள் அடங்கி அந்தப் பதியின் வாயிலாக நிகழும் ஞானம் பதிஞானம் ஆகும்.

வேதசாத்திரங்கள் எல்லாம் பாசஞானம் என்று கழித்தால், ''ஞான நூல்தனை ஓதல், ஓதுவித்தல்'' முதலிய ஞான பூசை என மேலே கூறியதோடு முரணாதோ என்றால், முரணாது. எப்படி என்றால், அந்த வேத சாத்திரங்கள் பதிஞானம் விளங்குவதற்கு ஏதுவாகப் பயன்படக் கூடும் என்பதனாலேயே ஆகும்.

பசு ஞானத்தைச் ''சடுதியில் மதிக்க வருவதோர் ஞானம்'' என்று கூறியதற்குக் காரணம் வருமாறு:

ஆன்மா தனித்து நிற்கும் தன்மை இல்லாதது. அஃதாவது கரணம் கடந்தபொழுது, ஆன்மா பதியில் அழுந்த வேண்டும். அவ்வாறு அழுந்தாது, தான் தனித்து நிற்க முடியாது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பாசங்களை நீங்கி நிற்கும் பொழுது, ஆன்மா தான் அவ்வாறு தனித்து நிற்பதாக எண்ணுகிறதே அன்றி, உண்மையில் அஃது தனித்து நிற்பது நடைமுறையில் இல்லை. எனவே, அப்படி எண்ணுகின்ற அந்த எண்ணமும் சடுதியில் மாறி, ஆன்மா கருவிகளோடு கூடும். ஆக, பசுஞானம் தன்னைத்தானே மதிக்கும் ஒருவகை மயக்கம் ஆகும்.

பாடாணவாத ஞானமும் பேதவாத ஞானமும் பசு ஞானமே எனவும், பதி ஞானத்தால் அன்றி பசுத்துவ வாதனை நீங்காது எனவும் கூறுகின்றது

கரணங்கள் கெட இருக்கை முத்தியாம் என்னில்
கதியாகும் சினைமுட்டை கருமரத்தின் உயிர்கள்
மரணம் கொண்டிட, உறங்க, மயங்கி மூர்ச்சிக்க,
வாயுத்தம்பனை பண்ண, வல்விடத்தை அடையச்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சரணங்கள் புகுநிழல்போல் தனை அடையும் சமாதி
தவிராது மலம்; இதுவும் பசுஞானம் ஆகும்;
ஆரணங்கள் எரித்தவன்தன் அடியை அறிவு இறந்து அங்கு
அறிந்திடீர் செறிந்த துகள் அகற்றிடீரே. 294

தெளிவுரை:

''நான் சிவம்'' என நிகழும் ஞானம் முத்தி ஆகாது. ஆயினும் கரணங்கள் எல்லாம் கெடும்படி, அவற்றின் நின்றும் ஆன்மா நீங்கப் பெறுவது முத்தி ஆகும் என்று கூறினால் அது பொருந்தாது; ஏனென்றால்,

மீனில் தோன்றிய சினையிலும், முட்டையிலும், கருப்பாசயத்திலும், மரத்திலும் உயிர்கள் பொருந்தும் பொழுது, கரணம் இன்றி இருப்பதால் அவையும் முத்தி ஆகல் வேண்டும், அவ்வாறு ஆகாததால், இது பாடாணவாத ஞானம் ஆகும். பாடாணம் என்பது கல்.

இனி, ஒருவனுடைய நிழல் உச்சிப் பொழுதில் அவனடியில் வந்து ஒடுங்கினாற் போல, அறிவு கரணங்களில் செல்லாமல் ஆன்மா ஆகிய தன்னிடத்து ஒடுங்கி நிற்பதே முத்தி என்று கூறினால் அதுவும் பொருந்தாது; ஏனென்றால்,

மரணம், உறக்கம், மயக்கம், மூர்ச்சை, நஞ்சம் ஆகிய இவை பொருந்திய பொழுதும், பிராணவாயு இயங்காது தம்பித்த பொழுதும், அறிவு கரணங்களில் செல்லாது ஆன்மா ஆகிய தன்னிடத்து ஒடுங்கி இருப்பதால், அதுவும் முத்தி ஆதல் வேண்டும். அவ்வாறு ஆகாததால், இதுபேதவாத ஞானம் ஆகும்.

இந்தச் செய்யுளில் கூறிய பாடாணவாத ஞானமும், பேதவாத ஞானமும் முந்திய செய்யுளில் கூறிய சிவசமவாத ஞானமும் ஆகிய இவை எல்லாம் பசுஞானங்கள் ஆகும். ஆகவே இந்த ஞானங்களால் சிவபெருமானை அறியமுடியாது. ஆதலால், முப்புரங்களையும் எரித்த சிவபெருமானையும், ஆன்மா ஆகிய தம்மையும் சிவஞானத்தால் அறியப் பெறுவீராக. அவ்வாறு அறிந்து உம்மைப் பந்தித்த மலத்தை நீங்கப் பெறுவீராக, மேலே கூறிய பசு ஞானங்கட்கு ஏது ஆகிய பசுத்துவ வாதனை ஆகிய மலம், இந்தச் சிவஞானம் உடையவர்க்கு அன்றிப் பிறர்க்கு நீங்காது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பதிஞானத்தால்அன்றி, பசு ஞானம் பாச ஞானங்களால் சிவனை அறிய முடியாததால், அந்த இரு ஞானங்களும் தாமே பிரகாசிப் பதும் பிறிது ஒன்றைப் பிரகாசப்படுத்துவதும் இல்லை எனக் கூறுகின்றது

சிவனை அவன் திருவடி ஞானத்தால் சேரச்
செப்புவது செயல் வாக்குச் சிந்தை எல்லாம்
அவனை அணுகா என்றும் ஆதலாலும்,
அவன் அடி அவ் ஒளி ஞானம் ஆதலாலும்,
இவனும் யான் துவக்கு உதிரம் இறைச்சி மேதை
என்பு மச்சை சுக்கிலமோ இந்திரியக் கொத்தோ
அவம் அகல எனை அறியேன் எனும் ஐயம் அகல
அடிகாட்டி ஆன்மாவைக் காட்டலாலும். 295

தெளிவுரை:

பதி ஞானம் பசு ஞானம் பாச ஞானம் ஆகிய மூன்றனுள் பாச ஞானம் மனம் வாக்கு காயம் முதலியன ஆகும். அவை எக்காலத்தும் இறைவனை அணுக மாட்டா. எனவே பொறிகள் வாயிலாக ஏகதேசமாய் நிகழும் சுட்டுணர்விற்குத் தானே பிரகாசித்தலும், பிறிது ஒன்றைப் பிர காசப்படுத்துதலும்இல்லை. பசு ஞானத்தை உடைய ஆன்மாவும் தன்னைத் தோல், இரத்தம் முதலியனவோ என ஐயப்பட்டு குற்றங்கள் நீங்கும் படியாகத் தன் சொரூபத்தை உள்ளவாறு அறியாமல் நிற்கும். ஆதலால், அந்த ஆன்மாவுக்கும் தானே பிரகாசித்தலும், பிறிது ஒன்றைப் பிரகாசப்படுத்தலும் இல்லை. ஆகவே பாச ஞானம் பசு ஞானங்களால் பர சிவனை அறிய முடியாது.

இறைவன் திருவடி ஞானம் ஆகிய பதி ஞானம், மேற் கூறிய குற் றங்கள் இன்றித் தானே பிரகாசித்தலும், தன்னையும் ஆன்மாவையும், அந்த ஆன்மாவிற்கு பிரகாசப்படுத்தலுமாய் நின்று, எல்லாப் பொரு ளையும் இது விளக்குவது ஆகும். ஆகவே அத்தன்மைத்து ஆகிய பதி ஞானம் ஒன்றினாலேயே அந்தப் பதிப் பொருளை ஆன்மா அறிய முடியும் என்பது.பெறப்பட்டது.

''ஆன்மா தன் சொரூபத்தை உள்ளவாறு அறியாமல் நிற்பது'' என்பது எப்படி என்றால், தன்னைக் கருவி கரணங்களின் வேறான சித்து என்றும், தான் தனித்து நிற்கும் முதல் அன்று என்றும், உணராமல் நிற்பதுவே ஆகும். எதனையும் பற்றி நிற்பதே ஆன்ம இயல்பு. எதனை யும் பற்றாமல் தனித்து நிற்பதே இறை இயல்பு.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பசு ஞானம் பாச ஞானங்களுக்குத் தாமே பிரகாசித்தலும், பிறிது ஒன்றைப் பிரகாசப்படுத்துதலும் இல்லாமையை அனுபவத்தில் வைத்து விளக்குகின்றது

கண்டிடும் கண், தனைக் காணா; கரணம் காணா;
கரணங்கள் தமைக் காணா; உயிரும் காணா;
உண்டி அமர் உயிர் தானும் தன்னைக் காணாது;
உயிர்க்கு உயிராம் ஒருவனையும் காணாதாகும்;
கண்டசிவன் தனைக் காட்டி உயிரும் காட்டிக்
கண்ணாகிக் கரணங்கள் காணாமல் நிற்பன்;
கொண்டு அரனை உளத்தில் கண்டு அடிகூடில் பாசம்
கூடாது; கூடிடினும் குறித்து அடியில் நிறுத்தே. 296

தெளிவுரை:

பிறிதொரு பொருளை அறிகின்ற கண் தன் இயல்பைக் காண மாட்டாது; தனக்கு முதல் ஆகிய அந்தக் கரணங்களையும் காண மாட்டாது. கண்ணை விளக்குகின்ற அந்தக் கரணங்கள் தம் இயல்பையும் தம்மை விளக்குகின்ற வித்தியா தத்துவங்களையும் அறிய மாட்டா. அந்தக் கரணங்களை விளக்குகின்ற வித்தியா தத்துவங்கள் தம் இயல்பையும் தமக்கு முதலாய் நிற்கும் உயிரையும் காணமாட்டா. அவற்றைப் போலவே, வித்தியா தத்துவம் முதலயவற்றை விளக்குகின்ற ஆன்மா தன் இயல்பையும் தனக்கு உயிராய் அறிவித்து நிற்கும் முதல்வனையும் காணமாட்டாது.

ஆகவே தன் சொரூபத்தையும் விளக்கி, ஆன்ம சொரூபத்தையும் விளங்கச் செய்து, இவ்வாறு விளங்குதற்கும் விளங்கச் செய்வதற்கும் தனக்கு ஒரு முதல் இன்றி எல்லாவற்றையும் ஒரு சேர அறிந்து, தானே பிரகாசித்தும் பிறவற்றைப் பிரகாசப்படுத்தியும், நிற்பது சிவஞானம் ஆகும். அவ்வாறு நிற்பதால், அந்தச் சிவஞானத்தைத் துணையாகக் கொண்டு, சிவபெருமானைக் காணப்பெற்று அவன் திருவடியைக் கூடப் பெற்றால், பாசம் நீங்கும். நீங்கிய அந்தப் பாசம் கூட வந்தால், சிவ பாவனையை விடாது செய்து அவன் திருவடி ஞானத்தால், சிவ பெருமானைச் சேருதல் வேண்டும்.

இதுவரை சிந்தித்ததிலிருந்து, பாச ஞானம் ஆகிய கருவிகளும், பசு ஞானம் ஆகிய ஆன்ம அறிவும், தானே விளங்குவது அறவே இல்லை என்பது பெறப்படும். அவை தமக்குள் அடங்கிய பொருளை விளக்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கின்றன; என்றாலும் தமக்கு மேம்பட்ட பொருளை விள்க்காமையால் பிறிது ஒன்றை பிரகாசப்படுத்துதல்இல்லை என்பதும் கருத்தில் கொள்ளத் தக்கது.

ஒன்பதாம் சூத்திரம்
இரண்டாம் அதிகரணம்

''நில்லாதே நீங்கிப் போதின் ... ...
... ... அந்நிலையே ஆகும் என்பது''

பதி ஞானம் பிரபஞ்ச வயிராக்கியத்தால் உண்டாகும் எனக் கூறுகின்றது

குறித்து அடியில் நின்று அட்ட குணம் எட்டுச் சித்தி
கோகனதன் முதல் வாழ்வு குலவுபதம் எல்லாம்
வெறுத்து நெறி அறுவகையும் மேலோடு கீழ் அடங்க
வெறும் பொய் என நினைந்து இருக்க மேலோடு
கீழ் இல்லான்
நிறுத்துவதோர் குணம் இல்லான் தன்னை, ஒருவர்க்கும்
நினைப்பு அரியான், ஒன்றும் இலான் நேர்பட
வந்து உள்ளே
பொறுப்பு அரிய பேரன்பை அருளி அதன் வழியே
புகுந்திடுவன் எங்கும் இலாப் போகத்தைப் புரிந்தே.
297

தெளிவுரை:

பதிஞானம் எதனால் வரும் என்றால், குரு அருளால் ஒரு குறியின்கண் உறைத்து நின்றுகொண்டு, பைசாச பதத்திற்கு உரிய அட்டமா சித்தியை நோக்க. எண்மடங்கு ஏற்றம், அட்ட சித்தியை உடைய பிரமபதம் முதலிய எந்த வகைப் புவனங்களும், அந்தப் புவனங்களில் உள்ள போக்கியங்களும் கக்கின சோறு என கண்டு அருவருத்துவிட்டு, சுவரின் வடிவத்தைக் காணும்பாழுது அதில் எழுதியிருக்கும் சித்திரம் காணப்படாதது போல, பிரபஞ்சம் யாவும் பொய் எனக் கண்டு அவ்வாறு கண்ட காட்சி சலியாது இருக்கப் பெற்றால், ஞான சொரூபம் விளங்கித் தோன்றும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அந்த சொரூபம் எப்படி இருக்கும் என்றால், அது பிரபஞ்சத்திற்கு வேறாகியும், மேல்கீழ் இல்லாததாகியும், ஒரு குணம் இல்லாததாகியும், பிரபஞ்ச நாட்டம் உள்ள ஒருவராலும் உணரப்படாததாயும் இருக்கும். அந்த ஞான சொரூபம் ஆன்மாவிடத்துத் தோன்றியதும், அந்த ஞானத்தினிடத்துப் பெருங் காதல் ஏற்படும். படவே, சிவபெருமான் அந்த அன்பின் வழியாகப் புகுந்து, எந்த இடத்திலும் அறிதற்கு அரிய பேரின்ப மயமாய், உயிரின்கண் விளங்கித் தோன்றுவன்.

(பைசாச பதம் – பிசாசுகள் இருக்கும் இடம்)

(வைராக்கியம் – வெறுப்பு)

ஒன்பதாம் சூத்திரம்

மூன்றாம் அதிகரணம்

ஓசைதரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க உள்ளத்தே புகுந்து அளிப்பன், ஊனம் எலாம் ஓட என்பது

பிரபஞ்ச வயிராக்கியம் நிலைப்பதற்குச் சிவோகம் பாவனை செய்ய வேண்டும் என்று கூறுகின்றது

கண்ட இவை அல்லேன் நான் என்று அகன்று காணாக்
கழிபரமும் நான் அல்லேன் எனக் கருதிக் கசிந்த,
தொண்டினொடும் உளத்து அவன்தான் நின்ற கலப்பாலே
சோகம் எனப் பாவிக்கத் தோன்றுவன்; வேறு இன்றி
விண்டு அகலும் நலங்கள் எல்லாம்; கருட தியானத்தால்
விடம் ஒழியும்; அதுபோல விமலதையும் அடையும்;
பண்டை மறைகளும் அதுநான் ஆனேன் என்று
பாவிக்கச் சொல்லுவது இப் பாவகத்தைக் காணே.
298

தெளிவுரை:

உயிர், தன்னை உடம்பு என்றும், அந்த உடம்பு என்ற அறிவு நீங்கிய பொழுது, ''நான் பிரமம்'' என்றும் இவ்வாறு விபரீதமாக உணரும். சுட்டி அறியப்படும் உடம்பு முதலியன உயிரின் வேறு ஆவதால், ''உடல் நான் அன்று'' என்பதையும் சுட்டி அறியாமல்; உயிரின் மேம்பட்டு நிற்கும் பதிப்பொருள் சுட்டி அறியாதது; ஆகவே ''அதுவும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நான்'' அன்று'' என்பதையும் உணர வேண்டும். எனவே, பாசத்திற்கும் பிரமத்திற்கும் தான் வேறு என்று தெளிந்து, பாசத்தைத் தன்னின் வேறாக நீக்க வேண்டும்; நீக்கி ஏனைப் பதிப்பொருள் தன்னின்வேறு ஆயினும், கண் ஒளியும் கதிரவன் ஒளியும் போல் தான் வியாப்பியமாய் அடங்கியும்,பதி வியாபகமாய் மேம்பட்டும் வேற்றுமை இன்றி ஒற்று மைப்பட்டு நிற்பதை உணரவேண்டும். அவ்வாறு வியாபித்து நிற்கும் பதிப்பொருளிடத்தில் தான் அடங்கி இருப்பது ஆகிய அடிமைத் திறத் தையும், தன்னிடத்தில் பதிப்பொருள் கலந்து இருப்பதையும் கருத்தில் இருத்திக் கொண்டு, முன்போல் தன் முனைப்பு இன்றி, அருள் வழியில் நின்று ''சிவமே நான்'' எனச் சிவோகம் பாவனை செய்ய வேண்டும்.

அப்படிச் செய்யும் பொழுது, கருட பாவனை செய்யும் மாந்திரி கனுக்கு, அந்தக் கருடன் ஆகிய அதிதெய்வம் பிரிப்பின்றித் தோன்றி, விடத்தை நீக்கித் தெளிவு செய்யும். அதுபோல, சிவபெருமானும் இந்த ஆன்மாவில் பிரிப்பு இன்றி அத்துவிதமாய்த் தோன்றி, மலங்கள் முழுவதையும் நீக்கி ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவன்.

பழைய வேதாந்தமும் ''அது நான் ஆனேன்'' என்று பாவிக்கச் சொல்வதும் இந்த பாவனையேயாகும். யாதானும் ஒன்றைப் பற்றி நிற்பது அன்றித் தனித்து நிற்கமாட்டாத ஆன்மா, பாசத்தை நீக்கிய பொழுது, சிவோகம் பாவனை செய்யவில்லை ஆயின், மீண்டும் பாசத்தைப் பற்றும் என்பது கருத்து.

சிவோகம் பாவனை பற்றிய விளக்கம்:

பதியும் ஆன்மாவும் இவ்வாறு பிரிப்பின்றி நிற்கும் அத்துவித நிலையை உணராது, ஒரு பொருள் மற்றொரு பொருள் ஆவது எந்த இடத்திலும் இல்லாமையால், ''அது நான் ஆனேன்'' என்னும் மகா வாக்கியத்திற்கு, ஒன்று கெட்டுப் பிறிது ஒன்றாகும் என பரிணாம வாதம் கூறுவர் ஒருசாரார். இனி அந்த மகாவாக்கியத்திற்கு ''அது'' என்றதும் ''நான்'' என்றதும் விட்டுவிடாதஇலக்கணை எனக் கொண்டு கேவலாத் துவிதம் கூறுவர் ஒரு சாரார். 'விட்டுவிடாத இலக்கணை' என்பது, பிரமச் சரியாய் மதுரையில் இருந்தவனே, சந்நியாசியாய்க் காசியில் இருக் கிறான் என்று கூறும்போது, ஆச்சிரமத்தையும் இடத்தையும் தள்ளி விட்டால், பிரமச்சாரியே சந்நியாசி ஆகிறான்; அதுபோல, ஜிவ உபாதி ஈசுவர உபாதிகளைத் தள்ளினால், 'பிரமம் ஒன்றே உள்ளது' எனக் கூறுவதைக் குறிக்கும்; (உபாதி–தடை) கேவலாத்துவிதம் பேசும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏகான்ம வாதிகள் 'அத்துவிதம்' என்ற சொல்லுக்கு ' இரண்டாவது பொருள் ஒன்றும்இல்லை' என்று கொண்டதால் கேவலாத்துவாதி எனப் பட்டனர். ஒன்றும் இல்லாத நிலை கேவலம்.

இனி அந்த மகா வாக்கியத்திற்கு, 'அது' என்னும் பதி பல பேதப் பட்டாலும், அந்தபேதம் எல்லாம் ஆகு பெயரினால், ஒருகடவுளையே குறிக்கும் என்பர் பிறிது ஒரு சாரார். இவர் கடவுளின் வேறு ஆகிய ஆன்மாவையும், பாசத்தையும் ஒப்புக் கொண்டு, கடவுள் ஒன்றே என்பது அத்துவித சொல்லின் பொருள் எனக் கொண்டவர் ஆதலின் விசிட்டாத்துவ வாதி எனப்படுகிறார்கள். விசிட்டம் விசேடணத்தை யுடையது. விசேடணம் பசு பாசங்கள் ஆகும். இவ்வாறு கூறுபவர் எல்லாம், வேதாந்தத்தில் கூறும் ''அது நான் ஆனேன்'' என்னும் மகா வாக்கியத்தையும், அவ்வாறு ஆவதற்கு உரிய சம்பந்தத்தை விளக்கும் அத்துவிதச் சொல்லையும் பிரமாணமாகக் கொண்டுள்ளார். ஆகலின், அந்த வாக்கியங்கட்கு அவர் கொண்ட பொருள் உண்மை அல்ல என்பதை உணர்த்துவதற்குப் பண்டை மறைகளும், ''அது நான் ஆனேன்'' என்று பாவிக்கச் சொல்வது, இந்த பாவகத்தைக் ''காணே'' என்று அருளிச் செய்தவாறாகும்.

ஆகவே வேதாந்தமும் சித்தாந்தமும் உண்மையாய் நோக்கு பவர்க்கு, ''அது'' என்னும் பதிப் பொருள் ஒன்றும் ''நான்'' என்னும் பசுப்பொருள் ஒன்றும் ஆக இருபொருள் உண்டு என்பது பெறப்படும். ''ஆனேன்'' என்று கூறியதனால், ஆகவொட்டாது தடை செய்து நின்ற ஏனைப் பாசப்பொருள் ஒன்று இருந்து, அந்த இரு பொருளையும் பிரித்தது என்பதும் பெறப்படும். பதியும் பசுவும் பிரிக்க முடியாதது. ஆதலால், பிரிக்கக்கூடிய பாசத்தைப் பிரித்து, பிரிக்க முடியாத பதிப் பொருளைச் சார்ந்து, சார்ந்த பொருளின் தன்மையை அடைவதற்கு உரிய ஆன்மா தானாகவே பாவிக்கில் பதியே ஆகும் என்பது நன்கு விளங்கும். இதுவே சிவோகம் பாவனை ஆகும்.

சிவோகம் பாவனை நிலைப்பதற்கு பஞ்சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க வேண்டும் எனக் கூறுகின்றது

அஞ்சு எழுத்தால் ஆன்மாவை அரனுடைய பரிசும்
அரன் உருவும் அஞ்சு எழுத்தால் அமைந்து
அமையும் அறிந்திட்டு
அஞ்சு எழுத்தால் அங்ககர நியாசம் பண்ணி
ஆன்மாவின் அஞ்சு எழுத்தால் இதயத்து அர்ச்சித்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அஞ்சு எழுத்தால் குண்டலியில் அனலை ஓம்பி
அணைவு அரிய கோதண்டம் அணைந்து,
அருளின் வழி நின்று
அஞ்சு எழுத்தை விதிப்படி உச்சரிக்க மதி அருக்கன்
அணை அரவம் போல், தோன்றும் ஆன்மாவில்
அரனே. 299

தெளிவுரை:

பதியின் இடத்தில் தான் அடங்கியும், தன்னிடத்தில் பதி கலந்தும் இருக்கிறதனால், ''சிவோகம்'' எனப் பாவிக்கும் பொழுது, அந்த பாவனை நிலைப்பதற்காக ஆன்மா அரனுக்கு உடைமை ஆம் தன்மையும், ஆன்மாவை அரன் உடையவனுமாய் நிற்கின்ற தன்மையும், ஐந்தெழுத்து ஓதும் முறையில் வைத்து அறிதல் வேண்டும். அஃதாவது அவன் திருமேனி ஐந்து எழுத்தால் அமைந்து இருப்பதை உணர்ந்து, அடிமையும் உடையானும் ஆய் நிற்கின்ற முறையிலேயே, அங்க நியாசம், கரநியாசங்களும் ஐந்தெழுத்தால் செய்துகொண்டு, இருதயத்தில் ஆன்மாவில் ஐந்தெழுத்தால் இறைவனைப் பூசிக்க வேண்டும். (நியாசம் – கிரியை)

உந்தியில் அஞ்செழுத்தால் ஓமம் செய்து அணைதற்கு அரிய புருவ நடுவைப் பொருந்தி, இறைவன் திருமேனியை தியானித்து அவன் அருள் வழியாக நின்று, அஞ்செழுத்தை மானதமாக உச்சரிக்க வேண்டும். இவ்வாறு 1. சிவோகம் பாவனையும், 2. ஐந்தெழுத்து மந்திரமும், அகத்தே செய்யும் பூசை, ஓமம், தியானம் என்னும் கிரியையும் ஆகிய இந்த மூன்றினாலும் சலனம் இன்றி நின்று கொண்டு அஞ்செழுத்தை உச்சரிக்கப் பெறுபவர்க்கு, பசு பாசங்கள் போல விளங்கித் தோன்றாத பதிப்பொருள் ஆன்மாவிடத்தில் விளங்கித் தோன்றும். அஃது எது போல எனில், நவக்கிரகங்களில் ஏனைய கிரகங்கள் போலத் தனித்து விளங்காத இராகு கேதுக்கள், கிரகண காலத்தில் சூரியர் சந்திரர் இடத்தில் விளங்கித் தோன்றுவதுபோல் ஆகும்.

ஐந்தெழுத்தின் பொருள் – சிவம், அருள், ஆன்மா, திரோதை, மலம் என ஐவகைப்படும். இவற்றுள் மலம் திரோதை என்னும் இரண்டனையும் நீக்கி, ஆன்மா அருளால் சிவனுடன் கலக்கும் முறையை உணர்த்தும் ஐந்தெழுத்தே இங்குக் கூறப்பட்டது. அதுவே சிவோகம் பாவனையை உணர்த்துவது ஆகும். இந்த மந்திரத்தின் முறையை குருவின் இடத்தில் உபதேச வாயிலாக அறிதல் வேண்டும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

''பசு விளங்கித் தோன்றுவது'' என்பது, யான் இதனை அறிந்தேன் அறிகின்றிலேன் என உணர்வதைக் குறிக்கும்; ''பாசம் விளங்கித் தோன்றுவது'' என்பது என் கண், என் மனம் என உணர் வதைக் குறிக்கும். பசு விளக்கம் ''யான்'' என்னும் உணர்வையும், பாச விளக்கம் ''எனது'' என்னும் உணர்வையும் தரும்.

இதயத்தில் இறைவனை அஞ்செழுத்தால் பூசிக்கும் முறை இவ்வாறு என வகுத்துக் கூறுகின்றது

நாட்டும் இதயம் தானும் நாபியினில் அடியாய்,
ஞாலம் முதல் தத்துவத்தால் எண்விரல் நாளத்தாய்,
மூட்டு மோகினி சுத்தவித்தை மலர் எட்டாய்,
முழுஇதழ் எட்டு அக்கரங்கள் முறைமையினில் உடைத்தாய்க்
காட்டு கமலாசனம் மேல் ஈசர் சதாசிவமும்
கலா மூர்த்தம் ஆம் இவற்றின் கண்ணாகும் சத்தி
வீட்டை அருள் சிவன் மூர்த்திமான் ஆகிச் சத்தி
மேலாகி நிற்பன்; இந்த விளைவு அறிந்த போற்றே.
300

தெளிவுரை:

இதயத்தில் இறைவனைப் பூசிக்கும் அகப் பூசை முறை வருமாறு:

உந்தியில் பிருதிவி தத்துவம் கிழக்காகவும், ஏனைய அப்பு முதலிய இருபத்து மூன்று தத்துவங்களும், அந்த உந்தியில் நின்று தோன்றி, எட்டு விரல் அளவாய் உள்ள தண்டு ஆகிய நாள வடிவாகவும், (விரல் அளவு – அங்குலாஸ்தி – phalanx) வித்தியா தத்துவங்கள் ஏழும் சுத்த தத்துவத்தில் உள்ள சுத்த வித்தை ஒன்றும், ஆக எட்டு தத்துவங் களும், எட்டு இதழ் வடிவாகவும், அந்த இதழ் எட்டும் பிரணவம் முதலிய எட்டு எழுத்துக்களை உடையதாகவும், ஈசுவரம், சதாசிவம் என்னும் இரண்டு தத்துவமும் அறுபத்து நான்கு பேதப்படும் ஆதலினால் அவற்றை அறுபத்து நான்கு கேசரம் ஆகிய பூந்தாது வடிவமாகவும், சத்தி தத்துவம் அந்த கேசரங்களுக்கு உள்ளாகிய கொட்டை ஆகிய பொகுட்டு வடிவமாகவும், அந்த சத்தி தத்துவமே அந்தப் பொகுட்டில் காணப்படும் ஐம்பத்து ஒரு எழுத்து ஆகிய பீச வடிவாகவும் உடைய இதய கமல ஆசனம் ஆகும். அந்த ஆசனத்தின் மேல் சத்தியே வடிவாகவும், அந்த வடிவத்தில் வீடு தருகின்றவன் ஆகிய சிவபெருமான் வடிவத்தை உடையவனாகவும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நிற்பன். இந்த முறையைத் தெளிவாக எண்ணிப் பூசிப்பாயாக. இவ்வாறு செய்யும் பூசை அந்தரியாக பூசை (அகப் பூசை) எனப்படும்.

மேற்செய்யுளில் இறைவன் வடிவம் ஐந்தெழுத்து எனக் கூறி, அதன் பிறகு ஆன்மாவில் அர்ச்சிக்க வேண்டும் என்று கூறிவிட்டு, இந்தச் செய்யுளில் சிவன் சத்தியில் விளங்குவன் என்று கூறியதன் கருத்து என்ன என்றால், இறைவனுக்கு ஐந்தெழுத்து தூல வடிவம், ஆன்மா சூக்கும வடிவம், சத்தி அதி சூக்கும வடிவம் என்பதை அறிவித்தற் பொருட்டு இவ்வாறு கூறினார். ஐந்தெழுத்து சிவபெருமானுக்குத் தூல வடிவம் ஆவது எப்படி என்றால், ஐந்தெழுத்து பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளைக் குறிக்கும். அந்த மூன்று பொருள்களிலும் இறைவன் கலந்து நிற்கிறான். அந்நிலை இறைவனுக்குத் தூலம் ஆகும். ஐந்தெழுத்தில் உள்ள ''ய'' காரம் ஆகியும் முப்பொருள்களுள் ஒன்றாகியும் உள்ள ஆன்மாவில் இறைவன் கலந்து நிற்கும் நிலை சூக்குமம் ஆகும். ஐந்தெழுத்தில் உள்ள ''வ'' காரம் ஆகிய சிற்சத்தி (அருள்) யில் இறைவன் கலந்து நிற்கும் நிலை அதி சூக்குமம் ஆகும். சத்தியின் நின்று பிரிந்து தோன்றுதல் இல்லை ஆதலால், அதற்கு மேல் நிலை இல்லை.

சிவ	அதிசூக்குமம்	சிவயசிவ,
சிவய	சூக்குமம்	சிவயநம,
நமசிவய	தூலம்	நமசிவய.

அந்தரியாக பூசைக்கு வேண்டிய பூசா திரவியங்கள் சேகரிக்கும் முறை இது எனவும், இந்த பூசை இன்றியமையாது வேண்டும் எனவும் கூறுகின்றது

அந்தரி யாகம் தன்னை முத்தி சாதனமாய்
அறைந்திடுவர்; அதுதானும் ஆன்ம சுத்தி ஆகும்;
கந்தம், மலர், புகை, ஒளி, மஞ்சனம், அமுது முதலாக்
கண்டன எலாம் மனத்தால் கருதிக் கொண்டு
சிந்தை தனில் அர்ச்சிக்கச் சிவனை ஞானத்தால்
சிந்திக்கச் சிந்திக்கத், தர்ப்பணத்தை விளக்க
வந்திடும் அவ்வொளி போல் மருவி அரன் உள்ளத்தே
வரவர வந்திடுவன்; பின் மலம் ஆனது அறுமே 301

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மேற்கூறிய அகப்பூசை செய்யும் பொழுது, சந்தனம், மலர், தூபம், தீபம், திருமஞ்சனம் (அபிடேக நீர்), திருவமுது முதலிய பூசா திரவியங்களை எல்லாம், மனத்தால் கற்பித்துக் கொண்டு, அபிடேகம் அலங்காரம், தூப தீப ஆராதனை, நைவேத்தியம் முதலியனவும் மனத்தால் செய்து, ஆன்மாவின் இடத்திலேயே சிவபெருமானை ஞானத்தால் அர்ச்சித்தல், ஓமித்தல், தியானித்தல் ஆகியவற்றைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யச் செய்ய, கண்ணாடிக்குப் பொடியிட்டு விளக்க விளக்க, ஒளி மேலிட்டு மாசு நீங்குவது போல, சிவபெருமான் உள்ளத்தில் மேலிட்டு மேலிட்டு விளங்கித் தோன்றி, மலம், பற்று அறக் கழியும். அவ்வாறு கழிவது ஆன்ம சுத்தி ஆகும். மலம் கழிவது ஆகிய ஆன்ம சுத்திக்கு அந்த அந்திரியாக பூசை அவசியம் வேண்டப்படும். படவே, இந்தப் பூசையை முத்திக்குச் சிறந்த சாதனம் என்று அனுபவம் உடைய அருளாளர்கள் அறுதியிட்டு உறுதியாகக் கூறியருளியுள் ளார்கள். (எனவே, இந்த அகப் பூசையை நாமும் அன்றாடம் செய்து பயன் பெறுவோமாக) தர்ப்பணம் – கண்ணாடி, சாதனம் – வழி.

மலம் கழிவது ஆகிய ஆன்ம சுத்திக்குப் புறப்பூசை அங்கம் என வும்,அகப் பூசை செய்யும் முறை இவ்வாறு எனவும் கூறுகின்றது

புறம்பேயும் அரன் கழல்கள் பூசிக்க வேண்டில்
பூமரத்தின் கீழ்உதிர்ந்த போதுகளும் கொண்டு,
சிறந்து ஆகும் சீர்ச்சிவனை ஞானத்தால் அங்குச்
சிந்திக்கும்படி இங்குச் சிந்தித்துப் போற்றி
அறம் பாவங்கட்கு நாம் என் கடவோம் என்றும்
ஆண்டவனைக் கண்டக்கால் அகம் புறம் என்னாதே
திறம்பாதே பணி செய்து நிற்கை அன்றோ
சீர் அடியார் தம்முடைய செய்திதானே. **302**

தெளிவுரை:

மேலே கூறியபடி, சிவபெருமானை உள்ளத்தில் அகப்பூசை செய்வதோடு மட்டும் அன்றி, புறத்துப் பூசிப்பதும் அவனை அடைவதற்கு அங்கம் ஆகும். (அங்கம் – ஓர் உபாயம்) ஆகவே புறப்பூசை செய்ய வேண்டுமாயின், சிறந்து விளங்கும் புகழை உடைய சிவபெருமானை, ஞானத்தால் உள்ளத்தில் அகப் பூசை செய்தது போலவே, புறத்தே ஒரு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வடிவத்தில் சிவபெருமானைச் சிந்தித்துப் பூசனை செய்தல் வேண்டும். அப்போதுதான் வருந்துவதும் பிறரை வருத்துவதும் இன்றி, மரத்தின் கீழ் உதிர்ந்த பூக்களும், ஆறு, குளம் முதலியவற்றில் உள்ள நீரும், யாசகம் இன்றி வந்த அமுது முதலியனவும் கொண்டு, சிவபெருமான் திருவடிகளைப் பூசிக்க வேண்டும்.

அவ்வாறு பூசிக்கும்பொழுது, அகத்திலாவது புறத்திலாவது ஒரு குறியின்கண் இறைவனைக் காணப் பெறுதல் வேண்டும். அவ்வாறு பெறும்பொழுது, 1. அகம் புறம் என்னும் வேற்றுமையால் உலகத்தில் உள்ளவர்கள் பூசிப்பதும், 2. புண்ணிய பாவங்களுக்கு நாம் என்ன செய்ய முடியும் என்று சிந்திப்பதும், 3. அதுவேறு இதுவேறு என்னும் வேற்றுமையும் இன்றி, எந்த இடத்திலும் சிவபெருமானையே பார்க்கும் தன்மையராய், எந்த ஒரு செயலும் அவன் அருள் வழியே செய்து நிற்பது, மெய்யான அடியவர்களது செய்கை ஆகும். ஆகவே சிவபெருமானை ஒரு குறியின்கண் காணப்பெறுவதே அகப்பூசை புறப்பூசை இரண்டின் பயன் ஆகும்.

''குறியின் கண் காணப்பெறுதல்'' என்பது குறிப்பிட்ட வழிபடு தெய்வ வடிவத்தில் வைத்துப் பூசிக்கப் பெறுவதைக் குறிக்கும். அந்த வடிவம் சிவலிங்க வடிவமாக இருப்பது சிறப்பு ஆகும்; இருபத்தைந்து மூர்த்தங்களுள் ஒன்றாக இருப்பது முக்கியம் ஆகும்.

புறப்பூசை, அகப்பூசை என்னும் இரண்டின் உள்ளும் அகப்பூசையே சிறப்பு எனக் கூறுகின்றது

இந்தனத்தில் எரி பாலில் நெய் பழத்தில் இரதம்
எள்ளின்கண் எண்ணெயும்போல் எங்கும் உளன் இறைவன்
வந்தனை செய்து எவ்விடத்தும் வழிபடவே அருளும்;
மலம் அறுப்போர் ஆன்மாவின் மலர் அடி ஞானத்தால்
சிந்தனை செய்து அர்ச்சிக்கச் சிவன் உள்ளத்தே தோன்றித்
தீ இரும்பைச் செய்வதுபோல் சிவன்தன்னைப்
பந்தனையை அறுத்துத் தான் ஆக்கித் தன் உருவப்
பரப்புஎல்லாம் கொடுபோந்து பதிப்பன் இவன்பாலே. 303

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

இறைவன் உலகத்தில் உள்ளவர்களுக்கு, விறகின் இடத்தில் உள்ள தீப்போல சிறிதும் தோன்றாமல் மறைந்து உடனாய் நிற்பன்; மந்த தர மல பாகம் உடைய சரியையாளருக்குப் பாலில் நெய்போல ஒரு வாற்றால் தோன்றியும், தோன்றாதும் மறைந்து உடனாகி நிற்பன்; மந்த மலபாகம் உடைய கிரியையாளருக்குப் பழத்தில் இரதம் (சுவை) போல, உய்த்து உணரும்பொழுது தோன்றுவதாய் உடனாய் நிற்பன்; தீவிர மல பாகம் உடைய யோகிகளுக்கும், தீவிரதர மலபாகம் உடைய ஞானி களுக்கும் எள்ளின்கண் எண்ணெய்போல விளங்கித் தோன்றினாலும், பிரித்து அறியப்படாது உடனாகியும் நிற்பன்.

இவ்வாறு அக, புறம் என்ற பிரிவுஇன்றி இறைவன் எந்த இடத்திலும் உளன்; ஆதலால் மேலே கூறியவாறு அக வழிபாடு செய்தாலும், புற வழிபாடு செய்தாலும் எந்த இடத்திலும் அருள் பாலிப்பன் என்பது தேற்றம். ஆயினும் பண்டைப் பயிற்சி வயத்தால், வாதனாமலம் வந்து தாக்கப்பெறுவர். அந்த மலத்தை நீக்கும் பொருட்டு, அந்த மலத்திற்கு இருப்பிடம் ஆகிய ஆன்மாவின் இடத்தில் பதிஞானத் தால் சிவபெருமானை வழிபடுவது ஆகிய அகப்பூசை, அந்த மலம் நீங்கு வதற்கு உரிய இயைபு நோக்கிச் சிறப்பு உடையது ஆகும்.

அவ்வாறு அகப்பூசை செய்தால், சிவபெருமான் ஆன்மாவின் இடத்தில் விளங்கித் தோன்றி, மலவாதனையைப் பற்றறத் துடைத்து, இரும்பைத் தன் வண்ணம் ஆக்கும் தீப்போலச், சீவனைத் தன் வண்ணம் ஆக்கி, தனது சர்வஞ்ஞத்துவம் (முற்றுணர்வு) முதலிய எண்குணங்கள் ஆகிய பேரானந்தப் பெருஞ் செல்வம் முழுவதும் இவனுடையதாகச் செய்து அருள்வன். எனவே புறப்பூசையைக் காட்டிலும் அகப்பூசையே சிறப்பு உடையது ஆகும்.

ஆன்மாவின் இடத்தில், அரனை அர்ச்சிக்க மலம் அறும் என்று 302–ஆவது செய்யுளில் சொல்லிவிட்டபடியால் இந்தச் செய்யுளில் சொல்ல வேண்டுவது இல்லை. ஆயினும் பாச நீக்கம், சிவப்பேறு என்னும் பயன் இரண்டனுள், மேலே பாச நீக்கம் கூறி, இங்குத் ‘தானாக்கித் தன் உருவப் பரப்பு எல்லாம் கொடுபோந்து பதிப்பன்’’ என்று சிவப்பேறு கூற வேண்டியதற்காக, கூறவேண்டாத அதனையும் இயைபு பற்றிக்கூறினார். ஆகலின், இது வேண்டாது கூறி வேண்டியது முடித்தது ஆகும். தன் உருவப் பரப்பு – எண்குணம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எண்குணங்கள் ஆவன:– தன்வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல். பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பு இல் இன்பம் உடைமை என்பன ஆகும். எண்குணங்களை உடைய இறைவனை குணாதீதன் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும் என்றால், மாயை ஆகிய சடத்தின் குணமும், ஞானம் ஆகிய சித்தின் குணமும் எனக் குணம் இருவகைப் படும். அவற்றுள் மாயையின் குணம் சாத்துவிகம், இராசதம், தாமதம் என முத்திறப்படும். இந்த முக்குணங்களும் மாயா காரியம் ஆகிய தனு கரண புவன போகங்களில் கட்டுப்பட்டு இருக்கும் ஆன்மாவின் இடத்து நிகழ்வன ஆகும்.

இந்த முக்குணங்களுள் சாத்துவிகம் சாந்தத்தையும் இன்பத்தையும் தரும்; இராசதம் பிரவிருத்தியையும் (தொழில்) துன்பத்தையும் தரும்; தாமதம் மோகத்தையும் மூடத்தையும் தரும். இவ்வாறு ஒன்றோடு ஒன்று மாறுபடுகின்ற இந்த முக்குணங்களும் பந்தத்திற்கு ஏது ஆகும். இறைவன் மாயைக்கு அப்பாற்பட்டவன் ஆதலினால் இந்த மூன்று குணங்களையும் கடந்தவன் என்பது தோன்ற, குணாதீதன் என்பது பொருந்தும். இவ்வாறன்றிக் குணாதீதன் என்பதற்கு, ஞான குணமும் இல்லாதவன் என்பது பொருளன்று. இறைவன், ஞான குணமும் இல்லாதவன் என்றால், குணம் இல்லாத குணி இல்லை. ஆதலால், இறைவனும் இல்லை என்ற நிரீச்சுர வாதம் ஆகும். மேலும் ஒரு குணமும் இல்லாத பொருள் வெறும் பாழ் (சூனியம்) எனப்பட்டு, அந்தப் பாழ் உயிர்களின் நன்மை தீமைகளைஅறியும் என்றுகூறுவதும், அஃது அருள் செய்யும் என்று பேசுவதும் பொருந்தாததாய் முடியும். ஆகவே, இறைவன் ஞானகுணம் உடையவன் என்பதே தேற்றம்.

அந்த ஞானகுணம் எட்டு வகைப்படுவானேன் என்றால் எட்டுத் தன்மை இறைவனுக்கு வேண்டப்படுவதால், அந்த ஞான குணம் எட்டு வகைப்பட்டன ஆகும். எட்டுத் தன்மை வருமாறு:

1. உயிர்க்கு வினைப்பயன் ஆகிய இன்ப துன்பப் பயனை ஊட்டுவித்தற்கும், வினை ஒப்பு வந்தவர்க்கு முத்தி கொடுப்பதற்கும் எண்ணியதை இடையூறு புகுதாமல் எண்ணியபடி முடிக்கும் தன்மை ஆகிய ''தன்வயம்'' என்னும் சுவதந்திரத்துவம் வேண்டப்படுவது ஆயிற்று.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

2. இவ்வாறு செய்யும் இறைவனுக்கு வடிவம் உருவாய் இருக்கு மாயின், வியாபகமாய் நின்று எவற்றையும் ஒருசேர அறிய முடியாமற் போய்விடும்; எனவே வியாபகமாய் நின்று எவற்றையும் அறியும் தன்மை ஆகிய ''தூய உடம்பு'' என்னும் விசுத்ததேகம் வேண்டப்படுவது ஆயிற்று. அஃதாவது இறைவன் வடிவம் சித்துரு என்றபடியாம்.

3. இறைவனின் வடிவம் சித்துரு ஆயினும், ஆன்மா ஆகிய சித்துப் போல் அறிவிக்க அறியும் ஆயின் சுவதந்திரம் ஆகிய தன் வயத்திற்கு இழுக்கு ஆகும்; ஆகவே தானே எதையும் அறியும் தன்மை ஆகிய ''இயற்கை உணர்வு'' என்னும் நிராமயம் வேண்டப்படுவது ஆயிற்று.

4. ஆமயம் என்பது துன்பம், அது மலத்தை குறிக்கும். நிராமயம் என்பது மலமில்லாமை, மலம் இல்லாது இருப்பினும், மலம் நீங்கிய முத்தான்மாவைப் போல, ஏகதேச அறிவு உடையது ஆயின், பஞ்சக் கிருத்தியம் என்னும் ஐந்தொழில் புரிய முடியாது. எனவே ''முற்றும் உணர்தல்'' ஆகிய சர்வஞ்ஞுத்துவம் வேண்டப்படுவது ஆயிற்று.

5. சர்வஞ்ஞுத்துவம், மலம் நீங்கிய முத்தான்மாவிடத்துக் காணப்படுவது போல ஆயின், இயற்கை உணர்வினன் என்பது பொருந் தாது; எனவே ''இயல்பாகவே பாசங்களின் நீங்குதல்'' ஆகிய அநாதி போதம் வேண்டப்படுவது ஆயிற்று.

6. பாசம் இல்லாமல் இருப்பினும், அருளுயடையனாய் இருந்தால் அன்றி, அனுக்கிரகிக்க முடியாது; எனவே ''பேரருள் உடைமை'' என்னும் அலுப்தசத்தி வேண்டப்படுவது அயிற்று.

7. லுப்தம்–கொடாமைை. அலுப்தசத்தி – கொடுக்கும் ஆற்றல். பேரருள் உடைமை என்பது, உயிர்களிடத்தில் தோன்றும் அருள்போல் அன்றி, எல்லா உயிர்க்கும் அஞ்ஞானப் பிணியை நீக்கும் அருளைக் குறித்தது ஆகும். இறைவன் அருள் உடையவன் ஆயினும், அளவிறந்த உயிர்களின் பொருட்டு, அவரவர் கன்மத்துக்கு ஏற்ப பலவேறு தொழில் செய்ய வேண்டும் ஆகலின், முடிவிலாற்றல் என்னும் அனந்த சத்தி வேண்டப்படுவது ஆயிற்று.

8. அனந்த சத்தி இருப்பினும், அந்த ஆற்றல்களால் துன்பம் இல்லாமல், பூரண இன்பம் உடையவனாக இருந்தால் அன்றி,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உயிர்களுக்கு ஆனந்த பூர்த்தி என்னும் முழுமையான இன்பத்தை வழங்க முடியாது; எனவே, ''வரம்பில் இன்பம்'' என்னும் திருப்தி வேண்டப்படுவது ஆயிற்று.

இந்த எண் குணங்களுள், இயற்கை உணர்வை இயல்பாகவே பாசங்களின் நீங்குதலிலும், தூய உடம்பைப் பேரருள் உடமையினும் அடக்கி, ஆறு எனவும் கூறுவார் உளர். இயல்பாகவே பாச நீக்கம் இருந்தால், இயற்கை உணர்வு உண்டாகும்; பேரருள் உடைமை இருந்தால் ஞானத் திருமேனி(தூய உடம்பு) இருப்பது கூடும். எனவே இவ்வாறு கூறினர்.

இனி, எண்குணங்களும் சத்து, சித்து, ஆனந்தம் என்னும் மூன்றனுள் அடங்கும். எப்படி என்றால் எக்காலத்திலும் ஒரு தன்மையதாய் இருக்கும் பொருள் ''சத்து''. அந்தப் பொருளுக்குத்தான் தன்வயமாம் தன்மை கூடும். ஆதலால், தன்வயம் சத்தில் அடங்கும். வரம்பிலின்பம் ஆனந்தத்தில் அடங்கும், ஏனைய ஆறும் சித்தில் அடங்கும். இவ்வாறு எண் குணங்களும் இறைவனுக்கு இன்றியமையாது வேண்டப்படும் என்பது பெறப்பட்டது.

ஒன்பதாம் சூத்திரம் முடிந்தது.

பயன் இயல்

பத்தாம் சூத்திரம்

தோற்றுவாய்

ஏழாம் சூத்திரம் முதல் ஒன்பதாம் சூத்திரம் வரை உள்ள சூத்திரத்தால், சாதன இயல் கேட்ட பின்னர், இந்தச் சாதனத்தால் உண்டாகும் பயன் யாதோ என்றும் அந்தப் பயனை உடையார் தன்மை எத்தகையது என்றும் ஆசங்கை (ஐயம்) நிகழும் அல்லவா? அந்நிகழ்ச்சி பற்றிப் பயன் பாச நீக்கமும் சிவப் பேறும் என இருதிறப்படும். படவே அவற்றை இரண்டு சூத்திரத்தாலும் பயனை உடையார் தன்மையை ஒரு சூத்திரத்தாலும் ஆக மூன்று சூத்திரத்தால், ''பயன் இயல்'' கூறத் தொடங்குகின்றார்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேலே ஒன்பதாம் சூத்திரத்தால் சாதனம் செய்யும் முறை கூறினார் ஆகலின், அவ்வாறு சாதித்தவருக்கு உண்டாகும் பாச நீக்கத்தை வகுத்துக் கூறுவதற்கு எழுந்தது பத்தாம் சூத்திரம். ஒன்பதாம் சூத் திரத்திலேயே பாச நீக்கமும் சிவப்பேறும் கூறி இருக்கையில், ஈண்டும் கூறுவது எதற்காக என்றால், அங்குச் சாதனம் செய்யும் முறையைக் கூறும் பொழுது, ஏனைய செயல் போல அன்று இச் செயல் என்பது தோன்றும் பொருட்டுப் பயனும் உடன் தொகுத்துக் கூறினார். இங்கு அப்பயனை வகுத்துக் கூறுவதற்குத் தொடங்குகிறார்.

ஏகனாய் நிற்றல், இறைபணி நிற்றல் என்னும்
இருதிறத்தாலும் மும்மலங்களும் நீங்கும் என சூத்திரப்
பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

இவன் உலகில் இதம் அகிதம் செய்த எல்லாம்
இதம் அகிதம் இவனுக்குச் செயதார் பால் இசையும்;
அவன் இவனாய் நின்ற முறை ஏகன் ஆகி,
அரன் பணியில் நின்றிடவும் அகலும் குற்றம்
சிவனும் இவன் செய்தி எல்லாம், என்செய்தி என்றும்,
செய்தது எனக்கு, இவனுக்குச் செய்தது என்றும்,
பவம் அகல உடனாகி நின்று கொள்வன், பரிவால்
பாதகத்தைச் செய்திடினும் பணி ஆக்கி விடுமே. 304

தெளிவுரை:

மேலைச் சூத்திரத்து இறுதிச் செய்யுளில் (303) கூறியவாறு பதி ஞானத்தால் காணப்பட்ட இறைவன், பெத்த நிலையிலும் உடனாய் நின் றாலும் வேறாகக் காணப்படாமல் ஆன்மாவேயாய் ஒற்றுமைப்பட்டு ஆன்மாவின் வழி நிற்பன். இறைவன் அவ்வாறு நிற்கும் முறை போல, அகப்பூசையின் பொழுது இறைவனை வழிபடுகின்ற இந்த முத்திக் காலத்தில், ஆன்மா இறைவனோடு உடனாய் நின்று அறிந்தாலும், தான் வேறாகக் காணப்படாதவாறு இறைவனோடு ஒற்றுமைப்பட்டு நிற்கவும் (ஏகனாய் நிற்றல்), அவன் அருள் வழியில் வழுவாது நிற்கவும் (இறைபணி நிற்றல்) வேண்டும்.

அவ்வாறு ஆன்மா நிற்கப்பெற்றால், அந்த இரண்டனுள் ஒற்றுமைப்பட்டு ஏகனாய் நிற்பதால் யான் எனது என்னும் செருக்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அறும்: செருக்கு அறுவதால் இறைவன், ஆன்மா ஆகிய இவன் செய்யும் நன்மை, தீமைகள் எல்லாம அவன் செய்யும் நன்மை, தீமைகள் என உடனாய் நின்று ஏற்றுக்கொள்வன்.

இவ்வாறு ஏகனாய் நிற்றல், இறைபணி நிற்றல் என்னும் இருதிறத்தினுள் ஏகனாய் நிற்பதால் அன்புடன் ஆனமா (இவன்) செய்யும் நன்மை தீமைகள் வினையாய் முடியாமல், இறைவன் பணியாய் முடியும். இறைபணி நிற்பதால் இவனுக்கு (ஆன்மாவுக்கு) நன்மை தீமை செய்தவரிடத்தில், அந்த நன்மை தீமைகள் செய்த அவ்வளவில் அன்றி, மிகுதிப்படுவதற்கும் இவன் செய்த நன்மை தீமைகள் துணைக் காரணமாய்ப் பொருந்தும்.

இவ்வாறு வினையும் வினைப்பயனின் அனுபவமும், இவனைப் பந்தப்படுத்தாது ஒழியவே, வினை செய்வதால் ஏற்படும் ஆகாமியமும், வினைப்பயனை அனுபவித்தல் ஆகிய பிராரத்துவமும் ஒழிந்தனவே ஆகும், அந்த இருவினைகளும் ஒழியவே, ஏனைச் சஞ்சித வினையும், மாயையும், ஆணவமும் ஆகிய குற்றங்கள் மூன்றும் ஆன்மாவை (இவனை)ப் பந்திக்க மாட்டாதனவாய், இவனை விட்டுப் போகும்.

இவன் செய்த நன்மை தீமைகள், இவனுக்கு நன்மை தீமை செய்த பிறரிடத்தில் அந்த நன்மை தீமைகள் மிகுதிப் படுவதற்குத் துணைக் காரணம் ஆகும். அஃது அன்றி இவன் செய்த நன்மை தீமை களே இவனுக்குச் செய்தவரிடத்தில் பொருந்தும் என்று சொன்னால், செய்த அவருடைய நன்மை தீமைகள் எவ்வாறு ஆகும் என்று கேட்ப வருக்கு விடை இல்லாமல் போவதோடு, அவரவர் வினையை அவரவரே அனுபவிக்க வேண்டும் என்னும் நியதி தப்புவதும் ஆகும். மேலும் சிவஞானச் செயல் உடையவர் கையில் திலம் அளவே தானம்செய்தா லும், அந்த தானமே நிலமலை போல் திகழும் என்றாற்போல் வனவற்றோடு முரணும். எனவே, ஏகனாகி இறைபணி நிற்பவர்க்கு நன்மை தீமை செய்த பிறரிடத்தில், அந்த நன்மை தீமைகள்மிகுதிப் படுவதற்கான துணைக் காரணமாகும் என்று கொள்வதே பொருத்தம் உடையதாகும்.

இந்தச் செய்யுள் மூன்று அதிகரணங்களை (முக்கூறு) உடையது; அவற்றுள்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

முதற்கூறு:– அவன் இவனாய் நின்ற முறை ஏகனாகி (நின்றிடவும்) சிவனும், இவன் செய்தி எல்லாம என் செய்தி என்றும்.

இரண்டாம் கூறு:– அரன்பணியில் நின்றிடவும் இவனுக்குச் செய்தது எனக்குச் செய்தது என்றும், பவம் அகல உடனாகி நின்றுகொள்வன்; பரிவால் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே. உலகில் இவனுக்கு இதம் ஆகிதம் செய்தார்பால், இவன் செய்த இதம் அகிதம் எல்லாம் இசையும்.

மூன்றாம் கூறு:– குற்றம் அகலும்.

இவற்றுள் ''குற்றம் அகலும்'' என்பதைச் சிவஞான போதத்தில், வேறு கூறாக வைத்த ஓதாது, இருகூறாகக் கூறினார். இந்த நூலில் அந்த மூன்றாம் கூற்றைப் பதினொன்றாம் சூத்திரத்தில் விரித்து கூறுகிறார் ஆதலின், இந்த சூத்திரத்தில் இரண்டு கூறுகளை மட்டுமே கூறுகிறார்.

பத்தாம் சூத்திரம்
முதல் அதிகரணம்

''அவன் இவனாய் .... என் செய்தி என்றும் என்பது''

ஏகன் ஆகி நின்றால் அன்றி, யான் எனது என்னும் செருக்கு அறுவது இல்லை எனக் கூறுகின்றது.

யான் செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் என்னும்
இக்கோணை ஞான எரியால் வெதுப்பி நிமிர்த்துத்
தான் செவ்வே நின்றிட அத்தத்துவன்தான் நேரே
தனை அளித்து முன் நிற்கும் வினை ஒளித்திட்டு ஓடும்;
நான் செய்தேன் எனும் அவர்க்குத்தான் அங்கு இன்றி,
நண்ணுவிக்கும் போகத்தைப், பண்ணுவிக்கும் கன்மம்
ஊன் செய்யா ஞானம்தான் உதிப்பின் அல்லால்,
ஒருவருக்கும் யான் எனது இங்கு ஒழியாதன்றே. 305

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

மேலைச் சூத்திரத்தில் (ஒன்பதாம் சூத்திரம்) ஓதியவாறு, ஆன்மாவின் இடத்தில் இறைவனை ஆராதித்து, ஆராதித்த ஆன்மா ஞானத்தினால் இறைவனைத் தரிசிக்கலாமே. அஃதாவது அகப்பூசை ஒன்று செய்தால் மட்டும் போதுமே. அதற்கு மேலும், ஏகனாய் நிற்க வேண்டும் என்று கூறுவானேன் என்றால்,

யான் எனது என்னும் செருக்கு விளைவதற்கு ஏதுவாய் இருப்பது ஆணவமலம். அந்த மலத்தினால் உண்டாகும் அறிவின் கோணுதலை, இறைவனோடு ஏகனாய் நிற்கும் ஞான அக்கினியினால் காய்ச்சித் தீர்த்து, தான் இறைவன் அருள்வழி நிற்க, இறைவன் தன் சொரூபத்தை ஆன்மாவிற்கு விளக்கி, வெளிப்பட்டுத் தோன்றுவன். அவ்வாறு தோன்றுவதால், இவன் (ஆன்மா) செய்யும் நன்மை தீமைகள் இவனுக்கு வினை ஆகாமல் இறைபணி ஆகியும், அந்த நன்மை தீமைகளே இவனுக்கு நன்மை தீமைகள் செய்த அளவில் அன்றி மிகுவதற்குத் துணைக் காரணமாகவும் ஆகும்.

மேலே கூறிய யான் எனது என்னும் செருக்கு உடையவர்க்கு, முதல்வன் விளங்கித் தோன்றுதல் இன்றி, அவர் செய்த கன்மத்திற்கு ஈடாக, போகத்தைப் புசிப்பித்து, அவ்வாறு புசிப்பிக்கும் முறையில் மேல் ஆகாமிய வினையும் ஏறச் செய்வன். ஆதலால் மாயா கருவிகளைப் பொருந்தி அறிகின்ற சிற்றறிவின் நின்றும் நீங்கி, இறைவனோடு ஏகமாய் நிற்கும் ஞானம் பெற்றால் அன்றி எவருக்கும் யான் எனது என்னும் செருக்கு அறுவதில்லை.

இறைவனை வழிபடும்பொழுது, மாயா கருவிகள் நீங்கப் பெறாவோ என்றால், நீங்கப்பெறா. ஏனென்றால், மாயாகருவிகள் சிவ கருவிகளாக மாறி வழிபட்டால் அன்றி, மாயா கருவிகள் நீங்குவது இல்லை. ''சிவகருவி'' என்பது, சிவத்தின் வழி செல்லும் கருவி ஆகும். நீங்காமைக்குக் காரணம் என்ன என்றால், ஆணவமலம் நீங்கப் பெற்றும் அந்த மலத்தின் வேர் அறுக்கப்படாமையே ஆகும். ''வேர்'' என்பது, பற்று ஆகும். மலம் அறியாமையைச் செய்யும்; மலப் பற்று செருக்கைச் செய்யும். அந்தப் பற்றுஅறுதி இறைவனைப் பற்றி ஏகமாய் நிற்பதனால் உண்டாகும். இந்தப் பற்றையே திருவானைக்காப் புராணத்தில் கச்சியப்ப முனிவர், ''வன்மல வேர்'' என்று அருளிச் செய்தார். மலத்திற்கு அன்னியமாகப் பற்று என்பது ஒன்று உண்டு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

என்பதை, ''அநாதியே மலத்தைப் பற்றுதல் உயிரின் வினை'' என்று சிவஞானபோதச் சிற்றுரை நான்காம் சூத்திரம் இரண்டாம் அதிகரண இறுதியில், மாதவச் சிவஞான யோகிகள் அருளிச் செய்துள்ளார்கள். இக்கருத்துப் பற்றியே ''பற்று அற்ற கண்ணே பிறப்பு அறுக்கும்'' என்றார் திருவள்ளுவ தேவ நாயனார்.

பத்தாம் சூத்திரம்
இரண்டாம் அதிகரணம்

''அரன் பணியில் நின்றிடவும் ... ...
... ... இசையும் என்பது''

இறைபணியில் நின்றால் அன்றி, இந்திரியங்களின் வழிப்பட்டுச் செல்லும் பரதந்திரம் நீங்குவது இல்லை எனக் கூறுகின்றது

இந்திரியம் எனைப் பற்றி நின்றே என் வசத்தின்
இசையாதே, தன் வசத்தே எனை ஈர்ப்பது; இவற்றைத்
தந்தவன் தன் ஆணைவழி நின்றிடலால் என்றும்
தான் அறிந்திட்டு இவற்றினொடும் தனை உடையான் தாள்கள்
வந்தனை செய்து, இவற்றின் வலி அருளினால் வாட்டி
வாட்டம் இன்றி இருந்திடவும், வரும் செயல்கள் உண்டேல்
முந்தனுடைச் செயல் என்று முடித்து ஒழுக, வினைகள்
மூளா, அங்கு ஆளாகி மீளான் அன்றே. 306

தெளிவுரை:

ஏகனாய் நிற்றலே அமையும்; அதன் மேலும் இறைபணியில் நிற்க வேண்டும் என்பான் ஏன்? இதற்கு விளக்கம் வருமாறு:

உலகத்தில் ஊர்க்காவல் செய்பவராய் உள்ளவர், பிழை செய்தவரைத் தம் எண்ணப்படி தண்டிக்கின்றனர். தம்மை அவ்வாறு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செய்யும்படி நியமித்திருக்கும் அரசனது ஆணை வழியே, தண்டிக்கும்படி ஆகிறது. அரசன் ஆணை இன்றி ஊர்க்காவலர், தானாக ஒன்றும் செய்ய முடியாது. இந்த உண்மையை அறிந்து, அந்த ஊர்க்காவலருக்கும் தமக்கும் இறைவன் ஆகிய அரசனோடு, நட்பு கொண்டு, அவன் வழியில் பிழை செய்தவர் நடக்க வல்லார் ஆகும் பொழுது, அவர் அவ்வூர்க் காவலர் கீழ் அடங்குவதிலிருந்து நீங்கி, அந்தக்காவலரையும் தம் ஆணை வழியில் அடங்கும்படி, அரசன் அருளால் செய்து கொள்ள வல்ல சுதந்தரர் ஆவர்.

அதுபோல, இறைவன் ஆணையால் இந்திரியங்கள் என்னைக் கூடி நின்று, எனக்கு அடங்காமல் என்னைத் தம்முள் அடக்கி நிற்கின்றன என்பதை அறிந்து ஆன்மா இறைவனைக் கூடப் பெறின், இறைவன் திருவருளால் அந்த இந்திரியங்களைத் தன் ஆணை வழி அடக்கி நிறுத்திக் கொள்ள வல்லவன் ஆவன்.

அவ்வாறு நிற்கும் பொழுது, பண்டைப் பயிற்சி பற்றிச் சில சமயம் அந்த இந்திரியங்களின் குறும்பு நிகழும். நிகழும் பொழுது இந்திரியங்கட்கும் எனக்கும் கூறுகின்ற சுதந்திரம் இல்லாமையால் இந்திரியங்களையும் என்னையும் கூட்டுவித்த இறைவன் செயலே அஃது என்று இறை பணியில் நிற்க வேண்டும். அவ்வாறு நின்றால், இந்திரிய வழியாய்ப் புகுந்து பந்தப்படுத்தக்கூடிய வினைகள், பந்திக்க மாட்டாதனவாய் மடங்கி ஒழியும். அவ்வாறு அடிமைத் திறத்து நின்றவன் மீண்டும் இந்திரியங்களின் வழியில் நிற்கமாட்டான்.

இறைபணி நிற்பது இவ்வாறு எனவும், இறைபணி நின்றவர் செயலை இறைவன் தன் செயல் என ஏன்று கொள்வதும் பிறர் செயலை அவ்வாறு ஏன்று கொள்ளாது அவர் செயலாகப் பயன் அனுபவிக்கச் செய்வதும் பற்றி, இறைவனது நடுவுநிலைக்குக் குறை ஆகாது எனவும் கூறுகின்றது

சலம் இலனாய், ஞானத்தால் தனை அடைந்தார் தம்மைத்
தானாக்கித், தலைவன் அவர் தாம் செய்வினை தன்னால்
நலமுடனே பிறர் செய்வினை ஊட்டி ஒழிப்பானாய்
நணுகாமல் வினை அவரை நாடிக் காப்பன்;

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உலகினில் என் செயல் எல்லாம் உன்விதியே, நீயே,
உள் நின்றும் செய்வித்தும் செய்கின்றாய் என்றும்,
நிலவுவதோர் செயல் எனக்கு இன்று உன் செயலே
என்றும்,
நினைவார்க்கு வினைகள் எல்லாம் நீங்கும் தானே.
307

தெளிவுரை:

இறைபணி நிற்பது எவ்வாறு என்றால், ஏகனாகி நின்ற நிலையில் நின்று நீங்கி, சிலசமயம் தன்னால் புறத்தில் உள்ள செயல் நிகழுமாயின், அப்பொழுது அவர் இறைவனை நோக்கி,

''நீயே எனக்கு உள்நின்று செய்கின்றாய் ஆகலின்,
உலகில் எனக்குச் செயல் இல்லை'' என்றும்,

''என்னால் செய்யப்படும் நன்மை தீமைகள் எல்லாம்
நீ செய்யும் செயலே'' என்றும்,

''எனக்குப் பிறர் செய்யும் செயல் எல்லாம் நீயே பிறரைக் கொண்டு செய்விக்கின்றாய் ஆகலின், அவையும் நீ செய்யும் செயலே அன்றிப் பிறிது இல்லை''

என்றும் இவ்வாறு அவனருளை அல்லது ஒன்றனையும் கருதாதவராய், தம்மை இழந்து நிற்கப் பெறுவர். இறைபணியின் முறை இஃதே ஆகும். பணி என்பது செயல். ''இறைபணி'' என்பது எல்லாம் இறைவன் செயலாகக் காண்பதாகும். இவ்வாறு நிற்கப் பெற்ற வரிடத்தில் ''நான் செய்தேன் பிறர் செய்தார்'' என்று எண்ணுவது ஆகிய அஞ்ஞானமும், புண்ணிய பாவங்களாய்க் கட்டுப்படும் கன்மமும் பிரவேசிக்கமாட்டாவாய் ஒழிந்து விடும். ஆதலால், சிவபெருமான் அந்தத் தன்மை உடைய மெய் உணர்வால், தன்னை அடைக்கலம் புகுந் தவரைத் தன்னைப் போலச் சுத்தனாகச் செய்து பாதுகாப்பன்.

இஃது எது போல எனின், மந்திரவலியால் அடங்கி இரை நுகரப் பெறாது கிடக்கும் பாம்பு, ஏதேனும் ஒரு சமயம் வாய்த்த பொழுது, சும்மா கிடவாது தீண்டும். அதுபோல இறைபணி நிற்கும் அவரைச் சார மாட்டாது ஒழிந்து கிடந்த ஆகாமிய வினை அவருக்கு நன்மை தீமை களைப் பிறர் செய்தபொழுது, செய்த அந்தத் தொடர்பு பற்றி,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவருடைய நன்மை தீமைகளுக்குத் துணையாய்ச் சென்று கூடும். ஆகவே அவ்வாறு கூடும்படி செய்து பிறர் செய்த அவற்றின் பலன்களை, அவர் நல்வழிப்படுதல் பொருட்டு அதிகப்படுத்தி ஊட்டுவதும் செய்வன். இவ்வாறு முத்தர் செய்த வினையை அவருக்கு இறைபணி ஆக்கியும், பிறர் செய்த வினையை அவருக்கு வினை ஆக்கியும், செய்வது இறைவனுக்குச் சலம் (பாரபட்சம்) ஆகாது. ஏன் என்றால், முத்தன் தன்னையே சார்ந்து நிற்பதாலும், ஏனையோர் அங்ஙனம் சாராது நிற்பதனாலும், அவரவருக்குத் தக்கவாறு செய்தல் நகுதி ஆதலால், இறைவனுக்குச் சலமின்மை துணியப்படும்.

எல்லாம் சிவன் செயல் என்று எண்ணும் இறைபணியில் நில்லாதவர் செய்யும் கிரியா யோகங்களால், பிறப்பு அறாது எனக் கூறுகின்றது

நாடுகளில் புக்கு உழன்றும், காடுகளில் சரித்தும்,
நாக முழை புக்கு இருந்தும், தாகம் முதல் தவிர்த்தும்,
நீடுபல காலங்கள் நித்தராய் இருந்தும்,
நின்மல ஞானத்தை இல்லார் நிகழ்த்திடுவர் பிறப்பில்
ஏடுதரு மலர்க் குழலார் முலைத் தலைக்கே இடைக்கே
எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும், இறை ஞானம்
கூடும் அவர், கூடரிய வீடும் கூடிக்
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே இருப்பர். **308**

தெளிவுரை:

இறைபணி ஆகிய நின்மல ஞானம் இல்லாதவர், புண்ணிய தேசங்களில் சென்று, புண்ணிய தீர்த்தங்களில் ஆடியும், புண்ணிய தலத்தைத் தரிசித்தும், வனத்தில் சென்று கிழங்கு, பழம் முதலியவற்றைப் புசித்தும், மலையில் உள்ள குகையில் யோகத்தில் இருந்தும், அந்த யோகப் பயிற்சி வலியினால் பசியினையும் நீர் வேட்கை முதலியனவற்றையும் ஒழித்தும், நெடுங்காலம் மரணம் இல்லாது இருந்தும், பிறப்பு என்னும் துன்பத்திலிருந்து நீங்கமாட்டார்.

இறைபணியில் நிற்பவர், இதழ் பொருந்திய மாலை அணிந்த கூந்தலை உடைய மங்கையர் கொங்கையிடம் தோயப்பெற்று இன்பம் அனுபவித்தாலும், பிறப்பின் நின்றும் நீங்கி பெறுவதற்கு அரிய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வீட்டினைப் பொருந்தி, சிவந்த குஞ்சிதபாதத்தின்கண் அடங்கி நிற்பர். ஆதலால் எத்துணை நன்மைகளும் இறைபணிக்கு இணை ஆகா: எத்துணைத் தீமைகளும் இதன் பயனைக் கெடுக்க மாட்டா.

இந்த நூலில் உள்ள 287 ஆவது செய்யுளில் ''மங்கை யாரோடு கூடி இன்பம் நுகரினும்'' எனக் கூறியது, இறைபணியில் நிற்பவரது பெருமையை உணர்த்துதற்பொருட்டு ஆகும்; இங்கு அவ்வாறு கூறியது. இறைபணியில் நிற்பவரது தொண்டின் பெருமையை உணர்த்துதற் பொருட்டு ஆகும். ஆகவே கூறியது கூறல் என்னும் குற்றம் ஆகாது.

இறைபணியில் நின்றவர் இந்திரியங்களோடு கூடினாலும், பற்று அற்று இருப்பர் என்பதை உவமை முகத்தால் விளக்குகின்றது.

அங்கித் தம்பனை வல்லார்க்கு அனல் கூடாது ஆகும்;
ஔடதம், மந்திரம உடையார்க்கு அருவிடங்கள் ஏறா;
எங்கித்தைக் கன்மம் எலாம் செய்தாலும் ஞானிக்கு
இருவினைகள் சென்று அணையா முற்செய்வினை இங்குத்
தங்கிப்போம் பாத்திரமும் குலாலன் வினை தவிர்ந்த
சக்கரமும் கந்தித்துச் சுழலுமா போல்
மங்கிப்போய் வாதனையால் உழல்விக்கும்; எல்லா
மலங்களும் பின் காயமொடு மாயும் அன்றே. 309

தெளிவுரை:

இந்திரியங்களோடு கூடி இன்பம் அனுபவித்த பொழுதும் அந்த இனபமும் இந்திரியமும் தன்னைத் தாக்காமலும், அதனால் மேல்வினை ஏறாமலும் இறைவனைக் கூடி இருப்பன் என்று கூறியதற்கு உவமை வருமாறு:

சுடுவதற்கு ஏது ஆகிய அக்கினியை மந்திரத்தினால் தம்பனம் செய்ய வல்லவன், அவ்வாறு தம்பனம் செய்து அந்த அக்கினியில் மூழ்கிக் கிடந்தாலும், அவனை அது சுடாது. அதுபோலவும் கொலை செய்வதற்கு ஏது ஆகிய விடங்களைத் தடுக்க வல்ல மந்திரம், மருந் துகளைப் பெற்றிருப்பவன், அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு விடங் களை எல்லாம் நிறைய உண்ட போழ்தும் அவனை அந்த விடம் கொல்லாது. அதுபோலவும், விருப்பு, வெறுப்புகள் நிகழ்வதற்கு ஏது ஆகிய இந்திரியங்களை மேற்கூறிய இறைபணியில் நின்று,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தன் ஏவல் கேட்கும்படி அடக்கவல்ல ஞானிகள், எந்த இந்திரியங்களிலிருந்து எந்தத் தொழிலைச் செய்தார் ஆயினும், அதுபற்றி அவரிடத்தில் விருப்பு வெறுப்பு நிகழ்ந்து மேலைக்கு வித்து ஆகிய சஞ்சிதம் ஆதல் செல்லாது; ஏனை பிராரத்த வினையும் தனது செயல் நீங்கப் பெற்று, அவரிடத்தில் பொருந்த மாட்டாமல், அக்கினியினால் வெந்த புடவை பார்வைக்கு வடிவம் போல் தோன்றினாலும், வடிவத்தின் தன்மை இல்லாதது போல, பிராரத்த வினையின் ஆற்றல் கெட்டேபோய், வாசனை அளவில் மட்டும் நின்று சிறிது தாக்கும். அவ்வாறு தாக்குவதனால், மேல் ஆகாமிய வினை ஏறுவது இல்லை.

வாசனை அளவில் மட்டும் நின்று, பயன் இல்லாது போவது எது போல எனின், காயம் இருந்து ஒழிந்த பாத்திரத்தில் அந்த வாசனை கிடந்து வாசித்தாலும், அந்த வாசனை கறிக்குப் பயன்படுவது இல்லாதது போல் ஆகும், மேலும், குயவன் ஒருவன் குடத்தை வனைவது வரை சுழற்றிவிட்ட திகிரி, வனைந்த பின்னரும் சுழலுதல் ஆகிய தன்வேகம் உள்ள வரையில் சுழன்று, மற்றொரு குடத்தினை வனைவதற்குப் பயன்படுவது இல்லாமை போலவும் ஆகும். காய வாசனை பாத்திரத்தோடு ஒழிவது போலவும், சுழற்சி ஆனது வேகம் நின்றவுடன் ஒழிவது போலவும், தங்கி நின்ற பிராரத்த வினையும் தேகம் உள்ள வரையில் இருந்து, தேகம் நீங்கும் காலத்தில் அதனுடன் நீங்கும்.

வாசனை தாக்காது இருப்பதற்குக் கூறிய காய உவமையும் திகிரி உவமையும், அந்த வாசனையினை வேற்றுமையை உணர்த்த நின்றன. ஆக்வே, 'மிகைபடக் கூறல்'' ஆகிய குற்றம் இன்று. அவை வருமாறு:

காய வாசனை, அது தங்கி இருந்த பாத்திரம் உள்ளவரை, அந்தப் பாத்திரத்தில் அந்த வாசனை ஒரே அளவில் இருக்கும்; அதுபோலவே இறைபணி நின்ற பொழுது தேகம் நீங்கும்வரை, ஒரே விதமாய் இருக்கின்ற தீவிர வாசனையை, அந்த உவமை குறிக்கும். திகிரி முதலில் சுழலும் சுழற்சியின் வேகம் மறுகணத்தில் இருக்காது; கணந்தோறும் அதன் வேகம் குறைந்து குறைந்து, விரைவில் நின்று விடும். அது போலவே, பிராரத்த வாசனை சிறிது சிறிதாகக் குறைந்து தேகம் விடும் போது, அறவே ஒழிந்து விடும். ''காய வாசனை'' உவமை, பிராரத்த வாசனை தேகம் உள்ள வரை குறையாது இருப்பதைக் குறிக்கும். ''திகிரி சுழற்சி'' உவமை, பிராரத்த வாசனை சிறிது சிறிதாகக் குறைந்து, தேகம் நீங்கும்போது அறிவே ஒழிவதைக் குறிக்கும்.

பத்தாம் சூத்திரம் முடிந்தது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பதினொன்றாம் சூத்திரம்

தோற்றுவாய்:

பத்தாம் சூத்திரத்தால், ஏகனாகி நிற்றல், இறைபணி நிற்றல் என்னும் இரண்டினாலும், பாச நீக்கம் கூறினார். அதன் பின்னர், அவ்வாறு பாச நீக்கம் எய்திய ஆன்மாவிற்கு நிகழும் சிவானுபவத்தில், அனுபவிக்கின்ற ஆன்மா, அனுபவம், அனுபவிக்கப்படும் பொருள் என்னும் மூன்றும் உண்டோ இல்லையோ என ஐயம் நிகழும் அல்லவா? அந்நிகழ்ச்சி பற்றி, அந்த முன்றும் அத்துவிதமாக உண்டு என்று சிவப் பேறு ஆகிய பயனை வகுத்துக் கூறுவதற்கு எழுந்தது, பதினொன்றாம் சூத்திரம்.

சிவப்பேறு என்பதே முத்தி எனப்படும். முத்தி என்பது விடுதல். அந்த முத்தியும், பரமுத்தி, சீவன் முத்தி என இருதிறப்படும். ''பரமுத்தி'' என்பது, பரனோடு கூடி நின்று பாசத்தை விடுதல் ஆகும். ''சீவன் முத்தி'' என்பது சீவனாகி நின்றும் பாசத்தை விடுதல் ஆகும். அஃதாவது, சீவத்தன்மையைச் செய்வது ஆகிய பாசத்தை இழந்து நிற்றலைக் குறிக்கும். இவ்விரு வகை முத்தியினுள் பரமுத்தியை விதேக முத்தி என்றும் கூறுவர். (விதேகம் – தேகத்ை ,த விடுதல்). இந்தப் பரமுத்தி தான் முதற் கண் நிகழ்வது. ''காயமொடு மாயும் அன்றே''(309) ''காயம் ஒழிந்தால் சுத்தன் ஆகி''(310) என்று இந்த நூலில் கூறுவதனாலும், இந்தக் கருத்துத் தோன்றக் கூறும் பிற நூல்களாலும் உடம்பு நீங்கிய பின்னர் பரமுத்தி உண்டு என்பது உணரப்படும்.

நீங்கிய உடம்பு ஆன்மாவுக்குத் தெரியாது; அதுபோல உடம்பு இருக்கும் பொழுதே அந்த உடம்பைப் பற்றிய எண்ணம் சிறிதும் இன்றி, சாதனத்தில் உறைத்து நிற்கப்பெற்றால் உடம்பு தோன்றாது. அப்பொழுதே சிவம் தோன்றும். இந்நிலையே பரமுத்தி ஆகும். ஆயினும், பிராரத்த கன்மம் காரணமாக மீண்டும் உடம்பு தோன்றவரும். தோன்றும்பொழுது, முன்னர் நிகழ்ந்த சிவானுபவத்தை மீண்டும் சிந்தித்தால், உடம்பு மறையும். இவ்வாறு உடம்பு தோன்றுதலும் மறைதலும் ஆகிய நிலை, பிராரத்தம் உள்ளவரையில் நிகழும். ஆகவே, எக்காலத்தும் உடம்பு தோன்றாத பிராரத்த தேகம் ஒழிவதே பரமுத்தி எனப்பட்டது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சாதனத்தில் உறைத்து நிற்கும் ஆன்மாவுக்கு அந்தப் பரமுத்தி ஆகிய சிவானுபவ நிலையே முதற்கண் விளங்குவது ஒன்றாகும்; எனவே பரமுத்தி முதற்கண் நிகழும் என்பது பொருந்துமாறு அறியப்படும், இவ்வுண்மையை இந்தச் சூத்திரத்து முதல் செய்யுளில்,

''அந்நிலைமை இந்நிலையில் அடைத்த முறையாலே''

என்று அருளிச் செய்திருப்பதிலிருந்து உணர்ந்து மகிழலாம். எனவே, பரமுத்தி ஆகிய சிவப்பேறு இந்தப் பதினொன்றாம் சூத்திரத்தால் கூறுகின்றார்.

பன்னிரண்டாம் சூத்திரம் சீவன் முத்தர் இயல்பு கூறுகின்றது. எனவே இந்தச் சூத்திரத்தில் கூறும் முத்தி, பரமுத்தி என்பது பெறப்படும்.

இறைவன் அத்துவிதமாய் நின்று காட்டிக் காணும் உபகாரத்தைச் சிந்தித்து அன்பு செய்வதனால் மலங்கள் நீங்கிச் சிவானுபவம் உண்டாகும் எனச் சூத்திரப் பொருளைத் தொகுத்துக் கூறுகின்றது.

காயம் ஒழிந்தால் சுத்தன் ஆகி, ஆன்மாக்
காட்டக் கண்டிடும் தன்மை உடைய கண்ணுக்கு
ஏயும் உயிர் காட்டிக் கண்டிடுமா போல
ஈசன் உயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன்; இத்தை
ஆயும் அறிவு உடையனாய் அன்பு செய்ய
அந்நிலைமை இந்நிலையில் அடைந்த முறையாலே
மாயம் எலாம் நீங்கி, அரன் மலர் அடிக்கீழ் இருப்பன்,
மாறாத சிவானுபவம் மருவிக் கொண்டே. 310

தெளிவுரை:

காட்டக் காணும் தன்மை உடைய கண்ணுக்கு உருவத்தைக் காணும்படி காட்டியும், அஃதாவது அறிவித்தும், கண்ணொடு நின்று அந்த உருவத்தைக் கண்டும் உயிர் உதவுகின்றது. அதுபோல, உயிர்க்கு விடயத்தை அறியும்படி அறிவித்தும், உயிரோடு கூட நின்று விடயத்தை அறிந்தும் இறைவன் உபகரித்து வருகிறான். ஆகவே, உடல் ஒழிந்த பிறகு மும்மலங்களும் நீங்கப் பெற்று, சுத்தன் ஆவதற்கு உரிய ஆன்மா.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவன் அத்துவிதமாய் நின்று அறிவித்தும் அறிந்தும் வருகின்ற உபகாரம் ஆகிய உரிமையை உறுதியாகப் பற்றி அறிந்து கொண்டு நிற்கப் பெற்றால், இறைவனை அடைய வேண்டும் என்னும் இச்சை இடையறாது நிகழும்.

அவ்வாறு அறிவும் இச்சையும் பிறிது ஒன்றில் சேராமல், அத்துவித நிலை ஒன்றே பற்றி, இறைவன் திருவடியில் ஒருங்கு நிகழவே காயம் ஒழிந்தபின் மலம் நீங்கி சுத்தனாய் நிற்கும் முறைமையை ஆன்மா, காயத்தோடு நிற்கும் பொழுதே கைகூடப் பெறும். பெறவே, ஏனைக் கிரியையினையும் எல்லா மலங்களையும் இந்தப் பிறவியிலேயே நீத்து ஒழித்து, இறைவனுடைய அறிவு இச்சைகளோடு, ஆன்மா தன்னுடைய அறிவு இச்சைகள் ஒற்றமைப்பட்டு, இறைவனது செங்கமல மலர் போலும் திருவடியைக் கூடி, மாறுபடாத சிவானுபூதியே சுவானுபூதியாய்க் கொண்டு வாழ்வன்.

இந்தச் சூத்திரத்தில், பத்தாம் சூத்திரத்தில் கூறாமல் விடுத்த ''குற்றம் அகலும்'' என்பதை விரித்துக் கூறுகின்றார். எனவே, இந்தச் செய்யுள் முக்கூற்றை உடையது. ஆயினும் சிவஞானபோதம் என்னும் முதல் நுல் விதியின்படி, இந்தச் சூத்திரத்தை இரண்டு கூறாக்கி, மேலைப் பத்தாம் சூத்திரக் கூற்றை ஒரு கூறாகப் பிரித்து எண்ணாமல், முதல் செய்யுளுடன் தொகுத்து வைக்கப்பட்டு இருக்கின்றது. அந்த முக்கூற்றுள், மேலைச் சூத்திரத்தின் ''ஒழிபு'' ஆகிய கூறு வருமாறு.

''காயம் ஒழிந்தால் சுத்தன் ஆகி, அந்நிலைமை இந்நிலையில் அடைந்த முறையாலே, மாயம் எலாம் நீங்கி''

இந்தச் சூத்திரத்து முதற்கூறு: ''ஆன்மா காட்டக் கண்டிடும் தன்மை உடைய கண்ணுக்கு, ஏயும் உயிர் காட்டிக் கண்டிடுமா போல ஈசன் உயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன்.''

இரண்டாம் கூறு: இத்தை ஆயும் அறிவு உடையனாய் அன்பு செய்ய, அரன் மலரடிக்கீழ் மாறாத சிவானுபவம் மருவிக் கொண்டே இருப்பன்,

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவானுபவம் உடைய முத்தருக்கு சிவமே அன்றிப் பிற பொருள் தோன்றாது எனக் கூறுகின்றது

பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர், பரமே
பார்த்திருப்பர்; பதார்த்தங்கள் பாரார்; பார்க்க
வருஞானம் பலஞானம், அஞ்ஞான விகற்பம்
வாச்சிய வாசக ஞானம், வயிந்த வத்தின் கலக்கம்
தருஞானம், போக ஞாதிரு ஞான ஞேயம்
தங்கிய ஞானம் சங்கற்பனை ஞானம் ஆகும்;
திரு ஞானம் இவை எல்லாம் கடந்த சிவஞானம்
ஆதலால் சீவன் முத்தர் சிவமே கண்டிருப்பர். 311

தெளிவுரை:

அத்துவிதமாய் நின்று உபகரிக்கும் இறைவன் உரிமையை ஆராயும் அறிவு ஆகிய பரஞானத்தினால், சிவத்தை நோக்கி அன்பு செய்யப் பெற்றவர், சிவம் ஒன்றினையே அறிந்து நிற்பர். அஃதன்றி பிராரத்தவினை தாக்குவதற்கு உரிய ஏனைப் பொருள்களை ஒரு சிறிதும் காண்பாரல்லர். அந்தப் பொருள்களைக் காணவரும் ஞானங்கள் கருவிகளோடு கூடிநின்று அறியும் பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம் என்னும் சுட்டுணர்வின் பேதங்கள் ஆகிய அளவை ஞானங்கள் ஆகும். குருவனிடத்துக் கேட்கும் சாத்திர ஞானமோ என்று கேட்டால், அது சுத்த மாயா காரியம் ஆகிய சொல்லும் பொருளும் ஆன ஞானம் ஆகும். அந்தச் சாத்திரம் பல்வேறு வகைப்பட விரிந்து கிடக்கும்; ஆதலால் இது சரியோ அதுசரியோ என்னும் கலக்கம் உண்டாகும். அந்தக் கலக்கம் தீர்வதற்காக அந்தப் பொருளை ஆராய்வது ஆகிய சிந்தித்தல் ஞானமோ என்று கேட்டால், அஃது ஆராய்ச்சி ஞானம் ஆகும். சிந்தித்த பின்னர் தெளிவது ஆகிய சாதன ஞானமோ என்று கேட்டால், அது காண்பானும் காட்சியும் காணப்படும் பொருளும் ஆகிய பேத ஞானமே அன்றி, அனுபூதி ஞானம் அன்று. ஆதலால், இவை அனைத்திற்கும் மேலாய் இந்த இடத்தில் கூறப்பட்ட நிட்டை ஆகிய சிவஞானம் ஒன்றே சிறப்பு உடைய ஞானம் ஆகும். இதனைப் பெற்ற சீவன் முத்தர், சிவம் ஒன்றே கண்டு இருப்பர் அன்றி, பிராரத்த வாதனையில் படுவார் அல்லர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திவ்விய தேகத்தோடு இருப்பதே முத்தி என்பவரை மறுத்து சிவானுபவம் உடையவர்க்கு மாயா மலம் பற்றறக் கழியும் எனக் கூறுகின்றது

அநாதி உடல் ஒன்றினை விட்டு, ஒன்று பற்றிக் கன்மால்
ஆய் அழிந்து வருதலால், அந்தம் இல்லை;
பின் ஆதி அருள் பெற்றவர்கள் நித்த உருவத்தைப்
பெற்றிருக்கை முத்தி எனில், பெறும் பதமே
இதுவும்
இனாது நிலை இது தானும் காயம் உண்டேல்
இரும் கன்மம் மாயை மலம் எல்லாம் உண்டாம்:
மனாதி தரும உடல் ஆதி காரியத்தால் அநாதி
மலம் அறுக்கும் மருந்து அற்றால் உடன் மாயும்
காணே. 312

தெளிவுரை:

ஆன்மாக்களுக்கு அநாதியே கன்மத்தினால் நீரோட்டம் போல தொடர்ச்சியாய் தேகம் உண்டாகியும் அழிந்தும் வரும். ஆதலால், யாதேனும் ஒரு தேகம் இல்லாத நிலை இல்லை. அவ்வாறு ஒரு நிலை உண்டு எனறு கூறுவது பொருந்தாது. ஆகவே. இறைவன் அருளைப் பெற்ற இடத்தும், தோற்றி அழியும் உடம்பு போல் இன்றி, நித்திய மங்கள திவ்விய சரீரத்தைப் பெற்று இருப்பதே முத்தி என்று உருவ சிவ சம வாதிகள் கூறுவர். அப்படியானால் உடம்பு உளது. ஆகவே, அதற்குக் காரணம் ஆகிய மாயையும் கன்மமும் ஆணவமும் ஆகிய அனைத்தும் விட்டு நீங்குவது இல்லை. எனவே, அந்நிலை துன்பம் பயக்கும் நிலையே ஆகும். அதனை முத்தி என்று நூல்களில் கூறுவதற்கு தாற்பரியம், அது பதமுத்தி என்பதே ஆகும். அன்றியும், இந்த உடம்பு சூக்கும சரீரத்திலிருந்து தோன்றுவதால் ஆதியே ஆகும்; அநாதி அன்று. அந்த உடலும், ஆன்மாவை அநாதியே பற்றி இருக்கின்ற ஆணவமலம் ஆகிய நோயைத் தீர்ப்பதற்கு, மருந்தாகத் தோன்றுவது ஆகும். ஆகவே, ஆணவமலம் நீங்கிய பொழுது உடம்பு நீங்குவதே அன்றி, மலம் நீங்கி அருள் பெற்ற முத்தியிலும் உடம்பு உண்டு என்பது பொருந்தாது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சிவானுபவம் உடையவருக்கு ஆணவமலம் பற்றறக் கழியும் எனக் கூறுகின்றது

தெரிவு அரிய மெய்ஞ்ஞானம சேர்ந்த வாறே
சிவம் பிரகாசிக்கும்; இங்கே சீவன் முத்தன் ஆகும்;
உரிய மலம் ஔடதத்தால் தடுப்புண்ட விடமும்,
ஒள் எரியின் ஒளிமுன்னர் இருளும் தேற்றின்,
வருபால் சேர் நீர் மருவு கலங்கலும் போலாகி,
மாயாதே தன் சத்தி மாய்ந்து, காயம்
திரியும் அளவும் உளதாய்ப் பின்பு காயம்
சேராத வகை தானும் தேயும் அன்றே *313*

தெளிவுரை:

பர ஞானத்தைப் பெற்ற பொழுதே சிவம் பிகாசிக்கும். அப்பொழுதே சீவன் முத்தன் ஆவன். சீவன் முத்தி என்பது, சிவம் பிரகாசிக்கப் பெற்றும், பிராரத்த தேகத்தோடு கூடிய நிலை ஆகும். தேகத்தோடு கூடி இருந்தாலும், சகசம் ஆகிய ஆணவமலம், தனது சத்தி கெட்டு வாசனை மாத்திரையாய், உடம்பு உள்ள வரையில் நின்று, உடம்பு நீங்கும் பொழுது பிறிது ஒரு பிறவிக்கு ஏது இன்றி, அந்த உடம்போடு பற்றறக் கழியும்.

மலம் இருந்தும் அதன் செயல் இல்லாமல் போவது எப்படி என்றால், ''தேற்றான்'' என்னும் மரத்தின் விதை சேரப்பெற்ற நீரில் அடங்கி இருக்கும் கலங்கல், ஏதேனும் ஒரு காரணத்தால் மேற்படினும், மீண்டும் அந்தத் தேற்றான் விதை அடக்கிவிடும். அதுபோல பர ஞானத்தால் அடங்கி இருக்கும் மலம், பண்டை வாசனையால் மேற்படினும், மீண்டும் பரஞானம் அடக்கிவிடும். மலமும் அடங்கியாவது இருப்பதனால், பிறிது ஒரு பிறவியைத் தராது கழியும் என்பது எப்படி முடியும் என்றால், மிகுந்த அக்கினிப் பிரகாசத்தின் முன்னர் இருள் இல்லாதது போல்தேகம் நீங்கிய பின்னர் சதாசிவம் பிரகாசிக்கப்பெறுவர் ஆதலின், அவரிடத்து மலம் பற்றறக் கழியும்.

கழியினும், அக்கினிப் பிரகாசம் இல்லாத இடத்தில் இருள் இருப்பதுபோல, ஏனைப் பெத்தர் இடத்திலும் மலம் இருக்கும். அப்படியானால், தேகத்தோடு கூடி இருக்கும்பொழுதே சிவம் பிரகாசித்துவிட்டபடியால், சீவன் முத்தி நிலையிலும் மலம் அறவே இல்லை என்று சொல்லக் கூடாதோ என்றால், கூடாது. ஏன் என்றால்,மருந்தினால்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தடைப்பட்டு இருக்கும் நஞ்சு, மருந்தின் வலியின் குறையை எதிர் பார்த்து இருப்பது போல, சீவன் முத்தர் இடத்தில் அவர் சிவபாவனை யிலிருந்தும் நழுவுதலை மலம் எதிர்பார்த்து அடங்கி இருக்கும், ஆதலால் சிவம் பிரகாசிக்கப் பெற்ற சீவன் முத்தி நிலையி லும், சதாசிவ பாவனை செய்து தேகம் நீங்கப் பெற்றால், மலம் பற்றறக் கழியும்.

ஆணவமலம் அநாதி ஆதலால், பற்றறக் கழியாது என்பவரை மறுத்துப் பற்றறக் கழியும் என வலியுறுத்துகின்றது

ஆணவம் தான் அநாதி. அந்தம் அடையாது ஆகும்;
அடையின் அந்த ஆன்மாவும் அழியும் எனில், செம்பில்
காணல் உறும் களிம்பு, இரத குளிகை பரிசிக்கக்
கழியும், செம்பு உரு நிற்கக் கண்டோம் அன்றே?
தாணுவின் தன் கழல் அணையத் தவிரும் மலம்; தவிர்ந்தால்
தான் சுத்தனாய் இருக்கை முத்தி; அரண் தாளைப்
பூணவேண்டுவது ஒன்றும் இல்லை எனில், அருக்கன்
புகுத இருள் போம்; அடியில் பொருந்த மலம் போமே. 314

தெளிவுரை:

ஆணவமலம் அநாதி நித்தம். ஆதலால் முத்தியில் அஃது அழி யும் என்றால், அநாதி நித்தம் ஆகிய ஆன்மாவும் அழியும், எனப்பட்டு இரு பொருளும் நித்தம் என்பது இழுக்காய் முடியும். ஆகவே, முத்தி நிலையிலும் சகசம் ஆகிய ஆணவ மலம் நீங்குமாறு இல்லை என்பர் பாடாணவாத சைவர். அவர்கள் மலத்தோடு கூடி அறியாமையராய் அடங்கி இருப்பதால், பாடாணவாதி எனப்பட்டனர். பாடாணம் என்பது கல்.

அநாதி ஆகிய செம்பினிடத்தில் அநாதியாய் உள்ள களிம்பு, இரத குளிகை பட்ட அளவிலேயே நீங்கி, செம்பு பொன் உருவாய் நிற்கக்காணலாம். அதுபோல, இறைவன் திருவடி ஆகிய மெய்ஞ்ஞானம் சார்ந்த அளவிலேயே, உயிரோடு சகசமாய் நின்ற ஆணவமலம் நசிக்க, உயிர் சிவமாய் நிற்பதற்கு இழுக்கு இல்லை. எனவே பாடாணவாத சைவர் மதம் பொருந்தாது. இனி, மலம் நீங்கப்பெற்ற அளவிலேயே ஆன்மா மெய்ஞ்ஞானம் சாரும்; அதுவே முத்தி ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மலம் நீங்கியதன் மேலும் திருவடி அடைதல் வேண்டாம் என்பர் பேதவாத சைவர். இவர் சிவனோடு கலவாமையின் பேதவாதி எனப் பட்டார். இருள் நீங்கி சூரியன் ஒளி விளங்கிய பொழுதும், சூரியன் ஒளியோடு கண் ஒளி கலந்தால் இருள் நீங்கும்; கலவாது இமைகளால் அந்த ஒளி மூடப்பட்டிருந்தால், கண்ணுக்கு இருள் நீங்காது. அதுபோல, ஆன்மாவின் அறிவுக்கு மெய்ஞ்ஞானம் விளங்கி, ஆன்மா இறைவ னுடன் கலந்தால், மலம் பற்றறக் கழியும், இல்லையானால் மலம் பற்றறக் கழியாது. ஆதலால், பேதவாத சைவர் மதமும் பொருந்தாது.

அநாதியான ஆணவ மலம் கெடும் என்பதற்கு உவமை கூறிக், கெடினும் ஏனைப்பெத்தர் இடத்தில் இருப்பதனால் நித்தத்திற்கு இழுக்கு இல்லை எனக் கூறுகின்றது

நெல்லினுக் தவிடு உமிகள் அநாதியாயே
நெல்லை விட்டு நீங்கும் வகை நின்றநிலை நிகழ்த்தீர்
சொல்லியிடில் துகள் அற்ற அரிசியின்பால் இல்லை;
தொக்கு இருந்து மற்றொரு நெல் தோன்றிடாவாம்
மெல்ல இவை விடும் அறவே; இவை போல அணுவை
மேவும் மலம், உடல் கன்மம் அநாதி விட்டே நீங்கும்;
நல்லசிவ முத்தியின்கண் பெத்தான்மாவை
நண்ணுகி நிற்கும் ஆதலால் நாசமும் இன்றாமே. 315

தெளிவுரை:

இரத குளிகை தொட்ட செம்பிலும் களிம்பு தொக்கி இருக்கும்; அதுபோல சிவம் விளங்கிய ஆன்மாவின் இடத்திலும் மலம் தொக்கி இருக்கும்; ஆதலால் அந்த உவமையினால் மலம் அழிந்தும் ஆன்மா அழியாது என்று சாதித்தது பொருந்தாது என்று கூறினால், அதற்கு விளக்கம் வருமாறு:—

அரிசியோடு சகசமாய் நின்ற முளை தவிடு உமி ஆகியன, அரிசியை விட்டுக் கெட்டு ஒழியும் பொழுது, அரிசி கேடு இன்றி நிலை பெறுவதைக் காண்கிறோம். அவ்வாறு முளை முதலிய நீங்கிய அரிசி யிலும் தீட்டுவது குறைவதனால் அவை அடங்கி நிற்கும். ஆயினும், வேறொரு நெல் தோன்றுவதற்கு, அஃதாவது முளைப்பதற்கு அந்த அரிசி காரணமாகும் என்பது செல்லாது; எனவே, அந்த முளை முதலியன அந்த அரிசியில் அடங்கி இருக்கும் என்று சொல்லுவதற்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஓர் இயைபு இன்றி, பாகம் செய்வதற்கு உரிய செயலால் அவை மெல்ல மெல்ல நீங்கிவிடும்; ஆதலினால் அவை இல்லை என்பதே தெளிவு.

அதுபோல, அநாதியே உயிர்களோடு சகசமாய் நின்ற மும் மலங்களும் முத்தி நிலையில் விட்டு ஒழியும் என்றே கொள்க. விட்டு ஒழியினும், ஏனைப் பெத்தர் இடத்தில் அம்மலங்கள் இருப்பதால், அவை நித்தப்பொருள் என்பதற்கு இழுக்கு இல்லை.

''உண்மை விளக்கம்'' என்னும் நூலின் 51–ஆவது வெண்பா வில் ''இத்தை விளைவித்தல் மலம்'' என்று கூறி இருப்பதால், முத்தி நிலையில் மலம் நீங்கும் என்பது எப்படிப் பொருந்தும், என்றால் கூறுதும்.

துன்பத்தை விளைவிக்கும் மலம் இன்பத்தை விளைவிக்க மாட்டாது. மல நீக்கமே இன்பத்தை விளைவிக்கும் என்பதை அவ்வாறு கூறினார்; ஆதலால் மலம் நீங்கும் என்பது பொருந்தும்.

''மல நீக்கம்'' ''மல ஒடுக்கம்'' 'மலம் இன்மை'' என்று நூல் களில் வரும் தொடர்களுக்கு, ''வீடு பேற்றில் மலம் நீங்கி விடுகிறது'' என்றோ, ''மலம் ஒடுங்கிப் போகிறது'' என்றோ ''மலம் இல்லாமல் போய்விடுகிறது'' என்றோ பொருள் கொள்வது பொருந்தாது. ஏன் என்றால் மலம் நித்தப்பொருள். நித்தப் பொருளுக்கு அழிவு இல்லை. எனவே ஆணவமலம் என்றும் தன் நிலையில் அப்படியேதான் இருக்கிறது. உயிர்தான் ஆணவமலத்தைப் பற்றுவதை விட்டு நீங்கவோ, இறைவனைப் பற்றி அவன் திருவருளில் ஒடுங்கவோ வேண்டும். எனவே ஆணவமலம் நீங்கியது என்பதற்குப் பொருள் உயிர் மலப்பற்றை விட்டு நீங்கியது என்பதே ஆகும். சடப்பொருள், தானே செயல்படுவதில்லை. ''முத்தரை விட்டு நீங்கிப் பெத்தரிடத்தில் மலம் இருக்கும்'' என்பதற்குப் பொருள், ''முத்தர் ஆணவமலப் பற்றை'' விட்டு நீங்கியவர், என்றும், பெத்தர் ''ஆணவமலப் பற்று உடையவர்'' என்றும் பொருள் கொள்ள வேண்டும். முத்தி பெற்ற ஆன்மாக்கள் வேறு ஒன்றனையும் நோக்காது, இறைவன் அடிக்கீழ் அடிமையாய் நிற்பர். அவ்வாறு இறைவனையே சார்ந்து நிற்கும் சார்ச்சிச் சிறப்பு காரணமாக அத்தகு ஆன்மாக்கள் ஆணவமலத்தால் தாக்குறாமல், இருக்கிறார்கள்; அவ்வளவே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பதினொன்றாம் சூத்திரம்

முதல் அதிகரணம்

"ஆன்மா காட்டக் கண்டிடும் ... ...
... ... கண்டிடுவன் என்பது"

அநாதி சம்பந்தம் ஆன ஆணவ மலத்தினின்று முத்திக் காலத்தில் உயிர் நீங்குவது போல, பெத்தம் முத்தி இரண்டிலும் இறை வனை விட்டு உயிர் தனித்து நிற்பது இல்லை எனக் கூறுகின்றது

எவ்விடத்தும் இறை அடிமை இன்றி அமைந்து ஒன்றை
அறிந்து இயற்றியிடா உயிர்கள்; ஈசன் தானும்
செவ்விதினில் உளம் புகுந்து செய்தி எல்லாம் உணர்ந்து
சேட்டிப்பித்து எங்குமாய்ச் செறிந்து நிற்பன்;
இவ்வுயிர்கள் தோற்றும் போது, அவனை இன்றி தோற்றா;
இவற்றினுக்கு அம் முதல் எழுத்துக்கு எல்லாமாய்
நிற்கும்
அவ் உயிர் போல் நின்றிடுவன்; ஆதலால் நாம்
அரனடியை அகன்று நிற்பது எங்கே யாமே? 316

தெளிவுரை:

முத்தி நிலையில் உயிர், அநாதியே உள்ள ஆணவ மலத்தை விட்டு நீங்கும். அதுபோல அநாதியே உள்ள இறைவனை விட்டும் உயிர் நீங்குமோ என்றால், உயிர் எக்காலத்திலும் இறைவனைவிட்டு நீங்கவே செய்யாது. ஏனென்றால் பிறப்பு நிலையிலும் முத்தி நிலையிலும் ஆன்மாக்களுக்கு இறைவன் திருவடியை இன்றி, அறிவு செயல்கள் விளங்குவதோ, விளங்கிய பிறகு விடயத்தில் சென்று பற்றுவதோ முடியாததாகும்.

எழுத்துக்களை இயக்குதல் பொருட்டு, அகரம் ஆகிய நாதம் எழுத்துக்களின் உடன் நிற்பது போல, ஆன்மாக்களுக்கு அறிவும் செயலும் விளங்குதல் பொருட்டு, இறைவன் ஆன்மாக்களோடு கலந்து நிற்பன். இது காட்டும் உபகாரம் ஆகும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அவ்வாறு விளங்கிய ஆன்மாவின்அறிவும் செயலும் விடயத்தில் சென்று பற்றுதல் பொருட்டு இறைவன் உயிர்களை இடமாகக் கொண்டு, உயிர்கள் செல்லும் வழி எல்லாம் அறிந்து செலுத்தி, விடயங்களிலும் இறைவன் உடனாய்க் கலந்து நிற்பன். இது காணும் உபகாரம்.

ஆணவமலத்தின் நின்றும் நீங்கி, முத்தியில் உயிர் வேறாய் நிற்பது போல, இறைவனை விட்டு நீங்கித் தனித்து நிற்பது, பந்தம் முத்தி இரண்டிலும் உயிர்க்கு இல்லை. மலம் அநாதியே உயிரோடு கூடியுள்ளது; எனவே கூடியது பிரியும்; இறைவன் அநாதியே உயிரோடு கலந்து இருக்கிறான்; எனவே கலந்தவன் பிரிக்கப்படான், கூடி இருக்கும் பொருளுக்கும் கலந்து இருக்கும் பொருளுக்கும் உள்ள வேற்றுமை கருத்தில் கொள்ளத் தக்கது. உடல் உயிரோடு கூடி இருக்கிறது; பிரிகிறது; அன்பு உயிரோடு கலந்து இருக்கிறது; பிரியாது.

காட்டும் உபகாரமே அன்றிக் காணும் உபகாரமும் உயிர்க்கு வேண்டப்படும். இதனைக் கண்ணொளியின் இடத்துக் கலந்து இருக்கின்ற விளக்கொளியில் வைத்தும் அறியலாம். அஃதாவது கண் ஒரு விடயத்தைக் காணவேண்டும் என்றால், அந்தக் கண்ணிடத்து இருக்கின்ற இருளை, விளக்கொளி மாற்றுவதோடு, பார்க்கப்படும் பொருளின் இடத்தும் இருளை மாற்றுதல் வேண்டும்.

அவ்வாறின்றி, கண் விளக்கொளியோடு கூடினாலும், காண வேண்டிய பொருள் இருளில் இருக்குமாயின், பொருளைக் காண முடியாது. இருளில் இருக்கின்ற கண், ஒளியோடு கூடிய பொருளை காண்கின்றதே எனின், இருளில் இருக்கின்ற அந்தக் கண்ணொளி, பொருளில் கலந்து இருக்கின்ற விளக்கொளியோடு சென்று கலந்து, பொருளைக் காண்கின்றதே அன்றி பிறிது இல்லை. எனவே கண்ணொளிக்குக் காணும் தன்மையும் செல்லும் தன்மையும் உண்டு என்பது பெறப்படும். அவற்றுள் கண்ணோடு கூடிய இருள், காணும் தன்மையைத் தடுக்குமே அன்றிச் செல்லும் தன்மையைத் தடுக்காது; ஆகவே, கண் இருளோடு கூடி இருப்பினும் ஒளியோடு கூடிய பொருளை அறியமுடியும் என்பது புலப்படும்.

கண் ஆன்மாவுக்கு உவமை; கண்ணொளி ஆன்ம அறிவுக்கு உவமை; விளக்கொளி திருவருளுக்கு உவமை. கண்ணின் காணும் தன்மை ஆன்மாவின்அறியும் தன்மைக்கு உவமை; கண்ணின் செல்லும் தன்மை ஆன்மாவின் பற்றும் தன்மைக்கு உவமை; (பற்றுதல் –

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இச்சித்தல்); இருள் ஆணவமலத்திற்கு உவமை. இறைவன் உயிரோடு கலந்து இருப்பது காட்டும் உபகாரம்; இறைவன் பொருளோடு கலந்து இருப்பது காணும் உபகாரம்.

பதினொன்றாம் சூத்திரம்

இரண்டாம் அதிகரணம்

"இத்தை ஆயும் அறிவு உடையனாய் ... ...
... . இருப்பன் என்பது"

இறைவன் அத்துவிதமாய் நின்று காட்டிக் காணும் உபகாரத்தைச் செய்யினும், அவ்வாறு செய்கிறான் என்பதை அறிவுடைய பக்குவம் உடையவரே அன்றி, அபக்குவர் அறியார் என்று கூறுகிறது

எங்கும் தான் நிறைந்து சிவன் நின்றான் ஆகில்
எல்லாரும் காணவே வேண்டும் தான் என்னில்,
இங்கும்தான் அந்தகருக்கு இரவி, இருள் ஆகும்;
ஈசன் அருட்கண் இல்லார்க்கு ஒளியாயே இருளாம்;
பங்கம்தான் எழும் பதுமம் பக்குவத்தை அடையப்
பரிதி அலர்த்திடுவது போல் பருவம்சேர் உயிர்க்குத்
துங்க அரன் ஞானக்கண் கொடுத்து அருளினாலே
சோதிக்குள் சோதியாய்த் தோன்றிடுவன் காணே.
317

தெளிவுரை:

இறைவன் எங்கும் நிறைந்து நின்று உதவி வருகிறான் என்றால், அதனை எல்லோரும் ஏன் அறியவில்லை என்னும் தடை எழும்; அதற்கு விடை வருமாறு:

சூரியன் எங்கும் விளக்கமாய் இருக்கிறான்; ஆயினும் கண் தெரியாத குருடனுக்கு அந்த விளக்கம் அறியவராமல் இருளாய் இருக்கும். அதுபோல இறைவன் உதவி வருவது விளக்கமாக இருப்பினும், அருட்கண் உடையவர்க்கு அன்றி, ஏனையோர்க்கு அஃது அறிய வராது. சேற்றில் தோன்றிய தாமரை மலர்களுள் பக்குவம் உடைய

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தாமரை மலரை மட்டும் சூரியன் விரியச் செய்கிறான்; அதுபோல அருட் கண்ணும் பக்குவமும் உடையவர்க்கு அன்றி, அந்த விளக்கம் கிடைக்கப் பெறாது. பக்குவம் உடையவர்க்கும் அருட்கண்ணால் காணும் காட்சி, இறைவன் பெருங்கருணையால் வழங்கப்பெற வேண்டுமே அன்றி, தானாகப் பெற முடியாது. ஆகவே, இறைவன் அருளால் அருட் கண்ணைப் பெற்றவர்க்கே அவன்அவர்களது அறிவிற்கு அறிவாய் நின்று உபகரித்து வரும் அத்துவித நிலை இனிது விளங்கும்.

முத்தி நிலையை வேறு வேறு கூறும் ஈசுவர அவிகார வாதி, பரிணாம வாதி, ஐக்கிய வாதிகளை மறுத்து உரைக்கின்றது

சென்று அணையும் நிழல் போலச் சிவன் நிற்பன் என்னில்
சென்று அணையும் அவன் முதலி சிவத்தை அணைந்து ஒன்றாய்
நின்றது உயிர் கெட்டு என்னில், கெட்டது அணைவு இன்றாம்;
நின்றதேல் கேடு இல்லை; அணைந்து கெட்டது என்னில்,
பொன்றினது ஏன்? முத்தியினைப் பெற்றவர் யார்? புகல் நீ;
பொன்றுகையே முத்தி எனில், புருடன் நித்தன் அன்றாம்;
ஒன்றியிடும் நீரோடு நீர் சேர்ந்தால் போல் என்னில்,
ஒரு பொருளாம் அதிபதியோடு, உயிர் பொருள் ஒன்று அன்றே. 318

தெளிவுரை:

அருட்கண் இறைவனால் உயிர்கட்கு வழங்கப்படுகிறது. அந்தக் கண்ணிற்கு இறைவன் தோன்றுவான் என்று கூற வேண்டாம். மரத்தின் நிழல்போல இறைவன் விகாரம் இன்றி நிற்கிறான். அந்த நிழலைச் சென்று அணையும் வழிப்போக்கரைப் போல, உயிர்களுக்குப் பக்குவம் வந்த பொழுது தாமே ஞானக் கண்ணைப் பெற்று உயிர்கள் இறை வனை அடைய முடியும் என்று ஈசுவர அவிகார வாதிகள் கூறுவார்கள். இந்த உவமையில், வழிப்போக்கரை அணையச் செய்யும் சுதந்தரம் உண்மையும் காணப்படுகிறது. அதுபோல ஈசுவரனுக்குச் சுதந்திரம் இன்மையும் உயிர்க்குச் சுதந்தரம் உண்மையும் காணப்படுகிறது. எனவே இவர்கள் கொள்கை பொருந்தாது.

இனி, பரிணாம வாதிகள் உயிர் கெட்டுக் கூடி, இறைவன் அடியில் ஒன்றாய்ப் போகும் என்பர். கெட்டபின் கூடுமாறு இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கெடாது நின்று கூறும் என்றால், கேடு இன்மையால் ஒன்று ஆவது பெறப்படாது; கூடியபிறகு கெட்டது என்றால், கெட்ட பொழுது முத்தியைப் பெற்றவர் யார் என்னும் வினாவிற்கு விடை இல்லை; கேடே முத்தி என்றால், உயிர் நித்தம் ஆவது செல்லாது ஆதலால்அவர் கூற்றும் வழு ஆகும்.

இனி ஐக்கிய வாதிகள் நீரிலே நீர் சேர்ந்தால் போல, உயிர் இறைவன் திருவடியைச் சேர்ந்து ஒன்று ஆகும் என்பர். உவமானப் பொருள் சமம் ஆனாற் போல, முதல்வனும் உயிரும் தம்முள் சமப் பொருள் ஆவது செல்லாமையின், அதுவும் பொருந்தாது.

சிவசமவாதி கூறும் முத்தியை மறுத்து உரைக்கின்றது

செம்பு இரத குளிகையினால் களிம்பு அற்றுப் பொன்னாய்ச்
செம்பொன்னுடன் சேரும்; மலம் சிதைந்தால் சீவன்
நம்பனுடன் கூடும் எனில், பொன் போல் அல்லன்;
நற்குளிகை போல அரன், நணுகு மலம் போக்கி
அம்பொன் அடிக்கீழ் வைப்பன்; அரும் களங்கம் அறுக்கும்
அக்குளிகை தானும் பொன் ஆகாதாகும்;
உம்பர் பிரான் உற்பத்தியாதிகளுக்கு உரியன்;
உயிர்தானும் சிவாநுபவம் ஒன்றினுக்கும் உரித்தே.
319

தெளிவுரை:

சிவ சம வாதிகள், ''செம்பினிடத்துக் களிம்பு உள்ள அளவும், பொன்னுடன் ஒத்து ஒன்று ஆவது இல்லை. ஆயினும் இரத குளிகையினால் களிம்பு நீங்கிய பொழுது, செம்பு பொன்னாகி, ஏனைப் பொன்னுடன் ஒத்து ஒன்றாகும்''. அது போல மலம் நீங்கிய பொழுது, ''உயிர் இறைவனோடு ஒத்து ஒன்று ஆகும்'' என்று கூறுவார்கள்.

களிம்பை நீக்கும் ஆற்றல் பொன்னுக்கு இல்லை. எனவே அந்த ஆற்றலை உடைய இரத குளிகையை இறைவனோடு ஒப்பிடாமல், பொன்னை இறைவனோடு ஒப்பிடுவது இந்த இடத்தில் பொருந்தாது. அன்றியும், களிம்பு நீங்கிய பொன், குளிகையைப் போல் களிம்பை நீக்காது. அதுபோல மலம் நீங்கிய உயிர் சிவானுபவத்திற்கு உரிமை உடையதே அன்றி ஐந்தொழில் ஆற்றுவதற்கு உரிமை உடையதன்று. இறைவன் ஒருவனே ஐந்தொழில் செய்வதற்கு உரிமை உடையவன் ஆவன்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவன் உயிர்களிடத்துப் பொருந்திய மலத்தை நீக்கிப் பொன் போலும் தனது திருவடிக்கீழ் வைப்பன். எனவே, பொன்னுக்கு ஒப்பாகத் திருவடியைக் கூறியதே அன்றி, இறைவனைக்கூறியதன்று. ''திருவடிக் கீழ் வைப்பன்'' என்று கூறியதனால், அடக்கி வைப்பன் எனப்பட்டு, அவன் செய்யும் ஐந்தொழிலை உயிர் செய்ய முடியாது என்பது விளங்கும். ஆகவே சிவ சம வாதம் கூறும் அவர் மதம் அடாது.

இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள அந்தரங்க பேதங்களை எடுத்துக்காட்டி, ஆன்மா இறைவனோடு சமம் ஆகாது என்பதை வலியுறுத்துகிறது

சிவன் சீவன் என்று இரண்டும் சித்து ஒன்றாம் என்னில்,
சிவன் அருட்சித்து; இவன் அருளைச் சேரும் சித்து;
அவன்தான்;
பவம், கேடு, புத்தி, முத்தி பண்ணும் சித்து; அவற்றில்
படியும் சித்து அறிவிக்கப்படும் சித்து இவன்தான்;
அவன் தானே அறியும் சித்து; ஆதலினால் இரண்டும்
அணைந்தாலும் ஒன்றாகாது; அனன்னியமாய் இருக்கும்
இவன் தானும் புத்தியும் சித்து; இவன் ஆமோ புத்தி?
இது அசித்து என்றிடில் அவனுக்கு இவனும் அசித்தாமே.
320

தெளிவுரை:

''இறைவனும் சித்துப் பொருள்; உயிரும் சித்துப் பொருள். இரண்டும் ஒத்து ஒன்றாகும் என்பதே பொருந்தும். அவ்வாறின்றி, உயிர் சிவானுபவம் ஒன்றற்கே உரிமை உடையது என்று கூறுவது பொருந் தாது'' என்று கூறினால், அது சித்தாந்தம் ஆகாது. ஏனென்றால், சிவன் அருள் ஆகிய சித்து, உயிர் அந்த அருளைச் சேரும் சித்து. சிவன் உயிர்க்குப் பிறப்பினைக் கொடுத்து, போகம் மோட்சம் தரும் சித்து; உயிர் அவைகளில் அழுந்தும் சித்து. இவ்வாறு சித்து இரண்டிற்கும் உள்ள வேற்றுமை எத்தகையது என்றால், கண்ணொளியும் சூரிய ஒளியும் போல ஆகும். அந்த இரு ஒளிகளும் ஒளி என்கிற பொதுமையால் சமமாய் இருப்பினும், கண்ணொளி சூரியனொளியின் துணையை இன்றி ஒரு பொருளையும் காண முடியாது. சூரியன் ஒளி துணை வேண்டாமல் தானே விளங்கும். இவ்வாறே சிவனுக்கும் உயிர்க்கும் வேற்றுமை பெரிதும் உள்ளது. எனவே சிவனோடு உயிர் கூடிய பொழுதும், அத்துவிதமாய்க் கலந்து நிற்பதே அன்றி, ஒன்றாய்ப் போவது இல்லை.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேலும் உயிரும் புத்தி தத்துவமும், உணரும் ஒப்புமை பற்றி இரண்டும் சித்து எனக் கூறுப்படுகின்றன. என்றாலும், புத்தி தத்துவம் உயிர் ஆகாது. புத்தி தத்துவம் உண்மையிலேயே சடம் ஆகும். உயிர் உண்மையிலேயே சித்து ஆகும். எனவே புத்திதத்துவமும் உயிரும் வேறு வேறு தன்மைகளை உடைமையால் ஒன்றாகாமை பெறப்படும்.

ஆயினும் இறைவனும் உயிரும் சித்துப் பொருள்கள் தாமே; எனவே அவை இரண்டும் ஒன்றாகும் என்பதே பொருத்தம் என்றால் அது சித்தாந்தம் ஆகாது. ஏனென்றால், ஏனை தத்துவங்களை நோக்க உயிர் சித்தே ஆயினும், சிவனை நோக்க உயிர் சடமே ஆகும். ஆகவே சிவனும் உயிரும் ஒன்று ஆமாறு இல்லை.

ஈசுவர அவிகாரவாதி, பரிணாமவாதி ஐக்கியவாதி, சிவசமவாதிகள் கூறும் ஆசங்கைகளை மறுத்து, வேறு வேறு உவமை எடுத்துக் காட்டி, சித்தாந்தத்தை வலியுறுத்துகின்றது.

(ஆசங்கைகள் – ஐயப்பாடுகள்)

இரும்பைக் காந்தம் வலித்தால் போல் இயைந்து அங்கு உயிரை
எரி இரும்பைச் செய்வது போல், இவனைத் தான் ஆக்கி
அரும்பு இத்து இந்தனத்தை அனல் அழிப்பதுபோல் மலத்தை
அறுத்து அமலன் அப்பு அணைந்த உப்பே போல் அணைந்து
விரும்பிய பொன்னினைக் குளிகை ஒளிப்பது போல் அடக்கி
மேளித்துத் தான் எல்லாம் 'வேதிப்பான் ஆகிக்
கரும்பைத், தேனைப், பாலைக், கனி அமுதைக், கண்டைக்,
கட்டியை ஒத்து இருப்பன், அந்த முத்தியினில் கலந்தே. *321*

தெளிவுரை:

ஈசுவர அவிகார வாதிகள், இறைவன் விகாரம் இன்றி நிர் விகாரியாய் நிற்பன்; எனவே மரநிழல் உவமையை மறுத்தது செல்லாது என்று கூறுவர். இவர்கள் கூறும் மர நிழல் உவமை பொருந்தாது என்பது 318–ஆவது செய்யுளில் கூறப்பட்டது. காந்தம் விகாரம் இன்றி நின்றே இரும்பை இழுப்பதைக் காண்கிறோம். அதுபோல இறைவனும் விகாரம் இன்றியே உயிரைத் தன் வசப்படுத்தி நிற்பன். எனவே இறைவன் மர நிழல் போல இல்லை என்பது பெறப்படும்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பரிணாம வாதிகள், முத்தியில் இறைவனும் உயிரும் ஒன்றாகும் ஆதலால், முத்தியில் உயிர் கெடும் என்று கூறுவர். இது 318–ஆவது செய்யுளில் மறுக்கப்பட்டது. தீ இரும்பைக் கெடுக்காமல் தன் வண்ணம் ஆக்கி, அந்த இரும்பில் உடன் தோன்றி நிற்கின்ற கறை மட்டும் கெடும்படி செய்யும். அதுபோல இறைவனும் உயிரைத் தன் வண்ண மாகச் செய்து, உயிரில் உடன் தோன்றி நிற்கின்ற ஆணவமலம் மட்டும் கெடும்படி செய்வன். எனவே உயிர்கெடுவது முத்தி ஆகாது.

ஐக்கிய வாதிகள் முத்தியில் உயிர் சிவனோடு சமம் ஆவதால், நீரோடு நீர் சேர்ந்தால் போல என்று கூறிய உவமை, 318–ஆவது செய்யுளில் மறுக்கப்பட்டது. நீரோடு சேர்ந்த உப்பு, தன் சுவை முழுவதையும் அந்த நீர்க்கு ஆக்கி, தன்னோடு ஒப்ப சமன் செய்து நிற்கும். அது போல உயிரைச் சேர்ந்த இறைவனும் தனக்குரிய எண்குணங்களையும் உயிரின் கண் பதிப்பித்து உயிரைத் தன்னோடு ஒப்பச் செய்து நிற்பன் எனவே சிவ சமம் ஆதற்கு இழுக்கு இல்லை.

சிவசமவாதிகள், உப்புடன் கூடிய நீர் உப்பு ஆவது போல், சிவனுடன் சேர்ந்த உயிர் சிவம் ஆகி, சிவன் செய்யும் பஞ்சக் கிருத்தியங் களைச் செய்யும் என்பர். முத்தியில் உயிர் பஞ்சக் கிருத்தியம் செய்யும் என்பது 319–ஆவது செய்யுளில் மறுக்கப்பட்டது. இரத குளிகை, செம்பை உருக்கி தன்னோடு கூட்டிப் பொன்னாகச் செய்தும், அந்தக் குளிகை தன்னிடத்தில் உள்ள பொன்னியல்பை அந்தப் பொன்னுக்குக் காட்டாது தன்னுள் அடக்கி நிற்கும். அதுபோல இறைவன் உயிருக்கு எண் குணங்கள் எல்லாம் பதியச் செய்தும் பதிந்த அந்தஎண் குணங்களின் இயல்பு, சிறிதும் தோன்றாது அறிவு இறந்து நிற்குமாறு உயிரைத் தனது வியாபகத்தின் உள் அடக்கி நிற்பன். எனவே, உம்பர் பிரான் ஆகிய சிவபெருமான் ஒருவனே உற்பத்தி (படைத்தல்) முதலிய வற்றிற்கு உரியவன்.

சுத்த சைவர், அறிவு இறந்து நிற்கும் முத்தி நிலையில் ஆன்மாவுக்கு அனுபவம் கூடாது; எனவே ஆன்மா சிவானுபவத்திற்கு உரிமை உடையது என்பது பொருந்தாது என்பர். சுத்தசைவரின் கருத்து பொருந்தாது; ஏனென்றால், கருப்பஞ்சாறு, தேன், பால், கனி, இரதம், கற்கண்டு, சருக்கரை முதலிய சுவைப் பொருள்கள் எல்லாம், ஒன்றாகக் கலந்த பொழுது இருக்கும் சுவை இன்ன தன்மையது எனப் பிரித்து அறியவராது. அதுபோல இறைவன் பரமுத்தியில் உயிரோடு கலந்த பொழுது இன்ன தன்மையது எனப் பிரித்து அறிய முடியாத ஆனந்த

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சொரூபமாய் நிற்பன். எனவே, முத்தியில் ஆன்மா அறிவு இறந்து நிற்பன் என்று கூறியதனால், சிவானுபவத்திற்கு உரிமை உடையது ஆவதற்கு இழுக்கு இல்லை என்பது பெறப்படும். ''அறிவிறந்து நிற்றல்'' என்பதற்குப் பிரித்து அறியாமல் நிற்பது என்பது பொருளாகும்.

எட்டாம் சூத்திரத்தில் ''மலரடிக்கீழ் வைப்பன்'' என்று கூறியதை இந்தச் செய்யுளில், நிர்விகாரியாய் தன் வண்ணமாகச் செய்து என்று கூறினார். இது சிவரூபம். ஒன்பதாம் சூத்திரத்தில் ''பாத நிழற் கீழ் நிற்க'' என்று கூறியதை இந்தச் செய்யுளில், தன்னோடு ஒப்பச் செய்து என்று கூறினார். இது சிவதரிசனம். பத்தாம் சூத்திரத்தில் ''ஏகனாகி நின்றிட'' என்று கூறியதை இந்தச் செய்யுளில் ''உயிரின் இயல்பு சிறிதும் தோன்றாது நிற்குமாறு அடங்கி நிற்கும்'' எனக் கூறினார். இது சிவயோகம். இந்தப் பதினொன்றாம் சூத்திரத்தில் ''அரன் மலரடிக் கீழ் இருப்பன்'' என்று கூறியதை இந்தச் செய்யுளில், 'பிரித்து அறிய வராத ஆனந்த சொரூபமாய் நிற்பன்' எனக் கூறினார். இது சிவபோகம். இவ்வாறு எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய நான்கு சூத்திரங்களுக்கும் பேதம் உண்டு என்பதை இந்தச் செய்யுளில் கூறியவாறு காணலாம்.

இன்னும் இறைவன் ஆன்மாவை நிர்விகாரி ஆக்குவது, நின்மல சாக்கிரம் ஆகும்; தன் வண்ணம் ஆகச் செய்வது, நின்மல சொப்பனம் ஆகும்; தன்னோடு ஒப்பச் செய்வது, நின்மல சுழுத்தி ஆகும்; தன்னுள் அடங்கி நிற்கச் செய்வது, நின்மல துரியம்; ஆனந்த சொரூப மாய் நிற்கச் செய்வது, நின்மல துரியாதீதம் ஆகும்.

பதினொன்றாம் சூத்திரம் முடிந்தது

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பன்னிரண்டாம் சூத்திரம்

தோற்றுவாய்:

பத்தாம் சூத்திரத்தால் பாச நீக்கமும், பதினொன்றாம் சூத்திரத்தால் சிவப்பேறும் கூறினமையால், அந்தப் பயனைப் பெற்ற முத்தர் உடம்பு உள்ளவரையும் எப்படி இருப்பர் என்னும் ஆசங்கை நிகழும் அன்றே? அந்நிகழ்ச்சி பற்றிச் சீவன் முத்தி நிலையில் நிகழும் இயல்பினை வகுத்துக் கூறுவதற்கு எழுந்தது, பன்னிரண்டாம் சூத்திரம். மேல் ஆசங்கை இன்மையின், இந்தச் சூத்திரத்தோடு நூல் முடிவுறுகின்றது.

சீவன் முத்தர் இயல்பு இவ்வாறு என சூத்திரப் பொருளை தொகுத்துக் கூறுகின்றது

செங்கமலத் தாள் இணைகள் சேரல் ஒட்டாத்
திரி மலங்கள் அறுத்துஈசன் நேசரொடும் செறிந்திட்டு
அங்கு அவர்தம் திருவேடம் ஆலயங்கள் எல்லாம்
அரன் எனவே தொழுது இறைஞ்சி ஆடிப்பாடி
எங்கும் யாம் ஒருவர்க்கும் எளியோம் அல்லோம்
யாவர்க்கும் மேல் ஆனோம் என்று இறுமாப்பு எய்தித்
திங்கள் முடியார் அடியார் அடியோம் என்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தி உடையோரே. 322

தெளிவுரை:

சிவப்பேறு எய்திய முத்தர்களுக்கு, கன்மத்திற்கு ஈடான சரீரம் உள்ளவரை, இறைவன் திருவடியை அடைய ஒட்டாது முன்பு மறைத்தலைச் செய்து வந்த மும்மலங்கள், பின்பு பற்றறக் கழியும். எனவே, அவற்றைக் கண்டு அவர்கள் அஞ்சுவது இல்லை; நிட்டையில் நிலைத்து நிற்பர். நிட்டை சாதிப்பதற்குத் துணை ஆகிய மெய்யன்பரோடு பழகி, அந்தப் பழக்கம் நிலைபெறும்படி அவரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவன் எனக் கண்டு வழிபாடு இயற்றுவர். அதனால் ஆனந்தம் மேலிட்டு ஆடல் பாடல்களைச் செய்வர். இப்பேறு பெற மாட்டாதவரின் சிறுமையை நோக்கி, ''யாவர்க்கும் மேல் ஆனோம்'' என்று ஆனந்தம் எய்துவர், இப்பேறு பெற்றவரின் பெருமையை நோக்கி, அவர்க்கு அடிமை என வாழும் இயல்பினையும் உடையவர் ஆவர். இவர் சீவன் முத்தர் எனப்படுவர்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இந்தச் செய்யுள் முதல் நூல்போல், முக்கூற்றினை உடையது. அவற்றுள்,

முதற்கூறு: செங்கமலத் தாளிணைகள் சேரல் ஒட்டாத் திரி மலங்கள் அறுத்து.

இரண்டாம் கூறு: ஈசன் நேசரோடும் செறிந்திட்டு.

மூன்றாம் கூறு: அங்கவர் தம் திருவேடம் ஆலயங்கள் எல்லாம் அரன் எனவே தொழுது இறைஞ்சி ஆடிப்பாடி... ... செய்தி யுடையோரே.

இவற்றுள் முதற்கூறு, இந்தச் செய்யுளிலேயே ''செங்கமலத் தாள் இணைகள் சேரல் ஒட்டா'' எனக் கூறி, மலத்தை எதற்காக நீக்க வேண்டும் என்னும் ஆசங்கையை நீக்கினமையின், அதனை வேறாகக் கூறாது விடுத்தனர்.

பன்னிரண்டாம் சூத்திரம்
இரண்டாம் அதிகரணம்

ஈசன் நேசரொடும் செறிந்திட்டு என்பது

சீவன் முத்தன் சிவனடியாரிடத்தில் அன்பு உடையவனாகவும், ஏனைய அறிவு இல்லாதவரிடத்தில் வெறுப்பு உடையவனாகவும் இருக்க வேண்டும் எனவும் கூறுகின்றது

ஈசனுக்கு அன்பு இல்லார், அடியவர்க்கு அன்பு இல்லார்;
எவ்வுயிர்க்கும் அன்பு இல்லார், தமக்கும் அன்பு இல்லார்
பேசுவது என் அறிவு இல்லாப்பிணங்களை நாம் இணங்கில்,
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர்; விடு நீ
ஆசையொடும் அரன் அடியார் அடியாரை அடைந் திட்டு,
அவர் கருமம் உன் கருமம் ஆகச் செய்து
கூசி மொழிந்து அருள் ஞானக் குறியில் நின்று,
கும்பிட்டுத் தட்டம் இட்டுக் கூத்தாடித் திரியே. 323

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

காமுகன் ஆவான் ஒருவன், ஒரு பெண்ணிடத்தில்அன்பு உடையவன் ஆகில், அந்தஅன்பு உடைமை அந்தப் பெண்ணின் உடைய சுற்றத்தாரைக் கண்ட பொழுது நிகழும் அன்பின்அளவாகத் தெளியப் படும். அதுபோல, ஒருவன் ஈசனுக்கு அன்பு உடையவன் ஆகில், அந்த அன்பு உடைமை அவனது அடியவரைக் கண்ட பொழுது நிகழும் அன்பின் அளவாகத் தெளியப்படும். ஆதலால் அடியவரிடத்தில் அன்பு இல்லாதவர், ஈசனிடத்திலும் அன்பு இல்லாதவரே ஆவர்.

ஒருவர்ஈசனுக்கு அன்பு உடையவர் போல் ஒழுகுவது நாடக மாத்திரையே அன்றிப் பிறிதுஇல்லை. அன்றியும், ஈசன் எந்த உயிரிடத்திலும் உள்ளவன்; ஆதலால் அந்தத் தொடர்பு பற்றி எந்த உயிர்க்கும் அன்பு உடையவர் ஆவது கூடும். ஈசனிடத்தில் அன்பு இல்லாத பொழுது, எந்த உயிரிடத்திலும் அன்பு இல்லாதவரே ஆவர். இவ்வாறு சிவனடியார் இடத்திலும் ஏனைய உயிர்கள் இடத்திலும் அன்பு இல்லாதவர், தம் உயிர்க்கு நிலையான இன்பத்தைச் செய்து கொள்ளாதவர் அவர்; ஆகவே அவரைப் பற்றி நாம் என்ன சொல்வது?!

காமம் மிகுதியாக உடையவர்க்கு, அந்தத் தொடர்பு உடையா ருடைய இணக்கம், அந்தக் காமப் பயிரை வளர்க்கும் நீர் ஆகும்; ஆகவே அந்த இணக்கத்தில் மிகுந்த உவகை உண்டாகும். அதுபோல அரன் மலரடிக்கீழ் இருக்கப் பெற்ற நீ, அந்த அனுப்வத்தை வள்ர்க்கும் த்ன்மை யர் ஆகிய அடியாரோடு இணங்கி, அவர் பணியை உன் பணியாக, அகங்கார முனைப்பு இன்றி, உவகை மிகுதியுடன் செய்வாயாக.

காமுகர் அல்லாதவர் இணக்கம் காமப் பயிரைக் கெடுக்கும் களை என்று எண்ணி, காமுகர் வெறுப்பது போல, சிவானுபவத்தைக் கெடுக்கும் தன்மையர் ஆகிய அறிவில்லாப் பிணம் போன்றவரோடு இணங்கினால், பிறப்பு இறப்பு ஆகிய துன்பத்தை உண்டு பண்ணுவர். ஆதலால் அவர் இணக்கத்தை விட்டு நீங்கி, அடியாரது உயர்வையும் எனது இழிவையும் நோக்கி நாணி, அடியார் இடத்தில் பணிவான சொற்களைக் கூறி, உவகை மிகுதியால் கும்பிட்டு, கைகொட்டிக் கூத்துமாடித் திரிவாயாக.

அனுபவ நிலையை விதியாகக் கூற வேண்டுவது இல்லை; அப்படி இருக்க, அந்நிலை அனுபவமாக ஆனந்தம் விளைவிப்பதே

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அன்றி, சாதனமாய் மலம்அறுப்பதையும் செய்வதால், விதி முகமாகக் கூறினார்.

உயிர்களிடத்தில் அன்பு இல்லாதவர், தமக்கும் அன்பு இல்லாதவர் என்னும் இக்கருத்து, ''அன்பிலார் எல்லாம் தமக்குரியர்'' என்னும் திருக்குறளோடு முரணாதோ என்றால், ''தம்'' என்ற சொல்லிற்கு இந்த இடத்தில் உயிரையும், திருக்குறளில் உடலையும் குறிக்கும்; எனவே முரணாமை புலப்படும்.

பன்னிரண்டாம் சூத்திரம்

மூன்றாம் அதிகரணம்

''ஆங்கவர் தம் திருவேடம்................ ;
....................செய்தி உடையோரே''

பாசப்பற்று உடையவர், பற்று விடுவதற்குச் சிவனடியாரைச் சிவன் எனவே துணிந்து வழிபடவேண்டும் எனக் கூறுகின்றது

அறிவு அறியான் தனை அறிய யாக்கை ஆக்கி
அங்கு அங்கே உயிர்க்கு உயிராய் அறிவு கொடுத்து அருளலால்
செறிதலினால் திருவேடம் சிவன் உருவே ஆகும்;
சிவோகம் பாவிக்கும் அத்தால் சிவனம் ஆவர்;
குறி அதனால் இதயத்தே அதனைக் கூடும்
கொள்கையினால் அரன் ஆவர்; குறியொடு தாம் அழியும்
நெறி அதனால் சிவமே ஆய் நின்றிடுவர் என்றால்
நேசத்தால் தொழுதிடு நீ, பாசத்தார் விடவே. 324

தெளிவுரை:

மேலே கூறியபடி அறிவு இல்லாதவருடைய இணக்கத்தை விடுதல் பொருட்டு, யாது செய்ய வேண்டும் என்றால், சிவனடியாரைச் சிவன் எனவே தேறிஅன்புடன் வழிபடல் வேண்டும். சிவனடியார் சிவம் ஆவது எவ்வாறு என்றால், சிந்தனைக்கு எட்டாத பரம்பொருள் உலகத்தில் உள்ளவர், தன்னை அறிதல் பொருட்டுத் திருநீறு கண்டிகை முதலிய திருவேடம் ஆகிய தனது வடிவத்தைத் தன் அன்பர்க்குக் கொடுத்து, உயிர்க்கு உயிராய் நின்று, அந்த அன்பர் அறிவை விளக்கி

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

யருள்கிறது. சிவபரம்பொருள் அந்த அன்பரோடு கலந்து இருப்பதால், அந்தத் திருவேடம் உடைய மெய்யன்பர் சிவமே ஆவர். அவ்வாறு அவரோடு கூடும்பொழுது, அவரது வேடக்குறியும் குறிக்கின்ற தாமும் வேறு இன்றி நின்ற தன்மையாலும் அவர் சிவமே ஆவர்.

சிவாலயத்தைச் சிவன் எனக் கண்டு வழிபடும் முறையை வகுத்துக் கூறுகின்றது

திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவன் எனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் அங்கே
உருக்கோலி மந்திரத்தால் என நினையும் அவர்க்கும்
உளன் எங்கும் இலன் இங்கும் உளன் என்பார்க்கும்
விருப்பாய வடிவாகி இந்தனத்தில் எரிபோல்
மந்திரத்தில் வந்து உதித்து மிகும் சுரபிக்கு எங்கும்
உருக்காண ஒண்ணாத பால் முலைப் பால் விம்மி
ஒழுகுவதுபோல், வெளிப்பட்டு அருளுவன் அன்பர்க்கே. 325

தெளிவுரை:

மேலே சொன்னபடி சிவனடியாரை வழிபடுவதோடு, சிவாலயத்தையும் சிவம் எனக் கண்டு வழிபடவேண்டும். சிவாலய வழிபாடு நான்கு வகைப்படும். அவை வருமாறு:

1. சிவாலயத்துள் எழுந்தருளி இருக்கும் சிவலிங்கம் முதலிய திருமேனிகளையே, சிவம் வேறு, இவ்வுருவம் வேறு என்னும் பேதம் இன்றிச், சிவம் எனக் கண்டு வழிபடுபவர் சரியையாளர். இவர்க்குச் சிவபெருமான் அந்தத் திருமேனிகளில் நின்று, வெளிப்படாது அருள் செய்வன்.

2. ஈசனது அநாதி மந்திரங்களினால் அருவப் பொருள் ஆகிய சிவபெருமான், சிவலிங்கம் முதலிய திருவுருக் கொண்டான் எனக் கருதி மந்திரக் கிரியையால் வழிபடுவர் கிரியையாளர். (அநாதி மந்திரம் என்பது திருவைந்தெழுத்தாகும்). இவர்க்கு, விறகைக் கடைந்த பொழுது தோன்றும் அக்கினி போல, சிவபெருமான் அந்தத் திருமேனிகளில் வெளிப்பட்டுத் தோன்றி அருள் செய்வான்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

3. உள்ளம் எங்கும் இல்லமாக வாழும் சிவபெருமான் இந்தத் திருமேனியிலும் வீற்றிருந்து பூசை கொண்டு அருள்வன் எனக் கருதிச், சிவலிங்கம் முதலிய திருமேனிகளை வழிபடுபவர் யோகிகள். இவர்க்குக் கறந்தபொழுது தோன்றும் பால்போல, சிவபெருமான் எளிதில் வெளிப்பட்டுத் தோன்றி அருள் செய்வான்.

4. கிரியையாளர், யோகிகள் ஆகிய இருவர்க்கும் வெளிப்பட்டுத் தோன்றினாலும், அப்போது அப்போது தோன்றுவனே அன்றி, எப்போதும் சிவபெருமான் தோர்ன்றுவதில்லை. அவர்களைப் போல ஏக தேசமாய் வழிபடாமல், நீங்காத அன்பினால் சிவலிங்கம் முதலிய திருமேனிகளை, சிவமே எனக் கண்டு வழிபடுவர் ஞானிகள். இவர்க்கு மேம்பட்ட பசுவின் வடிவம் முழுவதும் காணப்படாத பால், தன் கன்றை நினைத்த உடனேயே, அதன் முலையில் விம்மி ஒழுகுவது போல், சிவ பெருமான் அந்த அன்பே தானாய், எப்போதும் அந்தத் திருமேனிகளில் நின்று, வெளிப்பட்டு அருள் செய்வன். ஆகவே அந்த அன்பின் வழியே நின்று அவனை வழிபடுவாயாக.

திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவன் என வழிபட்டாலும், திருவேடத்தை வழிபடுவது, அந்த வேடம் உடையவர் கருத்து சிவமாய் இருத்தல் பற்றி ஆகும். சிவாலயத்தை வழிபடுவது. வழிபடுபவர் கருத்து சிவமாய் இருத்தல் பற்றி ஆகும். ஆகவே, சிவாலய வழிபாட்டின் பொழுது, சிவபெருமானை அன்றி வேறு எந்த நினைவும் வழிபடு பவருக்கு இருக்கக்கூடாது என்பது இனிதே பெறப்படும்.

ஞானிக்கு நால்வகை வழிபாடும் கூடும் எனவும் ஏனையோர்க்குத் தம் நிலைமைக்கு மேம்பட்ட வழிபாடு கூடாது எனவும், ஞானியே யாவர்க்கும் குருஆவார் எனவும், சிவாலயமும் சிவனடியாரும் அந்த குருவின் வேறல்ல எனவும் கூறுகின்றது

ஞான யோகக் கிரியா சரியை நான்கும்
நாதன்தன் பணி; ஞானி நாலினுக்கும் உரியன்;
ஊனம் இலா யோகம் முதல் மூன்றினுக்கும் உரியன்
யோகி; கிரியாவான் தான் ஒண்கிரியை ஆதி
ஆன இரண்டினுக்கும் உரியன்; சரியையினில் நின்றோன்
அச்சரியைக்கே உரியன்; ஆதலினால் யார்க்கும்
ஈனமிலா ஞான குருவே குருவும் இவனே,
ஈசன் இவன்தான் என்றும் இறைஞ்சி ஏத்தே. 326

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தெளிவுரை:

சிவாலயத்தை வழிபடுவது அவரவர் கருத்துக்கு ஏற்றவாறு உரித்தாய் இருக்க, சரியையாளரைப் போல் ஞானியும் சிவாலயத்தை வழிபடுவானேன் என்றால், சரியை முதல் நான்கும் இறைவனது உண்மைப்பணி ஆதலால், ஞானி நாலினுக்கும் உரியன். இஃது எது போல எனின், அகத்தொழில் செய்பவர், புறத் தொழிலுக்கும் உரியவர் ஆவர் போல ஆகும்.

புறத்தொழில் செய்பவர் அகத் தொழிலுக்கு உரியர் அல்லாதது போல், யோகி ஆனவன் யோகம், கிரியை, சரியை ஆகிய மூன்றிற்கும், கிரியாவான் கிரியை, சரியை இரண்டிற்கும், சரியையாவான் சரியை ஒன்றிற்கும் உரியவன் ஆவான். ஆதலினால் சரியை முதலிய நால்வகை பாதத்தில் நிற்கும் மாணாக்கருக்கு உபதேசிக்கும் ஆசிரியரும் அவ்வாறே ஆவர். அஃதாவது ஞானகுருஎல்லாருக்கும் குரு ஆவர்; ஏனைய குரு தன்னின் மேம்பட்ட மாணாக்கருக்குக் குருஆகார். ஆகவே, ஞான குருவே மேலான குருநாதர் எனப்படுவர். சிவனடியார்களையும் சிவாலயத்தையும் ஞான குருவே என்று துணிந்து, சிவனடியாரையும் சிவாலயத்தையும் வழிபடுவாயாக.

ஞான குருவின்அருளால் அன்றி, சிவபெருமான் திருவடியை அடைய முடியாது எனக் கூறுகின்றது

மந்திரத்தால் மருந்துகளால் வாய்த்த யோகத்தால்
மணி இரத குளிகையினால் மற்றும் மற்றும்
தந்திரத்தே சொன்ன முறை செய்ய, வேத
சகல கலை ஞானங்கள் திரிகால ஞானம்
அந்தம் இலா அணிமாதி ஞானங்கள் எல்லாம்
அடைந்திடும்; ஆசான் அருளால் அடிசேர் ஞானம்
வந்திடும்; மற்று ஒன்றாலும் வாராது ஆகும்;
மற்றவையும் அவன் அருளால் மருவும் அன்றே. 327

தெளிவுரை:

மந்திரங்களாலும் மருந்துகளாலும் சிறந்த யோகத்தாலும், மணி ஆகிய இரத குளிகையினாலும், இன்னும் சாத்திரங்களிலே கூறியவாறு செய்வதனாலும், வருகின்ற சித்தி ஞானங்களும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வேதாகமம் முதலிய கலை ஞானங்களும், மூன்று காலங்களையும் அறியும் ஞானங்களும், அறிவில்லாத அணிமா முதலிய அட்ட சித்தி ஞானங்களும் ஆகிய அனைத்தும், ஞானாசிரியன் இல்லாமலும் கைகூடும். சிவபெருமான் திருவடியை அடையும் ஞானம், ஞானா சிரியன் திருவருளால் கூடுமே அன்றி வேறு எவற்றாலும் கூடாது. மேற்கூறிய சித்தி முதலிய ஞானங்களும் அந்த குருவருளால் கைகூடும். ஆதலால், குருவே ஈசன் என்று வழிபட்டுத் துதிப்பாயாக.

ஞானகுருவை வழிபட்டவர்க்கு உண்டாகும் பயன் இது எனக் கூறுகின்றது

பரபிரமம் இவன் என்றும், பரசிவன்தான் என்றும்
பரஞானம் இவன் என்றும் பராபரன்தான் என்றும்
அரன் தரும் சீர்நிலை எல்லாம் இவனே என்றும்
அருட் குருவை வழிபடவே,அவன் இவன்தான் ஆயே
இரங்கிய வாரணம், யாமை, மீன் அண்டம் சினையை
இயல்பினொடும் பரிசித்தும், நினைந்தும், பார்த்தும்,
பரிந்து இவைதாம் ஆக்குமா போல், சிவமே ஆக்கும்,
பரிசித்தும் சிந்தித்தும் பார்த்தும் தானே. *328*

தெளிவுரை:

சொரூப சிவம், தடத்த சிவம், பரஞானத்தை உடையவர், சிவ லிங்கம் முதலிய வடிவங்கள், சிவபத்தர் பொருட்டாக அப்போது வெளிப் பட்டு அருளி மறையும் மூர்த்தங்கள் ஆகிய எல்லாம் குருமூர்த்தமே எனத் தேறி ஞான குருவை வழிபடுக. அவ்வாறு வழிபடுவாய் ஆயின், சிவ பெருமான் அந்த குருவை ஆவேசித்து நின்றுஅருள் புரிவான். அஃது எது போல எனின், கோழி தனது முட்டையைப் பரிசித்து காத்துச் சிசு உற் பத்தி செய்வது போல, மாணாக்கன் சிரசில் கையை வைத்தல் ஆகிய பரிச தீட்சை செய்தும், ஆமை தனது முட்டையைக் கருதி, சிசு உற்பத்தி செய்வதுபோல், சிந்தித்தல் ஆகிய பாவனா தீட்சை செய்தும், மீன் தனது பார்வையினால் சிசு உற்பத்தி செய்வதுபோல, பார்த்தல்ஆகிய சட்சு தீட்சை செய்தும், மாணாக்கனைச் சிவமாகச் செய்தருளுவன்.

பன்னிரண்டாம் சூத்திரம் முடிந்தது

சிவஞான சித்தியார் சுபக்கம் தெளிவுரை முற்றுப் பெற்றது.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவஞான சித்தியார் சுபக்க செய்யுள் முதற்குறிப்பு அகராதி

பாடல்	பக்க எண்	பாடல்	பக்க எண்
அகலியை	140	அறியாமை	321
அங்கித்தம்	359	அறிவதைம்	196
அசித்தரு	217	அறிவரியான்	382
அசித்தெனில்	212	அறிவிக்க	272
அஞ்செழுத்	341	அறிவிச்சை	204
அண்டசம்	186	அறிவிலன்	239
அத்துவா	78	அறிவுடல்	227
அநாதியுடல்	365	அறிவுறும்	254
அநாதியே	21	அறுவகை	2
அந்தரி	344	அனைத்து	268
அயனரி	202	அன்னியம்	263
அயன்றனை	82	அன்னியசாதி	13
அரசனும்	127	ஆங்காரம்	154
அரனடிக்கு	125	ஆணவம்	367
அரன்விதி	146	ஆணையால்	127
அரிசனம்	190	ஆரணம்	69
அருந்தின்ப	15	ஆவதாய்	256
அருமறை	301	ஆன்மாவின்	203
அருவமோ	63	இங்குநாம்	122
அருவவிகாரி	211	இதமகிதங்கள்	109
அருவினில்	51	இந்தன	346
அருவுருவீனா	52	இந்திரியம்	355
அருவுரு	209	இந்நிலை	325
அருளது	252	இம்மையின்	102
அருளினால்	7	இம்மையே	297
அருளினால்	129	இயல்புகாண்	26
அவ்வவ்	141	இரந்தரம்	161
அவ்வுடன்	201	இரும்பை	376
அழிந்தபின்	34	இருவகை	232
அழிப்பு	61	இருவினைச்செயல்	103
அழிவிலா	286	இருவினைச்செயல்	240
அளவை	9	இருவினை	136
அறிதருமு	234	இருவினையின்ப	100
அறிந்திடும்	244	இருவினையென்னை	101
அறிந்திடும்	197	இவனுலகில்	351
அறிபொருள்	260	இறுதியாம்	59

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இறைவன்	304
இறைவனிங்கு	110
இறைவனே	243
இறைவன்	248
ஈசனுக்கு	380
ஈண்டுபக்கப்	22
உடலியான்	226
உடலினில்	214
உடலின்	195
உடல்விடா	133
உடற்செயல்	105
உணராத	258
உணர்வன	198
உதிப்பதும்	25
உயிரவை	56
உயிரினை	213
உயிரினோடு	13
உயிரென	193
உருமேனி	76
உருவருள்	70
உருவினில்	215
உருவனைக்	240
உருவுயிர்	207
உருவொடு	98
உரைதரு	276
உரைத்த	58
உலகமே	250
உலகின்	71
உலகினில்	67
உலகுடல்	117
உலகெலாம்	95
உள்ளதும்	29
உள்ளுணர்	45
எங்குத்தான்	372
எங்குத்தானெ	329
எங்குந்தான்	215
எல்லாமாய்	175
எவ்விடத்தும்	370
எழுமுடல்	147
என்னுடல்	224
என்னை	4
ஏதுமூன்று	18
ஐந்துசாக்	235
ஐந்துசுத்	164
ஒருகோட்டன்	1
ஒருபுலன்	190
ஒருபொருள்	31
ஒருவனே	90
ஒருவனோடு	24
ஒழுக்கம்	118
ஒன்றதாய்	176
ஒன்றதாய்	86
ஒன்றறென	97
ஒன்றெனும்	264
ஒன்றோடொன்று	73
ஓசைநற	158
ஓதியுணர்	285
ஓதுசமயங்	300
ஓரிடம்	32
கண்டபொருளை	11
கண்டவிவை	339
கண்டிடும்	337
கண்டுணர்	228
கண்ணுதல்	75
கரணங்கள்	334
கருகாரணம்	39
கருவிகழிந்	327
கருவியாம்	200
கருவியாற்	245
கருவியும்	246
கருவினுள்	189
கற்றநூல்	55
காண்டல்	12
காண்பவன்	123
காயத்தினழிவு	31
காயமொழி	362
காரணவணு	35
காரியகாரண	41
காரியமென்பது	36
காலமே	33
குணங்களை	205
குறிகள்	162

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குறித்தடியில் 338
குறித்தது 68
கேட்டலுடன் 314
கேவலசகலம் 236
சகமார் 308
சங்கமம் 137
சத்தசத்த 270
சத்திதன்வடிவு 84
சத்திதானாதம் 172
சத்திதான்பல 83
சத்தியாய் 171
சத்தியும் 91
சத்தியேவடிவு 66
சந்திரன் 210
சந்நிதி 206
சலமில 356
சன்மார்க்கஞ்சத 305
சன்மார்க்கசகல 311
சாக்கிரத்தே 326
சாக்கிரம் 231
சாந்தியா 294
சார்பினிற் 28
சாற்றிய 159
சித்தமாம் 151
சித்தாந்தத்தே 303
சிவஞானச் 316
சிவஞ்சத்தி 173
சிவஞ்சத்திநாதம் 168
சிவனருவுருவும் 93
சிவனையவன் 336
சிவன்சீவ 375
சீலமோ 55
சீவனும் 87
சுத்ததத் 163
சுத்தமாம் 79
சுத்தமெய் 271
சூக்குமம் 143
சூக்குமதேகி 220
சூக்குமைவாக்கு 46
சூக்குமவுரு 208
சூரியகாந் 319
செங்கமல 379
செப்பினாய் 140
செம்பிரத 374
செயல்களே 113
செய்க்கிடும் 113
செய்தவர் 115
சென்றனையும் 373
சொன்ன 60
ஞாலமதின் 323
ஞாலத்தால் 317
ஞானநூற 313
ஞானமே 88
ஞானயோக 384
தத்துவம் 259
தத்துவமெண் 166
தத்துவரூபம் 165
தந்தைதாய் 112
தனுகரண 174
தன்மமோடு 135
தன்னியல்பு 101
தாதமார் 306
தாபரசெங்கமங்கள் 124
தானஞ்செய் 116
தானமியா 315
திரவியம் 114
திருக்கோயில் 383
தூலமாம் 145
தெரிந்து 251
தெரிவரிய 366
தேசமிடம் 324
தேவரில் 72
தோற்பாவை 222
தோற்றமும் 37
தோற்றுவித்து 57
நண்ணிடும் 63
நார்களாய் 138
நார்பயிர் 186
நற்செவி 156
நாடுகளில் 358
நாட்டும் 343
நாயகன் 74

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நிகழ்ந்திடும்	47	மண்ணுளே	131	வித்தக	64
நிக்கிரகங்கள்	111	மண்புனல்	161	வித்தைகள்	49
நித்தமாய்	148	மந்திரங்கள்	291	வித்தையில்	292
நியதிபின்	149	மந்திரத்தால்	385	வித்தையோடு	89
நிலம்புனல்	27	மந்திரம்அத்துவா	78	விந்துவின்	42
நெல்லி	368	மந்திரமதனில்	80	வேதசாத்	333
பக்கமுன்றின்	16	மருத்துவன்	130	வேதநூல்	302
படைகொடு	230	மருவாநந்தம்	221	வேற்றுமைப்	45
படைப்பாதி	76	மலமாயை	185	வைகரிசெவி	44
பண்டை	5	மலமென	178		
பந்தமும்	67	மறைகளின்	126		
பரஞான	364	மறையினால்	7		
பரம்பிரம	386	மனமது	155		
பரிதியை	180	மனமதுநினைய	120		
பலவிதம்	281	மன்னவன்	275		
பன்னகம்	134	மாசறுகாட்சி	10		
பன்னிற	328	மாயைதான்	65		
பாசஞா	331	மாயையிற்	148		
பாசிபடு	330	மாயையின்உள்ள	38		
பாலரொடு	283	மாயையின்	184		
பாவிப்பது	262	மாயையின்	219		
பிணத்தினை	191	மாயையே	179		
புகையால்	19	மாறியிவ்	142		
புண்ணியம்	322	மானுடப்	190		
புத்திமன்	40	மிக்கதொரு	320		
புத்திரமார்	307	மும்மலநெல்லி	182		
புந்தியை	227	முற்செயல்	107		
புருடனே	229	மூவகையணு	50		
புருடன்	181	மூன்று	295		
புறச்சமய	296	மூன்றுபக்கம்	17		
புறம்பே	345	மேலைக்கு	108		
பூதனாசரீரம்	131	மொய்தரு	167		
பேறிழவு.	104	யாதொரு	121		
பொறிபுலன்	242	யான்செய்	353		
பொன்மை	91	வண்டுகள்	139		
பொன்னணி	225	வருங்குண	151		
போகியாய்	73	வாக்கொடு	156		
போதகாரியம்	180	வாயாதி	157		
போது	20	வாழ்வு	187		
மண்தனில்	257	விச்சையில்	150		
மண்ணினில்	54	விதிப்படி	144		

R3

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri South Center

PAPER FOR ALL KINDS

IMAGE COPIER TM

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

New

bilt

IMAG

COPI

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.